பன்னிரு திருமுறைகளில் அகப்பொருள் மரபுகள்

அழகப்பா பல்கலைக்கழக முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்கான
பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்
மா. சிதம்பரம்
(பதிவு எண்: 1515)

ALAGAPPA UNIVERSITY
CENTRAL LIBRARY
KARAIKUDI

நெறியாளர்
முனைவர் சு. இராசாராம்

Alagappa University
Central Library
P895

தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
(தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் 'ஏ' தகுதி பெற்றது)
காரைக்குடி-630 003.
தமிழ்நாடு
இந்தியா

டிசம்பர் - 2010

முனைவர் சு.இராசாராம் எம்.ஏ.(தமிழ்),எம்.ஏ.(மொழியியல்),எம்பில்.,பி.எட்.,பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நாள்: 16.12.10

நெறியாளர் சான்றிதழ்

"பன்னிரு திருமுறைகளில் அகப்பொருள் மரபுகள்" என்னும் தலைப்பில் **திரு. மா. சிதம்பரம்** அவர்கள் பகுதிநேர முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காகச் செய்த இந்த ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பெற்றது என்றும் இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

(சு.இராசாராம்)
நெறியாளர்
முனைவர் சு. இராசாராம்
இணைப் பேராசிரியர் - தமிழ்த்து...
...க் கழக...
...-3

துறைத்தலைவர்
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630 003

மா.சிதம்பரம் எம்.ஏ.,எம்பில்.,பி.எட்.,
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அழகப்பா அரசு கலைக்கல்லூரி,
காரைக்குடி - 630 003.

நாள் : 16.12.10

ஆய்வாளர் உறுதிமொழி

"பன்னிரு திருமுறைகளில் அகப்பொருள் மரபுகள்" என்னும் தலைப்பில் பகுதிநேர முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காக எழுதப்பெற்ற இந்த ஆய்வு, எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ் ஆய்வேடு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

(மா.சிதம்பரம்)
ஆய்வாளர்

உறுதிக் கையொப்பம்

முனைவர் சு.இராசாராம் எம்.ஏ.(தமிழ்),எம்.ஏ.(மொழியியல்),எம்பில்.,பி.எட்.,பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நன்றியுரை

'பன்னிரு திருமுறைகளில் அகப்பொருள் மரபுகள்' என்னும் தலைப்பில் பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வினை மேற்கொள்ள அனுமதி வழங்கிய அழகப்பா பல்கலைக்கழகத்திற்கும், தமிழ்த்துறைக்கும் எனது நன்றி உரித்தாகுக.

ஆய்வுத் தொடக்கத்திலிருந்து நிறைவு வரை ஆக்கமும், ஊக்கமும் நல்கி இவ் ஆய்வு சிறப்புற அமைய என்னை ஆற்றுப்படுத்திய, நெறியாளர் **முனைவர் சு.இராசாராம்** அவர்களுக்கும், அவர்கள் தம் குடும்பத்தாருக்கும் என்றென்றும் நன்றியுடையேன்.

ஆய்வுக்காலத்து அறிவுரை வழங்கி உதவிபுரிந்த **முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை** அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது பள்ளிக்காலம் முதல் இன்றுவரை தாயாய் இருந்து எனது உயர்வில் உளமகிழும் ஆசிரியை **திருமதி ஜாய்ஸ் முத்து லில்லி** அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்வெய்துகிறேன்.

கல்லூரி நாட்கள் தொடங்கி இந்நாள்வரை என் வளர்ச்சியில் பெரிதும் ஆர்வமுடையவராய், என்னை ஆற்றுப்படுத்திவரும் எனது பேராசிரியரும் திருச்சி, செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரியின் முதல்வருமாகிய **முனைவர் பழ.முத்தப்பன் - திருமதி அழகம்மை முத்தப்பன்** ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதில் உவகை கொள்கிறேன்.

முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ள ஆர்வமூட்டிய பெரும்புலவர் **பேரா.பா.நமச்சிவாயம்,** அழகப்பா அரசு கலைக்கல்லூரி மேனாள் தமிழ்த் துறைத்தலைவர் **பேரா.ம.கார்மேகம், பேரா.நா.மாணிக்கவாசகன்** ஆகியோருக்கும் நன்றி கூற கடப்பாடு உடையேன்.

ஆய்வுக்காலத்தில் ஊக்கம் வழங்கி, ஆய்வு செம்மையுற உறுதுணையாய் அமைந்த என்னுடன் பணியாற்றும் தமிழ்த்துறை

இணைப்பேராசிரியர்கள் **முனைவர் கே.கண்ணாத்தாள், முனைவர் ச.முருகேசன்** ஆகியோருக்கும் எனது உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அழகப்பா அரசு கலைக்கல்லூரி தமிழ்த்துறை தலைவர் **பேரா.ம.துரை, முனைவர் இரா.சுதமதி, முனைவர் க.சொல்லேருழவன், முனைவர் சி.பரமேஸ்வரி, தமிழ்த்துறை பேராசிரிய நண்பர்கள்** ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

ஆய்விற்கான நூல்களை தந்து உதவிய சிவகங்கை அரசு கலைக்கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர் வி.கிளாட்சன்,** அழகப்பா பல்கலைக்கழக மைய நூலகர், நூலக அலுவலர்கள், அழகப்பா பல்கலைக்கழக அலுவலர்கள், அழகப்பா அரசு கலைக்கல்லூரி நூலக அலுவலர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.

எனது கல்வி வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் உதவி இந் நன்னிலைக்கு என்னை உயர்த்திய எனது **ஆருயிர்ப் பெற்றோர் திரு.சித.மாணிக்கம், திருமதி மா.ஜெயலெட்சுமி, சகோதரி மா.வள்ளிமயில் - பாலமுருகன், சகோதரன் பேரா.மா.முத்துராமன்** ஆகியோருக்கும் எனது நன்றி உரியதாகும்.

ஆய்வுக்காலத்தில் ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய எனது அன்புத்துணைவியார் **திருமதி சு.மகேஸ்வரி, அன்புச்செல்வன் மா.சித.அருண்கிருத்திக்** ஆகியோருக்கும் எனது நன்றி.

ஆய்விற்குத் தேவையான நூல்கள் வாங்குவதில் பெரிதும் உதவிய சகோதரர் **பொறியாளர் திரு.மு.சரவணன் - கார்த்திகை ஜெயம், செல்வன் ச.விஸ்வா, எனது அன்பு நண்பர்கள்** ஆகியோருக்கும் உளங்கனிந்த நன்றி.

இவ்ஆய்வேட்டைச் செம்மையாகவும், நேர்த்தியாகவும் கணினியில் அச்சாக்கம் செய்த **காரைக்குடி மகேஷ் கணினி**யக உரிமையாளர் **திரு.சுப.சுரேஷ்** அவர்களுக்கும், கட்டமைப்புச் செய்த அச்சகத்தாருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்

மா.சிதம்பரம்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அ.ப.	- அன்னைப்பத்து
ஆ.உ.	- ஆய்வு உரையாசிரியர்
ஆ.பி.தி.	- ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
ஆ.பி.தி.க.	- ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்
ஆ.பி.தி.மு.	- ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை
இளம்	- இளம்பூரணர்
உ.ஆ.	- உரை ஆசிரியர்
உ.வ.ஆ.	- உரைவள ஆசிரியர்
ஏ.க.பு.	- ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம்
க.ஆ.	- கட்டுரை ஆசிரியர்
கயிலை.	- கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி
கோ.தி.வி.	- கோயில் திருப்பண்ணியர் விருத்தம்
கோ.நா.மா.	- கோயில் நான்மணி மாலை
கு.ப.	- குயில் பத்து
சி.தி.	- சிவபெருமான் திருவந்தாதி
த.கொ.பு.	- தடுத்தாட்கொண்ட புராணம்
தி.ஏ.தி.	- திருஏகம்பமுடையார் திருவந்தாதி
தி.கு.பு.	- திருக்குறிப்புத்தொண்டர்புராணம்
தி.கோ.து.	- திருக்கோத்தும்பி
தி.ஞா.பு.	- திருஞானசம்பந்தர் புராணம்
தி.த.	- திருத்தசாங்கம்
தி.தெ.	- திருத்தெள்ளேணம்
தி.நீ.பு.	- திருநீலகண்டர் புராணம்
தி.மு.கோ.	- திருவாரூர் மும்மணிக்கோவை
தி.வ.கோ.	- திருவலஞ்சுழி மும்மணிக்கோவை

தி.வி.மு.கோ.	- திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
தொ.கு.	- தொகுப்பும் குறிப்பும்
தொல்.எழுத்து.	- தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்
தொல்.சொல்.	- தொல்காப்பியம் - சொல்லதிகாரம்
தொல்.பொருள்.	- தொல்காப்பியம் - பொருளதிகாரம்
நச்சர்.	- நச்சினார்க்கினியர்
நூ.	- நூற்பா
ப.	- பக்கம்
பக்.	- பக்கங்கள்
ப.ஆ.	- பதிப்பு ஆசிரியர்
ப.ஆ.இ.	- பதிப்பு ஆண்டு இல்லை
பா.	- பாடல்
பா.மொ.எண்.	- பாடல் மொத்த எண்
பேரா.	- பேராசிரியர்
பொ.வ.அ.	- பொன்வண்ணத்தந்தாதி
மேலது	- மேலே குறிப்பிடப்பட்டது
மொ.பெ.ஆ.	- மொழிபெயர்ப்பு ஆசிரியர்
வ.எண்.	- வரிசை எண்
வி.கு.	- விளக்கக் குறிப்புரை
P.	- Page
PP.	- Pages

பொருளடக்கம்

இயல்	தலைப்பு	பக்கம்
	முன்னுரை	1 - 8
ஒன்று	திருமுறையும் அகப்பொருள் மரபும்	9 - 55
இரண்டு	தலைவி கூற்றில் அகப்பொருள் மரபுகள்	56 - 140
மூன்று	தோழி கூற்றில் அகப்பொருள் மரபுகள்	141 - 197
நான்கு	பிற மாந்தர் கூற்றில் அகப்பொருள் மரபுகள்	198 - 260
ஐந்து	திருமுறைகளில் அகப்பொருள் மரபு மாற்றங்கள்	261 - 325
	முடிவுரை	326 - 341
	துணைநூற்பட்டியல்	342 - 367
	பின்னிணைப்புகள்	
	அட்டவணைகள்	
	1. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் அகப்பொருட் துறைகள்	368
	2. திருநாவுக்கரசர் தேவாரத்தில் அகப்பொருட் துறைகள்	369 - 371
	3. சுந்தரர் தேவாரத்தில் அகப்பொருட் துறைகள்	372
	4. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் அகப்பொருட் துறைகள்	373
	5. ஒன்பதாம் திருமுறையில் அகப்பொருட் துறைகள்	374 - 375
	6. பதினொன்றாம் திருமுறையில் அகப்பொருட் துறைகள்	376 - 396
	7. பன்னிரண்டாம் திருமுறையில் அகப்பொருட் துறைகள்	397 - 398

முன்னுரை

முன்னுரை

தமிழரின் வாழ்வியல் நெறிமுறைகள் அகமெனவும், புறமெனவும் பிரிக்கப்பெறும். இவ்வினிய ஒழுகலாறுகளைத் தொல்காப்பியம் வரையறுக்கும். அதனுள் அமைந்த அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் போன்றன அகமரபுகளை அடையாளப்படுத்தும். இம்மரபினை அடியொற்றிவந்த சங்ககாலப் பாட்டும், தொகையுமாகிய இலக்கிய வகைமைகளிலும் அகப்பொருள் ஆளுமை பெற்றுள்ளதை ஆயும்வழி அறிய இயலும். அல்லவை கடிந்து நல்லவை போற்றல் என்ற அறக்கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய நீதி இலக்கியக் காலகட்டத்திலும் அகப்பொருள் தன் ஆதிக்கத்தினைச் செலுத்தியிருப்பதை அறியமுடிகிறது. அற இலக்கியங்களுள் எல்லாம் தலைமை சான்றதாய்ப் போற்றப்பெறும் திருக்குறளில் இருபத்தைந்து அதிகாரங்கள் அகமரபு தொடர்பானதாய் அமைந்திருப்பதும் அவ் அதிகாரங்கள் இடம்பெற்றுள்ள களத்திற்கு, காமத்துப்பால் எனப் பெயரிடப்பெற்றிருப்பதும் இதற்கான அடிப்படைச் சான்றாகும். மேலும் இக்காலகட்டத்தில் கார்நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது ஆகிய தனித்த அகநூல்களும் தோற்றம் பெற்றுள்ளன. இந்நிலையின் தொடர்ச்சியாக, தமிழின் குறிப்பிடத்தக்க இலக்கிய வடிவங்களான காப்பியம், சிற்றிலக்கியம் முதலியவற்றிலும் கூட அகப்பொருள் மரபுகள் விரவிக்கிடக்கின்றன. இத்தகைய மரபுசார்ந்த தொடர்ச்சியே பக்திப் பனுவல்களில் அகப்பொருள் மரபுகள் ஆளுமை பெற்றிருப்பதற்குக் காரணமாகும்.

இவ்வாறு தமிழரால் போற்றப்பட்ட அக இலக்கிய மரபுகள் காலந்தோறும் போற்றப்பட்டு, காலவளர்ச்சிக்கு ஏற்ப மாற்றம் பெற்றுவந்துள்ளன. புதியனவாகத் தோன்றிய மரபுகளும், மரபு மாற்றங்களும் தமிழர்தம் பண்பாட்டு அடித்தளத்தினை அடியொற்றி வந்தனவேயன்றி,

அதன் அடிப்படை ஆதாரத்தினைச் சிதைப்பன அல்ல என்பது ஈங்கு குறிக்கத்தக்கதாம். அந்நிலையில் பன்னிரு திருமுறைகளில் இடம்பெறும் அகப்பொருள் மரபுகளும் மரபு மாற்றங்களும் தொடர்பான ஆய்வானது அக்காலத் தமிழ் இலக்கியத்தின் போக்கினையும் தமிழ்ச்சமூக வாழ்வியற் சிந்தனைகளையும் அறிய உதவும்.

ஆய்வுத் தலைப்பு

பன்னிரு திருமுறைகளில் காணப்பெறும் அகப்பொருள் மரபுகளை ஆயும் முகத்தான் 'பன்னிரு திருமுறைகளில் அகப்பொருள் மரபுகள்' என்பது ஆய்வுத் தலைப்பாய் அமைகிறது.

ஆய்வுக் கருதுகோள்

பன்னிரு திருமுறைகளில் அருளாளர்கள் இறைவன்மேல் கொண்ட பக்தியினை வெளிப்படுத்துவதற்கு அகப்பொருள் மரபுகளையும் துணையாகக் கொண்டனர். சங்க அகப்பொருள் மரபின் தொடர்ச்சியாகப் பக்தி இலக்கிய மரபுகள் அமைகின்றன என்பதே ஆய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு நோக்கம்

பன்னிரு திருமுறைகளில் காணப்பெறும் அகப்பொருட் பதிகங்களையும் பாடல்களையும் கூற்று அடிப்படையில் இனங்கண்டு வரையறுப்பதும், அவற்றைத் தொல்காப்பிய இலக்கணத்தோடு ஒப்பிட்டும் உறழ்ந்தும் நோக்கி விளக்குவதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு முன்னோடிகள்

பன்னிரு திருமுறைகளில் இடம்பெறும் அகத்திணை மரபுகளை அகமாந்தர் கூற்றின் வழி ஆயும் இவ்வாய்விற்கு ஆய்வு முன்னோடிகளாய்ச் சிலர் அமைகின்றனர். சொ.சிங்காரவேலன் 'திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத்திறனாய்வும்' (1969) என்ற நூலில் ஞானசம்பந்தரின் தேவாரத்துள் அமைந்த அகப்பொருள் மரபுகளை

உட்தலைப்பாக விளக்கியுள்ளார். பழ.முத்தப்பன் ‘திருமுறைகளில் அகக்கோட்பாடு’ (1986) என்றொரு நூலினை வெளியிட்டுள்ளார். ம.சா.அறிவுடை நம்பி ‘திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள்’ (1986) என்ற தமது ஆய்வேட்டில் நாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் அகப்பொருட் பாடல்களை எடுத்துக்காட்டியுள்ளார். இந்நூல் இவரின் முனைவர்பட்ட ஆய்வாகும். வெ.சு.அழகப்பன் ‘பதினோராந் திருமுறைத்திறன்’ (1987) என்ற தனது நூலில் பதினோராந் திருமுறையில் இடம்பெற்ற அகப்பொருட் கூறுகளைச் சிறு உட்தலைப்பாக ஆய்ந்துள்ளார். இந்நூல் இவரின் முனைவர்பட்ட ஆய்வாகும். அகப்பொருளை வரலாற்று நோக்கில் காணும் விதத்தில் ‘தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் - ஒரு வரலாற்றுப் பார்வை’ (1990) எனும் தலைப்பில் த.வசந்தாள் ஆய்வு செய்துள்ளார். மு.மணிவேல் ‘தமிழ் இலக்கிய அகப்பொருள் மரபுகள்’ (2004) என்ற நூலில் பக்திப்பனுவல்களில் காணப்படும் அகப்பொருட்பாடல்களைப் பொதுநிலையில் விளக்கியுள்ளார். அ.மா.பரிமணம் ‘பக்திப்பனுவல்களில் அகப்பாடல் கூறுகள்’ என்ற தலைப்பில் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் ஐந்தாவது கருத்தரங்கில் ஆய்வுக் கட்டுரை வழங்கியுள்ளார்.

திருமுறைகளில் இடம்பெறும் அகப்பொருள் தொடர்பான முன்னாய்வுகள் திருமுறைகளைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து ஆய்வுசெய்வதாகவும், வரையறைசெய்வதாகவுமே அமைந்துள்ளன. மேலும் அம்மரபுகளைத் தொல்காப்பியத்துடனோ, பின்வந்த இலக்கண நூல்களுடனோ ஒப்பிட்டு ஆய்வதாகப் பெரும்பாலும் அமையவில்லை. எனவே இவ்வாய்வு பன்னிரு திருமுறைகளில் இடம்பெறும் அகப்பொருள் மரபுகளைத் தொல்காப்பியத்தோடும் உரையாசிரியர்களின் உரைக்குறிப்புகளோடும், பின்வந்த இலக்கண நூல்களோடும் ஒப்பிட்டு ஆயும் முழுமையான ஆய்வாய் அமைந்துள்ளது.

ஆய்வு எல்லை

இவ்வாய்வின் ஆய்வு எல்லையாக 'பன்னிரு திருமுறைகளில்' இடம்பெற்றுள்ள அகப்பொருட் பதிகங்களும் பாடல்களும் அமைகின்றன. எட்டாம் திருமுறையில் இடம்பெறும் திருக்கோவையார், தனித்ததொரு அகத்துறைக் கோவை நூலாய் அமைவதால் அது இவ் ஆய்வில் இடம் பெறவில்லை.

சான்றாதாரங்கள்

'பன்னிரு திருமுறைகள்' இவ் ஆய்வின் முதன்மைச் சான்றாதாரங்களாய் அமைகின்றன. அகப்பொருள் மரபுகளை விளக்கும் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், வீரசோழியம், நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், மாறனகப்பொருள், மாறனலங்காரம், பன்னிரு பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், சுவாமிநாதம் முதலிய இலக்கண நூல்கள், அகப்பொருள் தொடர்பான இலக்கியங்கள். ஆய்வுப் பொருண்மையோடு தொடர்புடையத் திறனாய்வு நூல்கள், கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், ஆய்வுக்கட்டுரைகள், மலர்கள், இதழ்கள், ஆய்வேடுகள், வரலாற்று நூல்கள், ஆங்கில நூல்கள் போன்றனவும் துணைமைச் சான்றாதாரங்களாய் அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறைகள்

அகப்பொருள் மரபுகளைக் கூற்று அடிப்படையில் வகைப்படுத்துவதிலும், அருளாளர்களைக் கால அடிப்படையில் வரிசைப்படுத்துவதிலும் வரலாற்றியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது. அகப்பொருள் மரபுகள் தொடர்பான பாடல்களைத் துறை அடிப்படையிலும், பொருள் அடிப்படையிலும் பகுத்துக் காண்பதில் பகுப்பாய்வு அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அகத்திணைப் பாடல்களைக் கூற்று, துறை அடிப்படையில் விளக்கியுரைக்குமிடத்து விளக்கவியல் அணுகுமுறை கையாளப்பெற்றுள்ளது. அகமரபுகளைத் தொல்காப்பியம், தொல்காப்பிய

உரைகள், பின்வந்த இலக்கண நூல்கள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு ஆராயுங்கால் ஒப்பியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

ஆய்வுப் பகுப்பு

'பன்னிரு திருமுறைகளில் அகப்பொருள் மரபுகள்' என்னும் இவ் ஆய்வானது முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன,

1. திருமுறையும் அகப்பொருள் மரபும்
2. தலைவி கூற்றில் அகப்பொருள் மரபுகள்
3. தோழி கூற்றில் அகப்பொருள் மரபுகள்
4. பிறமாந்தர் கூற்றில் அகப்பொருள் மரபுகள்
5. திருமுறைகளில் அகப்பொருள் மரபு மாற்றங்கள்

என்பனவாம்.

இயல் விளக்கங்கள்

முன்னுரையில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வுக் கருதுகோள், ஆய்வு நோக்கம், ஆய்வு முன்னோடிகள், ஆய்வு எல்லை, சான்றாதாரங்கள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வுப் பகுப்பு, இயல் விளக்கங்கள் என்பவை இடம்பெறுகின்றன.

"திருமுறையும் அகப்பொருள் மரபும்" என்ற முதலாவது இயலில், தமிழ் இலக்கியப் பரப்பில் அகப்பொருள் பெற்றுள்ள ஆளுமை, திருமுறை - சொற்பொருள் வரையறை, நாயகன் - நாயகி பாவனைப் பாடல்கள் அகப்பொருளாய் அமையும் போக்கு, மரபு இலக்கண நூல்கள் உணர்த்தும் அகப்பொருள் இலக்கணத்தோடு, திருமுறை அகப்பாடல்கள் பொருந்தி அமையும் நோக்கு, திருமுறைகளில் இடம்பெற்றுள்ள அகப்பாடல்களின் வரையறை ஆகியவை விளக்கப்படுகின்றன.

‘தலைவி கூற்றில் அகப்பொருள் மரபுகள்’ என்ற இரண்டாவது இயலில், உலக இலக்கியங்களிலும், தமிழ் இலக்கியங்களிலும், நாயகன் - நாயகி பாவம் பெற்றுள்ள ஆளுமை, திருமுறைத் தலைவி கூற்றுப் பாடல்களில் இடம்பெறும் பெண்ணீர்மைக் கைக்கிளை, மெய்யுறு புணர்ச்சி, மின்னிடை மெலிதல், இடந்தலைப்பாடு, பிரிவுழிக்கலங்கல், தூதுவிடல், நெஞ்சொடு கிளத்தல், கடலிடை வைத்து வருந்தல், அலர் அஞ்சல், இயற்படமொழிதல், அறத்தொடு நிற்றல் ஆகிய களவியல் துறைகளும், தலைவி பருவம் கண்டு அழிந்து கூறல், தலைவனின் பரத்தமை கண்டு தலைவி ஊடல், பாணனுக்கு வாயில் மறுத்தல், எங்கையர் காணின் நன்றென மறுத்தல், பாங்கனுக்கு வாயில் மறுத்தல் ஆகிய கற்பொழுக்கத்துறைகளும், பெருந்திணை தொடர்பான பண்புகளும் விளக்கப்படுகின்றன.

‘தோழி கூற்றில் அகப்பொருள் மரபுகள்’ என்ற மூன்றாவது இயலில், தமிழ் அக இலக்கண, இலக்கியங்களில் தோழி பெறும் இடம், பாங்கி மதியுடம்பாட்டில் தோழி குறையுற உணர்தல், கெடுதிவினவல், முன்னுற உணர்தல், மதியுடம்படுத்தல், நாணநாட்டம், சேட்படையில் அஞ்சி அச்சுறுத்தல், இற்செறிப்புக் கூறி வரைவு கடாதல், வேங்கையொடு வெறுத்து வரைவுகடாதல், அலர் அஞ்சி வரைவு கடாதல், ஆற்றின் அருமை கூறி வரைவுகடாதல், தலைவியின் பிரிவாற்றாமை கூறி வரைவு கடாதல், ஒருவழித் தணத்தலில் ஆற்றுவித்தல், செவிலியிடத்து அறத்தொடு நிற்றல், வெறியாட்டிடத்து அறத்தொடு நிற்றல், புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி, நொதுமலர் வரைவு, உண்மை செப்பும் வகை போன்றின்னவற்றால் அறத்தொடு நிற்றல், உடன்போக்கில் உடன்படுத்தல் ஆகிய களவு தொடர்பான துறைகளும், செலவழுங்குவித்தல், தலைவியைப் பருவங்காட்டி வற்புறுத்தல், தலைவனின் வருகைகூறி ஆற்றுவித்தல் ஆகிய கற்பு தொடர்பான துறைகளும் திருமுறைத் தோழி கூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ள தன்மை ஆராயப்பட்டுள்ளன.

'பிறமாந்தர் கூற்றில் அகப்பொருள் மரபுகள்' என்ற நான்காவது இயலில், திருமுறைகளில் இடம்பெறும் தலைவி, தோழி தவிர்த்த பிறமாந்தர்களாகிய தலைவன், செவிலி, நற்றாய், கண்டோர் பற்றிய வரையறை, தலைவன் கூற்றில் இடம்பெறும் காட்சி, ஐயம், தெளிவு, மெய்தொட்டுப் பயிறல், பொய்பாராட்டல், ஊர் அணித்து எனல், ஆயத்துய்த்தல், உற்றது உரைத்தல், கழற்றெதிர் மறுத்தல், இயலிடம் கூறல், கெடுதிவினவல், பிறவினாதல், மடன்மா கூறல், வரைவுடம்படாது மறுத்தல், வறுங்களம் கண்டு வருந்தல், உடன்போக்கில் தளர்வறிந்து இருத்தல், கற்பில் செலவழுங்கல் ஆகிய அகப்பொருட் துறைகளும், செவிலி கூற்றில் இடம்பெறும் தலைவியின் காம நிலை உரைத்தல், களவு அலராகின்றவழிக் கூறல், நற்றாயிடம் அறத்தொடு நிற்றல், மகட்போக்கிய செவிலி பிரிவுழிக் கலங்கல், உடன்போக்கில் தேடிச்செல்லல் ஆகிய அகப்பொருட் துறைகளும், நற்றாய் கூற்றில் இடம்பெறும் தலைவியின் சிறப்புடைக் கைக்கிளையை மொழிதல், மகட்போக்கிய நற்றாய் இல்லின்கண் இருந்து புலம்பல் ஆகிய துறைகளும், கண்டோர் கூற்றில் இடம்பெறும், உடன்போக்கில் தலைமக்களிடத்து வழியின் அருமை கூறல், ஊரின் அணிமைகூறல், தாய்நிலைகண்டு தடுத்தல் ஆகிய அகத்துறைகளும் திருமுறைப் பாடல்களில் பொருந்தி நிற்றல் விளக்கப்பட்டுள்ளன. திருமுறைகளில் கூற்றில் இடம்பெறா மாந்தர் குறித்தும் அவர்கள் கூற்றில் இடம்பெறாமைக்கான காரணங்கள் குறித்தும் ஆய்வுசெய்யப்பட்டுள்ளன.

'திருமுறைகளில் அகப்பொருள் மரபு மாற்றங்கள்' என்னும் ஐந்தாவது இயலில், மரபு என்னும் சொல்லாய்வுநிலை, திருமுறைகளில் காணப்படும் அகப்பாடல் யாப்புமுறைமாற்றம், அகப்பாடல்களில் பெயர்சுட்டும் மரபுநிலைத் தோற்றம், தலைவன் கூற்றில் அடலெடுத்துரைத்தல், பதிபரிசு உரைத்தல், முகிலொடு உரைத்தல், தலைவி கூற்றில் ஐயம், பவனி கண்டு அழுங்கல், தலைவன் ஊர்தியை எதிர்பெய்து கூறல், நாமம் பெறாது

தளர்வுற்று உரைத்தல், தலைவன் எருதின் மணி ஒலியும், நிலவொளியும் வருத்துவதாய்க் கூறல், தலைவி கனவு கண்டு இரங்கல், கூடல் இழைத்தல், தசாங்கம், தெள்ளேணம் கொட்டல், புதல்வனை வாயிலாய்க் கொண்டுவந்த தலைவனுக்கு வாயில் மறுத்தல், தோழி கூற்றில் ஏறு தழுவுவோர்க்குத் தலைவி உரியள் எனல், கையுறை ஏற்கத் தலைவியை வற்புறுத்தல், அவயம் எழுதல் அரிதென மறுத்தல், முலைவிலை கூறல், கூடல் இழைத்தல், தலைவியின் பசலை கண்டு தோழியர் எள்ளல், தோழிபிறையைப் பழித்தல், விருந்திறை விலக்கல், செவிலி கூற்றில் பருவம் எய்தாதவரையும் தலைவன் ஈர்ப்பான் எனல், தலைவனை எதிர்பெய்து கூறல், தலைவி மடலேறுவதாய்ச் செவிலி கூறல், தலைவன் மேகலை கவர்ந்தான் எனல், சுடரோடு இரத்தல், சுவடுகண்டு இரங்கல், குரவொடு வருந்தல், புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல், புறவொடுபுலத்தல், கண்டார் கூற்றில், கண்டார் ஐயுற்றுக் கூறல், பெற்றோரை விலக்கித் தலைவனைக் காணும் தலைவியைப் பற்றிக் கூறல், தலைவியின் வளையல்களைத் தேடும் செவிலி குறித்துக் கூறல், ஏறு தழுவிக்கோடல் குறித்துக் கூறல், தலைவன் குறித்த பருவம்வந்ததுகண்டு கூறல் ஆகிய புதிய அக இலக்கிய மரபுகள் திருமுறைப் பாடல்களில் தோற்றம் பெற்றுள்ளமை குறித்து விளக்கப்பட்டுள்ளன.

ஆய்வில்கண்ட முடிவுகள் முடிவுரையில் இடம்பெற்றுள்ளன. ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள் துணைநூற்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

பன்னிரு திருமுறைகளில் இடம்பெற்றுள்ள அகப்பொருட் பாடல்கள் திருமுறை வரிசையாகக் கூற்றுக்களின் அடிப்படையில் பின்னிணைப்பாக அமைக்கப்பெற்றுள்ளன.

இயல் ஒன்று

திருமுறையும் அகப்பொருள் மரபும்

திருமுறையும் அகப்பொருள் மரபும்

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டு காலப்பரப்பும் பல்வேறு இலக்கியக் காலப் பகுதிகளும் கொண்டது. ஒவ்வொரு காலப்பகுதியும், பழைய இலக்கிய வகைகளை வளர்த்திருக்கிறது; மரபு அடிப்படையிலான புதிய இலக்கிய வகைகளைத் தோற்றுவித்திருக்கிறது. அந்நிலையினை ஒட்டியே, பக்தி இலக்கியங்களில் சங்க காலம் தொடங்கிய பழைய மரபுமுறைகள் பின்பற்றப்பட்டும், காலவளர்ச்சிக்கு ஏற்பப் புதிய மரபு முறைகள் தோற்றுவிக்கப்பட்டும் உள்ளன. "கி.பி.6ம் நூற்றாண்டு தொடங்கி 9ம் நூற்றாண்டுவரை தமிழகத்தில் பெருக்கெடுத்து ஓடிய பக்தி வெள்ளம் நிலையாகத் தன் பயனை உலகிற்கு அளித்துள்ளமையைக் காண்கிறோம். சைவ, வைணவ பக்தி இலக்கியங்களினால் தமிழ்ப் பூங்காவில் மலர்ந்த முல்லை மலர்களே பக்திப் பாடல்கள்"[1] என்பார் சி.பாலசுப்பிரமணியன்.

இத்தகைய சிறப்பினை உடையனவாகப் பக்தி இலக்கியங்கள் அமைந்துள்ளமைக்கு, அவ்விலக்கியங்களில் அமைந்துள்ள அகத்திணைப் பாடல் மரபும் காரணம் ஆகும். சங்ககாலத்திலிருந்தே தமிழ் இலக்கியங்கள் 'அகம்,' 'புறம்' என்னும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எனினும் புறத்தினும், அகத்திற்கே அவை அதிக முக்கியத்துவம் அளித்தன என்பதற்குச் சங்கப்பாடல்களில் புறப்பாடல்களின் எண்ணிக்கையினும் அகப்பாடல்களின் எண்ணிக்கை மிக்கிருத்தலே சான்றாகும். இத்தகைய அகத்திணையைப் போற்றும் மரபே, பக்தி இலக்கியங்களிலும் அகப்பாடல்கள் செல்வாக்குப் பெற்றமைக்குக் காரணம் ஆகும். தமிழ் இலக்கிய நெடும்பரப்பில், செல்வாக்குப் பெற்றுள்ள அகத்திணை மரபுகளை ஆயும்போக்கு தமிழ் ஆய்வியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் பன்னிரு திருமுறைகளில் இடம்பெற்றுள்ள அகத்திணை மரபுகளை வரையறை செய்வது இவ்வியலின் நோக்கம் ஆகும்.

தமிழர் அகமரபு

தமிழர் மரபில் காதல் தழுவிய பாடல்கள் 'அகம்' எனவும், அல்லாதன 'புறம்' எனவும் போற்றப்படுகின்றன. அகம், புறம் என்பதற்கு இளம்பூரணர், "அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனாலாய பயன் தானே அறிதலின் 'அகம்' என்றார் என்றும், புறப்பொருளாவது, மறஞ்செய்தலும், அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாதலின் 'புறம்' என்றார்"[2] என்றும் விளக்குவர். நச்சினார்க்கினியர், "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் தத்தமக்குப்புலனாய இன்பம் இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்புறுவதோர் பொருளாதலின் அத்தகைய இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயராம், இதனை ஒழிந்தன ஒத்த அன்புடையார் தாமேயன்றி, எல்லார்க்கும் துய்த்து உணரப்படுதலானும், அவை புறமெனவும்படும்"[3] என்று விரித்துரைப்பார். இவற்றான், அகம் என்பது, அகத்தின் கண் நிகழும் இன்ப உணர்வு என்பதும், அது பிறர்க்கு இத்தன்மைத்து என எடுத்துக்கூற இயலாதது என்பதும் பெறப்படும்.

இவற்றுள் அகம் என்பது இட ஆகுபெயராய் உள்ளத்து நிகழ்கின்ற இன்பத்தை உணர்த்துகின்றது. அகப்பொருளாவது "மாந்தரது உள்ளத்தே நிகழ்வது,"[4] "உள்ளத்தே உணரப்படும் காதல்,"[5] "மனதில் தோன்றும் காதலுணர்ச்சியின் இன்பத்தை நுகர்வது, உள்நிலைக் கருத்துக்களை அக உணர்வுக் கருத்துக்களைக் குறிப்பது"[6] எனக் குறிப்பர் அறிஞர்.

ALAGAPPA UNIVERSITY
CENTRAL LIBRARY

அகம் உள்ளத்தினை உணர்த்துவது, பகுக்கமுடியாதது என்னும் போது அது தன் உணர்வுக்கு உரியது என்று நிறுவப்படுகிறது. "அகம் என்பது, தன்னுணர்வாகிய உள்ளுணர்வு என்று வகுக்கப்படுவது."[7] அகம் என்பதனை, "மணப்பருவமுற்ற ஆணும், பெண்ணும் மனம் ஒருப்பட்டு, இருவரும் ஒருவராய் ஒன்றி வாழும் நிகழ்ச்சியே அகவொழுக்கம்"[8] என்பார்

மு.சண்முகம்பிள்ளை. 'அகம்' என்பது இறையனார் களவியலில் 'உள்ளம்' என்ற பொருளில் ஆளப்பெற்றுள்ளது. இதனை "உள்ளம் ஊற்றின்பிற்கு உயிர்த்தனன் ஆயினும், அதனை மெய்வழி உணர்தலே இயற்கை. ஆனால் அஃது உடல் இன்பம் மட்டுமன்று; உயிர்இன்பம். காதல் மொழியும் காதல் செயலும் உள்ளவழி இயங்குவனவே. உள்ளத்தால் விளைந்த நினைவும் காதல் நுகர்ச்சிக்குச் சமம். உள்ளப்புணர்ச்சி மெய்யுறு புணர்ச்சி நிகர் என்பர்"[9] என்றும் நக்கீரர் உரை உணர்த்தும். காதலாகிய செயலுக்கு உள்ளமே காரணம் என்பதனை உணர்த்தி நிற்கின்றது. இவ்வடிப்படையிலேயே தமிழ்ச்சான்றோர் காதல் பற்றிய இயலுக்கு 'அகம்' எனப் பெயரிட்டனர். இம்மரபினை ஒட்டியே 'அகம்' என்பது 'தமிழ்' எனப்பட்டது. பரிபாடலில் குன்றம்பூதனார்,

"தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய் வந்திலார்
கொள்ளார் இக் குன்று பயன்"[10]

என அகத்திணைக் காதலை 'தண்டமிழ்' எனச் சிறப்பிப்பதும், குறிஞ்சிப்பாட்டின் துறைக்குறிப்பு "ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் 'தமிழ்' அறிவுறுத்தற்குப் பாடியது"[11] என உணர்த்துவதும் சான்றாகும். தமிழரின் அகமரபினைக் கூறும் இறையனார் களவியலுக்கு உரைகூறவந்த உரையாசிரியர், "இந்நூல் என் நுதலிற்றோ எனின் தமிழ் நுதலியது"[12] எனக் குறிப்பதும், 'அகம்' என்பது 'தமிழ்' எனப்பட்டது என்பதற்குரிய சான்றாகும்.

இத்தகைய பொருண்மை உடைய தமிழ் அகநெறி மரபானது, ஒன்றிலிருந்து பலவாய்க் கிளைத்துச் செல்லும் தன்மையுடையது. இதனைக் கருத்தில்கொண்டே இராமனின் வில்லாற்றலுக்கு 'தமிழ்நெறி வழக்கன்ன தனிச்சிலை வழக்கு' எனக் கம்பர் உவமைகாட்டுவார். இவ்வுவமையினை விளக்கும் செ.வேங்கடராமச்செட்டியார், "தமிழ் நெறியாகிய அகப்பொருள் களவுங், கற்பும் என இருவகைப் படுவதும், அவ்விரண்டில் களவு ஒன்றே இயற்கைப் புணர்ச்சி முதல் பொருள்வயிற்பிரிதல் ஈறாகப் பதினேழு

வகைப்படுதலும், அக்கிளவிகளுள் இயற்கைப் புணர்ச்சி ஒன்றே இரந்துபின் நிற்றல் முதலாகப் புகழ்தல் ஈறாகப் பதினைந்து வகையாக விரிதலும் காணலாம். இங்ஙனமே ஒவ்வொரு நெறியும், தொகையும், விரியுமாகப் பெருகுதல்போல இராமன் தொடுக்கும் அம்பு, ஒன்று, பத்தாய், நூறாய், ஆயிரமாய் விரிவடைந்து செல்லும் என உவமையைப் பொருத்திக்கொள்க"[13] என்பார். மிகவும் செறிவாயும், நுட்பமாயும் அமைந்த இவ்விளக்கத்தின் வழி, இராமனின் ஒரம்பிலிருந்து, பலப்பல அம்புகள் பிரிந்து செல்லும் திறத்திற்குத் 'தமிழ்நெறி வழக்கம்' என அகத்திணை வழக்கத்தினைக் கம்பர் உவமை காட்டியமையிலிருந்து தமிழ்நெறி என்பதே அகத்திணை நெறிதான் என்பதை அறியவியலுகிறது.

உலக இலக்கியங்கள் எல்லாம் எழுத்துக்கும், சொல்லுக்கும் இலக்கணம் வகுக்க, தமிழ் இலக்கியம் மட்டும் பொருளுக்கும் இலக்கணம் வகுத்த பெருமையுடையதாய் அமைகின்றது.

"ஒருமொழியில் உள்ள இலக்கணங்கள், அம்மொழியின் பிறப்பு, ஒலி, உரு, அவை, தனித்தோ, இயைந்தோ சொற்களால் அமையும் நெறி என்றின்னவற்றைக் கூறும் எழுத்திலக்கணமும், சொற்களின்வகை, சிறப்பிலக்கணம், பொதுவிலக்கணம், அச்சொற்கள் தொடர்ந்து முடியும் உரைநடைச் சொற்றொடர் என்றின்னவற்றையுங் கூறும் சொல்லிணக்கமும், செய்யுட்கள் அவற்றில் காணப்படும் பலவகை அணிகள் என்றின்னவற்றைக் கூறும் யாப்பு, அணி இலக்கணங்களும் என நான்குவகையாகும். நமது தாய் மொழியிலோ இவற்றின் வேறாகிய பொருளிலக்கணமும் என்பதொன்றும் சிறப்பாக உள்ளது. இங்ஙனம் தமிழ் இலக்கியங்களிலே வேறு எம் மொழி இலக்கியங்களிலும் காணப்பெறாத ஒரு சிறப்பு பொருட்பகுதி இருத்தலே ஆகும்"[14] என்ற கருத்து ஈங்கு உளங்கொளத்தக்கதாகும்.

இவ்வகமரபினை உணர்த்தும் தமிழ் இலக்கணம், அகப்பாடல்களைச் சமைப்பதற்கானது மட்டுமல்ல என்பதனை, "காதல் பாடல்களைச்

சமைப்பதற்கு விதிகளைக் கூறும் அமைப்பிலக்கணம் இல்லை. தமிழ் அகப்பொருள் அதைவிட விரிந்தது. சாத்திரப்பான்மை கொண்டது. மனோதத்துவ உண்மைகளின் அடிப்படையில் எழுந்த ஓர் அற்புதமான இலக்கிய சம்பிரதாயக் கலை எனத் தமிழின் அகப்பொருள் இலக்கணம் பாராட்டப்படுகிறது"[15] என விளக்குவார் ஏ.வி.சுப்பிரமணிய அய்யர்.

தமிழின் அகப்பொருள்மரபு இத்தகைய சிறப்புடையதாய் இருத்தலாலும், அகம் என்பதே தமிழ் எனப்படுதலாலும் அகமரபின் செல்வாக்கு சங்க இலக்கியம் தொடங்கி தமிழ் இலக்கியப்பரப்பு முழுவதும் செழித்தோங்கி வளர்ந்துவருவது தெளிவாகும்.

திருமுறைகள் - சொற்பொருள்வரையறை

உலகம், உயிர், இறைவன் என்னும் முப்பொருளையும் முறையாகத் தருவன திருமுறைகள். 'திரு' என்ற சொல், செல்வம், இறை, அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை போன்ற பல பொருள்களைக் கொண்டுள்ளது.[16] 'திரு' என்ற சொல்லிற்கு, "கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்"[17] என உரைவகுப்பார் பேராசிரியர்.

முறை என்ற சொல் ஒழுங்கு, ஒழுக்கம், உறவு, கூட்டு நன்மை, நூல் போன்ற பொருள்களைத் தருகின்றது.[18] முறை என்ற சொல் 'நூல்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுவதற்கு,

"இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறைவரை வேன்என முயல்வது ஒக்குமால்"[19]

என்ற கந்த புராணத்தின் அவையடக்கப்பாடல் சான்றாகும்.

இவற்றால் உயிருக்குச் செல்வத்தையும், அழகையும், ஒளியையும், பொலிவையும், தெய்வத்தன்மையையும், நல்வினையையும் தருவன திருமுறைகள் என்பது புலனாகும்.

திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்பட்டன. ‘தே’ என்பது ஓரெழுத்து ஒருமொழியாகத் தெய்வம் என்னும் பொருளைச் சுட்டும். “வாரம் என்பது இசைக் கூற்றுகளிலொன்று”[20] இறைவனைப் பற்றிப் பாடப்பட்ட இசைப்பாடல்களின் தொகுப்பு தேவாரம் எனப்பட்டது. தேவாரம் என்ற சொல் ‘வழிபாடு’ என்ற பொருளிலும் வழங்கப்பட்டது என்பதை, “முற்காலத்தில் தேவாரம் என்பது வழிபாடு என்ற பொருளில் வழங்கியது என்பதும், வழிபாட்டில் பாடப்பெற்றுவந்தவை பற்றி கி.பி. பதினான்காம் நூற்றாண்டு முதல் மூவர்பாடல்கள் தேவாரம் என வழங்கப்பட்டு வருகின்றன என்பதும், அதற்கு முன்னர் அப்பாடல்கள் அப்பெயரால் வழங்கப்பட்டமைக்குக் கல்வெட்டுச் சான்றுகளாதல், இலக்கியச் சான்றுகளாதல் கிடைக்கவில்லை என்பதும் நன்கு புலப்படுதல் காண்க”[21] என்ற சதாசிவப் பண்டாரத்தார் குறிப்பினின்று அறியமுடிகின்றது. முதன்முதலில் இவற்றைத் தேவாரம் என வழங்கியவர்கள், உலாபாடிய இரட்டையர்கள் ஆவர். அவர்கள்,

“மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரம் செய்த திருப்பாட்டு”[22]

என ஏகம்பரநாதர் உலாவில் குறிப்பர். இப்பாட்டின் வழி தேவாரம் ‘திருப்பாட்டு’ எனவும் வழங்கப்பெற்றமைத் தெரியவருகின்றது.

தேவாரம் உள்ளிட்ட திருமுறைகள் பன்னிரண்டு. இவை பன்னிரெண்டாக வகுக்கப்பெற்றமைக்கு, “பன்னிரண்டாக ஏன் வகுத்தார்கள் என்பது கேள்விக்குறியாக அமைகின்றது. தமிழர், தம் இலக்கியங்களை, ஒரு குறிக்கோளோடு வகுத்தார்கள். சங்க நூற்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டென வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு தொகையும் நானூறு பாடல்களாகவும் வரையறுத்துக் கொண்டனர். எட்டு- பத்து - நானூறு இவற்றின் நோக்கம் தெரிந்தோ, தெரியாமலோ, பின்வந்த நூல்களைப் ‘பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்’ எனக் கூறினார்கள். இதன் வாயிலாக

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு மேற்கணக்காகின்றன. அடுத்தாற்போன்று வகைப்படுத்தும் போது பதினெட்டு, பன்னிரண்டாயிற்று"[23] எனக் காரணம் காட்டுவார் ச.வே.சுப்பிரமணியம்.

திருமுறைகள் தொகுக்கப்பெற்ற காலத்தினை, "திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு முதல் ஆதித்தசோழன் காலம் அல்லது அவன் புதல்வன் முதற்பராந்தக சோழன் காலத்தில் (கி.பி.9 ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 10 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்) தில்லைக்கோயிலில் இருந்த ஏடுகளை எடுத்துத் தொகுத்து வகைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். எட்டாம் திருமுறை முதல் பதினோராம் திருமுறைவரை சேக்கிழாருக்கு முன்பு வாழ்ந்தவர்களால் வகைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். பின்பு பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாக அமைக்கப்பட்டது"[24] என விளக்கியுரைப்பார் க.வெள்ளைவாரணர். "முதன்முதலில் திருமுறை என்ற சொல் மூவர் தேவாரங்களுக்கு மட்டுமே வழங்கியதாகத் தெரிகிறது."[25]
பின்புதான் ஏனைய அடியார்கள் எழுதிய நூற்களுக்கும் விரிந்தது.

திருமுறைகளில் அகப்பொருள் மரபுகள்

மானிட சமூகம் தொடக்ககாலத்தில் வீரத்தையும், காதலையும் உயிரெனப்போற்றியதால் அக்காலத்தில் வீரயுகப்பாடல்கள் தோற்றம்பெற்றன. பின் வீரயுகப்போக்குகள் வரம்பிகந்து சென்ற காலத்தில் அறநெறிக் கோட்பாடுகள் பெரிதும் வலியுறுத்தப்பட்டன. அந்நிலையில் அறநெறிப் பாடல்கள் பெரிதும் வளர்ச்சியுற்றன.

"அறப்போக்கின் முதிர்ச்சி நிலையாக இறைவனைக் காட்டிப் பக்தி நெறிபுகட்டும் பக்திநெறி முகிழ்த்து எழ, தன்னுணர்ச்சிப் பாடல்களான பக்திப்பாடல்கள் தோற்றம் பெறுகின்றன"[26] என்று ஜி.ஜான்சாமுவேல் குறிப்பிடுகின்றார். இவ்வாறு தோற்றம்பெற்ற பக்தியுகத்தில் தமிழில் தோன்றிய சமயமறுமலர்ச்சி இலக்கியங்கள் தோற்றுவித்த மாற்றங்கள் பலவாகும்.

“சமய மறுமலர்ச்சிக்காலம் தனிச்சிறப்புடைய காலம். ஆகவே அக்காலத்தில் எழுந்த பாடல்கள் இறைவனிடத்தில் கைம்மாறு கருதாது அன்பு செலுத்துதல், தொண்டர்தம் பெருமையினை விதந்து கூறுதல் ஆகியவற்றைப் பொதுக்கொள்கையாகக் கொண்டு இயங்குகின்றன. சிறப்புக்கொள்கைகள் என நோக்கின் வீடுபேற்றையும் கருதாத இறையன்பு, ஓட்டையும் பொன்னையும் ஒப்ப நோக்கும் உயர்ந்த சிந்தனை, அடியவர் பெருமை போற்றும் மாண்பு, கூட்டு வழிபாட்டில் இறைவனை வணங்குதல், தலைவன், தலைவி பாவத்தில் இறைவனிடத்தில் ஒன்றிப்பாடுதல் போன்ற கொள்கைகள் சமயமறுமலர்ச்சியைத் தோற்றுவித்த அருளாளர்களின் பாடல்களில் ஊடுருவி நிற்கின்றன”[27] என்னும் கருத்துப் பொருத்தமாகின்றது என்பார் நலங்கிள்ளி.

மானுட வாழ்வின் மேன்மையை உயர்த்திய பக்தி இலக்கியங்கள், இவ்வுலகியல் வாழ்வினை வெறுத்து, இறைவன்மாட்டு மட்டுமே பக்தி கொண்டு வீடுபேற்றினை அடைதல் என்பதனை மட்டும் வலியுறுத்தவில்லை. அதனைக் கடந்து, இவ்வுலக இன்பங்களின்வழி, இறைவனைக் காணும் வழியினையும் எடுத்துரைக்கின்றன. “இவ் உலக இன்பங்களை நுகர்ந்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம் என்ற நெறியைப் பக்தி இலக்கியம் தருகிறது”[28] என்பார் ம .சா.அறிவுடைநம்பி.

இவ்வுலகியல் இன்பங்களின் அடிப்படையாய் அமையும் காதலின்பத்தை உணர்த்தும் பாடல்கள் பக்தி இலக்கியங்களில் அமையாது ஒழிந்திருக்குமேல், அவ்விலக்கியங்கள் உயர்ந்த சிறப்பிடத்தைப் பெற்றிருக்கமுடியாது. இதனை “தெய்வப்புலவர்களுக்கு அகத்திணைப்புலமை இல்லாதிருக்குமேல் இப்பாசுரங்களின் இலக்கியத் தரம் மிகக்குறைவுபடும், இலக்கியமோ என்ற ஐயத்திற்கும் உரியதாகிவிடும்”[29] என்ற வ.சுப.மாணிக்கனார் கூற்றும் உறுதிப்படுத்தும். மேலும் “கடவுட் காதலைப்பாடிய ஆழ்வார், நாயன்மார்கள் மக்கட் காதலுக்கெனவகுத்த

அகத்திணையுலகச் சுவடுகளைப் பின்பற்றியதாலன்றோ, தமிழகத்தின் இறைப்பாசுரங்கள் புதுமையும், தனிமையும் பெற்று ஓர்இலக்கிய உலகமாக விளங்குகின்றது"[30] என்ற ரா.பி.சேதுப்பிள்ளையின் கூற்று ஈண்டு குறிக்கத்தக்கதாகும்.

பக்தி நெறியாளர்கள் அகத்திணை மரபுகளை வெறுமே பயன்படுத்தாமல், அவற்றில் ஆழமான அறிவைப் பெற்றிருந்தார்கள் என்பதனை, "ஆழ்வார்களும், நாயன்மார்களும் அகமரபிற் பெரும் புலமைகொண்டவர்கள் என்பதை ஆய்வோர்பலரும் ஒருமித்து ஒத்துக்கொள்கின்றனர்"[31] என இராமச்சந்திர தீட்சிதர் குறிப்பதினின்று அறிய முடிகின்றது.

இவ்வுலகத்தின் உயர்ந்த அன்பாய் அமைந்த இறைவன் மாட்டுக்கொள்ளும் பற்றினை வெளிப்படுத்துதற்குத் தன்னலம் மறந்த அகத்துறையே சிறந்தது என்று அருளாளர் கருதினர். இதற்கு, "உத்தம அன்பை வெளிப்படுத்துதற்கு இவ்வகத்துறைகளினும் உயர்ந்த இடம் பிறிதின்மையான், முழுமுதற்கடவுளிடத்துப் பேரன்பு செலுத்தி, ஆடிப்பாடி அகங்கரைந்த அடியார்களும்கூட, அக்கடவுளரையும், தம்மையும் நாயக, நாயகியர்களாகக் கொண்டு இவ்வகத்துறைகள் வாயிலாகவே பக்தியென்னும் பெருவெள்ளத்தில் முழுகி ஆனந்திப்பாராயினர். ஆகவே சிற்றின்பத்திற்கு மட்டுமன்றிப் பேரின்பக்கடலில் இறங்குதற்கும் இவ்வகத்துறைகள் உரிமைபூண்டு திகழ்வன என்பது தெளிவாகும்"[32] என்ற மு.இராகவையங்கார் கூற்று சான்றாகும்.

இவ்வுலகியல் இன்பம் இருவேறு கூறுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவைமுறையே சிற்றின்பம், பேரின்பம் என்பதாகும். இவ்விரண்டு இன்பநெறிகளும் முறைப்படி மேற்கொள்வனவேயாகும். காதலர் இருவர் கருத்தொருமித்து, வாழ்ந்து பெறுவது சிற்றின்பம். இறைவன்மாட்டு அளப்பறும் காதல் கொண்டு ஆண்டவனை வேண்டி இரண்டறக்கலத்தல் பேரின்பம். எனவே இரண்டும் தம்மை மறந்து இருவரும் ஒருவராக இயையும் சிறப்பிலேதான் முடிகின்றன. "சிற்றின்ப வாழ்வும், பேரின்பவாழ்வும் காதல்

நெறியும் கடவுள் நெறியும் ஒன்றையொன்று பற்றி வாழ்வனவே"[33] என்பார் அ.மு.பரமசிவானந்தம்.

இவ்வாறு இறையடியார்கள் சிற்றின்ப வழிநின்று பேரின்பத்தை உணர்த்துவதற்கான வழிமுறையாய் அகப்பாடல் மரபினைக் கையாண்டனர். சமய இலக்கியங்களில் அகப்பாடல் மரபுகள் இடம்பெற்றமைக்கு, "தெய்வநம்பிக்கை இன்றி அறிவொழுக்க அறிவுரை ஆற்றலால் மட்டுமே செல்வாக்குப்பெற்று நின்ற சமயங்களை எதிர்த்து வெற்றி காணமுயன்ற சைவ, வைணவ, சமயமறுமலர்ச்சி இயக்கத்தின் அடிப்படையாக அமைந்த பக்திநெறிக்கு, இவ்வகப்பாடல் நெறி பேருதவியாய் அமைந்தது. இம்மைவாழ்விற்கான காதலையும், மறுமைவாழ்விற்கான தெய்வநம்பிக்கையையும், புறக்கணித்த சமயங்களைத் தூயமானுடக் காதலும், அச்சுவட்டில் அமைந்த தெய்வக்காதலும் இணைந்த அகப்பாட்டு நெறி வெல்லும் கருவியாய் அமைந்ததில் வியப்பில்லை. சமயச் சான்றோர்களின் இறையனுபவம் காதற்பாடல்வடிவில் வந்து பேரின்பத் தேன் பிலிற்றும் வண்ண மலர்களாய் அமைந்துள்ளன"[34] என்ற அ.மா.பரிமணம் கூறும் கருத்து ஈண்டு குறிக்கத்தக்கதாம்.

இவ்வினிய அகநெறியின்கண் நின்று சிவபெருமானைத் தலைவனாகக் கொண்டு ஏற்றிப்போற்றியவர்கள் நாயன்மார் எனப்பட்டனர். இவர்கள் இறைவனின் ஆனந்தவடிவிலே அளப்பிலாக் காதல் கொண்டவர்கள். அவன் அன்பின்பால்ஆழங்காற்பட்டவர்கள். காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கியவர்கள். இத்தகைய பெரியோர், "அன்பைப்பேணி வளர்க்கும் பெருமைமிக்க அன்புநெறியை - பக்திநெறியை, அன்பினால் என்புருக ஏத்தினால் இறைவனைக் காணலாம் என்று அனுபவத்தில் கண்ட அருள்செல்வர்கள் உலகிற்குக் காட்டிச்சென்றனர்"[35] என்பார் க.த.திருநாவுக்கரசு. இவர் இந்நெறியினை 'மெய்யுணர்வுக் காதல் நெறி' என்பர். இவ்வாறு, "சிற்றின்பமாகத் தோன்றிய அகப்பொருள் பேரின்பமாக

மாறிய நிலையில், மானுடக் காதலுக்குச் சொல்லப்பட்டன எல்லாம் ஆன்மாவுக்கும், பரம்பொருளுக்கும் சொல்லப்பட்டன ஆகின்றன. 'அகம்' என்ற சொல் ஜீவாத்மாவைக் காட்டி, அந்த ஜீவாத்மா மகாரவச்யன் என்று கூறி, இந்த மகாரம் ஞானஸ்வரூபம் என்று வெளியிட்டு, அந்த ஞானத்தின் முதிர்ந்த தசையே ஆனந்தம்... இவ்வாறாக அகம் என்ற சொல் இன்பம் என இலக்கணப்பொருள் பெறுகிறது என, அகம் பேரின்பத்தைக் குறிப்பதாய் விளக்குவர்."[36] இவ்வாறு "ஜீவனேநாயகி; நாயகிக்குத் தகுந்த நாயகன் பகவானே"[37] என்னும் கொள்கை தோன்றுகிறது.

"இக் காதல் நெறியினை, 'பிரேமபக்தி' என்றும், 'பக்திநெறிக்காதல்' (Devotional love) என்றும், மெய்யுணர்வுக்காதல் (Erotic mysticism) என்றும் பிற மொழியாளர்கள் பலரும் பலவாறாகக் கூறுவர். இதை நம் தமிழ்ப்பெரியோர்கள் 'நாயகன் - நாயகி பாவம்' என்றும், பேரின்பக்காதல் நெறி என்றும் போற்றி வருகின்றனர்"[38] என்பார் க.த.திருநாவுக்கரசு. இத்தகைய இன்பநெறியினை நாயன்மார்களின் பாடல்களில் பரக்கக் காணமுடிகின்றது.

தொல்காப்பியர் காட்டும் பாடாண் திணை

தொல்காப்பியர் காட்டும் புறத்திணை ஏழனுள் ஒன்று பாடாண்திணை ஆகும். இது கைக்கிளை என்னும் அகத்திணைக்குப் புறனாய் அமைவது. இப்பாடாண்திணையை, "இத்திணை தேவரும், மக்களும் என்னும் இருதிறத்தார்க்கும் உரியது என்றும், இவ்விரு திறத்தாரை நாடிச்செல்வோர் போற்றிப் பாடுகின்ற செய்யுட் குறிப்பினைக் கொண்டது என்றும்"[39] நச்சினார்க்கினியர் குறிப்பர். இவரின் கருத்தின்படி, தேவர்களாம் கடவுளர் மீது அடியார்கள் போற்றிப் புகழ்ந்து பாடும் பாமாலைகள் பாடாண்பாட்டு ஆகும். இவ்வாறு பொதுநிலையில் பாமாலைகளைப் பாடாண்திணைப் பாட்டு எனக் குறித்த உரையாசிரியர்கள், இறைவனைப் புகழ்ந்து பாடும் பாடல்களில் காணப்படும் அகத்துறைப் பாக்களை, "காமப்

பகுதி கடவுளும் வரையார் ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்"[40] என்பதினுள் அடக்குவர். இந்நூற்பாவிற்கு, "புணர்ச்சிவேட்கை கட்புலனாகிய கடவுளிடத்தும் நீக்கார், மக்களிடத்தும் நீக்கார்[41] என்பர் நச்சினார்க்கினியர். இதனால், இறைவனைக் கண்டு, அவனின் கல்யாண குணங்களில் நெஞ்சம் பறிகொடுத்த அடியார்கள் அவனைத் தலைவனாகக் கொண்டு, அவனைக் காதலித்து அகத்துறைப் பாடாண்பாட்டைப் பாடலாம் என்பது தெளிவாகிறது. இவ்வாறு பாடப்படும் பாடாண்பாட்டை, 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயத்தல்' எனக் குறிப்பர் நச்சினார்க்கினியர். பக்திநிலையில் ஆன்மாக்கள் எல்லாம் பெண்களாகவே கருதப்படுகின்றனர். இக்கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு, இத்தொடருக்கு, "கடவுளிடத்து மானிட வடிவிலுள்ள ஆன்மாக்களாகிய பெண்கள் கொள்ளும் காதல் எனவும், கடவுளர் மானிடப் பெண்டிரை நயப்பன என்பதற்கு, இறைவன் மானிட வடிவிலுள்ள ஆன்மாக்களாகிய பெண்டிரைக் காதலிப்பது எனவும் பொருள்கொள்ளலாம். இவ்வாறு இந்நூற்பாவில் இப்பொருள் சொல்லுதலைப் பேரின்பக் காதல் நெறியின் அடிப்படைக் கருத்தினை அறிந்தவர் - தவறாகக் கருதார்"[42] என்பார் க.த.திருநாவுக்கரசு. இதன் அடிப்படையிலேயே நாயன்மார்கள் பாடிய திருமுறைகளில் இடம்பெறும் அகப்பாடல்களை, கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கமாகக் கொள்ளும் மரபு காணப்படுகின்றது. இவ்வடிப்படையில் நாயன்மார்களின் பாடல்கள் பாடாண் திணையாகிய புறத்திணையினைச் சார்ந்ததாய் அமைவது தெளிவாகும். ஆனால்,

"அமரர் கண்முடியும் அறுவகையானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி யொன்றும் என்ப"[43]

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையெழுதும் இளம்பூரணர், 'புரைதீர்காமம்' என்பதற்கு, "குற்றந்தீர்ந்த காமத்தைப் பொருந்திய

வகையினும்" என்று உரைஎழுதி, விளக்கத்தில், "ஐந்திணை தழுவிய அகம்"[44] எனக் குறிப்பார். நச்சினார்க்கினியரோ, "புரை உயர்ச்சியாதலின் - உயர்ச்சியில்லாத காமமாவது, மறுமைப் பயன்பெறும் கடவுள் வாழ்த்துப்போல் உயர்ச்சியன்றி, இம்மையில் பெறும் பயன்"[45] என விரித்துரைப்பார். நச்சினார்க்கினியரின் கருத்துப்படி, 'புரைதீர்காமம்' என்பது பேரின்பத்தை விடுத்து சிற்றின்பத்தைக் குறிக்கிறது என்பது தெளிவாகும். தொல்காப்பியர் கருத்தின்படியும், உரையாசிரியர்களின் விளக்கத்தின்படியும், அகத்துறையாம் ஐந்திணைக் காதலைத் தெய்வத்தின் மீதும் பாடலாம் என்பது புலனாகும். பாடாண்திணையில் கடவுள் பற்றிப் பாடும்போது, அகன் ஐந்திணையும் அமையலாம் என்பதும் பெறப்படும். இம்மரபினை ஒட்டி அடியார்களின் அகத்துறைப்பாடல்களை அகப்பொருட்பாடல்கள் எனக் கொள்வது பொருத்தமுடையதாகிறது.

திருமுறைகளில் காணப்படும் அகப்பொருட் பாடல்கள்

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் 14 பதிகங்களும், ஒரு தனிப்பாடலும், நாவுக்கரசர் தேவாரத்தில் 9 பதிகங்களும் 39 தனிப்பாடல்களும், சுந்தரர் தேவாரத்தில் 2 பதிகங்களும் ஒரு தனிப்பாடலும், மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் 6 பதிகங்களும், கீர்த்தித்திருஅகவலில் கூற்றுநிலைத் தசாங்கமும், ஒன்பதாம் திருமுறையில் 11 பதிகங்களும், பதினோராம் திருமுறையில் 16 நூல்களில் 337 பாடல்களும், பன்னிரண்டாம் திருமுறையில் சுந்தரர், பரவையார், சங்கிலியார் காதல் வழிக்காட்சிகள், காரைக்காலம்மையார், திருநீலகண்டர் வாழ்வில் கற்பில் பிரிவுகள் தொடர்பான 25 பாடல்களும் அகப்பொருள் பொருண்மை உடையன. இப்பாடல்களில் வகை, தொகையினைக் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்த இயலும்.

திருமுறை	பதிக எண்.	பதிகப்பெயர்
முதல்	1	திருப்பிரம்மபுரப் பதிகம்
திருமுறை	44	திருப்பாச்சிலாச்சிராமப் பதிகம்
	56	திருப்பாற்றுறைப் பதிகம்
	60	திருத்தோணிபுரப் பதிகம்
	63	திருப்பிரம்மபுரப் பதிகம்
	73	திருக்கானூர்ப் பதிகம்
	76	திருஇலம்பையங்கோட்டூர்ப் பதிகம்
இரண்டாம்	23	திருவானைக்காப் பதிகம்
திருமுறை	106	திருவலஞ்சுழிப் பதிகம் (7வது பாடல்)
	120	திருமுக்கீச்சுரப் பதிகம்
மூன்றாம்	45	திருவாரூர்ப் பதிகம்
திருமுறை	63	திருச்செங்காட்டங் குடிப்பதிகம்
	100	திருத்தோணிபுரப் பதிகம்
	104	திருப்பரிதி நியமப் பதிகம்
	116	திருவீழிமிழலைப் பதிகம்
நான்காம்	6	திருக்கழிப்பாலைப் பதிகம்
திருமுறை	12	திருப்பழனப்பதிகம்
	97	திருநல்லூர்ப் பதிகம்
ஐந்தாம்	29	திருவாவடுதுறைப்பதிகம்
திருமுறை	40	திருக்கழிப்பாலைப் பதிகம்
	45	திருத்தோணிபுரப் பதிகம்
	53	திருஅதிகை வீரட்டாணப் பதிகம்
	07	திருவாரூர்ப் பதிகம் (7,8 பாடல்கள்)
	15	திருவிடைமருதூர்ப் பதிகம் (5,6 பாடல்கள்)
	18	திருக்கடம்பந்துறைப் பதிகம் (முதல் பாடல்)

திருமுறை	பதிக எண்.	பதிகப்பெயர்
	25	திருப்பாசூர்ப் பதிகம் (5,6,7,8 பாடல்கள்)
	26	திருவன்னியூர்ப் பதிகம் (முதல்பாடல்)
	39	திருமயிலாடுதுறைப் பதிகம் (1,2 பாடல்கள்)
	46	திருப்புகலூர்ப் பதிகம் (2,3 பாடல்கள்)
	64	திருக்கோழம்பம் பதிகம் (4வது பாடல்)
	66	திருவலஞ்சுழிப் பதிகம் (9வது பாடல்)
	78	திருக்கோடிக்காப் பதிகம் (4வது பாடல்)
	88	திருமருகல்ப் பதிகம் (4,5,6,7,8,9 பாடல்கள்)
ஆறாம்	09	திருஆமாத்தூர்ப் பதிகம்
திருமுறை	13	திருப்புறம்பயப் பதிகம்
	35	திருவெண்காட்டுப் பதிகம் (1, 3, 4, 5, 6, 7 பாடல்கள்)
	45	திருவொற்றியூர்ப் பதிகம் (4,5,6,7,8 பாடல்கள்)
	58	திருவலம்புரப் பதிகம் (3,4,5,6,7 பாடல்கள்)
ஏழாம்	36	திருப்பைஞ்ஞீலிப் பதிகம்
திருமுறை	37	திருவாரூர்ப் பதிகம்
	91	திருவொற்றியூர்ப் பதிகம் (4வது பாடல்)
எட்டாம்	02	கீர்த்தித் திருஅகவல் (103 அடி முதல்
திருமுறை		124வது அடிவரை)
	10	திருக்கோத்தும்பி
	11	திருத்தெள்ளேணம் (குறிப்பால் அகப்பொருள்)
	12	திருச்சாழல்
	17	அன்னைப்பத்து
	18	குயிற்பத்து
	19	திருத்தசாங்கம்

திருமுறை	பதிக எண்.	பதிகப்பெயர்
ஒன்பதாம்		
திருமுறை		
திருமாளிகைத்		
தேவர்	3வதுபதிகம்	உறவாகியயோகம்
சேந்தனர்	6வது பதிகம்	திருவாவடுதுறை
	7வது பதிகம்	திருஇடைக்கழி
கருவூர்த்தேவர்	10வது பதிகம்	திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்
	12வது பதிகம்	திரைலோக்கிய சுந்தரம்
	16வது பதிகம்	தஞ்சை இராசராசேச்சுரம்
திருவாலிய	23வது பதிகம்	பவளமால்வரை
முதனார்	25வது பதிகம்	கோயில் கோலமலர்
புருடோத்தம	26வது பதிகம்	கோயில் வாரணி
நம்பி	27வது பதிகம்	கோயில்வானவர்கள்
சேதிராயர்	28வது பதிகம்	கோயில் - சேலுலாம்
பதினொன்றாம்		
திருமுறை		
சேரமான்		
பெருமாள்		பொன்வண்ணத்தந்தாதி (33 பாடல்கள்)
சேரமான்		
பெருமாள்		திருவாரூர் மும்மணிக்கோவை (30 பாடல்கள்)
நக்கீரர்		கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி (24 பாடல்கள்)
நக்கீரர்		திருவலஞ்சுழி மும்மணிக்கோவை (11 பாடல்கள்)
கபிலர்		சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை
		(3 பாடல்கள்)
கபிலர்		சிவபெருமான் திருவந்தாதி
		(46 பாடல்கள்)

திருமுறை	பதிக எண்.	பதிகப்பெயர்
பரணர்		சிவபெருமான் திருவந்தாதி (10 பாடல்கள்)
இளம்பெருமான் அடிகள்		சிவபெருமான் திருமும்மணிக்கோவை (5 பாடல்கள்)
பட்டினத்தார்		கோயில் நான்மணிமாலை (12 பாடல்கள்)
பட்டினத்தார்		திருக்கழுமல மும்மணிக்கோவை (2 பாடல்கள்)
பட்டினத்தார்		திருவிடை மருதூர் மும்மணிக்கோவை (3 பாடல்கள்)
பட்டினத்தார்		திருஏகம்பமுடையார் திருவந்தாதி (56 பாடல்கள்)
நம்பியாண்டார் நம்பி		கோயில் திருப்பண்ணியர் விருத்தம் (8 பாடல்கள்)
நம்பியாண்டார் நம்பி		ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (45 பாடல்கள்)
நம்பியாண்டார் நம்பி		ஆளுடைய பிள்ளையார் திருமும்-மணிக்கோவை (16 பாடல்கள்)
நம்பியாண்டார் நம்பி		ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் (25 பாடல்கள்)
பன்னிரண்டாம் திருமுறை		தடுத்தாட்கொண்ட புராணம் (பன்னிரண்டு பாடல்கள்) ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம் (ஏழு பாடல்கள்) காரைக்கால் அம்மையார் புராணம் (இரண்டு பாடல்கள்) திருநீலகண்டர்புராணம் (நான்கு பாடல்கள்)

திருமுறைகளில் முதல், கரு, உரிப்பொருட் அமைதி

தொல்காப்பியர் அக இலக்கியங்களுக்கு உரிய அடிப்படைக்கூறுகளாக முதல், கரு, உரிப்பொருள்களை அமைத்தார். இம்முப்பொருள்களும் ஒவ்வொரு திணையின் கண் நிற்றலைத் தொல்காப்பியர் விரித்துரைப்பர். இம்முப்பொருள்களை,

"முதல்கரு உரிப்பொருள் என்றமூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுள் பயின்றவை நாடுங் காலை"[46]

என்ற நூற்பா உணர்த்திநிற்கும். இவற்றுள் முதற் பொருளை,

"முதல் எனப்படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"[47]

என மேலும் விளக்குவார். நிலம் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைப்படும். தொல்காப்பியர் பாலை நீங்கலாக ஏனையவற்றிற்கு நிலம் கூறினார். பாலைக்கு நிலம் கூறவில்லை எனினும்,

"சுரமென மொழிதலும் வரைநிலை இன்றே"[48]

என்பதில் உய்த்துணர வைத்துள்ளார்.

முதற்பொருளின் பிறிதொரு பிரிவான பொழுது, பெரும் பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். இவற்றை,

"காரும் மாலையும் முல்லை"[49]

"குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்"[50]

"பனி எதிர் பருவமும் உரித்தென மொழிப"[51]

"வைகறை விடியல் மருதம்"[52]

"எற்பாடு நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்"[53]

"நடுவுநிலைத்திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"[54]

"பின்பனி தானும் உரித்தென மொழிப"[55]

என்ற நூற்பாக்கள் வரையறுக்கும்.

இவ்வாறு தொல்காப்பியர் குறிக்கும் பெரும்பொழுது, சிறுபொழுதுகளை,

"காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிளவேனில் வேனில் என்றாங்கு
இருமூன்று திறத்தது பெரும் பொழுது அவைதாம்
ஆவணி முதலா இரண்டிரண்டாக
ஆடி இறுதியும் ஆயும் காலே"[56]

"மாலை யாமம் வைகுறு என்றா
காலை நண்பகல் எற்பாடென்றா
அறுவகைத் தென்ப சிறுபொழுதவைதாம்
படுசுடர் அமையந் தொடங்கி ஐயிரு
கடிகை அளவைய காணும் காலே"[57]

எனக் குறிப்பிடுகிறது இலக்கண விளக்கம். முப்பொருள்களுள் ஒன்றான கருப்பொருளைத் தொல்காப்பியர்,

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"[58]

என்பார். திணைமயக்கம் கூறுமிடத்து "அவர் பூவைக்குறிப்பதால் மேலே குறிப்பிடப்பட்ட எட்டனுடன், பூவும் சேரக்கருப்பொருள் எண்ணிக்கை ஒன்பது ஆகும்."[59] பிற்கால இலக்கண நூலான சுவாமிநாதம் கருப்பொருள்களை,

"கொற்றதெய்வம், உயர்ந்தோர், அல்லோர், விலங்கு, ஊர், நீர், புட்
பகுத்தமரம், பூ, உணவு, பறை, யாழ், பண், தொழிலார்
பதினான்கும் பிறவுமே கருப் பெருளாக் குகவே"[60]

எனப் பதினான்காய் விரித்துரைக்கும்.

உரிப்பொருள்மரபினைத் தொல்காப்பியம்,

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"[61]

எனச் சுட்டுவார். இவ்வாறு தொல்காப்பியரால் குறிக்கப்பெறும் முப்பொருள் அமைப்புமுறை திருமுறைகளில் பல்வேறு இடங்களில் பொருந்தி நிற்றலைக் காணமுடிகின்றது. திருமுறைப் பதிகங்கள் பெரும்பான்மையும் அருளாளர்கள் நடைப்பயணம் சென்ற காலத்துப் பாடப்பட்டவை யாகையால், அத்தலங்களைப் பற்றிய வருணனைகள் மிகுதியும் இடம்பெற்றுள்ளன.

குறிஞ்சிநிலம் மலையும், மலைசார்ந்த பகுதியுமாம். இந்நிலம் பற்றிய செய்திகளை,

"மணி கொழித்து வயிரம் உந்திக்
குன்றத்து அருவி அயலே புனல் ததும்பும்"

(2:71:7)

"முளைக்கைப்பிடி முக ◌மன் சொலி முதுவேய்களை இறுத்துத்
துளைக்கைக்களிற்றினமாய் நின்று சுனை நீர்களைத் தூவி,
வளைக்கைப் பொழிமழை கூர்தரமயில்மான் பிணைநிலத்தைக்
கிளைக்கும் மணிசிந்தும் திருக்கேதாரம் எனீரே" (7:78-8)

எனவரும் திருமுறைப் பாடல்களில் நிலம்மட்டுமன்றி அந்நிலத்தின்கண் வாழும் பிடி, களிறு, மயில், பிணைமான், வேய், சுனைநீர் ஆகிய கருப்பொருள்களும் சுட்டப்படுகின்றன. இதில் கருப்பொருள் மயக்கமாக மான் இடம்பெற்றுள்ளது.

முல்லை நிலம் என்பது காடும் காடுசார்ந்த பகுதியுமாம். இதனை,

"ஒள்ளி துள்ள கதிக்கா மிவனொளி
வெள்ளியானுறை வேற்காடு" (1:57:1)

"மானும் மரை இனமும் மயில் இனமும் கலந்து எங்கும்

தாமே மிக மேய்ந்து தடஞ்சுனை நீர்களைப் பருகிப்

பூமாமரம் முரிஞ்சிப் பொழிலூடே சென்று புக்கு"

(7:79:1)

என்ற திருமுறைப் பாடல்களின் அடிகளில் முல்லை நிலம் மட்டுமன்றி மான், மரை இனம், மயில் ஆகிய அவற்றின் கருப்பொருள்களும் சுட்டப்படுகின்றன. இவற்றுள் கருப்பொருள் மயக்கமாகக்குறிக்கப் பெற்றுள்ளது.

மருதம் என்பது வயலும், வயல்சார்ந்த பகுதியுமாம். இந்நிலம் பற்றிய செய்திகளும் திருமுறைகளில் காணப்படுகின்றன.

"செறி இதழ்த் தாமரைத் தவிசில் திகழ்தெங்கும்

இலை குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்

வெறி கதிர்ச் சாமரையிட்ட இளவன்னம்

வீற்றிருக்கும் மிழலையாமே"

(1:132:2)

"செங்கயல் சேல்கள் பாய்ந்து தேம்பழமினிய நாடித்

தங்கயம் துறந்து போந்து தடம்பொய்கை அடைந்துநின்று"

(4:58:7)

"........................ வளங்கொள் மேதி

சேடேறிமடுப் படியுந் திருப்புத்தூரில்"

(6:76:4)

என்ற திருமுறைப்பாடல்களின் அடிகளில் மருதநிலம் மட்டுமின்றி, அவற்றின் கருப்பொருள்களான கயல், மேதி, நெல், பொய்கை, தாமரை, அன்னம், மாமரம் ஆகியவையும் குறிக்கப்படுகின்றன.

நெய்தல் கடலும், கடல்சார்ந்த இடமும் ஆகும்.

"நுரையும் திரையுந் நொப்புறு கொட்பும்

வரையில் சீரகவாரியும் குரைகடல்

பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி

எண்ணிலா வாகி இருங்கடல் அடங்கும்"

(கோ.நா.மா., பா.24)

"மேதை நெடுங்கடல் வாருங்கயலோ? விலைக்குளது

காதி னளவும் மிளிர் கயலோ"

(ஆ.பி.தி., பா.17)

எனவரும் திருமுறைப் பாடல்களில் நெய்தல் நிலம்மட்டுமன்றி அந்நிலம் சார்ந்த கருப்பொருளாய்க் கயல் குறிக்கப்படுகின்றது.

பாலைநிலம் முல்லையும் குறிஞ்சியும் முறைமையால் திரிவதால் ஏற்படுவதாகும். இத்தகைய பாலைநிலம் பற்றிய குறிப்புகள் திருமுறைகளில் காணப்படுகின்றன.

"கோல முல்லையும் குறிஞ்சியும் அடுத்த சில்லிடங்கள்

நீலவாட்படை நீலிக் கோட்டங்களும் நிரந்து

கால வேனிலிற்கடும்பகல் பொழுதினைப் பற்றிப்

பாலையும் சொலலாவன உளபரன்முரம்பு"

(தி.கு.பு., பா.15)

எனக் குறிக்கும் திருமுறை. இச்செய்தி,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து

நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிவங் கொள்ளும்"[62]

என்ற சிலப்பதிகார அடிகளை ஒத்து அமையும்.

ஐந்நிலங்களுக்கும் உரிய பெரும்பொழுது, சிறுபொழுது பற்றிய குறிப்புகளும் திருமுறைகளில் காணப்படுகின்றன.

"வெயில் ஒடுங்கா வெம்மை தரும்வேனில் விரிதரு நாளில்"

(தி.ஞா.பு., பா.304)

"துளித்தலைமெல் அதுகுபனி தொடுத்தசையச் சூழ்பனியால்
குளிர்குடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும்"

(தி.ஞா.பு., பா.328)

"காலையும் மாலையும் கால்பெயர்த்திடுவதுன்"

(கோ.நா.மா., பா.24)

"பையுள்மாலை தமியோர் பனிப்புற"

(த.கொ.பு., பா.158)

வேனில், முன்பனி போன்ற பெரும்பொழுதுகளும், காலை, மாலை போன்ற சிறுபொழுதுகளும் உணர்த்தப்பட்டுள்ளன.

முப்பொருளும் ஒருங்கு வரும் மரபு

தொல்காப்பியர் குறிக்கும் முதல், கரு, உரிப்பொருளெனப்பெறும் முப்பொருளும் ஒருபாடலின்கண் பயின்று வருவதனையும் திருமுறைகளில் காணமுடிகின்றது. சான்றாய் திருவாரூர் மும்மணிக்கோவையின் கண் அமைந்துள்ள பாடல் இவ்வாறு அமையும்.

மானுடர் கடத்தற்கு அரிய மலையினைக் கடந்து, தனது வேற்படை ஒன்றினையே இரவுப் பொழுதின் கடுமையை நீக்கும் விளக்காய்க்கொண்டு, நெடிய கான்யாற்றினை நீந்திக்கடந்து, தலைவியைச் சந்திக்க வருகின்றான் தலைவன். அதனைக் கேள்வியுற்ற தாமரை போன்ற முகத்தினையும், மயில்போன்ற சாயலினையும் உடைய தலைவியானவள் பெரிதும் வருந்தித் துயிலாது நின்றாள். இரவுப்பொழுது முழுவதும் கண்ணீர்விட்டு ஆற்றினாள். ஆகவே இரவுக்குறிக்கண் வாரற்க எனத் தோழி வரைவு கடாவுகின்றாள். இதனை,

"அணங்குறை நெடுவரை அருமைபே ணாது
மணங்கமழ் தெரியல்சூடி, வைகலும்
விடுசுடர் நெடுவேல் முன்னடி விளக்காக்
கடுவிசைக் கான்யாற்று நெடுநீர் நீந்தி

ஒருதனி பெயரும் பொழுதில், புரிகுழல்
வான்அர மகளிர்நின் மல் வழங் ககலத்து
ஆனாக் காத லாகுவர் என்று
புலவி உள்ளமொடு பொருந்தாக் கண்ணள்
அல்லியங் கோதை அழலுற் றாஅங்கு
எல்லையில் இருந்துயர் எய்தினள் புல்லார்
திரிபுரம் எரிய ஒருகணை தெரிந்த
அரிவை பாகத் தண்ண லாரூர்
வளமலி கபில வாள் முகத்து
இளமயிற் சாயல் ஏந்திழை தானே"

(தி.மு.கோ., பா.7)

என்ற பாடல் புலப்படுத்துகிறது.

இப்பாடலின்கண் மலையும், மலையின்கண் அமையும் காட்டாறும் குறிக்கப்பட்டுள்ளன. இவை குறிஞ்சிக்குரிய முதற்பொருள்களாகும். மயில் சுட்டப்பட்டமையால், கருப்பொருளாலும் இப்பாடல் குறிஞ்சியாம். தலைவியைக் காணப் புணர்தல் வேட்கை உடையனாய்த் தலைவன் இரவுக்குறிக்கண் இன்னல்களைக் கடந்துவந்தான் எனக் குறித்தமையால், உரிப்பொருள் வகையாலும் இப்பாடல் குறிஞ்சித்திணையாகும். இவ்வாறு, முப்பொருள்மரபும் ஒருங்குவரும் பாடலும் திருமுறையில் காணப்படுகின்றது.

திணைமயக்கம்

நிலம் இடம்பெயராது; பறவை, விலங்கு போன்றன இடம்விட்டு இடம்பெயர்வன; பொழுது மயங்கிவரும். இந்நிலை அறிந்தே தொல்காப்பியர் முதற்பொருளில் நிலம் மயங்காது, பொழுது மட்டும் மயங்கும் என்பார்.

"திணை மயக் குறுதலும் கடிநிலை இலவே
நிலன் ஒருங்கு மயங்குதல் இலனென மொழிப
புலன் நன்கு உணர்ந்த புலமையோரே"[63]

என்பார் தொல்காப்பியர். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், "ஒரு திணைக்குரிய முதற்பொருள் மற்றொரு திணைக்குரிய முதற்பொருளோடு சேர நிற்றலும் கடியப்பட்டது"[64] என்பர். நச்சினார்க்கினியரோ, "ஒரு நிலத்தின்கண் இரு உரிப்பொருள்கள் மயங்கலாம்"[65] என்பர். ஆனால் ஓர் உரிப்பொருளில் இருநிலம் மயங்காது என்பதும் பெறப்படுகிறது. இவ்வடிப்படையில் திணைமயக்கம் அமைவதனைத் திருமுறைகளில் காணமுடிகின்றது.

திருஞானசம்பந்தரின் திருஇலம்பையங்கோட்டூர் திருப்பதிகம் தலைவி இரங்கிக்கூறும் நெய்தல் திணைப்பதிகம் ஆகும். நெய்தல் திணைக்குரிய நிலம் கடலும் கடல் சார்ந்த பகுதியுமாம். ஆனால் இப்பதிகத்தில்,

"குளம்புறக் கலைதுள மலைகளுஞ் சிலம்பக்

கொழுங்கொடியெழுந் தெங்குங் கூவிளங்கொள்ள

இளம்பிறை தவழ்பொதி இலம்பையங் கோட்டூர்" (1:76:4)

என மலைப்பகுதி பற்றிய வருணனை அமைந்துள்ளது. இங்கு நெய்தல் நிலத்திற்கு உரிய இரங்கல் உரிப்பொருள் குறிஞ்சி நிலத்தின்கண் மயங்கி வந்துள்ளது.

நெய்தல் நிலத்துக்கு உரிய முத்துக்களையும், மருதத்திற்குரிய கமுகின் பூக்களையும் இரு நிலப்பெண்களும் மாறிமாறித் தொடுத்தனர் என்பதனை,

"மீளும் ஓதம்முன் கொழித்த வெண் தரளமும் கமுகின்

பாளை உக்கவும் விரவலிற் பரத்தியர் பணைமென்

தோளு ழத்தியர் மகளிர்மா றாடிமுன் தொகுக்கும்

நீளும் நெய்தலும் மருதமும் கலந்துள நிலங்கள்"

(தி.கு.பு., பா.46)

என்ற திருமுறைப்பாடல் காட்டும். நெய்தல் நிலத்தின்கண், குறிஞ்சிநிலக் கருப்பொருளான வேட்டுவர் மயங்கிவந்த திணை மயக்கத்தினை,

"நீட்டுவ நோதத்தொடேறிய சங்கம் நெகுமுளரித்

தோட்டுவெண் முத்தம் சொரி சண்பை நாதன் தொழாதவரின்

வேட்டுவர் வேட்ட தண்ணீரினுக்கு உண்ணீ ருணக் குழித்த

காட்டுவரூறல் பருகும் கொலாமெம் கனங் குழையே"

(ஆ.பி.தி., பா.86)

என்ற திருமுறைப்பாடல் காட்டுகின்றது.

அக இலக்கியத் தலைமக்கள்

அக இலக்கியத் தலைமக்களாய் ஒத்த தலைவனும் தலைவியும் அமைதல் வேண்டும் என்பார் தொல்காப்பியர். இவற்றுள் ஒப்பு என்பதனை,

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு

உருவு நிறுத்த காமவாயில்

நிறையே அருளே உணர்வொடு திருவென

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"[66]

என மெய்ப்பாட்டியலுள் விரித்துரைப்பார் தொல்காப்பியர். திருமுறைகளில் காணப்படும் தலைவன், தலைவியர் ஒத்த தன்மை உடையவராகக் காணப்படுகின்றனர். இதற்குப் பன்னிரண்டாம் திருமுறையில் காணப்படும் சுந்தரர், பரவையார், சங்கிலியார் போன்றோர் சான்றாவர். பிற திருமுறைகளிலும் கிளவித் தலைவனும், தலைவியும் ஒத்த தன்மை உடையோராய் அமைகின்றனர். இறைவன் அக இலக்கியத் தலைவனாய் அமையும் நாயகன் - நாயகி பாவனைப் பாடல்களில், தலைவன் உயர்ந்தவனாய் அமைவானே என்ற ஐயம் எழலாம். தலைவன், தலைவியினும் மிக்கவனாய் அமையலாம் என்பதனை,

"மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே"[67]

எனத் தொல்காப்பியர் குறிப்பர். எனவே இத்தகைய தன்மையும் தொல்காப்பியர் சுட்டிய அகமரபினை அடியொற்றி அமைந்ததாகும்.

கூட்ட முறைமை

களவின்கண் கூட்டமுறைமை, இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற்கூட்டம் எனக் குறிக்கப்படும். இயற்கைப் புணர்ச்சியின்கண் தாமே கண்டு கூடியவர்கள் இடந்தலைப்பாட்டானும், தாமே கூடுவரேயன்றி, தோழி போன்றோர் இவர்களைக் கூட்டுதல் என்பது பொருந்தாது. இதனை,

"கூட்டக் கூடல் எவ்விடத்தானும் களவிற்கு இல்லை"[68]

என இறையனார் அகப்பொருள் கூறும்.

களவிற்குரியதாய்க் காட்டப்பெறும் நால்வகைக் கூட்டமுறைகளும் திருமுறைகளில் இடம்பெற்றுள்ளன.

கூற்றுமுறைமை

தொல்காப்பியர் களவிலும் கற்பிலும் கூற்றுக்குரியோரைத் தொகுத்துக் காட்டுவார். பார்ப்பன், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி ஆகியோர் களவிற்குரியோர் என்றும்[69] பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர், களவிற் கிளவிக்கு உரியோராகச் சொல்லப்பட்ட அறுவர் ஆகியோர் கற்பில் கூற்றுக்குரியோர்[70] எனவும் தொகுத்துக் காட்டுவார்.

திருமுறைகளில் களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளிலும் அகப்பொருள் பாடல்கள் காணப்படுகின்றன. நாயகன் - நாயகி பாவனையில் அமைந்த அகப்பாடல்கள் அனைத்தும் களவிற்குரியனவேயாகும். கிளவித்தலைவன், தலைவி என அமைந்த திருமுறைப்பாடல்கள் களவிற்குரியதாகவும், கற்பிற்குரியதாகவும் அமைந்துள்ளன. இவையனைத்தும் கூற்று என்னும் பாகுபாட்டிலும் அடங்கும்.

தலைவி கூற்றில் அகப்பொருட்துறைகள்

திருமுறைகளில் இடம்பெற்றுள்ள அகப்பாடல்களில் பொருண்மை அடிப்படையில் முதலிடம் பெறுபவை தலைவி கூற்றுப் பாடல்கள் ஆகும். இப்பாடல்களில் மிகுதியான அகப்பொருள்துறைகள் பயின்று வந்துள்ளன.

கைக்கிளை, மெய்யுறு புணர்ச்சி, மின்னிடைமெலிதல், இடந்தலைப்பாடு, பிரிவுழிக்கலங்கல், ஐந்திணை மரபின்கண் தூதுவிடல், நெஞ்சொடுகிளத்தல், தென்றலையும், நிலவினையும் வெறுத்துக்கூறல், தலைவி புள்ளிடை வைத்து வருந்தல், கடலிடைவைத்து வருந்தல், பருவம்கண்டு வருந்தல், அலர்அஞ்சி உரைத்தல், இயற்பட மொழிதல், நொதுமலர் வரைவின்கண் அறத்தொடு நிற்றல் போன்றவை களவு தொடர்பானவைகளாய் அமைகின்றன.

கற்பொழுக்கம் தொடர்பான துறைகளாய், பருவம் கண்டு அழிந்து கூறல், தலைவனின் பரத்தமை கண்டு தலைவி ஊடல், பாணனுக்கு வாயில் மறுத்தல், எங்கையர் காணின் நன்றென மறுத்தல், பாங்கனுக்கு வாயில் மறுத்தல் போன்றன அமைந்துள்ளன.

பெருந்திணைக்கண் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் அமைந்துள்ளது.

தலைவி கூற்றில் காணப்பெறும் புதிய அகப்பொருள் மரபுகளாகத் தலைவி ஐயுறுதல், பவனிகண்டு அழுங்கல், தலைவன் ஊர்தியை எதிர்ப்பெய்துகூறல், தாமம் பெறாது தளர்வுற்று உரைத்தல், தலைவன் எருதின்மணி ஒலியும், நிலவொளியும் வருத்துவதாய்க்கூறல், தலைவி கனவுகண்டு இரங்கல், தலைவன் பதிசொல்லித் தலைவிபுலம்பல், கூடல் இழைத்தல், தலைவனின் பத்துஉறுப்புகளைக் கூறுமாறு கிளியை வேண்டல் (தசாங்கம்), திருத்தெள்ளேணம் கொட்டல், தலைவனைக் காணக் கண்போதவில்லை எனப் புலம்பல், புதல்வனை வாயிலாய்க் கொண்டுவந்த தலைமகனுக்கு வாயில் மறுத்தல் போன்றவை அமைந்துள்ளன.

தோழி கூற்றில் அகப்பொருட் துறைகள்

திருமுறைகளில் தலைவி கூற்றிற்கு அடுத்த நிலையில் இடம்பெறுபவை தோழி கூற்றுப் பாடல்கள் ஆகும். இவற்றில் பாங்கி மதியுடம்படுத்தல், தோழி குறையுற உணர்தல், கெடுதி வினவல்வழி உணர்தல், தோழி முன்னுற

உணர்தல், நாற்றமும் ஒழுக்கமும் கண்டு முன்னுற உணர்தல், தலைவியின் தோற்றம் கண்டு மதியுடம்படுத்தல், தோழி நாணநாட்டத்தால் முன்னுற உணர்தல், சேட்படையில் அஞ்சி அச்சுறுத்தல், தோழி இற்செறிப்புக் கூறி வரைவுகடாதல், வேங்கையொடு வெறுத்து வரைவுகடாதல், அலராகும் என அஞ்சி வரைவுகடாதல், ஆற்றின் அருமைகூறி வரைவுகடாதல், தலைவியின் பிரிவாற்றாமை கூறி வரைவுகடாதல், இரவுக்குறிக்கண் தலைவன் வரவுணர்ந்து உரைத்தல், ஒருவழித்தணத்தலில் தலைவியை ஆற்றுவித்தல், தலைவியின் வேறுபாடுகண்டு வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல், வெறியாட்டிடத்துத் தோழி அறத்தொடு நிற்றல், புனல்தருபுணர்ச்சி கூறி அறத்தொடு நிற்றல், களிறுதரு புணர்ச்சி கூறி அறத்தொடு நிற்றல், நொதுமலர் வரைவுகண்டு அறத்தொடு நிற்றல், தலைவியின் மகிழ்வை செவிலிக்கு உரைத்து வேட்கையுரைத்தல் எனும்படி அறத்தொடு நிற்றல், உண்மைசெப்பும் வகையான் அறத்தொடு நிற்றல், உடன்போக்கில் தலைவனைத் தோழி உடன்படுத்தல் ஆகியவை களவொழுக்கத்துறைகளாக அமைந்துள்ளன.

தலைவனை செலவழுங்குவித்தல், தலைவியைப் பருவங்காட்டி வற்புறுத்தல், முகில்களை முன்னிலையாகக் கொண்டுகூறல், தலைவனின் தேர்வரவு கூறி ஆற்றுவித்தல் போன்றவை கற்பொழுக்கத் துறைகளாக உள்ளன.

தோழி கூற்றில் காணப்பெறும் புதிய அகப்பொருட் துறைகளாக ஏறுதழுவுவோர்க்குத் தலைவி உரியள் எனல், கையுறை ஏற்கத் தலைவியை வற்புறுத்தல், அவயம் எழுதல் அரிதென மறுத்தல், தோழி முலைவிலைகூறல், கூடல் இழைத்தல், தலைவியின் பசலை கண்டு தோழியர் எள்ளல், தோழி பிறையைப் பழித்தல், விருந்திறை விலக்கல், இறைவனின் நண்பனுக்கே தன்னைக் கொடுப்பேன் எனல் ஆகியவை அமைந்துள்ளன.

தலைவன் கூற்றில் இடம்பெறும் துறைகள்

திருமுறைப் பாடல்களில் தலைவி, தோழி ஆகியவர்களுக்கு அடுத்தநிலையில் வைத்து எண்ணப்படுபவன் தலைவன். இவனது கூற்றில், கைக்கிளை, சிறப்புடைக் கைக்கிளையில் காட்சி, ஐயம், தெளிவு, மெய்தொட்டுப் பயிறல், பொய்பாராட்டல், ஊர் அணித்து எனல், ஆயத்துய்த்தல், உற்றது உரைத்தல், கழற்றெதிர் மறுத்தல், இயலிடம் கூறல், பாங்கிமதியுடம்பாட்டில் கெடுதிவினவல், பிறவினாதல், தலைவன் மடன்மாக்கூறல், வரைவுடம்படாது மறுத்தல், வறுங்களம் கண்டு வருந்தல், உடன்போக்கில் தளர்வறிந்து இருத்தல், தலைவன் செலவழுங்கல் போன்றவை அகப்பொருள் துறைகளாய் அமைந்துள்ளன.

செவிலி கூற்றில் அகப்பொருட் துறைகள்

தலைமக்களின் களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோள்களிலும் இடம்பெறுபவள் என்பதனால் செவிலி இன்றியமையாதவளாகின்றாள். திருமுறைப் பாடல்களில் தலைவி பிச்சியானதை உரைத்தல், காதல்கைமிக்க தலைவியை எண்ணிவருந்தல், களவு அலராகின்ற வழிக்கூறல், நற்றாயிடம் அறத்தொடு நிற்றல், மகட்போக்கியசெவிலி புலம்பல், சுரத்தின்கண் தேடிச்செல்லல் போன்றவை செவிலி கூற்றாக அமைந்துள்ளன.

செவிலிகூற்றில் புதிய அகப்பொருள் துறைகளாய், பருவம் எய்தாதவளையும் தலைவன் ஈர்ப்பான் எனல், செவிலி தலைவனை எதிர்பெய்து கூறல், தலைவன் தலைவியின் மேகலை கவர்ந்தான் எனல், தலைவி மடலேறுவதாய்ச் செவிலி கூறல், செவிலி சுடரோடு இரத்தல், செவிலி சுவடுகண்டு இரங்கல், செவிலி குரவொடு வருந்தல், செவிலி புணர்ந்துடன் வருவோரை வினவல், செவிலி புறவொடுபுலத்தல் போன்றன அமைந்துள்ளன.

நற்றாய் கூற்றில் அகப்பொருள்மரபுகள்

நற்றாய் கூற்றில் அகப்பொருள் மரபுகளாய்த் தலைவியின் களவொழுக்கத்தினை மொழிதல், தலைவியின் நிறையும், நீர்மையும் தலைவன் கொண்டான் எனல், மகட்போக்கிய நற்றாய் இல்லின்கண் இருந்து புலம்பல் போன்றவை காணப்படுகின்றன. நற்றாய் கூற்றில் புதிய அகப்பொருட்துறைகள் ஏதும் தென்படவில்லை.

கண்டோர்கூற்றில் அகப்பொருள்மரபுகள்

தலைமக்களை இடைச்சுரத்தில்கண்டு பேசும் கண்டோர் கூற்றுப்பாடல்களில் இடம்பெறும் அகப்பொருள் துறைகளாய், இடைச்சுரத்தில் தலைமக்களிடத்து வழியின் அருமைகூறல், தம்ஊரின் அணிமைகூறல், தாய்நிலை கண்டு தடுத்தல், தலைவன்கற்பில் குறித்த பருவம் வந்தது கண்டு கூறல் ஆகியவை அமைந்துள்ளன. கண்டோர் கூற்றில் புதிய அகப்பொருள் மரபுகள் புலப்படவில்லை.

கண்டார் கூற்றுப் பாடல்களில் அகப்பொருட் துறைகள்

திருமுறைகளில் காணப்படும் புதிய அகத்திணை மாந்தர் கண்டார் ஆவர். தலைவியின் உடன்போக்கு தொடங்கி, கற்பு வாழ்வில் இடம்பெறுபவர் கண்டோர். தலைமக்களின் உடன்போக்கிற்கு முன்னதாகிய களவு வாழ்வில் இடம்பெறுபவர் கண்டார். இவர்தம் கூற்றில் காணப்பெறும் புதிய அகப்பொருள் மரபுகளாய், கண்டார் ஐயுற்றுக்கூறல், பெற்றோரை விலக்கித் தலைவனைக் காணும் தலைவியைக் கண்டுகூறல், தலைவியின் வளையல்களைத் தேடும் செவிலியைக்கண்டு கூறல், ஏறுதழுவிக்கோடல் குறித்துக்கூறல் என்பவை அமைகின்றன.

தொல்காப்பியர் கூற்றிற்கு உரியவர்கள் எனத் தொகுப்போரில் தலைவி, தோழி, தலைவன், செவிலி, நற்றாய், கண்டோர் போன்றவர்களின் கூற்றும், தொல்காப்பியர் குறிப்பிடாத கண்டார் என்பாரின் கூற்றும் தவிர பிற அகத்திணை மாந்தர்களின் கூற்று திருமுறைகளில் இடம்பெறவில்லை.

அகப்பாட்டு உறுப்புகள்

தொல்காப்பியர் செய்யுளியலின் முதல்நூற்பாவில்,

"திணையே கைகோள் பொருள்வகை எனாஅ
கேட்போர் களனே காலவகை எனாஅ
பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ"[71]

என்பனவற்றை அகப்பாட்டு உறுப்புகளாய்க் குறிப்பார். மேற்குறித்தவற்றுள், முன்னம், துறை என்பவை நீங்கலாக உள்ள பத்தினையும் இறையனார் அகப்பாட்டிற்கான உறுப்புகள் எனக் குறிப்பார்.[72]

மெய்ப்பாடுகள்

மெய்ப்பாடு என்பதற்கு, "புறத்துப் பொருள்களைக் கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியும் ஐம்பொறி வழியாக அகத்துச் சுவைத்து எய்திய அகவுணர்வின் உண்மையினை உள்ளவாறே புறத்தார்க்கு மெய்யின்கண் புலப்படச் செய்யும் நெறி"[73] என உரை வகுப்பார் பேராசிரியர்.

"வடமொழியாளர்கள் மெய்ப்பாட்டைப் பாவம், சத்துவம், ரஸம் என்றனர். எண்வகை மெய்ப்பாட்டுடன் சாந்தமும் (நடுவுநிலை) இணைக்கப்பெற்று நவரஸங்கள்"[74] என அழைக்கப்பட்டன.

தொல்காப்பியர் மெய்ப்பாட்டினை,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பாடென்ப"[75]

எனக் குறிப்பார். இவ்வெண்வகை மெய்ப்பாடுகளுடன்,

"உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணுதல் துஞ்சல் அரற்றுக் கனவெனாஅ

முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்
கையாறு இடுக்கண் பொச்சாப்பு பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகை நடுக்கெனாஅ
அவையும் உளவே அவையலங் கடையே"[76]

என்பனவாகிய மெய்ப்பாடுகளையும் குறிப்பார். அகப்பொருள்களுக்குரிய மெய்ப்பாடுகளாக, மனனழிந்த வழிப்பெறப்படுவன நாற்பத்து நான்கு என்றும், மனனழியாத வழிப் பெறப்படுவன பதினெட்டு என்றும் கூறுவார். இத்தகைய மெய்ப்பாடுகளுக்கெல்லாம் அடிப்படையினவாகத் தொல்காப்பியர் உரைக்கும் எண்வகை மெய்ப்பாடுகளும் திருமுறைகளில் காணக்கிடைக்கின்றன.

எண்வகைமெய்ப்பாடுகளில் நகை தோன்றுவதற்கான நிலைக்களன்களாக,

"எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப்பட்ட நகை நான்கென்ப"[77]

என்பனவற்றைத் தொல்காப்பியர் குறிப்பார். "இவற்றுள் உள்ளப்பட்ட நகை நான்கு என்றதனான் உள்ளத்தோடு பிறவாத நகையுமுள"[78] என விரிப்பார் பேராசிரியர்.

தடுத்தாட்கொண்ட புராணத்துள், நம்பியரூரார் திருமணத்தில், ஓலைகாட்டி, இந்நாவலூரான் என் அடியன் என்று கூறி வேதியனைப் பார்த்து ஆரூரர்,

"நின்றார் இருந்தார் இவன் என் நினைத்தான் கொல் என்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார் திருநாவலூரான்
நன்றால் மறையோன் மொழி என்றெதிர் நோக்கி நக்கான்"

(த.கொ.பு., பா.38)

என்றார். இப்பாடல் பிறர் பேதமை கண்டு நகுதல் என்னும் மெய்ப்பாடாம்.

நகைக்கு எதிரான மெய்ப்பாடு அழுகை என்பதாம். இதன் நிலைக்களன்களாக,

"இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே"[79]

என்பனவற்றைத் தொல்காப்பியர் குறிப்பார். இத்தகைய மெய்ப்பாடும் திருமுறையில் காணக்கிடைக்கின்றது. வைப்பூர் என்னும் ஊரில் தாமன் என்னும் வணிகனுக்கு மகளிர் எழுவர். மூத்தவளை உரிமையுடைய மருமகனுக்குத் திருமணம் செய்துகொடுப்பதாய்த் தாமன் கூறியிருந்தான். ஆனால், தன் மனம் நிறையப் பணம்பெற்றுக்கொண்டு, அயலானுக்குத் திருமணம் செய்துகொடுத்துவிட்டான். இங்ஙனம் கடைப்பெண் ஒழிய எல்லோரையும் பணம்பெற்றுக்கொண்டு பிறர்க்குத் திருமணம் செய்துகொடுத்தான். அந்நிலையில் மருமகனின் நிலைகண்டு இரங்கிய கடைப்பெண், அவனுடன் உடன்போக்கு மேற்கொண்டாள். திருமருகலில் அவ்வணிகனைப் பாம்பு தீண்ட இறந்தான். அதனைக் கண்ட அப்பெண் துயருற்று அழுதாள். இதனைச் சேக்கிழார்,

"அன்னையையும் அத்தனையும் பிரிந்து நின்னை
அடைவாக உடன்போந்தேன் அரவால் வீழ
என்னை உயிர் விட்டகன்றாய் யானென் செய்தேன்!
இவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாருமில்லை"

(தி.ஞா.பு., பா.475)

எனக் கூறி அப்பெண் அழுததாய்க் காட்டுவார். இஃது இழவு என்பதனால் வந்த மெய்ப்பாடாகும்.

"இழவாவது உயிராயினும் பொருளாயினும் இழத்தல்"[80]

என்ற பேராசிரியர் உரை ஈண்டு குறித்தற்குரியதாம்.

இளிவரல் என்பது,

"மூப்பே பிணியே வருத்தம்மென்மையொடு
யாப்புறவந்த இளிவரல் நான்கே"[81]

என்பதனை நிலைக்களன்களாய்க் கொண்டுபிறக்கும் என்பர் தொல்காப்பியர். இவற்றுள் வருத்தம் என்பதற்கு, "தன்மாட்டும்பிறர்மாட்டும் உளதாகிய வருத்தத்தானும் இளிப்புப்பிறக்கும்"[82] என்பார் பேராசிரியர்.

திருவாரூர் மும்மணிக் கோவையின் தோழி, தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி இறந்துவிடுவாள் போலும் என்று வருந்துகின்றாள். இதனை,

"கண்ணார் நுதல் எந்தை காமருகண்டம் எனவிருண்ட
விண்ணால் உருமொடு மேலது கீழது கொண்டல் விண்ட
மண்ணார் மலைமேல் இமையால் ஆல் மடமான் அனைய
பெண்ணாம் இவள் இனி என்னாய்க் கழியும் பிரிந்துறையே"

(தி.மு.கோ., பா.3)

என்பது உணர்த்தும். இப் பாடலில் வருத்தத்தின் கண்வந்த இளிவரல் புலப்படுகிறது.

அச்சம் என்னும் மெய்ப்பாடானது,

"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே"[83]

என்பதனை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதித்தோழி, தலைவன் வரும் வழியின் கண் காணப்படும் விலங்கின் தன்மைகூறி அஞ்சுகின்றாள். இதனை,

"துறை முழங்குங் கரிசீறி மடங்கல் சுடர்ப் பளிங்கின்
அறைமுழங்கும் வழிநீவரிற் சால வரும்பழியே"

(ஆ.பி.தி., பா.52 : 3-4)

என்பது சுட்டும். இதில் விலங்கு காரணமாகத் தோன்றும் அச்சம் பழியாகச் சுட்டப்பட்டுள்ளது. தொல்காப்பியர்,

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டெனா
அல்லல் நீத்த உவகை நான்கே"[84]

என்ற உவகையின் நிலைக்களன்களை விரித்துரைப்பார். இவற்றுள்,

"அல்லல் நீத்த உவகை' என்றதனால், பிறரது துன்பம் காரணமாகத் தோன்றும் உவகையும் உவகையின்பாற்படாது, பிறன்கட் தோன்றிய இன்பம் பற்றியும் உவகை பிறக்கும்"[85]

என்பார் பேராசிரியர்.

நம்பியாரூரார், சங்கிலியாரைத் திருமணம் புரிந்து, இல்லறத்துள்புக்கு, அவளோடு இன்பம் துய்த்த காட்சியினை,

"புண்டரிகத் தவள் வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட்டுண்டு டுயிர்த்து ற்றமர்ந்திருந்தார் காதலினால்"

(ஏ.க.பு., பா.267)

என விளக்குவார் சேக்கிழார். இஃது புணர்வு என்பதனுள் அடங்கிக் காமத்து வழிப்பிறந்த உவகையாகும். இவ்வாறு எண்வகை மெய்ப்பாடுகளும் திருமுறையின்கண் அமைந்துள்ளன.

அகப்பாடல்களில் உள்ளுறை

தொல்காப்பியர் உள்ளுறை உவமம் என்பதற்கு,

"உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பது உள்ளுறை உவமம்"[86]

என இலக்கணம் வகுப்பர். அகப்பாடல் செய்வான் ஒருபுலவன், அப்பாடலில் கருப்பொருளை அமைத்து, அதனால் கூறப்படும் கருத்துப்பொருளோடு, கூற நினைத்த, ஆனால் கூறப்படாத ஒரு கருத்துப் பொருள் முடிவதாக உள்ளே அமைத்துமுடிப்பது உள்ளுறையாகும். இதன்வழி, உள்ளுறையின் இலக்கணமாவது, அகத்திணைப் பாடலுக்கே உரியதாய், கருப்பொருள்களை நிலைக்களனாய்க் கொண்டதாய், அக்கருப்பொருளால் வெளிப்படையாக உணர்த்தப்படும் பொருளின் உள்ளே, உய்த்துணருமாறு அமைவதாய் உள்ள பொருளே உள்ளுறையாகும் என்பதனைப் பெறமுடிகின்றது.

உள்ளுறை நிலைக்களன்

உள்ளுறையினை அகப்பாடலுக்கே உரியது என்பர் இலக்கண நூலார். அகப்பாடலில் உள்ளுறையைப் புலவன் அமைக்க வேண்டுமெனில், அதற்கு நிலைக்களன்கள் என்ன என்பதனைத் தொல்காப்பியம் காட்டும்.

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்
கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே"[87]

என்பார் தொல்காப்பியர். எனவே, உள்ளுறை அமைக்கப்படும்போது, தெய்வம் நீங்கலாக உள்ள கருப்பொருளினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படல் வேண்டும்.

உள்ளுறை அகப்பாடலுக்குரியது

தொல்காப்பியர் உள்ளுறை நிலைக்களன் பற்றியும், உள்ளுறை உவமம் பற்றியும் அகத்திணையியலில் கூறியதாலும், கருப்பொருள் வரையறை அகப்பாடலுக்கே உரியதாதலாலும் உள்ளுறை, அகப்பாடலுக்கே உரியதாகும். தொல்காப்பியர் உவமவியலில் கூறிய உள்ளுறை பற்றிய செய்திகள், புறத்திணைப் பாடல்களுக்கு ஏற்பன அல்ல. உள்ளுறையைப் பேராசிரியர் உவமம் போல என்று கூறியது தவிர, அதனைச் சிறப்பித்துக் கூறவில்லை. ஆனால் உவமம் கூறும்போது யார் எங்கு வேண்டுமானாலும் கூறலாம். உவமப்போலிகூறும் போது மட்டும் பின்வரும் வரையறைகளைக் கவனத்திற் கொள்ளவேண்டும் என்பர் இளம்பூரணர். அவையாவன,

1. "தலைவி உள்ளுறை சொல்வதானால் அவளறிந்த கருப்பொருள் கொண்டு சொல்லவேண்டும்.
2. தோழி சொல்வதானால் அவள் வாழும் நிலத்துக் கருப்பொருள் அளவில் சொல்லவேண்டும்.
3. தலைவன் சொல்வதானால் தன் அறிவு, உடைமை தோன்றச் சொல்லவேண்டும்.
4. மற்றவர்கள் எல்லாக் கருப்பொருளிலும் வைத்துச் சொல்லலாம்.

5. உள்ளுறை உவமம், மகிழ்ச்சிப் பொருளிலும், புலவிப் பொருளிலும் வரும். தலைவி அவ்விருபொருளிலும் உள்ளுறை கூறலாம்.

6. தோழியும், செவிலியும் பொருந்தும் இடம் நோக்கி அப்பொருள்களில் கூறவேண்டியவர்கள்."[88]

இவ்வாறு அகத்திணைப் பொருள்களுக்கேற்பக் கூறியிருத்தலால், உள்ளுறை உவமம் அகப்பாடல்களுக்கு மட்டுமே உரியதாகும்.

உள்ளுறையின் வகை

அகப்பாடல்களுக்கு மட்டுமே உரியதாய், கருப்பொருளை அடிப்படையாய் வைத்துப் பிறக்கும் உள்ளுறை ஐந்து வகைப்படும். இதனை,

"உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு எனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே"[89]

என்னும் நூற்பாவால் தொல்காப்பியர் குறிப்பார். மாறனலங்காரம் உள்ளுறையினை,

"உணர்வதற்கு அரியதாய் உவமப்போலி
புணர்திறம் வினையே பொருண்மைமெய் யுருவெனப்
பிறப்பியாரும் ஐந்தாம் பெற்றித் தாகிச்
சிறப்புறு திணைகளின் தெய்வம் ஒழிந்த
கருப்பொருள் களனாகக் கட்டுரை பயின்றும்
உவமை யோடெதிருள் ளுறுத்தலுற் றயலாய்
உவமச் சொற்றொகல் ஒருமலை யாகியும்
அன்பின தளவாய் அகத்திணை யிருவயின்
இன்பதுன் பத்திசை திரிந்தி சையாத்
துணைவன் துணைவி தோழி செவிலி
யிணையெனும் பாங்கன் பாணன் என்றிவராற்
கொள்கையின் வரூஉம் குறிப்புரை யாகும்"[90]

என்று வரையறுக்கும்.

திருமுறையில் உள்ளுறை

அக இலக்கிய மரபினைத் தழுவிச் சேரமான் பெருமாள்நாயனார் இரண்டு பாடல்களைப் பாடுகின்றார். இவ்விரு பாடல்களும் திருவாரூர் மும்மணிக் கோவையில் அமைந்துள்ளன. ஆய்வு எல்லைக்குட்பட்ட திருமுறைகளில் உள்ளுறை அமைந்த பாடல்கள் இவை இரண்டேயாம்.

தலைவியை விடுத்து, பரத்தையர் பிரிந்த தலைமகன் பாணனை வாயிலாகக் கொண்டு வருகின்றான். அதனைக்கண்டு தோழி வெகுண்டு மொழிவதாய் இப்பாடல் அமைகின்றது.

"பாணனே! கருவுற்ற தன்பெடை கருவுயிர்க்கும் காலம் கருதிச் சேவல் அதற்கான இடத்தினை வகுக்க விரும்பி, அன்பால் பெடையைத் தழுவி, பின் பிரிந்து, கரும்பின் நுண்டோடுகளைக் கவர்ந்து வரும் நீர் நாடன் நம்தலைவன், அத்தகையோர்க்கு நீயோ, பார்வை விலங்காகவும், பரத்தையரைப் பிடிக்கும் வலையாகவும் விளங்குகின்றாய்! வஞ்சகம் பேசி, கள்ளனைப்போல கைதொழுது என் வாயிலில் நிற்கின்றாய்! தலைவனோ, கண்ணாடி முன் பாவைபோல பரத்தையர் கருத்து வழி ஒழுகுகிறான். ஆகவே நின்பொய்மொழிகளை ஏற்கமாட்டேன் என்கிறாள்.

"மனை உறை குருவி வளைவாய்ச் சேவல்
சினை முதிர் பேடைச் செவ்வி நோக்கி
ஈனில் இழைக்க வேண்டி ஆனா
அன்பு பொறைகூர மேன்மேல் முயங்கிக்
கண்ணுடைக் கரும்பின் நுண்தோடு கவரும்
பெருவளந் தழீஇய பீடுகால் கிடக்கை
வருபுனலூரன் பார்வையாகி"

(தி.மு.கோ., பா.19)

என்ற பாடல் அடிகளில் உள்ளுறை பொதிந்துகிடக்கின்றது.

கருவுற்ற பெடையைச் சேவல் தழுவி, கருவுயிர்க்க இடம் முதலிய அமைக்க, நுண்டோடு கொணர்தல் போல, தலைவன் இல்லின்கண் தங்கிக் கடமைகளை ஆற்றாமல், புறவொழுக்கத்தால் துன்பம் தருகின்றான். அஃறிணை உயிரான சேவலின் அன்புகூடத் தலைவனிடத்து இல்லை என்பது இதனுள் உள்ளுறையாய் அமைந்துள்ளது.

இக்கோவையின்கண் அமைந்துள்ள பிறிதோர் பாடலில், தலைவனை இரவுக்குறி வாரற்க எனமறுத்த தோழி, அவனிடத்து வரைவு வேண்டுகின்றாள். அதனைக் குறிக்கும் இடத்து, தலைவியானவள் ஆண்மான் பெண்மானோடு சேர்ந்து பிணைந்து திரிதல் கண்டு செயலற்றவள் ஆனாள் என்பதனை,

"கலை பிணை திரியக் கையற வெய்தி
மெல்விரல் நெரித்து விம்மி வெய்துயிர்த்து
அல்லியங் கோதை அழலுற் றாஅங்கு
எல்லையில் இருந்துயர் எய்தினள்"

(தி.மு.கோ., பா.7: 9-72)

என்ற அடிகளால் விளக்குவாள் தோழி, இப்பாடலின் கண், 'கலைபிணைதிரிய' என்றவழி, அம்மானினைப் போல, நீயும் தலைவியை பிணைந்து கொண்டு பிரியாது இருத்தல் வேண்டும் என்பதனை உள்ளுறையாய்த் தலைவனுக்கு உணர்த்துகின்றாள் தோழி.

தொகுப்புரை

- 'அகம்' என்பதே 'தமிழ்' என்று போற்றப்பெற்றமை தமிழ் இலக்கியப் பரப்பில் அகப்பொருட் பொருண்மைக்கான இடத்தைக் காட்டும்.

- திரு என்ற சொல் செல்வர், இறை, அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை போன்றவற்றைக் குறிப்பதாயும், முறை என்ற சொல் ஒழுங்கு, ஒழுக்கம், உறவு, கூட்டு, ஒண்மை, நூல் போன்றவற்றைக் குறிப்பதாயும்

அமைந்து, இவையனைத்தும் ஒருங்கு குறிக்கும் நூலாகிய தெய்வப்பனுவல்களுக்குத் திருமுறை என்னும் பெயராயிற்று.

- ‘தே’ என்ற சொல் தெய்வத்தையும், வாரம் என்பது இசைக்கூற்றுக்களில் ஒன்றாயும் அமைந்து, தெய்வத்தைப் பற்றிய இசைப்பாடல்கள் தேவாரம் என அழைக்கப்பட்டன என்பது பெறப்படுகிறது. தேவாரம் என்ற சொல் வழிபாடு என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டமை தெரியவருகின்றது. தேவாரம் என்ற சொல் முதன்முதலில் ஏகாம்பரநாதர் உலாவில் பயன்படுத்தப்பட்டமையை அறியமுடிகிறது.

- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என எட்டும் பத்துமாய்த் தொகுக்கப்பட்ட மரபு, பிற்காலத்தில் பன்னிரண்டாய் அமைந்தது. அந்நிலையிலேயே திருமுறைகள் பன்னிரண்டாய்த் தொகுக்கப்பட்டன.

- பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள், நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு, ஆதித்த சோழன், அவனது மகன் பராந்தக சோழன் காலத்தில் தொகுக்கப்பட்டன. எட்டுமுதல் பதினோராம் திருமுறைகள்வரை சேக்கிழாருக்கு முன்பு வாழ்ந்தவர்களால் வகைப்படுத்தப்பட்டன. இறுதியாகப் பன்னிரண்டாம் திருமுறையாக சேக்கிழார் பெரியபுராணத்தைச் சேர்த்தார்.

- தெய்வநம்பிக்கையின்றி, அறிவொழுக்கத்தினை மட்டுமே அடையாளமாய்க் கொண்டிருந்த பிற சமயங்களை எதிர்த்து வெற்றி காணத் திருமுறைபாடிய அருளாளர்கள் அகப்பாடல் நெறியினைக் கருவியாய்க் கொண்டனர்.

- பிரேமபக்தி என்றும் மெய்யுணர்வுக் காதல் என்றும் பிறரால் அழைக்கப்பட்ட, இவ்வகப்பாட்டு நெறி, தமிழ் இலக்கியத்துள் ‘நாயகன்-நாயகி பாவம்’ என அழைக்கப்பெற்றது.

♦ நாயகன் - நாயகி நிலையில் அமைந்த அகப்பாடல்களைப் பாடாண்திணையின் கண் தொல்காப்பியர் குறிப்பிடினும், தொல்காப்பிய உரையாசிரியர்களின் வழி அவற்றை அன்பின் ஐந்திணையாகக் கொள்ள இயலும்.

♦ சிற்றின்பமாகத் தொடங்கிய அகப்பொருள்நெறி பேரின்பமாகப் பரிணாமம் பெற்ற நிலையில், மானுடக் காதலுக்குச் சொல்லப்பட்டவை எல்லாம், ஆன்மாவுக்கும், பரம்பொருளுக்கும் சொல்லப்பட்டவையாய் மாற்றம் பெறுகின்றன.

♦ திருஞானசம்பந்தர் தேவாரத்தில் 14 பதிகங்களும், ஒரு தனிப்பாடலும், திருநாவுக்கரசர் தேவாரத்தில் 9 பதிகங்களும் 39 தனிப்பாடல்களும், சுந்தரர் தேவாரத்தில் 2 பதிகங்களும், ஒரு தனிப்பாடலும், மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் 6 பதிகங்களும், ஒன்பதாம் திருமுறையில் 11 பதிகங்களும், பதினோராம் திருமுறையில் 337 பாடல்களும், பன்னிரண்டாம் திருமுறையில் சுந்தரர், பரவையார், சங்கிலியார் ஆகியோரின் ஊடற்பொருண்மையைக் குறிக்கும் 19 பாடல்களும், காரைக்கால் அம்மையார் புராணத்தில் 2 பாடல்களும், திருநீலகண்டர் புராணத்தில் 4 பாடல்களும் அகப்பொருட் தொடர்புடையவையாய் அமைந்துள்ளன.

♦ திருமுறைப் பாடல்கள் களவு, கற்பு என்னும் இருவகைக் கைக்கோள் சார்பானவையும், தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர், கண்டார் எனும் மாந்தர்களது கூற்றுமுறை சார்பானவையும் அமைந்துள்ளன.

♦ தமிழ் அகமரபின் கூட்ட முறைமையான இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற் கூட்டம் போன்றவை தொடர்பானவையாய் திருமுறைப்பாடல்கள் அமைந்துள்ளன.

♦ தொல்காப்பியர் அகப்பாடல்களுக்கு உரியனவாய் வரையறுக்கும் முதல், கரு, உரிப்பொருள் அமைதி, திணைமயக்கம், மெய்ப்பாடு, உள்ளுறை போன்றவற்றைத் தன்னுள் கொண்டனவாய்த் திருமுறைப்பாடல்கள் விளங்குகின்றன.

சான்றெண் விளக்கம்

1. சி.பாலசுப்பிரமணியன், ஆண்டாள், ப.1
2. தொல்.பொருள்.அகத்திணையியல், இளம்பூரணர் உரை, ப.3
3. மேலது, நச்சினார்க்கினியர் உரை, ப.16
4. கா.சுப்பிரமணிய பிள்ளை, இறையனார் அகப்பொருள், செந்தமிழ்ச்செல்வி, 3:3, மார்ச், ப.106
5. பெ.திருஞானசம்பந்தன், இந்திய எழிற்கலை, ப.57
6. A.Govindacharya, A metaphysique of mysticism, P.374
7. D.Ramaswamy Iyengar, Tiruppavai - Anglo Tamil, P.III
8. மு.சண்முகம்பிள்ளை, அகப்பொருள் மரபும் திருக்குறளும், ப.1
9. இறையனார் களவியல், நூ.2ன் உரை, ப.35
10. பரிபாடல் பா.9:25-26
11. குறிஞ்சிப்பாட்டு - துறைக்குறிப்பு, ப.2
12. இறையனார் களவியல் உரை, ப.5
13. வேங்கடராமச்செட்டியார், கம்பராமாயணம், பா.9779ன் உரை, ப.731
14. அகநானூற்றுச் சொற்பொழிவுகள், ப.3
15. ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, ப.28
16. Tamil lexicon - vol.III, P.1896
17. திருக்கோவையார், பேராசிரியர் உரை, ப.2
18. மேலது, vol.VI, P.3299
19. கந்தபுராணம், அவையடக்கப்பாடல், 1:1-2
20. முதனடைவாரம் கூடை திரளென்று சொல்லப்படும் இயக்கம் நான்கினும், முதனடைமிகவும் தாழ்ந்த செலவினை உடைத்தாகலானும், திரன்மிக முடுகிய நடையினை உடைத்தாகலானும், இவை தவிர்த்து இடைப்பட்ட வாரப்பாடல், சொல்லொழுக்கம், இசையொழுக்கம் உடைத்தாகலானும், கூடைப்பாடல் சொற்செறிவும் உடைத்தாகலானும்,

சிறப்பு நோக்கி அவ்விரண்டனுள் வாரப்பாடலை அளவுநிரம்ப நிறுத்தவல்லனாயென்க, அடியார்க்கு நல்லார் உரை, சிலம்பு, 3-67.

21. தி.வை.சதாசிவப்பண்டாரத்தார், இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும், ப.73

22. ஏகாம்பரநாதர் உலா, கண்ணி 78

23. ச.வே.சுப்பிரமணியம், தெய்வத்தமிழ், ப.2

24. க.வெள்ளைவாரணர், பன்னிருதிருமுறை வரலாறு, ப.25

25. மேலது, ப.28

26. ஜி.ஜான்சாமுவேல், இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள், ப.7

27. ஆ.நலங்கிள்ளி, தமிழ் இலக்கியக்கொள்கை, இ.ப.த.ம. பன்னிரண்டாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி -I, ப.398

28. ம .சா.அறிவுடைநம்பி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கியக் கொள்கை, பக்.38-39

29. வ.சுப.மாணிக்கனார், தமிழ்க்காதல், ப.116

30. ரா.பி.சேதுப்பிள்ளை, திருவள்ளுவர் நூல்நயம், ப.86

31. Ramachandra Dikshitar, Studies in Tamil Literature and History, P.275

32. மு.இராகவ ஐயங்கார், தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி, பக்.48-49

33. அ.மு.பரமசிவானந்தம், வையைத்தமிழ், ப.103

34. அ.மா.பரிமணம், இ.ப.த.ம.5வது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, ப.330

35. க.த.திருநாவுக்கரசு, தமிழ்நிலவு, ப.54

36. டி.டி.இராமஸ்வாமி நாயுடு, அகப்பொருளும் அருளிச்செயலும், பக்.V-V1

37. ஸ்ரீநிவாஸாசாரியார், காமமும் மோக்ஷமே மோக்ஷமும் காமமே, வேதாந்த தீபிகை, 13:10 ஆடி ருதிரோத்காரி, ப.348

38. க.த.திருநாவுக்கரசு, தமிழ் நிலவு, ப.56

39. தொல்.பொருள்.புறத்திணையியல், நூ.81 நச்சர் உரை ப.434

40. தொல்.பொருள்., நூ.23 (நச்சர்)

41. க.வெள்ளைவாரணர், புறத்திணையியல் உரைவளம், ப.284

42. க.த.திருநாவுக்கரசு, தமிழ்நிலவு, ப.6

43. தொல்.பொருள். நூ.81 (நச்சர்)

44. மேலது, நூ.எண்.79, இளம்பூரணர் உரை, ப.136

45. க.வெள்ளைவாரணர், புறத்திணையியல் உரைவளம், ப.267

46. தொல்.பொருள். நூ.3 (நச்சர்)

47. மேலது, நூ.4 (நச்சர்)

48. மேலது, நூ.212 (இளம்)

49. மேலது, நூ.6 (இளம்)

50. மேலது, நூ.7 (இளம்)

51. மேலது, நூ.8 (இளம்)

52. மேலது, நூ.9 (இளம்)

53. மேலது, நூ.10 (இளம்)

54. மேலது, நூ.11 (இளம்)

55. மேலது, நூ.12 (இளம்)

56. இலக்கண விளக்கம், நூ.384

57. மேலது, நூ.385

58. தொல்.பொருள். நூ.18 (நச்சர்)

59. மேலது, நூ.21 (நச்சர்)

60. சுவாமிநாதம்-பொருள்-அகத்திணை மரபு, நூ.3:6-8

61. தொல்.பொருள். நூ.16 (இளம்)

62. சிலப்பதிகாரம், பா.11:64-66

63. தொல்.பொருள். நூ.12 (நச்சர்)

64. மேலது, நூ.12 இளம்பூரணர் உரை, ப.14

65. மேலது, நூ.12 நச்சர் உரை, ப.63

66. தொல்.பொருள். நூ.273 (பேரா)

67. தொல்.பொருள். நூ.90:4 (இளம்)

68. இறையனார் களவியல், நூ.4

69. தொல்.தொல்.பொருள். நூ.501 (பேரா)

70. மேலது, நூ.502 (பேரா)

71. மேலது, நூ.313:5-8 (பேரா)

72. இறையனார் அகப்பொருள், நூ.56

73. தொல்.பொருள்.மெய்ப்பாட்டியல், பேராசிரியர் உரை, ப.3

74. கலைக்களஞ்சியம் (தொகுதி - 5), ப.10

75. தொல்.பொருள். நூ.251 (பேரா)

76. மேலது, நூ.260 (பேரா)

77. மேலது, நூ.252 (பேரா)

78. மேலது, மெய்ப்பாட்டியல், பேராசிரியர் உரை, ப.7

79. மேலது, நூ.253 (பேரா)

80. மேலது, பேராசிரியர் உரை, ப.8

81. தொல். நூ.254 (பேரா)

82. மேலது, மெய்ப்பாட்டியல், பேராசிரியர் உரை, ப.11

83. மேலது, நூ.256 (பேரா)

84. மேலது, நூ.259 (பேரா)

85. மேலது, மெய்ப்பாட்டியல், பேராசிரியர் உரை, ப.18

86. தொல்.பொருள். நூ.51 (இளம்)

87. மேலது, நூ.50 (இளம்)

88. தொல்.பொருள்.உவமவியல், இளம்பூரணர் உரை, பக்.26-31

89. தொல்.பொருள். நூ.238 (இளம்)

90. மாறனலங்காரம், நூ.123.

இயல் இரண்டு

தலைவி கூற்றில் அகப்பொருள் மரபுகள்

தலைவி கூற்றில் அகப்பொருள் மரபுகள்

ஒருவனும், ஒருத்தியும் கூடிப்பெறுகின்ற இன்பமே அகத்தின்பாற்படும் என்பது தமிழ் மரபு. இம்மரபானது, இடைக்காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்களில் பெரிதும் செல்வாக்குப்பெற்று இருந்தது. சைவ அடியார்களும், வைணவ ஆழ்வார்களும் இறைவனைத் தலைவனாகவும், தன்னை அவன்பால் காதல் கொண்ட தலைவியாகவும் பாவித்துக் கொண்டு பாடல்களைப் பாடினர். இம்மரபினை, "சங்கச் சான்றோரால் அகப்பாக்களில் சிறப்பிக்கப்பட்ட காதல், பக்திப் பனுவல்களில் மானுடர் இறைவனைக் காதலிக்கும் காதலாக வளர்ந்தது. பால் உணர்வின் அடிப்படையில் எழுந்த மானிடக்காதல், பக்தி இலக்கியத்தில் தெய்வீகக் காதலாக வளர்ந்தது. ஆடவர், பெண்டிர் என்ற நிலை மாறி, இறைவன் ஒருவனே தலைவன். அவனைப் பாடும் அடியார்கள், அதாவது பால்வேறுபாடு கருதாமல் அனைவரும் தலைவியாக மாறும் நிலையினைப் பக்திப் பனுவல்களில் காணமுடிகின்றது. இதனை நாயகன் - நாயகிபாவம் எனக் குறிப்பர்"[1] என்பர் ம .சா.அறிவுடைநம்பி.

இத்தகைய மரபானது, உலக இலக்கியங்களிலும், தமிழ் இலக்கண, இலக்கியங்களிலும் பெறும் இடம் குறித்தும், திருமுறைகளில் அமைந்த தலைவி கூற்றுப்பாடல்கள் உணர்த்தும் அகப்பொருள் மரபுகள் குறித்தும் ஆராய்வதாய் இவ்வியல் அமைகின்றது.

இறைமையும் அழகும்

"இறைவன் அழகுவடிவினன். அழகின் கனிந்த நிலை இறைநிலையே. அழகியற் கோட்பாடுகளை வகுப்போர் அழகைக் குறித்துத் தத்துவ அடிப்படையில் விளக்கமாக ஆய்வுசெய்துள்ளனர்."[2] "பிளேட்டோ அழகைக் குறித்துக் கூறிய புனைந்துரையை இறைமைக்கும் கொள்ளலாம். பிரம்மம் ஒப்பற்ற, அழிவற்ற, தொடக்கமும் முடிவுமற்ற அழகுமுடையது. ஒருவகையில் அழகாகவும், மற்றொரு வகையில் அழகற்றதாகவும்

தோன்றாதது. ஒருகாலத்து ஓரிடத்தில், ஒருகோணத்தில் அழகுடையதாய்த் தோன்றி, பின்னர் அழகற்றதாய் மாறாதது"[3] என்று இறைவனுக்கும், அழகுக்கும் உள்ள உறவைச் சுட்டுவார் டி.எம்.பி.மகாதேவன்.

அழகும் காதலும்

இறைமைக்கும், அழகுக்கும் உள்ள தொடர்பு போன்றதே அழகுக்கும், காதலுக்கும் உள்ள தொடர்பு. "அழகும், காதலும் நெருங்கிய உறவுடையன. அழகு வழிபாடும், காதலின் நெறியும் ஒரே இலக்கை அடைகின்றன."[4] "காதலுக்குத் தரப்படும் பல விளக்கங்களில் தெய்வீக அழகை மனித ஆன்மா நாடிச் செல்வதே காதல்"[5] என்பதும் ஒன்று.

காமமும் காதலும்

"காமம்-உடலைப் பற்றியது. காதல் - உயிரைப்பற்றியது."[6] "காமம் இருள் நெறி என்றும், காதல் ஒளிநெறி என்றும் சைதன்ய மதத்தில் அறிவுறுத்தப்படுகிறது."[7] ஆனால் காமத்தைக் குறித்த அறிவு சிறந்தாலன்றி, காதலைக் குறித்த தெளிவு பிறக்காது. இவ்வாறு "காமத்திற் பிறக்கும் காதல் சேற்றில் பிறந்த செழுங்கழுநீராகவும், சிப்பியிற்பிறந்த முத்தாகவும் உருவகிக்கப்படுகின்றது."[8]

ஒருவனும், ஒருத்தியும் கூடிப் பெறுகின்ற அக உணர்வு, சிற்றின்பநெறியில் இருந்து பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்லவேண்டும். எனவேதான், தொல்காப்பியர் "சிறந்தது பயிற்றல் இறந்ததன்பயனே"[9] என்றார்.

இறைவன் - ஆண், ஆன்மாக்கள் - பெண்கள்

" 'புருஷன்' என்ற சொல்லுக்கு நினைத்ததைச் சாதிக்கவல்லவன் என்று சொல்லி, அத்தன்மை இறைவனுக்கே மட்டும் உரித்தாதலின், அவனே 'புருஷன்' என்றும், உயிரினம் அனைத்தும் 'பெண்மை' இயல்பை உடையன என்றும் கூறும் மரபு உள்ளது."[10]

இறைவன் ஒருவனே ஆடவன் எனின், மனித ஆடவர்யார்? என்ற கேள்வி எழும். "மனித ஆடவர்கள் அனைவரும் 'புருஷவேஷம் போட்டுக்கொண்டவர்கள் என்றும், அது நாடக அரங்கில் ஒரு பெண் ஆண்வேடம் தரித்துக்கொண்டு நடிப்பதைப் போன்றதே என்றும் கூறுகின்றனர்."[11]

இறைவன் ஆடவராயிருக்க, ஆன்மாக்கள் ஆடவராகவேயிருந்து, அன்புறுதல் ஆகாதா? என்ற வினாவிற்கு, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காரச்சாரியார், "அவன் ஸ்வாமியாய் இருப்பதற்குச்சேர நாம் தாஸர்கள் ஆகின்றோம்... அவன் சேஷியாய் இருப்பதற்குச் சேர நாம் சேஷிபூதர்கள் ஆகிறோம். அவன் புருஷோத்தமனாய் இருக்கும் தன்மையானது நமக்குப்பெண்மையை விளைவிக்கிறது என்கை. அவனும் ஸ்வாமியாய், நாமும் ஸ்வாமியாய், இருக்கமுடியுமோ? அவனும் சேஷியாய், நாமும் சேஷியாய் இருக்க முடியுமோ? அப்படியே அவனும் புருஷனாய் நாமும் புருஷனாய் இருக்கமுடியுமோ? எங்ஙனே முடியும்? ஆகவே தாஸாத்துவ, தேஹாத்துவ, சேஷாத்துபங்கள் போல ஸ்திருத்துவம் சேதனர்க்கு இயற்கையானது என்றே தேறிற்று"[12] என்பர். இதன் மூலம் ஆன்மாவின் பெண்மை என்பது வந்தேறியன்று. அது இயற்கையிலே அமைந்துள்ளது என்பது பெறப்படும். "ஒவ்வொரு ஆன்மாவும் தன் பெண்மையை உணரும் காலமே இறைநிலை இணைவுக்குரிய காலம். ஆன்மாக்கள், எல்லையற்ற இறையன்பில் மூழ்குங்கால், செயற்கையான ஆண்மை தலைக்காட்டாது மறைகிறது. அவன் இயற்கைப் பெண்மையே தாண்டவமாடுகிறது. அதுவே ஆன்மா பயன்பெறும் காலம்."[13]

இந்நிலையில் தன் பெண்மையை உணர்ந்து கொள்ளாத ஆன்மாவுக்கு அன்புப்பாடம் கற்றுக்கொடுக்கும்போது, பெண்ணின் காதலையே சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. "பெட்புச் சொல் காதற்பொருட்டு,.... காதலை ஆக்கவும் ஆளவும் வல்லுநர் பெண்டிரே... அஃது அவர்தம்

சிறப்புரிமையாகும்."[14] "அன்பு செய்யும் ஒழுக்கத்தை ஆண்மகன் முயன்று பெறுகின்றான். பெண்ணோ இயல்பிலே பெற்றிருக்கின்றாள்."[15] எனவே பெண்ணின் காதலையே வியந்து போற்றுகிறது கதாசப்தசதி[16] ஏனென்றால் "ஆணுக்குப் பல குறிக்கோள்களுள் காதலும் ஒன்று. பெண்ணிற்கோ, இதயம் முழுவதும் காதல் களமே. ஆணின் காதல் மின்னல் போல் வெட்டி மறைவது. பெண்ணின் காதல் வளர்பிறை போன்றது. அக உணர்ச்சியிலும் ஆணின் பரபரப்பெல்லாம் அடங்கிவிடும். பெண்ணிலோ அது மிஞ்சி நிற்கும்... ஆணுக்கு சுகம் அனுபவிப்பது நோக்கம். பெண்ணுக்கோ அது பரவசமான காதல் கடல் யாத்திரை."[17] இதனால் "கடவுளிடம் கொள்ளவேண்டிய காதலுக்குப் பெண்ணின் காதலையே உவமையாக்குவார் கோவிந்ததாசர்."[18]

இறைநிலை இணைவு "காதலின் அறிவியல்"[19] எனப்படுகிறது. "இறைநிலை இணைவு என்பதற்கு, 'ஆன்மாவும், கடவுளும் இணையும் அணுக்கப்புணர்ச்சி என்ற விளக்கமே மிகுந்து காணப்படுகிறது."[20] "இறைநிலை இணைவைக் குறிக்கும் 'mysticism' என்ற சொல் தொடக்கத்தில் மறைநிலையான அனுபவத்தை விளக்கும் சொல்லாகவே இருந்திருக்கிறது."[21]

மறைநிலையான அணுக்கப் புணர்ச்சி என்ற விளக்கத்தில் மனிதக்காதலும், கடவுட்காதலும் நெருங்கி ஒற்றுமைப்படுகின்றன. "காதலின் உயர்பெருமையை உணர்ந்தோர், இம்மண்ணுலகில் காணப்படும் மனிதக்காதல் எல்லாம் கடவுள் காதலின் நிழற்படிமங்களே,"[22] என்றும், "காதலாவது ஆன்மா தன் மூலத்தைத் தேடும் உள்ளார்ந்த தவிப்பே"[23] என்றும், "முடிவற்ற இணைவுக்காகத், தவித்த ஆன்மா இறைவனொடு கொள்ளும் உறவே காதல்"[24] என்றும் காதலையும் இறைநிலை இணைவையும் ஒற்றுமைப்படுத்தியே உரைக்கின்றனர். "இறைநிலை இணைவாளர்களின் சிறப்பியல்பாக அவர்தம் பெருங்காதலே பாராட்டப்படுகின்றது."[25]

இவ்விரண்டு இணைவுகளின் நோக்கமும் ஒன்றாக இருப்பதன் காரணமாக "ஒரு காதலனிடம் காதலி காட்டும் நேயம் ஒருபக்தன் இறைவனிடம் காட்டும் நேயத்திற்கு ஒப்பாகிறது."[26] இவ்விரு இணைவும் தம்முள் ஒன்றி அமைந்தமைக்கு, "ஜீவான்மாக்கள் எல்லாம் பெண் தத்துவங்களே. ஆன்மாக்கள் பிறவியிலேயே இறைவனுக்கு வாழ்க்கைப்பட்டு, அவனால் அணியப்பட்ட மங்கல நாணாகிய திருமந்திர உறவை உடையனவாகின்றன. அறியாது திரியும் மாந்தரோ, திருமந்திரத்தின் பொருளை உணர்ந்ததும் தன்னைப் பெண்களாக அறிகின்றனர். இதனால் ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள உறவு திருமண உறவாகவே விளக்கப்படுகிறது"[27] என விளக்கமளிப்பார் புருஷோத்தமநாயுடு.

உலக இலக்கியங்களில் நாயகன் - நாயகி பாவம்

இறைவனைத் தலைவனாய்க் கொண்டு, அவன்பால் காதல் வயப்பட்டு நெக்குருகிப்பாடும், நாயகி நிலையின் தன்மை உலக இலக்கியங்களிலும் காணப்படுகின்றது. "வாழ்வில் பல நிகழ்ச்சிகள் சொல்லி விளக்கப்படுவனவாக இல்லாமல், அனுபவித்து அறியத் தகுந்தனவாகவே உள்ளன. சமயம் என்பதும் ஓர் அனுபவம்தான். ஆனாலும், அது பாடல், விழா, சடங்கு முதலியவற்றின் மூலம் வெளிப்படுதலை விழைகிறது"[28] என்பர்.

வெளிப்படுத்தும் திறனே பிற உயிரினத்திடம் இருந்து மனிதனைவேறு படுத்துகிறது. மனிதன்தன் எண்ணங்களைப் புலன்களாலும், மனத்தாலும் வெளிப்படுத்தத் துடிக்கின்றான். எனவே, இறை இணைவு அனுபவத்திலும் வெளிப்படுத்தல் உணர்வு ஊற்றெனப்படுகிறது. ஆனால் வெளிப்பாட்டு உணர்வுக்கும் அதன் கருவியாகிய மொழிக்கும் இறைநிலை இணைவு அனுபவம் ஓர் அறைகூவலாகவே உள்ளது.

"இறைநிலை இணைவு அனுபவம், தலைவன், தலைவி, அகக்கற்பிதமாய் வெளிப்படுதல் இங்கு ஆராயப்படுகின்றது. இவ்வகக்கற்பிதம், உலகின் பல்வேறு, சமயங்களைச் சார்ந்த பிற இறைநிலை இணைவாளர்களாலும், மேற்கொள்ளப்பட்டுள்ள, ஒரு கருத்துப் படிவமாகத் திகழ்கிறது. எனவே இவ்வகக் கற்பிதவெளிப்பாட்டிற்குரிய அடிப்படைகளை ஆராயவேண்டும். ஏனெனில் ஒளியால் பார்வை பெறப்படுதல் போல, இவ்வகக் கற்பிதத்தால், காதல்மொழி பெறப்படுகிறது. இறைநிலை இணைவு இலக்கியங்களில், இறைவனிடம் கொண்டுள்ள அணுக்கமும், உணர்வைத் தூண்டும் காதலும் மிளிர்கின்றன. அவை, தாம் பூண்டுள்ள கோட்பாட்டு மொழியை மேலுயர்த்துகின்றன. அம்மொழி எல்லா இனத்தையும், எல்லாச் சமயப் பிரிவையும் சார்ந்த பல இறைநிலை இணைவாளர்களுக்கும் பொருந்துவதாகிறது. இக்கடவுட் காதல் மொழியின் முன்னே, மனிதக் காதல் மொழி ஆறிப்போனதாகவும், பொருளற்றதாகவும் தோன்றுகிறது"[29] என்பர் இவிலின் அண்டர் கில்.

மனிதக் காதல் மொழியின் உயர்வானதாய்ப் போற்றப்படும் கடவுட் காதல் கோட்பாடு இறையாளர்கள் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாய் மட்டுமன்றி, போற்றப்பட்டதாயும் உள்ளது. உலக மனிதர்களுக்கு இடையே பேசுகின்ற மொழியில், பல்வேறு வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் இறைவன்பால் காதல் கொண்டு பாடல்களைப் பாடும் இறைநிலை இணைவாளர்களின் மொழி எல்லைகளைக் கடந்து ஒன்றாய் அமைகின்றது என்பதனை, "கருத்துக்கு எட்டாத உயரிய கடவுட்காதல், அனுபவங்களை மனிதக் காதல் மொழியில் வெளிப்படுத்துவது என்பது, உலக இறைநிலை இணைவாளர்கள் அனைவருக்கும் பொது. அதனால் உலகமாந்தர் பலமொழி பேசுகின்றனர். இறைநிலை இணைவாளர்களோ ஒரேமொழி பேசுகின்றனர்"[30] எனக் குறிக்கப்படுவதினின்று உணரமுடிகின்றது. இந்நோக்கு உலக அருளாளர்கள் அனைவரையும் ஒரே மையத்தின்கண் நிறுத்துகின்றது.

இறைவன்பால் காதல் கொண்டு, இறைமை அன்பில் நெக்குருகிப்பாடிய செயிண்ட் தெரசா, தன் ஆன்ம அனுபவங்களைக் கூறுகையில், "இயேசுவுடன் தான் ஒன்றிக் கலந்த ஆன்ம ஒருமைப்பாட்டுத் திருமணத்தில், உடல்பற்றிய காம உணர்வுகள் எல்லாம் அழிந்தொழிய, புலன்வழி உணரும் அறிவெல்லாம் தடைப்பட, பிறிவாற்றாமையால் அனுபவிக்கும் துன்பமெல்லாம் கரைந்து, பேரின்பப் பெருக்கில் தாம்திளைத்ததாக எடுத்துரைப்பார்"[31] எனத் துரையரங்கசாமி குறிப்பதினின்று அறியமுடிகின்றது.

செயிண்ட்ஜான் என்ற ஆன்மிகச் சான்றோர், நாயகி நிலையில் நின்று, தன்தலைவனைத் தன்னுள் அகப்படுத்திக்கொண்ட மகிழ்வில்,

"மலர் பல செறிந்தவென் மார்பினூடே
அலர்கதிர் அவனேஅன்றி மற்றிலரே
எனக்கினி யானின் இன்ப நல்லகமாய்
மனத்தினை யளித்தனன் மகிழ்வுடன் யானே"[32]

எனப் பாடிப் பேரின்பம் அடைவார்.

இஸ்லாத்தில், பக்தாத் நகரில் வாழ்ந்த விரலாஜ் என்ற சூபி ஞானி இறைவனுடன் தான் கலந்த தன்மையினை, "நான் காதலிக்கின்ற அவனாகவே மாறிவிட்டேன். என்னைக் காதலிக்கின்ற அவர் நானாகவே மாறிவிட்டார். மனித 'நான்' தெய்வீக 'நான்' ஆக மாறுகின்ற அற்புதநிலை இது. இறையருளால் மாண்ட ஆணவம் ஒழியும் உன்னத நிலை இது. காதலிக்கும், காதலுக்கும் இடையே உள்ள அன்பினைப் போல, இறைக்கும். உயிருக்கும் இடையே மலர்கின்ற தெய்வீகக் காதல் நிலை இதுவாகும். இங்கு அறிவு, காதலின் தூண்டுதலால் உள்ளுணர்வாய் மாறுகின்றது. காதல் பெருகிப்பரந்து, இறையுடன் மயங்கித் தற்போதம் அழிந்து, கள்வெறிகொண்டு நிலையழிந்து, சுகாநந்தப் பெருநிலையினை அடைகின்றது"[33] என உரைப்பதாய்க் குறிப்பர் துரையரங்கசாமி.

இசுலாமியச் சான்றோர் ஜாலுடின் சூபி, இறைவன்பால் தான் கொண்ட அன்பின் மிகுதிப்பாட்டினை,

"கள்ளிடைத் தண்ணீர் கலந்தது போலே
கன்னலா முன்னுயிர் என்னுயிராகி
உள்ளிடைக் குழைந்தே ஒன்றாயினவே
உலகிடையாரே நமைப் பிரிப்பாரே

என்னவனாயினை, என்னுயிர்த்தலைவி
இனிச் சிறிதேனும் நினைப் பிரியேனால்
உன்னவளாக்கித் தழுவினையாயின்
உனையடைந் தின்பம் இனியடை யேனோ

இதழிடைக் குழையும் இன் குழலானேன்
இனியநின் மார்பிடை வீணையுமானேன்
இதயத்துமூச்சே! என்நரம்பாகும்
இசையினைத் தூண்டின் என்கணீர் ஒளிரும்"[34]

எனப் பாடி இன்புறுவதும் ஈண்டு குறிக்கத்தக்கதாகும்.

இவ்வாறு உலகச் சமய ஞானிகள் அனைவரும், தன்னை நாயகியாகக் கருதி இறைவன் மேல் காதல் கொண்டமைக்கு அத்தன்மை அவர்களுக்கு வந்தமைந்ததே காரணம் ஆகும்.

தமிழ் இலக்கண, இலக்கியங்களில் நாயகன் - நாயகி நிலை

உலக இலக்கியங்களில் ஆளுமை பெற்றிருந்த நாயகன் - நாயகி நிலையினைத் தமிழ் இலக்கண, இலக்கியங்களிலும் காணமுடிகின்றது.

வைணவ ஆழ்வார்கள் நாயகி நிலை கொண்டு பாடினமையை,

"ஞானத்திலே தம் பேச்சு
பிரேமத்திலே பெண் பேச்சு"[35]

என ஆச்சார்ய ஹிருதயம் குறிப்பிடும். வைணவ உரையாசிரியர்கள் இவ்

உணர்வினை, 'பகவத்காமம்,' 'விஷயகாமம்' என வேறுபடுத்தி, பகவத்காமமே தெய்வீக நிலையில் உள்ள காதல் உணர்வு எனத் தெளிவுபடுத்துவர். இராமநுசநூற்றந்தாதியில் "கண்ணனுக்கே ஆம் அதுகாமம்"[36] எனக் குறித்திருப்பது இதற்குச் சான்றாகும்.

நம்மாழ்வார் தன்னைத் தலைவியாகப் பாவித்துக் கொண்டு திருவாய் மொழியில் கண்ணனைப் பாடியமைக்கு, "ஸ்தீரி பாவனையை நம்மாழ்வார் தாமாகவே ஏற்றுக் கொள்கிறாரல்லர். அந்த அவஸ்தை தானே, பரவசமாக வந்து சேர்கிறது. புருஷோத்தமனான எம்பெருமானின் பேராண்மைக்கு முன், உலகமடங்கப், பெண்தன்மையாதாயிருக்கையாலும், இவ்வகைகளுக்கு ஸ்தீரிபாவனை வந்து நின்றது எனலாம். மேலும் 'விஷயந்தகாமம்,' 'பகவத் விஷயகாமம்' எனக் காமம் இருவகை. வேதங்களின் வழிப்பட்ட 'பக்தியே சிருங்கார முறையில் பரிணமித்து நிற்கும்"[37] என விளக்கம் கூறும் ப.அருணாசலம் கருத்து இதற்கு அரணாகும்.

சமய இலக்கிய அடியார்கள் தம்மைப் பெண்ணாகப் பாவித்துக்கொண்டமைக்கு "நமது பாகவதத்தில் கோபிகைகளின் உபாக்கியானங்கள் எல்லாம் நாயகன் - நாயகி பாவத்தினைத் தழுவி எழுதப்பட்டனவே என்றும் மகாபக்தியான மீராபாய் உலகில் உள்ள ஜீவகோடிகள் அனைத்தும் ஸ்தீரிபிராயம் என்றும், பகவான் ஒருவனே புருஷன் என்றும் பாவித்து பக்தி செய்திருக்கிறாள் என்றும், பரமஹம்ச ஸ்ரீராம கிருஷ்ண தேவரும் தம்முடைய அனுபவங்களுள் நாயகன் - நாயகி பாவத்தை அனுபவிக்க எண்ணி, சேலை தரித்துக்கொண்டு, இராதைபாவத்தில் கண்ணனை வழிபட்டார் என்றும் சொல்லப்படுகின்றது"[38] எனக்காரணம் காட்டுவர் வ.வே.சு.ஐயர். இவ்விடத்து "அன்பினால் இறைவனை அடையத்துடிக்கும் ஆன்மா, தன்னைப் பெண்ணாகப் பாவித்து, அன்பு செலுத்துகின்றது. இதனை நாயகன்- நாயகிபாவம் எனக் கூறுவது என்றும், அடியார்களின் வாழ்க்கையில் உள்ள பாவனை தெய்வீக சாதனையின் தோற்றங்கள்"[39] என்றும் ப.அருணாசலம் கூறுவது

குறிக்கத்தக்கதாம். இவற்றால் அடியார்கள் தம்மைப் பெண்ணாகப் பாவித்துக்கொண்டு பாடல்கள் புனைந்து பாடியமை சிறப்பிற்குரியதே எனத் துணியலாம்.

அன்புடைய ஒருவனும், ஒருத்தியும் கூடிப் பெறுகின்ற இன்பமாகிய அகமரபு உடல் உணர்வினொடு தொடர்புடைய ஒன்றாம். அத்தகைய ஒன்று, இவ் உலகியல் வாழ்வினை விடுத்து, சிற்றின்ப நெறியினின்று விலகிப் பேரின்பநெறிக்குச் செல்லத்துடிக்கும் ஆன்ம உணர்விற்கு மாறுபட்டதன்றோ எனும் ஐயப்பாடு ஈண்டு எழலாம். தொல்காப்பியத்தின்,

"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக்கூட்டம்"[40]

என்ற நூற்பாவிற்கு, "மாசுடைமையால் ஈருடலில் பிரிந்து நிற்கும் ஓர் உயிர், அம்மாசுகழிந்து, நிறைவுற்று, நீக்கமற நிறைந்திலங்கும், கடவுளோடு இரண்டறக்கலந்து, நிறைந்து அஃதேயாய் விடுதலாகும்"[41] என உரைவகுப்பர் துரைஅரங்கனார். இவ்உரையின்வழி, ஒருயிர், ஈருடல் பற்றிக் காதலனும், காதலியுமாய்த் தோன்றுதற்குக் காரணம் அவ்உயிர் மாசுடன் இருத்தலே என்பதும் மாசுள்ளவரையில் அஃது நிறைவு பெற்றது ஆகாது என்பதும் பெறப்படும். மேலும், அவ்வுயிர் மாசுநீங்கி, நிறைவுபெற்றபின், உடலிற்புகுந்துழலும் தொல்லை அறவே ஒழிந்தபின், ஒருயிர், ஈருடல் பெறாமல், பேரின்பப் பெருவாழ்வை எய்தும் என்பதனையும் அறியலாம். இதனால், உயிர்கள் பேரின்பமாகிய இறைவனின் திருவடியைச் சென்றடைய முயலும் முயற்சிகளுள் காதலும் ஒன்று என்பதை உணரமுடிகின்றது. மனிதனும் காதலும் பிரிக்க இயலாதது. பக்தியும் காதலும் ஒன்றொடொன்று முரண்படுவதல்ல.

இறைக்கும் உலக உயிர்களுக்கும் இடையே குறிக்கப்படும் "தந்தை-தனயன், அடிமை-அடிமைகொள்பவன், நாயகன்-நாயகி, அறிபவன்-அறியப்படும்பொருள் சொத்து - சொத்துக்குரியவன்,

உடல்-உடலையுடையவன், தாங்குகின்றவன் - தாங்கப்படும்பொருள், போகத்தை அனுபவிப்பவன் - போக்கியப்பொருள் போன்ற உறவு நிலைகளுள், நாயகன் - நாயகி உறவு நிலையே பெரிதெனப் போற்றப்படுகின்றது. இந்த உறவே அகப்பொருள் தத்துவமாய் விரிகின்றது. இந்த உறவு ஏனைய எல்லாவற்றிலும் சிறந்தது. உயிராயது. இந்த முறையில் பரமான்மாவைத் தலைவனாகவும், சீவான்மாவைத் தலைவியாகவும் வைத்து விளக்கும் பாடல்களை நாலாயிரத்திலும், தேவாரத்திலும் காணமுடிகின்றது"[42] என ந.சுப்புரெட்டியார் குறிப்பது இறைமைக்கும் உயிர்களுக்கும் இடையேயான உறவுநிலையில் நாயகன் - நாயகி நிலையே உயர்வுடையது என்பதனை உணர்த்துகின்றது. இந்நிலையில் தான் சங்க அகநெறி, பக்தி இலக்கியக் காலத்தில் செல்வாக்குப்பெறுகின்றது.

"சங்க காலத்தில் சிறப்புற்றிருந்த இயற்கை நெறியின் ஓர் அம்சமான உலகியற்காதல் பக்திப்போர்வையில் மீண்டும் தலைகாட்டுகின்றது"[43] என்கிற ஆ.வேலுப்பிள்ளையின் கூற்று இதற்குச் சான்றாகும். "இறைவனிடத்தில் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்தலும், சரணடைதலும் செய்து கொள்கிறபோது ஆன்மா தன் பெண்மையை உணர்கிறது. தன்மறுப்பான அடிபணிதலிலும், முழுமையான சரணடைதலிலும், ஆழ்வார்களுக்குப் பெண் மனப்பான்மை வந்தெய்த அகக்கற்பிதம் பிறக்கிறது"[44] என்ற விளக்கம் நாயன்மார்களுக்கும் பொருந்தும்.

தன்னைப்பெண்ணாகப் பாவித்துக்கொண்ட, நாயன்மார்களின் பாடல்களில், சங்க மானுடக்காதல் பக்திக்காதலாய் மாறுவதுடன், சங்ககால அகத்துறைகளும் பெரிதும் இடம்பெறுகின்றன.

"இறைநிலை இணைவு அனுபவம் மனிதக்காதல் மொழியில் வெளிப்பட்டாலும், அதில் சொல்லப்பட்டுள்ள படிமம் அனைத்தும் குறியீடு

ஆகும் என்று பிற இறைநிலை இணைவாளர்களின் பாடல்களுக்குச் சொல்லப்படும் விளக்கம்"[45] நாயன்மார் பாடல்களுக்கும் பொருந்தும்.

தன்னை நாயகியாகப் பாவித்துக் கொண்ட நிலையில், பராங்குசநாயகி (திருமங்கை ஆழ்வார்) சடகோப நாயகி (நம்மாழ்வார்) குலசேகரநாயகி (குலசேகராழ்வார்) என்று கூறுமாற்போல, திருமுறைகளிலும் ஞானசம்பந்த நாயகி (திருஞானசம்பந்தர்) வாகீசநாயகி (திருநாவுக்கரசர்) சுந்தரநாயகி (சுந்தரர்) மாணிக்கவாசக நாயகி (மாணிக்கவாசகர்) என்று அழைப்பது பொருந்தும். மேலும் "தேவார மூவர் பாடுகின்ற அகப்பொருள் பதிகங்களை இச் சிவகாம அடிப்படையிலே சிந்திக்க வேண்டும் என்பார்"[46] துரையரங்கசாமி. அந்நிலையினை மனதில்கொண்டு திருமுறைப்பாடல்களை நோக்கும்பொழுது அவற்றுள் அகத்துறைகள் நிறைந்து காணப்படுகின்றன.

திருமுறை காட்டும் கைக்கிளைத் தலைவி

தொல்காப்பியத்துள் அகத்திணை ஏழனுள் ஒன்றாய்க் கைக்கிளை குறிக்கப்பெறுகிறது. புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்திணைகளின் உரிப்பொருள் போலவே, கைக்கிளையும் பெருந்திணையும் சொல்லளவிலேயே உரிப்பொருள்களை விளக்கி நிற்கின்றன என்ற கருத்தை இளம்பூரணர், "உரிப்பொருளாவது மக்கட்கு உரியபொருள். அஃது அகம், புறம் என இருவகைப்படும், அகமாவது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனவும், கைக்கிளை பெருந்திணை எனவும் எழுவகைப்படும்"[47] என்பர். தொல்காப்பியர் கைக்கிளை என்பதனை ஆண்மகனுக்கு உரிய ஒழுகலாறாய்க் காட்டுவர். கைக்கிளை என்பதனை உணர்த்தவரும் வ.சுப.மாணிக்கனார், "கைக்கிளை என்னும் குறியீடு இருபாலர்க்கும் சொல்லத்தக்க பொதுநிலையிற்றான் அமைந்துள்ளது"[48] என்பர். எனினும் தொல்காப்பியர் இதனைப் பெண்ணீர்மைக்கு உரியதாய்ச் சுட்டவில்லை. இதற்குத் தமிழ்மரபே காரணம் ஆகும். இம்மரபுநிலையினை,

"நோயலைக் கலங்கிய மதனழி பொழுதின்
காமஞ்செப்பல் ஆண்மகற் கமையும்
யானே பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்க"[49]

என்ற சங்க இலக்கியப் பாடலும் காட்டும். எனினும் பிற்காலத்தில் பரிபாடலில் பெண்பாற் கைக்கிளைப் பாடல் காணப்படுகின்றது. வையையில் நீராடும் மகளிர்க்கு வையை கைக்கிளைக் காதலைத் தருவதாய்த் தோழி கூறும் வகையில்,

"இன்ன பண்பின் னின்றைந்நீ ராடல்
மின்னிழை நறுநுதல் மகள் மேம்பட்ட
கன்னிமை கனியாக் கைக்கிளைக்காமம்"[50]

என்ற பரிபாடல் அடிகள் காட்டும். இப்பாடல் அடிகளுக்கு "நறுநீர்வையாய்! மின்னிழையும், நறுநுதலையுமுடைய மகட்டன்மை மேம்பட்ட கன்னிமை முதிராக் கைக்கிளைக் காமத்தைத் தருகின்ற நின்னிடத்து, இத்தைந்நீராடலை முற்பிறப்பில் செய்த தவத்தாலே இப்பிறப்பில் பெற்றோம். அதனை யாவரும் நயக்கத்தக்க நின்னீர் நிறைக்கண்ணே மறுபிறப்பினும் பெறுவோமாக!"[51] எனப் பரிமேழலகர் உரைவகுப்பதினின்று, பெண்ணீர்மைக் கைக்கிளையை அறியமுடிகின்றது. பிற்கால இலக்கணநூல்களுள் இலக்கணவகை ஐந்தினையும் ஒருங்குகூறும் நூலான வீரசோழியம் பொருளினை, "அகப்பொருள், புறப்பொருள், அகப்புறப்பொருள், புறப்புறப்பொருள் என நான்காகப் பிரிக்கின்றது."[52] இவற்றுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்தும் அகப்பொருளாகக் குறிக்கப்படுவதனை,

"முல்லை குறிஞ்சி மருதத் தொருபாலை நெய்தலைந்துஞ்
சொல்லுமகமாம்"[53]

என்ற நூற்பாவால் அறியலாம். கைக்கிளை அகப்புறப் பொருளாய்க் கூறப்படுவதனை,

"அறனும் வாட்கையு மொருதலைக்காமமும்

பொதுவியல் பாடா ணயநிலைப் படலமென்

றிவைக ளனைத்தும் மகப்புறமாகும்"[54]

என்பதனால் அறியமுடிகின்றது. இக்கைக்கிளை ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என இருவகைப்படும் என இந்நூலாசிரியர் குறிக்கின்றார்.[55] புத்தமித்திரர் கைக்கிளைக்கு,

"காட்சிமுதலாக் கலவியினொ ருதலை

வேட்கையிற்புலம்புதல் கைக்கிளை அதுதான்

கேட்போரில் லாக் கிளவிகள் பெறுமே"[56]

என்ற மேற்கோளினைக் காட்டுகின்றார்.

இலக்கண விளக்கம் இயற்கைப் புணர்ச்சிக்கு முன் கைக்கிளை நிகழும் என்பதனை,

"மெய்கிளை யாழோர் வேண்டும் புணர்ச்சி முன்

கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப"[57]

எனக் குறிப்பிடுகின்றது. கைக்கிளை வகையுள் ஒன்றாய பெண்பாற் கைக்கிளைப் பாடல்கள் பக்தி இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவ்விடத்து 'கைக்கிளை' என்பது ஆன்ம ஈடேற்றத்தின் ஆரம்பநிலை எனவும், அன்பின் ஐந்திணை அதன் முதிர்நிலை எனவும் கொள்ளல் வேண்டும்.

திருமுறைகளில் காணப்படும் கைக்கிளை

இறைவன் மாட்டு அன்புகொண்ட அடியார்கள் இறைவனின் அருளினைத் தொடக்க நிலையில் பெற்றார்கள் எனக் கூறஇயலாது. அடியார்தம் பாடல்களை அகச்சான்றாய்க் கொண்டு நோக்கும் பொழுதும், அவர்கள் ஆரம்ப நிலையில் ஆண்டவனின் அருளினைப் பெற்றதாகப் பாடவில்லை. ஆண்டவனின் அருளினைப் பெறாமையால் துன்புற்றதாகவே அதிகம் பாடியிருக்கின்றனர். அந்நிலையின்கண் அமைந்த அவர்களின்

பாடல்களை ஒருதலைக் காதல் புலம்பலாகிய 'கைக்கிளை' எனவே கொள்ள வேண்டியிருக்கிறது. இவ் ஒருதலைக்காதல் பின்னால் இறையருளைப் பெற்ற நிலையில் பாடப்படும் போது அன்பின் ஐந்திணையாய் மாற்றம் பெறுகிறது.

"சங்கப் பாக்களில் தலைவியின் நெஞ்சம் முழுவதும் தனக்கே பெற்ற தலைவனின் இடத்தினைச் சமயப்பாடல்களில் இறைவன் பெற்றுவிடுகின்றான்"[58] என்பார் அறிவுடைநம்பி. அந்நிலையில் தன் நெஞ்சம் முழுவதும் நிறைந்த இறைவனின் அருள் வேண்டித் தலைவி அரற்றுவதாய்ப் பக்தி இலக்கியக் கைக்கிளைப் பதிகங்கள் அமைந்துள்ளன.

திருஞானசம்பந்தரின் முதல் திருமுறையின் முதல் பதிகமாகிய திருப்பிரம்மபுரப் பதிகம், 56 வது பதிகமாகிய திருப்பாற்றுறைப் பதிகமும், மூன்றாம் திருமுறையின் 45வது பதிகமாகிய திருவாரூர்ப் பதிகம், நாவுக்கரசர் தேவாரத்தின் ஆறாம் திருமுறையில் அமைந்துள்ள 58வது பதிகமாகிய திருவலம்புரப் பதிகம், ஒன்பதாம் திருமுறையில் அமைந்துள்ள கோட்டூர் மணியம்பலப்பதிகம், பவளமால்வரைப் பதிகம் போன்றவை கைக்கிளை மரபினைச் சார்ந்தவையாய் அமைந்துள்ளன.

உள்ளம் கவர்ந்தானை எண்ணி அரற்றும் தலைவி

தலைவியானவள், தன் உள்ளம் கவர்ந்த கள்வனாகிய தலைவன் பிரம்மபுரத்தில் குடியிருப்பவன்; தோடுடைய செவியினை உடையவன்; விடையினைத் தனது வாகனமாகக் கொண்டுவந்தவன்; தன் சடையின் கண் தூய வெண்மதியினைச் சூடியிருப்பவன். பிரம்மன் முன்னாள் பணிந்து வணங்க அவனுக்கு அருள்செய்தவன்; அத்தகையோன் தனக்கு அருள்செய்யாது இருக்கின்றான் எனக் கூறி அரற்றுகின்றாள். இதனை,

"தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
னுள்ளங்கவர் கள்வன்

ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்

தேத்தவருள் செய்த

பீடுடைய பிரமாபுர மேவிய

பெம்மானி வனன்றே" (1:1:1)

என்பது உணர்த்தும்.

திருப்பிரம்மபுரப் பதிகத்தின் இரண்டாவது பாடலில் தலைவி, தலைவன் அணிந்துவந்த அணிகலன்களின் தன்மைகூறி அரற்றுகின்றாள். தலைவனானவன் ஆமையோடு, பன்றிக்கொம்பு, மண்டையோடு இவற்றை அணிந்தவனாய் வந்தான். தன்கையில் மண்டையோடு ஏந்தி, பலிகொள்பவன் போல்வந்து தன் உள்ளம் கவர்ந்தான் என்கிறாள் தலைவி.

"முற்றாலாமையிள நாகமோடேன

முளைக்கொம்பவை பூண்டு

வற்றலோடு கலனாப் பலிதேர்ந்தென

துள்ளங் கவர் கள்வன்

கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல்

கையால் தொழுதேத்தப்

பெற்றமூர்ந்த பிரமாபுரமேவிய

பெம்மானி வனன்றே" (1:1:2)

என்பது அப்பாடலாகும்.

தலைவி உள்ளம் கவர்கள்வனின் உறைவிடம் கூறல்

பலிகொள்பவனாய் வந்து உள்ளம் கவர்ந்த தலைவனின் உறைவிடம் கூறி அரற்றும் தலைவியைப் பிரம்மபுரப்பதிகம் காட்டுகின்றது. உறைவிடம் சுட்டுவதோடு மட்டும் நில்லாமல், தலைவன் உள்ளம் கவர்ந்தமையால் தன்னுள் ஏற்பட்ட மாற்றத்தினையும் தலைவி,

“நீர்பரந்தநிமிர் புன்சடை மேலோர்

நிலா வெண்மதி சூடி

ஏர்பரந்த வின வெள்வளை சோரவென்

னுள்ளங் கவர் கள்வன்

ஊர்பரந்த வுலகின் முதலாகிய

வோரூரிது வென்னப்

பேர்பரந்த பிரமாபுர மேவிய

பெம்மானி வனன்றே” (1:1:3)

என உரைக்கின்றாள்.

சொல்லும் செயலும் முரண்பட்டவன் தலைவன் எனல்

தலைவனானவன் உண்மைப் பொருளினைக் கூறும் வேதத்தினைப் பாடிவந்தனன். அதனால் அவன் உண்மையானவன் என்று எண்ணினேன். ஆனால், சொல்லுக்கு மறுதலையாய், உள்ளம் கவரும் கள்ளத்தினைச் செய்தான் என எண்ணிப் புலம்பும் கைக்கிளைத்தலைவியைத் திருமுறை,

“மறைகலந்தவொலி பாடலோடாடல

ராகி மழுவேந்தி

இறைகலந்தவின வெள்வளை சோரவென்

னுள்ளங் கவர் கள்வன்

கறை கலந்த கடியார் பொழில் நீடுயர்

சோலைக்கதிர் சிந்தப்

பிறை கலந்த பிரமாபுர மேவிய

பெம்மானி வனன்றே” (1:1:6)

என்பதில் காட்டுகின்றது.

தலைவியின் எழில் கவர்ந்தான் தலைவன் எனல்

தலைவன் தன் உள்ளம் கவர்ந்த தன்மையினைத் தலைவி கூறி அரற்றுவதாய்த் திரும்பிரம்மபுரப் பதிகம் அமைய, முதல் திருமுறையின் 56ம்

பதிகமாகிய திருப்பாற்றுறைப் பதிகம், தலைவன் தலைவியின் எழிலினைக் கவர்ந்த தன்மையினைக் கூறி அரற்றுவதாய் அமைந்துள்ளது.

இப்பதிகத்தின்கண் வரும் தலைவியானவள், தலைவன்தன் எழில்கொண்டான் என்றும், யாவரும் அறியாவண்ணம், தன் அழகினை வெளவினான் என்றும், பசலை தந்து தன் மார்பினைப் பொன்னிறமாக்கினான் என்றும் அரற்றி நிற்கின்றாள். இதனை,

> "மாகந்தோய் மதிசூடி மகிழ்ந்தென
> தாகம் பொன்னிற மாக்கினார்
> பாகம் பெண்ணு முடையவர் பாற்றுறை
> நாகம் பூண்ட நயவரே" *(1:56:5)*

என்பதும்,

> "வெந்த நீற்றினர் வேலினர் நூலினர்
> வந்தெனன் னலம்வெளவினார்
> பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை
> மைந்தர் தாமோர் மணாளரே" *(1:56:10)*

என்பதும் குறிக்கும்.

இப்பதிகத்தின்கண் வரும் முதற்பாடல், தலைவியின் நெஞ்சமானது தலைவியிடத்து நில்லாது, தலைவனைத் தேடிச் செல்வதனை,

> "காரார் கொன்றை கலந்த முடியினர்
> சீராஞ் சிந்தை செலச் செய்தார்" *(1:56:1)*

எனக் குறிக்கும். இப்பதிகத்தின்கண் இடம்பெறும்,

> "எண்ணார் வந்தென் எழில் கொண்டார்" *(1:56:3)*
> "நாதர் வந்தென் நலம் கொண்டார்" *(1:56:6)*
> "எவ்வெம் செய்தென் எழில் கொண்டார்" *(1:56:10)*

ஆகிய அடிகள் தன் நலன் உண்ட தலைவனை எண்ணித் தலைவி அரற்றும் கைக்கிளைக் கூற்றுக்களாய் அமைந்துள்ளன.

தலைவனை உறவாய்க் கொண்ட தலைவி

ஒன்பதாம் திருமுறையில் இடம்பெறும் கருவூர்த்தேவரின் கோட்டூர் மணியம்பலத் தலைவி, தலைவன் தன்னுள் வந்த தன்மையினைக் கூறி, அவனையும், தன் மனத்தினையும் தன்னிடம் அழைத்துவாரீர்! என அரற்றி நிற்கின்றாள். "மணியம்பலத்தினுள் ஆடும் மைந்தனாம் தலைவன் தன் மனத்தினை அடைந்தான் என்றும் தலைவன்மேல் கொண்ட காதலால் தன் உடல் திருநீற்றை விரும்புகிறது என்றும் குறிக்கின்றாள் இத்தலைவி. தன்னுடைய செவியானது அவனறிவு நூல்களைக் கேட்க விரும்புகின்றது. வாய் அவனுடைய திருநாமத்தினை உச்சரிக்க விரும்புகின்றது. கண்கள் அவன் திருக்கோயில் விமானத்தினை நோக்கி வெய்துயிர்க்கின்றது என்றும் குறிப்பிடுகின்றாள். இதனை,

"தெள்ளு நீறவன் நீறு என் உடல் விரும்பும்
செவி அவன் அறிவு நூல் கேட்கும்
மெள்ளவே அவன்பேர் விளம்பும் வாய் கண்கள்
விமானமே நோக்கி வெவ்வுயிர்க்கும் என்பதாம்" *(9:3:4)*

என்னும் பாடலடிகள் சுட்டும்.

தலைவன்பால் கொண்ட அன்பின் மிகுதியால் தன் உறவுகள் அனைத்தையும் துறந்து தலைவனின் அடியையே பற்றுக்கோடாய்க் கொண்ட கைக்கிளைத் தலைவியை,

"உறவும் பெற்ற நாற்றாயொடு தந்தையும்
உடன் பிறந்தவரொடும்
பிரியவிட் டுனை யடைந்தேன்" *(9:3:8)*

என்ற அடிகள் உணர்த்தும்.

பொய்கூறி அழைத்துப் புறம்போன தலைவன்

தலைவன் தன்னைப் பொய்கூறி அழைத்துப் புறம்போனான் என்கின்றாள் தலைவி. தலைவியின் உள்ளம் கவர்ந்த தலைவன், தன்மேனியில்

பட்டினை உடுத்தி இருந்தான். பவளம்போல் மேனியின்மேல் சந்தனத்தைப் பூசியிருந்தான். தன் திருவடிகளைத் தூக்கியும், ஆடியும் கூத்தாடுபவனாய் வந்தான். அவனின் அவ்வழகிய தோற்றம் கண்டு தான் மையல் கொண்டதாய்த் தலைவி குறிப்பிடுகின்றாள். பின் தலைவன் எங்கிருக்கிறான் என வினவிய வழி, வேறோர் பதி செல்வதாய்ப் பொய்கூறி, வலம்புரமே சென்று மன்னினான் என்றும் தலைவி குறிக்கின்றாள். இப்பாடலில் தலைவனின் அழகிய தோற்றம், அவனின் பொய் கூறும் இயல்பிற்குப் பொருந்தாததாய் அமைந்ததை எண்ணி வருந்துகின்றாள் தலைவி. இது,

"பட்டுடுத்துப் பவளம்போல் மேனியெல்லாம்
பசுஞ்சாந்தம் கொண்டணிந்து பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி யிங்கே வந்தார்க்
கெவ்வூரீர் எம்பெருமா னென்றே னாவி
விட்டுடுமா றது செய்துவிரைந்து நோக்கி
வேறோர் பதிபுகப் போவார் போல
வட்டணைகள் படநடந்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே" (6:58:7)

என்பதில் புலப்படும்.

தலைவனின் அருள் வேண்டி அரற்றல்

திருவாரூர்ப்பதிகம், தலைவன் அருள்வானோ! என ஏங்கும் தலைவியை அடையாளம் காட்டுகின்றது. தலைவன் தலைவியின் உள்ளம் கவர்ந்தான், தன் உரையினையே தலைவியின் உரையாய்க் கொள்ளும் வண்ணம் ஆட்கொண்டான். அத்தகையோன் மேல் கொண்ட காதலால் கலங்கி நிற்கும் தலைவிக்கு, 'அஞ்சேல்' என்று அருளாத தலைவனின் இரக்கமின்மை எண்ணித் தலைவி வாடுகின்றாள்.

தலைவனானவன் தன் பகையாகிய திரிபுரங்களை எரிக்கும் ஆற்றல் பெற்றவன். அத்தகையோன் நினைப்பின் தலைவியின் துயரினைத்

துடைத்தெறிய இயலும். ஆனால் அதனைக் கருதாது தலைவியை 'அஞ்சேல்' என்று உரையாது வருத்துகின்றான் என்கிறாள் தலைவி.

மேலும் தலைவன் தன்னை ஏற்கும் நாள் எந்நாளோ? என்றும் வருந்துகின்றாள். இதனை,

"மறையவன் மாமுனி வன் மரு வார்புரம்
இறையின் மாத்திரை யில் லெரி யூட்டினான்
சிறைவண் டார்பொழில் சூழ் திரு வாரூரெம்
இறைவன் றானெனை யேன்றுகொ ளுங்கொலோ" (3:45:3)

என்பது காட்டும்.

தலைவனை அன்றி வேறொன்று அறியாத் தலைவி

திருவாரூர்ப் பதிகத்தின்கண்வரும் தலைவி, தலைவனை அன்றி வேறொன்றும் அறியாத் தன்மையினளாய்க் காணப்படுகின்றாள். தலைவன் தனக்கு அருளாமையினை எண்ணி வருந்தியவள், அருளாமைக்கான காரணம் தேடி அயர்கின்றாள். இறுதியில் தான் வேறு யாரையேனும் சரணாகப் புகுந்தோம் எனத் தலைவன் ஐயுற்று அருளாது இருக்கின்றானோ? என எண்ணி அஞ்சுகின்றாள். இத்தகைய தலைவியை,

வார்கொண் மென்முலை யா ளொரு பாகமா
ஊர்க ளாரிடு பிச்சைகொ ளுத்தமன்
சீர்கொண் மாடங்கள் சூழ்திரு வாரூரான்
ஆர்க ணா வெனை யஞ்சலெ னாததே" (3:45:6)

என்ற பாடலானது எடுத்துக்காட்டும்.

தலைவியின் வண்ணம் கவர்ந்தான் தலைவன் எனல்

தலைவன் மேல் கொண்ட மையலால் தலைவி பசலைகொண்டாள். அதனைத் தலைவனுக்கு உணர்த்த விரும்பினாள். தலைவனோ பொன்னிற வண்ணத்தினை உடையவன். ஆனால், தலைவி பசலை கொண்டமையால்

எந்நிறத்தினைப் பெற்றாளோ , அந்நிறத்தினைத் தலைவன் கொண்டான் என்கிறாள். இக் கைக்கிளைத் தலைவியைப் பொன்வண்ணத்தந்ததாதி

"என் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்

ஆகிய ஈசனுக்கே" (பொ.வ.அ.பா.1)

எனச் சுட்டும்.

தலைவனின் திருநீலகண்டமும், திருநீறும், சிவந்த வானம் போன்ற திருமேனியும் எப்போதும் தன் கண்ணுள்ளே இருக்கும், உள்ளத்தை விட்டுப் போகாது எனப் புலம்பும் கைக்கிளைத் தலைவியை,

"என் பனிமலர்க் கண்ணின்று அகலான்" (9:10:9)

"கொழுந்திரள் தெண்ணில வஞ்சிநின் கூரிருள் வார்பளிங்கின்

செழுந்திரள் குன்றகஞ் சென்றடைந் தால்ஒக்குந் தெவ்வர் நெஞ்சத்(து)

அழுந்திரள் கண்டத் தவளப் பொடிசெக்கர் மேனிநின்றோர்

எழுந்திரள் சோதிப் பிழம்பும்என் உள்ளத்(து) இடங்கொண்டவே"

(சி.தி.மு.கோ.பா.12)

என்பது உணர்த்தும்.

காதல் துயரினை உயிர்தாங்காது எனல்

திருச்சிற்றம்பலத்தின்கண் இருக்கும் தலைவனை மோகித்தாள் தலைவி. தலைவனோ அருளாது காலம் தாழ்த்தினான். அவனை அடையாது தாம் அடையும் துயரினை தன் உயிர் தாங்காது எனக் குறிக்கும் தலைவியை,

"ஆவியில் பரமன்றுஎம் ஆதரவே" (9:26:2)

என்ற பாடல் அடியானது விளக்கிடும்.

மார்பு ஒற்றி உயிர்தர வேண்டும் கைக்கிளைத் தலைவி

தலைவன்பால் மையல் கொண்ட கைக்கிளைத் தலைவிக்கு, குளிர் நிலவும் கொளுத்தும் நெருப்பாய் மாறுகின்றது. இத்துயரால் வருத்தும் தலைவி தலைவனை நோக்கி,

"காலனை உயிர்செக உதைகொண்ட

மலர்ந்த பாதங்கள் வனமுலைமேல் ஒற்ற

வந்தருள் செய்யாயே" (9:3:3)

எனப் புதிய வேண்டுகோள் ஒன்றினை வைக்கிறாள். எமனை உதைத்து அவனது உயிரைப் போக்கிய திருவடியால் என் மார்புகளை ஒற்றி எனக்கு உயிர்தா எனத் தலைவி வேண்டுகின்றாள். தலைவனை முழந்தாளிட்டு வணங்கும் போதில், அவனது சேவடிகள் தன் மார்பில் படுதலால், அதனாலாவது என் உயிரைத் தா என வேண்டி அரற்றி நிற்கின்றாள் இத்தலைவி.

தலைவி இவ்வாறு பல்லோர் அறியும் வகையில் புலம்பி நிற்றல் நாணம் கடந்த நிகழ்வு எனக் கூறல் இயலாது. அறத்திற்கு மாறுபட்ட செய்தியாயினும் அகப்பொருட்குப் பயன்படும் ஆயின், வழக்கென வழங்குதலும் சான்றோரால் இகழப்படாது, ஏற்றுக்கொள்ளப்பெறும் என்பதற்கு,

"அறக்கழிவுடையன பொருட்பயம்படவரின்

வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப"[59]

என்ற தொல்காப்பிய நூற்பா சான்றாகும். கைக்கிளைப் பதிகங்களில் வரும் தலைவியின்செயல்கள் இதனை அடியொற்றியவையே ஆகும்.

தலைவி கூற்றில் ஐந்திணை ஒழுகலாறுகள்

தொல்காப்பியர் கைக்கிளை என்னும் மரபினை அடுத்து அன்பின் ஐந்திணையைக் குறிப்பர். இவை முறையே, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்பெறும். இவற்றை அடியொற்றியே, புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்பவை ஐந்திணை ஒழுகலாறுகள் எனக் குறிக்கப்படுகின்றன. இவை முறையே களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளிலும் பேசப்படுகின்றன. இத்தகைய ஐந்திணை ஒழுகலாறுகள் திருமுறைத் தலைவிகூற்றுப் பாடல்களில் காணப்படுகின்றன.

மெய்யுறுபுணர்ச்சி

ஒத்த தலைவனும் தலைவியும் பால்வரை தெய்வத்தின் ஆணையால் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டு அன்புகொள்வர். இந்நிகழ்விற்குப் பின் தலைவியின்பால் ஐயம்தீரப் பெற்ற தலைவன் புணர்ச்சி வேட்கை உண்டாக அவளைக் கூடக் கருதுவான். இத்தகைய மெய்யுறு புணர்ச்சிக்கு அவர்கள் தம் உள்ளப் புணர்ச்சியே நிமித்தம் ஆகும். இவ்வாறு மெய்யுறு புணர்ச்சியின் பாற்பட்ட தலைவியை,

"...பராய்த்துறையே னென்றோர் பவள வண்ணர்

துஞ்சிடையே வந்து துடியுங் கொட்டத்

துண்ணென் றெழுந் திருந்தேன் சொல்ல மாட்டேன்" (6:13:6)

என்பது காட்டும். இப்பாடலில் தலைவன், தலைவியின் குறிப்பறிந்து மெய்தீண்டிச் செய்தனவற்றைச் சொற்களால் எடுத்துக்கூறும் ஆற்றல் இல்லேன் என்கிறாள் தலைவி. 'துண்ணென் றெழுந்திருந்தேன், சொல்லமாட்டேன்' என்பதற்கு "காதலும் நாணமும் ஒரு நிலையே நின்றமையால் கடிந்தாயினும், நயந்தாயினும் ஒன்றும் சொல்ல இயலாதேனாயினேன் என்றுரைத்ததுமாம்"[60] என உரைவகுப்பார் சி.அருணை வடிவேலுமுதலியார். இதனால் தலைவன் மெய்யுறு புணர்ச்சி கொண்டவிடத்துத் தலைவி மறுத்தொன்றும் கூறும் நிலையினளாய் இல்லை என்பது உணரப்பெறுகின்றது.

மின்னிடைமெலிதல்

இயற்கைப்புணர்ச்சிக்கண் தலைவனைக் கண்டு காதலுற்ற தலைவி, அவனை அடையவேண்டும் என்ற அவாவினால் உடல்மெலிவாள். இதனைத் தொல்காப்பியர்,

'வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்'[61]

எனச் சுட்டுவர். திருக்கோவையார் இதனை "மின்னிடைமெலிதல்"[62] எனக் குறிக்கும். திருமுறையில் இத்தகைய தலைவியைக் காணமுடிகின்றது.

"கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்

செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே" (9:12:2)

என்ற அடிகள் இதனை விளக்கும்.

இடந்தலைப்பாடு

இயற்கைப் புணர்ச்சியின்கண் கண்டு காதலுற்ற தலைவனும், தலைவியும் தாம் சந்தித்த இடத்து மறுநாள் எதிர்படல் இடந்தலைப்பாடு எனப்படும். இறையனார் களவியல் இதனை,

"அங்ஙனம் புணர்ந்த கிழவோன் தன்வயின்

பாங்க னோரிற் குறிதலைப் பெய்தலும்

பாங்கிலன் தமியோள் இடந்தலைப்படலுமென்று

ஆங்க இரண்டே தலைப்பெயல் மரபே"[63]

எனக் குறிக்கும். ஞானசம்பந்தரின் தேவாரத் தலைவி இடந்தலைப் படுகின்றாள். முதல்நாள் தலைவனைக் கண்டு மையல் கொண்ட தலைவி, மறுநாள் தலைவனைக் கண்ட இடத்து வந்து, அவனைக் காணாது நிற்பதை, ஞானசம்பந்தர் திருவலஞ்சுழிப்பதிகத்தில்,

"குன்றி யூர் குட மூக்கிடம் வலம்புரங்

குலவிய நெய்த்தானம்

என்றிவ் வூர்களி லோமென்று மியம்புவ

ரிமையவர் பணிகேட்பார்

அன்றி யூர்தமக் குள்ளன வறிகிலோம்

வலஞ் சுழி யரனார்பால்

சென்ற வூர்தனிற் றலைப்பட லாமென்று

சேயிழை தளர்வாமே" (2:106:7)

எனப் பாடுவர்.

தலைவி பிரிவுழிக் கலங்கல்

தலைவன்கண் அன்பு மீதுரக் கொண்ட தலைவி, அவன் பிரிவின்கண் பெரிதும் வருந்துவாள். இதனைத் தொல்காப்பியர்

"பிரிந்தவழிக் கலங்கினும் பெற்றவழி மலியினும்"[64]

எனக் குறிப்பர். இதற்கு நச்சினார்க்கினியர், "களவு அலராகாமல் யான் பிரிந்துழித் தலைவி கலங்குவாளென்று அஞ்சித் தலைவன் பிரியாது உறைதலிற், பிரிவினைக் காணப்பெறாத தலைவி, அவ்வாறன்றிப் பிரிந்துழிக் கலங்கினும்"[65] என உரை வகுப்பர்.

தலைவன் பிரியான் எனக் கருதியவழி, பிரியக் கலங்கும் தலைவியை, முதல் திருமுறையின் 63வது பதிகமாகிய திருப்பிரம்மபுரப் பதிகமும், 76வது பதிகமாகிய திருஇலம்பையங்கோட்டூர் பதிகமும், மூன்றாம் திருமுறையில் அமைந்த 100வது பதிகமாகிய திருத்தோணிபுரப் பதிகமும், 104 வது பதிகமாகிய திருப்பரிதிநியமப் பதிகமும் ஆறாம் திருமுறையின் 45வது பதிகமாகிய திருவெற்றியூர்ப் பதிகமும் காட்டுகின்றன.

திருப்பரிதிநியமத் தலைவி, தலைவன் தனது தோற்றப் பொலிவு கெடவும், வளைகள் சோரவும் தன்னைப் பிரிந்து சென்றான்; இன்னும் வாராதவனாய் உள்ளான் எனக் கலங்கி மொழிகின்றாள். இதனை,

"வெங்கடுங் காட்டகத் தாடல் பேணி
விரிபுன் சடை தாழத்
திங்கள் திருமுடிமேல் விளங்கத்
திசையார் பலிதேர்வார்
சங்கொடு சாய லெழில்கவர்ந்த
சைவர்க் கிடம்போலும்
பைங்கொடி முல்லை படர் புறவிற்
பரிதிந் நியமமே" (3:104:6)

என்னும் பாடல் உணர்த்தும்.

இப்பதிகத்தின் பிறிதோர் பாடலில் தலைவியானவள், தலைவன் பிரிவினால் தன் உடல் மெலிந்து, மேகலை கழன்றதாய்க் கூறிப் புலம்புகின்றாள். இதனை,

"காசடை மேகலை சோரவுள்ளங்

கவர்ந்தார்க் கிடம் போலும்" (3:104:8)

என்பது புலப்படுத்தும்.

திருஇலம்பையங் கோட்டூர்ப் பதிகத் தலைவியும் தலைவன் தன்னைப் பிரிந்து, தன் எழில் கொள்வது நீதியோ? என இரங்கிக் கூறுகின்றாள். இப்பதிகத்தின் தலைவியானவள் திரு இலம்பையங் கோட்டூரின்கண் உறையும் மான், மயில் போன்றவற்றைக் காண்கின்றாள். அஃறிணை உயிர்களாகிய அவையும் கூடத் தன் துணையுடன் வதிகின்றன. தான் மட்டும் தலைவனின் அருள் கிடைக்காது, அயர்வதாய்க் குறிக்கின்றாள். இத்தகைய தலைவியை,

"தலையினார் மடப்பிணை துணையொடுந் துயிலக்

கானலம் பெடை புல்கிக்கண மயிலாலும்

இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூ

ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வ தியல்பே" (1:76:1)

என்ற பாடல் அடிகளால் அறியமுடிகின்றது.

இப்பதிகத்தின் இரண்டாவது பாடலில் தலைவன், தன் உரைகளையே என்னுடைய உரைகளாய்க் கூறச் செய்தான் என்கிறாள் தலைவி. இதன்வழி, தலைவிக்குத் தலைவன்பால் காதல் மீதூர்ந்து, அவனுடைய உரைகளையே தன்னுடைய உரைகளாகக் கூறும் உன்மத்த நிலைக்குத் தள்ளப்பட்டாள் என்பது பெறப்படுகின்றது. இப்பாடலில் தலைவன் மார்க்கண்டேயனுக்காகக் காலனைக் காலால் உதைத்தவன் என்ற குறிப்பினையும் கூறுகின்றாள். இக்குறிப்பின்வழி, அன்று மார்க்கண்டேயனைக் காத்த தலைவன், இன்று தன்னை வருத்தும் பிரிவென்னும் கொடிய கூற்றுவனிடம் இருந்து, காக்க வந்தானில்லை என்பதனையும் உணர்த்துகின்றாள். இதனை,

"பாலனாம் விருத்தனாம் பசுபதிதானாம்

பண்டு வெங்கூற்றுதைத் தடியவர்க் கருளும்

காலனா மெனதுரை தனதுரை யாகக்

கனலெரியங் கையிலேந்திய கடவுள்

நீலமா மலர்ச் சுனை வண்டு பண்செய்ய

நீர்மலர்க்குவளைக் கடாது விண்டோங்கும்

ஏலநாறும் பொழிலிலம் பையங் கோட்டு

ரிருகையாப் பேணியென் னெழில்கொள் வதியல்பே" (1:76:3)

என்பது சுட்டும்.

இப்பதிகத்தில் இடம்பெறும் பாடல்களின் இறுதியடிகள் அனைத்தும் "கோட்டூர் இருக்கையாப் பேணி, என் எழில் கொள்வதியல்பே" என முடிவதினின்று, தலைவி கொண்ட தன்னேரில்லாத் தனித்துயரம் வெளிப்போந்து நிற்பது புலனாகும்.

அன்பின் ஐந்திணையில் தூதுவிடல் மரபு

தமிழ் அகமரபில் தலைவி ஒருத்தி, தன்னால் காதலிக்கப்பட்ட தலைவனைப் பிரிந்து வருந்தும் காலத்து, பிரிவு ஆற்றாமையால் கேட்காதவற்றைக் கேட்டுவா என்றும் கிளக்காதவற்றைக் கிளந்துவா என்றும் வண்டு, நாரை போன்றின்னவற்றைத் தூது விடுக்கும் மரபு காணப்படுகிறது.

"இன்பமும், துன்பமும் ஆகிய இரண்டு நிலைக் களன்களிலும், காமம் கருதிய திறம் இனிது விளங்க, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற மெய்ப்பாடுகள் விளங்கக் கூறப்படும் மொழிகளும் உள. அஃறிணையில் ஒன்றினை விளித்தும், அன்றிப் பலவற்றை விளித்தும், உயர்திணையைச் சார்ந்த, ஆண், பெண், பலர் என்னும் மூன்று பொருளும் உடையனவாகப் பேசுவதும் உண்டு. கூறுகின்ற தலைவியோ, அன்றித் தலைவனோ தமக்குப் பொருந்திய உறுப்பெல்லாம் அதுவுடையது

போலவும், உணர்வுடையதுபோலவும், உரைக்கு மறுமாற்றம் தருவது போலவும், தன்நெஞ்சொடு புணர்த்துப்பேசுவதும் உண்டு. வார்த்தை சொல்லா முறையினவாகிய புள்ளும், மாவும் முதலியவற்றோடே அவை வார்த்தையுடையனவாகப் பொருந்தி நின்று, அவை செய்யவியலாத தொழில்களை அவற்றின் மேலேற்றிக்கூறுவதும் உண்டு. அச்சொல்லா மரபின உற்றதுன்பங்களைத் தம் துன்பம் நினைந்து வருந்தினவாகச் சார்த்தி மொழிவதும் உண்டு. இதனை,

"நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல்
மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபினவற்றொடு கெழீஇச்
செய்யா மரபில் தொழிற் படுத்தடக் கியும்
அவரவர் உறுபிணி தம்போற் சேர்த்தியும்
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரியவாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி"[66]

என்பர் தொல்காப்பியர்.

சங்ககாலத்தில் இத்தூதுவிடல் மரபு "காமம் மிக்க கழிபடர்கிளவி" எனக் குறிக்கப்பெறுகிறது. இதற்கு "பகற்குறியானும், இரவுக் குறியானும் தலைமகன் ஒழுகாநின்ற நிலைமைக்கண், ஒருநாள் ஒருகாற்கண்டு தரிக்குந் தன்மைத் தன்றாம் வேட்கை, என்னை, காணும் பொழுதின், காணாப் பொழுது பெரிதாகலால், அவ்வகை வேட்கையாய் நின்று புன்னைக்கானும், அன்னத்திற்கானும், கடலிற்கானும், கழிக்கானும்

அவ்வகை பிறவற்றிற் கானும் தன் கண்பொறை தணிப்பனவாகச் சிந்தித்துச் சொல்வது"[67] என விளக்கம் தருவர் இறையனார் களவியல் உரைகாரர்.

காமம்மிக்க கழிபடர்கிளவியால் விளையும் பயனை இளம்பூரணர் 'வாராமரபின' என்ற நூற்பா உரையில் "விலங்கும், மானும், புள்ளும் உள்ள நோய் உற்றார்க்கு, மனக்குறைக்கு மறுதலை மாற்றம் கூறுவனபோலும் குறிப்பினவாகக் குறிப்பிடுதல் இது சொல்லப்பட்டது"[68] எனப் பகர்வர்.

இறையனார் களவியல், காமம் மிக்க கழிபடர் கிளவியால் விளையும் பயனை, "மூடிவேவா நின்றதோர் கலத்தை மூய்திறந்தவிடத்து, அகத்து நின்ற வெப்பம் குறைபடும். அதுபோல இவட்கும் அயாவுயிர்ப்பாம்; அச்சொற்கள் புலப்படுத்தலான் என்பது"[69] எனக் குறிப்பிடும்.

காமமிக்க கழிபடர்கிளவியில் தூது விடுக்கும் பொருள்களாக,

"இயம்புகின்ற காலத்து எகினம் மயில் கிள்ளை
பயன்பெறுமேகம் பூவைபாங்கி - நயந்த குயில்
பேதை நெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்துமே
தூதுரைத்து வாங்கும் தொடை"[70]

என்பனவற்றைப் பழம்பாடல் ஒன்று பட்டியலிடுகின்றது. திருமுறைத் தலைவி மேற்கண்ட தூதுப்பொருள்களுடன், குருகு, நாரை, கோழி, சேவல், அன்னம், புறா, பறவை போன்றவற்றையும் தூதுப்பொருள்களாய்த் தெரிவு செய்து தூது விடுகின்றாள்.

திருமுறைகளில் தூது

திருமுறைகளில் தூதுவிடல் என்னும் அகத்திணை மரபு விரவிக்காணப்படுகின்றது. முதல் திருமுறையில் 60வது பதிகமாகிய திருத்தோணிப்புரப் பதிகமும் மூன்றாம் திருமுறையில் 63வது பதிகமாகிய திருச்செங்காட்டங்குடிப் பதிகமும் நான்காம் திருமுறையில் 12வது பதிகமாகிய திருப்பழனப் பதிகமும் ஐந்தாம் திருமுறையில் 88வது

பதிகமாகிய திருமருகல் பதிகத்தின் நான்காவது பாடலும் ஏழாம் திருமுறையில் 37வது பதிகமாகிய திருவாரூர்ப்பதிகமும் எட்டாம் திருமுறையில் திருக்கோத்தும்பி, குயில்பத்து என்பனவும், ஒன்பதாம் திருமுறையில் பத்தாவது பதிகமாகிய திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலப் பதிகத்தின் 3வது பாடலும் தூதுவிடல் மரபில் அமைந்துள்ளன. இப்பதிகங்களுள் தூதுப்பொருள்களாக, வண்டு, தும்பி, குருகு, கோழி, நாரை, குயில், புறா, பூவை, அன்னம், கிளி, தென்றல் ஆகியன காணப்படுகின்றன.

வண்டுவிடு தூது

தன் உள்ளம் கவர்ந்து, எழில் கவர்ந்து சென்ற தலைவனிடத்துத் தூதாய் அனுப்ப ஞானசம்பந்தத்தலைவி முதலில் வண்டினையே தேர்ந்தெடுக்கின்றாள். ஏழாம் திருமுறைத் தலைவி, எட்டாம் திருமுறைத் தலைவி, ஒன்பதாம் திருமுறையில் கோட்டூர் மணியம்பலத்தலைவி போன்றோரும் வண்டினைத் தூதுப் பொருளாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஞானசம்பந்தரின் தலைவி வண்டினைத் தூதுப்பொருளாகத் தேர்ந்தெடுக்கும் பொழுது, தூதாய் அனுப்பும் பொருளின் சிறப்பினைக் கூறுதல் என்ற முறையில் வண்டினைச் சிறப்பிக்கின்றாள். தோணிபுரத்தில் சேற்றுவளம் நிறைந்தமையால் அவற்றுள் செந்தாமரை மலர்கள் மலர்ந்து காணப்படுகின்றன. அம்மலர்களின்கண் அமைந்த மதுவினைத் தன் பெடையோடு உண்டு திளைத்த வண்டு, இன்புற்றுத் திரிகின்றது. இத்தகைய வண்டினை ‘இசைபடும் அளியரசே’ எனத் தலைவி விளிக்கின்றாள். இவ்வண்டானது தன் பெடையுடன் திரிவதால் பெண்ணின் பிரிவாற்றாமை அதற்குப் புரிந்திருக்கும் என்றே அதனைத் தேர்ந்தெடுக்கின்றாள்.

இரண்டாம் நிலையில் தூதுப்பொருள் யாரிடம் தூது செல்லவேண்டுமோ, அவரின் அடையாளம் செப்பல் மரபாகும். அந்நிலையில் தலைவனின் அடையாளங்களையும் சுட்டுகின்றாள். தலைவன்

தன் சடைமுடியில் ஒளிவிளங்கும் பிறையினைச் சூடுபவன்; கழுத்தில் எலும்பினால் ஆன மாலையினை அணிபவன்; அலைகள் எழுப்பும் ஓசையினையே இசையாகக் கொண்டவன்; அவனிடம் சென்று என் துயரினைக் கூறுவாயாக என்கிறாள். இத்தகைய தலைவியை,

"வண்டரங்கப் புனற் கமல
மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க விசைபாடு
மளியரசே யொளிமதியத்து
அண்டரங்கப் பூண்மார்பர்
திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை
பரிந்தொருகாற் பகராயே" *(1:60:1)*

என்ற பாடல் அடையாளம் காட்டும்.

ஏழாம் திருமுறைத் தலைவி, தலைவன் பிரிவின் காரணமாக ஏற்பட்ட காமத்தீயானது தன் உடலினையே உண்டுவிட்டதாய்க் கூறுகின்றாள். இதனைத் தூதாய்ச் செல்லும் வண்டிடம் கூறித் தலைவனிடம் கூறுமாறு வேண்டுகின்றாள். இதனை,

"வண்டுகாள் கொண்டல்காள் வார்மணற் குருகுகாள்
அண்ட வாணர்தொழும் அடிகள்ஆ ரூரரைக்
கண்டவா றுங்காமத் தீக்கனன் றெரிந்துமெய்
உண்டவா றும்மிவை உணர்த்தவல் லீர்களே" *(7:37:6)*

என்ற பாடல் உணர்த்திடும்.

இப்பாடலில் தலைவி குறிப்பதுபோல் காமமாகிய தீ, உடலைத் தின்பதன்று. இருப்பினும் அகமரபில் உண்ணாத பொருளையும் உண்டது எனக் கூறுவதும் உண்டு என்பதனை,

"உண்டற்குரிய அல்லாப் பொருளை

உண்டன போலக் கூறலும் மரபே"[71]

எனத் தொல்காப்பிய நூற்பா உணர்த்திடும்.

மணிவாசகரின் எட்டாம் திருமுறைத்தலைவி திருக்கோத்தும்பி எனப்பெறும் உயர் இனத்து வண்டினைத் தூதாய் அனுப்புகின்றாள். எட்டாம் திருமுறையில் அமைந்த 'திருக்கோத்தும்பி' என்னும் பகுதி 20 பாடல்களைக் கொண்டதாகும். இப்பகுதியின் பாடல்கள்தோறும், "சென்றூதாய் கோத்தும்பி" என்பதே முடிவுப்பகுதியாய் அமைந்துள்ளது. பிற தூதுப் பொருள்களிடத்து 'தூது சொல்லிவா' என்று கூறுவது மரபாய் அமைய, தலைவி இவ்விடத்து, 'சென்றூதாய்' எனக் குறிப்பிடுகின்றாள். இதற்கான காரணம் தும்பியானது ஊதும் பொழுது, எழும் நாற்றத்தால் தலைவன், தலைவியிடம் இருந்து வண்டு வருகின்றது என்பதனை அறிவான் என்பதே ஆகும்.

தும்பியைத் தூதாய் அனுப்பும் தலைவி தூதுப் பொருளின் இயல்பினை அறிந்தவளாய் உள்ளாள். தும்பியிடம் செல்லும் வழியிடத்து மலர்கள் காணப்படினும், தேன் எடுக்கும் ஆவல்கொண்டு அதன்மேல் அமராதே என்கின்றாள். பேரின்பமாகிய பெருந்தேனினைச் சொரியும் இறைவனையே சென்றடைந்து, ஆனந்தமாய தேனினை உண்பாய் என்கிறாள். இதனை,

"தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே

நினைத்தோறும் காண்தோறும் பேசுந்தோறும் எப்போதும்

அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்

குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி" (தி.கோ.து.பா:3)

என்பது உணர்த்தும்.

தலைவியானவள் தூது விடுக்கும்பொழுது, தலைவனை உயர்த்தி, அவன்நினைவால் ஏங்கும் தன்னை இகழ்ந்து பேசுதலும் உண்டு. அந்நிலையிலே தலைவனை உயர்த்திப் பேசும் தலைவி, தூது செல்லும் பொருளின் அச்சத்தினையும் போக்குகின்றாள்.

"கள்வன் கடியன் கலதி இவன் என்னாதே

வள்ளல் வரவர வந்தொழிந்தான் என்மனத்தே

உள்ளத்து உறுதுயர் ஒன்றொழியா வண்ணமெல்லாம்

தெள்ளும் கழலுக்கே சென்றூதாய் தோத்தும்பி" (தி.கோ.து.பா.9)

என்கிறாள். இவ்விடத்து கள்ளத்தன்மை உடையவள் எனக் கருதாது என்மாட்டு அருள்புரிந்தவன் தலைவன். எனவே அவன்பால் தூது செல்ல அஞ்சவேண்டா என்று தூதுப் பொருளின் அச்சத்தினைப் போக்குகின்றாள்.

தூதுசெல்லும் வண்டானது, தலைவனை அடையாளம் காணவேண்டும் என்பதற்காகத் தலைவனின் அடையாளங்களையும் சொல்லி அனுப்புகின்றாள்.

தலைவனானவன் வலப்பால் புலித்தோலும் இடப்பால் மெல்லிய ஆடையும், வலப்பால் குண்டலமும் இடப்பால் வட்டித்த வடிவினையுடைய தோடும், வலப்பால் வெண்ணிறத் திருநீறும் இடப்பால் சந்தனமும் வலப்பால் மூவிலைசூலப்படையும் இடப்பால் பச்சை நிறம் கொண்ட கிளியுமாய்த் தோற்றம் தருவான். அத்தகைய தலைவனிடத்துச் சென்றூதாய்க் கோத்தும்பி என்கிறாள் தலைவி. இதனை,

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்

பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்

சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்

கோலமே நோக்கி குளிர்ந் தூதாய் கோத்தும்பி" (தி.கோ.து.பா.18)

என்பது விளக்கும்.

தலைவனிடத்துத் தான் அன்பில்லாமல் இருந்தமையை உலகமே அறியும். அத்தகைய தன்னைத் தேடிவந்து ஆட்கொண்டான் தலைவன். இன்று அவன் வாராது காலம்தாழ்த்துவான் எனின் அது தலைவனுக்கே இழிவாகும். எனவே இதனைத் தலைவனிடம் உணருமாறு சென்றூதாய் என்கிறாள் தலைவி.

"நான்தனக்கு அன்பின்மை நானும் தானும் அறிவோம்
தான் என்னை ஆட்கொண்டது எல்லாரும்தாம் அறிவர்
ஆன கருணையும் அங்குஉற்றே தான் அவனே
கோன் என்னைக் கூடக் குளிர்ந் தூதாய் கோத்தும்பி" (தி.கோ.து.13)

என்பது பாடலாகும்.

திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலத்தலைவி, வண்டினைப் பார்த்து, "திருநுதல் விழியினையும், பவளவாயினையும் உடைய தலைவனின் சடைமேல் உள்ள மலரில் தாது ஊதப்போகும் பொழுது, தன்துயரினைத் தலைவனிடம் உரைக்குமாறு வேண்டுகின்றாள்" (9:10:3).

இவ்வாறு தூதாய் அனுப்பப் பெறும் வண்டானது, தூதுசென்று, தலைவனொடு மீண்டுவந்து முரல்வதும் உண்டு என்பதனை,

"தூதுஏய வண்டின் தொழுதி முரல்வு அவர்
காதல் மூதூர் மதில் கம்பலைத்தன்று"[72]

என்ற பரிபாடல் அடிகள் எடுத்துக்காட்டும்.

குருகுவிடுதூது

திருமுறைத் தலைவியானவள் குருகினையும் தன்னுடைய தூதுப்பொருளாய் விடுக்கின்றாள். கடற்கரையினிடத்தில் தங்கியிருப்பது குருகு. நெய்தல் நிலம் இரங்கற் சிறப்பினை உடையது. இதனை மனதில் கொண்டே, நெய்தல் நிலத்தின்கண் வாழும் குருகு தூதாய்ச்செல்வது சிறப்புடையது என எண்ணுகின்றாள். "எதிர்ப்பட்டவரைக் கொல்லும்

கொடிய சுறாக்கள் வாழும் உப்பங்கழியிடத்து வாழும் வெண்குருகே! நீ என் பிரிவுத்துயரினை அறியாது இருத்தல் என் வினைப் பயனே! என்கிறாள் தலைவி. மேலும் அதனிடத்து தலைவன் இருக்கும் இடத்தின் அடையாளத்தையும் செப்புகின்றாள். எம் தலைவன் ஊரின் கண் அந்தணச் சிறார்கள் எந்நேரமும் வேதம் முழங்கிக்கொண்டிருப்பர். அவ்வொலியினைக் கேட்டுத் தலைவனின் உறைவிடம் அறியலாம் என்கிறாள் தலைவி. இதனை,

“எறிசுறவங் கழிக்கான

லிளங்குருகே யென்பயலை

அறிவுறா தொழிவதுவு

மருவினையேன் பயனன்றே

செறிசிறார் பதமோதுந்

திருத்தோணி புரத்துறையும்

வெறிநிறார் மலர்கண்ணி

வேதியர்க்கு விளம்பாயே” (1:60:2)

என்பது காட்டும்.

ஞானசம்பந்தரின் மூன்றாம் திருமுறைத்தலைவி, தன்னைப் பிறர் அலர் தூற்றும் வண்ணம் தலைவன் இன்னல் செய்தல் சரியன்று. தலைவனின் நாமம் கூறி, பிரிவால் தன் அழகினை இழப்பதும் சரியன்று. குருகே! நீ தலைவனிடம் சென்று என் நிலையினைச் செப்புவாய் என்கிறாள். தலைவியின் இச்செயலினை,

“நறப்பொலிபூங் கழிக்கான னவில்குருகே

யுலகெல்லாம்

அறப்பலிதேர்ந் துழல்வார்க்கென் னலர்கோட

லழகியதே

சிறப்புலவான் சிறுத்தொண்டன் செங்காட்டங்

குடிமேய

பிறப்பிலிபேர் பிதற்றிநின் றிழக்கோவெம்

பெருநலமே” (3:63:9)

என்ற பாடல் எடுத்துக்காட்டும்.

நான்காம் திருமுறைத் தலைவி, தலைவனிடம் தன் காதல் துயரினைக் கூறத் தோழியைத் தூதாய் அனுப்புகின்றாள். தலைவனிடம் தூதாய்ச் சென்ற தோழி, அவன்பால் கொண்ட அன்பின் காரணமாய், அவனிடத்தில் தங்கிவிட்டாள். ஆகையால் தன்துயர் கூற, குருகினைத் தேர்ந்தெடுக்கின்றாள். அக்குருகிடம்

"மனைக்காஞ்சி யிளங்குருகே
மறந்தாயோ, மதமுகத்த
பனைக்கைமா வுரிபோர்த்தான்
பலர்பாடும் பழனத்தான்
நினைக்கின்ற நினைப் பெல்லா
முரையாயோ" (4:12:3)

எனத் தூது உரைக்கின்றாள்.

ஏழாம் திருமுறைத் தலைவி குருகினைத் தூதாய் விடுக்குமுன், அதனிடம், தலைவன் நாட்டின் பெருமையினைப் பேசுகின்றாள். குருகானது தன்னிடத்தில் அன்புடையதாய் இல்லாவிட்டாலும், தலைவன் நாட்டின் வளத்தினைப் பருகுவதால் அந்த நன்றியினை மனத்தில் கொண்டாவது தூது செல்லவேண்டும் என வேண்டுகின்றாள்.

"குருகுகளே! நீங்கள் உறையும் வயலானது கருப்பஞ்சாறு நிறைந்ததாகும். கருப்பஞ்சாறு பாயும் அளவிற்குக் கரும்பு வளர நீர்வளம் காரணம் ஆயிற்று. இத்தகைய வளம் பொருந்திய வயலுக்குச் சொந்தக்காரன் எம் தலைவன். எனவே, நீங்கள் அவனிடம் சென்று அவன் நினைவால் உருகும் என் நிலைமையினைக் கூறுங்கள் என வேண்டுகிறாள். இதனை,

"குருகுபா யக்கொழுங் கரும்புக ணெரிந்தசாறு
அருகுபா யும்வயல் அந்தண்ஆ ரூரரைப்
பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைந்து
உருகுமா றும்மிவை உணர்த்தவல் லீர்களே" (7:37:1)

என்ற பாடல் உணர்த்தும்.

கோழி விடுதூது

முதல் திருமுறையின் தலைவியானவள் மற்ற திருமுறைத் தலைவியர் தேர்ந்தெடுக்காத பொருளினைத் தூதுப் பொருளாய்த் தேர்ந்தெடுக்கின்றாள். தூதுப் பொருள்களாய்த் தூது இலக்கியப் பாடல் உணர்த்தும் பொருள்களை விடுத்து, இத்தலைவி கோழியினைத் தூதுப் பொருளாய்த் தேர்ந்தெடுக்கின்றாள். தான் முன்செய்த தீவினையின் விளைவாகவே தலைவனை அடைய இயலாமல் வருந்துகின்றேன் என்கின்றாள். தன் வருத்தத்திற்குத் தலைவனைக் காரணம் காட்டாது, தன் தீவினையைக் காரணம் காட்டும் தலைவியின் செயல்பாடு தலைவன்பால் அவள் கொண்டிருந்த அன்பினை வெளிக்காட்டுகின்றது. தன் வருத்தத்தினைத் தீர்க்கும் தூதாகக் கோழி சென்று தூதுரைக்க வேண்டும் என்று வேண்டி நிற்கின்றாள். இதனை,

"பண்பழனக் கோட்டத்து
வாட்டமில்லாச் செஞ்சூட்டு
கண்பகத்தின் வாரணமே...
கடுவினையே னுறுபயலை
செண்பகஞ்சேர் பொழில்புடைசூழ்
திருத்தோணி புரத்துறையும்
பண்பனுக்கென் பரிசுரைத்தாற்
பழியாமோ மொழியாயே" (1:60:3)

என்ற பாடலானது எடுத்துக்காட்டும்.

நாரைவிடு தூது

தலைவி கோழியினைத் தூதாய் விடுப்ப, கோழியும் தலைவிக்குத் தூதின் நலனைத் தராது போகின்றது. எனவே நாரையினைத் தேர்ந்தெடுக்கின்றாள். நாரையிடத்து தலைவன்மேல் கொண்ட காதலால் மேனி மெலிந்து, முலைதளர்ந்து, போனேன் என்பதனைத் தலைவனிடம்

அறிவிக்குமாறு வேண்டுகின்றாள். மேலும், தலைவன் இனியும் அருளாது இருப்பானேல், இன்பநுகர்ச்சிக்கு ஏதுவாகிய முலைமெலிந்து பயன்படாது ஒழியும் என்பதனையும் குறிப்பால் உணர்த்துமாறு உரைக்கின்றாள். நாரை தூதாய்ச் செல்லுமாகில் அது உறைதற்கு, நிறைய மணிமாடங்கள் எம் தலைவன் ஊரின்கண் உள்ளன. எனவே தலைவனைக் காணத் தங்கியிருந்தேனும், என் நிலையினைச் சொல்லிவா! என்கிறாள் இத்திருமுறைத் தலைவி. இதனை,

"காண்டகைய செங்காலொண்

கழி நாராய்! காதலாற்

பூண்டகைய முலைமெலிந்து,

பொன்பயந்தா ளென்றுவளர்

சேண்டகைய மணிமாடத்

திருத்தோணி புரத்துறையும்

ஆண்டகையாற் கின்றேசென்

றடியறிய வுணர்த்தாயே" (1:60:4)

என்பது காட்டும்.

மூன்றாம் திருமுறையின் திருசெங்காட்டங்குடிப் பதிகத்தலைவியும், நாரையினைத் தூதாய் விடுகின்றாள். இத்தலைவி நாரையினைத் தூதாய் விடுக்கும் முன், அந்நாரை உறையும் இடங்களையும் சுட்டுகின்றாள். நீர்வளம் மலிந்து நிற்கும் குளத்திடத்தும், சிறுகுழியிடத்தும், வயல், கழி, கடல் போன்ற இடங்களிடத்தும் காணப்படும் நாரைகளிடத்து, தன் துயர் கூறித் தூதுவிடுகின்றாள் தலைவி. இத்தலைவியின் தூதினை,

"குட்டத்தும் குழிக்கரையுங் குளிர்பொய்கைத்

தடத்தகத்தும்,

இட்டத்தா லிரைதேரு மிருஞ் சிறகின்

மடநாராய்!

வட்டவார் சடையார்க்கென் வருத்தஞ்சென்

றுரையாயே” (3:63:3)

என்ற பாடல் அடிகள் சுட்டி நிற்கும்.

தலைவனைப் பிரிந்தமையால் வருத்தம் மேலிட்டவளாய், பசலை பாய நிற்கின்றாள் ஏழாம் திருமுறைத் தலைவி. இத்தலைவி நாரையினிடத்தில், தலைவன், தன்னைப் பிரிந்துறையும் வருத்தம் தாங்காது, தன்மேனி மெலிந்ததையும், வளை கழன்றதையும், முலைகள் பீர்கொண்டதையும் மொழியுங்கள் என வேண்டி நிற்கின்றாள். இத்தலைவியின் வேண்டலை,

“இலைகொள்சோ லைத்தலை இருக்கும் வெண் ணாரைகாள்

அலைகொள்சூ லப்படையடிகள்ஆ ரூரார்க்குக்

கலைகள்சோர் கின்றதுங் கனவளை கழன்றதும்

முலைகள்பீர் கொண்டதும் மொழியவல் லீர்களே” (7:37:5)

என்ற பாடலால் அறியமுடிகின்றது.

குயில்விடு தூது

முதல் திருமுறையில் அமைந்த திருத்தோணிபுரத் தலைவியும், நான்காம் திருமுறைத் திருப்பழனத் தலைவியும், எட்டாம் திருமுறையில் அமைந்த குயில் பத்தின் தலைவியும் குயிலினைத் தூதுப் பொருளாய் விடுக்கின்றனர்.

முதல் திருமுறைத் தலைவியானவள், குயிலைத் தூதாய் விடுக்குமிடத்து, தலைவனிடம் சென்று ‘கூவுவாய்’ என வேண்டுகின்றாள். குயிலானது, மிக இனிமையாகக் கூவும் தன்மையுடையது. எனவே அது அங்கு சென்று கூவினாலே தலைவனின் மனம் மாறும் என்று தலைவி கருதுகின்றாள். எனவே ‘கூவுவாய்’ என வேண்டுகின்றாள். மேலும் இப்பாடலின்கண் ‘என்னிடைக்கே’ எனக் குறிப்பதன் மூலம் தலைவனைப் பிரியவிடாது காப்பாற்றும் பொறுப்பும் உன்னுடையதே என்றும் உணர்த்தி நிற்கின்றாள். இதனை,

"பானாறு மலர்சூதப்
பல்லவங்க ளவைகோதி
ஏனோர்க்கு மினிதாக
மொழியுமெழி லிளங்குயிலே
தேனாரும் பொழில் புடைசூழ்
திருத்தோணி புரத்தமரர்
கோனாரை யென்னிடைக்கே
வரவொருகாற் கூவாயே" (1:60:8)

என்ற பாடலானது எடுத்துக்காட்டும்.

நான்காம் திருமுறை திருப்பழனத் தலைவி தனது தூதுப்பொருள்களுள் முதன்மையானதாகக் குயிலைத் தேர்ந்தெடுக்கின்றாள். தூதுவிடும் பொருளைச் சிறப்பிக்கும் முகத்தான் 'சொன் மாலை பயின்ற குயிலினங்காள்' என்று குறிக்கின்றாள். இரண்டாவது நிலையில் தலைவனின் அடையாளம் குறிக்கும் வகையில், 'தலைவனானவன் பிறையினைச் சூடியிருப்பவன், கொன்றை மாலையினை அணிந்திருப்பவன்.' அவனே என் கன்னி நலத்தினை நுகர்ந்தவன் என்றும் குறிக்கின்றாள். அத்தகைய தலைவனிடத்துத் தூது சென்றுவருமாறு குயிலிடத்து வேண்டி நிற்கின்றாள். இதனை,

"சொன்மாலை பயில்கின்ற
குயிலினங்காள் சொல்லீரே!
பன்மாலை வரிவண்டு
பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள்
முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென்
புதுநலமுண் டிகழ்வானோ" (4:12:1)

என்ற பாடலானது விளக்கிநிற்கும்.

எட்டாம் திருமுறையில் அமைந்த குயில் பத்திலும், தலைவி குயிலைத் தூதாய் விடுக்கின்றாள். குயிலைத் தூதாய் அனுப்பும் காரணம் நோக்கி இப்பகுதி 'குயில்பத்து' எனப் பெயர் பெறலாயிற்று.

குயில் பத்தின் தலைவி, குயிலைத் தூதனுப்பும் முன், தூதுப்பொருளைச் சிறப்பிக்கும் முகத்தான், 'நீல உருவிற்குயில், 'சுந்தரத்து இன்பக்குயில்' 'காருடைப் பொன்திகழ் மேனி கடிபொழில் வாழும் குயில்' என்றெல்லாம் பேசுகின்றாள். மேலும் குயிலானது தலைவனிடத்துத் தூதாய்ச் சென்று வருமாயின், 'தான் அதற்குத் தோழியும் ஆவேன்' என்கின்றாள். இதனை,

"உன்னை உகப்பேன் உன்துணைத் தோழியும் ஆவேன்
பொன்னை அழித்த நன்மேனிப்புகழிற் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந் துறைமேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்புயங்கன் வரக் கூவுவாய்!"

(கு.ப.பா.7)

என்ற பாடல்வழி அறியமுடிகின்றது. இப்பதிகத் தலைவியானவள், குயிலினிடத்துத் தன் தலைவனின் பெருமையினையும் கூறி அனுப்புவதை,

"அந்தணன் ஆகிவந்து இங்கே அழகிய சேவடி காட்டி
எந்தம்ஆம் இவன் என்றிரங்கு என்னையும் ஆட்கொண்டருளும்"

(கு.ப.பா.10)

"முந்தும் நடுவும் முடிவும் ஆகியமூவர் அறியாச்
சிந்தூரச் சேவடியான்" (கு.ப.பா.5)

என்ற அடிகள்வழி அறியமுடிகின்றது.

கிளிவிடுதூது

நான்காம் திருமுறைத் திருத்தோணிபுரத் தலைவியும், ஐந்தாம் திருமுறைத் திருமருகல் பதிகத் தலைவியும், ஏழாம் திருமுறைத் திருவாரூர்ப் பதிகத் தலைவியும், கிளியினைத் தூதாய் விடுக்கின்றனர்.

ஐந்தாம் திருமுறைத் தலைவி, கிளியினைத் தூதாய் அனுப்பும் முன் அதனைப் பேணுகின்றாள். கிளிக்குத் தேவையான பாலினை ஊட்டிச் சீராட்டுகின்றாள். பின் தலைவனிடத்துக் கிளி கூறவேண்டியவற்றைக் கற்பித்துத் தூது அனுப்புகின்றாள். இத்தகைய தலைவியை,

"ஓது பைங்கிளிக் கொண்பா லமுதூட்டிப்

பாது காத்துப்பல பலகற்பித்து

மாது தான்மரு கற்பெரு மானுக்குத்

தூது சொல்ல விடத்தான் தொடங்குமே" (5:88:4)

என்ற பாடலானது காட்டும்.

நான்காம் திருமுறைத் தலைவி, கிளியானது தூதாய்ச் செல்லுமுன், தன்னிடம் தலைவன் நாமம் கூறவேண்டும் என்று வேண்டுகின்றாள். அவ்வாறு கூறுமாயின் தேனும், பாலும் உண்ணத் தருவேன் என்று உரைக்கின்றாள்.

"சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனோடுபால்

முறையாலே யுணத்தருவன்...

பிறையாளன் திருநாமம்

எனக்கொருகாற் பேசாயே" (1:60:10)

என வேண்டுகின்றாள் இத்தலைவி.

ஏழாம் திருமுறைத் தலைவியும் தன்னை மறந்து இருக்கும் தலைவனிடத்தில் கிளியினைத் தூதாய் விடுக்கின்றாள்.

"பறக்கும் கிளிகளே! பாடுகின்ற பூவைகளே! தலைவர் என்னை மறந்து இருக்கின்றார். நானோ அவரை மறக்கவில்லை. அவர் என்னை மறந்தார் என்பதனையும் உணரவில்லை. அவர் பிரிவின் துயரால் வளையும் கழன்றது; உறக்கமும் இல்லை என்பதனை உணர்த்துங்கள் என்கிறாள். இத்தகைய தலைவியை,

"பறக்கும் எம்கிள்ளைகாள் பாடும்எம் பூவைகாள்
அறக்கணென் னத்தகும் அடிகள்ஆ ரூரரை
பிறக்கில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே" (7:37:2)

என்ற பாடல் உணர்த்தும்.

அன்னம் விடுதூது

முதல் திருமுறையின் திருத்தோணிபுரத் தலைவியும், மூன்றாம் திருமுறையின் திருச்செங்காட்டங்குடித் தலைவியும் அன்னத்தினைத் தூதாய் விடுக்கின்றனர்.

திருத்தோணிபுரத் தலைவி, நெற்பயிர்கள் தம் திரையையே சாமரமாய் வீச, தாமரை மலர் மேல் வீற்றிருக்கும் அன்னங்களை அழைக்கின்றாள். அவற்றிடத்து, காலனைத் தன் காலால் உதைத்தவனாகிய தலைவனின் திருவடியைக் கூடுமாறு தூதுசென்று கூறுங்கள் என்கின்றாள். தலைவி இப்பாடலில், 'காலனை உதைத்ததிருவடி' எனக் கூறியதன் நோக்கம் பிரிவுத்துயரானது காலனாய் இருந்து அச்சுறுத்துகிறது என்பதனையும் அவ் அச்சத்தினை நீக்கும்பேறு தலைவனின் திருவடிக்கே உள்ளது என்பதனையும் உணர்த்துவதற்கேயாம். இதனை,

"சேற்றெழுந்த மலர்க்கமலச்
செஞ்சாலிக் கதிர்வீச
வீற்றிருந்த வன்னங்காள்
விண்ணோடு மண்மறைகள்
தோற்றுவித்த திருத்தோணி
புரத்தீசன் றுளங்காத
கூற்றுதைத்த திருவடியே
கூடுமா கூறீரே" (1:60:6)

என்பதனால் அறியமுடிகிறது. மூன்றாம் திருமுறைத் தலைவியும்

அன்னத்தினைத் தூதாய் விடுக்கின்றாள். ‘நீர்த்துறையின்கண் பெடையோடு இணைபிரியாது வாழும் அன்னங்களே! நீங்கள் பிரிவின் துயரினை அறிவீர்கள் என்பதனால், எம் தலைவனிடம், என் பிரிவுத் துயரினை உரையுங்கள் என்கிறாள். இதனை,

“பொன்னம் பூங் கழிக்கானற் புணர்ந்துணையோ
டுடன்வாழும்
அன்னங்கா ளன்றில்கா ளகன்றும்போய்
வருவீர்காள்
கன்னவிறோட் சிறுத் தொண்டன்
கணபதீச் சரமேய
இன்னமுத னிணையடிக்கீ ழெனதல்ல
லுரையீரே” (3:63:2)

என்பது உணர்த்தும்.

பூவைவிடுதூது

நான்காம் திருமுறையின் திருப்பழனப் பதிகத் தலைவி பூவையினைத் தூது விடுக்கின்றாள். இத்தலைவியானவள் பூவையிடத்தில், தலைவனைத் தான் காணாத சிறுபொழுதும், ஓர் ஊழியாய் நின்று உள்ளம் வருத்துகின்றது என்பதைத் தலைவனிடத்தில் உரைப்பாய் என்கிறாள். இதனை,

“கூவைவாய் மணிவரன்றிக்
கொழித்தோடுங் காவிரிபூம்
பாவைவாய் முத்திலங்கப்
பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாய் மலைமகள்கோன்
கொல்லேற்றின் கொடியாடைப்
பூவைகாள் மழலைகாள்
போகாத பொழுதுளதே” (4:12:8)

என்ற பாடலானது காட்டிநிற்கும்.

தென்றல் விடு தூது

நான்காம் திருமுறையின் திருப்பழனப்பதிகத் தலைவி தென்றலைத் தூதாய் விடுக்கின்றாள். தலைவனானவன், தன்னை அவமதித்த தக்கன் போன்றோரிடம் விளையாடல் புரிந்தது சரியே! அவன்பால் அன்புகொண்ட நான் பிரிவுத்துயரால் வாட, என் உயிர்மேல் அவன் விளையாடல் புரிவது சரியோ? என அறிந்துவந்து சொல்! எனத் தென்றலிடம் கூறித் தூது விடுக்கின்றாள். இதனை,

"புதியையா யினியையாம்
பூந்தென்றல் புறங்காடு
பதியாவ திதுவென்று
பலர்பாடும் பழனத்தான்
மதியாதார் வேள்விதனை
மதித்திட்ட மதிகங்கை
விதியாள னென்னுயிர்மேல்
விளையாடல் விடுத்தானோ" (4:12:4)

என்பது சுட்டும்.

புறாவிடு தூது

முதல் திருமுறையின் திருத்தோணிபுரத் தலைவி, வண்டு, நாரை போன்ற பலவற்றை அழைத்துக் கூறியும், அவை திரும்பிப் பாராமல் ஒழிந்தன. இதனைத் தலைவி, "பாராரே யெனை ஒருகால்' எனக் குறிப்பதினின்று அறியமுடிகிறது. இவ்விடத்து அஃறிணை உயிர்களைப் 'பாராரே' என உயர்திணையாய்ப் பேசியதன் நோக்கம் துன்பம் மிகுந்தவழி வரும் பேதைமையேயாகும். புறாவினை அழைக்கும் தலைவி,

"பாராரே யெனையொருகாற்
றொழுகின்றேன் பாங்கமைந்த
காராருஞ் செழுநிறத்துப்
பவளக்காற் கபோதங்காள்

தேராரு நெடுவீதித்

திருத்தோணி புரத்துறையும்

நீராருஞ் சடையாருக்

கென்னிலைமை நிகழ்த்தீரே" (1:60:5)

என்ற வேண்டுகோளினை வைக்கின்றாள்.

சக்கரவாளப் பறவை, சேவல் விடுதூது

ஏழாம் திருமுறையின் திருவாரூர்ப் பதிகத் தலைவி, சக்கரவாளப் பறவைகளையும், சேவல்களையும் தூதாய் விடுக்கின்றாள்.

தலைவனைப் பிரிந்துறையும் தலைவியானவள், தன் துயரினைப் பேசப்பேச அத்துயர் குறையாமல் மிகுகின்றது. அந்நிலைக்கண், இளம்பேடைப் பறவைகள் தம் சேவல்களுடன் இணைந்துவரும் காட்சியைக் காண்கின்றாள். அஃறிணைப் பொருள்களாகிய அவையும்கூட, தன் துணையுடன் வதிய, தான் மட்டும் காரணமின்றித் தலைவனைப் பிரிந்திருப்பதை எண்ணி வருந்துகின்றாள் அவ்வருத்தத்தினைப் பறவைகளிடம் தெரிவிக்கின்றாள். "பேடைகளே! பிரிவினால் நான் வருந்துவதைச் சிறிதும் கருத்தில் கொள்ளாமல், முறையற்ற செயல்களைச் செய்யும் எம் தலைவனிடம் செல்லுங்கள். அவன் என்னை மறந்தமையால், எனக்கு ஏற்பட்ட உடல் மெலிவினையும், தலைவன் மாட்டு எனக்குச் சிறிதும் புலவி ஏற்படாததையும், உணர்த்துங்கள் என்கிறாள் தலைவி. இதனை,

"சக்கரவா கத்திளம் பேடைகாள் சேவல்காள்

அக்கிரமங் கள்செயும் அடிகள்ஆ ரூரார்க்கு

வக்கிரமில் லாமையும் வளைகள்நில் லாமையும்

உக்கிரமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே" (7:37:4)

என்பது சுட்டும்.

மேகவிடுதூது

ஏழாம் திருமுறை திருவாரூர்த்தலைவி, மேகத்தினைத் தூதாய் விடுக்கின்றாள். மேகத்தினை அழைக்கும் தலைவியானவள், அதனிடத்து, 'மேகங்களே! தலைவனானவன் பாலினை உவந்து ஏற்றுக்கொண்டவன். அத்தகைய தலைவனுக்குப் பாலாகிய நற்பொருளைக் கொண்ட, எனது பருத்த கொங்கைகள், பசப்பெய்தி, பொன்போலும் பசலை என் மேனியினது அழகையெல்லாம் கொள்ளைகொண்டமையை என் பொருட்டுத் தெரிவிக்க வல்லீர்களோ! என வேண்டிநிற்கின்றாள். இதனை,

"................. கொண்டல்காள்

ஆனலங் கொண்டவெம் மடிகள்ஆ ரூரர்க்குப்

பானலங் கொண்டவெம் பணைமுலை பயந்துபொன்

ஊனலங் கொண்டதும் உணர்த்தவல் லீர்களே" (7:37:7)

என்பது உணர்த்தும்.

இவ்வாறு திருமுறைகளில் காணப்படும் தலைவி, தன் உணர்வுகளைத் தலைவனிடத்தில் வெளிப்படுத்த தூதினைத் தேர்ந்தெடுத்தமைக்கு, "சமயப் பாடல்களின் குறிக்கோள் ஆன்மாக்கள் இறைவனை அடைந்து இன்புறுவதேயாதலினால், தலைவனைப் பெறவிரும்பும் தலைவியின் உள்ள நிலைகளும், தலைவன்பிரிவால் தவிக்கும் நிலையும், அவனை அடைவதற்கான முயற்சியாகத் தூதுவிடலும், தானே அடையச்சேறலும் முதலிய தலைவியின் உணர்ச்சிமிக்க மனநிலைகள் கிளவிப்பொருள்களாய் அமைகின்றன"[73] எனக் காரணம் கூறுவர் அ.மா.பரிமணம்.

தலைவி நெஞ்சொடு கிளத்தல்

தலைவனைக் காணா இடத்து, தலைவனைக் காணவேண்டும் என்ற அவாவின் காரணமாய் வருத்தம் மேலிட்ட தலைவி, தன் நெஞ்சொடு புலம்பல் என்பது ஐந்திணை மரபின்கண் உண்டு. இதனை,

"நோயும் இன்பமும் இருவகை நிலையில்
காமங் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதி விளங்க ஒட்டிய
உறுப்புடையது போல் உணர்வுடையதுபோல்
மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்தும்"[74]

என்பர் தொல்காப்பியர்.

"ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையில பிறவும் நுதலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குநபோலவும்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்"[75]

என்னும் நூற்பாவும் நெஞ்சொடு கிளத்தலைகுறிக்கும்.

இறையனார் களவியலும் நெஞ்சொடு கிளத்தல் என்பதற்கு, "பகற்குறிக்கண் வந்து ஒழுகாநின்ற தலைமகனைக் காணும் பொழுதிற் காணாப் பொழுது பெரிதாகலான், ஆற்றாளாய், நெஞ்சுமிக்கது. வாய்சோர்ந்து, கடலிற்கானும், கானலிற்கானும், புள்ளிற்கானும், நெஞ்சிற்கானும், வறிதே குழவி அழுதாற்போல ஒரு சொற்சொல்லும்"[76] என உரைவகுக்கும்.

உணர்வுடையதுபோல் தலைவி நெஞ்சொடு கிளத்தல்

திருமுறைத் தலைவியானவள், தன் கண்ணும் கருத்தும் தலைவனே என எண்ணிப் போற்ற, தலைவனோ அதனை அறியா வண்ணம் துன்புறுத்துகின்றான். இதனை நெஞ்சே! அறியாயோ! என உணர்வுடையது போல் கூறிப் புலம்புகின்றாள். இத்தகைய தலைவியை, கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி,

"கண்ணும் கருத்தும் கயிலாயரே எமக்கென்று
எண்ணி இருப்பேன்யான் எப்பொழுதும் - நண்ணும்
பொறியாடு அரவசைத்த பூதப் படையார்
அறியார் கொல்! நெஞ்சே அவர்" (கயிலை.பா.65)

எனச் சுட்டும்.

தென்றலையும், நிலவினையும் வெறுத்துக் கூறல்

தலைவன் பிரிவின்கண் வாடும் பன்னிரண்டாம் திருமுறைத் தலைவியாகிய பரவையார் தென்றலையும், நிலவினையும் வெறுத்துக் கூறுகின்றாள். தம்பிரான் தோழராகிய சுந்தரரைக் கண்டு காதல் கொண்ட பரவையார், பிரிவானது தன்னை வருத்த, வானத்து நிலவொளியும், மண்ணகத்து தென்றல் காற்றும் தன்னை வருத்துவதாய்க் கூறி நிற்கின்றாள். பரவையாரின் இத்துயரினை,

"மலர மளித் துயிலாற்றால் வருந்தென்றல்
மருங் காற்றாள் மங்குல்வானில்
நிலவுமிழுந்தழலாற்றாள் நிறையாற்றும்
பொறையாற்றாள் நீர்மை யோடுங்
கலவமயி லென வெழுந்து கருங் குழலின்
பரமாற்றாக் கையா ளாகி
இலவ விதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்றா
மையின் வறிதே யின்ன சொன்னாள்"

(த.கொ.பு.பா.194)

என்ற பாடல் வெளிக்காட்டும்.

தலைவி புள்ளிடை வைத்து வருந்தல்

கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியின் தலைவி, தன் வருத்தத்தினைப் புள்ளிடை வைத்து வருந்துகின்றாள். நாரையும் தன்னைப்போல், தலைவனைக் காமுற்றதால் தனித்து வருந்துவதாய்க் கூறி நிற்பதனை,

"ஈசன் திறமே நினைந்துருகும் எம்மைப்போல்

மாசில் நிறத்து மடக் குருகே - கூசி

இருத்தியாய், நீயும் இருங்கயிலை மேயாற்கு

அருத்தியாய்க் காமுற்ற யாம்" (கயிலை.பா.63)

என்ற பாடல் விளக்கும்.

தலைவி கடலிடை வைத்து வருந்தல்

பதினோராந் திருமுறைத் தலைவி தன் துயரினைக் கடலிடை வைத்துப் புலம்புகின்றாள். இத்தலைவியானவள் கடலினை நோக்கி "கடலே, தலைவன்பால் பெரிதும் காதல் கொண்ட வருத்தமிகுதியால் புலம்புகின்றனையோ என்கிறாள். இதனை,

"காமுற்றாயா மன்றே காளத்தியான் கழற்கே

யாமுற்ற துற்றாய்; இருங்கடலே - யாமத்து

ஞாலத்து உயிரெல்லாம் கண்துஞ்சும் நள்ளிருள்கூர்

காலத்து துஞ்சாதுன் கண்" (கயிலை.பா.64)

என்பது உணர்த்தும்.

தலைவி பருவம் கண்டு வருந்தல்

தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியும் இடத்து, கார்காலத்து வருவதாய்க் கூறிப் போவான். ஆற்றியிருக்கும் தலைவியை வருத்தம் செய்வதாய்க் கார்காலம் வரும். இவ்வாறு வரும் கார்காலம் பிரிந்துறையும் தலைவியர்க்கு வருத்தம் தரும். தலைவி வருத்தத்தின் மிகுதியால் வருந்துவதனை, "வரைவிடை வைத்த காலத்து வருந்தினும"[77] எனத் தொல்காப்பியர் குறிப்பர். தலைவனைப் பிரிந்துறையும் தலைவியர்க்குக் கார்காலம் கூற்றாய் வரும் என்பதனை,

"கூதிர் உருவிற் கூற்றம்

காதலற் பிரிந்த வெற்குறித்து வருமே"[78]

என்ற குறுந்தொகை விளக்கிக்காட்டும். தலைவியர் வருந்தி இருக்கும்

இத்துறையினை, நம்பியகப்பொருள்

"பருவம் கண்டு பெருமகள் புலம்பலும்"[79]

எனக் குறிப்பிடும்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதித் தலைவி இத்துறையினைச் சேர்ந்தவள் ஆவாள். இவள் "ஞானசம்பந்தரின் தோள்களையே கூடும் விருப்பினள். அவரின் திருவடிகளையே தினமும் நினைப்பவள். தலைவியின் இந்நிலையினை அறிந்திருந்தும் தலைவன் குறித்த காலத்தில் வாராது இருக்கின்றான் என வருந்திப் புலம்புகின்றாள். தலைவியின் இத்துயரினை,

"திண்ணென வார்சென்ற நாட்டிடை யில்லைகொல் தீந்தமிழோர்
கண்ணென வோங்கும் கவுணியர் தீபன்கை போல்பொழிந்து
விண்ணின வாய்முல்லை மெல்லரும்பின மற்றியாம் மெலிய
எண்ணின நாள்வழுவாது இரைத்து ஓடி எழுமுகிலே"

(ஆ.பி.தி.பா.27)

என்ற பாடலானது விளக்குகின்றது.

அலர் அஞ்சும் தலைவி

தலைவி, தலைவனைப் பிரிந்துறையும் காலத்து, தலைவியின் மேனி வேறுபடும். இஃது ஊராரின் அம்பலுக்கும், அலருக்கும் ஏதுவாகும். தொல்காப்பியர் அலர் குறித்து மூன்று நூற்பாக்களால் விளக்குவர்.

"களவும் கற்பும் அலர் வரைவின்றே"[80]

"அலரில் தோன்றும் காமத்திற் சிறப்பே"[81]

"கிழவோன் விளையாட்டு ஆங்கும் அற்றே"[82]

மேற்கண்ட நூற்பாக்களுக்கு உரைவகுக்கும் நச்சினார்க்கினியர். "களவொழுக்கம் வெளிப்பட்டது காரணமாகக் களவுக்காலத்தும், தலைவனுடைய புறத்தொழுக்கம் காரணமாகக் கற்புக்காலத்தும் அலர் எழும். இச்செய்தியைத் தோழியும், தலைவியும் தலைவனுக்கு உரைப்பர்.

களவுக்காலத்து அலரைப் பற்றிக் கூறுதல், பகற்குறி, இரவுக்குறி இவற்றை விலக்குவதற்காகவும், கற்புக் காலத்து அலரைப் பற்றிக் கூறுவது, தலைவன் புறத்தொழுக்கம் நீக்குதற்கும் எனக் கொள்ளப்படும். களவு அலராய வழி, புணர்ச்சி இடையீடு படுமோ என்ற அச்சத்தால் இருவருக்கும் காமம் மிகும். கற்புக்காலத்தில் பரத்தைமையால் அலர் தோன்றிய வழித் தலைவி வருந்துவாளோ என்று தலைவற்குக் காமம் சிறத்தலும், தலைவன் பிரிவினால் தலைவிக்குக் காமம் சிறத்தலும் நிகழும். மேலும் தலைவன் காமக் கிழத்தியரை அல்லாத பரத்தையரோடு ஆடலும், பாடலும் கண்டும், கேட்டும், அவருடன் ஆறு முதலியன ஆடியும் இன்பம் நுகர்ந்தான் என்று கேட்குந்தோறும் தலைவிக்குப் புலத்தலும், ஊடலும் பிறந்து காமம் சிறக்கும்.

இவற்றால் மற்றவர் புறத்தே கூறும் பழியோடு பட்டனவாகிய செய்திகள் தலைவன் தலைவியரிடையே காமத்தை மிகுவித்தற்கும் பயன்படும்"[83] எனக் குறிப்பர். இவ்வாறு தொல்காப்பியராலும், நச்சினார்க்கினியராலும் விதந்துரைக்கப்படும் அலர் என்பதனை, "அலர் என்பது இன்னானோடு இன்னாளிடை இது போலும் பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது"[84] என விளக்குவர் இறையனார் களவியல் உரையாசிரியர்.

இத்தகைய அலரானது களவின்கண் ஏற்பட்டமையால் வருந்தும் தலைவியைத் திருமுறைகாட்டும். கபிலரின் சிவபெருமான் திருவந்தாதித் தலைவி,

"யாமானம் நோக்காது அலர் கொன்றைத் தார்வேண்ட
யாமானம் கொண்டாங்கு அலர் தந்தார்? - யாமாவா
ஆவூரா ஊரும் அழகா அனலாடி
ஆவூரார்க்கு என்னுரைக்கேன் யான்" (சி.தி.பா.13)

என அலர் அஞ்சி உரைக்கின்றாள்.

தோழி தலைவனை இயற்பழித்தவிடத்து தலைவி இயற்படமொழிதல்

தலைவன், தலைவியை வரைந்துகொள்ளாமல் காலம்நீட்டிக்குமிடத்து, தோழி தலைவனின் கொடுமையினைச் சுட்டி இயற்பழிப்பாள். இத்தகு செயல் 'பாங்கி இறைவனைப் பழித்தல்' எனப்பெறும். அவ்விடத்துப் பொறாத தலைவி, தலைவனின் இயல்பினைக் கூறுதல் உண்டு. இதனைத் தொல்காப்பியர் 'செங்கடுமொழி,' 'அன்புதலையடுத்தவன்புறை'[85] எனக் குறிப்பார். இதனை,

"பாங்கி இறைவனைப் பழித்தலும் பூங்கொடி
இறையோன் தன்னை நொந்து இயற்பட மொழிதலும்"[86]

என நம்பியகப்பொருள் குறிக்கும். இலக்கண விளக்கமும் இதனையே குறிப்பிடும்.[87]

இத்தகைய அகமரபினைத் தழுவிப் பொன்வண்ணத்தந்தாதியின் தலைவி இயற்பட மொழிகின்றாள். இத்தலைவி தலைவனின் அருளாமையால் பெரிதும் துயருற்றாள். அதனைக் கண்ட தோழி, 'உன் தலைவனை விரும்பியதையே விரும்பும் கீழ் மக்கள் கூட்டத்தில் சென்று, கண்டு, கழற்றுரை கூறி உன்னிடம் சேர்ப்பேன்' எனக் கூறுகின்றாள். தோழியின் இத்தகைய இயற்பழித்தலைக் கேட்ட தலைவி; தோழியிடம் 'நீ உரைத்த வண்ணம் கீழ்மக்கள் கூட்டத்துள் சேர்பவர் அல்லர் எம் தலைவர் என இயற்பட மொழிகின்றாள். தலைவன் தனக்குத் துன்பமே செய்யினும், அவன் பெருமையிற் குறைவு தோன்றக் கூடாது எனக் கருதும் தலைவியை,

"செறி வளையாய் நீ விரையல் குலநலம் கல்வி மெய்யாம்
இறையவன் தாமரைச் சேவடிப் போதென் றெல் லாருமேத்தும்
நிறையுடை நெஞ்சிது வேண்டிற்று வேண்டிய நீசர்தம்பால்
கறைவளர் கண்டனைக் காணப் பெரிதுங் கலங்கியதே"

(பொ.வ.அ.பா.85)

என்ற பாடலானது எடுத்துக்காட்டுகின்றது.

தலைவி அறத்தொடு நிற்றல்

தலைவன், தலைவி என்னும் இருவரும் இயற்கைப் புணர்ச்சியாகிய முதற்காட்சியில் ஒருவரை ஒருவர் சந்தித்த முறையினைத் தூய அன்பொடு பொருந்திய அறத்தின் வழிபட்ட நற்செயல் என்பதனை அறிவுறுத்தலே களவு வெளிப்படுத்தலின் கருத்தாகும். எனவே "அங்ஙனம் வெளிப்படுத்தும் முறையினை அறத்தொடு நிற்றல் என வழங்குதல் மரபாகும் என்பது 'அறத்தொடு நிற்கும் காலத்தன்றி' எனவரும் சூத்திரத்தின் தொடரால் நன்கு தெரியப்படும்"[88] என்பர் க.வெள்ளைவாரணர்.

களவொழுக்கத்தின்கண் தலைமகளின் பால் தோன்றும் உள்ள நிகழ்ச்சிகளையும், கூற்றுக்களையும் தொகுத்துக் கூறும் களவியல் நூற்பாவில் அமைந்துள்ள,

"மனைபட்டுக் கலங்கிச் சிதைந்த வழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத்து உயிர்த்தலும் உயிர்செல
வேற்று வரைவு வரின் அது மாற்றுதற் கண்ணும்
..
வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்"[89]

என்ற வரிகள் அறத்தொடு நிற்றல் பற்றிய செய்திகளைத் தருகின்றன. இந்நூற்பாவழி, 'தலைவி புறத்துப்போய் விளையாட இயலாதவாறு தான் இற்செறிக்கப்பட்டு கலங்கி உள்ளஞ் சிதைவுற்ற நிலையிலும், ஆய்ந்து நிறைவேற்றுவதற்கு உரிய அரிய களவொழுக்கத்தினைத் தன் தோழிக்கு வெளிப்படுத்தலினும், தனது வருத்தத்தினை வெளிப்படக் கூறவொண்ணா காலத்து நெட்டுயிர்ப்பெறிதலிலும், உயிர் தனது உடம்பினை விட்டு நீங்குவது போலும் துன்பமுண்டாக, அயலார் தம்மை மணம்பேசிவந்த நிலையில் அதனை மாற்றுதற் பொருட்டும், தலைவிக்கு இவ்வுடல்மெலிவு எதனால் ஏற்பட்டது எனச் செவிலி, வேலனைக் கொண்டு வெறியாட்டு

நிகழ்த்தும் இடத்தும் தலைவி அறத்தொடு நிற்பாள்' என்பது பெறப்படுகின்றது.

தலைவி அறத்தொடு நிற்கும் காலம்

தோழி, தலைவியை வினவாத நிலையில், தலைமகள் தானே முற்பட்டு தனது களவினை, தோழிக்குக் கூறும் காலம் இவையெனத் தொகுத்துக் கூறும் களவியலின் பிறிதொரு நூற்பாவில் தொல்காப்பியர் அறத்தொடு நிற்றல் பற்றிய செய்திகளைத் தொகுத்துள்ளார்.

"பன்னூறு வகையினுந் தன்வயின் வரூஉம்
நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலின்
துணைச் சுட்டு கிளவி கிழவியதாகுந்
துணையோர் கரும மாகலான"[90]

என்ற தொல்காப்பிய நூற்பாவினை, "தலைவி அறத்தொடு நிலைக்கு இலக்கணம் கூறியவாறாயிற்று"[91] எனக் குறிப்பர் நச்சினார்க்கினியர்.

திருஞானசம்பந்தர் தேவாரத் தலைவி அறத்தொடு நிற்றல்

திருஞானசம்பந்தர் தேவாரத்தினுள் முதல் திருமுறையின்கண் அமைந்த 73வது பதிகமாகிய திருக்காவனூர்ப் பதிகம் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல் என்னும் துறையினைச் சார்ந்ததாகும்.

இப்பதிகத் தலைவி, தலைவனானவன் பிறைமதியினைச் சூடி, இல்லம் புகுந்து, தன் உள்ளம் கவர்ந்து சென்ற நிலையினைக் கூறி அறத்தொடு நிற்கின்றாள்.

தலைவன், தன் உள்ளம் கவர்ந்து, தன் தெளிவினையும், நாணினையும் கவர்ந்து சென்றான் எனத் தோழியிடம் கூறி அறத்தொடு நிற்கின்றாள். இதனை,

"முளி வெள்ளெலும்பு நீறு நூலு

மூழ்கு மார்பராய்

எளிவந்தார் போ லையமென்றென்

இல்லே புகுந்துள்ளத்

தெளிபு நாணுங் கொண்ட கள்வர்

தேறலார் பூவில்

களிவண்டி யாழ்செய் கானூர்மேய

வொளிவெண் பிறையாரே" (1:73:6)

என்பது சுட்டும்.

தலைவியின் மேனி வேறுபாடுகண்டு தோழியானவள் வினவ, தலைவன் தன் நீர்மை கொண்டு, பசலை தந்து சென்றான் எனக் கூறித் தலைவி அறத்தொடு நிற்றலை,

"தமிழின் நீர்மை பேசித்தாளம்

வீணை பண்ணிநல்ல

முழவமொந்தை மல்குபாடல்

செய்கையிட மோவார்

குமிழின் மேனிதந்து கோல

நீர்மையது கொண்டார்

கமழுஞ் சோலைக் கானூர்மேய

பவள வண்ணரே" (1:73:8)

என்பது சுட்டும். தலைவன் அயனுக்கும் மாலுக்கும் அகப்படாதவன். அத்தகையவன் என் சிந்தையிலும், நாவிலும், சென்னியிலும் திகழ்கின்றான். என் மனத்திற் புகுந்து காலையும், மாலையும் உலவி நோய் செய்கின்றான் எனத் தன் களவு நிலையினைத் தோழிக்கு உணர்த்தி அறத்தொடு நிற்கும் தலைவியை,

"அந்தமாதி யயனுமாலு
மார்க்கு மறிவரியான்
சிந்தையுள்ளு நாவின்மேலுஞ்
சென்னியு மன்னினான்
வந்தென்னுள்ளம் புகுந்து மாலை
காலை யாடுவான்
கந்தமல்கு கானூர் மேய
வெந்தை பெம்மானே" (1:73:9)

என்பது உணர்த்தும்.

'இல்லே புகுந்துள்ளத் தெரிவும் நாணும் கொண்ட கள்வர்'

'குமிழின் மேனி தந்து கோல நீர்மையது கொண்டார்'

'வந்தென்னுள்ளம் புகுந்து மாலை காலை யாடுவான்'

என்ற அடிகளது தலைவி அறத்தொடு நிற்றல் என்பதனை விளக்கி நிற்கின்றன. இவ்வாறு இப்பதிகத்தின் கண் அமையும் பாடல்கள் அனைத்தும் தலைவி அறத்தொடு நிற்றல் என்னும் துறையிலேயே அமைகின்றன.

நொதுமலர் வரைவின்கண் தலைவி அறத்தொடு நிற்றல்

நொதுமலர் என்பது தலைவியைத் திருமணம் செய்ய முயற்சி செய்யும் வேற்றோர் எனும் பொருளது. தொல்காப்பியர் 'நொதுமலர்' என்னும் சொல்லைச் சுட்டாவிடினும் 'பிறன்வரைவு'[92] 'வேற்றுவரைவு'[93] என்னும் சொல்லாட்சிகளைப் பயன்படுத்துகின்றார்.

திருவாரூர் மும்மணிக்கோவைத்தலைவி, நொதுமலர் வரைவு வந்தவழித், தன் கள வொழுக்கத்தினைத் தோழியிடம் கூறி அறத்தொடு நிற்கின்றாள். அவள் தோழியிடத்து தோழியே! கேட்பாயாக! முன்னொரு நாள் திருவாரூரின்கண் நீ அன்னையருடன் இருந்தாய்! நான் மட்டும் ஆயத்தாருடன் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தேன். வலம்புரிச்சங்கினை

அடுப்பாகக் கூட்டி, அதன்மேல் சங்கினையே பானையாக ஏற்றி, முத்துக்களையே அரிசியாக இட்டு, பவளங்களையே தீயாக மூட்டி, சிப்பியையே அகப்பையாகக் கொண்டு, பொய்யாகச் சோறினைச் சமைத்தேன். அவ்வாறு சமைத்த சோறினை வாயில் இடாமலே நான் உண்ணப் போனேன். அப்பொழுது, அணிகலன்களை அணிந்த பருத்த தோளினை உடைய ஒருவன் வந்து, உன் சிற்றில்லத்தில் விருந்து இல்லாத குறையினைப் போக்கும் பெருமையினை எனக்கு அளிப்பீர்களா! என்று என் அடியில் வீழ்ந்து வணங்கினான். அச்சமயம், நறுமணம் கமழக் காய்ச்சப்படும் வெண்ணெயில் நீர்த்துளி ஒன்று விழுமேயானால், அந்நெய் முழுவதும் அதனாலே பொங்குதல் போன்று, நான் என் உடம்பு முழுவதும் அவனாகிவிட்டதுபோல் உணர்ந்தேன் என்கிறாள். இவ்வாறு தலைவி களவின்கண் நிகழ்ந்த நிகழ்வினை வேற்று வரைவின்கண், தோழியிடத்து உரைத்து அறத்தொடு நிற்றலை,

"...

வலம்புரி அடுப்பா மா முத்தரிசி
சலஞ் சலம் நிறைய ஏற்றி நலந்திகழ்
பவளச் செந்தீ மூட்டிப் பொலம்பட
இப்பியந் துடுப்பால் ஒப்பத் துழாவி
அடா அ(து)அட்ட அமுதம் வாய்மடுத்
திடாஅ ஆயமோடு உண்ணும் பொழுதில்
திருந்திழைப் பணைத்தோள் தேமொழி மாதே
விருந்தின் அடியேற் (கு) அருளுதியோ என
முலைமுகம் நோக்கி முறுவலித் திறைஞ் சலின்
நரைகமழ் வெண்ணெய்ச் சிறுநுண்துள்ளி
பொங்கு புனல் உற்றது போல என்
அங்க மெல்லாந் தானா யினனே" (தி.மு.கோ.பா.28:6-28)

என்ற பாடல் அடிகள் விளக்கிநிற்கும்.

திருவலஞ்சுழி மும்மணிக்கோவையில் வரும் தலைவி கூற்றுப் பாடலும் இத்துறையின்கண் அமைந்ததாகும். இத்தலைவி தோழியிடத்து, நான் தலைவனைப் பார்த்து எமது இல்லங்களிலே பொருள்களைப் பிச்சை ஏற்க வந்தீர் எனினும் அருள் உடையராய் அமைந்திருக்கின்றீர். உமது ஊர் யாது? என வினவினேன். அதற்குத் தலைவரோ, எமது ஊர் மறையம் என்று கூறி மறைந்துவிட்டார். அப்பொழுதே என் கையில் இருந்த வளையல்களைக் காணவில்லை. எனவே இதனைப் பெற்றோரிடம் எடுத்துரைத்து வேற்று வரைவினை மறுப்பாயாக! எனக் கூறி அறத்தொடு நிற்கின்றாள். இப்பாடலில் தலைவியானவள் 'மறையம்' என்ற சொல்லினை ஊரின் பெயராயும், மறைதல் என்ற தொழிலின் பெயராயும் பயன்படுத்தியிருப்பது, அவள் தன் அறிவு நுட்பத்திற்குச் சான்றாகும். இதனை,

"பொருள்தக்கீர்! சில்பலிக்கென்றில் புகுந்தீரேனும்
அருள்தக்கீர்! யாதும் ஊர் என்றேன் - மருள்தக்க
மாமறையம் என்றார் வலஞ்சுழி நம்வாழ் வென்றார்
தாம்மறைந்தார் காணேன் கைச்சங்கு" (தி.வ.கோ.பா.8)

என்பது விளக்கும்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் வரும் பாடலொன்று இத்துறையின்கண் அமைந்ததாகும். இப்பாடலில் தலைவியானவள் தோழியிடம், தோழியே! தலைவனானவன் கடற்கரையிடத்து உன்னைப் பிரியேன் என்று சூளுரைத்துப் பின் மறைந்தான். அப்பொழுது, அவன் கூறிய சூளுறவினை அறிந்தவர் யாரும் இல்லை. அவ்விடத்து இருந்த குருகோ, தன் இரையினை விருப்போடு பார்த்திருந்தது. வண்டுகளோ தேனின் மீது படிந்து எழுந்திருக்கமாட்டா. எனவே அவையும் கண்டிருக்க வாய்ப்பில்லை. எனவே தலைவன் சூளுரைத்துப் பொய்த்ததனை யாரே கூறுவாம்? எனத் தன் களவொழுக்கத்தினை தோழியிடம் கூறி அறத்தொடு நிற்கின்றாள். இதனை,

"மேயிரை வைகுஅக் குருகுணராமது உண்டுபுன்னை
மீயிரை வண்டோ தமர்பு கடிய விரிகடல்வாய்ப்
பாயிரை நாகம்கொண் டோன்தொழும் கம்பர்கச் சிப்பவ்வநீர்
தூயிரை கானல்மற் றாரறிவார் நந்துறைவர் பொய்யே"

(தி.ஏ.தி.பா.96)

என்ற பாடலானது விளக்கி நிற்கும். இப்பாடலில் 'கானல்' எனத் தலைவி குறித்தமையால், தலைவன் கூடிப் பிரிந்தது கடற்கரையின் கண்ணே என்பதும், 'மற்று ஆர் அறிவார்' என்ற வழி கூடியது களவினால் என்பதும் பெறப்படுகின்றது. இவ்வாறு திருமுறையின்கண் அமைந்துள்ள தலைவி அறத்தொடு நிற்றல் தொடர்பான பாடல்கள் தோழியிடத்து, தனது களவொழுக்க நிகழ்வுகளைக் கூறி அறத்தொடு நிற்பதாகவே அமைந்துள்ளன.

கற்பொழுக்க நிகழ்வுகள்

தமிழர்தம் அகவாழ்வுமுறை களவு வழிபட்ட கற்பேயாம். தொல்காப்பியர்,

"கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வது"[94]

எனக் குறிப்பார். இந்நூற்பாவிற்கு, நச்சினார்க்கினியர், "கொண்டானிற் சிறந்த தெய்வமின்றெனவும், அவனை இவ்வாறு வழிபடுக எனவும், இரு முதுகுரவர் கற்பித்தலாலும், அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், கடவுள் - இவர்களிடத்து ஒழுகும் ஒழுக்கத்தினைத் தலைவன் கற்பித்தலாலும், வேதத்தினும், சடங்கினும், விதித்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக் கொண்டு, துறவறத்துச் செல்லும் துணையும், இல்லற நிகழ்த்துதலாலும், கொண்ட தலைவனை இன்னவாறு பாதுகாப்பாயென்றும், அவற்கு நீ இன்னவாறு குற்றேவல் செய்தொழுகென்றும், அங்கியங்கடவுள் சான்றாக மந்திர வகையால் கற்பிக்கப்படுதலாலும் கற்பு எனப்படுவதாயிற்று"[95] என்று

உரைவகுப்பர். இங்ஙனம் அடையும் கற்பு வாழ்க்கையின் ஒழுகலாறுகளைத் தொல்காப்பியர் விரித்துரைப்பர். அவை திருமுறைகளில் காணப்படுகின்றன.

தலைவி பருவம் கண்டு அழிந்து கூறல்

கற்புக் காலத்துத் தலைவன் வேந்தனுக்குத் துணையாய் உற்றுழிப்பிரிவான். அவ்வாறு பிரியும் இடத்து வினைமுடித்துக் கார்காலத்து வருவதாய் உரைத்துப் பிரிவான். தலைவன் குறித்த கார் காலம் வந்தும் தலைவனின் தேர் வராமை கண்டு தலைவி புலம்புவாள். உண்மையில் தலைவி தவிக்கவில்லை. அவளைச் சுற்றியிருக்கும் கருப்பொருள்கள் அவளைத் தவிக்க வைக்கின்றன. பொதுவாகப் பருவங்கள் ஆறு எனப் பிரிக்கப்பட்டாலும், தலைவி மற்றைய காலங்களினும், கார்காலத்து மட்டுமே பெரிதும் வருந்துவதற்கான காரணத்தை, "காலம் என்னும் பெருந்தோழி கடமை என்னும் விசிறி கொண்டுவீச, தனிமைத் துயரைத் தலைவி ஒருவாறு ஆற்றியிருத்தலும் உண்டு. எனினும் தலைவன் குறித்த பருவம், பருவக்கூத்தாடியும், அசைந்தும் வனப்போடு வருங்காலை, அவளுக்கு உறக்கம் என்பது வருமா? காம உணர்வு என்னும் அரும்பு முளைகள் தளிர்த்து, அவளைக் கொல்லுமன்றோ?[96] என விளக்குவார் வ.சுப.மாணிக்கனார். தலைவி இவ்வாறு வருந்தல் பருவம்கண்டு அழிந்துகூறல் எனப்பெறும். தொல்காப்பியத்தின் 'அவனறிவு ஆற்ற அறியுமாகலின்' என்ற நூற்பாவிற்கு உரைவகுக்கும் நச்சினார்க்கினியர் இத்துறையினை 'பல்வேறுநிலையாவன'[97] என்பதனுள் அடக்கிக்காட்டுவர்.

திருஏகம்ப முடையார் திருவந்தாதியின் தலைவி இத்துறையினைச் சார்ந்தவள் என்பதற்கு,

"போர்முக மாப்பகை வெல்லச்சென் றார்நினை யார்புணரி
நீர்முகமாக இருண்டு சுரந்தது நேரிழைநாம்
ஆர்முகமாக வினைக்கடல் நீந்தும் அயர்வுயிர்ப்பே"

(தி.ஏ.தி.பா.89:3-4)

என்ற பாடல் சான்றாம்.

திருவாரூர் மும்மணிக் கோவைப் பாடலின்கண்வரும் தலைவியும் பருவம் கண்டு அழிபவளாய்க் காணப்படுகின்றாள். "கார்கால வானமானது தனது ஒளிபொருந்திய வாளாகிய மின்னலை வீசியது. இடி என்னும் போர் முரசினை ஒலிக்கச் செய்து, வானவில் என்னும் வில்லினை வளைத்து, மழைத் தாரைகளாகிய அம்புகளைத் தலைவிமேல் எய்து போர்செய்கின்றது. வானம் தலைவியை வருத்தியது போதாது என்று, நிலமும் முல்லை, வெண்காந்தள், செங்காந்தள், காயா போன்ற மலர்களை மலரச் செய்து, தலைவியை மேலும் வருத்துகின்றது. தலைவனோ, இதனைச் சிறிதும் அறியாதவனாய், பகைவரது காவல்மிக்க அரணின்கண், வெளிவருவோரையும், உட்புகுவோரையும் அவற்றைச் செய்யாதவாறு, தடுத்து முற்றுகையிட்டு இரவும், பகலும் காவல் புரிபவனாய் உள்ளான். கார்காலத்து வருவதாய்த் தலைவியிடத்துக் கூறிச்சென்றதையும் மறந்தவனானான். அதனை அறிந்த தலைவியோ, தான் ஊரின்கண் மகிழ்ந்து வாழும் விதிப்பயன் இன்றி இறந்துபடும் நிலைக்குத் தள்ளப்பட்டேன் என்று அழுது புலம்புகின்றாள். இவ்வாறு தலைவி இயற்கையுடன் செய்யும் அகப்போரினையும், தலைவன் பகைவருடன் செய்யும் புறப்போரினையும்,

"உறைகழி ஒள்வாள் மின்னி உருமெனும்
அறைகுரல் முருசம் ஆர்ப்பக் கைபோய்
வெஞ்சிலை கோலி விரிதுளி என்னும்
மின்சரந் துரந்தது வானே, நிலனே
கடிய வாகிய களவநன் மலரொடு
கொடிய வாகிய தவளமும் அந்தண்
குலைமேம் பட்ட கோடலும் கோபமோடு
அலைமேம் பட்ட காந்தளும் இவற்றொடு
காயா வெந்துயர் தருமே. அவரே
பொங்கிரும் புரிசை போக்கற வளைஇக்
கங்குலும் பகலும் காவல்மேவி
மாசறு வேந்தன் பாசறையோரே"

யானே இன்னே

...

துயருழந் தழியக் கண்துயிலாவே" (தி.மு.கோ.பா.4)

என்னும் பாடல் விளக்கும்.

தலைவனின் பரத்தமை கண்டு தலைவி ஊடல்

கற்புக்காலத்து, தலைவியை விடுத்துத் தலைவன் பிரியும் பிரிவுகளுள் குறிப்பிடத்தக்கது பரத்தையிற்பிரிவாகும். கற்புக்காலத்து தலைவனின் பரத்தமை கண்டு, தலைவி உள்ளத்து ஊடல்கொள்ளல் உண்டு என்பதனைத் தொல்காப்பியர்,

"கற்பு வழிப்பட்டவள் பரத்தையை ஏத்தினும்

உள்ளத்து ஊடல் உண்டென மொழிப"[98]

என விளக்குவர். இப்பிரிவானது கற்புக் காலத்து மட்டுமே உண்டு என்பதனை,

"புலத்தலிற் சிறந்தது கற்பே யதுதான்

இரத்தலு மீதலு மிவை யுள்ளீடாப்

பரத்தையுள்ளதுவே"[99]

என்ற பரிபாடல் அடிகள் விளக்கும். கற்புக்காலத்து பரத்தையிற் பிரிவினை, "ஆடவர்க்குப் பிரிவொன்று உளதாதன், மேலும் அதுதான் பரத்தையர் மாட்டாதலும் அதனையறிந்து மகளிர் ஊடி நிற்றலும் அவ்வூடலைத் தூதுசெய்தவர் தாமே, தம் தவறின்மைகூறி நீக்கலும், பின்னும் அவ்விருவரும் ஒத்தவன்பினராய்க்கூடலுமென்றே, முன்வரைந் தெய்தினார் பெற்றபயன்"[100] எனப் பரிமேழகர் விளக்கியுரைப்பர்.

திருமுறைகள் இத்தகைய ஊடல் கொண்ட தலைவியைக் காட்டுகின்றன. திருநீலகண்ட நாயனார் இன்பத்துறையில் எளியராய், பரத்தையர் ஒழுக்கம் பூண்டமையை அறிந்த அவர்தம் மனைவியார் ஊடல் கொள்கின்றார். இதனை,

"ஆனதங் கேள்வர் அங்கோர்

பரத்தைபா லணைந்து நண்ண

மானமுன் பொறாது வந்த

ஊடலால் மனையின் வாழ்க்கை

ஏனைய வெல்லாஞ் செய்தே

உடனுறைவு இசையாரானார்

தேனார் கமலப் போதில்

திருவினு முருவின் மிக்கார்" (தி.நீ.பு.பா.5)

என்ற பாடலானது காட்டும்.

ஊடல் கொள்ளும் தலைவியின் ஊடல் தீர்க்கும் பொருட்டுத் தலைவன் பணிந்த மொழியால் கூறலும் உண்டு என்பதனை,

"மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்

நினையுங் காலைப் புலவியுள் உரிய"[101]

என்ற தொல்காப்பிய நூற்பா உணர்த்தும். திருநீலகண்டர் தம் மனைவியாரின் ஊடல் தீர்க்கப்பணிந்து நிற்றலை,

"மூண்டவப் புலவி தீர்க்க

அன்பனார் முன்பு சென்று

பூண்டயங் கிளமென் சாயல்

பொற்கொடியனையார் தம்மை

வேண்டுவ இரந்து கூறி

மெய்யுற அணையும் போதில்

தீண்டு வீராயின் எம்மைத்

திருநீல கண்ட மென்றார்" (தி.நீ.பு.பா.6)

என்ற பெரியபுராணப் பாடலானது காட்டி நிற்கும்.

தலைவி பாணனுக்கு வாயில் மறுத்தல்

கற்புக்காலத்து, தலைவியின் ஊடல் தீர்க்கும் வாயிலாய்ப் பாணன் வருவான். இவ்வாறு வரும் பாணனுக்குத் தலைவி வாயில் மறுப்பாள். இத்தகைய செயலினை,

"யாரை நீ எம்மில் புகுதருவாய்"[102]

என்ற சங்க இலக்கியப் பாடல் அடி சுட்டும். இவ்வாறு தலைவி பாணனுக்கு வாயில் மறுத்தல் என்பதனை, நச்சினார்க்கினியர் "வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇ"[103] *என்பதனுள் வைத்து விளக்குவர்.*

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் பாணன் ஒருவன் தலைவன் தவறிலன் எனக் கூறி வாயிலாய் வருகின்றான். அதனைக் கண்ட தலைவி, தான் சிவபெருமானைத் தலைவனாய்க் கொண்டவர்களின் மகள். எனவே தனக்கு எதுவும் இறப்பு ஏற்படாது. எனவே தலைவன் தவறுடையவன் என்பது தெரியவருமேல், தான் இறந்துவிடுவேன் எனக் கருதித் தவறிலன் எனப் பொய்கூறவேண்டாம் எனப் பாணனுக்கு வாயில் மறுக்கின்றாள். இதற்கு,

"கைதவத்தால் என்னிடைக்கு
நீ வந்த தறியேனோ; கலதிப்பாணா!
மெய்தவத்தா ருயி ரனைய
மிகுசைவ சிகாமணியை வேணுக்கோனைச்
செய்தவத்தால் விதி வாய்த்த
செழுமுலையா ரவனுடைய செம்பொன் திண்டோன்
எய்தவத்தால் விளிவெனக் கென்!
யாதுக்கு நீ பலபொய் இசைக்கின்றாயே" (ஆ.பி.தி.பா.31)

என்ற பாடல் சான்றாகும். ஆளுடையபிள்ளையார் திருவந்தாதித் தலைவி, 'நம்மேல் விருப்பம் இல்லாமையால் இளையராகிய பரத்தையரைத் தேடி, அவர் சேரியில் சென்று இரவெல்லாம் தங்கி நம் இல்லம் விடியலில்

வரவிருக்கின்றான் தலைவன். அவனை நம் இல்லத்தின்கண் விடுத்தற்குப் பாணன் உள்ளதும், இல்லதுமாய் ஏதேதோ சொல்லிக் கதைக்கின்றான். அவனுடைய வார்த்தைகளை நம்புவோமல்லோம்' என்று கூறி வாயில் மறுக்கின்றாள்.

பாணன் நம்மிடையே கூறியதுபோலே, பரத்தையர் சேரியினும் சென்று பொய்யும், புனைவும் கூறி நம் தலைவனை அவர்கள் இல்லினுள் புகவிடுவதே இப்பாணனின் தொழில். அத்தொழிலை நம்முன் செய்தற்கும் வந்துள்ளான். ஆயினும் அது பலிக்காது என்பதனை, "பாணன் நம்முழை புணர்க்கின்றது, உள்ளவும், இல்லவும் 'பொத்தகம் போலும்' என்ற அடிகளால் விளக்குகின்றாள் தலைவி. திருமுறைத் தலைவியின் இத்தகைய அறிவு நலத்தினை,

"வித்தகம் பேசிநம் வேணுத் தலைவனை வாள்நிகர்த்து
முத்தகங் காட்டும் முறுவல் நல்லார்தம் மனம்அணைய
உய்த்தகம் போந்திருந் துள்ளவும் இல்லா, தனவுமுறு
பொத்தகம் போலும்! முதுகலைப் பாணன் புணர்க்கின்றதே"

(ஆ.பி.தி.பா.7)

என்பது காட்டும்.

திருவாரூர் மும்மணிக்கோவையின் தலைவி, பாணனிடத்து, பாணனே! தலைவன், தான் சிவபெருமானைத் தலைமேல் கொண்டவன் எனவே பொய்கூறேன்! என்மேல் தவறில்லை என்று உன்னிடம் கூறிய பொய்களை எல்லாம் என்முன் கூறாதே! என்னிடம் அவை ஏலாது! எனவே இத்தகைய பொய்கள் யார்க்குப் பால்போல் இனிக்கின்றதோ அப்பரத்தையிடம் போய்க்கூறு எனவாயில் மறுக்கின்றாள். தலைவியின் இத்தகு செயலை,

"பாலாய சொல்லியார்க்கே சொல்லு, போய்ப்; பாண்மகனே!
ஏலாஇங்கு என்னுக்கு இடுகின்றாய் - மேலாய
தேந்தண் கமழ் கொன்றைச் செஞ்சடையான் தாள்சூடும்
பூந்தண் புனலூரான் பொய்" (தி.மு.கோ.பா.20)

என்ற பாடலானது உணர்த்தும்.

எங்கையர் காணின் நன்றென மறுத்தல்

பரத்தமை மேற்கொண்ட தலைமகன், தலைவியின் ஊடல் தீர்க்கும் முகத்தான் அவளது அடியின்கண் வீழ்வான். அவனது பொய்யான பணிவினைக் கண்ட தலைவியோ, இச்செயலினை எம் தங்கையராகிய பரத்தையர் காணின் நன்று எனக்கூறி வாயில் மறுப்பாள். இதனைத் தொல்காப்பியர் கற்பியலில் தலைவி கூற்றினைச் சுட்டுமிடத்து,

"கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதலெங்கையர் காணின் நன்றென
மாதர் சான்ற வகையின் கண்ணும்"[104]

எனக் குறிப்பர்.

திருவாரூர் மும்மணிக்கோவையின் தலைவன், தலைவியின் ஊடல் தீர்க்கும் வழியாய் அவளின் அடிமேல் வீழ்கின்றான். அதனைக் கண்ட தலைவியோ, 'தலைவனே! உன்கையால் எம் காலைத் தொட்டு வணங்குதல் வேண்டா! புதல்வனை அணைப்பது போல் வந்து எம்மைச் சாரவும் வேண்டா! நீ பொய்யாக வணங்கினாலும், அருள் செய்கின்ற, எம் தங்கையராகிய, உம் காதலியர் இதனைக் கண்டால் உனக்கு இடராய் முடியும். காதல் இன்றியும் உடையவன் போல் நடிக்க, நீ நன்கு கற்றிருக்கின்றாய். இச்செயல் உமக்கு அழகியதாய் உள்ளது. ஆனால் அச்செயல் என்னிடம் பலிக்காது எனக் கூறி வாயில் மறுக்கின்றாள். தலைவியின் இத்தகு செயலினை,

"பொய்யால் தொழவும் அருளும் இறைக் கண்டம் போல் இருண்ட
மையார் தடங்கண் மடந்தையர் கேட்கிற்பொல் லாதுவந்துன்
கையால் அடிதொடல், செல்வனில் புல்லல் கலையளையல்
ஐயா! இவை நன்கு கற்றால் பெரிதும் அழகியவே"

(தி.மு.கோ.பா.21)

என்ற பாடலானது விளக்கிடும்.

தலைவி பாங்கனுக்கு வாயில் மறுத்தல்

கற்பில் தலைவியின் ஊடல் தீர்க்கும் வாயிலாய்ப் பாங்கன் செல்வதுண்டு. தலைவி அவ்வாயிலை மறுத்துரைத்தலும் உண்டு. இந்நெறியினைத் தொல்காப்பியர் காட்டும், 'அவனறிவு ஆற்ற அறியுமாகலின்' என்ற நூற்பாவில் "வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇ"[105] என்பதினுள் வைத்து இளம்பூரணர் காட்டுவர்.

பெரியபுராணத்தில் பரவையார் சுந்தரரின்பால் ஊடல் கொள்வார். இவ்ஊடலினை,

"மென்பூஞ் சயனத்திடைத் துயிலும் மேவார் விழித்தும் இனிதமரார்
பொன்பூந் தவிசின் மிசையின் இரார்நில்லார் சொல்லார் புறம்
பொழியார்
மன்பூவாளி மழைகழியார் மறையார் நினையார் வாய் விள்ளார்
அன்பூடு ருக்கும் புலவியோ! பிரிவோ! இரண்டின் இடைப்பட்டார்!"

(ஏ.க.பு.பா.315)

எனக் குறிப்பார் சேக்கிழார். இவ் ஊடலினைத் தீர்க்க இறைவனே, பாங்கனாய்ச் சென்றார் என்பதனை,

"துன்பம் ஒழிநீ யாமுனக்கோர் தூதனாகி இப்பொழுதே
பொன் மணிப்பன் பரவைபால் போகின்றோம் என்றருள் செய்தார்"

(ஏ.க.பு.பா.324)

என்ற அடிகள் விளக்கிடும்.

இறைவனே பாங்கனாய் வந்தவிடத்து, பரவையார், சுந்தரர்க்காக, நீர் இவ்வாறு தூதாய் வருதல் பெருமையுடையது அன்று என்று கூறி மறுக்கின்றார் என்பதற்கு,

“அருமறை முனிவர் ஆன ஐயரைத் தையலார்தாம்
கருமம் ஈதுஆகக் நீர்இக் கடைத்தலை வருகை மற்றுஉம்
பெருமைக்குத் தகுவது அன்றால் ஒற்றிஊர் உறுதி பெற்றார்
வருதற்கு இசையேன் நீரும் போம் என மறுத்துச் சொன்னார்”

(ஏ.க.பு.பா.345)

என்ற பெரியபுராணப் பாடலானது சான்றாகும்.

திருமுறைகளில் பெருந்திணை

அகத்திணை ஏழனுள் ஒன்றாய்ப் பெருந்திணை குறிக்கப்பெறுகின்றது. பெருந்திணை பற்றித் தொல்காப்பியர்,

“ஏறிய மடற்றிறம் இளமைதீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக்குறிப்பே”[106]

எனக் குறிப்பர்.

“தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்
எண்ணுங் காலை கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப”[107]

என்ற தொல்காப்பிய விதியின்படி, தலைவியின் காதல் உணர்வானது அளவின் மிக்கிருந்தாலும், தலைவன்முன் வெளிப்படுத்துவது என்பது ஐந்திணை ஒழுகலாறுகளில் இல்லை. ஆயினும் பக்தி இலக்கியப் பனுவல்களில் தலைவன்பால் காதல்கொண்டு, பலர் அறிய அழகினைப் பாராட்டி, அவனை அடைய வேட்கை மீதூர்ந்து நிற்கும் தலைவியர்

காணப்படுகின்றனர். இத்தகைய தலைவியரின் கூற்றுக்களாய் அமையும் பதிகங்கள் பெருந்திணைப் பதிகங்களாகின்றன.

திருமுறைகளில் பெருந்திணைப் பதிகங்கள்

நாவுக்கரசரின் ஆறாம் திருமுறையில் காணப்படும் ஒன்பதாவது பதிகமாகிய திருஆமாத்தூர் பதிகமும், முப்பத்தைந்தாவது பதிகமாகிய திருவெண்காட்டுப் பதிகத்தின் முதல்பாடல், மூன்று முதல் ஏழுவரையிலான பாடல்களும், சுந்தரரின் ஏழாம் திருமுறையில் காணப்படும் முப்பத்து ஆறாவது பதிகமாகிய திருப்பைஞ்ஞீலிப் பதிகமும் பெருந்திணைப் பதிகங்கள் ஆகும். "இவற்றைப் பெருந்திணை மரபினைச் சார்ந்தவையாகக் குறிப்பர்."[108] அருணை வடிவேலு முதலியார். இப்பதிகங்கள் அனைத்தும் 'தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறத்தினைச் சேர்ந்தவையாக உள்ளன.

"தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்" என்பதற்கு "இருபத்து நான்காம் மெய்ப்பாட்டில் நிகழ்ந்து ஏழாம் அவதி முதலாக வரும் அறிவழி குணன் உடையளாதலும்"[109] என உரை வகுப்பார் நச்சினார்க்கினியர். இவற்றுள் இருபத்து நான்காவது மெய்ப்பாடாவது, புறஞ்செயச் சிதைத்தல் என்னும் மெய்ப்பாட்டியல் நூற்பாவில் கையறவு உரைத்தல் என்பதாகும்.[110] இதற்கு மேற்பட்ட மெய்ப்பாடுகள் பெருந்திணையின்கண் படும் என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும். "கையறவு தோன்றிதற் பின்னர் நிகழ்வன கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் மெய்ப்பாடாவதன்றி, நற்காமத்துக்கு ஆகா"[111] என்பர் பேராசிரியர்.

திருமுறையின்கண் அமைந்துள்ள பெருந்திணைப் பதிகங்கள் இறைவனின் அழகில் மையல்கொண்ட தலைவி, அவன் வரையாது நீங்கல்கண்டு, தெளிவழிந்து கையற்றுப் பலரோடும் முறையிட்டு தலைவனோடு கூட்டுவிக்குமாறு வேண்டிப் புலம்புவதாய் அமைந்துள்ளன.

தலைவன் இல்லம் புகுந்து உள்ளம் கொண்டான் எனல்

தலைவியின் உள்ளம்கொள்ள இல்லம்வந்த தலைவன், தன் தலையில் மாலையினைச் சூடி இருந்தான். கையில் வீணையினை ஏந்தி காந்தாரப் பண்ணைப் பாடிவந்தான். தான் அவனைப் பார்த்து உம்முடைய ஊர்யாது? என்ற வழி, ஊர்சொல்வான் போல் இல்லம் புகுந்து உள்ளம் கொண்டான் எனப் புலம்புகின்றாள் தலைவி. இதனை,

"வெந்தார் வெண் பொடிப்பூசி வெள்ளை மாலை
விரிசடைமேற் றாஞ்சூடி வீணை யேந்திக்
கந்தாரந் தாம்முரலாப் போக நிற்கக்
கரைசேர் மணிமிடற் றீரூரே தென்றென்!
நொந்தார்போல் வந்தென தில்லே புக்கு
நுடங்கே ரிடை மடவாய் நம்மூர் கேட்கில்
அந்தா மரைமலர்மேல் அளிவண்டி யாழ்செய்
ஆமாத்தூர் என்றடிகள் போயினாரே" (6:9:2)

என்பது சுட்டும்.

திருஆமாத்தூர் தலைவன் இல்லம் வந்து தலைவன் உள்ளம் கொண்டதாய்க் கூறிநிற்க, திருவெண்காட்டுத்தலைவியோ, தலைவனானவன், மேனியில் வெண்ணீறணிந்து, கையில் சூலம் ஏந்தி, காதில் பாம்பினை அணிந்து, நெற்றியில் பிறைமதியைச் சூடி, நெடுந்தெருவே வந்து தன் உள்ளம் கவர்ந்தான் எனப் புலம்பி நிற்கின்றாள். இதனை,

"தூண்டு சுடர் மேனித் தூ நீறாடிச்
சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறியரவங் காதிற் பெய்து,
பொற்சடை களவை தாழப்புரி வெண்ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்

வேண்டு நடை நடக்கும் வெள்ளே றேறி

வெண்காடு மேவிய விகிர்த னாரே" (6:35:1)

என்பதனால் அறியமுடிகின்றது.

பலிகொள்வார்போல் பரிகாசம் பேசும் அழகர்

திருஆமாத்தூர் தலைவன் பலிகொள்வார்போல் வந்தார் எனினும் அவர் நோக்கம் அதுவன்று. பிச்சையிடும் பெண்களிடம் பரிகாசம் பேசி உள்ளம் கவர்வதேயாம். அவ்வாறே தலைவன் தன் உள்ளம் கவர்ந்துபோனான் என்பதனைக் கூறும் தலைவியை,

"பலிகொள்வாரல்லர் படிறே பேசி

ஆறுடைய சடைமுடியெம் அடிகள் போலும்" (6:9:6)

என்ற அடிகள் அடையாளம் காட்டும்.

முத்தமிழ் வல்ல இறைவனை எண்ணி ஏங்கும் தலைவி

சுந்தரரின் திருப்பைஞ்ஞீலித் தலைவன், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் காட்டி தன் உள்ளம் கவர்ந்ததாய்க் கூறி நிற்கின்றாள் இத்தலைவி, 'அழகரே! உம்முடைய ஊர் எது என்று கேட்பதற்கு முன்னமே திருப்பைஞ்ஞீலியில் இருந்து வருகின்றேன் என்பதனையும், பிச்சை கொள்ள வருகிறேன் என்பதனையும் சுருக்கமாக உணர்த்திவிடுகின்றீர். எனவே நீ இயற்றமிழ் வல்லவராகிறீர், மேலும் இல்லம் தோறும் பிச்சை ஏற்க வரும்பொழுது, தக்கை, தாளம் முதலிய இசைக்கருவிகள் முழங்க வருகின்றீர்! எனவே இசைத்தமிழில் வல்லவராகிறீர். மேலும் ஆடவும் செய்கின்றீர்! எனவே நாடகத்தமிழிலும் வல்லவர் ஆகின்றீர்! இவ்வாறு முத்தமிழிலும் வல்லவராகிய உமக்குப் பிச்சையிட விரும்புகின்றோம். ஆனால் உம் கையில் இருக்கும் பாம்பானது எம்மை அச்சுறுத்துகின்றது. இப்படி வருவதுதான் பிச்சை ஏற்கும் திறமோ? என ஏக்கத்துடன் கேட்கின்றாள் தலைவி. இச்செய்தியினை,

"செந்தமிழ் திறம் வல்லீரோ செங்கண்

அரவம் முன்கையில் ஆடவே

வந்து நிற்குமி தென்கொ லோபலி

மாற்ற மாட்டோ மிடகிலோம்" (7:37:4:1-4)

என்ற பாடலானது உணர்த்துகின்றது.

மகளிர் நிறையழிக்கும் மாண்புடைய தலைவன்

ஆடலும், பாடலும் காட்டித் தலைவியின் உள்ளம் கொண்ட தலைவன், அவளின் நிறையழிக்கும் மாண்புடையவனாய் அமைந்தான் என்பதற்கு,

"பார்ப்பாரைப் பரிசழிப்பார் போல்கின்றார் தாம்

அட்டிய இல்பலியும் கொள்ளார்" (6:9:3)

என்ற அடிகள் சான்றாகும். இதனுள் 'பார்ப்பாரைப் பரிசழிப்பார் போல் என் பரிசினை அழித்துப் போனார்' என்ற தலைவியின் இரங்கற் குறிப்பு வெளிப்போந்து நிற்கும்.

திருஆமாத்தூர் தலைவியைப் போன்று, திருவெண்காட்டுத் தலைவியும், தலைவன், தன்னைக் கூர்ந்து நோக்கி, தன் அடக்கம் என்னும் நிறையினைக் கவர்ந்து சென்றான் என்கின்றாள்.

தலைவன், தன் ஒருபாகத்தில் உமையைக் கொண்டவன். கங்கையைத் தலையில் சூடி, பூதகணங்கள் புடைசூழ, பலிகொள்வான் போல் என் இல்லம் புகுந்தான். அவனுக்குப் பிச்சையிட வந்த என்னைக் கூர்ந்துநோக்கி, எனது அடக்கம் என்னும் பண்பினை அழித்து, வளையல்களைக் கவர்ந்து சென்றான் என்று புலம்பி நிற்கின்றாள். இதனை,

"ஆகத் துமையடக்கி யாறுசூடி

ஐவாயர வசைத்தாங் கானே றேறிப்

போகம் பலவுடைத்தாய்ப் பூதஞ் சூழப்

புலித் தோலுடையாய்ப் புகுந்து நின்றார்.

பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கிப்

பரிசழித்தென் வளைகவர்ந்தார் பாவியேனை

மேக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த

வெண்காடு மேவிய விகிர்த னாரே" (6:35:4)

என்ற பாடலானது காட்டுகிறது.

நெற்றிக்கண் காட்டி நிறையும் கொண்டான் தலைவன்

காதல் உணர்விற்கு வாயிலாய் அமைவது கண்ணேயாம். இதனை,

"கண்தர வந்த காம ஒள் எரி"[112]

"கண்ணறக் கலந்த காமவேகம்"[113]

என்பதனால் அறியலாம்.

தலைவனானவன் தலைவியைக் கவரும் பொருட்டாய்ச் சுற்றிவருகின்றான். தலைவனை அறியாதாளாய்த் தலைவி திரும்பியபோதும், தலைவன் தலைவியைக் காணாதவன் போல் அரைக்கண்ணால் நோக்கிக் கள்ளம் செய்து உள்ளம் கொண்டான் என்பதனை,

"உள்ளங் கவர்ந்திட்டுப் போவார் போல

உழிதருவர் நான் தெரிய மாட்டேன் மீண்டேன்

கள்ள விழிப்பர் காணாக் கண்ணாற்

கண்ணுள்ளார் போலே கரந்து நிற்பார்" (6:365:3-6)

எனத் திருவெண்காட்டுத்தலைவி உரைப்பதன்வழி அறியமுடிகின்றது.

கள்ள விழித்து நின்ற தலைவன், தன் நெற்றிக் கண்ணினைக் காட்டித் தலைவியின் நிறையும் கொண்டான் என்பதனை,

"நெற்றி மேற்கண்காட்டி நிறையும் கொண்டீர்!

என்றுந்தான் இவ்வகையே இடர் செய்கின்றீர்" (6:9:8)

எனத் திருஆமாத்தூர் தலைவி குறிப்பதால் அறிய இயலுகின்றது.

நிறையழிந்த மகளிர் பெறும்பேறு யாதென வினவி நிற்றல்

திருப்பைஞ்ஞீலித் தலைவி நிறையழித்த தலைவனை அணுகி அவனின் அழகும், சொல்லும் கண்டு ஆனந்தப்படுவதுடன், காதல் கொள்ளவும் விரும்புகின்றாள். ஆனால் தலைவனோ, எலும்புகளையே மாலையாக அணிந்துள்ளான். கையில் மண்டை ஓட்டினை வைத்துள்ளான். அதனால் அவனைக் காதலிப்பவர் எதனைப் பெரிதாய்ப் பெறமுடியும் என்று ஏங்கி நிற்கின்றாள். தலைவியின் இந்நிலைக்கு,

"ஏடுலா மலர்க் கொன்றை சூடுதிர்
என்பெலா மணிந்தென் செய்வீர்
காடுநும் பதி ஓடு கையது
காதல் செய்பவர் பெறுவது என்
பாடல் வண்டிசை யாலுஞ் சோலைப்பைஞ்
ஞீலியே னென்று நிற்றிரால்
ஆடலும் பாடலும் வல்லீரோ சொலும்
ஆரணீய விடங்கரே" (7:36:7)

என்ற பாடல் சான்றாம்.

தலைவனைத் தன்னிடத்தில் இருத்த நினைக்கும் தலைவி

தலைவன் பலிதேர்ந்து வரும்போது அவனைக் கண்டு காதல் கொண்ட தலைவி அவனைத் தன்னிடத்தில் இருத்த நினைக்கின்றாள். காட்டில் வாழும் இறைவனே! நாட்டிற்குள் வரும்பொழுதாயினும் உன் நிலைமையினை மாற்றி இருத்தல் வேண்டும். கையில் ஓட்டினைக் கொண்டு ஊரெல்லாம் திரிந்து பிச்சை எடுப்பதைக் காட்டிலும் ஓரிடத்தில் பிச்சை எடுத்தால் ஆகாதா? மேலும் நாகத்தினை மாலையாகக் கொள்ளாமல் வேறு மாலை அணியக்கூடாதா? என வேண்டுகின்றாள். இப்பாடலில் 'ஓரிடத்தில் பிச்சை கொள்ளல் ஆகாதா?' என்ற குறிப்பு தலைவனுக்குத் தான் மட்டும் உணவிட்டு, தன்னிடத்தே அவனை இருத்த நினைக்கும் தலைவியின்

உள்ளக்குறிப்பினை வெளிப்படுத்தி நிற்கின்றது. இதனை,

"காருலாவிய நஞ்சை யுண்டிருள்
கண்டர் வெண்டலை யோடுகொண்
டூரெல்லாந் திரிந்தென் செய்வீர் பலி
ஓரிடத்திலே கொள்ளும் நீர்
பாரெல்லாம் பணிந்தும்மை யேபர
விப்பணியும் பைஞ்ஞீலியீர்
ஆரமாவது நாகமோ சொலும்
ஆரணிய விடங்கரே" (7:36:1)

என்ற பாடல்காட்டும்.

தலைவனின் மெய்தீண்டி இன்புற நினைக்கும் தலைவி

தலைவன்பால் காதல் கொண்ட தலைவி, அதனால் பெரிதும் வருந்துகின்றாள். தனது துயரினைத் தலைவனின் மெய்யினைத் தீண்டி இன்புறுதல் மூலம் மாற்றநினைக்கின்றாள். ஆனால், அவள் அருகில் செல்லும்போது, இறைவன் ஊர்ந்துவரும் ஆனேறு சினத்துடன் பார்க்கிறது. பாம்பு சீறுகின்றது. எனவே மெய்தீண்டி இன்புற இயலாத தலைவி, தலைவனிடத்து, இனி பலிதேர்ந்து வரும்பொழுது தனித்துவருமாறு புலம்பி நிற்கின்றாள். தலைவியின் இத்தகு வருத்தத்திற்கு

"சிலைத்து நோக்கும் வெள்ளேறு செந்தழல்
வாய பாம்பது மூசெனும்
பலிக்குநீர் வரும்போது நுங்கையிற்
பாம்பு வேண்டா பிரானிரே" (7:36:2)

என்ற பாடல்அடிகள் சான்றாகும்.

இவ்வாறு திருமுறையின்கண் அமைந்துள்ள பெருந்திணைப் பாடல்கள், தலைவியின் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறத்தினை விளக்கி நிற்கின்றன.

தொகுப்புரை

- அன்பினால் இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மாவானது தன்னைப் பெண்ணாகப் பாவித்துக் கொண்டு இறைவனைத் தலைவனாகப் பாவித்துப் போற்றிய நிலையே பக்திப் பனுவல்களில் அகக் கற்பிதத் தோற்றத்திற்கு ஏதுவாயிற்று என்பது வெளிப்போந்து நிற்கின்றது.

- ஒவ்வொரு ஆன்மாவும், தன் பெண்மையை உணரும் காலமே இறைநிலை இணைவுக்குரிய காலம் என்பதும், அவ்வாறு உணருங்கால் செயற்கையான ஆண்மை தலைகாட்டாது, இயற்கையான பெண்மை வெளிப்படும் என்பதும் தெரியவருகின்றது.

- மனிதக்காதலும், இறைக்காதலும் அணுக்கப்புணர்ச்சி நிலையில் ஒன்றுபடுகின்றன. ஆகையால் இம்மண்ணுலகில் காணப்படும் மனிதக்காதல் எல்லாம் இறைமைக்காதலின் நிழற்படிமங்களே ஆகும்.

- உயரிய கடவுட் காதல் அனுபவங்களை, மனிதக்காதல் மொழியில் வெளிப்படுத்துவது, உலக இறைநிலை இணைவாளர்கள் அனைவர்க்கும் பொதுவாய் அமைகின்றது. எனவே, உலகமாந்தர்கள் பல மொழிகளைப் பேச, உலக இறைநிலை இணைவாளர்கள் ஒரேமொழியில் பேசுகின்றனர்.

- சங்க காலத்தில் தலைவியின் நெஞ்சம் முழுவதும் தனக்கே பெற்றிருந்த தலைவனின் இடத்தைத் திருமுறைகளில் இறைவன் பெற்றுவிடுவதால், திருமுறையின் அகக்கற்பிதப் பாடல்களைச் சிவன்பால் கொண்ட காமநுகர்வின் அடிப்படையில் சிந்தித்தலே சிறப்புடையதாகும்.

- திருமுறைகளில் காணப்படும் தலைவி கூற்றுக் கைக்கிளைப் பாடல்கள், இறைவன்பால் காதல்கொண்டு, ஏமம்சாலா இடும்பை எய்தி, அவனை அடையத்துடிக்கும் மனித ஆன்மாவின் ஏக்கத்தினை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளன. இக்கூற்று நிலையே பெண்பாற்கைக்கிளை என்னும்

அகப்பொருட் துறையினைப் பின்வந்தஇலக்கண நூலார் குறிப்பதற்குத் தோற்றுவாயாய் அமைந்தது.

- தலைவன்மேல் கொண்ட காதலால் அவன் பிரிவின் கொடுமை தாளாத தலைவி, கேட்காதவற்றைக் கேட்டுவா எனவும், கிளக்காதவற்றைக் கிளந்துவா எனவும் கூறித் தூது விடுக்கும் தொல்காப்பிய மரபு திருமுறைகளில் காணப்படுகின்றது.

- தலைவி கூற்றுப் பாடல்களில் காணப்படும் ஐந்திணை ஒழுகலாறுகள், மெய்யுறுபுணர்ச்சி, மின்னிடைமெலிதல், இடந்தலைப்பாடு, தூதுவிடுத்தல், தலைவி நெஞ்சொடு கிளத்தல், பிரிவுழிக் கலங்கல், கடலிடை, புள்ளிடைவைத்து வருந்தல், அலர் அஞ்சல், இயற்பட மொழிதல், அறத்தொடு நிற்றல், பரத்தமை கண்டு ஊடல், பருவம் கண்டு புலம்பல், வாயில் மறுத்தல், எங்கையர் காணின் நன்றென மறுத்தல் போன்ற துறைகளைச் சார்ந்தவையாய் அமைந்துள்ளன.

- தலைவி அறத்தொடு நிற்றல் தொடர்பான திருமுறைப்பாடல்களில், தலைவி, தலைவனுடன் தனக்குண்டான களவொழுக்கத்தினைத் தோழியிடம் கூறி நிற்கின்றாள். இம்மரபின்வழி, இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மாவானது, அதனை அடைவதற்கான வழியாக அறத்தொடு நிற்றல் என்னும் துறையினைத் தேர்ந்தெடுக்கின்றது என்பதனை அறியமுடிகின்றது.

- திருமுறைகளில் காணப்படும் பெருந்திணைத் தலைவி கூற்றுப்பாடல்கள், தன் உள்ளம் கொண்ட தலைவனை எண்ணிப் புலம்பும் தலைவியின் ஆற்றொண்ணாத் துயரத்தினை வெளிப்படுத்தும் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறத் துறையினைச் சேர்ந்தவையாய் அமைந்துள்ளன.

சான்றெண் விளக்கம்

1. ம .சா.அறிவுடைநம்பி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், பக்.89-90
2. T.P.Ramachandran, The Indian Philosophy of Beauty Part I & II, P.488
3. Borrowing Phrase from plato, we may say Bhramam is surpassing beauty, A beauty which in the first place is eternal without, begining and without... and secondly is not beautiful in one way and ugly in another not beautiful at onetime or place or from one point of view and then ugly, TMP.Mahadevan. The philosophy of beauty, P.10
4. Beauty Kindles love in the partcipient. Therefore worship of beauty and the path of love lead to the same goal - V.Sachithanandan - Keats, Shakespeare and Bharathis Kuyil Pattu - Eassays on Bharathi - vol.II, P.31
5. தாமஸ், காதலின் உண்மை, மஞ்சரி, ஜுன் 1955, ப.23
6. தா.ஏ.ஞானமூர்த்தி, பாவையின் உயிர்ப்பு, ப.48
7. பி.ஸ்ரீ.ஸ்ரீராதாகிருஷ்ணன், திருக்கோயில்- 1:7 ஏப்பிரல் 1959, ப.39
8. ம.மாணிக்கவாசகம்பிள்ளை, சிற்றின்ப வெற்றி அல்லது கணவன் மனைவியர் காதல் ஒழுக்கம், ப.441
9. தொல்.பொருள். நூ.190:4 (இளம்)
10. பாலதாசன், 'வைஷ்ணவம்', ஆனந்தவிகடன், தீபாவளிமலர் 1965, பக்கம் எண்ணிடப்படவில்லை
11. கி.வா.ஜகந்நாதன், அன்பின் உருவம், பக்.74-75
12. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காராச்சாரியர், 'பகவத்விஷயரஸாநுபம்', ஸ்ரீராமாநுஜன், 248-249, 21:8:9 ஆகஸ்ட் - செப்டம்பர், ப.101
13. எஸ்.கிருஷ்ணவேணி அம்மையார், பெரியாழ்வார் பெண்கொடி, பக்.121-122
14. சோமசுந்தரபாரதியார், நற்றமிழ், பக்.46-47

15. குன்றக்குடி அடிகளார், மண்ணும் விண்ணும், பக்.128-129

16. இரா.மதிவாணன் (மொ.பெ.ஆ.) ஆந்திரநாட்டு அகநானூறு (கதாசப்தசதியின் தமிழ்மொழிபெயர்ப்பு), ப.56

17. கே.சி.பீட்டர், 'பெண்ணே உயர்ந்தவள்,' : மஞ்சரி, ஆகஸ்டு 1957, ப.21

18. Pray to God with Such love as in experienced by young woman when she sees a beautiful young man - Govindadas says, Mahindra mohan Bose, 'An Introducation to the post Chaitanya sahajia cult - Journal of the Department letters volume XVI 1934 culcutta, P.126

19. World university Encyclopaedia, vol.10, P.3410

20. மேலது, ப.3411

21. டி.டி.இராமஸ்வாமிநாயுடு, அகப்பொருளும் அருளிச்செயலும், ப.VII

22. Plotinus describes the ecstasy in similar terms. It is that union of which the union of earthly lovers, who wish to blend their being with one another was a copy (Enneads-7.34) W.P.Patterson. The Nature of Religion, P.285

23. Love is a passionate tendency, and in ward vital urge ; of the soul towards it source - Evelynunderhill, An Anthology of the love and God, P.29

24. Love is a relation between the at man and its eternal 'other' and is longing for the Infinite communion N.Subbu Reddiar, Bridal mystiaism of the Alvars, London Tamil Sangam souvenir - 1975-76, P.47

25. தா.ஏ.ஞானமூர்த்தி, பாவையின் உயிர்ப்பு, ப.47

26. ஸ்ரீநிவாஸாசாரியார், காமமும் மோக்ஷமே மோக்ஷமும் காமமே, வேதாந்ததீபிகை, 13:10 ஆடி, ருதிரோத்காரி, ப.351

27. பு.ரா.புருஷோத்தம நாயுடு, (மொ.ஆ.), ஆச்சார்ய ஹிருதயம், பகுதி 1-2, ப.291

28. Religion is essentially experience, but it seeks expression Through song and ceremony through ritual and form - K.Seshadri, The Tiruppavai of Andal - Aspects of Religion, P.Sundram Pillai, Commoration vol. P.35

29. Mystical literature grow with this intimate and impassioned love of the Absolute, which Granscends the dogmatic language, in which it is clothed and becomes applicable to mystics of every race and or creed... The language of human passion is tapid and insiganificant beside the language in which the irustic try to Tell the splendours of their love - Evelynunderhill, An Anthology of mysticism, PP.103-107

30. KS.Ramaswami sastri, Philosophy of Religion and mysticism, The Aryan Path 21:8 August 1950, P.450

31. M.A.Durai Rangasamy, The Religion and Philosophy of Tevaram, Vol.II, P.1289

32. Upon my flowary breast

 wholly for him and save Himself for none

 There did I give sweet rest

 To my beloved one - st.John. "The obscure right of soul - Quoted and translated by - சொ.சிங்காரவேலன், திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும், தேவாரத் திறனாய்வும், ப.150

33. M.A.Durai Rangasamy, The Religion and Philosophy of Tevaram, Vol.II, P.1240

34. Ibid - P.1240 - Quoted and Translated by - சொ.சிங்காரவேலன், திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும், தேவாரத்திறனாய்வும், ப.150

35. ஆச்சார்ய ஹிருதயம், நூ.118

36. இராமானுச நூற்றந்தாதி, பா.40

37. ப.அருணாசலம், பக்தி இலக்கியம், ப.349

38. வ.வே.சு.ஐயர், பாரதியின் கண்ணன் பாட்டு, அமுதசுரபி, ப.6

39. ப.அருணாசலம், பக்தி இலக்கியம், பக்.106-108

40. தொல்.பொருள். நூ.89:2-3 (இளம்)

41. துரை அரங்கனார், தொல்காப்பியநெறி, பக்.186-187

42. ந.சுப்புரெட்டியார், சடகோபன்செந்தமிழ், பக்.182-183

43. ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப.15

44. The women is the form of perfect dedication and intense aspiration. The highest in the divine can be drawn out when the soul approaches it in the spirit of the bride. Hence the emphasis has been laid on the doctrine the eternal feminine in order that the supreme dedication may be possible, mahendranath sincar, Hindu mysticism, P.96

45. Mystics always take rufuge in an exurberant variety of Images. which stand as symbols or represent through analogy the ineftable insight. The Divine communion is sought to be translated in terms of human love, Radha kamal mukerjee, Theory and art of mysticism, P.121

46. M.A.Durai Rangasamy, The Religion and Philosophy of Teavaram, Vol.IV, P.1245

47. தொல்.பொருள்.அகத்திணையியல், இளம்பூரணர் உரை, ப.2

48. வ.சுப.மாணிக்கனார், தமிழ்க்காதல், ப.182

49. நற்றிணை, பா.94:1-3

50. பரிபாடல், பா.11:134-136

51. பரிமேழலகர், பரிபாடல் உரை, ப.131

52. வீரசோழியம், நூ.84:1-2

53. மேலது, நூ.87:1-2

54. கா. ர.கோவிந்தராசமுதலியார் (ப.ஆ.), வீரசோழியம் மேற்கோள் நூற்பா, ப.117

55. மேலது, ப.118

56. மேலது, மேற்கோள் நூற்பா, ப.122

57. இலக்கணவிளக்கம் நூ.398

58. ம.சா.அறிவுடைநம்பி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், ப.113

59. தொல்.பொருள். நூ.214 (இளம்)

60. சி.அருணை வடிவேலு முதலியார் (வி.கு.) நாவுக்கரசர் தேவாரம், ஆறாம் திருமுறை, ப.499

61. தொல்.பொருள். நூ.97:1 (இளம்)

62. திருக்கோவையார், பா.37

63. இறையனார் களவியல் நூ.3

64. தொல்.பொருள். நூ.111:9 (நச்சர்)

65. மேலது, களவியல் நச்சர் உரை, ப.67

66. தொல்.பொருள். நூ.196 (நச்சர்)

67. இறையனார் களவியல், நூ.30ன் உரை, ப.144

68. தொல்.சொல், எச்சவியல், இளம்பூரணர் உரை ப.179

69. இறையனார் களவியல், நூ.30ன் உரை, ப.144

70. மு.சண்முகம்பிள்ளை, சிற்றிலக்கிய வகைகள், ப.56

71. தொல்.பொருள். நூ.210 (இளம்)

72. பரிபாடல், பா.8:36-37

73. அ.மா.பரிமணம் (க.ஆ.), பக்திப்பனுவல்களில் அகப்பாடல்கூறுகள், ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, இ.ப.த.மன்றம், பக்.328-329

74. தொல்.பொருள். நூ.196 (நச்சர்)

75. மேலது, நூ.513 (பேரா)

76. இறையனார் களவியல் நூ.30ன் உரை, ப.144

77. தொல்.பொருள்.நூ.112:1 (நச்சர்)

78. குறுந்தொகை, பா.197:4-5

79. நம்பியகப்பொருள், நூ.170:7

80. தொல்.பொருள். நூ.162 (நச்சர்)

81. மேலது, நூ.163 (நச்சர்)

82. மேலது, நூ,164 (நச்சர்)

83. மேலது, கற்பியல், நூ.162, 163, 164 நச்சர் உரை பக்.252-254

84. இறையனார் களவியல், நூ.22ன் உரை, ப.116

85. தொல்.பொருள். நூ.114 (நச்சர்)

86. நம்பியகப்பொருள், நூ.164:5-6

87. இலக்கண விளக்கம், அகத்திணையியல், நூ.149:5-6

88. க.வெள்ளைவாரணர், தொல்.பொருள்.பொருளியல் உரைவளம், பக்.39-40

89. தொல்.பொருள். நூ.111 (நச்சர்)

90. மேலது, நூ.123 (நச்சர்)

91. மேலது, களவியல், நச்சர் உரை ப.150

92. மேலது, நூ.114:40 (நச்சர்)

93. மேலது, நூ.111:15 (நச்சர்)

94. தொல்.பொருள். நூ.142 (நச்சர்)

95. மேலது, கற்பியல், நச்சர் உரை, ப.163

96. வ.சுப.மாணிக்கனார், தமிழ்க்காதல், ப.103

97. தொல்.பொருள்.கற்பியல், நூ.147, நச்சர் உரை, ப.210

98. தொல்.பொருள். நூ.229 (இளம்)

99. பரிபாடல் பா.9:16-18

100. பரிமேலழகர் உரை, திருக்குறள், கு.1109, ப.419

101. தொல்.பொருள். நூ.223 (இளம்)

102. கலித்தொகை, மருதக்கலி, பா.33

103. தொல்.பொருள்.கற்பியல், நூ.147 நச்சர் உரை, ப.213

104. மேலது, நூ.145: 28-31 (இளம்)

105. மேலது, கற்பியல், இளம்பூரணர் உரை, ப.158

106. தொல்.பொருள். நூ.54 (இளம்)

107. மேலது, நூ.118 (நச்சர்)

108. சி.அருணைவடிவேலு முதலியார் (வி.கு.), திருநாவுக்கரசர் ஆறாம் திருமுறை, பக்.452, 709 சுந்தரர் ஏழாம் திருமுறை, ப.722

109. தொல்.பொருள்.அகத்திணையியல், நூ.51 நச்சர் உரை, ப.210

110. தொல்.பொருள். நூ.266 (பேரா)

111. மேலது, மெய்ப்பாட்டியல், நூ.266 பேராசிரியர் உரை, ப.32

112. குறுந்தொகை, பா.305:1

113. பெருங்கதை, பா.3:8:3.

இயல் மூன்று

தோழி கூற்றில் அகப்பொருள் மரபுகள்

தோழி கூற்றில் அகப்பொருள் மரபுகள்

தமிழ் மரபின் உயர்நெறியாய்ப் போற்றப்பெறும் அகமரபினைச் சார்ந்த இலக்கியங்களில் இடம்பெறும் அகமாந்தர்களுள் இன்றியமையாத இடத்தினைப் பெறுபவள் தோழி. அகமரபின் களவு, கற்பு எனப்பெறும் இருவகைக் கைகோளிலும் பெரும்பங்கு வகிப்பவள், அகத்திணையின் பிறமாந்தர்களாகிய தலைவன், தலைவி, செவிலி, நற்றாய், பாணன் போன்றோர் இடம்பெறும் சூழல்களிலும் முன்னிற்பவள் தோழி ஆவாள். அகவாழ்வில் காதல்வயப்பட்ட தலைவனும், தலைவியும் உணர்வு மேலிட்டு நிற்கும் இடத்தில், அவர்களை நெறிப்படுத்தி ஆற்றுப்படுத்தும் அருமை சான்றவளாய்த் தோழி அமைகின்றாள். எனவே அகஇலக்கியங்களில் இடம்பெறும் கூற்றுக்கள் யாவினும் தோழியின் கூற்று செம்மாந்த நிலையினை உடையதாய் அமைகின்றது. திருமுறைத்தோழியின் கூற்றுக்களும் இத்தகைய உயரிய பெற்றியினை உடையனவாகும். அவ்வகையில் திருமுறைத் தோழியின் கூற்றுக்களில் காணப்பெறும் அகப்பொருள் மரபுகளை ஆய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

இலக்கண, இலக்கிய நூலார் காட்டும் தோழி

தலைவன், தலைவியர் காதல் வாழ்வில் ஏற்படும் இன்னல்களிலும், இன்பங்களிலும் பெரும்பங்கு பெறுபவள் தோழி ஆவாள். இதனை "தலைவன், தலைவி என்னுமிருவர் கூற்றினும், இவ்விருவர் அன்பினையும் இடையூறு இன்றி வளர்க்கும் தோழியின் நுட்பமான கூற்றே இக்களவொழுக்கத்தின் இயல்பினை இனிதே விளக்குவதாம்"[1] எனக் குறிப்பர் வெள்ளைவாரணர்.

அகவொழுக்கத்தில் தோழியின் பங்களிப்பினை, "தலைவனும், தலைவியும் காதலுணர்வு வயப்பட்டுத் தடுமாறும் தன்மையினர். செவிலியும், நற்றாயும் குடும்ப மதிப்புணர்வுகளுக்குக் கட்டுப்பட்டவர். பரத்தை

வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் தன்மையினள். தோழி ஒருத்தியே எந்த உணர்வுக்கும் இறைப்படாமல் அறிவு நிலையில் தானும் இயங்கி, தன்னைச் சார்ந்தோரையும் இயக்குகின்றாள். துணைப்பாத்திரம் இன்றேல் தலைமைப் பாத்திரம் சிறப்புறா. சங்க இலக்கியத்தில் வரும் துணைப் பாத்திரங்களில் தோழியே தலைமை தாங்கும் தகுதி உடையவள். அவள் இல்லை என்றால் தலைவனும், தலைவியும் ஒளிபெறமுடியாது"[2] என்பர் சரளா ராசகோபாலன்.

"சொல்லும் செயலும் எப்போதும் ஒன்றியிருப்பதில்லை. ஆனால் தோழி சொல்லின் செல்வியாகவும் இருக்கின்றாள். செயல் வல்லவளாகவும் விளங்குகின்றாள். இருநிலையாலும் பெருமை வாய்ந்த பாத்திரம் தோழியே"[3] எனவும் மொழிவர்.

சங்கச் சமூகப் பெண்களின் உயர்வினை எடைபோடப்பயன்படும் அளவு கோலாகவும் தோழி அமைகின்றாள். இதனை, "அறிவு சான்ற சங்ககாலப் பெண்ணுலகிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றாள் நம் தோழி"[4] என்ற புலவர் குழந்தையின் கூற்று உறுதிப்படுத்தும்.

அகத்துறைப் பாக்களில் தலைமக்களாய்த் தலைவன், தலைவி என்போர் பேசப்படினும், அவர்களினும் தலைமை தாங்கும் பெருமை சான்றவள் தோழி என்பதனை, "அகத்துறைப் புலவர்கள் கண்ட புலனெறி வழக்கம் என்னும், கோபுரத்தின் கலசமே தோழி என்னும் பாத்திரம் எனலாம்"[5] என்று ஈ.கோ.பாஸ்கரதாஸ் குறிப்பதினின்று அறியமுடிகின்றது.

தோழிக்கும், தலைவிக்குமான உறவு நிலையினைத் தொல்காப்பியர், 'தோழிதானே செவிலி மகளே'[6] என்பார். இதனால் தோழியென்பவள் தலைவியை வளர்த்தெடுக்கும் செவிலித் தாயின் மகளாய் அமைவாள் என்பது பெறப்படும். எனவே தலைவியின் உணர்வு நிலையினை உள்வாங்கி, அதனை அறிவுக்கண்கொண்டு சிந்தித்து, செயலாற்றும் ஆற்றல் பெற்றவளாய்த் தோழி விளங்குகின்றாள். இத்தன்மை நோக்கியே, "தலைவனைக் கண்டவுடன்

மயங்கிவிடும் தலைவிபோலாது, பலநாளும் தலைவனுடைய குணங்களை ஆராய்ந்து, தேர்ந்து முடிவில் தலைவியிடம் அவனைக் கூட்டுவிப்பாள். எனவே அகப்பொருள் நூல்களில் காணப்பெறும் இவள் உலகியல் அறிவு மிக்கவளாய்த் திகழ்கிறாள். தலைவன், தலைவியை விட்டுப் பிரிய நேரும் சந்தர்ப்பங்களையெல்லாம் நன்கு ஆராய்ந்து, ஒப்பித், தலைவியும் ஒப்புமாறு வற்புறுத்துவாள். தலைவனை விட்டுப் பிரிந்து வருந்தும் தலைவியைப் பலவாறு சொல்லித் தேற்றுவாள். சில சமயம் தலைவனிடம் குறைகண்டால் கழறியுரைத்து அவனைத் திருத்தமுயல்வாள். தலைவன், தலைவியின் கூட்டுறவுகளை, நற்றாய், செவிலித் தாயாருக்கு திறம்பட உரைத்து, அவர்களுடைய உடன்பாட்டைப் பெறுவாள். களவொழுக்கத்திலும் சரி, கற்பொழுக்கத்திலும் சரி, இவளுடைய தொடர்பு இல்லாத இடங்களே இல்லை என்று கூறிவிடலாம்”[7] என விளக்குவர் ந.சுப்புரெட்டியார்.

இத்தகைய மேன்மைகளை உடைய தோழியானவள் தன்னைப் பற்றிச் சிந்திப்பதாய் அகப்பாடல்களில் அமையும் இடங்கள் இல்லை என்பதனை, “தோழியின் கூற்றில் எதிலும் அவளது தனிப்பட்ட வாழ்க்கையோ, பிற அகமாந்தர்களுடன் தொடர்புகொள்ளாமல் அவளுக்கெனத் தோன்றும் தனிப்பட்ட மன உணர்வுகளோ சித்திரிக்கப்படவில்லை. பிற அகமாந்தர்களின் மன உணர்வுகளைத் துலக்கமாக எடுத்துக் காட்டவும், அவர்தம் மனப்போராட்டங்களுக்கு உளவியல் தீர்வுகாணவும் படைக்கப்பட்ட படைப்பாகவே தோழி தோன்றுவதை நம்மால் உய்த்துணர முடிகின்றது”[8] என்ற ஆ.ராமகிருஷ்ணனின் கூற்று உறுதிப்படுத்தும்.

தோழி, தலைவியின் நலன் குறித்து ஆராய்தலொடு மட்டும் நில்லாது, அவளுக்கு உரையாடும் துணையாகவும் இருப்பாள் என்பதனை,

“சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே”[9]

என்ற தொல்காப்பிய அடி உணர்த்தும். தோழியானவள், தலைவி வேறு, தான் வேறு என்னும் வேற்றுமையின்றி, ஒன்றுபடத்தோன்றும் இயல்பினை

உடையவள் என்பதற்கு,

"ஒன்றித்தோன்றும் தோழி மேன"[10]

என்ற தொல்காப்பிய அடி சான்றாகும். தலைவிக்குத் தோழியராய் அமையும் பலருள்ளும், பெரிதும் பேணப்பட்டாளாய்த், தலைவிக்கு வாயிலாந்தன்மை உடைமையின், அவள் 'பெட்டவாயில்' எனக் கூறப்பட்டாள் என்பதனை,

"குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயில் பெற்றிரவு வலியுறுப்பினும்"[11]

என்ற தொல்காப்பிய அடிகள் உணர்த்திடும்.

தோழியானவள், தலைவியின் உறுப்புநலன் அழிந்தவிடத்து, அவ்வுறுப்புக்களைத் தன்னுடைய உறுப்புகளாய் எண்ணிப்பேசும் அளவிற்குத் தலைவியின்மாட்டு உரிமையுடையாளாய் அமைந்திருந்ததனை,

"தாயத்தின் அடையா ஈயச் செல்லா
வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படா
எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்
அல்லவாயினும் புல்லுவ உளவே"[12]

என்ற தொல்காப்பியப் பொருளியல் நூற்பா உணர்த்தும்.

இவ்வாறு தலைவி இன்பம் மிக்கு மகிழும் நேரத்து மகிழ்ந்தும், துன்பத்தில் புலம்பியும் தலைவிக்கு அருந்துணையாய் அமைந்ததாலே, தோழி,

"தாங்கருஞ் சிறப்பிற் தோழி"[13]

எனச் சிறப்பிக்கப்பட்டாள். இவ்வாறு இலக்கண, இலக்கியங்களில் சிறப்பிக்கப்படும் தோழியின் கூற்றுக்கள் திருமுறைகளில் காணப்படுகின்றன. தொல்காப்பியர் தோழிகூற்று நிகழும் களன்கள் எனச்சுட்டும் பல்வேறு சூழல்களில் அமைந்த தோழி கூற்றுப் பாடல்களைத்திருமுறையில் காணமுடிகின்றது.

பாங்கி மதியுடம்பாடு

தலைவியின்பால் அன்புகொண்ட தலைவன் தோழியின் மூலம் தன் குறையினை நிறைவேற்றிக் கொள்ள விழைவான். அவளை மதியுடம்படுத்த பின்னல்லது, தன் குறையினை முடிக்க வேண்டும் என்று கருதி அவளுக்குத் தன் கருத்தினைக் கூறான். இவ்விடத்து 'மதி' என்பது 'அறிவு' என்றும் 'உடம்படுத்தல்' என்பது உடன்படச் செய்தல் என்றும் பொருள்படும். அதாவது தோழியின் அறிவினை ஒருப்படச் செய்தல் என்பதாம். இம்மதியுடம்படுத்தலை 'புணர்ச்சியுணர்தல்' என்று இளம்பூரணர் குறிப்பதனை, "மதியுடம்படுத்தல் எனினும் புணர்ச்சியுணர்தல் எனினும் ஒக்கும்"[14] என்ற உரைக்குறிப்பு உணர்த்தும். நச்சினார்க்கினியர், "தலைவன், தோழியிடம் தன் குறையைத் தெளிவாகக் கூறாது கரந்த மொழியால் கூறுவானாதலாலும், அங்ஙனமே, களவொழுக்கத்தால் தலைவியிடம் தோன்றும் வேறுபாட்டின் காரணமும் அவளுக்குப் புலப்படாதலாலும், அந்த இரண்டையும் தன் மதியுடன் ஒன்றுபடுத்தி உணர்வாள். இவ்வாறு மூவர் கருத்தினையும் ஒன்றுபடுத்தி உணர்தல் பற்றி இஃது மதியுடம்படுத்தலாயிற்று"[15] என விளக்குவர். இம்மதியுடன்பாட்டைத் தொல்காப்பியர்,

"குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர உணர்தலென
மதியுடம்படுத்தல் ஒருமூவகைத்தே"[16]

என விரித்துரைப்பர்.

தோழி குறையுற உணர்தல்

தொல்காப்பியர் குறிக்கும் பாங்கி மதியுடம்பாடு மூன்றனுள் குறையுற உணர்தல் என்பது தலைவன் தன்பால் வந்து குறையுற்று நிற்க, அவன் உள்ளக் கருத்தினைத் தோழி உணர்தல் ஆகும். இதனை, "தலைவன் தோழியின்பால் குறையிரந்து நின்ற நிலையில் இவன் என்னை இரந்து பின் நிற்கின்றது எது

கருதியோ என ஆராய்தல்"[17] என்பார் ஆ.சிவலிங்கனார். இக்குறையுற உணர்தலை,

"பெட்ட வாயில் பெற்றிரவு வலியுறுப்பினும்
ஊரும் பேருங் கெடுதியும் பிறவும்
நீரிற்குறிப்பின் நிரம்பக்கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்"[18]

என்ற நூற்பாவான் இயம்புவார் தொல்காப்பியர். இந்நூற்பாவிற்கு உரைவகுக்கும் இளம்பூரணர், "ஊராயினும், பேராயினும், கெடுதியாயினும், பிறவாயினும் நீர்மையினால் தன் குறிப்புத் தோன்றக்கூறித் தலைமகன் தோழியைக் குறையுறும் பகுதியும் உண்டு என்றவாறு"[19] எனக் குறிப்பார்.

பாங்கி மதியுடம்பாட்டில் கெடுதிவினவல்

பாங்கி மதியுடம்பாட்டில் ஊர்பேர்வினாதல், வேழம் வினாதல் என்பனவற்றுடன் 'கெடுதிவினவல்' என்பதனையும் தொல்காப்பியர் குறிப்பார். 'கெடுதி வினவல்' என்பதற்கு, உரைகூறும் நச்சினார்க்கினியர், "கெடுதியாவன, யானை, புலி முதலியனவும், நெஞ்சும், உணர்வும் இழந்தேன். அவைகண்டீரோவெனவும் வினவுவன பலவுமாம்"[20] என விளக்குவர். 'இக்கெடுதிவினவல்' என்ற துறையின் தன்மையைச் சேர்ந்தனவாய் ஐந்து பாடல்கள் திருமுறையில் காணப்படுகின்றன.

இயற்கைப் புணர்ச்சியினும், இடந்தலைப்பாட்டினும், பாங்கற்கூட்டத்தினும், தலைவியைக்கூடி இன்புற்ற தலைவன், பாங்கியற்கூட்டத்தின் பொருட்டு மதியுடம்படுத்தற்கண் வேழம் வினவி வருவான். இவ்வாறு வரும் தலைவனைக் குறித்துத் தலைவியிடம் கூறித்தோழி குறையுற உணர்வாள். இத்தகைய தோழியைத் திருவாரூர் மும்மணிக்கோவைகாட்டும். இக்கோவையில் வரும் தோழி தலைவியைப் பார்த்து, அணிகலன்களை அணிந்த அழகிய தனங்களை உடைய பெண்களே! வறிதுபடாத புகழை

உடையவனும், அழலில் நின்று ஆடுபவனுமாகிய சிவபெருமான் முன்னாளில் யானையின் தோலினை உரித்துப் போர்த்தவன். அதனைப் போன்ற யானை ஒன்று இப்புனத்தின்கண் போனதை நீவிர் கண்டதுண்டோ? என வினவியவாறு ஒருவன் வந்தான் என நயம்படக் கூறி, அதன் வழித் தோழியின் களவொழுக்கத்தினை அறிய முற்படுகின்றாள். தோழியின் இச்செயலினை,

"இழையார் வனமுலை யீர்இத்தண் புனத்தின்
உழையாகப் போந்த தொன் றுண்டோ? - பிழையாச்சீர்
அம்மான், அனலாடி, ஆரூர்க்கோன், அன்றுரித்த
கைம்மாநேர் அன்ன களிறு" (தி.மு.கோ.பா.8)

என்ற பாடல் எடுத்துக்காட்டி நிற்கும்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதித் தோழியும் இவ்வக மரபினைச் சார்ந்தவளாகவே அமைகின்றாள். இத் தோழியானவள், தலைவியிடத்து, தலைவியே! உமையம்மை தழுவியதால் அவள்முலையின் தடத்தினை மார்பில் கொண்ட இறைவன் இருக்குமிடம் கயிலாயம். அவ்விடத்தே, அம்பு தைக்கப்பட்ட சினம்மிக்க களிறு ஒன்று இவ்வழியாகப் போகக் கண்டீரோ? என வினவியவாறு ஒருவன் வந்தான் என்கின்றாள். அவ்வாறு வினவி வந்தவன், உடன்செல்லாது, அவ்விடத்தே நின்று, அவர்களுடன் மேலும் பேசுதலை விரும்பினான் என்பதனை, 'புனம் விட்டு அகலார்' என்ற குறிப்பினான் உணர்த்தினாள் தோழி. இதன்வழி, நின்பால் அன்புகொண்டு, நின்றவனுக்கு, நான் யாது? கூற எனத் தோழி தலைவியிடத்து வினவியும் நிற்கின்றாள். இதனை,

"தனமிட் டுமைதழு வத்தழும் புற்றவர் தம்மடியார்
மனம்விட் டகலா மதிற்கச்சி ஏகம்பர் வான் கயிலைச்
சினம்விட் டகலாக் களிறு வினவியொர் சேயனையார்
புனம்விட் டகலார் பகலாம்பொ ழுதும்நம் பூங்கொடியே"

(தி.ஏ.தி.பா.11)

என்ற பாடல் அடிகளான் அறியமுடிகின்றது.

இத்திருவந்தாதியின்கண் அமைந்துள்ள பிறிதொருபாடலும் 'கெடுதிவினவல்' என்னும் துறையதாகும். இப்பாடலின்கண், தலைவியும் தோழியும் உள்ளவழித் தலைவன் களிறு வினவி வருகின்றான். அவனைக் காண்கின்றாள் தோழி. அவனது கையில் களிறு வேட்டைக்கான வில்லும், அம்பும் இருப்பதற்குப் பதில், மகளிரைக் கவரும் தழை இருக்கின்றது. எனவே தலைவன் வந்த கருத்து, களிறு தேடி அன்று என்று கூறி நகைக்கின்றாள். இதனை, 'வருத்தம் தரும் மெய்யும் மா வினவும் கருத்தும், கையில் தழையும் ஒவ்வாதனவாக உள்ளனவே' என வரும் அடிகள் விளக்குகின்றன. தலைவனின் குறிப்பறிந்த தோழி 'எம்தொழில் தினைப்புனம் காத்தலேயாம். உன் வரவுப் போக்கினை ஆராய்தல் அன்று' எனக் கூறி மறுத்துரைக்கின்றாள். இம்மறுப்புரை தலைவன்பால் கொண்ட வெறுப்பால் எழுவதன்று. தலைவன், தலைவியின் களவொழுக்கத்தினை அறியும் வேட்கையான் எழுந்ததே ஆகும். தோழியின் இத்தகைய நுண்மாண்நுழைபுலத்தை,

"வருத்தந் தரும்மெய்யும் கையில் தழையும்வன் மாவினவும்
கருத்தந் தரிக்கும் நடக்கவின் றைய கழல்நிலையைத்
திருத்தந் தருளும் திகழ்கச்சி ஏகம்பர் சீர்கயிலைத்
துருத்தந் திருப்பதன் றிப்புனம் காக்கும் தொழில் லெமக்கே"

(தி.ஏ.தி.பா.13)

என்ற பாடலானது சுட்டும்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின் பிறிதோர்பாடல் கெடுதிவினவலில் மான்தேடி வரும் தலைவனைக் காட்டுகின்றது. மான்தேடி வந்த தலைவனின் உள்ளக் கருத்தினை அறிந்த தோழி அவனின் செயலினை எள்ளல் தோன்றத் தலைவிக்கு உரைக்கின்றாள்.

'தலைவியே! நம்முடைய தலைவராகிய வேடர் ஒரே அம்பினால் மானினைக் கொல்லும் ஆற்றல் பெற்றவர். ஆனால், இங்கு மான் வினவிவந்து நிற்பவனோ, வேடரினும் உயர்வான அரசமரபினைச் சேர்ந்தவன். எனினும்

இவன் கலைமான் மேல் அம்பு எய்ய, அம் மானோ, அவ் அம்பினோடு ஓடிமறைந்தது. அதனைத் தேடி இங்கு வந்து நிற்கின்றான். என்னே! இத் தலைவனின் வில் வலிமை! இவரின் வில் ஆற்றலுக்கு இவ்உலகில் விலை உண்டோ? எனக்கூறி நகைக்கின்றாள். அந்நகைப்பின் ஊடே, தலைவன், தலைவியின் உள்ளக் கருத்தினையும் அறிய முயல்கின்றாள் தோழி. அவளின் இச்செயலுக்கு,

> "அருளைத் தருகம்பர் அம்பொற் கயிலைஎம் ஐயர் அம்பு
> இருளைக் கரிமறிக் கும்மிவர் ஐயர் உறுத்தியெய்ய
> வெருளக் கலைகணை தன்னொடும் போயின வில்லிமைக்கு
> மருளத் தருசொல்லி எங்கோ விளையுண்டிவ் வையகத்தே"
>
> (தி.ஏ.தி.பா.15)

என்ற பாடல் சான்றாகும்.

இத் திருவந்தாதியின் மற்றொரு பாடலும் கெடுதி வினவல் துறையினைச் சார்ந்ததாகும். இப்பாடல் தலைவன் மான், பன்றி, களிறு வினவி வந்ததாய்க் குறிக்கின்றது. தலைவியும் தோழியும் உள்ள இடம்நாடித் தலைவன் வருகின்றான். முதற்கண், அவர்களிடத்து, அம்பு தைத்த உடலுடன்மான் ஒன்று இவ்வழி போயிற்றோ? என வினவுகின்றான். இவ் வினாவிற்கு மகளிர் இருவரிடம் இருந்தும் பதிலில்லை. அடுத்த நிலையில் இவ்வழி காட்டுப்பன்றி ஒன்று போயிற்றோ? என வினவுகின்றான். இதற்கும் பதிலில்லை. இறுதியில் அம்புபட்ட மெய்யுடன் களிறு ஒன்று இவ்வழி போயிற்றோ? என வினவுகின்றான். இக்கேள்விக்கும் இருமகளிரிடம் இருந்தும் பதிலில்லை. இந்நிலையில் தனக்குள் உறுதியை வரவழைத்துக்கொண்டு, அவர்கள் அருகில் சென்று, ஒருவர் வந்து வினவினால், விடைகூறாது இருக்கின்றீர்? உங்களைப் பார்க்கும்போது, உங்களுக்கு இடை உண்டோ? இல்லையோ? என்ற ஐயம் எழுகின்றது என்கின்றான்.

தலைவனின் பேச்சைக் கேட்ட தோழி, இவர் முதற்கண் குறித்த, மான், பன்றி, யானை இவைகளைப் பின்பற்றிச் சென்று ஆடிய வேட்டைகள் எல்லாம் பொய்யாய்ப் போயின. அவ்வேட்டை முதலில் மானாய் இருந்தது. பின் பன்றியாய் உருமாறிற்று. பன்றியினின்று, வளர்ச்சிபெற்று யானையாய் வடிவெடுத்தது. இறுதியில் எங்கள் பூங்கொடி போலும் இடையாய்ச் சிறுத்துவிட்டது எனக் கூறி நகைக்கின்றாள். இதனால் தலைவன் வந்த நோக்கத்தினைத் தோழி உணர்கின்றாள். இதனை,

"வையார் மழுப்படை ஏகம்பர் ஈங்கோய் மலைப்புனத்துள்
ஐயார் வருகலை ஏனங் கரிதொடர் வேட்டையெல்லாம்
பொய்யான ஐயர் மனத்த(து)எம் பூங்கொடி கொங்கைபொறாப்
பையார் அரவிடை ஆயிற்று வந்து பரிணமித்தே"

(தி.ஏ.தி.பா.16)

என்ற பாடலானது உணர்த்திநிற்கும்.

பாங்கி மதியுடம்பாட்டில் முன்னுற உணர்தல்

தலைவன், தோழியின் மாட்டு வந்து குறையுறாது தலைவி குறிப்புக் கண்டு தோழி உணர்தல் முன்னுற உணர்தல் எனப்படும். இதனைத் தொல்காப்பியர்,

"நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி யெதிர்ப்பாடுள் ளுறுத்து வரூஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்"[21]

எனக் குறிப்பர்.

முன்னுற உணர்தல் என்பது நாணநாட்டம், நடுங்கநாட்டம் என இரு திறப்படும். இவற்றுள் 'நாணநாட்டம்' என்பது தலைவன், தலைவி இருவரது

கூட்டமுண்மையும் அறிவது காரணமாகத்தலைமகளது நாணத்தன்மையினை அறிதல் ஆகும். தொல்காப்பியர் 'நாணநாட்டம்' என்று ஒன்றினைத் தனித்துக்கூறவில்லையெனினும், 'பல்வேறு கவர்பொருள் நாட்டத்தானும்' என்பதனுள் குறிப்பால் உணர்த்துவர்.

தோழியானவள், தலைவியின் கள வொழுக்கத்தினை, நாணநாட்டம் கொண்டு அறியும் வகையினை, "எங்ஙனம் உணருமோ எனின், எம்பெரு மாட்டிக்குப் பண்டைத் தன்மைத்தன்றால் இவ்வேறுபாடு, இப்போது எற்றினால் ஆயிற்று, எனக்குச்சொல்லாய் என்னும், என, 'நெருநல்நின்னின் நீங்கி மேதக்கதோர் சுனைகண்டு ஆடினேன். நெடுங்காலமும் நின்றாடினேற்கு ஆயிற்று, ஆகதே கண்சிவப்பும், நுதல் வேறுபாடும் என்னும், அஃதேல் சுனையாடினோர்க்கெல்லாம் இக்காரிகை நீர்மை பெறலாமெனின், யானும் ஆடிக்காண்கேன் என்னும், எனக் கேட்டுத் தலைமகள் தலைசாய்த்து, நிலங்கிளையா நிற்பப், புணர்ச்சியுண்டென்று உணர்ந்து கொள்வாளாவது"[22] என விளக்குவர் இறையனார் களவியல் உரையாசிரியர்.

தலைவியின் நாற்றமும் ஒழுக்கமும் கண்டு தோழி முன்னுற உணர்தல்

பொன்வண்ணத்தந்தாதியில் வரும்தோழியானவள், தலைவியின் கண், வெளிப்போந்து நிற்கும் நாற்றத்தினையும், ஒழுக்க மாறுபாடுகளையும் கண்டு முன்னுற உணர்கிறாள்.

'தலைவியானவள் செய்வதுஅறியாது திகைக்கின்றாள். கொட்டாவி விடுகின்றாள். அவளின் உடம்பெங்கும் குங்கிலியத்தின் மணம் வீசுகின்றது. கண்களோ நீரினைச் சொரிகின்றன. தன்னை மறந்து நிற்கின்றாள். இவ்வாறு தலைவியின் கண் தோன்றும் மாறுபாடுகளைக் கண்டு, தோழி முன்னுற உணர்தலை,

"பாவிக்கும் பண்டையள் அல்லள் பரிசறி யாள்சிறுமி
ஆவிக்கும் குற்குலு நாறும் அகம்நெக அங்கமெங்கும்

காவிக்கண் சோரும்பொச் சாப்புங் கறைமிடற் றானைக்கண்ணில்

தாவிக்கும் வெண்ணகை யாளம்மெல் லோதிக்குச் சந்தித்தவே”

(பொ.வ.அ.பா.82)

என்ற பாடலானது விளக்கிடும். இப்பாடலில் குறிக்கப்படும் குங்கிலியம் சைவ சமயத் தலைவனாகிய சிவபெருமானுக்கு உரியதாகும். சைவத்தின் புறச்சின்னமாய் அமையும் குங்கிலியத்தினை அக இலக்கியத்தில் அமைத்துப் பாடுகின்ற மரபினை அடியார்கள் மேற்கொள்கின்றனர். சமயஞ் சார்ந்த பொருளை அக இலக்கியமரபில் அமைத்துப்பாடுவதோடு மட்டும் நில்லாமல், அத்தகைய மரபு அக இலக்கியத் தனித்தன்மையையும் சிதைத்துவிடாமல் பயன்படுத்தும் மாண்பு திருமுறை அருளாளர்களுக்கு அக இலக்கியத்தின்பால் இருக்கும் ஆழ்ந்த புலமையினை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

தலைவியின் தோற்றம் கண்டு மதியுடம்படுத்தல்

திருவாரூர் மும்மணிக்கோவையின் தோழியானவள் தலைவியைப் பிரிந்து சிறிது காலம் அப்பாலே சென்றாள். மீண்டுவந்து பார்த்தபொழுது, தலைவியின் இருள்போன்ற கூந்தல் கலைந்துள்ளது. வண்டுகள் ஒலிக்கும் மாலையானது பொலிவிழந்து சிதைந்துள்ளது. நுதலின்கண் உற்ற திலகமும் அழிந்துள்ளது. கண்களில் தீட்டிய அஞ்சனமும் கரைய, கண்கள் செம்மையோடி, தோழி இல்லாக்காலத்து நிகழ்ந்தவற்றை உரைப்பன போல் உள்ளன. தலைவியும் முன்பின் முரணாகப் பேசுகின்றாள். தலைவியின் முகம் வியப்புடையதாய், கொங்கைகளில் பூசப்பட்டிருந்த சாந்தம் அழிய, மேகலையும், உடையும் நெகிழ்ச்சி உடையதாய்க் காணப்படுகின்றன. அதனைக் கண்ட தோழி, இவ்வகை மாற்றங்கள் எதனால் விளைந்தது என அறியோம் எனக் கூறுபவள்போல், தலைவியின் களவொழுக்கத்தினை முன்னுற உணர்கின்றாள். இதனை,

"இருள்புரி கூந்தலும் எழில்நலம் சிதைந்தது
மருள்புரி வண்டறை மாலையும் பரிந்தது
ஒண்ணுதல் திலகமும் அழிந்தது : கண்ணும்
மைந்நிறம் ஒழிந்து செந்நிறம் எய்தி
உள்நிறை கொடுமை உரைப்ப போன்றன.
சேதகம் பரந்தது செவ்வாய் : மேதகு
குழைகெழு திருமுகம் வியர்ப்புள் ளூறுத்தி
இழைகெழு கொங்கையும் இன்சாந் தழீஇக்
கலையுந் துகிலும் நிலையிற் கலங்கி
என்னிது விளைந்த வாறென மற்றிது
அன்னது அறிகிலம் யாமே செறிபொழில்
..
சுரும்பிவர் நறும் போது கொய்யப்
பெருஞ்செறு வனத்தில்யான் பிரிந்ததிப் பொழுதே"

(தி.மு.கோ.பா.10)

என்ற பாடலானது உணர்த்திடும்.

தோழி நாண நாட்டத்தால் முன்னுற உணர்தல்

திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் வரும் தலைவி, தன் ஆயத்தாரை விடுத்து, தலைவனுடன் சென்றுகூடி வருகின்றாள். அவளின் தோற்ற வேறுபாட்டினைக் கண்ட தோழி, தலைவியின் களவொழுக்கத்தினை நாண நாட்டத்தினால் அறிகின்றாள்.

அதாவது, தலைவி அருவியாடும் ஆரவாரத்தில், தோழியர் கூட்டத்தினின்று, பிரிந்துசென்று தலைவனொடு கூடி வருகின்றாள். அப்பொழுது அவள் முன்னிலும் மிக்க மகிழ்ச்சியும், பொலிவும் உடையவளாய் இருப்பதைக் கண்டு, அவளது செயலை நன்கு உணர்ந்துகொள்கிறாள் தோழி. அவ்வாறு தான் உணர்ந்துகொண்டதைத்

தலைவியும் உணரும்பொருட்டு, பொலிவுடன் நின்ற தலைவியை, தலைவி என உணராள்போன்று வனத்தில் உறையும் தேவமடந்தையர் ஆகிய 'ஆரணங்கு' என்று உணர்ந்தவள் போன்று, 'ஆரணங்கே! நீயும் என் தலைவியைப் போல் இருக்கின்றாய்! ஆகையால், இப்பொழுது அருவி ஆடச் சென்றுள்ள அவள் வந்தபின் நீ செல்க! என்று கூறுகின்றாள். தோழி இவ்வாறு அறியாள்போல் கூறுதலால், தலைவி தனது புதுநலத்தினையும், அதன் காரணத்தையும் தோழி தெரிந்துகொண்டாள் என அறிந்து, நாணமுற்று தன் களவொழுக்கத்தினைக் கூறுவாள். இவ்வாறு தோழி நாண நாட்டத்தால் முன்னுற உணர்ந்ததை,

"எம்பெண்ணொருத்தி பாங்கொத்திருந்தனை ஆரணங்கேபடர்
கல்லருவி ஆங்கத் திருந்திழை ஆடிவந்தாற்கண்டு அடிவருத்தே"

என்ற அடிகள் விளக்கும். இத்தகைய தோழியின் நுண்மான் நுழைபுலத்தினை,

"பூங்கொத் திருந்தழை யார்பொழில் கச்சியே கம்பர்பொற்பார்
கோங்கத் திருந்த குடுமிக் கயிலையெம் பெண்ணொருத்தி
பாங்கொத் திருத்தனை ஆரணங் கேபடர் கல்லருவி
ஆங்கத் திருந்தீழை ஆடிவந் தாற்கண்(டு) அடிவருத்தே"

(தி.ஏ.தி.பா.12)

என்பது காட்டும்.

சேட்படை

தோழி பலவகையானும் நாடி மதியுடம்பட்டதனை அறிந்த தலைவன், தோழியை அணுகித் தன் குறையினை முடித்துக்கொள்ள முயல்வான். தலைவன் பலவாறு தோழியை வேண்டியும், தோழி இணக்கம் காட்டாது, தலைவனை விலக்கி நிறுத்தல் 'சேட்படை' எனப்பெறும். சேட்படை என்பதனுள், தலைவியை அடைதல் எளிது என நினைக்கும் தலைவனுக்கு, அவ்வாறு அடைதல் எளிதன்று என உணர்த்தும் நோக்கம் நிறைந்திருக்கும். சேட்படுத்தலின் பயனை, "ஒரு பொருளை அடைவித்தற்கு

முன்னால் அதனை அடைவித்தலில், உள்ள அருமையைப் புலப்படுத்தி, பின்னர் அதனை அடைவித்தால், அடைதற்கரிய பொருளை அடைந்தோமென்று அதனை அடைவார்க்கு முன்னினும் பேரின்பம் பெருகுதலோடு, அதனை அடைவித்தார் மாட்டும் இத்துணை அரிதாயபொருளை எப்படியோ அடைவித்தார்களேயென்று நினைத்து அவர் திறம் உணர்ந்து உள்ளம் நெகிழுமாற்றால் அன்பு வளரும். அடைந்திட்ட அப்பொருளின் மாட்டும் 'அரிதாய இப்பொருள் எமக்கு கிட்டிற்றன்றே' என்று உலவாத உள்ள வீழ்ச்சியும், ஆணித்தரமான மெய்யன்பும் முறுகி நிலைக்கும்"[23] என விளக்குவர் இளவழகனார். இச்சேட்படையின் இலக்கணத்தை,

> "குறையுறுங் கிழவனை உணர்ந்த தோழி
> சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலும்"[24]

என இறையனார் களவியல் குறிப்பிடும். இதற்கு நக்கீரர் "சிறை என்பது காப்பு, 'உற' வென்பது மிகுதி. 'கிளத்தல்' என்பது சொல்லுதல், 'சேண்' என்பது அகற்றல், 'பட' என்பது நிகழ்த்தல், 'நிறுத்தல்' என்பது தழீஇக் கோடல் என்றவாறு. ஆற்றாத்தன்மைக்கண் நிறுத்தல் என்னும் சொல் தழீஇக்கொள்ளும் என்பது, எனவே தலைமகனை ஆற்றாமை செய்வனபோன்று வைத்து, ஆற்றுவிப்பன சில சொற்சொல்லும் என்பது போந்தது"[25] என உரைவகுப்பர். இவ்உரையான், சேட்படை என்பது, தலைவனை அகற்றி நிறுத்தல் என்பதன்று. சேட்படுத்தல் போன்று பின்னால் ஆற்றுப்படுத்துவது' என்பது பெறப்படும்.

சேட்படையில் அஞ்சி அச்சுறுத்தல்

தலைவன் குறியிடத்து நிற்பதால், அவனுக்கும் தனக்கும் துன்பம் நேரும் என்று தான் அஞ்சிய தன்மையினைத் தலைவனிடம் கூறி, அவனையும் அச்சமுறச் செய்வதே 'அஞ்சி அச்சுறுத்தல்' எனப்பெறும். இதனைத் தொல்காப்பியர்,

"முன்னுறு புணர்ச்சி முறைநிறுத்துரைத்தலும்

அஞ்சி அச்சுறுத்தலு முரைத்துழிக்கூட்டமோடு

எஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும்"[26]

எனச் சுட்டுவர். இதற்கு, இளம்பூரணர், "இவ்வாறு அச்சுறுத்தலாவது, யாய்வருவள் என்றானும், தமையன்மார் வருவர் என்றானும் காவலர் வருவர் என்றானும் கூறுதல்"[27] என உரைவகுப்பர். நச்சினார்க்கினியர், "ஆற்றுவித்துங் கடிது குறைமுடியாமைக்கருதும் தோழி குரவரைத் தான் அஞ்சி, தலைவியும் அவரை அஞ்சுவள் எனக் கூறலும்"[28] என விரித்துரைப்பர்.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவையின் தோழி, தலைவனை அஞ்சி அச்சுறுத்துகின்றாள். தலைவனே! கதிரவன் மேற்குக் கடலில் சென்று மறைந்தனன். எனவே இவ்விடத்து, எம் அண்ணன் மாரும், அன்னையரும் வருவர். அவர்கள் அறியின் அலராய் முடியும். ஆகையால் நீ இன்றிரவு இப்புனத்தில் தங்கியிருத்தல் இயலாது, உடனே மீள்க! எனக் குறிப்பிடுகின்றாள். இதனை,

"என்னையர் இங்கு வருகுவர் பலரே

அன்னை காணின் அலர்தூற்றும்மே

சிறுகூத்து இயற்றிச் சிவன் அருள்பெற்ற

நற்றமிழ் விரகர் பற்றலர் போல

இடுங்கிய மனத்தோடு ஒடுங்கிய சென்று

பருதியும் குடகடல் பாய்ந்தனன்

கருதி நிற்பது பிழை கங்குலிப் புனத்தே" (ஆ.பி.தி.மு.பா.19)

என்ற பாடலானது விளக்கி நிற்கும்.

தோழி வரைவுகடாவல்

தலைவன், தலைவியது அன்பின் மிகுதிப்பாட்டினைத் தோழி, உணர்ந்தவளாதலின் இருவரின் எதிர்காலம் நோக்கிச் செயல்படும் முதன்மைப் பாத்திரமாய் அமைகின்றாள். ஆகையால், தலைமக்களைக்

களவினின்று, கற்பு நெறிக்குக் கொண்டுவரும் முகத்தான், பகற்குறி, இரவுக்குறியினை மறுத்துரைக்கின்றாள். இத்தகைய செயல் வரைவு கடாதல் எனப்படுகின்றது. "வரைவுகடாவுதல் - மணந்துகொள்ளுதலைப் பற்றி உசாவுதல், கடாவல் - என்ற சொல்லுக்குத் திருமணத்தில் செலுத்துதல் என்ற பொருளும் உண்டு"[29] எனக் குறிக்கிறது தமிழ் மொழியகராதி. வரைவுகடாதலை, "தலைவன் இருவகைக் குறிகளாலும் பலகாலம் வந்தொழுகுமிடத்து இக்களவு வெளிப்படச் சுற்றத்தார் இற்செறிப்பாரோ என்றும், வழியாலும், பொழுதாலும் தலைவற்கு ஏதம்வரும் கொல் என்றும், தோழி அச்சமுற்று இவ்வொழுக்கம் ஒழுகுங்கால் நும் குறிப்புக்குஞ், சிறப்புக்கும் பொருந்தாமையின், இனி நீவிர் இவளை மணந்துகொள்வதே தகுதியென்று தலைவனை வரைவுகடாவத் தொடங்குவாள்"[30] என விளக்குவார் மு.இராகவையங்கார்.

வரைவு கடாதலை குறிப்பு, வெளிப்படை எனப்பிரித்து, "குறிப்பாவது தோழி தலைவனை நோக்கி, எம்மன்னை தலைவியின் வேறுபாடுகண்டு, இஃது இவட்கு எதனால் வந்தது என்று ஆராய்வளாயினள் எனப் பொய்தலைப் பெய்து, கூறுதல் போல்வது இதனாற் போந்தது. அன்னை அதன் காரணமறிந்து இற்செறிக்கக்கூடுமாதலின் அதற்குள் நீவிர் வரையாது தாழ்ப்பதென்? என்பதாம். வெளிப்பட வரைவுகடாதலாவது நுங்களவொழுக்கம் ஊராரால் அறியப்பட்டு முதலில் அம்பலாய் முளைத்து பின் அலராய் வளர்ந்தது. இனிவரையத் தாழ்கற்பாலீர் அல்லீர் என்றாற்போல்வன"[31] எனவும் விரித்துரைப்பர் மு.இராகவையங்கார்.

வரைவு கடாவும் தோழியின் இயல்பினை, "காமம் காழ்க்கொண்ட இளைய நெஞ்சங்களுக்கு மேல்செய்யவேண்டுவன புலப்படா. எண்ணிப்பார்க்கும் அறிவு சில நாளைக்குத் தோன்றாது. இவ்விருவர் செய்கையைத் தோழி அறிவுநிலையில் நின்று நாடுகின்றாள். களவு நீட்டிப்பின் வரத்தகும் கேடுகளைக் காண்கின்றாள். இளையளாயினும்

பொறுப்பு உணர்ந்தவளாதலின் திருமணம் செய்துகொள்க என்று தலைவனை இடித்துரைக்கின்றாள்"[32] எனக் குறிப்பிடுவர் வ.சுப.மாணிக்கனார்.

"தோழி தலைவியுடன் பிரித்தறியமுடியாத தன்மை உடையவளாதலின் தலைவி உணர்வதைத் தானும் உணர்ந்துகூற இயலும். தோழி தலைவியின் வேறுபட்டவள் என்பது உண்மையாதலின் பிரிந்துநின்று மூன்றாவது ஆளாக நின்று திருத்தவும் இயலும். தலைவன், தலைவி, தாயார் போன்றோரின் குற்ற நாற்றங்களைத் திறன்ஆய்வு முறையில் எடுத்துக்கூறவும் அவளால் இயலும். இத்தோழி, தலைவன், தலைவியர் உறவையும் அறிவாள். அதுபற்றி ஊரார் வாயையும் உற்றுக்கேட்டு அறிவாள். இதனால் தலைவன் தலைவியரை நல்வழிப்படுத்தவும், தீங்கு வராமல் காக்கவும் அவளால் முடியும்"[33] எனத் தோழியின் செயல்களை முறைவழிப்பட்டதாய்த் தமிழண்ணல் விளக்குவர். தோழியின் இத்தகைய முறைவழிப்பட்ட செயல்களில் ஒன்றே வரைவுகடாதல் ஆகும்.

தொல்காப்பியர் உணர்த்தும் தோழி வரைவுகடாவல்

'நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்' எனத் தொடங்கும் களவியல் நூற்பா களவொழுக்கத்தில் தோழிக்குரிய கிளவிகளை எல்லாம் தொகுத்துக்கூறுவதாகும். இதில் அமைந்துள்ள,

"பெருமையிற் பெயர்ப்பினும் உலகுரைத் தொழிப்பினும்
அருமையின் அகற்சியும்............
ஆற்றது தீமையும் அறிவுறு கலக்கமும்
காப்பின் கடுமை கையறவரினும்
களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்
காதல் மிகுதி உளப்படப் பிறவும்
நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்புஞ் சிறப்பும் இறப்ப நோக்கி
அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ

அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்

...

வரைவுடன் பட்டோர் கடாவல் வேண்டினும்”[34]

என்ற அடிகள் வரைவுகடாதலை விளக்கி நிற்கும். இதற்கு, “உலகத்தார் மணம் செய்துகொள்ளுமாறு வரைந்துகொள் எனக் கூறுமிடத்தும், தலைவியை அணுகுவதற்கு இயலாமையைக் கூறி அகற்றுமிடத்தும், இக்களவொழுக்கம் தந்தை, தனையர்க்குப் புலனாயின் யாதாய் விளையுமோ என அஞ்சியவளாய், அவ்வச்சத்தினைத் தலைவனுக்கு அறிவுறுத்தலும், தலைவன் வருகின்ற வழியினது தீமையைத் தாங்கள் அறிதலுற்றமையால் நேர்ந்த கலக்கத்தின் கண்ணும், தலைமகளை இற்செறித்துக் காத்தலின் கடுமை எல்லை கடந்தைமையாலும், பகற்குறி, இரவுக்குறி என்னும் இடமும் பொழுதும் ஆகத் தங்களுள் வரைந்துகூறும் நிலையினை விலக்கி, தலைவன், தலைவி இருவரிடையேயமைந்த காதல் மிகுதியுட்படத் தலைமகனுக்குரிய நாடு, ஊர், மனை, குடியுயர்வு, பிறந்தயாண்டு, பெற்றுள்ள சிறப்பு என்பன பிறரின் ஒவ்வாது மேம்பட்டவையாதல் நோக்கி, தலைவனைக் குறித்துத் தோன்றிய கூற்றுக்களோடு கூட்டி, அத்தன்மைத்தாகிய நிலைமையின் கூறுபாட்டிலே, மணஞ்செய்தலை வேண்டியும், தலைவியின் சுற்றத்தார் மகட்கொடுப்பதாக உடன்பட்ட தலைவனை விரைந்து மணந்துகொள்க எனத் தூண்டுதற் கண்ணும், என வெளிப்படும் தோழியின் கிளவிகள் வரைவு கடாதல் செய்திகளைப் பெரும்பான்மையும், சிறுபான்மை அறத்தொடு நிற்றலையும், மையமாகக் கொண்டு அமைந்துள்ளன”[35] என விளக்கம் தருவர் க.வெள்ளைவாரணர்.

தொல்காப்பியத்தின் பொருளியலில் காணப்பெறும்,

“பொழுதும் ஆறுங் காப்புமென் றிவற்றின்

வழுவி னாகிய குற்றம் காட்டலும்

தன்னை யழிதலும் அவனூறஞ் சலும்

இரவினும் பகலினும் நீவா என்றலும்

கிழவோன் தன்மை வாரல் என்றலும்

நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்

புரைபட வந்த அன்னவை பிறவும்

வரைதல் வேட்கைப் பொருள என்ப"[36]

என்ற நூற்பாவானது தோழி கூற்றுக்களைத் தொகுத்துரைக்கும். இந்நூற்பாவானது, 'நாற்றமும் தோற்றமும்' என்ற களவியல் நூற்பாவினுள் 'ஆற்றது தீமை அறிவுறு கலக்கம் முதல் அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்' என்பது வரைகூறப்பட்ட சிலகிளவிகளுக்குப் பயன்உணர்த்தும் முறையில் அமைந்துள்ளது[37] என்பர் இளம்பூரணர்.

இவ்வாறு தொல்காப்பியரால் தொகுத்தும், விரித்தும் கூறப்பட்ட தோழிவரைவுகடாவல் என்னும் அகமரபு திருமுறைகளில் நிறைந்து காணப்படுகின்றது. இறையுணர்வுக்காதல்நெறியில் ஈடுபட்ட மானுட ஆன்மாவானது இறைவனின் அருளிச்செயலைப்பெற விழைகின்றது. இறைவனின் அருளாற்றல்பெறக் கால இடையீடு ஏற்படும் நிலையில், அதனை நீக்கி விரைந்து ஆட்கொள்ளல் வேண்டும் என விழையும் வேட்கையின் காரணமாகவே வரைவுகடாவல் என்னும் துறை திருமுறைகளில் மிகுந்து காணப்படுகின்றது.

தோழி இற்செறிப்புக் கூறி வரைவுகடாவல்

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் இடம்பெறும் தோழியானவள் இற்செறிப்புக்கூறி வரைவு கடாவுகின்றாள். அவள் தலைவனிடத்து, எம் தலைவியானவள் சீர்காழியைப் போன்ற அழகிய நெற்றியை உடையவள், அத்தகையோள் நின்பால் கொண்ட காதலால் வேறுபட்டாள். தலைவியின் வேறுபாட்டினை, அவள்தம் இளங்கொங்கைகளைப் பார்த்தே நற்றாய் அறிந்தனள். ஆகையால் அவள் தலைவியை இற்செறிக்க எண்ணினள். தலைவியை இனிக் குறியிடத்தின்கண் காணல் அரிதாம். விரைந்து

மணந்துகொள் என்று வரைவுகடாவுகின்றாள். இதனை,

“கற்பா நறவம் மணிகொழித் துந்தும் அலைச்சிலம்பா!
நற்பா மொழியெழில் ஞானசம் பந்தன் புறவமன்ன
விற்பா நுதலிதன் மென்முலை யின்னிளம் செவ்விகண்டிட்(டு)
இற்பா விடும்வண்ண மெண்ணுகின் றாளம்ம! வெம்மனையே”

(ஆ.பி.தி.பா.29)

என்பது உணர்த்தும்.

வேங்கையொடு வெறுத்து வரைவு கடாவல்

குறிஞ்சிநிலத்து வேங்கை மரம் நன்னாளை நோக்கியே மலரும்.[38] அஃதாவது அது மலரும் நாள் நன்னாளாக அமையும். களவுக் காதலின் தலைவன், தலைவியர் அந்நாளில் திருமணத்திற்கு விரைவர்.[39] அந்நிலையில் வேங்கையினைச் சோதிடம் வல்லது போல் ‘கணிவாய் வேங்கை’[40] ‘கணிவேங்கை’[41] எனக் குறிக்கும் மரபு தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றது. பிற்காலத்து வந்த கம்பரும் இம்மரபினை உட்கொண்டே,

“பண்மலர்ப் பவளச் செவ்வாய் பனிமலர்க் குவளை அன்ன
கண்மலர் கொடிச்சிமார்க்குக் கணித்தொழில் புரியும் வேங்கை”[42]

எனக் குறிக்கின்றார்.

வேங்கையொடு வெறுத்து வரைவுகடாதல் என்பதனை, ‘வரைதல்பொருட்டாய் வேறுபட வருவன வெல்லாம்’ என்பதனுள் அமைத்து, “குறித்த இன்பம் நினக்கெவனரியவென வரைதல் வேண்டியவாறும், வேங்கை விரிந்ததனால் தினையறுத்தலின் இற்செறிப்புக் கூறியவாறும்”[43] என உரைவகுப்பர் நச்சினார்க்கினியர்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின் தோழி, வேங்கையொடு வெறுத்து வரைவுகடாவுகின்றாள். அவள் வேங்கையிடம் கூறுதற்போன்று தலைவனுக்குக் குறிப்பால் உணர்த்துகின்றாள்.

“வேங்கைகளே! நீங்கள் பூக்கும் காலத்தில் தினைமுதிர்ந்து அறுவடைக்காலம் அமையும். தினைப்புனம் அறுவடை செய்தால் தலைவி இற்செறிக்கப்படுவள். எனவே தலைவனைக் குறியிடத்துக் காண இயலாது. தலைவன் பிரியும் நேரம் வந்துவிட்டது எனக் கணியன் கூறுவதுபோல் கூறுகின்றீர்கள். ஆனால் எம் தலைவனோ எம்மைப் பிரிபவன் அல்லன், கொலைத்தொழிலை உடைய வேங்கைகள் (புலிகள்) நீங்கள் என்றமையால் இரக்கம் இன்றி இவ்வாறு உரைத்தீர்! உங்களைப்போய் கணித்தலில் வல்லவர்கள் என்று யாரே! உரைத்தனர் என்கிறாள். இப்பாடலில் வேங்கை பூக்குங்காலம் காதலர் திருமணத்திற்கு உரிய காலம் என்பதனை அறிந்தும் அறியான்போல் வரைவு நீட்டிக்கும் தலைவனைக் குறிப்பால் வரைவுகடாவுகின்றாள் தோழி. இதனை,

“பேசுக யாவர் உமைக்கணி யாரென்று பித்தரெங்கும்
பூசுகை யார்திரு நீற்றெழில் ஏகம்பர் பொற்கயிலைத்
தேசுகை யார்சிலை வெற்பர் பிரியும் பரிசிலர்அக்
கூசுகை யாதுமில் லாக்குலை வேங்கைப் பெயர்நும்மையே”

(தி.ஏ.தி.பா.23)

என்பது சுட்டும். இதில் தோழியானவள் வேங்கையினைப் ‘புலி’ எனக் குறிப்பிடுகின்றாள். இவ்வாறு அழைக்கும் மரபு உண்டு என்பதற்கு,

“உறுபுலி உருவேய்ப்பப் பூத்தவேங்கையை”[44]

“கருங்கால் வேங்கை வீயுகுதுறுகல்
இரும்புலிக் குருளையிற் தோன்றும்”[45]

என்ற அடிகள் சான்றாகும். மேலும், வேங்கைமலர் கொய்யச் சென்றவர்கள் ‘புலிபுலி’ என ஆராவரித்தலை,

“மன்றவேங்கை மலர்ப்பதம் நோக்கி
ஏறாதிட்ட ஏமப்பூசல்”[46]

“ஒலி சினை வேங்கை கொய்குவம் சென்றுழி
புலிபுலியென்னும் பூசல் தோன்ற”[47]

என்ற சங்க இலக்கிய அடிகள் உணர்த்தும். இதன் மூலம் திருமுறைத் தோழியின் மரபுசான்ற நுண்மாண் நுழைபுலம் வெளிப்போந்து நிற்கும்.

அலராகும் என அஞ்சித் தோழி வரைவு கடாவல்

தலைவியின் மாட்டுக் களவின்பம் விரும்பும் தலைவன் வரைவு நீட்டிப்பான். இந்நிலையில் களவானது வெளிப்பட்டு அலராகுமோ என்று தோழி அஞ்சுவாள். இவ்வாறு தோழி அஞ்சுவதற்கு, "களவு வாழ்வில் தலைவன், தலைவி இருவரும் தொடர்புடையவராயினும் தூற்றப்படுபவள் தலைவியே! தலைவன் அல்லன். தூற்றுபவரும் மகளிர்; தூற்றப்படுபவரும் மகளிர். களவில் அலரைப் பொறுத்தவரை அது மகளிர்க்குரியதாய் அமைகின்றது. களவில் தலைவன் வரத் தடையாய் இருப்பதாலும், தாய் அறிய வாய்ப்பேற்படுவதாலும், இற்செறிப்பு நிகழ்வதாலும், தலைவியாலும், தோழியாலும் அலர் வெறுக்கப்படுகின்றது. நாணுடைய மகளிர் தம் களவைப் பிறர் அறிவதாலும், அறிந்தோர் தூற்றுவதாலும், அதை எவரும் விரும்பாததாலும் அலரை வெறுப்பது இயல்பாகிறது. அதனால் தோழி தலைவனை வரைவுகடாவ ஊரலரைக் கருவியாகக் கொள்கிறாள்"[48] என்பர் சரளா ராசகோபாலன்.

ஒன்பதாம் திருமுறையில் அமைந்துள்ள திரைலோக்கிய சுந்தரம் என்ற பதிகத்தோழி அலராகும் என அஞ்சி வரைவுகடாவுகின்றாள். இத் தோழியானவள் தலைவனிடத்து, குறியிடத்தின்கண் நின்னைக்காண இயலாத தலைவி பெரிதும் வருந்துகின்றனள். நீ வராது போனாலும்கூட அவள் உன் நினைவிலே வீழ்ந்துகிடக்கின்றாள். அவளுடைய கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன. இவற்றை எம் அன்னையரோ, பிறரோ காணின் ஊரின்கண் அலராகும். எனவே விரைந்து வரைந்துகொள் என்கின்றாள். தோழியின் இக்கூற்றானது,

"நீ வாராதொழிந்தாலும் நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்துங் குவளைமலர் சொரிந்தனவால்

ஆவானென் றருள்புரியா அமரக்கணந் தொழுதேத்துந்

தேவாதென் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே" (9:12:5)

என்ற பாடலால் புலனாகும்.

ஆற்றின் அருமைகூறி வரைவு கடாவல்

களவின்கண் தலைவன், தலைவியைக் காணும் ஆவலுடையவனாய் அமைவான். அவ் ஆவலானது யாவரும் அஞ்சும் வழியினைத் தாண்டியும் தலைவனை வரச்செய்யும். ஆனால் வழியிடைத் தலைவனுக்கு ஏதம் விழையுமோ? என எண்ணித் தலைவி அஞ்சுவள். எனவே தோழி, தலைவனுக்கு ஆற்றின் அருமைகூறி, ஏதம் நிறைந்த இவ்வழி வருதல் வேண்டா என மறுத்து வரைவுகடாவுவாள்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின் தோழி, ஆற்றின் அருமைகூறி வரைவு கடாவுகின்றாள். தலைவன் வருகின்ற ஊரானது மயக்கத்தைத் தரும் இருளுடையது. நள்ளிரவுப் பொழுதில் உப்பங்கழியில் கொல்லும் முதலையொடு சுறாக்கள் வெளிவரும். இயக்கத்துக் கழிகிளர் ஓதம் நிறைந்த சுழிகளை உடைய புதைமணல் மிகுதியாய் உடையது. அக்கழியோ முடிவில்லாத நீட்சியினை உடையது. அவ் வழியில் தலைவன் வருதலை எண்ணித் தலைவி அஞ்சுகின்றாள். எனவே 'வாரற்க' என வரைவு கடாவுகின்றாள். இவ்வாறு தோழி வரைவுகடாவும் தன்மையினை,

"மயக்கத்த நல்லிருள் கொல்லும் சுறவொ டெறிமகரம்

இயக்கத் திடுசுழி ஓதம் கழிகிளர் அக்கழிதார்

துயக்கத் தக்கவர்க்கு அருளாக் கம்பர்கச்சிக் கடலர்பொன்உன்

முயக்கத் தகல்வு பெறாள்கொண்க நீர்வரும் ஊருக்கு அஞ்சுமே"

(தி.ஏ.தி.பா.95)

என்ற பாடலானது எடுத்துக்காட்டும்.

இப்பாடலின்கண் இடம்பெறும் கடலானது ஆகுபெயராய், அதன் கரையின்கண் அமைந்துள்ள நெய்தல் நிலப் பாக்கத்தினைக் குறிக்கின்றது. அதன்கண் உள்ள 'பொன்' என்பது நெய்தல் நிலத்தலைவியைக் குறித்து நின்றது. 'முயக்கத்து அகல்வு' என்பது தலைவன், தலைவியைத் தழுவுதலிலிருந்து நீங்குதலைக் குறிக்கின்றது. இவ்வாறு நெய்தல் நில வருணனையானது, துறைப்பொருளின் விளக்கத்திற்கு உறுதுணையாய் அமைந்துள்ளது.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் தோழி, தலைவனிடத்து 'நீ இரவின்கண் எம்மைத் தேடி வருகின்றாய்! நீ வருகின்ற அக்கொடிய வழியில் தீய ஊழ் உடையவரே வருவர். அவ்வழியிடை ஆண்யானை சீறி நிற்கும். குகைகளில் சிங்கமானது முழங்கும். இத்தகைய கொடிய வழியில் வருங்கால், ஏதேனும் ஊறு நிகழுமாயின் பழி எம்மையே சேரும்! எனவே 'வாரற்க' எனக் கூறி வரைவு கடாவுகின்றாள். இதனை,

"மறைமுழங் குங்குழ லார்கலி காட்ட, வயற்கடைஞர்
பறைமுழங் கும்புக லித்தமி ழாகரன் பற்றலர்போல்
துறமுழங் குங்கரி சீறி, மடங்கல் சுடர்ப்பளிங்கின்
அறைமுழங் கும்வழி நீவரிற் சால வரும்பழியே" (ஆ.பி.தி.பா.52)

என்பது காட்டும்.

தலைவியின் பிரிவாற்றாமை கூறி வரைவுகடாவல்

தலைவி, தலைவனைக் குறியிடத்தின்கண் காண இயலாதவழி, பெரிதும் வருந்துவள். இந்நிலையில் தலைவியின் மாட்டு,

"பசியட நிற்றல் பசலை பாய்தல்
உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்
கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்"[49]

என்பன தோன்றும். தலைவியானவள் துயரம் மேலிட்டவழி, பெறும்

இந்நிகழ்வுகளுக்கு, "பசியடநிற்றல் என்பதற்கு பசிவருத்தவும் அதற்குத் தளராது உணவு மறுத்தல் எனவும், பசலைபடர்தல் என்பதற்கு பசலைபரத்தல் எனவும், கண்துயின் மறுத்தல் என்பதற்கு இரவும் பகலும் துஞ்சாமை"[50] எனவும் உரைவகுப்பர் பேராசிரியர். இத்தகைய தன்மைகள் மிகும் நேரத்துத் தலைவி,

"புறஞ்செயச் சிதைத்தல், புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையற உரைத்தல்"[51]

போன்ற மெய்ப்பாடுகளைப் பெறுவள். இந்நிலையில் தோழி வரைவு கடாவுவள். தொல்காப்பியத்தின் 'நாற்றமும் தோற்றமும்' என்ற நூற்பாவிற்கு உரைவகுக்கும் நச்சினார்க்கினியர் 'அனைநிலை வகை' என்பதனுள் இதனை அடக்குவர். மேலும் "தலைவியாற்றாமை கண்டு வரைவுகடாவா வென்று தலைவியைக் கேட்டலும், சிறைப்புறமாகவுஞ், சிறைப்புறமன்றாகவும், தலைவியாற்றாமை கண்டு வரைவு கடாவுவனவும், பிறவும் வேறுபட வருவதையும் இதனுள் அமைக்க"[52] எனவும் உரைவகுப்பர்.

பரணரின் சிவபெருமான் திருவந்தாதியில் வரும் தோழி, தலைவியின் பிரிவாற்றாமை கூறி வரைவுகடாவுகின்றாள். "தலைவியானவள் தலைவன்மேல் கொண்ட காதலால் உண்பதனையும் மறந்தாள். உறக்கமும் தொலைத்தாள். உடம்புநனி சுருங்கி பசலைபாய்ந்து வளை இழந்தாள். அதனால் ஊராரின் அலருக்கும் ஆளானாள். எனவே நீ விரைந்துவந்து வரைந்துகொள் என்கிற தோழியை,

"ஊணொன்றும் இல்லை உறக்கில்லை உன்மாலின்
ஊணென்று பேசவோர் சங்கிழந்தாள் - ஊணென்றும்
விட்டானே! வேள்வி துரந்தானே! வெள்ளநீர்
விட்டானே புன்சடைமேல் வேறு!" (சி.தி.பா.30)

என்ற பாடல் உணர்த்தி நிற்கும்.

தலைவி பசியடநின்று, கண்துயில்மறுத்து, பசலை பாயநின்றாள் என்பதனை, 'ஊணொன்றும் இல்லை, உறக்கில்லை, உன்மாலின்' ஊணொன்று பேசுவோர் சங்கிழந்தாள்' என்ற அடிகள் விளக்கி நிற்கின்றன.

இரவுக்குறிக்கண் தலைவன் வரவுணர்ந்து உரைத்தல்

பாங்கியற் கூட்டத்தின்பின் தலைவியைச் சேரவிரும்பும் தலைவன், குறியிடத்து வருவான். இக்குறி பகற்குறி, இரவுக்குறி என இருதிறப்படும். இவற்றுள் இரவுக்குறி நிகழிடங்களைத் தொல்காப்பியர்,

"இரவுக்குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலையான"[53]

எனச் சுட்டுவர். இவ்வாறு இரவுக்குறியிடத்துத் தலைவியைக் காணவரும் தலைவன், தன் வருகையின் அறிகுறியாகச் சில அடையாளங்களை நிகழ்த்துவான். அவை முறையே, புனலொலிப்படுத்தல், புள்ளெழும்புதல் போன்றனவாகும்.

தலைவன் எழுப்பும் அடையாளங்களின்வழித், தலைவனின் வரவினை உணர்ந்த தோழி, தலைவியிடம் அதனை அறிவிப்பாள். இச்செயல் 'வரவுணர்ந்து உரைத்தல்' எனப்பெறும். தொல்காப்பியரின் 'நாற்றமும் தோற்றமும்' என்ற நூற்பாவில், 'பிறவும்' என்பதனுள் நச்சினார்க்கினியர் இதனை விளக்குவர்.[54]

தலைவனின் வரவுணர்ந்து தலைவிக்கு உரைக்கும் தோழியை திருவாரூர் மும்மணிக்கோவை காட்டுகின்றது. இதில் இடம்பெறும் தோழி, தலைவியிடத்தில், தலைவியே! ஊர் முழுதும் உறங்கிவிட்டது. உலகம் முழுவதும் நள்ளிரவு நிலையினை அடைந்துவிட்டது. உலகஉயிர்கள் எல்லாம் ஓசையின்றி அடங்கிவிட்டன. இந்நேரத்தில் திருமறைக்காட்டின் நீர்த்துறையில் இரைமேய்ந்த பின்னும், பறவைகள் உறங்காமல் ஆராவரிக்கின்றன

என்கிறாள். இதன்வழி, நள்ளிரவில் புட்கள் ஆராவரிப்பதால் தலைவன் குறியிடத்து வந்து அடையாளம் எழுப்பினான் என்பதைத் தலைவிக்குக் குறிப்பால் உணர்த்துகின்றாள். தோழியின் இத்தகு செயலினை,

"ஊரெல்லாம் துஞ்சி உலகெலாம் நள்ளென்று
பாரெல்லாம் பாடவிந்த பாயிருட் கண் - சீருலாம்
மாந்துறைவாய் ஈசன் மணிநீர் மறைக்காட்டுப்
பூந்துறைவாய் மேய்ந்துறங்கா புள்" (பா.26)

என்ற பாடல் உணர்த்தும்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதித் தோழி, தலைவனின் வரவினை, மற்றுமோர் வகையில் உணர்த்துகின்றாள். இரவுக்குறிக்கண் தலைவன் வந்து, தன்வரவினை உணர்த்தும் வகையில் ஒலி எழுப்பி நிற்கின்றான். அதனை உணர்ந்த தோழி, தலைவியிடத்தில், 'பெரிய யானை ஒன்று வேங்கை மரத்தினை மோதிப் போரிட்டதோ! அதனால் இவ்வகையான ஓசை எழுகின்றதோ அறியேன் எனக் குறிப்பான் உணர்த்திநிற்கின்றாள். இதனை,

"சேய்தந்த அம்மை உமைகண வன்திரு ஏகம்பத்தான்
தாய்தந்தை யாயுயிர் காப்போன் கயிலைத் தயங்கிருள்வாய்
வேய்தந்த தோளிநம் ஊசலாடும் விரைவேங்கை தன்னைப்
பாய்தந்து பூசலுண்டாங் கொண்ட தோகைப் பகடுவந்தே"

(தி.ஏ.தி.பா.20)

என்ற பாடலானது விளக்கிடும்.

ஒருவழித்தணத்தலில் தலைவியை ஆற்றுவிக்கும் தோழி

களவு என்னும் ஒழுக்கத்தின்கண் தலைவன், பகற்குறி, இரவுக்குறிக் கண் தலைவியைக் கண்டு கூட்டம் நிகழ்த்துவான். அதனான், அவர்களின் களவொழுக்கம் பிறர்க்குப் புலனாகி அலர் எழ ஏதுவாகும். அந்நிலைமையின் கண், தலைவன்அலர் நீங்குமாறு கூட்டம் நீங்கி ஒருவழி நிற்பான். இவ்வாறு நிற்றல் ஒரு வழித்தணத்தல் எனப்பெறும்.

ஒருவழித்தணத்தலால் விளையும் நன்மை பற்றி, "ஊரிலே அலர் மிகுந்ததென்ற அளவானே, அவ்வலரடங்குமாறு தலைவன் ஒருவழித்தணந்து நிற்கின்றானென்பதொன்றே, அஃது அறநெறியாகுமென்பதனை நன்கு விளங்கவைக்கும். மேலும், 'நிழலருமை வெய்யிலில் தெரியுமென்னும் பழமொழியினையொப்ப, உழுவலன்பு பாராட்டி, உலாவின்பந்தருந்தன் தலைவியவளின், காதற்கூட்ட மேன்மை, அதனை எளிதிற் பெறமாட்டாது, தனித்திருந்து வருந்துந் தலைமகனொருவனுக்கே, செவ்வையாய்ப் புலப்பட்டு விளங்கும்"[55] என விளக்குவர் இளவழகனார்.

எனவே ஒருவழித்தணத்தலில் தலைவனின் உள்ளமும், தலைவியின் உள்ளமும் வருந்தி நிற்கும் என்பது பெறப்படுகின்றது. இந்நிலையின்கண் தலைவன் காலம் நீட்டிப்ப, வரும் வழியிடை அவனுக்கு ஏதம் விளைந்ததே என்று எண்ணித் தலைவி அஞ்சுவள். தலைவியின் அச்சம் அறிந்த தோழி அவளைத் தேற்றுவாள்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் தோழி தலைவியைப் பெரிதும் ஆற்றுவிக்கின்றாள். அவள் தலைவியிடத்தில், 'நம்முடைய தலைவன் தன்னை எதிர்ப்பவர்களின் வேல்களை எல்லாம் பூக்களாய் எண்ணி அழிக்கும் ஆற்றல் பெற்றவன். எனவே தலைவன் முன்நிற்பவர் எவருமிலர். ஆகையால் வழியிடை ஏதம் விளைந்ததோ என்று எண்ணி அஞ்சுதல் வேண்டாம் என்கிறாள். இதனை,

"மயிலேந்திய வள்ளல் தன்னை
அளிப்பமதி புணர்ந்த
எயிலேந்திய சண்பை நாதன்
உலகத் தெதிர்பவர் யார்?
குயிலேந்திய பொழிற் கொங்கேந்
திய கொம்பி னம்புதழீஇ

அயிலேந்திய மலர் கண்டுள

னாய்வந்த அண்ணலுக்கே" (ஆ.பி.தி.பா.64)

என்ற பாடலானது காட்டும்.

தோழி அறத்தொடு நிற்றல்

தொல்காப்பியர் களவியலில் தோழிக்குரிய கிளவிகளையெல்லாம் தொகுத்துக் கூறும் நூற்பாவில் அறத்தொடு நிற்றல் பற்றிய செய்திகளைக் குறிப்பர். 'நாற்றமும் தோற்றமும்' எனத் தொடங்கும் நூற்பாவில்,

"காதல் மிகுதி உளப்படப் பிறவும்
நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்புஞ் சிறப்பும் இறப்பநோக்கி
அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ
அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்
ஐயச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்
அவள்விலங் குறினும் களம்பெறக் காட்டினும்
பிறன்வரை வாயினும் அவன்வரைவு மறுப்பினும்
முன்னிலை அறனெனப் படுதலென் றிருவகைப்
புரைதீர்கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்
ஆங்கதன் தன்மையின் வன்புறை உளப்பட"[56]

என வரும் அடிகள் அறத்தொடு நிலையின் விரிவினைக் கூறுவதாய் அமைந்துள்ளன.

"தலைவன், தலைவி இருவரிடை அமைந்த காதல் மிகுதியுட்படத் தலைமகனுக்குரிய நாடு, ஊர், மனை, குடியுயர்வு, பிறந்தயாண்டு, பெற்றுள்ள சிறப்பு என்பன பிறரின் ஒவ்வாது மேம்பட்டனவாதல் நோக்கித் தலைவனைக் குறித்துத் தோன்றிய கூற்றுக்களோடு கூட்டி,

அத்தன்மைத்தாகிய நிலைமையின் கூறுபாட்டினாலே, மணஞ்செய்தலை வேண்டியும், தலைவனொருவனோடு தலைவிக்குக் கூட்டம் நேர்ந்திருக்குமோ என ஐயுறுதற்குக் காரணமாகிய நிகழ்ச்சியைக் கண்ணுற்று வினவிய செவிலியாகிய தாய்க்கு எதிர்நின்று அச்செய்தி பொய் என மறுத்து, மெய்மையான நெறியில் நிகழ்த்துதற்குரிய வேறோர் நிகழ்ச்சியாக அவள் நம்பும்படிப் படைத்துக் காட்டியும், தலைவி மெலிந்து வேறுபட்ட காலத்து அவளது மெலிவுதீர, அறிவுரை வினவி, கட்டும், கழங்கும் இட்டுக் குறிபார்க்கும் இடத்தும், வெறியாட்டு நிகழ்த்துமிடத்தும், அயலானொருவனுக்குத் தலைவியை மணஞ்செய்து கொடுத்தலைச் சுற்றத்தார் மறுத்த நிலையிலும், முன்னிலையாக்கி மொழிதல், அறத்தொடு நிற்றல் என்னும் இருவகையினாலும், குற்றந்தீர்ந்த சொற்களைச் செவிலிக்குக் கூறி, அதனை நற்றாய் செவியில் புகும்படி செய்தற்கண்ணும், தலைவியின் சுற்றத்தார் மகட்கொடுப்பதாக உடன்பட்ட தலைவனை விரைந்து மணந்துகொள்க எனத் தூண்டுதற்கண்ணும்”[57] என விளக்கம் தருவர் வெள்ளைவாரணர்.

மேற்கண்ட நூற்பா அடிகள் அறத்தொடு நிற்றல் தொடர்பான செய்திகளைத் தருகின்றன.

இறையனார் களவியல் தோழி அறத்தொடு நிற்கும் இடம் குறித்து,

“காப்பு கைமிக்கு காமம் பெருகினும்
நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்
வரைவெதிர் கொள்ளாது தமரவன் மறுப்பினும்
அவனூறஞ்சும் காலம் ஆயினும்
அந்நாலிடத்தும் மெய்நாண் ஒரீஇ
அறத்தொடு நிற்றல் தோழிக்கு உரித்தே”[58]

எனக் குறிக்கும்.

தோழி அறத்தொடு நிற்கும் திறன்

தொல்காப்பியர் தோழி அறத்தொடு நிற்கும் திறம் குறித்து இரண்டு நூற்பாக்களில் குறிப்பிடுவர்.

"அறத்தோடு நிற்கும் காலத் தன்றி

அறத்தியல் மரபிலள் தோழி என்ப"[59]

'தலைவி, தலைவனொடு தனக்குண்டாகிய தொடர்பினைத் தம் பெற்றோர்க்கு அறிவித்தல் வேண்டும் என்னும் கருத்தினளாகிய காலத்தன்றி, தோழி தானே அறத்தொடு நிற்கும் தன்மையுடையவள் இல்லை' என்பது இதன் பொருளாகும். இந்நூற்பாவிற்கு "அறத்தியல் மரபாவது, தலைவி அன்பிற்சிறந்தான் ஒருவனைத் தனக்குரிய தலைவனாய்த் தன்னுள்ளத்தில் கொண்டுள்ளாள். அவளை, அவளால் விரும்பப்பெற்ற தலைவனுக்கே மணஞ்செய்து கொடுத்தல் வேண்டும் எனக் காதலர் இருவரது அன்பின் வழிபட்ட மனைவாழ்க்கை அறத்தின் முறையாகும் எனக் கூறுதல். இங்ஙனம் காதலர் இருவரிடையே மறைவில் நிகழ்ந்த அன்புரிமையை, அறத்தின்வழி நின்று வெளிப்படுத்துதல் அறத்தொடு நிற்றல் எனப்படும். அறத்தொடு நிற்றல் என்னும் தொடருக்கு 'அறம்' என்பது 'தக்கது' 'தக்கதைச் சொல்லி நிற்றல்' எனவும், 'அறம்' என்பது கற்பு. 'கற்பின் தலைநிற்றல்' எனவும் பொருள் கொள்வார் களவியல் உரையாசிரியர்"[60] என்பர் வெள்ளைவாரணர்.

தோழி அறத்தொடு நிற்கும் வகை

தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்கும் விதத்தினை,

"எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்

கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பாடு

உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ

அவ்வெழுவகைய என்மனார் புலவர்"[61]

என எழுவகைப் படுத்தி உரைப்பார் தொல்காப்பியர்.

இவ்வாறு அறத்தொடு நிற்கும் இடத்து, "இங்ஙனம் தோழி அறத்தொடு நிற்குங்கால் தலைவியின் குடிப்பிறப்பிற்கும், செவிலியின் அறிவிற்கும், தலைவியின் நாணம், கற்பு முதலிய பெருமைக்கும், தனது காவலுக்கும், தலைவனுக்குரிய அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடியென்னும் பெருந்தன்மைக்கும் தவறுநேராதபடி, இக்களவொழுக்கம் நிகழ்ந்த முறையினை முரண்பாடில்லாத மொழிகளால் செவிலிக்கு எடுத்துரைத்தல் மரபாகும்"[62] என்பார் இறையனார் களவியல் உரையாசிரியர்.

தோழி அறத்தொடுநிற்றலால் விளையும் பயன்

தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பாள். செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தைக்கும் அறத்தொடு நிற்பர். தலைவன், தலைவியரின் களவொழுக்கம் கற்பொழுக்கமாய் மாறுதல் பொருட்டு வரைதல் நடைபெறும். இத்தகைய சிறப்பினை உடைய அறத்தொடு நிற்றல் என்னும் அகமரபானது, திருமுறைகளிலும் செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகின்றது.

தலைவியின் வேறுபாடு கண்டு வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல்

களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவியிடத்துத் தோன்றும் வேறுபாடு கண்ட செவிலி, இது எதனால் ஆயிற்று? எனத் தோழியை வினவுவள். அவ்விடத்துத் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பாள்.

எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தில் காணப்படும் 'அன்னைப்பத்து' தோழி அறத்தொடு நிற்றல் என்னும் துறையின்கண் அமைந்ததாகும். இதில் தோழி அறத்தொடு நிற்கும் பொழுது, தலைவியின் கூற்றை, தான் கொண்டு, தன்னைத் தலைவி எவ்வாறு நோக்கிக் கூறினாளோ, அவ்வாறே செவிலியை நோக்கிக் கூறுகின்றாள். இதனைத் தொல்காப்பியர் குறிக்கும் எழுவகை அறத்தொடு நிற்றலுள் 'வேட்கை உரைத்தல்' என்னும் வகையைச் சேர்ந்ததாகக் கொள்ள இயலும்.

வேட்கை உரைத்தல் என்பதற்கு "அவளது வேட்கை மிகுத்துரைத்துக்கூறல்"[63] என உரைவகுப்பர் நச்சினார்க்கினியர்.

அன்னைப்பத்தில் பயின்று வரும் 'அன்னாய்' என்னும் விளிகள் தோழியினைக் குறிப்பனவாகக் கொள்ளல் வேண்டும். தோழி 'அன்னை' எனக் குறிக்கப்படல் உண்டு என்பதற்கு,

"அன்னை என்னை என்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்
தோன்றா மரபின என்மனார் புலவர்"[64]

என்ற தொல்காப்பிய நூற்பா அரணாய் அமையும்.

இப்பதிகத்தின் கண் அமையும் பத்துப்பாடல்களும், தலைவனின் தோற்றம், தலைவி தலைவன்பால் காதல் கொள்ளக் காரணம், தலைவியின் வேட்கை, தலைவனின் இடம் சுட்டல் போன்ற பொதுமைப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டவையாய் அமைந்துள்ளன.

இப்பதிகத்தின் முதல் பாடல் தலைவனின் தோற்றம், அவனின் இயல்பு போன்றவற்றை உரைக்கின்றது. தலைவியானவள், தலைவன் நாதப் பறையுடையவன், திருமால், நான்முகன் போன்றோர்க்குத் தலைவன் எனக் கூறி அரற்றி நிற்பாள் எனத் தலைவியின் வேட்கையினைத் தோழி உரைத்து அறத்தொடுநிற்கின்றாள்.

"வேதமொழியார் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப்பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
தாதர் இந்நாதனார் அன்னே என்னும்" (அ.ப.பா.1)

இப்பதிகத்தின்கண் அமைந்துள்ள இரண்டாவது பாடல், தலைவனின் தோற்றத்தினை மட்டும் உணர்த்தாமல், தலைவன்பால் காதல்கொண்ட தலைவியின் வேட்கையினையும் உரைத்து நிற்கின்றது.

அன்னையே! நின்மகள் எம்முழைவந்து, எம்முடைய தலைவர் கண்களில் மைதீட்டியவர். அருளாகிய கருணைக் கடலினை உடையவர். அத்தகையவரே, எனக்கு அருளாது என் உள்ளத்தின்கண் நின்று, என்னை உருகச் செய்தார். மேலும் உள்ளத்தினை உருகச் செய்து வற்றாத கண்ணீரையும் பெருக்கினார் என உரைத்தாள் எனக்கூறி அறத்தொடு நிற்கின்றாள் தோழி. இதனை,

"கண் அஞ்சனத்தார் கருணைக் கடலினர்
உள் நின்று உருக்குவர் அன்னே என்னும்
உள் நின்று உருக்கி உவப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவர்(ஆல்) அன்னே என்னும்" (அ.ப.பா.2)

என்பது உணர்த்தும்.

காண்பவரை அஞ்சச் செய்யும் தலைவனின் தோற்றமே தலைவி காதல் கொள்ளக் காரணம் ஆயிற்று என்பதனையும் அன்னைப் பத்து விளக்குகின்றது.

அன்னையே! உன்மகள் என்னுடைய தலைவன் பாம்பினைப் பூண்டிருப்பவன். ஆடையாகத் தோலினையே உடுத்தியிருப்பவன். நீறுபூசிய நெற்றியினை உடையவன். அவனின் இத்தோற்றமானது அச்சம் தருவதாய்ப் பலரும் உரைப்பர். ஆயினும் என் மனமானது அவரை நோக்கியே வாடிநிற்கும் என்பாள். பிறர் அஞ்சும் தோற்றத்தினை, நான் விரும்பி உடன்பட்ட வழி, நீங்கள் யாதும்கூறித் தடைசெய்ய வேண்டாம் என்பதனையும் குறிப்பால் உணர்த்தினாள் எனக் கூறி அறத்தொடு நிற்பாள்தோழி. இதனை,

"ஆடரப்பூண் உடைத்தோய் பொடிப்பூ சிற்றோர்
வேடம் இருந்தவாறு அன்னே என்னும்
வேடம் இருந்தவாறு கண்டு என்னுள்ளம்
வாடும் இது என்னே அன்னே என்னும்" (அ.ப.பா.3)

என்ற பாடலானது உணர்த்திடும்.

வேட்கை மீதூர்ந்த தலைவி, தன் உள்ளம் கொண்ட தலைவன் உறையும் இடத்தினையும் சுட்டுகின்றாள் என்பதனை,

"நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்

பாண்டி நன்னாடர்(ஆல்) அன்னே என்னும்

பாண்டி நன்னாடர் பரந்து எழுசிந்தையை

ஆண்டு அன்பு செய்வர் (ஆல்) அன்னே என்னும்" (அ.ப.பா.5)

என்ற பாடலால் உணர்த்துவாள் தோழி.

இப்பதிகத்தின்கண் வரும் பாடல்கள்தோறும், தலைவியின் வேட்கையுரைத்துத் தோழி அறத்தொடு நிற்கின்றாள் என்பதற்கு,

"உன்னற்கு அரியசீர் உத்தர மங்கையர்

மன்னுவது என்நெஞ்சில் அன்னே என்னும்" (அ.ப.பா.6:1:2)

"தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்

ஆள்எம்மை ஆள்வர்(ஆல்) அன்னே என்னும்" (அ.ப.பா.8:1-2)

என்ற அடிகள் சான்றாதாரங்களாகும்.

பதினோராந்திருமுறையின்கண் காணப்படும் கோயில் நான்மணிமாலைப் பாடலொன்று தோழி அறத்தொடு நிற்றலை விளக்குகின்றது. இப்பாடலின்கண் வரும் தலைவியானவள் தலைவன்மேல் கொண்ட காதலால் மேனி மாறுபட்டாள்; ஒழுக்கம் வேறுபட்டாள். தலைவனின் பிரிவால் வருந்தும் தலைவியின் மேனியில் சந்தனத்தைப் பூசுகின்றனர். ஆனால் அதுவோ வெம்மை செய்வதாய்த் தலைவி புலம்புகின்றாள். மலரணையில் படுக்கவும் அஞ்சுகின்றாள். சங்கு வளையல்கள் கழல மெலிகின்றாள். ஊரவர் பழிச்சொல்லுக்கும் ஆளாகின்றாள். தான் எப்பொழுதும் விரும்பி விளையாடும், கிளியினையும், காயினையும் மறக்கின்றாள். தலைவியின் இத்தகைய தன்மையினை,

"சந்து புனைய வெதும்பி, மலரணை

தங்க வெருவி, இலங்கு கலையொடு

சங்கு கழல நிறைந்த அயலவர்

தஞ்சொல் நலிய மெலிந்து கிளியொடு

பந்து கழல்கள் மறந்து தளிர்புரை

பண்டை நிறமும் இழந்து, நிறையொடு"

(கோ.நா.மா.பா.11:1-8)

என்ற அடிகள் விளக்கும். தலைவியின் இவ்வேறுபாட்டினை அறிந்த செவிலி தோழியிடம் வினவுகின்றாள். அதற்குத் தோழி,

"அந்தி மதியொ டணிந்து திலைநகர்

அம்பொன் அணியும் அரங்கின் நடம் நவில்

அங்கண் அரசை அடைந்து தொழுதிவள்

அன்றுமுதல் எதிர் இன்று வரையுமே"

(கோ.நா.மா.பா.11:13-16)

எனக் கூறி அறத்தொடு நிற்கின்றாள். இப்பாடலில் தலைவியானவள் தலைவனைக் கண்டு அவன்பால் காதல் கொண்ட நாள்முதல் வேறுபட்டாள் என்கிற அறத்தொடு நிற்றல் குறிப்பினை "அங்கண் அரசினை அடைந்து தொழுதிவள் அன்று முதல் எதிர் இன்று வரையுமே" என்ற அடிகளானது உணர்த்தி நிற்கின்றன.

சங்க இலக்கிய அறத்தொடு நிற்றல் பாடல்களில் காணப்படும் தலைவனின் தோற்ற வருணனையின் வேறுபட்டதாய்ப், பக்தி இலக்கியத் தலைவனின் தோற்ற வருணனை அமைகின்றது. புலித்தோல் ஆடை அணிந்தவன், நீறுபூசியவன் போன்ற வருணனைகள் சைவ சமயத்தின் புறச்சின்னங்களை, அக இலக்கிய மரபிற்குப் பொருத்திக் காட்டிய அடியார்களின் நுண்மாண் நுழைபுலத்திற்குச் சான்றாகும்.

வெறியாட்டிடத்துத் தோழி அறத்தொடு நிற்றல்

களவின்கண் தலைவனைச் சந்திக்க இயலாத தலைவி பிரிவினால் வருந்துவாள். அவளது உள்ளத்து, தலைவனைக் காண இயலாதோ என்ற அச்சமும், களவின்பம் பெறாமையால் உடலாலும், உள்ளத்தாலும் ஏற்படும் துன்பமும் இணைந்து அவளை வருத்தும். அந்நிலையில் அவள் தனக்குத்தானே மெல்லியதாய்ப் புலம்பலும், தன்னிடம் உரையாடுவோரிடத்து இரைந்து பேசுதலும் ஆகிய தன்மைகளைப் பெறுவாள். அன்பும், அறிவும், அழகும் கொண்ட தன் மகளின் வேறுபாடு கண்ட, தாய் இம்மாற்றம் ஏதேனும் அணங்கால் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதி வெறியாட்டு எடுப்பாள். அதனை நல்வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ளும் தோழி இவ்விடத்துக் குறிப்பால் அறத்தொடு நிற்பாள். இவ்வாறு தோழி அறத்தொடு நிற்றல் தொல்காப்பியரால் 'உசாதல்' என்று குறிக்கப்படும்.

உசாதல் என்பதற்கு "தலைவியும் தோழியும் வெறியாட்டிடத்தும், பிரிவிடத்துஞ் சில கூறுதற்கண்ணே தாமும் பிறருடனேயும் உசாவுதல்"[65] என உரைவகுப்பார் நச்சினார்க்கினியர்.

கோயில் நான்மணிமாலையில் இடம்பெறும் தோழி, வெறியாட்டிடத்து அறத்தொடு நிற்கின்றாள். வெறியாட்டெடுக்கும் ஆயத்தாரைப்பார்த்து. 'தலைவி தலைவன்மேல் காதல் கொண்டாள். அவனைப் பிரிந்தமையால், மன்மதனின் மலர்க்கணைகள் வருத்த, உடல் மெலிந்தாள். தென்றலும் அவளைத் தீயைப்போல் சுடுகின்றது. அதனை அறியாது நீங்கள் தெய்வத்தைப் பராவலும், வெறியாட்டெடுத்தலும், ஆட்டைவெட்டுதலும் பயன்தாரா' எனக்கூறி தலைவியின் களவொழுக்கத்தினை வெளிப்படுத்தி அறத்தொடு நிற்கின்றாள். தோழியின் இத்தகு செயலினை,

"வணங்குமிடை யீர்வறிது வல்லிடை யாள்மேல்
மாரசர மாரிபொழி யப்பெறு மனத்தோடு
உணங்கியிவள் தானுமெலி யப்பெறும்இடர்க்கே

ஊதையெரி தூவியுல வப்பெறும் அடுத்தே

பிணங்கியர வோடு சடை ஆட நடமாடும்

பித்தரென வும்மிதயம் இத்தனையும் ஓரீர்!

அணங்குவெறி யாடுமறி யாடுமது வீரும்

மையலையும் அல்லலையும் அல்தறி யீரே" (கோ.நா.மா.பா.35)

என்ற பாடலானது எடுத்துக்காட்டும்.

தலைவியின் களவொழுக்கத்தினை அறியாதோரைப் பார்த்து தோழி, 'பித்தரென வும்மிதயம் இத்தனையும் ஓரீர்' என்ற அடியின் வழி அறத்தொடு நிற்றல் குறிப்பினை வெளிப்படுத்துகின்றாள்.

கோயில்திருப்பண்ணியர்விருத்தத்தோழி, தலைவியின் வருத்தத்திற்கான காரணத்தை ஓராமல் துணங்கைக்கூத்தாடல், வெறியாட்டெடுத்தல் என்பதனால் பயனில்லை என்கின்றாள். இதனை,

"கூத்தனென் றுந்தில்லை வாணனென் றுங்குழுமிட்டி மையோர்

எத்தனென் றுஞ்செவி மாட்டிசையாதே, யிடுதுணங்கை

மூத்தவன் பெண்டிர் குணலையிட்டாலும், முகில்நிறத்த

சாத்தனென் றாலும் வருமோ இவளுக்குத் தண்ணெனவே"

என்பது விளக்கும். இதில், "சாத்தன் என்று இறுதியில் குறித்தமையால் முதல் அடியில் மூத்தவன் என்றது முருகனையே ஆகும் "[66] எனக் குறிப்பார் அருணை வடிவேலு முதலியார். குறிஞ்சி நிலப் பெண்டிரை முருகன் பற்றியதாய்க் கருதி வெறியெடுத்தல் மரபு எனினும் சிறுபான்மை சாத்தன் (ஐயனார்) பற்றியதாய்க் கூறும் மரபும் உண்டு என்பது இப்பாடலின்வழித் தெரியவருகின்றது.

தோழி புனல்தருபுணர்ச்சிகூறி அறத்தொடு நிற்றல்

தோழி புனல்தருபுணர்ச்சிகூறி அறத்தொடு நிற்றல் தொல்காப்பியர் குறிக்கும் "ஏதீடு" என்பதனுள் அடங்கும். ஏதீடு என்பதற்கு "ஒருவன் களிறும் புலியும் நாயும் போல்வன காத்து, எம்மைக் கைக்கொண்டானெனவும்,

பூத்தந்தான், தழைதந்தான் எனவும், இவை முதலிய காரணமிட்டுரைத்தல்”[67] *என உரைவகுப்பர் நச்சினார்க்கினியர்.*

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் புனல்தரு புணர்ச்சிகூறி தோழி அறத்தொடு நிற்கின்றாள். தோழி செவிலியை விளித்து, ‘அன்னையே! நின்மகள் நீரின்கண் அகப்பட்டுக் காப்பாரின்றிக் கதறினாள். அந்நிலையில் தலைவன் ஒருவன் எடுத்துக் கரைசேர்த்து, ‘அஞ்சற்க’ என்றான். தலைவியோ இது நன்றோ!’ எனக் கூறி அவன் பாதம்பணிந்தாள் எனப் புனல்தரு புணர்ச்சி கூறி அறத்தொடு நிற்கின்றாள்.

இப்பாடலில் தலைவி ‘நன்றோ’ என வினவல் என்னையெனின், தன்மெய் தீண்டியவர்க்கே தலைவி உரியவள் ஆதல் தமிழ்மரபு ஆதலின், மணமாகாத கன்னியாகிய தன்னைத் தீண்டியது நன்றோ! எனக் குறித்தற் பொருட்டாம். பின் அவன் ‘தாள் பணிந்தாள்’ என்பது அவ்வாறு தன்னைத் தீண்டிய தலைவனுக்கே தலைவி ஆட்பட்டாள் என்பதனை விளக்குதற்காம். மேலும் தோழியானவள் செவிலியிடத்து, ‘நின்மகள் நின்குடிக்கு இழுக்கு உண்டாகக் களவொழுக்கம் கொண்டாளில்லை. தெய்வத்தால் நிகழ்ந்த இந்நிலைமையினால், குடிப்பிறந்தார்க்கேயுரிய அறத்தினைப் பற்றி நின்று, தன்னை அவனுக்கு உரியவளாய்க் கருதிவிட்டாள்’ என்பதனையும் இப்பாடலில் குறிப்பான் உணர்த்தி அறத்தொடு நிற்கின்றாள். இதனை,

> *“நிதியுறு வாரற வின்பம்வீ டெய்துவ ரென்னவேதம்*
> *துதியுறு நீள்வயல் காழியார் கோனைத் தொழாரினைய*
> *நதியுறு நீர்தெளித்து அஞ்சலென வண்ண லன்றோவெனா*
> *மதியுறு வாணுதல் பாதம் பணிந்தனள் மன்னனையே”*

(ஆ.பி.தி.பா.69)

என்பது உணர்த்தும்.

களிறுதருபுணர்ச்சி கூறி அறத்தொடு நிற்றல்

தொல்காப்பியர் இதனை அறத்தொடு நிற்றல் வகையில் 'ஏதீடு' என்பதனுள் அடக்குவர். தோழி செவிலியிடத்து, களிறால் புணர்ச்சி ஏற்பட்டது எனக் கூறி நிற்றல் இத்தகையதாம்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதித் தோழி, களிறுதரு புணர்ச்சி கூறி அறத்தொடு நிற்கின்றாள். அவள் செவிலியைப் பார்த்து 'அன்னையே! மனையின்கண் தாக்க வந்த யானையினைப் பார்த்து, நாங்கள் அஞ்சி ஓடினோம். அச்சமயம் தலைவன் ஒருவன் வந்து 'அஞ்சற்க' எனக் கூறினான். ஆண்மான் தன் பெண்மானினைக் காக்க உயிரைவிடத் துணிந்தது போன்று, துணிந்து நின்மகளை எடுத்துக்காத்தான். அப்பொழுது நின்மகள் அவ் ஆண்மகனைத் தழுவிக்கொண்டாள். அதன்காரணமாய், நின் மகளின் மார்பகப் பூண் அழுத்திய தழும்பு இன்னமும் தலைவனுக்கு உள்ளது எனக் கூறி அறத்தொடு நிற்கின்றாள். இப்பாடலில் தோழி இன்னந் தழும்பு உளவாம்' எனப் பன்மையில் கூறி, தலைவியானவள் அந்நிகழ்விற்குப்பின்னும் பலநாள் தலைவனுடன் பழகியதைக் குறிப்பால் உணர்த்தினாள். தோழியின் குறிப்பினை,

"மன்னங் கனைசெந்தமிழா கரன்வெற்பில் வந்தொருவர்
அன்னங்கள் அஞ்சன்மின் னென்றடர் வேழத் திடைவிலங்கிப்
பொன்னங் கலைசா வகையெடுத் தாற்கிவள் பூணழுந்தி
இன்னந் தழும்புள வாம்பெரும் பாலும்மவ் வேந்தலுக்கே"

(ஆ.பி.தி.பா.70)

என்பது புலப்படுத்தும்.

ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகத்தோழியும் களிறு தருபுணர்ச்சி கூறி அறத்தொடு நிற்கின்றாள். இத்தோழி, செவிலியிடம், தலைவியின் வேறுபாட்டிற்கான காரணமான களிறு தருபுணர்ச்சியினை,

"திருஞான சம்பந்த னணிநீடு திண் குன்றில்

நெறியால மண்துன்றி முனைநாள் சினங்கொண்டு

நிறைவார் புனந்தின்று மகள்மேல் வருதுங்க

வெறியார் மதந்தங்கு கதவா ரணங்கொன்ற

வெகுளாத நஞ்சிந்தை விறலானுளன் பண்டே" (ஆ.பி.தி.க.பா.8)

என்பதில் சுட்டுவாள். இப்பாடலில் தலைவி, தலைவன்மேல் களிறு தருபுணர்ச்சியால் பண்டைநாளில் காதல் கொண்டாள் என்பதனை, "வெகுளாத நஞ்சிந்தை விறலானுளன் பண்டே" என்ற அடியால் குறிப்பால் உணர்த்தி நின்றாள் தோழி.

நொதுமலர் வரைவுகண்டு அறத்தோடு நிற்றல்

தோழி, நொதுமலர் வரைவுகூறி அறத்தொடு நிற்றலை,

"அறத்தொடு நிற்கும் காலத் தன்றி

அறத்தியல் மரபிலள் தோழி யென்ப"[68]

என்னும் தொல்காப்பிய நூற்பா உரையில் நச்சினார்க்கினியர் குறிப்பார். இதனுள் காலம் என்பதனைக் குறிக்குமிடத்து, "காலமாவது நொதுமலர் வரைவும், வெறியாட்டெடுத்தலும், முதலியன. தலைவி களவின்கண்ணே கற்புக்கடம்பூண்டு, ஒழுகுகின்றாளை நொதுமலர் வரையக்கருதினர் என்பதும், இற்பிறந்தோர்க்கேலாத வெறியாட்டு தன் மனைக்கண் நிகழ்ந்ததூஉம், தலைவிக்கிறந்துபாடு பிறக்குமென்று உட்கொண்டு அவை பிறவாமற் போற்றுதல் தோழிக்குக் கடனாதலின் இவை நிகழ்வதற்கு முன்னரே தமர்க்கறிவித்தல் வேண்டும்"[69] எனக் குறிப்பார் நச்சினார்க்கினியர்.

தலைவியைக் களவில் கண்டு காதல் கொண்ட தலைவனை உயர்ந்தோனாய்ப் போற்றும் தலைவி, அவனை அடையவே பெரிதும் விருப்பம் உடையவள் ஆவாள். அவனை அன்றி, பிறரை மணக்க நேரின் அவள் இறந்துபடவும் கூடும். எனவே வெறியாட்டிடத்தும் அஞ்சாத தலைவி வேற்று வரைவின்கண் அஞ்சுகின்றாள். தலைவியின் இத்தகு, அச்சத்தினைக்

கருத்தில் கொள்ளும் தோழி, நொதுமலர் வரைவு கண்டுழி அறத்தொடு நின்று தலைவியின் களவினை வெளிப்படுத்துகின்றாள்.

ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவையின் தோழி, நொதுமலர் வரைவு முடுக்கம் அறிந்து செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள்.

அன்னையே! ஞானசம்பந்தன் மலைக்கண் உள்ள தினைப்புனத்தில் நானும், நின்மகளும் நின்ற பொழுது, யானை ஒன்று தாக்கவந்தது. அப்பொழுது தலைவன் ஒருவன் யானைமேல் சரம்தொடுத்து எம்மைக் காத்தான். எனவே அத்தகையவனுக்கு நின்மகளைக் கொடுக்காது பிறர்க்கு மணம்செய்துகொடுக்க நினைப்பது எல்லோருக்கும் பழியாய் முடியும். அதுமட்டுமன்று, தலைவியும் இறந்துபடுவாள் எனக் கூறி, அறத்தொடு நிற்கின்றாள். தோழியின் இத்தகு செயலினை,

"............................ வளங்கொள் சம்பந்தன்
கருதியஞ் செவ்விச் சுருதியஞ் சிலம்பில்
தேமரு தினைவளர் காமரு புனத்து
மும்மதஞ் சொரியும் வெம்முகக் கைம்மா
மூரி மருப்பின் சீரிய முத்துகக்
கொடுஞ்சிலை வளைத்தே கடுஞ்சரஞ் துரந்து
முற்பட வந்து முயன்றங் குதவிசெய்
வெற்பனுக்கல்லது
சுணங்கணி மென்முலைச் சுரிகுழல் மாதினை
மணஞ்செய மதிப்பது நமக்குவன் பழியே" (ஆ.பி.தி.மு.பா.7:5-14)

என்ற பாடல் அடிகள் விளக்கி நிற்கும்.

தலைவியின் மகிழ்வை செவிலிக்கு உரைத்து அறத்தொடு நிற்றல்

களவின்கண் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், குறித்த பருவத்தில் வரைவொடுவருவான். அதனைக்கண்ட தலைவி பெரிதும் மகிழ்வாள். தலைவனின் தேர் ஒலிகேட்டு மகிழும் தலைவியின் நிலையினைத்

தோழி செவிலிக்கு உரைத்து அறத்தொடு நிற்பாள். இது தொல்காப்பியரால் குறிக்கப்பெறும் "வேட்கையுரைத்தல்"[70] என்பதாம்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின் தோழி இம்மரபினைச் சேர்ந்தவளாவாள். அவள் செவிலியிடத்து, "உயிர் போன்ற தலைவனின் தேர்வரும் மணியோசைக்கேட்டு, பயிர், வான்மழையினைப் பெற்று மகிழ்ந்தது போல் தலைவி மகிழ்ந்தாள்' என்கிறாள். மேலும் தலைவியின் 'மார்புக்கச்சும் இறுகிற்று' என்றவழித் தலைவியின் மகிழ்வையும் குறிப்பான் வெளிப்படுத்தினாள் தோழி.

இப்பாடலின்கண், தலைவனின் வருகையினை வான்மழைக்கும், தலைவியை மழைநோக்கி நிற்கும் பயிருக்கும் உவமையாகக் காட்டினாள் தோழி. இதன்வழிகுறித்த பருவத்தே பெய்யாத வான்மழை பெரிதெனினும் அஃது பயிருக்குப் பயன்படா. ஆகவே பருவத்தே பெய்யும் மழையினைப்போல தலைவனும் பருவத்தே வந்தான். அன்னையராகிய நீவிரும் பருவம்தாழ்த்தாது மணம்செய்து வையுங்கள் என்பதனையும் குறிப்பால் உணர்த்தினாள் தோழி. இதனை,

"உயிரா யினவன்பர் தேர்வரக் கேட்டுமுன் வாட்டமுற்ற
பயிரார் புயல்பெற்ற தென்னநம் பல்வளை பான்மைகளாம்
தயிரார்பால் நெய்யொடும் ஆடிய ஏகம்பர் தம்மருள்போல்
கையிரா வளையமுந் தக்கச் சிறுத்தன கார்மயிலே" (தி.ஏ.தி.பா.90)

என்பது விளக்கும்.

உண்மை செப்பும் வகையான் அறத்தொடு நிற்றல்

தொல்காப்பியர் தோழி அறத்தொடு நிற்கும் வகையுள் ஒன்றாய் 'உண்மை செப்பல்' என்பதனைக் குறிப்பார். இதற்கு நச்சினார்க்கினியர் "படைத்து மொழியாது பட்டாங்கு கூறுதல்"[71] என உரைவகுப்பர். பட்டாங்கு கூறுதல் என்பது 'நிகழ்ந்ததை நிகழ்ந்தபடியே கூறுதல்' என்பதாம்.

பரணரின் சிவபெருமான் திருவந்தாதித் தோழி உண்மை செப்பும் வகையான் அறத்தொடு நிற்கின்றாள். இப்பாடலில் தலைவியின் மெலிவுகண்ட செவிலி, தோழியிடத்துக் காரணம் வினவுகின்றாள். அதற்குத் தோழி, தலைவன்மேல் கொண்ட அன்பினால், நீரிற் பொருந்தியுள்ள சடைப்பூண்டினைப்போல், தலைவி ஆகிவிட்டாள் என்கிறாள். இங்கு தோழியால் குறிக்கப்பெறும் 'சடைப்பூண்டு' என்பது நீரின்கண் வளரும் வலிமையில்லா மெல்லிய கொடி ஆகும். இக்கொடியானது நீரினில் இங்கும் அங்கும் அலைக்கழிக்கப்படுதல் போன்று தலைவியும் தலைவன் நினைவால் அலைக்கழிக்கப்படுபவள் ஆயினாள் என்பதைச் செவிலிக்கு உணர்த்தி அறத்தொடு நிற்கின்றாள் தோழி. இதனை,

"பாலார் புனல்பாய் சடையானுக்கு அன்பாகிப்
பாலார் புனல்பாய் சடையா னாள் - பாலாடி
ஆடுவான் பைங்கண் அரவூர்வான் மேனி, தீ
ஆடுவான் என்(று) என்றே ஆங்கு" (சி.தி.பா.16)

என்ற பாடல் அடிகள் விளக்கிநிற்கும். இப்பாடலில் குறிக்கப்பெறும் சடைப்பூண்டினை,

"நீருட் பிறந்து நிறம் பசிய யேனும்
ஈரம் கிடையகத் தில்லாகும்"[72]

என நாலடியார் குறிப்பிடும்.

உடன்போக்கில் போக்கு உடன்படுக்கும் தோழி

உடன்போக்கு என்பது "தோழியின் இசைவு பெற்றுத் தலைவியை, அவள்தம் பெற்றோர் அறியாதவாறு தலைவன் தன்னுடன் அழைத்துச்சென்று, தன்னூரின்கண் மணம் முடித்தலாகும். இதனை ஒருவகைத் திருமண நிகழ்ச்சியாகத் தக்க சான்றுகளின்வழி நிறுவுவார்"[73] இளவழகனார். இவ் உடன்போக்கில் தோழியின் பங்களிப்பு இன்றியமையாததாகும். தொல்காப்பியர் அகத்திணையியலில் தோழியின் கூற்றுக்களை விளக்கும் பகுதியில்,

"தலைவரும் விழும நிலையெடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்"[74]

எனக் குறிப்பிடுவார். இவற்றுள் போக்கற் கண்ணும் என்பதற்கு, "தலைவியின் இளமையும் மென்மையும் சுரத்தின் அருமையும் கருதியும், உயிரினும் சிறந்த நாண்விடல் குறித்தும், இருவரும் உடன்போக்கிற்கியையாவழி, அவ்விருவரையும் உடன்படுத்தற்கண்ணும் என்றவாறு"[75] என உரைவகுப்பார் நச்சினார்க்கினியர். "போக்கல் என்பது போதற்கு உடன் படுத்தல் என்னும் பொருளதாம்"[76] என்றும் விரித்துரைப்பார்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதித்தோழி, தலைவியை உடன்கொண்டு செல்லுமாறு தலைவனை உடன்படுக்கின்றாள். இப்பாட்டின்கண் வரும் தலைவன், வழியின் கொடுமை எண்ணி, உடன்கொண்டு செல்லத் தயங்குகின்றான். அதனைக் கண்ட தோழி, 'வெம்மை நிறைந்ததாய் நின்னால் குறிக்கப்பெறும் பாலை நிலமானது, உன்னுடன் வருதலால் தலைவிக்குக் குளிர்ச்சி உடையதாய் அமையும். உடன் அழைத்துச் செல்க! எனத் தலைவனை உடன்படுக்கின்றாள். தோழியின் இத்தகு செயலினை,

"உறுகின்ற வெவ்வழல் அக்கடம் இக்கொடிக் குன்பின்வரப்
பெறுகின்ற வண்மையி னாலைய பேரருள் ஏகம்பனார்
துறுகின்ற மென்மலர்த் தண்பொழிற் கச்சியைச் சூழ்ந்திளையோர்
குறுகின்ற பூங்குவ ளைக்குறுந் தன்பணை என்று கொள்ளே"

(தி.ஏ.தி.பா.67)

என்ற பாடலானது வெளிக்காட்டும்.

தலைவியின் கற்பு வாழ்வில் தோழி

தலைவியின் களவொழுக்கத்திற்கு ஆதாரமாய் அமையும் தோழி, அவளைக் கற்பு வாழ்விற்கு நெறிப்படுத்துவதில் முதன்மை வகிக்கின்றாள்.

அக இலக்கியங்களில் தோழி என்னும் பாத்திரம் படைக்கப்பட்டமைக்கான முதன்மை நோக்கத்தினை, "ஐந்திணை இலக்கியத்தில் தோழி என்னும்

ஆளைப் படைத்ததன் பயன் என்ன? அவள் துணையின்றி, பகற்குறி, இரவுக்குறிகள் நிகழாது. களவொழுக்கம் நீடிக்காது. ஆதலின் தோழி வேண்டும் எனப் பலர் கருதுவர். காதலாயினர் இருவகைக் குறிகள் நிகழ்த்த வேண்டும் என்பது அகத்திணையின் நோக்கம் இல்லை. பால்வயத்தால் தாமே கண்டு, தம்முட் புணர்ந்த களவுக் காதலர்கள், கற்பாகவேண்டும். வெளிப்படையாக மணந்து இல்லறம் நடத்த வேண்டும் என்பதே அதன் நோக்கம். இந்நோக்கத்தினை நிறைவேற்ற வருபவளே தோழி ஆவாள்”[77] என விரித்துரைப்பார் வ.சுப.மாணிக்கனார். இவ்வாறு தோழியானவள் தலைவியைக் கற்பு வாழ்விற்கு ஆற்றுப்படுத்துவதுடன் நில்லாது, அவ்வாழ்வின் கண் அவளுக்கு ஏற்படும் இன்ப, துன்பங்களிலும் பங்கு கொள்கின்றாள். இத்தகைய தோழியைத் திருமுறைகளிலும் காணமுடிகின்றது.

கற்பில் செலவழுங்குவிக்கும் தோழி

கற்பில் பொருள் காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரியவிருக்கும் சூழலில், தலைவியின் துன்ப நிலையினைக் கூறி, அவளது செலவினைத் தவிர்க்கும் தோழியின் செயல் செலவழுங்குவித்தல் எனப்பெறும். தொல்காப்பியர்,

“பிரியுங் காலத் தெதிர்நின்று சாற்றிய
மரபுடை எதிரும்”[78]

எனக் குறிக்கும் செய்தி தோழியின் செலவழுங்குவித்தல் பற்றியதாகும். இத்துறையின்வழிப் பொருளினும் தலைவியின் நலனினை விரும்பும் தோழியின் அன்புள்ளம் பெறப்படும்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின்கண் வரும் தலைவன் அன்பினும், பொருள் பெரிதெனக் கருதிப் பிரிய நினைக்கின்றான். அதனை அறிந்த தலைவியோ பெரிதும் வருந்தி நிற்கின்றாள். தலைவியின் நிலைமையைக் கண்ட தோழி, ஞானசம்பந்தரின் பகைவரைப் போன்று இவ்வுலகமானது பகற்பொழுதினை இழக்குமாயின் இரவுப் பொழுது வரும்.

அவ்விரவுப் பொழுதின்கண் கடலானது, ஒலியை உண்டாக்கும்படி, வாடைக் காற்றானது வரும். அவ்வாடைக் காற்றானது நின்னைப் பிரிந்துறையும் தலைவியைக் கொடுமை செய்யும், அக்கொடுமையினின்று தலைவியைக் காக்கும் வழியினை யாம் அறியோம்! எனவே நீர் செல்வதைத் தவிர்க்க' எனக் கூறி செலவழுங்குவிக்கின்றாள். இவ்வாறு தோழி செலவழுங்குவித்தலை,

"களியுறு தேன்தார்க் கவுணியர் தீபன் கருதலர்போல்
வெளியுறு ஞாலம் பகலிழந்தால், விரையார் கமலத்து
அளியுறு மென்மலர்த் தாதளைந்து ஆழியழைப் பவரும்
துளியுறு வாடையி தாம்மட மானைத் துவள்விப்பதே"

(ஆ.பி.தி.பா.67)

என்பது விளக்கும்.

தோழி தலைவியைப் பருவங்காட்டி வற்புறுத்தல்

கற்புக் காலத்துக் காதல் வாழ்வில் ஈடுபடும் தலைவனுக்கு இல்லறக்கடமையும் உண்டு. அதனை ஆற்றுவதற்குப் பொருள் இன்றியமையாதது என்பதனையும் அவன் அறிவான். களவுக்காலத்து நின்னைப் பிரியேன் என்று கூறியதைவிடுத்து, கற்புக்காலத்துப்பிரிவான். அவ்வாறு பிரியுமிடத்து, தலைவியை ஆற்றுவித்தற் பொருட்டு, இன்ன காலத்து வருவேன் எனக் கூறிப்போவான். தலைவன் குறித்த காலம் வந்தும் தலைவன் வாராமை கண்டு தலைவி பெரிதும் வருந்துவாள். அந்நிலையின்கண் தோழியானவள், பருவம் காட்டித் தோழியை ஆற்றுவிப்பாள். இதனை, கற்பில் தோழிக்குரிய கிளவிகளாய்த் தொல்காப்பியம் உணர்த்தும். 'பெறற்கரும் பெரும்பொருள் முடித்தபின் வந்த' என்ற நூற்பாவில், 'வகைபடவந்த கிளவியாவன' என்பதனுள் வைத்து உணர்த்துவார் இளம்பூரணர். இதனை, "வகைபட வந்த கிளவியாவன, பிரிந்த தலைமகன் வருவனெனக் கூறலும், பருவங்கண்டு கூறுதலும், வந்தான் எனக்

கூறுதலும், இந்நிகரனவும் மேற்சொல்லப்பட்ட இடங்களில் கூற்றுவேறுபாடாகி வருவனவுங்கொள்க"[79] எனக் குறிப்பதனால் அறியமுடிகின்றது.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் வரும் தலைவி, பருவம் கண்டு வருந்துகின்றாள். அதனைக் கண்ட தோழி தலைவியிடத்து, 'கார்மயில் போன்ற தலைவியே! முல்லைமலர்கள் மலர்ந்து நகுகின்றன. கொன்றைப் பூக்களோ பூத்துப் பொன்போல் மிளிர்கின்றன. செங்காந்தள் மலர்களோ தீயினைப் போன்ற நிறத்துடன் மலர்ந்தன. கார்காலம் வந்துவிட்டது. தலைவர் வருவர்' எனக் கூறி ஆற்றுவிக்கின்றாள் தோழி. இதனை,

"நகுகின்ற முல்லை நண்ணாரெறி கண்டத்து அவர்கவர்ந்த
மிகுகின்ற நன்னிதி காட்டின கொன்றை; விரவலஈர்
புகுகின்ற தீயெனப் பூத்தன தோன்றி; புறவமன்கைத்
தருகின்ற கோடல்கள்; அன்பரின் றெய்துவர் கார்மயிலே"

(ஆ.பி.தி.பா.63)

என்பது குறிக்கும்.

இப்பாடலில் தலைவியைத் தோழி 'கார்மயிலே' என விளிப்பதன் நோக்கம், காரினைக்கண்டு மகிழும் மயிலினைப் போல், தலைவியானவள் தலைவன் வரவால் அழகுபெற்று மகிழ்வாள் என்பதைக் குறித்தற்காம்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின் கண்வரும் தோழி கூற்றுப்பாடலொன்றும் இத்துறையின்கண் அமைந்துள்ளது. பருவவரவினைக் கண்டு வருந்தும் தலைவியினிடத்தில் தோழியானவள், 'கச்சிமாநகர்போன்ற பெருமை உடையவளே! கார்முகில், முத்தாகிய நீரினை ஆரமாகக் கொண்டு, காந்தட்பூ போன்ற கைகளில் கொன்றைப் பூக்களைப் பொற்சுண்ணமாக ஏந்தி, தலைவனை வரவேற்க, தேரின்முன் சென்றது. எனவே தலைவன் விரைந்து வந்திடுவான், நீ உன் கொங்கைகளைப் பாரமாகச் சுமக்கவேண்டாம் என்கிறாள். இதனை,

"வரங்கொண் டிமையோர் நலங்கொள்ளும் ஏகம்பர் கச்சியன்னாய்!
பரங்கொங்கை தூவன்மின் நீர்முத்தம் அன்பர்தம் தேரின் முன்னே
தரங்கொண்டு பூக்கொண்டு கொன்றைபொன் னாகத் தண்
காந்தட்கொத்தின்
கரங்கொண்டு பொற்சுண்ணம் ஏந்தவும் போந்தன கார்முகிலே"

(தி.ஏ.தி.பா.88)

என்பது உணர்த்தும். இதில் 'பரங்கொங்கை தூவன்மின்' என்ற தொடரினைத் 'தனிமை காரணமாகக் கொங்கையைச் சுமையாக எண்ணுதல் வேண்டாம் என்ற பொருளில் பயன்படுத்துகின்றாள் தோழி. இயற்கையாய் வந்த கார்ப்பருவத்தைத் தலைவன் தேரின்முன் வரவேற்கச் சென்றதாய்த் தற்குறிப்பேற்றம் அமையக் குறிக்கின்றாள் தோழி.

தோழி முகில்களை முன்னிலையாகக் கொண்டு கூறல்

பருவம்கண்டு வருந்தும் தலைவியை ஆற்றுவிக்கக் கருதிய தோழி, முகில்களை முன்னிலையாக்கிக் கூறலும் உண்டு. திருஏகம்பமுடையார் திருவந்தாதியின்கண் வரும் தோழி, முகில்களிடத்து, தலைவியின் அழும் கண்களைப் போன்று நீரினைச் சொரியும் முகில்களே! தலைவர் வருவர்! அஞ்சற்க! எனத் தலைவியிடத்து கூறும் உறவினர் என்னைப் போல் ஒருவரும் இலர். எனவே, தலைவியானவள் என் பேச்சினை ஏற்காது அழுதே இறந்துபடுவள் போல் உள்ளது. எனவே தலைவன் உறுதியாக வருவான் என்பதனை நீங்களாவது கூறுங்கள்! என்கிறாள். தோழியின் இக்கூற்றிற்கு,

"நீரென்னிலும் அழுங் கண்முகில் காள் நெஞ்சம் அஞ்சலையென்று
ஆரென்னி லுந்தம ராயுரைப் பார்அம ராவதிக்கு
நேரென்னி லுந்தகும் கச்சியுள் ஏகம்பர் நீள்மதில்வாய்ச்
சேரென்னி லுந்தங்கும் வாட்கண்ணி தானன்பர் தேர்வரவே"

(தி.ஏ.தி.பா.87)

என்ற பாடல் சான்றாகும்.

தலைவனின் தேர்வரவுகூறி ஆற்றுவிக்கும் தோழி

இத் துறையினைத் தொல்காப்பியர் குறிக்கும் 'பெறற்கரும் பெரும் பொருள் முடித்த பின்வந்த' என்ற நூற்பாவில், "வகைபடவந்த கிளவியாவன"[80] என்பதனுள் உரைப்பர் இளம்பூரணர்.

கற்பில் பிரிவு ஆற்றியிருக்கும் தலைவி கார்வந்ததும், தலைவனின் தேர்வராமைகண்டு வருந்துவாள். அன்புடைக் காதலரிடத்து, புணர்ச்சியின்கண் இருக்கும் நிலையினும், பிரிவின் கண்ணே காதல் மிகுதி உளப்படத் தோன்றும். இதனை, "காதலின் அருமைப்பாட்டை உணர்த்த வல்லது பிரிவென்ற ஒரே தத்துவம்தான். பிரிந்துள்ள பொழுது உண்மைக்காதலுள்ளம், தன்னைத் திறைகொண்ட மற்றோர் உள்ளத்திலே தோய்ந்து கிடக்கும். முதலில் கண்டபொழுது தனக்கொரு துணைவாய்த்தது என்பதே தொடக்கமாம். ஆனால் தனக்கொரு துணை என்ற நினைவொடு அவளின்றித் தான் இல்லை என அவனும், அவனின்றித் தான் இல்லை என அவளும் நினைக்கின்ற கரைவு காதலின் வளர்ச்சியைப் புலப்படுத்துவதாகும். இவ்வாறு அவனில் அவளும், அவளில் அவனும் வரைவது திளைப்பிலே தோன்றாது; நினைப்பிலே முகிழ்க்கும். பிரிவிலே மலரும், பிரிவிலே கனியும் நினைந்து நினைந்து, பிரிவால் பரிந்து, பரிந்து காதல் உறுதிபெறுகின்றது. இத்தகைய பிரிவுத்துன்பத்திற்குத் துணைபோகும் உள்ளமே உண்மையில் காதல் உள்ளமாகும்"[81] என ம.ரா.போ.குருசாமி குறிப்பர்.

ஆயினும் இத்தகைய பிரிவானது அளவிறந்து நீட்டித்தவழித், தலைவிக்குத் தலைவனைப் பெற்று, அவன்மார்பின்கண் தோயவேண்டும் என்ற ஏக்க மேலீடு அதிகமாகின்றது. இந்நிலையில் தலைவியின் உள்ளமானது, பற்றுக்கோடினைத் தேடுகின்றது. அதனை அறிந்த தோழியோ, தலைவனின் தேர் வந்ததைக் கூறி ஆற்றுவிக்கின்றாள்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்தில் தோழி, தலைவியிடத்தில், தோழியே! ஞானசம்பந்தரின் செங்கரங்களைப்போன்ற மேகமானது

மழையைப் பொழிந்தது. அதனால் கொன்றைப் பூக்கள் மலர்ந்தன. கலைமான்கள் பிணையுடன் திரிகின்றன. கார்காலத்தில் வருவதாய்ச் சொன்ன தலைவரின் தேரும் வந்தது. காண்பாய்! எனக் கூறி ஆற்றுவிக்கின்றாள். இதனை,

"................................ ஞானன் புகழ்
இணையார் செங்கரன் நிகழ்வான் விண்குயின்
பொழியாநின்றன துளிதார் கொன்றைகள்
புலமே துன்றின கலைமா னொன்றின
பழிமேல் கொண்டது நமர்தே ரன்பொடும்
அருகே வந்தது அதுகாண் மங்கையே" (ஆ.பி.தி.க.பா.14)

என்பதனால் அறியமுடிகின்றது. இப்பாடலில், மேகம் பொய்யாது பெய்தல் நல்லவர் வாழ்தல் பொருட்டு என்பர். ஆதலின் 'ஞானன் நிகழ்வான் குயின்துளி பொழியா நின்றன" எனக் குறித்தாள் தோழி.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவையின் தோழி, ஞானசம்பந்தன் மலையில் மயிலினங்கள் அகவுகின்றன. அவற்றின் அழைப்பினைக் கேட்ட காந்தள் மலர்கள் மலர்ந்தன. மழை பொழியத்தோன்றிய வானவில், தலைவன் கார்காலத்தில் வருவான் என்ற உன் எண்ணம் பொய்யாகாது என்பதனை உணர்த்தியது. அதுபோன்றே தலைவனின் தேரும் வந்தது எனக் கூறி ஆற்றுவிக்கின்றாள். இதனை,

"....................................... தடமலைவாய்
அழைக்கின்ற மஞ்ஞைக் கலர்ந்தன கோடலம் பெய்திடுவான்
இழைக்கின்ற தந்திரத் திந்திர சாபம்நின் னெண்ணமொன்றும்
பிழைக்கின்ற தில்லைநற் றேர்வந்து தோன்றிற்றுப் பெய்வளையே"
(ஆ.பி.தி.மு.பா.18)

என்பது விளக்கும்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதித் தோழி, குறித்த பருவத்து வரும் தலைவனின் தேரின் அதிர்வு கண்டே பறவையினமும் கடலினுள் உள்ள சங்கினமும் ஆர்க்கின்றன என்கிறாள். தோழியின் இக் கூற்றானது,

".. கச்சி விரையினவாய்க்

கைவரும் புள்ளொடு சங்கினம் ஆர்ப்பநம் சேர்ப்பர் திண்தேர்

அவ்வரு தாமங் களினம்வந் தார்ப்ப அணைகின்றதே"

(தி.ஏ.தி.பா.97:2-4)

என்ற அடிகளின் வழிப் புலனாகும்.

தொகுப்புரை

- தலைமக்களின் களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளிலும் திருமுறைத் தோழி இன்றியமையாத இடத்தினைப் பெறுகின்றாள்.
- திருமுறையில் பாங்கி மதியுடம்பாட்டின்கண் அமையும் பாடல்கள், தலைமகளின் களவொழுக்கத்தினைக் குறிப்பால் அறியும் தோழியின் மதிநுட்பத்தினையும், தலைவியின் களவு வாழ்வினை நெறிப்படுத்தும் செயல் செம்மையையும் விளக்குவதாய் அமைந்துள்ளன.
- திருமுறைத் தோழி, தலைவனைச் சேட்படுத்துவதாய் அமையும் பாடல்கள், தலைமகனுக்குத் தலைமகளின் அருமையினை உணர்த்தும் தோழியின் நோக்கினையும், தலைமகனை வரைவு முடுக்கம் கொள்ளச் செய்யும் முயற்சியினையும் வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளன.
- திருமுறைத் தோழி, தலைமகனை வரைவுகடாவ, இற்செறிப்பு, தினைப்புனம் கொய்தல், அலர்தோன்றல், தலைவன் வரும் வழியின் ஏதம் கருதி அஞ்சும் தலைமகளின் அச்சம் போன்றவற்றைக் காரணங்களாய்க் கற்பிக்கின்றாள்.
- அறத்தொடு நிற்கும் தோழி, வெறியாட்டு எடுத்தல், செவிலி ஐயுற்றுவினவல் போன்றவற்றை அறத்தொடு நிற்றலுக்கான நிலைக்களன்களாகவும், புனல்தருபுணர்ச்சி, களிறுதருபுணர்ச்சி,

நொதுமலர் வரைவு போன்றின்னவற்றை ஏதுக்களாகவும் கொண்டு செயல்படுகிறாள்.

- திருமுறைத் தலைவன், உடன்போக்கின்கண், தலைவியை உடன்கொண்டு செல்ல மறுத்தவழி, தலைவியின் பிரிவாற்றாமையைக் கூறி, உடன்கொண்டு செல்ல வற்புறுத்தும் தோழியைத் திருமுறைகள் காட்டுகின்றன.
- தோழியானவள் தலைவியால் 'அன்னை' என அழைக்கப்படுதலும் உண்டு எனும் தொல்காப்பிய மரபின்படி, திருமுறைத்தோழி, அழைக்கப்பட்டிருப்பதனையும், தலைவி தோழியை முன்னிலைப்படுத்திக் கூறியவற்றை, தோழி செவிலியை முன்னிலைப்படுத்திக் கூறுவாள் என்பதனையும் திருவாசகத்தின் 'அன்னைப்பத்து' விளக்கி நிற்கிறது. இத்தகைய மரபு நிலையினை திருமுறைகளில் வேறெங்கும் காணமுடியவில்லை.
- தலைவியின் களவு நெறியினைக் கற்பாய் மாற்றுவதில் முன்நிற்கும் திருமுறைத்தோழி, கற்பின்கண் தலைவியிடத்துத் தோன்றும் ஆற்ற இயலாத் தன்மைகளை ஆற்றுவித்து, நெறிப்படுத்தும் செயலில் முன்நிற்கின்றாள்.
- அகப்பொருள் மரபுகளைத் திருமுறைகளில் அமைத்துப் பாடிய அருளாளர்கள், அவற்றுள் சைவசமயத்தின் புறச்சின்னங்களாய் அமையும் திருநீறு அணிதல், குங்குலியம் சார்த்தல் போன்றின்னவற்றையும் குறித்துள்ளனர். இவ்வாறு பாடல் புனையும் போக்கானது, அகப்பொருள் மரபு சிதையாவண்ணம், அவற்றுள் தான் சார்ந்திருந்த இறைக்கொள்கையினை ஏற்றிப்பாடும் அடியார்களின் உள்ளக் கிடக்கையினை வெளிப்படுத்துகிறது.

சான்றெண் விளக்கம்

1. க.வெள்ளைவாரணர், குறிஞ்சிப்பாட்டு, பத்துப்பாட்டுச் சொற்பொழிவு, ப.232
2. சரளா ராசகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, ப.2
3. மேலது, ப.2
4. புலவர் குழந்தை, தொல்காப்பியத் தமிழர், ப.130
5. ஈ.கோ.பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தோழி, ப.5
6. தொல்.பொருள். நூ.123 (இளம்)
7. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை, ப.61
8. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணைமாந்தர் ஓர் ஆய்வு, ப.39
9. தொல்.பொருள். நூ.126 (நச்சர்)
10. மேலது, நூ.39:10 (நச்சர்)
11. மேலது, நூ.102 : 9-10 (நச்சர்)
12. மேலது, நூ.221 (நச்சர்)
13. மேலது, நூ.114:44 (நச்சர்)
14. மேலது, களவியல், நூ.125 இளம்பூரணர் உரை, ப.112
15. க.வெள்ளைவாரணர், தொல்.பொருள்.களவியல் உரைவளம், ப.245
16. தொல்.பொருள். நூ.125 (இளம்)
17. ஆ.சிவலிங்கனார், தொல்.பொருள்.களவியல் உரைவளம், ப.458
18. தொல்.பொருள். நூ.99:10-14 (இளம்)
19. மேலது, இளம்பூரணர் உரை, ப.31
20. மேலது, எண்.102 நச்சர் உரை, ப.31
21. மேலது, நூ.114:1-6, (நச்சர்)
22. இறையனார் களவியல், நூ.7 உரை, ப.69
23. இளவழகனார், பண்டைத்தமிழர் இன்பியல் வாழ்க்கை, ப.39
24. இறையனார் களவியல், நூ.12:1-2
25. மேலது, களவியல் உரை, ப.85
26. தொல்.பொருள். நூ.114:11-13 (நச்சர்)

27. மேலது, நூ.112, இளம்பூரணர் உரை, ப.78

28. தொல்.பொருள்.களவியல், நூ.114, நச்சர் உரை, ப.103

29. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழியகராதி, ப.356

30. மு.இராகவஐயங்கார், தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி, ப.7

31. மேலது, ப.7

32. வ.சுப.மாணிக்கனார், தமிழ்க்காதல், ப.64

33. தமிழண்ணல், குறிஞ்சிப்பாட்டு, இலக்கியத்திறனாய்வு விளக்கம், ப.55

34. தொல்.பொருள். நூ.114 (நச்சர்)

35. க.வெள்ளைவாரணர், தொல்.களவியல் உரைவளம், பக்.207-209

36. தொல்.பொருள். நூ.207 (இளம்)

37. மேலது, இளம்பூரணர் உரை, ப.223

38. பழமொழிநானூறு, பா.20

39. அகநானூறு, பா.2

40. நற்றிணை, பா.373:6

41. பழமொழி நானூறு, பா.120

42. கம்பராமாயணம், பா.930

43. தொல்.பொருள். களவியல், நூ.114 நச்சர் உரை, ப.126

44. கலித்தொகை, பா.38

45. குறுந்தொகை, பா.47

46. மேலது, பா.24

47. அகநானூறு, பா.48

48. சரளா ராசகோபாலன், சங்க இலக்கியம் - அகம், ப.80

49. தொல்.பொருள். நூ.270:3-5 (பேரா)

50. மேலது, பேராசிரியர் உரை, பக்.38-39

51. மேலது, 266:1-2 (பேரா)

52. மேலது, களவியல், நூ.114 நச்சர் உரை, பக்.126-127

53. மேலது, நூ.131 (நச்சர்)

54. மேலது, களவியல், நூ.114, நச்சர் உரை, ப.112

55. இளவழகனார், பண்டைத்தமிழர் இன்பியல் வாழ்க்கை, பக்.104-105

56. தொல்.பொருள். நூ.114:32-44 (நச்சர்)

57. க.வெள்ளைவாரணர், தொல்.பொருள்.களவியல் உரைவளம், பக்.208-209

58. இறையனார் களவியல், நூ.29

59. தொல்.பொருள். நூ.206 (நச்சர்)

60. க.வெள்ளைவாரணர், தொல்.பொருள்.களவியல் உரைவளம், பக்.39-40

61. தொல்.பொருள். நூ.207 (நச்சர்)

62. இறையனார் களவியல், நூ.14ன் உரை பக்.95-97

63. தொல்.பொருள்.பொருளியல், நூ.207 நச்சர் உரை, ப.293

64. மேலது, நூ.246 (நச்சர்)

65. மேலது, பொருளியல், நூ.207 நச்சர் உரை, ப.293

66. சி.அருணை வடிவேலு முதலியார் (வி.கு.), பதினோராந்திருமுறை, பக்.755-756

67. தொல்.பொருள்.பொருளியல், நூ.207 நச்சர் உரை ப.293

68. மேலது, நூ.206 (நச்சர்)

69. மேலது, நூ.206 நச்சர் உரை, ப.292

70. மேலது, நூ.204:1 (இளம்)

71. மேலது, பொருளியல், நூ.207 நச்சர் உரை, ப.293

72. நாலடியார், பா.360

73. இளவழகனார், பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, பக்.101-102

74. தொல்.பொருள். நூ.39:1-2 (நச்சர்)

75, மு.அருணாச்சலம்பிள்ளை, அகத்திணையியல் உரைவளம், ப.411

76. மேலது, ப.411

77. வ.சுப.மாணிக்கனார், தமிழ்க்காதல், ப.89

78. தொல்.பொருள். நூ.148:29-30 (இளம்)

79. மேலது, இளம்பூரணர் உரை, ப.173

80. மேலது, இளம்பூரணர் உரை, ப.172

81. ம.ரா.போ.குருசாமி, சங்க காலம், ப.51.

இயல் நான்கு

பிறமாந்தர் கூற்றில் அகப்பொருள் மரபுகள்

பிறமாந்தர் கூற்றில் அகப்பொருள் மரபுகள்

அகமரபு எனச் சுட்டப்படும் களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளுக்கும் உரிய தலைமக்களாய்த் தலைவன், தலைவி ஆகியோர் அமைகின்றனர். இவ்விருவர் வாழ்வினையும் செம்மைப்படுத்தும் மைய அச்சாய்த் தோழி விளங்குகின்றாள். இம்மூவரை மையமாகக் கொண்டே அகத்திணை மரபு சுழல்கிறது. எனினும் அதனைச் சுழலச் செய்வதில் பிறமாந்தர்களும் பங்குபெறுகின்றனர். அவ்வகையில் திருமுறைகளில் கூற்றுக்குரியோராய் அமையும் தலைவன், செவிலி, நற்றாய், கண்டோர் ஆகியோரின் கூற்றுக்களின் வழி வெளிப்போந்து நிற்கும் அகப்பொருள் மரபுகளை ஆராய்வது இவ்வியலின் நோக்கம் ஆகும்.

திருமுறைத் தலைவர்

திருமுறைத் தலைவனைப் பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் என இருவேறு நிலையில் வகைப்படுத்த முடிகின்றது. நாயக - நாயகி பாவனையில் அமைந்த பாடல்களில் பாட்டுடைத் தலைவன், இறைவனே என்பதனால் தலைவன் கூற்றில் அமைந்த பாடல்கள் காணப்பெறவில்லை. கிளவித்தலைவன் எனப்பெறும் நிலையிலான பாடல்களில் தலைவன் கூற்றுப் பாடல்கள் காணப்படுகின்றன.

அகமரபில் தலைவன் என்ற சொல்லாட்சி தனிச்சிறப்புமிக்கதாகும். இச்சொல்லின் தனித்தன்மையினை, "மகன் என்ற சொல் வெறும் ஆண்மகனை மாத்திரம் குறிக்கும் சொல் அன்று. நல்லூழின் பெருக்கால் எய்தலாகும் எல்லா உயர்வுகளும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற, பெருந்தகையை மட்டிலும் குறிப்பிடும் சொல் அது. இத்துணை சிறப்புவாய்ந்த விழுமிய பெயருடன் 'தலை' என்ற அடைமொழியும் சேர்ந்தால், இத் 'தலைமகன்' என்ற பெயரால் குறிப்பிடப்படும் தலைவர்களின் பெருமையினை நாமே எண்ணிப்பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்"[1] என ந.சுப்புரெட்டியார்

குறிப்பர். தலைமகனுடைய இலக்கணத்தைத் தொல்காப்பியம், "பெருமையும் உரனும் ஆடூஉமேன"[2] எனக் குறிக்கின்றது. பெருமை என்பதற்கு, "அறிவு, ஆற்றல், புகழ், கொடை, ஆராய்ச்சி, பழிபாவங்கட்கு அஞ்சுதல் ஆகிய பெருமைக்குரிய குணங்கள் என்றும், 'உரன்' என்பதற்கு 'கடைப்பிடியும் நிறையும் கலங்காது துணிதலும் முதலிய வலிமையின் பகுதி"[3] என்றும் நச்சினார்க்கினியர் குறிப்பர். இறையனார் களவியல் உரையாசிரியர், "அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பனவற்றைத் தலைமகனது குணங்களாகக் கூறுவார். 'அறிவு' என்பது எப்பொருளாயினும் அப்பொருட்கண் நின்று அம்மெய்மையை அறிவது. 'நிறை' என்பது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம். 'ஓர்ப்பு' என்பது ஒருபொருளை ஆராய்ந்து உணர்தல். கடைப்பிடி என்பது பொருள் மறவாமை"[4] என விளக்குவர்.

கைக்கிளைத் தலைமகன்

அகத்திணை மரபுகளை வகுக்கும் தொல்காப்பியர், கைக்கிளை முதலா பெருந்திணை முடிய எழுவகைத் திணைகளைச் சுட்டியபின், கைக்கிளை என்பதனை வகுத்துரைப்பர்.

"காமஞ்சாலா இளமையோள் வயின்
ஏமஞ்சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"[5]

என்பது தொல்காப்பியர் கைக்கிளையினை விளக்கம் செய்யும் நூற்பாவாகும்.

இந்நூற்பாவிற்கு "காதற் செவ்விக் கனியும் பருவம் வராத சிறுமி ஒருத்தியிடம், ஒரு தலைவன் தனக்கு மருந்து பிறிதில்லாப் பெருந்துயரம் கொண்டு பட்டாங்குப் புகழ்தலும், பழிப்பது போலப் புகழ்தலுமாகிய

இருவகையானும், தன்பாலும், அச்சிறுமி பாலும், வீறு பெறத்தக்கன சார்த்தி, மறுமாற்றம் பெறாத வழியும், தன்னுணர்ச்சி தானுரைத்து மகிழ்வது, பொருந்தி வெளிப்படும் கைக்கிளைத் தலைவனின் குறிப்பாகும்”[6] என விளக்குவர் சோமசுந்தரபாரதியார். இக் கைக்கிளைக்கிளவிக்கண் கூற்று, தலைவனுக்கே மட்டும் உரியது என்பது பெறப்படும். தலைவிக்கு இத்திணையில் கூற்று இல்லை. தலைவன் ஒருவனை மட்டுமே சார்ந்து அமைதலின் காரணம் பற்றியே ‘ஒருமருங்கு பற்றிய கேண்மை’ ஒருதலைக்காமம்’[7] என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுவர்.

இந்நூற்பாவில் தொல்காப்பியர் ‘காமஞ்சாலா இளையோள்’ எனக் குறிப்பது காமத்தன்மை இன்னது என்று அறியாத பெண் என்னும் பொருளில் அன்று. அக் காமத்தன்மை முழுமைபெறாத பெண் என்ற பொருளிலேயாம். தலைவன் பார்த்துக் காதல் வயப்பட்ட பெண், இத்தன்மையினைச் சார்ந்தவளே என்பதனை,

> “மின்னிழை நறுநுதல் மகள் மேம்பட்ட
> கன்னிமை கனியாக் கைக்கிளைக்காமம்”[8]

என்ற பரிபாடல் அடிகள் விளக்கும்.

“...கைக்கிளைக்கண் ஆணால் காதலிக்கப்படுபவள் இன்னும் ஆளாகாதவள், பூப்பெய்தாதவள் என்பது உண்மையேயாயினும் இன்றோ, நாளையோ இன்னும் ஓரிரு திங்களிலோ அணிமையில் ஆளாகத்தக்க பெரும் பெண் ஆவாள்”[9] என்பர் வ.சுப.மாணிக்கனார்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் வரும் கைக்கிளைத் தலைவன் இத்தகைய பெண்ணினைப் பார்த்து, காதல் கூர்ந்து நிற்கின்றான். இத்தலைவன் தான் மயக்குற்ற பெண்ணைப் பார்த்து, ‘நீ விற்பது கடலினின்று வாரிய கயலோ! அன்றி உன் முகத்தில் காதளவுசென்று மிளிர்கின்ற கயலோ? சொல்வாய்! என வினவி நிற்கின்றான். இதன்வழி, மீன் விற்கின்ற நின்

கண்ணின் பார்வையினால் என்னை வாட்டி நிற்கின்றாய் எனக் குறிப்பான் உணர்த்துகின்றான். இத்தகைய தலைவனின் கூற்றினை,

"நாதன் நனிபள்ளி சூழ்நகர் கானக மாக்கிஃதே
போதின் மலிவய லாக்கிய கோனமர் பொற்புகலி
மேதை நெடுங்கடல் வாருங் கயலோ? விலைக்குளது
காதி னளவும் மிளிர்கயலோ? சொல்லு; காரிகையே" (ஆ.பி.தி.பா.17)

என் பாடலானது விளக்கிநிற்கும்.

கோயில் நான்மணிமாலையில் வரும் தலைவனும் கைக்கிளைத் தலைவனாகவே காணப்படுகின்றான். இத்தலைவன் கண்ட தலைவி, தில்லை நகர் போன்ற அழகினைக் கொண்டவள். நீரின் சுழி போன்ற அழகிய தொப்புளினை உடையவள். அதன்மேல் மேகலை என்னும் அழகிய ஆபரணத்தை அணிந்தவள். அவள்மேல் மையல் கொண்டான் தலைவன். ஆனால் அவளின் சிந்தையோ வேறானது. அதனால் தலைவன் மனம் சிதைந்தான். அவ்வாறு சிதைந்த மனமானது மீண்டும் உயிர்பெற்று வரினும், தலைவியின் கருத்தின்மை அறிந்து மீண்டும் சிதைந்துபோகும். அவ்வாறு என் மனம் சிதைந்த போதாகினும் உன் அருள்கிடைக்குமோ? எனப் பிதற்றி நிற்கின்றான். அத்தகைய தலைவனை,

"சுழிந்த உந்தியில் அழுந்தி மேகலை
தொடக்க நின்றவர் நடக்க நொந்(து)
அழிந்த சிந்தையினும் வந்த தாகிலுமொர்
சிந்தை யாயொழிவ தல்லவே" (கோ.நா.மா.பா.19:3-4)

என்ற பாடல் அடிகள் வெளிக்காட்டும்.

சிறப்புடை மரபின் கைக்கிளை

'புல்லித்தோன்றும் கைக்கிளைக்குறிப்பே' எனத் தொல்காப்பியர் குறிப்பதனைக் கருத்தில் கொண்டு, 'புல்லாமல் தோன்றும் கைக்கிளையும் கொள்ளப்படும்' என்பதனை எடுத்து மொழிந்து, "அஃதாவது காமஞ்சான்ற

தலைமகள் மாட்டு நிகழும் நிகழ்ச்சி அது களவியலில் கூறப்படுகிறது"[10] என்பர் இளம்பூரணர். இவ்வாறு இளம்பூரணரால் மொழியப்படுவது ஒத்த தலைவனும், தலைவியும் களவுக்கு முந்தையவாய்க் காணும் காட்சி, ஐயம், துணிவு எனப் பெறும் மூன்று கூற்றாகிய நிகழ்ச்சிகளையே ஆகும். இதனைப் பின்னர் 'வண்டே யிழையே வள்ளிப்பூவே' எனத் தலைவனின் துணிவுரைக்கும் நூற்பாவில் "காட்சி முதலாக இத்துணையும் கைக்கிளைக் குறிப்பாம்... இனிக் குறிப்பறிதல் கூறுகின்றார் ஆதலின், அக்குறிப்பு நிகழும்வழி இவையெல்லாம் அகமாம்"[11] எனக் குறிக்கும் அவர்தம் உரைக்குறிப்பே இதனை விளக்கும். இவ்வாறு சிறப்புடைக் கைக்கிளைக்கு உரியனவாகிய காட்சி, ஐயம், தெளிவு, தேறல் ஆகிய நான்கினையும் "கலந்தபொழுது காட்சியும் அன்ன"[12] எனவரும் நூற்பாவின் உரையிலும் விளக்குவர் இளம்பூரணர்.

இளம்பூரணர் குறிப்பிடும் இக் கைக்கிளையினை நச்சினார்க்கினியரும் குறிப்பர். எனினும் அவர் இதனை 'முன்னைய நான்கும் முன்னதற்கென்ப' என்ற நூற்பாவில் அமைத்துக் களவியலோடு தொடர்புபடுத்துவர். இதனை, "இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழ்ந்த காட்சியும், ஐயமும், தெளிதலும், தேறலும் என்ற குறிப்பு நான்கும் நற்காமத்திற்கு இன்றியமையாது வருதலின், முற்கூறிய சிறப்புடைக் கைக்கிளையாதற்கு உரியவென்று கூறுவார் ஆசிரியர்"[13] என்பதனான் அறியமுடிகின்றது.

தொல்காப்பிய உரையாசிரியர்களின் வழி, காட்சி, ஐயம், தெளிதல், தேறல் எனப்பெறும் நான்கும் சிறப்புடைக் கைக்கிளையின்பாற்படும் என்பதனை அறியமுடிகின்றது.

இவ்விருவரின் உரையினைக் கொண்டே, பிற்கால இலக்கண நூலான மாறனகப்பொருள்,

"காண்டல் சந்தயந்தெளிதல் கருத்துறலென்

றாண்ட நால்வகைத்தே யழகுடைக் கைக்கிளை"[14]

என்ற இலக்கணத்தை வகுத்திருக்கவேண்டும். இத்தகைய சிறப்புடைய மரபின் கைக்கிளைக் கூறுகளைத் திருமுறையில் காணமுடிகின்றது.

சிறப்புடைக் கைக்கிளையில் காட்சி

சிறப்புடை மரபின் கைக்கிளையில் முதலில் நிகழ்வது காட்சியாகும். தலைவியும், தலைவனும் தம்முள் எதிர்பட்டுக் காணுதலே காட்சி எனப்பெறும். இதனைத் தொல்காப்பியர்,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்

ஒன்றி உயர்ந்த பால தாணையின்

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப

மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே"[15]

எனக் குறிப்பர். இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர், "இருவர்க்கும் ஓரிடமும் வேற்றிடமும் என்று கூறப்பட்ட இருவகை நிலத்தின் கண்ணும், உம்மைக் காலத்து எல்லாப் பிறப்பிலும் இன்றியமையாது, உயிரொன்றி ஒரு காலைக்கொருகால் அன்புமுதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால்வரை தெய்வத்தின் ஆணையாலே, பிறப்பு முதலிய பத்தும் ஒத்த தலைவனும், தலைவியும் எதிர்படும்"[16] என உரைவகுப்பர்.

நச்சினார்க்கினியர் 'பிறப்பு முதலிய பத்து ஒப்ப' என உரைவகுத்தமையை, தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் விரித்துரைப்பர். இதனை,

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு

உருவு நிறுத்த காமவாயில்

நிறையே அருளே உணர்வொடு திருவென

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"[17]

என்பது விளக்கும். இத்தகைய வகையில் ஒத்த தலைவனும் தலைவியும் தம்முட்கண்ட தன்மையினைத் திருமுறைகாட்டும்.

பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தின் காப்பியத் தலைமகன் ஆகிய சுந்தரர் திருவாரூரில் பரவையாரைச் சந்திக்கின்றார். இக்காட்சியினைச் சேக்கிழார்,

"புற்றிடம் விரும்பினாரைப்
போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிசனங்கள்
சூழ ஆளுடைய நம்பி
நற்பெரும் பான்மை கூட்ட
நகை பொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண்
விளங்கிழை யவரைக் கண்டார்"

(த.கொ.பு. பா.139)

என விளக்குவர். சுந்தரர் பின்னர் சங்கிலியாரைக் கண்ட காட்சியினை,

"மின்போன் மறையும் சங்கிலியார்
தம்மை விதியாற் கண்ணுற்றார்" (ஏ.க.பு.பா.266)

என விவரிப்பர் சேக்கிழார். சுந்தரர், பரவையார், சங்கிலியார் ஆகிய இருவரைக் கண்டதுமே 'ஒன்றிய உயர்ந்த பாலதாணையின் படியே' என்பதனைக் குறித்தற்கே, 'நற்பெரும் பான்மை கூட்ட' என்ற தொடரினையும், 'விதியாற் கண்ணுற்றார்' என்ற தொடரினையும் பயன்படுத்துகின்றார் சேக்கிழார். சுந்தரர், பரவையார், சங்கிலியார் தொல்காப்பியர் குறித்த பத்துப்பொருத்தங்களை உடையவர்களே ஆவர். தொல்காப்பியர் உணர்த்தும் களவிற்குரிய தலைமக்களாய்ச் சுந்தரர், பரவையார், சங்கிலியார் அமைந்துள்ளமையை அறியமுடிகின்றது.

தலைவன் ஐயுறல்

பாலதாணையின்வழித் தலைவனும், தலைவியும் எதிர்பட்டவழி, தலைவன் மாட்டு ஐயுறுதல் தோன்றும். இதனைத் தொல்காப்பியர்,

"சிறந்துழி ஐயஞ்சிறந்த தென்ப

இழிந்துழி இழிவே சுட்டலான"[18]

எனக் குறிப்பர். இந்நூற்பாவிற்கு உரைவகுக்கும் இளம்பூரணர், "ஒருவன் ஒருத்தியைக் கண்ணுற்றவழி, அவ்விருவகையும் உயர்வுடையராயின், அவ்விடத்து ஐயஞ்சிறந்தது என்று சொல்லுவர். அவர் இழிபுடையராயின் அவ்விடத்து அவள் இழிபினையே சுட்டி உணர்தலான் என்றவாறு. சிறப்பு என்பது மிகுதி, ஐயமிகுதலாவது மக்களுள்ளாள் அல்லள், தெய்வமே! என மேலாயினரோடே ஐயுறுதல், சிறந்துழி என்பதற்கு தலைமகள் சிறந்துழியும் கொள்ளப்படும். அவளைக்கண்ட இடம் ஐயப்படுவதற்குச் சிறந்துழியும் கொள்ளப்படும். உருவமிகுதியுடையவளாதலின், ஆயத்தாரிடைக்காணினும் தெய்வம் என்று ஐயுறுதல். இதனாற் சொல்லியது, உலகத்துத் தலைமகனும், தலைமகளுமாகிய நம்மால் வேண்டப்பட்டார், அந்தணர் முதலிய நான்கு வருணத்தினும், ஆயர், வேட்டுவர், குறவர், பரதவர் என்னும் தொடக்கத்தினும், அக்குலத்தவராகிய குறுநில மன்னர் மாட்டும் உளராவரன்றே ; அவரெல்லாரினும் செல்வத்தாலும், குலத்தாலும், வடிவாலும், உயர்ந்த தலைமகனும், தலைமகளுமாயினோர் மாட்டே ஐயம் நிகழ்வது. அல்லாதார் மாட்டும் அவ் இழிமரபினைச் சுட்டி நிற்குமாதலான் என்றவாறு"[19] என உரைவகுப்பர்.

தலைவனைக் கண்ட தலைவி, காமப்பருவத்தினை அடையாதவள் எனின் குறிப்புக்கு எதிர்குறிப்புத் தோன்றாது. எனவே காமப்பருவம் கொண்டாளிடத்துத் தோன்றும் ஐயமே சிறப்பாம். இத்தகைய ஐயமானது தலைமகன்மாட்டே நிகழும் என்பதனை,

"உயர் மொழிக் கிளவி உறழுங் கிளவி

ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே"[20]

என்ற தொல்காப்பிய நூற்பா உணர்த்தும்.

திருமுறைகளுள் ஒன்றாகிய பெரியபுராணத்துள், சுந்தரர், பரவையாரைக் கண்டு ஐயுறுதல் என்பது சிறந்துழி ஐயம் ஆகும். திருவாரூர்த் தலத்து இறைவனை வழிபடச் சென்ற சுந்தரர் பாலதாணையின் வழிப் பரவையாரைக் காண்கின்றார். அப்பொழுது அவரிடத்தே,

'கற்பகத்தின் பூங்கொம்போ! காமன்தன் பெருவாழ்வோ!
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ! புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ!
அற்புதமோ! சிவனருளோ! அறியேன் என அதிசயித்தார்!'

(த.கொ.பு., பா.140)

என்பனதாய் ஐயம் தோன்றுகிறது. இவ் ஐயமானது, இளம்பூரணர் குறிப்பது போன்று உயர்ந்த தலைவனுக்கு சிறப்புடைய தலைவியின் மாட்டுத் தோன்றிய ஐயம் ஆகும்.

இப்பாடலுக்கு கு.சுந்தரமூர்த்தி, "திருக்கயிலையிலிருந்துவந்த பெண்ணாதலின் அத்தெய்வத்தோற்றமே காணக் 'கற்பகத்தின்பூங்கொம்போ என்றார். கற்பு + அகத்து + இன்பூ + கொம்பு எனப் பிரித்துக் கற்பினை அகத்தே கொண்ட இனிய பூ மலர்தற்கு இடமாகிய கொம்பு எனப் பொருள் காண்டலும் ஒன்று என்பர் சிவக்கவிமணியார். காமன்தன் பெருவாழ்வு என்பது, பெரு வாழ்வுபெறுவதற்கு இலக்காகக் கொண்ட மன்மதனின் வெற்றிக்கொடியோ! எனப் பொருள் கொண்டு, உருவளர் காமன்றன் வென்றிக்கொடி (திருக்கோவை 1) என வரும் திருக்கோவையாரையும் நினைவுகூர்வார் சிவக்கவிமணியார். புண்ணியத்தின் புண்ணியமோ என்றது, புண்ணியத்தின் விளைவோ? எனப்பொருள் பட நின்றது. வில் புருவத்திற்கும், வேல் கண்ணிற்கும், பவளம் வாய்இதழிற்கும் கோங்குமலர் மார்பகத்திற்கும் மதி நெற்றிக்கும் உவமையாதல் வழக்கு. ஆதலின் இவ்வனைத்துப் பொருள்களையும் கொண்டதொரு நறுமணக்கொடியோ! என்றார். 'திருவளர் தாமரை சீர்வளர் காவிகளீசர் தில்லைக் குருவளர் பூங்குமிழ்

கோங்குபைங்காந்தள் கொண்டோங்கு தெய்வ மருவளர் மாலையொர் வல்லியினொல்கி... (திருக்கோவை.1) எனவரும் திருக்கோவையாரில் பலமலர்களும் ஒருங்குடைய கொடியோ என்றார். ஈண்டு மலர்களோடு பிறவற்றையும் (வில்-பிறைச்சந்திரன்) கூட்டி அவற்றை உடைய விரைக்கொடியோ என்றார்"[21] எனச் சிவகவிமணியார் உரையினையும் உள்ளடக்கி நீண்ட குறிப்புரை தருவர்.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவையில் வரும் தலைவன் தம்மைமயக்கியவடிவம், மானிடமகளோ. அன்றித் தேவர் உலகப் பெண்ணோ என்று ஐயுற்று நிற்கின்றான்.

"..

தாமரை யல்லித் தவிசிடை வளர்ந்த
காமரு செல்வக் கனங்குழை யவளோ
மீமருத்,
தருவளர் விசும்பில் தவநெறி கலக்கும்
உருவளர் கொங்கை யுருப்பசி தானோ
வாருணக் கொம்போ மதனன் கொடியோ
ஆரணி யத்து ளருந்தெய்வ மதுவோ
வண்டமர் குழலும் கெண்டையங் கண்ணும்
வஞ்சி மருங்குங் கிஞ்சுக வாயும்
ஏந்திள முலையும் காந்தளங் கையும்
ஓவியர் தங்க வொண்மதி காட்டும்
வட்டிகைப் பலகை வான்துகி லிகையால்
இயக்குதற் கரியதோர் உருவுகண் டென்னை
மயக்கவர் துதித்ததோர் வடிவிது தானே" (ஆ.பி.தி.மு.பா.28:5-17)

என அத்தலைவனின் ஐயம் வெளிப்பட்டு நிற்கின்றது. இப்பாடலில் தலைவன், தலைவியைக் கண்டு காதல் மீதூரக் கொண்ட மயக்கத்தான்,

உயர்திணையினையும், அஃறிணையினையும் மாறிமாறி எண்ணினான் ஆதலின், 'இறுதியில் இவள் ஒருத்தி' எனக் குறிக்காது 'ஓர் வடிவு இது' எனக் குறித்தான். உயர்திணையை அஃறிணையாகவோ, அஃறிணையை உயர்திணையாகவோ கருதி மயங்கும் திணைமயக்கத்திற்கு, 'உருவு' போன்றன ஐயப்புலப்பொதுச் சொற்கள் ஆதலின் 'வடிவு' எனக் குறித்தனன். இம்மரபினைத் தொல்காப்பியர்,

"உருபு என மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்றும் உரித்தே சுட்டுங்காலை"[22]

என்ற நூற்பாவால் விளக்குவர்.

தலைவனிடத்துத் தோன்றும் தெளிதல்

தலைவியைக் கண்டு ஐயுறும் தலைவன், விண்ணவர்க்கன்றி, மண்ணவர்க்குரிய குறிகள் அவளிடத்து நிகழ்வன கண்டு ஐயம் தெளிவான். இவ்வாறு ஐயம் தெளிவிக்கும் கருவிகளைத் தொல்காப்பியர்,

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப"[23]

என சுட்டுவர்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத் தலைவன், தலைவியை ஐயுற்றுப் பின் தெளிகின்றான். 'தலைவியின் அடியானது நிலத்தில் தோய்கிறது. கண்கள் இமைக்கின்றன. திருநுதல் வியர்க்கின்றது. தேங்கோதை வாடுகின்றது. இவையனைத்தும் தேவமகளிர் மாட்டு இன்மையாதலின், தான் கண்ட பெண் தேவமகள் அல்லள். மானிடப் பெண்ணே' என்று துணிகின்றான். தலைவனின் இத்துணிவினை,

"அம்புந்து கண் இமைக்கும்; ஆன நுதல் வியர்க்கும்;
வம்புந்து கோதை மலர்வாடும்; சம்பந்தன்

காமரு கழுமலம் அனையா

ளாம்இவள் அணங்கலள்; அடிநிலத் தனவே" (ஆ.பி.தி.க.பா.42)

என்ற அடிகளானது புலப்படுத்தும். மேற்கண்ட பாடலில் தலைவன் தலைவியை, 'ஞனசம்பந்தனின் கழுமலம் அனையாள்' எனக் குறித்தான். கழுமலம் நிலவுலகத்தது ஆதல்போன்று தலைவியும் நிலவுலகத்தினைச் சேர்ந்தவள் எனக் குறிப்பான் உணர்த்தலே இதன்நோக்கம். இப்பாடலில் முதலில் தலைவன் மயக்குற்று பின் தெளிதலின், இப்பாடலின் யாப்பும், வெண்பாவில் தொடங்கி ஆசிரியப்பாவின் முடியும் 'மருட்பா' ஆயிற்று. மருட்பா பற்றிவரும் பொருள்களைத் தொல்காப்பியர்,

"கைக்கிளை தானே வெண்பாவாகி

ஆசிரிய வியலான் முடியவும் பெறுமே"[24]

எனக் குறிப்பர். இந்நூற்பாவிற்கு 'கைக்கிளைப் பொருளே மருட்பாவிற்குரித்தென்பது பெற்றாம்'[25] என உரைவகுப்பர் பேராசிரியர். இப்பாடல் கைக்கிளைப்பொருளில் வந்த மருட்பா ஆகும்.

தலைவன் மெய்தொட்டுப் பயிறல்

தலைமகளைத் தனிமையின்கண் எதிர்ப்பட்ட தலைவன், தனது பெருமையும், அறிவும் நீங்க வேட்கை மீதூர்ந்தவனாய்த், தலைவியின் மாட்டு மெய்யுறுபுணர்ச்சியினை விரும்புவான். அந்நிலையில் தலைவியிடத்துக் காணப்படும் நாணமும், அச்சமும் தடையாய் அமையும். அவ்வமயம் தலைவியை நோக்கித் தலைவன் உரைப்பதாய்,

"முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்

நன்னயம் உரைத்தல் நகைநனி உறாஅ

அந்நிலை யறிதல் மெலிவுவிளக் குறுத்தல்

தன்னிலை யுரைத்தல் தெளிவகப் படுத்தலென்று

இன்னவை நிகழும் என்மனார் புலவர்"[26]

என்பனவற்றைக் குறிப்பர் தொல்காப்பியர்.

இத்தகைய நிகழ்வுகளுக்கு மேல் இயற்கைப் புணர்ச்சியாகிய மெய்யுறு புணர்ச்சி நிகழ்வதற்கு முன் நிகழும் நிகழ்வுகளாகத் தொல்காப்பியர் சிலவற்றைச் சுட்டுவார். அவற்றுள் ஒன்றே மெய்தொட்டுப் பயிறல் என்பதாகும். மெய்தொட்டுப் பயிறல் என்பதற்கு, "பெருமையும் உரனுமுடைய தலைமகன் தெளிவகப்படுத்தியது காரணமாகக் காதல் வெள்ளம் புரண்டோடத் தலைவியின் மெய்யினைத் தீண்டிப் பயிறல்"[27] என்பர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர், 'புலையன் தீம்பால்போல் மனம் கொள்ளுதலும் கொள்ளாமையுமாகித் தலைவி நிற்கின்ற காலத்தே தொட்டான்"[28] என உரைப்பர். இவ்வாறு 'மெய்தொட்டுப் பயிறல்' என்னும் நிகழ்வானது 'வண்டோச்சி மருங்கணைதல்'[29] எனப் பிற்கால நூலான திருக்கோவையாருள் குறிக்கப்பெறும். அதாவது தலைமகளைச்சார எண்ணிய தலைமகன், அவளது குழலினை நோக்கி வந்த வண்டினை, ஓட்டுவதுபோல நெருங்கி ஓட்டுமிடத்துத் தன் கைபட்டது போலத் தொடுதலாகும்.

இவ்வாறு மெய் தொட்டுப் பயிலும் தலைவனைத் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை காட்டும். இதன்கண் வரும் தலைவன், "தலைவியானவள் மென்மையானவள். அவளது இடையோ மலரினும் மெல்லியது. அதன் தன்மை அறியார் அவளின் கூந்தலில், மலரினைச் சூடினர். அம்மலரின் பாரம் தாளாது இடைநொசியும் போதில், ஒரு பொட்டும் இட்டார். ஏற்கனவே பாரம் தாளாது வருந்துபவர்மேல் பாரம் ஏற்றல் சரியன்று என்கின்றான். இதன்கண் தலைவன், தலைவியின் இடையானது, மலர், திலகம் போன்றவற்றின் பாரம் தாளாது எனக் கூறி நிற்பவன் அல்லன். அவள் அணிந்துள்ள மலர்களைத் தேடி மேலும் வண்டுகள் வருகின்றன. அவ்வண்டுகளின் பாரத்தினையும் இடையானது தாங்காது எனக் கூறியவனாய் வண்டு ஓட்டுவான்போல் மெய்தொட்டுப் பயில்வான் என்பது ஆராயும்முகத்தான் ஈண்டு வெளிப்பட்டு நிற்கும். இத்தகு செயலினை உடைய தலைவனை,

"நாமே இடையுள்ள வாறறி வாமினி நாங்கள் சொல்லல்

ஆமே மருதன் மருத வனத்தன்னம் அன்னவரைப்

பூமேல் அணிந்து பிழைக்கச்செய் தாரொரு பொட்டுமிட்டார்

தாமே தளர்ப ரைப்பாரம் ஏற்றுதல் தக்கதன்றே" (தி.வி.மு.கோ.பா.15)

என்ற பாடலானது விளக்கிக்காட்டும்.

தலைமகன் பொய்பாராட்டல்

இயற்கைப்புணர்ச்சியில் மெய்யுறு புணர்ச்சி நிகழ்வதற்கு முன் நிகழ்வுகளாகத் தொல்காப்பியர்

"மெய்தொட்டுப் பயிறல் பொய்பாராட்டல்

இடம்பெற்றுத் தழால் இடையூறுகிளத்தல்

நீடுநினைந் திரங்கல் கூடுத லுறுதல்"[30]

என்றின்னவற்றைக் குறிப்பர். இதனுள் குறிக்கப்பெறும் 'பொய்பாராட்டல்' என்பதற்கு, "தலைவியின் ஐம்பால் முதலிய கடைகுழன்று, சிதைவின்றேனும், அஃதுற்றதாக மருங்கு சென்று தொட்டான், ஒரு காரணம் பொய்யாகப் படைத்து உரைத்துப்பாராட்டல்"[31] என உரைவகுப்பர் இளம்பூரணர். பொய்பாராட்டல் என்பதனை 'நலம் புனைந்துரைத்தல்'[32] எனத் திருக்கோவையார் குறிக்கும். திருவள்ளுவரும், 'நலம் புனைந்துரைத்தல்'[33] என்றொரு அதிகாரம் அமைத்திருப்பது ஈண்டு குறிக்கத்தக்கதாம். தலைவன் நலம்புனைந்துரைத்தலின் நோக்கத்தினை, "தலைவன், தலைவியொடு புணர்ந்து பிரிகின்றபோது, மூன்று காரணங்களினால் தலைவியின் அழகைப் பாராட்டுவது வழக்கம் என்பர். உண்மையில் அவளழகில் தான் ஈடுபட்டிருப்பது முதல் காரணம். பிரிந்த காலத்தில் இக்கொண்டாட்டம் தன்னுடைய தரிப்பிற்கு உயிர்ப்பாய் இருக்குமென்பது இரண்டாவது காரணம். இவர் நம்மைப் பிரிந்து நெடும்போது உயிர்தரிக்கமாட்டார், கடுக வந்திடுவார் எனநாயகி தெரிந்துகொண்டு ஆற்றியிருக்க வேண்டுமென்பது மூன்றாவது காரணம்"[34] என விளக்குவார் அண்ணங்கராச்சாரியார். இவ்வாறு

தலைவன், தலைவியரின் உயிர்ப்பிற்கு ஆதாரமாய் அமையும் 'நலம்பாராட்டல்' திருமுறைகளில் காணக்கிடைக்கின்றது.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் தலைவன், வண்டினை ஓட்டுவதுபோல், தலைவியின் மெய்தொட்டுப் பயில்கின்றான். அதனான் ஆய இன்பம், மனத்துள் மிக்குழி, அவ்வண்டினைப் பார்த்து, இவ் உலகில் பொய்கைகளில் மலரும் மலர்களில் உள்ள தாதுக்களில் எல்லாம், தலைவியின் குழல் நாற்றம் போல் கண்ட துண்டோ? என வினவுகின்றான். இதனை,

"அண்ணல் மணிவளைத் தோளரு காசனி சண்பையன்ன
பெண்ணி னமிர்தநல் லாள்குழல் நாற்றம் பெடையொடுபூஞ்
சுண்ணந் துதைந்தவண் டே! கண்ட துண்டு கொல்? தூங்கொலி நீர்த்
தண்ணம் பொழிலெழிற் காசினி பூத்தமென் தாதுகளே"

(ஆ.பி.தி.பா.65)

என்ற பாடலானது உணர்த்திடும். இப்பாடலில் தலைவன் வண்டே! என விளித்தது முன்னிலையாக்கல். கண்டதுண்டுகொல் என்றது சொல்வழிப்படுத்தல். கூந்தலின் நறியவும் உளவோ? என்றது நன்னயமுரைத்தல். பெடையொடு பூஞ்சுண்ணந்துதைந்த வண்டு என்றது பெடையோடு இருத்தலால் மயக்கம் கொள்ளாது, காமம் செப்பாது கண்டதுமொழி என்றது ஆகும்.

திருஏகம்பமுடையார்த்திருவந்தாதித் தலைவன், தலைவியை, 'மணற்குன்றின்கண் நிற்கும் பரதவர் கொம்பே" என்கின்றான். அவளின் கண்களைச் 'சேலல்ல' எனக் கூறி இறுதியில் கூர் அம்புகள் எனக் கூறி நிற்கின்றான். இத்தகைய தலைவனை,

"கொழுமணப் புன்னைத் துணர்மணற் குன்றில் பரதர்கொம்பே
செழுமலர்ச் சேலல்ல வாளல்ல வேலல்ல நீலமல்ல
முழுமலர்க் கூரம்பின் ஓரிரண்டாலு முகத்தனவே" (தி.ஏ.தி.பா.93)

என்ற பாடலானது காட்டி நிற்கும்.

தலைவன் தலைவியை ஊர் அணித்து எனத் தெளிவகப்படுத்தல்

தலைவியின்பால் மெய்யுற்ற தலைவன், அவளை நலம்பாராட்டி, தலைமகளுடன் இன்னும் நீட்டித்திருப்பது ஏதமாகும் எனக் கருதிப் பிரிய நினைப்பான். அவனது எண்ணம் கண்ட தலைவி வருந்துவாள். அந்நிலையின்கண் தலைவன், தலைவியைத் தேற்றி, தலைவியுடன் கொண்ட நட்பானது எழுமையும் தொடர்ந்து வருகின்றமையால் நின்னைப் பிரியேன் எனக் கூறித் தெளிவிப்பான். இதனைத் தொல்காப்பியர்

"தந்நிலை உரைத்தல் தெளிவகப்படுத்தல்"[35]

எனக் குறிப்பர். இவ்வாறு தெளிவகப்படுத்தலால் விளையும் பயன்பற்றி, "புணர்ச்சியெய்திநின்றாட்கு, இவன் எவ்விடத்தன் கொல்லோ, இன்னும் இது கூடுங்கொல்லோ, இவன் அன்புடையான் கொல்லோ என்ற ஐயம் நீங்குதல்"[36] என இயம்புவர் நச்சினார்க்கினியர்.

இவ்வாறு ஐயம் நீங்கிய வழியும், தலைவி பிரிவினை எண்ணி வருந்துவள். அந்நிலையில் அவளை வற்புறுத்த எண்ணும் தலைவன், 'எம்ஊர் அணித்து' எனவே, தான் அடுத்தடுத்து வருவது எளிது எனக் கூறி ஆற்றுவிப்பான். இவ்வாறு உரைத்தல் 'வன்புறை' எனவும் வழங்கப்பெறும்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதித் தலைவன், தலைவியைப் பிரிய எண்ணுகின்றான். அதனை எண்ணித் தலைவி வருந்துகின்றாள். அதற்குத் தலைவனோ, எம் ஊரின்கண் உள்ள சுவரில் எழுதப்பெற்ற கிளியினை 'உண்மைக்கிளி' எனக் கருதி உம் ஊர்ச் சிறுமிகள் அருகில் சென்று அங்கையினை நீட்டுவர். எனவே உம் ஊர்ச்சிறுமிகள் வந்தடையும் அளவிற்கு எம் ஊர் அணித்து. அஞ்சற்க! எனக்கூறி ஆற்றுவிக்கின்றான். தலைவன் இவ்வாறு ஆற்றுவித்தற்கு,

"குறுமனம் உள்கல வாத்தமி ழாகரன் கொச்சையன்ன
நறுமலர் மென்குழ லாயஞ்சய லெம்மூர் நகுமதிசென்(று)

உறுமனை யொண்சுவ ரோவியக் கிள்ளைக்கு நும்பதியிற்

சிறுமிகள் சென்றிருந்(து) அங்கை நீட்டுவர்; சேயிழையே"

(ஆ.பி.தி.பா.47)

என்ற பாடல் சான்றாகும்.

தலைவன் தலைவியை ஆயத்துய்த்தல்

தலைவியைத் தன் ஊர் அணித்து எனத் தேற்றிய தலைவன், அவளைத் தனி இடத்தே விட்டு நீங்கான். அவளை அவளின் ஆயத்தாரிடை விட்டே பிரிவான். தலைவனின் இச்செயல் 'ஆயத்து உய்த்தல்' எனப்படும். தொல்காப்பியர் இதனை, "பெற்றவாயில் பெற்றிரவு வலியுறுப்பினும்"[37] என்பதனுள் வைத்து உணர்த்துவர். நாற்கவிராசநம்பி இதனை, "உடன்புணர் ஆயத்து உய்த்தலும்"[38] என இடந்தலைப்பாட்டின்கண் சுட்டுவார். இவ்விடத்து ஆயத்தார் என்பதற்கு, "தலைவியின் தோழியராம் ஆயத்தார் உடன்பிறந்து, உடன்வளர்ந்து, நீர் உடனாடி, சீர்உடன் பெருக்கி, ஒரு சேரத் தாலாட்டப்பட்டு, பால் உடனுண்டு, ஒரே காலத்துப் பல் முளைக்கப் பெற்று, ஒரே காலத்துப் பேச்சுப் பேசக் கற்று, பழமையும், முறைகளும், பண்பும், நண்பும், விழுப்பமும், ஒழுக்கமும், மாட்சியும் உடையவராய்க் கண்ணும், மனமும் கவரும் ஒண்ணுதல் மகளிராய்ப் பற்பன்னூறாயிரவராய்த் தலைவியோடு உடன் விளையாடுபவர்"[39] என விளக்கம் தருவார் களவியல் உரையாசிரியர். இதனால், தலைவன், தலைவியை அவள் மாட்டு அன்புடையோராகிய ஆயத்தாரிடை விட்டுப்பிரிவான் என்பது பெறப்படும்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் தலைவன், தலைவியை, மடக்கொடியே! அன்னமே! என்று நலம் பாராட்டிப் பின் பிரிய நினைக்கின்றான். அவன் தலைவியினிடத்து, 'நீ இன்னும் காலம் தாழ்த்துவாய் எனின் உன் ஆயத்தார் தேடுவர். எனவே சோலையுள் சென்று ஆயத்தாரிடம் சேர்' என்று ஆயத்துய்க்கின்றான். இதனை,

"மனமே புகுந்த மடக்கொடியே! மலர் மேலிருந்த
அனமே! யமிர்தக் குமுதச்செவ் வாயுங்க ளாயமென்னும்
இனமே! பொலியவண் டாடெழிற் சோலையு ளெய்துகவே"

(ஆ.பி.தி.பா.78)

என்ற பாடலானது விளக்கிடும். இப்பாடலில் 'பொலிய' என்ற சொல்லின் வழி, தலைவி இல்லாமையால் பொலிவினை இழந்த ஆயத்தார் அதனைப் பெறல்வேண்டி, தேடிவருவர், எனவே 'விரைந்து செல்' என்பதனைக் குறிப்பால் உணர்த்தினான் தலைவன்.

பாங்கற்கூட்டத்தில் தலைவன் உற்றது உரைத்தல்

அகத்திணை ஒழுகலாறுகளில், தலைவனுக்கும் பாங்கனுக்குமான உறவுநிலைச் செய்யுட்கள் இன்றியமையாத இடத்தினைப்பெறுகின்றன. இதனை, "பாங்கற்கூட்டச் செய்யுள்கள் எல்லாமே அறிவுச்செறிவும், இலக்கியப் பொலிவும் உடையன. காதலியர் தம் 'கண்' என்னும் பின்னா வலையுள்ளும், கூந்தல் என்னும் பின்னிய வலையுள்ளும் பட்ட ஆடவர் தம் நெஞ்சத்துடிப்பினைக் காட்டுவன"[40] என வ.சுப.மாணிக்கனார் குறிப்பதினின்று அறியமுடிகின்றது.

இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாட்டின்கண் தலைவியைத் தானே கூடிய தலைவன், பின்னைப் பொழுது, தனது களவொழுக்கத்தினைப் பாங்கனிடம் கூற முற்படுவான். இவ்வாறு தலைவன் பாங்கனுக்கு உரைக்கும் செயல் 'உற்றது உரைத்தல்' எனப்படும். தொல்காப்பியர் இதனை, 'நிகழ்பவை உரைத்தல்'[41] எனக் குறிப்பர்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின்கண் வரும் தலைவனின் மயக்கம் கண்டு பாங்கன் காரணம் வினவுகின்றான். அதற்குத் தலைவன், கெண்டை மீன்களையும், வாளினையும் தோற்கடிக்கும் மின்னல் போலும் பெண்ணின் புன்னகையால் இந்நிலை ஆயிற்று என உற்றது உரைக்கின்றான்.

"தாளின் சரணந் தருஞ்சண்பை நாதன் தரியலர்போல்
கீளின் மலங்க விலங்கே புகுந்திடும், கெண்டைகளும்,
வாளுந் தொலைய மதர்த்திரு காதி னளவும்வந்து
மீளுங் கருங்கண்ணி மின்புரி யாவைத்த மென்னகையே"

(ஆ.பி.தி.பா.62)

மேற்கண்ட பாடலில் தலைவன், ஞானசம்பந்தரோ, தன் பகைவரையே வருத்தும் இயல்பினை உடையவர். ஆனால் தலைவியோ, தன் மென்னகையால், அன்பு கொண்டோனையும் வருத்தினாள் என்பதனைப் பாங்கனுக்குக் குறிப்பால் உணர்த்தி நிற்கின்றான்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத் தலைவன், பாங்கனிடம், ஞானசம்பந்தர் வைகையாற்றில் ஏட்டினைவிட, அவ்வேடானது, ஆற்றின் ஓட்டத்தினை எதிர்த்துக் கரைசேர்ந்தது. தலைவியின்பால் சென்ற தன் மனமானது, அவளின் நினைவினை எதிர்த்துக் கரைசேறும் வழியின்றித் தவிக்கின்றது என உற்றது உரைக்கின்றான். இத்தகைய தலைவனை,

"மங்கை யிடத்தர னைக்கவி நீரெதி ரோட மதித்தருள்செய்
தங்கு புகழ்ச்சதுரர் மாமறை நாவளர் சைவசி காமணிதன்
துங்க மதிற்பிர மாபுரம் மேவிய சூழ்பொழில் நின்றொளிர்மென்
கொங்கை யுடைக்கொடி யேரிடை யாள்குடி கொண்டன ளெம்மனமே"

(ஆ.பி.தி.க.பா.15)

என்ற பாடல் அடையாளம் காட்டும்.

தலைவன் கழற்றெதிர் மறுத்தல்

உற்றது உரைக்கும் தலைவனிடம், பாங்கன், உலகத்து நிலை நின்ற நற்குணங்களை எல்லாம் எடுத்துக்கூறி, 'நின் தகுதிக்கு இஃது பொருத்தமுடையதன்று' எனக் கழறியுரைப்பான். ஆனால் தலைவனோ பாங்கனை மறுத்து, தன்நிலையினை மேலும் வலியுறுத்துவான். தொல்காப்பியர் இதனை "நிகழ்பவை உரைத்தல்"[42] எனக் களவியல்

நூற்பாவில் வைத்து உரைப்பர். இத்தகு கிளவி 'கழற்றெதிர்மறுத்தல்' எனத் திருக்கோவையாரில் குறிக்கப்பெறும்.[43]

திருவாரூர் மும்மணிக்கோவையின் தலைவன், பாங்கன் கழறியுரைத்த வழி, கழற்றெதிர் மறுக்கின்றான். தலைவியின் பால் தான் கொண்ட அன்பினை அழிப்பார் உலகில் இல்லை எனத் தலைவன் கூறி நிற்பதனை,

"ஆயின அன்(பு) ஆரே அழிப்பார்? அனலாடி
பேயினவன் பார்ஓம்பும் பேரருளான் - தீயினவன்
கண்ணாளன் ஆரூர்க் கடலார் மடப்பாவை
தண்ணாருங் கொங்கைக்கே தாழ்ந்து" (தி.மு.கோ.பா.29)

என்ற பாடல் விளக்கி நிற்கும்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின்கண் வரும் தலைவன், தன் குடிமையின் பெருமையினை மனத்துள் எண்ணுகின்றான். ஆயினும், தன் குடிமைப்பெருமையினும், தலைவியின்பால் கொண்ட காதலே மீதூர்ந்து நிற்கும் நிலையில், தலைவியின் சாயலும், கண்ணும், குழலும் தன்னை வருத்துவதாய்ச் சொல்லி நிற்கின்றான். தலைவனின் இந்நிலைக்கு

"பொன்மயிற் சாயலும் சேயரிக் கண்ணும் புரிகுழலும்
மென்மையிற் சாயும் மருங்குலும் காதல் விளைத்தனவே"

(தி.ஏ.தி.பா.10:3-4)

என்ற அடிகள் சான்றாம்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் கண் வரும் பாடல், இவ்வகத்துறைக்குச் சிறந்த சான்றாய் வரும் பாடலாகும். அப்பாடல்,

"உறுகின்ற வன்பினோ(டு) ஒத்திய தாளமு முள்ளுருகிப்
பெறுகின்ற வின்பும், பிறைநுதல் முண்டமுங் கண்டவரைத்
தெறுகின்ற வாறென்ன செய்தவமோ! வந்தென் சிந்தையுள்ளே
துறுகின்ற பாதன் கழுமலம் போலும் துடியிடைக்கே"

(ஆ.பி.தி.பா.34)

என்பதாம்.

இப் பாடலில் தலைவன், கழுமலம் போலும் துடியிடை உடைய தலைவிக்கு, அன்பினொடு, தாளமும், இன்பும், முண்டமும் கண்டவரைத் தெறுகின்றவாறாய் உள்ளது எனத் தன் நிலைமைக்கு ஏது கூறுகின்றான். இப்பாடலில் 'பொறுகின்ற இன்பும்' எனக் குறித்த வழி, தலைவன் முன்பு தலைவியோடு கூட்டம் நிகழ்ந்தமையைக் குறித்து, அறிதோறும் அறியாமை காணப்பட்டாற்போன்று, காதலியின்மாட்டு செறிதோறும், முன்னைச் செறிவானது செறிவாகாது ஒழிகின்றது என்பதனையும் உணர்த்துகின்றான். 'கண்டவரைத் தெறுகின்றவாறு' என்றவழிப் பாங்கனிடத்து, 'நீயும் கண்டனையாயின் இங்ஙனம் கழலுறாய்' என்பதனையும் குறிப்பான் உணர்த்தி நிற்கின்றான் தலைவன்.

தலைவன் இயலிடம் கூறல்

தலைவன் கழற்றெதிர் மறுத்தவழி, தலைவன் அன்பின் ஆழத்தினை உணர்ந்த பாங்கன், இனித் தன்னால் தலைவனைத் தேற்ற இயலாது எனக் கருதித் தன்னைத் தேற்றிக்கொண்டு, உன்னால் காணப்பட்ட தலைவியின் உருவம் எத்தன்மைத்து, எவ்விடத்து என வினவுவான். அதற்குத் தலைவன், தலைவியின் இயலிடம் தெரிவிப்பான். தொல்காப்பியர் இதனை, "குற்றங்காட்டிய வாயில் பெட்பினும்"[44] என்பதினுள் அமைத்திடுவர்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத் தலைவன், தலைவியின் இயலிடம் குறிக்கின்றான். தலைவியானவள், நறுமணம் கமழும் கூந்தலினை உடையவள். அழகிய கொங்கைகளைக் கொண்டவள். மிக்க அன்புணர்வையும், ஒத்து விளங்கும் நடையையும், தேன்போன்ற மொழியினையும், சேல் போன்ற விழியினையும் கொண்டவள் என்கிறான். இத்தலைவன், கடவுள்மாட்டு அன்புடையோன் ஆதலின், தலைவியின் இயல்பினைக் குறிக்குமிடத்து, தலைவியானவள் திருநீற்றுக்கோலமும், திருப்பதிகத்தின்பால் விருப்பும், குருபக்தியும் பணிவும் உடன் கொண்டவள் எனத் தலைவியின் இயல்புகளை விளக்குகின்றான். தலைவியின் இச்சிறப்பு

இயல்புகளே தன் உள்ளம் அவள்பால் சென்றமைக்குக் காரணம் என்பதனையும் தெரிவிக்கின்றான். இத்தலைவன் இவ்வாறு தலைவியைச் சுட்டும் இடத்து சைவ சமயத்தின் புறச்சின்னங்களையும், தலைவி சைவசமயச் சார்புடையவளாய் அமைந்ததையும் சுட்டியுரைக்கும் மரபு, அருளாளர்கள் அகத்திணைமரபின் தன்மை அழியாவண்ணம் சமயத்தின் பெருமையினை உயர்த்த மேற்கொண்ட சிறந்த உத்தி ஆகும்.

"ஊறியேறு பதிகத் தோசை நேச நுகர்வும்
ஒத்து கித்து நடை யுஞ் சித்தபத்தி மிகையும்
வீற தேறும் வயல்சூழ் கழி ஞான பெருமான்
வென்றி துன்று கழலி னொன்றி நின்ற பணியும்
தேறல் போலும் மொழியும் சேல்கள் போலும் விழியும்
சிந்தை கொண்ட பரிசும் நன்றி மங்கை தவமே"

(ஆ.பி.தி.க.பா.30)

என்ற அடிகள் தலைவன் இயலிடம் குறித்தமைக்குச் சான்றாகும்.

பாங்கி மதியுடம்பாட்டில் தலைவன் கெடுதிவினவல்

பாங்கி மதியுடம்பாட்டின்கண் தலைவன் 'கெடுதி வினவல்' என்பது, யானை, புலிபோன்றன இவ்வழி வந்ததோ என வினவல் என்பதாகும்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் தலைவன், கெடுதி வினவலில் பன்றி வினவி வருகின்றான். இத்தலைவன், மன்மதனின் வில்லினைப் போன்ற மகளிர்களே! குருதியோடு புண் கொண்ட பன்றி ஒன்று இப்புனத்தின்கண் வந்ததோ என வினவி நிற்றலுக்கு,

"............................. வரி விற்புருவக்
கண்டக வாளி படப்புடை வீழ்செங் கலங்கலொடும்
புண்தகக் கேழல் புகுந்ததுண் டோ? நுங்கள் பூம்புனத்தே"

(ஆ.பி.தி.பா.55:2-4)

என்ற அடிகள் சான்றாகும்.

திருவாரூர் மும்மணிக்கோவையின் தலைவன். கெடுதிவினவலில் 'வேழம்' வேண்டி நிற்கின்றான். மகளிரே! அணிகலன்கள் நிறைந்த, அழகிய தனங்களை உடையவர்களே! வறிதுபடாத புகழையுடைய பெரியோனும், திருவாரூரில் நின்று காப்பவனுமாகிய, சிவபெருமான் முற்காலத்தில் உரித்த யானையினைப் போன்ற யானை ஒன்று இந்தப் புனத்தின் பக்கம் போன செயலை நீவிர் கண்டது உண்டோ? என வினவுகின்றான். தலைவனின் இத்தகு செயலினை,

> "இழையார் வனமுலை யீர் இத்தண் புனத்தின்
> உழையாகப் போந்த தொன்றுண்டோ? - பிழையாச்சீர்
> அம்மான், அனலாடி, ஆரூர்க்கோன் அன்றுரித்த
> கைம்மா நேர் அன்ன களிறு" (தி.மு.கோ.பா.8)

என்ற பாடலானது விளக்கி நிற்கும். இப்பாடலில் தலைவன் யானையினைக் குறிக்கும் பொழுது சிவபெருமான் யானையினை உரித்த புராணச் செய்தியினையும் சேர்த்தே உரைக்கின்றான். இத்தகைய மரபு, அடியார்களின் உளங்கவர்ந்த தலைவனாகிய சிவபெருமானின் பெருமையினை, கிளவித்தலைவன் கூற்றின்வழி உணர்த்த விழையும் உள்ளார்ந்த நிலையினை உணர்த்துகின்றது.

தலைவன் பிறவினாதல்

களவில் பாங்கிமதியுடம்பாட்டினை விழைந்து நிற்கும் தலைமகன் அவளிடத்துப் பிற வினவி நிற்பான். பிற வினாதல் என்பதற்கு, "வழி வினாதலும், தன்னொடு அவரிடை உறவு தோன்றற்பாலனவுங் கூறுதல் கொள்க"[45] என உரைவகுப்பர் நச்சினார்க்கினியர்.

நச்சினார்க்கினியர் உரையின்படி, திருஏகம்பமுடையார் திருவந்தாதித் தலைவன், தினைப்புனத்தின்கண் உள்ள மகளிரது கண்களே, தன்னையும், மானையும் அவரிடத்தே வரச்செய்தன எனக் கூறி நிற்கின்றான். தலைவனின்

இக்கூற்றானது 'தன்னொடு அவரிடை உறவுதோன்றற் பாலனவுஞ் கூறல்' என்னும் துறையின்கண் அமைந்ததாகும்.

"எம்மையும் எம்மைப் பணிகொள்ளும் கம்பர் எழிற்கயிலை
உம்மையும் மானிடம் இப்புனத் தேவிட்டு வந்தமைந்தார்
தம்மையும் மானையும் சிந்தைய நோக்கம் கவர்கவென்றோ
அம்மையும் அம்மலர்க் கண்ணும் பெரியீர் அருளுமினே" (பா.14)

என்ற பாடல், தலைவன், தன்னையும் தலைவி, தோழி ஆகியோரையும் உறவுதோன்றக்கூறி நிற்றலை விளக்குகின்றது. இப்பாடலில் தலைவன் 'பெரியீர்' என விளித்தது தோழியையே ஆகும்.

தலைவன் மடன்மாக்கூறல்

தலைவன், தலைவியை எய்த வேண்டித் தோழியை இரந்து பின் நிற்பான். தோழியானவள், தலைவன் தலைவியின் அருமையை அறிதல் வேண்டும் என்பதற்காய்த் தலைவனின் கூற்றிற்கு உடனடியாகப் பதிலேதும் கூறாமல் காலம் நீட்டிப்பாள். அவ்விடத்துத் தலைவன், தலைவியின் உள்ளம் அறியாது மடல் ஏறியாவது தலைவியை அடைவேன் என்பான். இதனைத் தொல்காப்பியர்,

"........................ தோழி
நீங்கலி னாகிய நிலைமையும் நோக்கி
மடல்மாக் கூறும் இடனுமா ருண்டே"[46]

எனக் குறிப்பர். இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியார், "தோழி இவ்விடத்துக் காவலர் கடியரெனக்கூறி, சேட்படை நிறுத்தலின், தனக்கு உண்டாகிய வருத்தத்தைப் பார்த்து, சேட்படையான் மடலேறுவல் எனக் கூறும் இடனும் உண்டு. 'இடனும் உண்டே' என்றமையான் வரைபாய்தல் எனக் கூறும் இடனும் உண்டென்றவாறு"[47] என்று விதந்தோதுவர்.

மடன்மாக்கூறும் தலைவன் தோழியிடம் முதலில் தான் மடலேறுவதாய்க் கூறான். காதல் கொண்ட ஆடவரெல்லாம், காதலியரை அடைதற்பொருட்டு மடலேறுவர் என உலகின்மேல் வைத்துரைப்பான். அவ்வாறு உரைத்தும் தன் எண்ணம் நிறைவேறா நிலையில், தன் காதலியை நேரிடையாகக் குறிக்காமல், யாரோ ஒருத்தி தன்னை மடலேற வைத்ததாய் உரைப்பான். அப்பொழுதும் தோழி வாய்திறவாவிடத்து, நின் தலைவியை விரைந்து என்னிடம் கூட்டாயாகில், தெருவிடை மடலேறியாவது, பெறுவேன் என உணர்த்தி நிற்பான். இவ்வாறு உரைத்தல் மடன்மாக்கூறல் எனப்பெறும்.

இவ்வாறு தலைவன் மாடலூர்தல் என்பதும், மடலூர்வேன் என்பதும் தலைவனின் பெருமைக்கு இழிவாகாதா? பிறர் எள்ளும் தன்மைக்கு உரியதாகாதா? என்பன போன்ற வினாக்களுக்கு, "அவரெல்லாம் கருத்து நோக்காது, வெறும் செய்கையினை நோக்கி மட்டும் அங்ஙனம் எண்ணி, ஏளனஞ்செய்வாராதலாலும், அவ்வாறு அது செய்வாருங் கீழ்மக்களாவாரேயல்லது, உயர்ந்த கருத்தும், ஆன்ற அறிவுமுடைய மேல்மக்களாகாராதலாலும், அம்மேன்மக்களுள் எல்லாரும் மடலேறினானென்று கேள்விப்பட்ட அந்த நொடியிலே, இவன் அவளல்லால் உயிர் வாழானென்று, அவன் காதலுண்மையுணர்ந்து, மணம் முடித்துவைக்க முயல்வாரேயல்லாது, இகழாராதலாலும், திருமணம் செயல்களென்ற அளவிலே, பொதுவாகக் காமத்தன்மை அதன் மேலேற்றி, ஏளனஞ் செய்வது உலகத்திலே கீழோர் மாட்டுக் காணப்படுதலானும், அக்கீழ்மக்களின் அறியாமைச் செயல்கொண்டே உயர்ந்த நற்கருத்தின் பாலதாய்த் தூய அறிவும், பழுதற்ற காதலும், முறுகி எழுந்து, விம்மி விளங்கிய ஞான்று, அவர்பால் அவரை மறந்து ஏற்படும் மடலேறுஞ் செய்கைக்கு ஓரிழிவு கூறுதல் பொருந்தாமை காண்க"[48] என விடையிறுப்பர் இளவழகனார்.

தலைவன் மடன்மாக் கூறுதலால் ஏற்படும் நன்மையினை, "தோழி முன் சொல்லியபடி, தலைவனது குறைக்குச் செவிசாய்க்காது, கையுறைக்குக் கைகொடாது, காலம் தாழ்த்தும் போது, இனி மடலேறுவதுதான், தான் எண்ணியது எண்ணியாங்கு எய்தற்கு வழி என்று அவளிடம் கூறுவான். இக்கூறுகை தோழிக்குச் சிறிது கலக்கத்தை உண்டாக்கும். அதன்பின் தோழியின் துணையால் களவு நீளவும், காமம் செழிக்கவும் காண்கிறோம்"[49] என விளக்குவர் வ.சுப.மாணிக்கனார்.

இவ்வாறு களவின்பத்தைத் தலைவன் பெறுவதற்குக் காரணமாய் அமையும் மடல் கூற்றினை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத் தலைவன் கூறுகின்றான். இத்தலைவன், தலைவி அருள்செய்யாது இருப்பாளாகில், உடல் முழுவதும் திருநீறுபூசி, பனைமடல் குதிரை ஏறி, வீதிவழியே வரும் எண்ணம் உடையேன் என்கிறான். இதனை,

"கடல்மேவு புவியேறு கவிநீரர் பெருமான்றன்
தடமாடு மிகுகாழி தகுபேதை யருளாமல்
திடமாகி லணிநீறு செழுமேனி முழுதாடி
மடலேறி யெழில்வீதி வருகாத லொழியேனே" (ஆ.பி.தி.க.பா.13)

என்ற பாடல் விளக்கி நிற்கும்.

தலைவன் புணர்ச்சிவேட்கை மிக்கவனாய் வரைவுடம்படாது மறுத்தல்

தலைவன், குறியிடத்துத் தலைவியைக் கண்டுபுணரும் களவின்பம் நீடிக்குமாயின் அஃது அலர் எழ ஏதுவாகும் எனக் கருதும் தோழி வரைவு வேண்டுவாள். ஆனால் களவினை நீட்டிக்க விரும்பும் தலைவனோ மறுத்துரைப்பான். தொல்காப்பியர் இதனை, களவில் தோழிக்குக் கூற்று நிகழிடங்களைத் தொகுத்துச் சுட்டும் நூற்பாவில்,

"எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்
புணர்ச்சி வேண்டினும்"[50]

எனக் குறிப்பர். நம்பியகப்பொருள் இத்துறையினை, "உலகியல் உரைத்தலும் தலைமகன் மறுத்தலும்"[51] எனச் சுட்டும்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதித் தலைவன் வரைவுடம்பட மறுக்கின்றான். வரைவு வேண்டும் தோழி, தலைவனிடத்து, 'வேங்கை பூத்தது. அதனைக் காணின் எமர் தினைப்புனத்தைக் கொய்து விடுவர். அப்பால் தலைவி இற்செறிக்கப்படுவாள். எனவே விரைந்து வரைந்துகொள் என்கிறாள். அதற்குத் தலைவனோ, வேங்கை பூத்து அலர்வதற்கு முன்னமே, நாம் அரும்புகளைக் கொய்துவிடுவோம். பின் எப்படி தினைப்புனம் கொய்யப்படும் எனக் கூறித் தோழியை நகையாடி வரைவு மறுக்கின்றான். வேங்கை பூப்பது எப்போது? நுமர் காண்பது எப்போது? தினை கொய்து இற்செறிப்பது எப்போது? எல்லாம் நாளையே நிகழ்வதுபோல் கூறி, என்னை ஏய்க்கப்பார்க்கிறாய்! என்றும் கூறி நகையாடுகின்றான். தலைவனின் இத்தகைய நகையினைத் தொல்காப்பியர் குறிக்கும் 'எள்ளல்' பற்றிய நகையென்னும் மெய்யப்பாட்டில் அடக்கலாம். இதனை,

"மலர்பயில் வாட்கண்ணி! கேள்; கண்ணி நீண்முடி வண்கமலப்
பலர்பயில் கீர்த்திக் கவுணியர் தீபன் பகைவரென்னத்
தலைபயில் பூம்புனங் கொய்திடுமே! கணியார் புலம்ப
அலர்பயி லாமுன் பறித்தன மாகில் அரும்பினையே" (ஆ.பி.தி.பா.23)

என்பது உணர்த்தும்.

தலைவன் வறுங்களம் கண்டு வருந்தல்

தலைவியைக் குறியிடத்தில் காணவந்த தலைவன், அவளைக்காணாது, வருந்திக்கூறல் இத்துறையாகும். இதனைத் தொல்காப்பியர்,

"பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்
அன்புற்று நகினும் அவட்பெற்று மலியினும்
ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக் கியல்பே"[52]

எனக் குறிப்பர். இந்நூற்பாவின்கண் வரும் 'பரிவுற்று மெலியினும்' என்பதற்கு, "புணர்ந்து நீங்குந் தலைவன் ஆற்றாது கூறுவனவும், வறும்புனங்கண்டு

கூறுவனவும்”[53] என உரைவகுப்பர் நச்சினார்க்கினியர். இதனை, ‘வறும்புனம் கண்டு வருந்தல்’[54] எனத் திருக்கோவையார் சுட்டும்.

ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவையின் தலைவன், தலைவியைக்காணப் புனத்தின்கண் வருகின்றான். தலைவி இற்செறிக்கப்பட்டமையால் வந்தாளில்லை. அதனைக்கண்ட தலைவன், தலைவி மலர்கொய்தபொழில், நீராடித் துகில்புனைய நின்று, தலைவனைக் கண்டு நாணிய இடம், கிளி கடிந்தபரண், இருவரும் அன்புமொழி பயின்ற இடம், தலைவி, தலைவனை ஏமாற்றி ஒளிந்திருந்த பளிங்கு அறை போன்ற இடங்கள் இப்போது வெறிச்சோடிக்கிடக்கின்றன எனக் கூறி வருந்தி நிற்கின்றான்.

“இழைகெழு மென்முலை இதழி மென் மலர்கொயத்
தழைவர ஒசித்த தடம்பொழில் இதுவே - காமர்
சுனைகுடைந் தேறித் துகிலது புனைய நின்று
எனையும் கண்டு.வெள்கிடம் இதுவே தினைதொறும்
பாய்கிளி இரியப் பையவந்தேறி
ஆய்வென் றிருக்கும் மணிப்பரண் இதுவே ஈதே
இன்புறு சிறுசொல் அவைபல இயற்றி
அன்புசெய் தென்னை ஆட்கொளும் இடமே
...
நலங்கலந் தோங்கும் விலங்கலின் மாட்டுப்
பூம்புனம் அதனிற் காம்பன தோளி
பஞ்சில் திருந்தடி நோவப் போய்எனை
வஞ்சித் திருந்த மணியறை இதுவே” (ஆ.பி.தி.மு.பா.16)

இப்பாடலில் தலைவனால் குறிக்கப்பெறும் பளிங்கறை என்பது, கண்ணாடி போன்ற பளிங்கால் செய்யப்பட்டது ஆகும். மணியறை என்பது, மணிகளை உடைய அறையாகிய குகை என்பது ஆகும். இங்கு குறிக்கப்படும் கொன்றை முல்லை நிலத்தின் கருப்பொருள் ஆயினும்,

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்"[55]

என்பதனால் குறிஞ்சி நிலப்பாடலில் வந்தது. எனவே இஃது திணைமயக்கம் அன்று.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின் தலைவன், தினைப்புனத்தில் தலைவியைக் காணாது வருத்தம் மேலிட, தலைவியாடும் பொழில், அருவி, தலைவனும் தலைவியும் மயங்கித் தழுவும் இடமாகிய மணியறை முதலியவற்றை நோக்கி, நீங்கள் தலைவிக்கு உதவுபவர்கள் ஆதலின் உங்களிடம் கூறாது சென்றிருக்க மாட்டாள். அவள் சென்ற இடந் தன்னைக் கூறுங்கள் என்று வேண்டிநிற்கின்றான். இத்தகைய தலைவனை,

"இயங்கும் திரிபுரம் எய்தவே கம்பர் எழிற்கயிலைத்
தயங்கும் மலர்ப்பொழில் காள்தையல் ஆடருவித் தடங்காள்
முயங்கி மணியறை காள்மொழி யீரொழி யாதுநெஞ்சம்
மயங்கு பரிசுபொன் னார்சென்ற சூழல் வகுத்தெமக்கே"

(தி.ஏ.தி.பா.26)

என்ற பாடலானது எடுத்துக்காட்டும்.

உடன்போக்கில் தலைவியின் தளர்வறிந்து இருத்தல்

தமிழ் அகமரபில் உடன்போக்கு என்பது குறிக்கத்தக்கதாம். உடன்போக்கு என்பது, தலைவியின் தமர் அறியாவழித்தலைவன், தலைவியைத் தன் ஊரின்கண் அழைத்துச் சென்று மணம்செய்தலாம். இவ் உடன்போக்கு மேற்கொள்ளும் காலங்களைத் தொல்காப்பியர்,

"ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉப்
பிரிதலச்சம் உண்மை யானும்
அம்பலும் அலரும் களவு வெளிப் படுக்குமென்று

அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்

நோக்கோடு வந்த இடையூறு பொருளினும்

போக்கும் வரவும் மனைவிகட் தோன்றும்"[56]

என்ற நூற்பாவான் குறிப்பர். இவ்வாறு உடன்போக்கு மேற்கொள்ளும் காலத்து, சுரத்தில் தலைவி, தமர்கண்டு அஞ்சும் வழியும், சுரத்தின்கொடுமை தாளாது வருந்திய இடத்தும், தலைமகன் கூற்றுத்தோன்றும். இதனைத் தொல்காப்பியர் அகத்திணையியலில்,

"ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்

ஒன்றிய மொழியொடு வலிப்பினும்"[57]

என மொழிவர். இவ்வாறு இடைச்சுரத்தில் தலைவியின்துயர் அறிந்து தலைவன்கூறும் கிளவியினை, 'தளர்வு அறிந்து உரைத்தல்'[58] எனத் திருக்கோவையார் குறிக்கும்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்தில் இத்துறை காணப்படுகின்றது. இத்தலைவன், தலைவியின் மாட்டு அன்புடையவனாய், வாய்ப்பு அமையும் பொழுதெல்லாம் தலைவியைக் காண்கின்றான். ஆனால் எப்பொழுதும், தலைவனுடன் இருக்க விரும்பும் தலைவி, அஃது இயலாமையின், தலைவனுடன் உடன்போக்கினை மேற்கொள்கின்றாள். கொடிய சுரத்தின் வழியே, தன்னுடன் வந்த தலைவியின் துயரம்கண்ட தலைவன், இவ்விடத்துச் சிறிது தங்கிச்செல்வோம் எனத் தளர்வு அறிந்து உரைக்கின்றான். தலைவனின் இத்தகு செயலிற்கு,

"வருகின் றனனென் றனதுள் ளமும்நின்

வசமே நிறுவிக் குறைகொண்டு தணித்(து)

அருகும் புனல்வெஞ் சரம்யா னமரும்

மதுநீ யிறையுன் னினையா தெனின்முன்

கருகும் புயல்சேர் மதில் வண்புகலிக்

கவிஞன் பயில்செந் தமிழா கரன்மெய்ப்

பெருகுந் திருவா ரருள்பே ணலர்போற்

பிழைசெய் தனைவந் ததர் பெண் கொடியே” (ஆ.பி.தி.பா.33)

என்ற பாடல் சான்றாகும்.

கற்பின்கண் தலைவன் செலவழுங்கல்

கற்பின்கண், தலைவன் தலைவியைப் பிரியும் பிரிவானது, ஓதல், பகை, தூது, பொருள் எனப் பலவாற்றான் அமையும். இவற்றுள் பொருள் வயிற்பிரியும் நிலைக்கு உட்படும் தலைவன், தலைவி வருந்துதலை அறிந்து, சிறிது காலம் தனது செலவினைத் தள்ளிவைத்தல் ‘செலவழுங்கல்’ எனப்படும் அகத்துறையாம். தலைவன் செலவழுங்கல் என்பது ‘செல்லாமை அன்று’ என்பதனை,

“செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே

வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும்”[59]

என்ற தொல்காப்பிய நூற்பா விளக்கும். இதனை நச்சினார்க்கினியர், “தலைவன் கருதிய போக்கினை இடையே தவிர்த்திருத்தல், பிரிந்து போதல் ஆற்றாமைக்கன்று. தலைவியை ஆற்றுவித்துப் பிரிதற்கு தவிர்ந்த தவிர்ச்சியாகும்”[60] என விளக்குவர்.

தலைவன் இவ்வாறு செலவழுங்கும் நோக்கத்தினை, “புறம்போய்ப் பொருள் தேடினும் அமைய வேண்டிய இடம் வீடுதானே. வீட்டவர் மனக்கவலையை மாற்றாமல் புறப்படுவது அறிவுடைமையாகாது. அதனால் தலைவன் மேலும் சிலநாள் இல்லில் தங்கி, அன்புதோன்ற அளவளாவிப் பிரிவது கடமை. இச்செலவுச் தாழ்ச்சி - செலவழுங்கல் - தலைவிக்கு வெள்ளம் தணிவதுபோல் ஆறுதலை அளிக்கும்”[61] என விளக்குவர் வ.சுப.மாணிக்கனார்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்தில் வரும் தலைவன், தான் பிரியின் தலைவி வருந்துவாள் எனக் கருதுகின்றான். இத்தலைவன், தன் தலைவியின் அருமையினை ஞானசம்பந்தர் திருப்பதிகத்தின் அருமையோடு

உவமிப்பான். அத்தகைய சிறப்பினை உடைய தலைவியானவள், தான் பிரியின் இறந்துபடுவாள் என எண்ணி வருந்திச் செலவழுங்குதலை,

"மின்னு மாகத் தெழிலி யுஞ்சேர் மிகுபொன் மாடப் புகலிவேந்தன்
துன்னும் ஞானத் தெம்பி ரான்மெய்த் தொகைசெய் பாடற்பதிக மன்னாள்
பொன்னும் மாநல் தரளமுந்தன் பொருக யற்கண் தனம்நி றைந்தாள்
இன்னும் மேகிப் பொருள்ப டைப்பான் எங்ஙனே நானெண்ணு மாறே"

(ஆ.பி.தி.க.பா.29)

என்ற பாடலானது விளக்கிக்காட்டும்.

இப்பாடலில் தலைவி தன் தனங்களில் பொன்னையும், கண்களில் தரளத்தையும் (முத்துக்கள்) நிறைந்தாள். பொன்னும், முத்தும் இங்கே கிடைத்தபின், பொருள் தேட முயல்வது எதுக்கு? எனப் பொருள்படும்படி, 'பொன்னும் மாநல் தரளமுந்தன் தன்பொரு கயற்கண் தனம் நிறைந்தாள்' எனக் குறிப்பான் வெளிப்படுத்தி நின்றான் தலைவன்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் தலைவன், ஞானசம்பந்தரின் அருள் இல்லாதவர்களே பொருள்பெரிதென மதிப்பர். அவர்களைப்போல், மென்மையினை அறியாது, பொருள்பெரிதென நினைக்கும் தன்னுடைய சிந்தை சரியன்று எனத் தன் நெஞ்சிற்குக் கூறிச் செலவழுங்குகின்றான். இதனை

"பொருளென வென்னைத்தன் பொற்கழல் காட்டிப் புகுந்தெனக் கிங்கு
அருளிய சீர்த்திரு ஞானசம் பந்தன் அருளிலர்போல்
வெருளின மானின்மென் நோக்கியை விட்டு விழுநிதியின்
திரளினை யாதரித் தால்நன்று சாலவென் சிந்தனைக்கே"

(ஆ.பி.தி.பா.84)

என்பது உணரத்தும். இதில் தான் பிரியின் தலைவி வாழாள் என்பதனை அறிந்தும் பொருள் வலிக்கின்ற நெஞ்சம் பேதமையுடைத்து என்பதனைக்

குறிக்கும் முகத்தான் 'நன்று' என இகழ்ச்சிக் குறிப்பு தோன்ற உரைக்கின்றான் தலைவன்.

செவிலி கூற்றில் அகப்பொருள் மரபுகள்

அகத்திணை மாந்தர்களுள் குறிப்பிடத்தக்க இடம்பெறுபவள் செவிலி. அகமரபில் தலைவியின் தாய் 'நற்றாய்' என்றும், தோழியின் தாய் 'செவிலி' என்றும் குறிக்கப்படுகின்றனர். தான், அவள் என்னும் வேறுபாடு இன்றித் தலைவியும், தோழியும் கொள்ளும் உறவின்மேன்மையினைச் 'செவிலி' 'நற்றாய்' உறவிலும் காணமுடிகின்றது. தலைவியின் களவொழுக்கத்தினை தோழி அறத்தொடு நின்று, செவிலிக்கு உரைக்குமாற்போல், செவிலி நற்றாய்க்கு உரைக்கின்றாள். தலைவியின் மாட்டு மிக்க அன்புடையோளாய்ச் செவிலி அமைதலால், தாய் எனவும் அழைக்கப்படுதல் உண்டு என்பதனை,

"ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலில்
தாய் எனப்படுவாள் செவிலி யாகும்"[62]

என்ற தொல்காப்பிய நூற்பா உணர்த்தும். அக இலக்கியங்களில் செவிலியின் இடம் குறித்து, "இலக்கணத்தில், செவிலி, நற்றாய் என இருசொற்கள் பயன்படுத்தப்படினும், இலக்கியத்தில் இருவரும் 'அன்னை' என்றே யாண்டும் அழைக்கப்படுகின்றனர். தோழியிடம் தாயார் நேர்முகமாகக் கேட்க முடியாத செய்திகளை வினவுதற்கும், தாயிடம் கூற முடியாதவற்றைத் தோழி கூறும்போது கேட்டறியவும் அமைந்த ஓர் அகத்திணை மாந்தராகச் செவிலி படைக்கப்படுகின்றாள் எனக் கருத இடமுள்ளது"[63] என விளக்குவர் ஆ.இராமகிருட்டிணன்.

இதன் வழித் தலைவியின் களவொழுக்கம் கற்பொழுக்கமாய் மாறும் பொருண்மையில் தோழியினை அடுத்து இன்றியமையாத இடத்தினைப் பெறுபவள் செவிலி. திருமுறைகளிலும், இத்தகைய சிறப்பினை உடைய செவிலியையும் அவள்தம் கூற்றுக்களையும் காணமுடிகின்றது.

தலைவி பிச்சியானதை உரைக்கும் செவிலி

செவிலி கூற்று நிகழிடங்களைத் தொல்காப்பியர் களவியலில்,

"களவ லராயினும் காம மேற் படுப்பினும்

அளவு மிகத்தோன்றினும் தலைப்பெய்து காணினும்"[64]

எனக் குறிப்பர். இவற்றுள் 'காமமேற்படுப்பினும்' என்பதற்கு, 'தலைவி கரந்தொழுகுங் காமந்தானே அக்களவினை நன்றாயும் தீதாயும் மெய்யின்கண் வெளிப்படுப்பினும்"[65] என உரைவகுப்பர் நச்சினார்க்கினியர்.

இவ்வாறு காமமேற்பட்ட நிலையில் தலைவியின் செயல்பாடுகளைக் கண்ட செவிலி உரைப்பதாய், நாவுக்கரசரின் ஆறாம் திருமுறைத் திருவாரூர்ப் பதிகத்தின் பாடல் ஒன்று அமைந்துள்ளது. இப்பாடலானது தலைவி, கைக்கிளைத் தலைவியாய் இருந்து பின், ஐந்திணைத் தலைவியாய் மாற்றம்பெற்ற படிநிலையை உணர்த்துகின்றது. நாவுக்கரசரின் அகப்பாடல் வரிசையில் மகுடமாய்த் திகழும் பாடல் இதுவே ஆகும். அப்பாடல்,

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்

மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்

பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்

பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்

அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்

தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்

தலைப்பட்டாள் நங்கைத் தலைவன் தாளே" (6:25-7)

என்பதாம். இப்பாடலின்கண் தலைவனுடைய நாமத்தை, வண்ணத்தை, ஆரூரைக் கேட்டவுடன், தலைவி தன்னை மறந்து தன் நாமம் கெட்டுத் தலைவனுக்கே தலைப்பட்டாள் என்பது தமிழ் அகமரபின் அழகிய வெளிப்பாடு ஆகும்.

இப்பாடலில் குறிக்கப்பெறும் அகலிடத்தார் ஆசாரம் எனப்படுவது மகளிர் இல்வரை இகந்து செல்லாது நிற்றல். அதனை அகன்றமை என்பது, தானே இல்லில் இருந்து சென்று ஆரூரை அடையத் துணிந்தமை ஆகும். தன்னை மறத்தல் என்பது, தலைவனை நினையும் நினைவிலே, தான் இது செய்கின்றோம் என்று அறியாது ஒழிந்தமையாகும். தன் நாமம் கெட்டாள் என்பது, நிறையழியாது இருப்பவள் என்பதினின்று கெடுதல் ஆகும்.

காதல் கைமிக அரற்றும் தலைவியை எண்ணி வருந்தும் செவிலி

ஞானசம்பந்தர் தேவாரத்தின் இரண்டாம் திருமுறையின், திருவானைக்காப் பதிகத் தலைவி, காதல் கைமிக அரற்றி நிற்கின்றாள். அத்தகைய தலைவியைக் கண்ட செவிலியின் கூற்றாய் இப்பதிகம் அமைந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர் செவிலி கூற்று நிகழுமிடங்களைச் சுட்டும்பொழுது "காதல் கைமிகக் கனவில் அரற்றல்"[66] எனக் குறிப்பர். இதற்கு உரைவகுக்கும் நச்சினார்க்கினியர் 'தலைவியிடத்துக் காதல் கையிகந்து பெருகுதலால், துயிலா நின்றுழியும் ஒன்று கூறி அரற்றலும்.... அரற்றல் - இன்னாதோர் இன்னாக்காலத்து என்செய்கின்றாயெனக் காதல் பற்றி இரங்குதல்"[67] என உரைவகுப்பர்.

திருவானைக்காப் பதிகத்தில் காதல் கைமிகுந்து அரற்றும் தலைவியைக்கண்டு துன்புறும் செவிலி கூறுவதாய்ப் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. தலைவி, தலைவனின் அருள்வேண்டி அரற்றி நிற்பதை,

"மழையார் மிடற்றா மழுவா ளுடையாய்
உழையார் கரவா உமையாள் கணவா
விழவா ரும்வெண்நா வலின்மே வியஎம்
அழகா எனும்ஆ யிழையாள் அவளே" (2:23:1)

செவிலி கூற்றுப்பாடல் உணர்த்தும்.

இப்பதிகத்தின் இரண்டாவது பாடலில் தலைவி, தலைவன் தன்னைக் கொள்ளும் விலையால் ஆட்கொண்டு நிலையாக அருள்செய்யவேண்டும் எனப் புலம்புவதனைக் குறிக்கின்றது. இதனை,

"கொலையார் கரியின் உரிமூ டியனே
மலையார் சிலையா விளைவித் தவனே
விலையா லெனையா ளும்வெண்நா வலுளாய்
நிலையா அருளா யெனுநே ரிழையே" (2:23:2)

என்பதனான் அறியமுடிகின்றது.

நாவுக்கரசர் தேவாரத்தின் ஐந்தாம் திருமுறையில் நாற்பதாவது பதிகமாகிய திருக்கழிப்பாலைப்பதிகத்தின்கண் வரும் செவிலி, தன்மகள் தலைவனின் வண்ணமோ, வடிவமோ காணாமலேயே, அவன் நாமம் கூறி அரற்றுகின்றாள் என்கிறாள். இதனை,

"வண்ண மும்வடி வுஞ்சென்று கண்டிலள்
எண்ணி நாமங்க ளேத்தி நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
அண்ண லேயறி வானிவள் தன்மையே"(5:40:1)

என்பது உணர்த்தும்.

தலைவன்மேல் கொண்ட காதலாள் தலைவி, செவிலி உள்ளிட்ட யாரையும் மதிக்காத உன்மத்த நிலையினை அடைந்தாள் என்பதனை,

"செய்ய மேனிவெண் ணீறணி வான்றனை
மைய லாகி மதிக்கில ளாரையும்" (5:40:4)

என்ற அடிகள் விளக்கிடும்.

தலைவி பிறரை மதிக்காத தன்மையுடையவளானதுடன், தலைவனைக் காணவேண்டும் என்ற அவா முன்னே இழுக்கவும், பிறர்காணின் நகைப்பரே என்னும் நாணஉணர்வு பின்னே இழுக்கவும் தடுமாறும் தன்மையினள் ஆனாள் என்பதனை,

"கருத்த னைகழிப் பாலையுள் மேவிய
ஒருத்த னைஉமை யாளொரு பங்கனை
அருத்தி யாற்சென்று கண்டிட வேண்டுமென்று
ஒருத்தி யாருள மூசல தாடுமே" (5:40:5)

என்ற பாடலானது சுட்டும்.

தலைவனைக் காணவேண்டும் என்ற வேட்கை நாணினையும் வென்றமையால், தலைவியானவள், தலைவனைச் சென்றுசேரும் வழியினை, பிறரிடம் கேட்கத் தொடங்கினாள். பிறர் கூறும் பழியினையும் ஏற்கத் தயாரானாள் எனக் கூறிச் செவிலி புலம்புவதனை,

"பத்தர் கட்கமு தாய பரத்தினை
முத்த னைமுடி வொன்றிலா மூர்த்தியை
அத்தனையணி யார்கழிப் பாலையெம்
சித்தனைச்சென்று சேருமா செப்புமே" (5:40:8)

என்ற அடிகளானது வெளிக்காட்டும்.

இப்பதிகத்தின் இறுதிப்பாடலில், தலைவன், தலைவிக்குத் துஞ்சும் பொழுதுதான் துணையாயிருப்பான் போலும் எனத் தலைவி புலம்புவதாய்ச் செவிலி குறிக்கின்றாள். இதன்வழி களவின் இறுதிநிலையாகிய, துஞ்சுதல் என்னும் சாக்காட்டினைத் தலைவி எய்தும் நிலைக்கு ஆளானாள் என்பதனை "அவத்தைகள் பத்தில் சாக்காடு என்னும் நிலையினை அடைந்த இடத்தும்"[68] எனக் குறிப்புரையில் விளக்குவர் க.வச்சிரவேலு முதலியார். தலைவியின் இத்தகு நிலையினை,

"என்செ யான்கழிப் பாலையு ளெம்பிரான்
துஞ்சும்போதும் துணையென லாகுமே" (5:40:10)

என்ற அடிகளானது எடுத்துக்காட்டும்.

பொன்வண்ணத்தந்தாதியின் செவிலி, காதல் துயரால் தலைவியின் மெய்யின்கண் தோன்றும் துயருறுதல், தொழுதல், அழுதல், அயர்தல் போன்ற மாறுபாடுகளைத் தெற்றென விளக்குகின்றாள். இதனை,

"துயரும் தொழுமழும் சோரும் துகிலுங் கலையுஞ் செல்லப்
பெயரும்; பிதற்றும்; நகும்; வெய்துயிர்க்கும்; பெரும்பிணி கூர்ந்து
அயரும்; அமர்விக்கும் மூரி நிமிர்க்குமந்தோ! இங்ஙனே
மயரும்; மறைக்காட்டி யிறையினுக் காட்பட்ட வாணுதலே!"

(பொ.வ.அ.பா.37)

என்பது உணர்த்தும்.

நாவுக்கரசர் தேவாரத்தின் ஐந்தாம் திருமுறையின் நாற்பத்தைந்தாவது பதிகமாகிய திருத்தோணிபுரப் பதிகமும் செவிலிகூற்றுப்பதிகம் ஆகும்.

இப்பதிகத்தின் முதற்பாடலில், செவிலி, தன்மகள் தலைவன்மேல் கொண்ட காதலால், நாண் இழந்து மனையினின்று வெளியேறினாள் எனவும், மனையுள் இரு என்று நீதி கூறினும், நீதிகூற நீ யார்? என்று கேட்கிறாள் என்றும் கூறிப் புலம்புகின்றாள். தலைவியின் இத்தகு நிலைமைக்கு,

"மாதி யன்று மனைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனும்
சோதி யார்தரு தோணி புரவர்க்குத்
தாதி யாவன்நா னென்னுமென் தையலே" (5:45:1)

என்ற பாடல் சான்றாகும்.

இப்பதிகத்தின் நான்காவது பாடலில் தலைவனானவன், முன்னமே உடலில் ஒரு பெண்ணையும், சடையில் ஒரு பெண்ணையும் உடையவன். அவனுடைய தன்மையை அறிந்தும், இப்பெண் அவனைக் காதலிக்கின்றாளே! எனச் செவிலி இரங்கிக் கூறுவதாய் அமைந்துள்ளது. இதனை,

"பாலை யாழ்மொழி யாளவள் தாழ்சடை
மேல ளாவது கண்டனள் விண்ணுறச்
சோலை யார்தரு தோணி புரவர்க்குச்
சால நல்லாளா கின்றனள் தையலே" (5:45:4)

என்பது விளக்கும்.

களவு அலராகின்ற வழிச் செவிலி கூற்று

களவின்கண் செவிலி கூற்று நிகழுமிடங்களில் முதன்மையானதாய்த் தொல்காப்பியர் சுட்டுவது, 'களவு அலராயினும்' என்பதாகும். நாவுக்கரசரின் செவிலியும், தலைவியின் நிலை அறியாது, உலகத்தார் அலர்கூறி நிற்கின்றனர் எனக் கூறி வருந்துகின்றாள். செவிலியின் இக்கூற்றிற்கு,

"ஒன்று தானறி யாருல கத்தவர்
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பிலர்
துன்று வார்பொழில் தோணி புரவர்தம்
கொன்றை சூடுங் குறிப்பது வாகுமே" (5:45:7)

என்ற பாடலானது சான்றாகும்.

செவிலி அறத்தொடு நிற்றல்

தொல்காப்பியர் களவியலில் செவிலிக்குரிய கிளவி உணர்த்தும் நூற்பாவில்,

"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக்கண்ணும்
ஆடியசென்றுழி அழிவு தலைவரினும்
..
போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்"[69]

என்று செவிலியோடு தொடர்புபடுத்தி அறத்தொடு நிலைச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

"தலைவியின் மெலிவிற்குக் காரணங்களைக் கட்டுவிப்பித்தும், கழங்கு பார்த்துக் கண்டறிந்து, அவளது மெலிவுதீர வேலனைக் கொண்டு, வெறியாட்டுவித்தல் வேண்டும் எனச் செவிலியும், நற்றாயும் பொருந்திய பக்கத்துச் செய்திக்கண்ணும், அங்ஙனம் வெறியாட்டு நிகழ்த்தத் தொடங்கிய நிலையில், தோழி தடுத்து நிறுத்திய நிலையிலும், தலைவி, தலைவனொடு உடன்போனாள் என்று அறிந்த நிலையில் தோழியோடு ஆராய்ந்து, அவ்விருவரையும் மனையறத்தின்கண் நிறுத்தற் கண்ணும் செவிலி பேசுவாள்"[70] எனக் குறிப்பர் இளம்பூரணர்.

செவிலியின் இச்செயல்கள் அவள் அறத்தொடு நிற்றலை உணர்த்துகின்றன. செவிலி அறத்தொடு நிற்றல் குறித்துப் பொருளியலிலும் தொல்காப்பியர்

"உற்றுழியல்லது சொல்ல லின்மையின்
அப்பொருள் வேட்கை கிளவியினுணர்ப"[71]

எனக் குறிப்பர்.

தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்பதன் முன்னமே, செவிலி, தலைமகளது களவொழுக்கத்தினைக் குறிப்பால் உணர்ந்து, தலைவியின்கண் ஏற்படும் வேறுபாடு எதனாலாயிற்று? எனத் தோழியை வினவி அறிவாள் என்பது இந்நூற்பாவில் உணர்த்தப்படும் செய்தியாகும். இவ்வாறு அறத்தொடு நிற்கும் செவிலியினைத் திருமுறை காட்டும்.

செவிலி நற்றாயிடம் அறத்தொடு நிற்றல்

தலைவியின் களவொழுக்கத்தினைத் தோழியின் வழி அறியும் செவிலி, அதனை நற்றாய்க்கு உரைத்து அறத்தொடு நிற்பாள்.

பொன்வண்ணத்தந்தாதியில் வரும் செவிலி, நற்றாயிடம், தலைவி தலைவனின் நாமத்தினையே பேசுகின்றாள். தலைவியின் கொங்கைமேல் பூசப்பட்டிருப்பது, தலைவனின் சந்தனமே! இஃது பொய்யல்ல! மெய் எனக்

கூறி அறத்தொடு நிற்கின்றாள். இத்தகைய செவிலியின் செயலை,

"பேசுவது எல்லாம் அரன் திருநாமம்; அப்பேதை நல்லாள்
காய்சின வேட்கை அரன் பாலது! வறுகாற் பறவை
மூசின கொன்றை முடிமேலது; முலைமேல் முயங்கப்
பூசின சாந்தம் தொழுமால்; இவையொன்றும் பொய்யலவே"

(பொ.வ.அ.பா.97)

என்ற பாடலானது எடுத்துக்காட்டும். செவிலி இவ்வாறு அறத்தொடு நிற்கும் பொழுது, தலைவி அருகில் இல்லை என்பதனைச் சுட்ட, 'அப்பேதை நல்லாள்' என்ற சேய்மைச் சுட்டைக் குறிக்கின்றாள்.

கபிலரின் சிவபெருமான் திருவந்தாதிச் செவிலி, தலைவி, தன்னுடைய அறிவை எல்லாம் தலைவனிடத்தே வைத்தாள் என்பதனை,

"வண்டாழங்கொன்றையான் மால் பணித்தான், மற்றவர்க்காய்
வண்டாழங் கொண்டாள் மதி" (பா.45:3-4)

எனக் குறித்து நிற்கின்றாள்.

கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியில் வரும் செவிலி, தலைவியின் களவொழுக்கத்தினை, நற்றாய்க்கு,

"தொழுவாள்; பெறாளே; தோள்வளையும்; தோற்றாள்
மழுவாளன் காளத்தி வாழ்த்தி - எழுவாள்;
நறுமா மலர்கொன்றை நம்முன்னே நாளைப்
பெறுமாறு காணீர்என் பெண்" (கயிலை.பா.58)

என உரைத்து அறத்தொடு நிற்கின்றாள். இப்பாடலில், செவிலி தலைவியை 'என்பெண்' எனக் குறித்தது, தலைவியின் மாட்டுச் செவிலிக்கு உள்ள அன்பின் மேன்மையினை உணர்த்தும். தலைவியானவள், தலைவனைத் தொழுதும், எழுந்தும், தோள்வளை தோற்றும் தலைவனைப் பெற்றாளில்லை எனினும் நாளை பெறுவாள்! காணீர்! எனச் செவிலி உரைத்தல், தலைவனின் மாலையினைத் தலைவி பெறும்வகையில் நற்றாயும் தமரும் கூடி மணம்

செய்துவைத்தல் வேண்டும் என்பதனைக் குறிப்பான் உணர்த்தி அறத்தொடு நிற்றலுக்காம்.

மகட்போக்கிய செவிலி பிரிவுழிக் கலங்கல்

தலைவி, தன் கற்பின் தன்மையை நிலைநிறுத்தற்பொருட்டு, உடன்போக்குச் சென்றவழி, செவிலி மனையின்கண் இருந்து கலங்குவாள். இதனைத் தொல்காப்பியர்,

"பிரிவின் எச்சத்து மகணெஞ்சு வலிப்பினும்"[72]

எனக் குறிப்பர். இதற்கு நச்சினார்க்கினியர், "உடன்போக்கிற்கு நெஞ்சுதுணியினும்... தன்மேல் அன்பு நீங்கியது உணர்ந்து செவிலி கூறும்"[73] என உரைவகுப்பர்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின் செவிலி, மகட்போக்கியவழி, கலங்கி உரைக்கின்றாள். மென்மைத்தன்மை கொண்ட தன்னுடைய மகளைத் தலைவன் கொடிய பாலையின்வழி அழைத்துச் சென்றான். அப்பாலையின் பரலைக்கற்கள் அவளது அடியினைத் துன்புறுத்துமே! யாங்ஙனம் ஆற்றுவேன்! எனக் கூறிப் புலம்புகின்றாள்.

"வாழப் பெரிதெமக் கின்னருள் செய்யும் மலர்கழலோர்
தாழச் சடைத்திரு ஏகம்பர் தம்மைத் தொழாதவர்போய்
வாழப் பரற்சுரம் ஆற்றா தளிரடி பூங்குழலெம்
ஏழைக் கிடையிறுக் குங்குய பாரம் இயக்குறினே" (தி.ஏ.தி.பா.66)

இப்பாடலில் செவிலி நற்றாயையையும் தன்னுடன் உளப்படுத்தி 'எம்' எனவும், தலைவியை 'எம் ஏழை' - எங்கள் பெண் என்றும் உரைக்கின்றாள்.

இவ் அந்தாதியின் பிறிதோர் பாடலில் செவிலி தன்மகள், உடன்போன சுரத்தில் கள்ளிச்செடிகள் வெம்மையால் தீப்பிடித்து எரியும். அதன் வெம்மை தாளாது, மூங்கில் வெடிக்கும். அக்கொடிய வழியில் என் மகள் செல்வது உரைப்பரிது! எனினும் சென்றனளே! என எண்ணிப் புலம்புகின்றாள்.

இதனை,

"கொள்ளுங் கடுங்கதி ரிற்கள்ளி தீச்சில வேயுலறி
விள்ளும் வெடிபடும் பாலையென் பாவை விடலைபின்னே
தெள்ளும் புனற்கச்சி யுள்திரு ஏகம்பர் சேவடியை
உள்ளும் அது மறந் தாரெனப் போவது ரைப்பரிதே" (தி.ஏ.தி.பா.68)

என்ற பாடல் எடுத்துக்காட்டும்.

இவ் அந்தாதியின் மற்றொரு செவிலி கூற்றுப் பாடல், உடன்போக்கு செல்ல நினைக்கும் தலைவியின் செயலை விரித்துரைக்கும். இப்பாடலில் இடம்பெறும் தலைவி தலைவனுடன் போக முதல் நாளே முடிவுசெய்தனள். எனவே அன்றைய பொழுதின் முன் மாலையில், தன்னுடைய கழங்கினையும், பந்தினையும் செவிலியிடம் கொடுத்து, அவளை ஆசைதீரக் கட்டியணைத்துக்கொண்டாள். செவிலி, தலைவியின் இச்செயலுக்கான காரணத்தை அப்பொழுது அறிந்தாளில்லை. தலைவி உடன்போக்குச் சென்ற நிலையில் அவளது செயல்களுக்கான காரணத்தை எண்ணிப் புலம்புகின்றாள். செவிலியின் புலம்பலையும், தலைவியின் செயலையும்

"வனவரித் திண்புலி யின்னதள் ஏகம்ப மன்னருளே
எனவரு பொன்னணங் கென்னணங் கிற்கென் எழிற்கழங்கும்
தலைவரிப் பந்துங் கொடுத்தெனைப் புல்லியும் இற்பிரிந்தே
இனவரிக் கல்லதர் செல்வதெங் கேயொல்லும் ஏழைநெஞ்சே"

(தி.ஏ.தி.பா.70)

என்பது உணர்த்தும்.

உடன்போக்கில் செவிலி தேடிச்செல்லல்

தலைவி, உடன்போக்கு மேற்கொண்டவழி செவிலி, தலைவியை சுரத்தின்கண் தேடிச் செல்லுவாள். இதனைத் தொல்காப்பியர்,

"ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே"[74]

எனக் குறிப்பர். இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர், 'தாயாரெனப்பன்மை கூறித் தாமேயெனப் பிரித்ததனாற், சேரிக்கு நற்றாய் சேறலும், சுரத்திற்குச் செவிலித்தாய் சேறலும் புலனெறி வழக்கிற் சிறந்ததென்றுணர்க"[75] என உரைவகுப்பர். இதன்வழி சுரத்தின்கண் தேடிச்செல்பவள் 'செவிலி' என்பது பெறப்படும்.

திருவாரூர் மும்மணிக்கோவையில் வரும் செவிலி கூற்றுப் பாடல் இத்துறையின்கண் அமைந்ததாகும். இப்பாடலில் தலைவியின் செல்வச்செழிப்பும், அதனை விடுத்து தலைவனுடன் உடன்போன மாண்பும், கொடிய பாலைவழியின் வெம்மையும், தன்மகள், சுரத்தின் மறத்தியர்களுக்கு விருந்தாய்ப்போனாளோ? எனக் கலங்கித் தேடிச்செல்லும் செவிலியின் துயரமும் விளக்கப்படுகின்றன. இத்தகைய பாடல்

"புனமயிற் சாயல் பூங்குழல் மடந்தை
மனைமலி செல்வம் மகிழா ளாகி
ஏதிலன் ஒருவன் காதலன் ஆக
விடுசுடர் நடுவண்நின்று அடுதலின் நிழலும்
அடியகத் தொளிக்கும் ஆரழற் கானத்து
வெல்வினை வேடர் துடிக்குரல் வெரீஇ
மெய்விதிர் எறியுஞ் செவ்விய ளாகி
முள்ளிலை யீந்தும் முளிதாள் இலவமும்
வெள்ளிலும் பரந்த வெள்ளிடை மருங்கில்
..
விரிநரைக் கூந்தல் வெள்வாய் மறத்தியர்
விருந்தா யினள் கொல் தானே" (தி.மு.கோ.பா.13)

என்பதாம்.

இக் கோவையின் பிறிதோர் பாடலில் 'கொடிபோலும் இடையினை உடைய தன்மகள். அயலான் பின்னே கொடிய சுரத்தின்கண் நடந்து

சென்றாள் எனத் தேடிச்செல்லும் செவிலியைக் காணமுடிகின்றது. அப்பாடல்,

"கொடியேர் நுடங்கிடையாள் கொய்தாரான் பின்னே
அடியால் நடந்தடைந்தாள் ஆவாக - பொடியாக
நண்ணார்ஊர் மூன்றெரித்த நாகஞ்சேர் திண்சிலையான்
தண்ணாரூர் சூழ்ந்த தடம்" (தி.மு.கோ.பா.14)

என்பதாம்.

இக்கோவையின் மற்றோர் பாடல், மலர் அணையாகிய படுக்கையினின்று, சிறிது வெறுத்து நீங்கி இடம்மாறினும், அஞ்சி வருந்தும் மென்மைத் தன்மையுடைய தன்மகள், கொடிய பாலையின்வழி நடந்து சென்றனள். அவள் அடையும் துயரம் எத்தகையதோ? எனப் புலம்பித் தேடிச் செல்லும் செவிலியை,

"மடப்பால் மடந்தை மலரணைச் சேக்கையிற் பாசம்பிரீஇ
இடப்பால் திரியின் வெருவும்; இருஞ்சுரஞ் சென்றனளால்
படப்பா லனஅல்ல வால்தமி யேன்தையல் பட்டனவே" (பா.15)

என்ற பாடல் அடிகளானது விளக்கி நிற்கும்.

நற்றாய் கூற்றில் அகப்பொருள் மரபுகள்

அகஇலக்கியங்களில் காட்டப்பெறும் நற்றாய் என்பவள் தலைவியைப் பெற்றெடுத்த தாய் ஆவாள். இவள் செவிலியைப்போன்று தலைவியை உற்றுநோக்கி ஒழுகும் தன்மை உடையவள் அல்லள். நற்றாயின் இத்தன்மைக்கு "நற்றாய் இல்லறம் நிகழ்த்துங் கருத்து வேறு உடைமையின் உற்றுநோக்காள்"[76] என உரைவகுப்பர் நச்சினார்க்கினியர்.

தலைவியின் வாழ்வின் மேல் மிகுந்த கருத்துடையவளாய் அமைபவள் இவள். களவின்கண் நற்றாய்க்குக் கூற்று இல்லை. நற்றாய்க்கு உரிய கிளவிகளை அகத்திணையின்கண் அமைத்துக் காட்டுவர் தொல்காப்பியர். இவ்வாறு அமைத்தமைக்கு, "தலைவன் முதலிய ஏனையோர்க்குரிய

கிளவிகள் ஒன்றற்கு மேற்பட்ட உரிப்பொருள்களையும், நிமித்தங்களையும் கொண்டுள்ளன. நற்றாய்க்குரிய கிளவியின்கண் இரங்கலும், இரங்கல் நிமித்தமுமாகிய ஒரே கூற்றே நிகழ்கிறது. மேலும் 'கொண்டுதலைக்கழிதல்' அதிகாரப்பட்டுள்ளது. ஆதலின் நற்றாய்க்குரிய கிளவிகளை முதற்கண் அகத்திணையியலில் எடுத்தோதினார்"[77] என்பர் ச.பாலசுந்தரம்பிள்ளை.

உடன்போன தலைமகளைத் தேடிச் செல்பவள் செவிலியாகவும், இல்லின்கண் இருந்து புலம்புபவள் நற்றாயாகவும் அமைகின்றனர். ஆகவே உடன்போக்குச் சூழலில் எழும் நற்றாய் கூற்றுக்கள் அகப்பொருள் மரபினை ஆய்தற்கு உறுதுணையாய் அமைகின்றன.

சிறப்புடை மரபின் களவினை மொழியும் நற்றாய்

ஒன்பதாம் திருமுறையில் சேதிராயர் பாடிய பதிகமாய்த் கோயில்-சேலுலாம் திருப்பதிகம் அமைந்துள்ளது. தில்லைப்பெருமானைக் காதலித்த தலைவி, அப்பெருமானைக் காணப் பெரிதும் விழைகின்றாள். அந் நோக்கம் நிறைவேறாமையின் காதல் மீதூர்ந்து, வருந்துதலையும், தன் வருத்தம் தீரும்வண்ணம் தலைவனிடம் வேண்டி நிற்றலையும், தலைவி, தலைவனை முன்னிலைப்படுத்திக் கூறுகின்ற கூற்றுக்களையும் நற்றாய் கூறுவதாய் இப்பதிகம் அமைந்துள்ளது. அந்தாதித் தொடையான் அமையும் இப்பதிகம் சிறப்புடை மரபின் களவினைத் தெற்றென விளக்கும்.

அகமரபில், களவின்கண் காதல் கொண்டோர் அடையும் நிலைகளைத் தொல்காப்பியர்

"வேட்கை, யொருதலை உள்ளுதல், மெலிதல்
ஆக்கஞ் செப்பல், நாணுவரை இறத்தல்
நோக்குப எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்றிச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப"[78]

எனக் குறிப்பர்.

கோயில்-சேலுலாம் பதிகத்தின்கண் அமைந்துள்ள பாடல்கள் காதல் வேட்கை கொண்ட தலைவியின் நிலையைத் தெற்றென விளக்குகின்றன.

"சேலுலாம் வயிற்றில்லை யுனீருமைச்
சால நாளயல் சார்வதினா லிவள்
வேலையார் விடமுண்டு கந்தீரென்று
மாலவாடும் என் வாணுதலே" (9:28:1)

என்ற பாடலானது தலைவியின் 'வேட்கையினை' உணர்த்தும்.

"விம்மி விம்மி வெய்துயிர்த் தாளெனா
உம்மையே நினைந் தேத்து மொன்றுகிலாள்" (9:28:2)

என்ற அடிகள் தலைவி தொடர்ந்து 'ஒருதலை உள்ளுதலைக்' குறிக்கும்.

"மறவனே எனைவாதை செய்யலெனும்
வேரி நற்குழலாள் இவள் விம்மும்மே" (9:28:8)

என்பது தலைவி துயரால் 'மெலிவதனைக்' காட்டும்.

"வாணுதற் கொடிமாலது வாய்மிக
நாணம் அற்றனள் நானறியேன் இனி" (9:28:2)

என்ற அடிகள் தலைவி 'நாணுவரை இறத்தல்' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டமையை உணர்த்தும்.

"செய லுற்றார் மதில் தில்லை யூரிவன்
மயலுற்ற தாலென் தன் மாதிவளே" (9:28:5)

என்றதன் வழி தலைவியின் 'மயக்கநிலை' வெளிப்படுகின்றது.

"இடியச் செஞ்சிலை கால்வளைத் தீரென்று
முடியும் நீர் செய்த மூச்சறவே" (9:28:7)

என்ற அடிகள் தலைவி களவின் இறுதி நிலையாகிய 'சாக்காட்டை' அடைந்ததைக் குறிக்கின்றது. இவ்வாறு இப்பதிகத்தின் பாடல்கள் தொல்காப்பியரின் அகப்பொருள் கோட்பாட்டினைத் தழுவி அமைந்துள்ளன.

திருமாளிகைத் தேவரின் 'உறவாகிய யோகம்' எனத் தொடங்கும் ஒன்பதாம் திருமுறைப் பதிகத்தின் நற்றாயும், தலைவியின் களவு நிலையினை விளக்கி நிற்கின்றாள்.

இப்பதிகத் தலைவி, தலைவனைப் பிரிந்துள்ளமையால், தன்னை வருத்துவதாய்ப் பட்டியலிடும் பொருள்களை எல்லாம் நற்றாய் கூற்று வெளிப்படுத்தி நிற்கின்றது.

"செழுந்தென்றல் அன்றில் திங்கள் கங்குல்
திரைவீரை தீங்குழல் சேவின்மணி
எழுந்து இன்று என்மேல் பகையாட வாடு
மெனைநீ நலிவது என்னே! என்னும்" (9:3:5)

என்ற அடிகளானது வலியுறுத்தும்.

தலைவன் பிரிவினை எண்ணி வருந்திய தலைவி காதல் மீதூரப் பிச்சியானாள் என்பதனை,

"திருநீறிடா வுருத் தீண்டே னென்னுந்
திருநீறு மெய்த் திருமுண்டத் திட்டுப்
பெருநீல கண்டன் றிறங் கொண்டிவள்
பிதற்றிப் பெருந்தெருவே திரியும்" (9:3:10)

என்ற அடிகளானது குறித்திடும். இப்பாடலின்கண், தலைவி, தலைவனைக் கூடுதற்குத் திருநீற்றை உடம்பிலும், நெற்றியிலும் இட்டு, திருநீலகண்டரது வேடத்தைப்பெற்று, அவரின் பெருமைகளைப் பிதற்றிப் பெருந்தெருக்களில் திரிந்தாள் என நற்றாய் குறிக்கின்றாள். இவ்வாறு தலைவி, தலைவனைத் தேடிச்செல்லல் உண்டு என்பதற்கு,

"தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்"[79]

என்ற தொல்காப்பிய நூற்பா அரணாகும்.

தலைவி, 'உன்னையன்றி மற்றொன்று உணரேன்' என்ற அடியானது, 'நோக்குபவை எல்லாம் அவையே போறல்' என்ற அகமரபினை வெளிக்காட்டும். இப்பதிகத் தலைவி,

"வேறாக உள்ளத்து உவகை விளைவித்து

அவனிச் சிவலோக வேதவென்றி

மாறாத மூவாயிர வரையும் என்னையும்

மகிழ்ந்தாள வல்லாய் என்னும்" (9:3:12)

எனக் கூறுவதாய் நற்றாய் குறிப்பிடுகின்றாள். இவ்வாறு தலைவி கூறல் உண்டு என்பதனை,

"தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்

ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே"[80]

என்ற தொல்காப்பிய நூற்பா விளக்கி நிற்கும்.

தலைவன் தலைவியின் நிறையும் நீர்மையும் கொண்டான் எனும் நற்றாய்

பெண்மையின் உயர்வாய்ப் போற்றப்படுவது நாணும் நிறையுமாம். இதனைத்,

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்

செயிர்தீர் காட்சிக் கற்பு சிறந்தன்று"[81]

எனத் தொல்காப்பியம் குறிக்கும். நாவுக்கரசரின் ஐந்தாம் திருமுறையின் இருபத்தொன்பதாவது பதிகமாகிய திருவாவடுதுறைப் பதிகத்தலைவி, தலைவன், தன்உள்ளம்மட்டும் கொண்டானில்லை. அதனினும் சிறந்தனவாகிய நாணினையும், கற்பினையும் கவர்ந்தான் எனக் கையற்றுப் புலம்பிநிற்பதனை, நற்றாய்,

"பிறையுஞ் சூடிநற் பெண்ணோ டாணாகிய

நிறையும் நெஞ்சமும் நீர்மையும் கொண்டவன்

அறையும் பூம்பொழி லாவடு தண்டுறை

இறைவ னென்னை யுடையவ னென்னுமே" (5:29:8)

எனக் குறிக்கின்றாள். இத்தலைவியின் தன்மையினை,

"என் நலனும் என் நிறையும் என் சிந்தையும்

என் வளையும் கொண்டென்னை"[82]

என்ற திருநெடுந்தாண்டகத் தலைவியின் துயரோடு ஒப்புநோக்கி உணர இயலும்.

நிறையும் நீர்மையும் கொண்ட தலைவனை எண்ணி, தலைவி வாய்விட்டு அழும் தன்மையினள் ஆனாள். அவளின் கை வளையும் கழன்றன எனக் கூறி நிற்கும் நற்றாயை,

"வையந் தானளந் தானும் அயனுமாய்

மெய்யைக் காணலுற் றார்க்கழ லாயினான்

ஐயனாவடு தண்டுறை யாவெனக்

கையில் வெள்வளை யுங்கழல் கின்றதே" (5:29:9)

என்ற பாடலானது காட்டும்.

தலைவன், தலைவியின் நாணும், நீர்மையும் கொண்டமையாலே, சிறிதும் நாணம் இலாதவளாய்த் தலைவன் பெருமைகூறிப் பிதற்றி நிற்கின்றாள். எனவேதான் இப்பதிகத்தின் இறுதியில்,

"நக்கனென்னுமிந் நாணிலி காண்மினே" (5:29:10)

எனத் தன்னை 'நாணிலி' என உரைத்துக்கொள்கிறாள் தலைவி என்கிறாள் நற்றாய்.

மகட்போக்கிய நற்றாய் இல்லின்கண் இருந்து புலம்பல்

தலைவி, தலைவனுடன் போயவழி, நற்றாய் இல்லின்கண் இருந்து, புலம்பல் உண்டு என்பதனை,

"தன்னும் அவனும் அவளும் சுட்டி

மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்

...

போகிற திறத்து நற்றாய் புலம்பலும்"[83]

எனக் குறிப்பர் தொல்காப்பியர். இதற்கு நச்சினார்க்கினியர் "தன்னையும், தலைவனையும், தன்மகளையும் குறித்துக் காலம் மூன்றுடன் நிலைபெற்றுவரும், நல்வினை, தீவினைக்குரிய காரியங்களைத் தன் நெஞ்சிற்கு விளக்கி வருந்திக்கூறலும்"[84] என உரைவகுப்பார்.

இவ்வாறு வருந்தும் நற்றாயினை, ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி காட்டும். இத்தாயானவள், தன்மகள் மலராகிய அலரினை மிதிப்பினும் குருதி வெளிப்படும் அளவிற்கு மென்மையான பாதத்தினை உடையவள். அத்தகையவள், பரலைக்கற்கள் மிகுந்த, சுரத்தின் வழி, கொடியவனொடு எங்ஙனம் சென்றனளோ! என வருந்துகின்றாள். இப்பாடலில் தான் அன்புடன் வளர்த்த மகளைத் தலைவன், தன்னிடம் இருந்து கவர்ந்து சென்றான் என்பதாலும், தலைவியின் மென்மைத் தன்மையினை ஆராயாது, கொடிய சுரத்தின்கண் அழைத்துச் சென்றான் என்பதினாலும், நற்றாய் தலைவனைக் 'கொடியன்' என்கின்றாள். நற்றாயின் இத்துயரினை,

"அடியால் அலர்மிதித் தாலரத் தம்பில் கமிர்தமின்(று) இக்

கொடியா னொடும்பின் நடந்ததெவ் வாறுஅலர் கோதைக்

கடியார் நறுங்கண்ணி ஞானசம் பந்தன் கருதலர் போல்

வெடியா விடுவெம் பரல்சுறு நாறு வியன்சுரத்தே" (ஆ.பி.தி.பா.25)

என்பது புலப்படுத்தும்.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவையில் வரும் நற்றாயும், தன்மகள் பாலையின்வழி எவ்வாறு செல்வாளோ? எனவருந்தி நிற்கின்றாள். இதனை,

"நாமரு வாதவர் போலழ கீந்து நல்வில்லிபின்னே

நீர்மரு வாதசுரத் தெங்ங னேகுமென் நேரிழையே"

(ஆ.பி.தி.மு.பா.15:3-4)

என்ற அடிகள் எடுத்துக்காட்டும்.

கண்டோர் கூற்றில் அகப்பொருள் மரபுகள்

கண்டோர் என்பவர் தலைமக்கள் இருவரும், தமர் அறியாவண்ணம் உடன்போக்கு மேற்கொண்ட நிலையில் சுரத்திடைச் சந்திக்கும் மாந்தர் ஆவர். தொல்காப்பியர், கண்டோர் கூற்றினை அகத்திணையியலில் அமைத்துக்காட்டுவர். கண்டோர் கூற்றுகள் பெரும்பாலும், தலைவன், தலைவியரிடம் அல்லது மகட்போக்கிய செவிலியிடம் இடைச்சுரத்தின்கண் கூறுவனவாகவே அமைகின்றன. அக இலக்கியங்களில், கண்டோர் பெறும் இடத்தினை, "உடன்போகும் தலைவன், தலைவியரைக் கண்டு இரங்குவது, உடன்போகியவர்களைப் பின்சென்று தேடும் தாயை ஆற்றுப்படுத்துவது, அல்லது அமைதிப்படுத்துவது, உடன்போக்கிய இவர்கள் திரும்பியதைத் தாய்க்கு உரைப்பது ஆகியவை கண்டோர் கூற்று நிகழும் பின் புலங்கள். இடைச்சுரம், இவர்களின் கூற்று நிகழுமிடம்; தலைவன், தலைவி, தாய் இவர்கள் கண்டோர் காணும் அகமாந்தர்கள்; உடன்போக்கு பற்றிய சமூக எண்ணத்தினை விளக்கி நிற்பதே இவர்கள் கூற்றின் சிறப்பியல்வு"[85] என விளக்குவர் ஆ.இராமகிருட்டிணன்.

அக இலக்கியங்களில் களவு, கற்பாகும் உடன்போக்குச் சூழலில் நிகழும் கண்டோர் கூற்றினைத் திருமுறைகளில் காணமுடிகின்றது.

தலைமக்களிடத்தில் வழியின் அருமைகூறும் கண்டோர்

உடன்போக்கின்கண் தலைமக்களைக் காணும் கண்டோர், அவர்கள் செல்லும் நெறியின் அருமைகூறித் தன் இல்லின்கண் தங்கிச் செல்ல வேண்டுவர். இதனைத் தொல்காப்பியர்,

“பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி

வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்”[86]

எனக் குறிப்பார். இதற்கு இளம்பூரணர் “காலமும் நெறியும் அச்சம் வருமாறு தோன்றி வழுவுதலினாகிய குற்றம் காட்டலும்”[87] என உரைவகுப்பார்.

இத்தகைய கண்டோர் கூற்றினை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம் பகத்தில் காணமுடிகின்றது. இதில்வரும் கண்டோர் தலைமக்களிடத்து “இவ்வழியானது சிங்கங்கள் நிறைந்த மலைப்பகுதியாகும். அந்திக்குப்பின் கொடிய வழிகள் கண்ணிற்குப் புலப்படா. இக்கொடிய வழியின்கண் யாங்ஙனம் வந்தீர்! இரவில் எம்குடிலில் தங்கிச் செல்லுங்கள் என்கின்றனர். கண்டோர் அன்பின் வெளிப்பாட்டினை உணர்த்தும் அப்பாடல்,

“அரியாருங் கிரிநெறியெங் ஙனம் நீர் வந்தீர்

அழகிது இனிப் பயமில்லை யந்திக் கப்பால்

தெரியாபுன் சிறுநெறிக ளெந்தம் வாழ்விச்

சிறுகுடியின் றிரவிங்கே சிரமம் தீர்ந்திச்

கரியார்மென் குழலியொடும் விடியச் சென்று

தொகுபுகழ்சேர் திருஞான சம்பந் தன்தன்

வரியாரும் பொழிலு மெழில் மதிலும் தோற்றும்

வயற்புகலிப் பதியினிது மருவ லாமே” (ஆ.பி.தி.கபா.25)

என்பதாகும்.

கண்டோர் தம் ஊரின் அணிமைகூறல்

உடன்போக்கு மேற்கொண்ட தலைமக்களை இடைச்சுரத்தின்கண் கண்டோர், தம் ஊரின் அணிமையும், தலைமக்கள் செல்லும் தேயத்தின் சேய்மையும் உரைப்பர். இதனைத் தொல்காப்பியர்,

“ஊரது சால்பும் செல்லும் தேயமும்

ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்”[88]

எனக் குறிப்பர். இதனை "நகரணிமைகூறல்"[89] என உடன்போக்கின் கண் வைத்து திருக்கோவையார் உரைக்கும்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் கண்வரும் கண்டோர் இத்துறையினைச் சேர்ந்தவர். அவர்கள் தலைமக்களிடத்து, குன்றினைக் கடந்தால், குன்றினைச் சூழ்ந்த பொழிலின் கண்ணே வயல்களைக் காணலாம். அதன்கண்ணே எம் ஊர் உள்ளது என்று குறிக்கின்றனர். இதனை,

"இழைவள ராகத்து ஞானசம்பந்த னிருஞ் சுருதிக்
கழைவளர் குன்று கடத்தலுங் காண்பீர் கடைசியர் நீள்
முழைவளர் நண்டு படத்தடஞ் சாலிமுத் துக்கிளைக்கும்
மழைவளர் நீள்குடு மிப்பொழில் சூழ்ந்த வளவயலே"

(ஆ.பி.தி.பா.48)

என்பது உணர்த்தும்.

தாய் நிலைகண்டு தடுத்தல்

மகட்போக்கிய தாய் சுரத்திடைத் தேடிவரும் பொழுது கண்டோர் அவளைத் தடுத்தல் உண்டு என்பதனை,

"தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்"[90]

என இலக்கணம் வகுப்பர் தொல்காப்பியர்.

தாய்நிலைகண்டு தடுத்தல் என்பதற்கு, "தலைவனும் தலைவியும் உடன்போயவழிச் சுரத்திடைக் கண்டோர் தலைவனும், தலைவியும் தொலைதூரம் சென்றுவிட்டனர் என்று கூறிச் செவிலியை மீண்டு போமாறு சொல்லுதல்"[91] என உரைவகுப்பார் நச்சினார்க்கினியர்.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவையில் வரும் கண்டோர், இடைச்சுரத்தில், செவிலியிடம், தலைமக்கள் சீர்காழி சென்று சேர்ந்திருப்பர். செவிலி இனிச் செய்யவேண்டியது திரும்ப மீள்வதே என உரைத்துத்

தடுக்கின்றனர். கண்டோரின் இச்செயலை,

"வடிக்கண்ணி யாளையிவ் வான்சுரத்தி னூடே
கடிக்கண்ணி யானோடும் கண்டோம் - வடிக்கண்ணி
மாம்பொழில்சேர் வைகை யமண்மலைந்தான் வண்காழிப்
பூம்பொழிலே சேர்ந்திருப்பார் புக்கு" (ஆ.பி.தி.மு.பா.29)

என்ற பாடலானது எடுத்துக்காட்டும்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் கண்டோரும், தலைமக்கள் கடிநகர் சென்றனர். நீவிர் மீள்க! எனச் செவிலியைப் பார்த்து உரைக்கின்றனர் என்பதற்கு,

"அவர் சென்றணுகுவர்; மீள்வதிங்கு அன்னை
..
பவர்கின்ற நீள்கொடிக் கோபுரம் பல்கதி ரோன்பரியைக்
கவர்கின்ற சூலத் தொடுநின்று தோன்றுங் கடிநகரே" (ஆ.பி.தி.பா.14)

என்ற பாடல் சான்றாகும்.

இத்திருவந்தாதியின்கண் அமையும் பிறிதோர் பாடலும், கண்டோர் செவிலியைத் தடுத்தலை,

"தோன்றல்தன் னோடுட னேகிய சுந்தரப் பூண்முலையை
ஈன்றவ ரேயிந்த வேந்திழை யார் இவ்வளவில்
வான்றவர் சூழுந் தமிழாகரன் தன்வடவரையே
போன்றபொன் மாடக் கழும நாடு பொருந்துவரே" (ஆ.பி.தி.பா.93)

எனக் கூறும்.

இப்பாடலின்கண் செவிலியைக் கண்டோர் "பூண்முலையை ஈன்றவரே இந்த ஏந்திழையார்" எனக் குறிப்பதனால், செவிலி நற்றாய்க்கு இணையாக வைத்துப் போற்றப்பட்டாள் என்பது பெறப்படுகின்றது.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் வரும் கண்டோரும், தாய் நிலை கண்டு தடுக்கின்றனர். இப்பாடலின்கண் வரும் செவிலி, கண்டோரைப் பார்த்து, 'மின்னினைத் தோற்கடிக்கும் இடையினை உடையவளும், அவளின் காதலனும் இவ்வழி வந்ததைக் கண்டீரோ? என வினவுகின்றாள். அதற்குக் கண்டோர், அவர்கள் இந்நேரம் இக்குன்றினைக் கடந்து, கச்சியினை அடைந்திருப்பர். நீவிர் 'மீள்க' எனக் கூறித் தடுகின்றனர். இதனை,

"மின்நலிக் கும்வணக் கத்திடை யாளையும் மீளியையும்
நென்னெலிப் பாக்கைவந் தெய்தின ரலெம் மனையிற் கண்டீர்
மின்னரிப் போக்கருங் குன்று கடந்தவர் இன்று கம்பர்
மன்அரி தேர்ந்து தொழுங்கச்சி நாட்டிடை வைகுவரே"

(தி.ஏ.தி.பா.74)

என்பது உணர்த்தும்.

திருமுறையில் கூற்றில் இடம்பெறா மாந்தர்

திருமுறையில் சுட்டப்படா அகமாந்தர்களுள் பாடினி, விருந்தினர், விறலியர், அறிவர், கூத்தர், இளையோர் ஆகியோர் தலைவியின் பெருமைகளைத் தலைவனுக்கு உரைத்தல் என்ற பொது விதியின்கீழ் வருகின்றனர்.[92] இத்தகைய செயலினைத் தோழி முதலியோர் செய்வதால் இவர்களுக்கெனத் தனிப்பட்ட கூற்றுகள் இல்லாமல் போயின.

நல்லவை உரைத்தல், அல்லவை கடிதல் என்பதனை அறிவர்க்குரிய பண்புகளாகத் தொல்காப்பியர் குறிப்பர்.[93] இத்தகைய பண்புகள் பக்தி இலக்கியங்களின் பொதுமைப் பண்பாய் அமைந்ததால், அறிவர்க்கென தனிப்பட்ட கூற்றுக்கள் இடம்பெறவில்லை.

களவுக் காலத்தில் தலைவனைக் கழறுதல், கற்புக் காலத்துப் பரத்தையர் பிரிவிற்கு உடன்படாது கூறுதல் என்பது பாங்கற்குரிய கூற்று நிகழிடங்களாக இளம்பூரணர் சுட்டுவர்.[94] திருமுறைகளில் தலைவனைக்

கழறும் பாங்கன் பற்றிய குறிப்பு தலைவன் கூற்றுப்பாடலில் காணப்படுகின்றதே ஒழிய தனிநிலைக்கூற்று இல்லை. பரத்தையர் பிரிவில் பாங்கன் கூற்று அமையும் சூழல் திருமுறைகளில் இல்லை.

புறத்தொழுக்கம் மிக்க தலைவனை மெய்யறிவின்கண் நிறுத்துதல், கழிகாமத்தால் இழிவுவரும் என்பதற்குக் காரணம் கூறல், கழிகாமத்தால் கெட்டாரை எடுத்துக்காட்டல், ஊடலில் தகைத்தல் என்பனவே கூத்தரின்பணி என்பதனை,

"தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்
பல்லாற்றானும் ஊடலில் தகைத்தலும்,
உறுதி காட்டலும் அறிவு மெய்ந் நிறுத்தலும்
ஏதுவின் உரைத்தலும் துணியக் காட்டலும்
அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன"[95]

என்ற நூற்பாவால் விளக்குவர் தொல்காப்பியர். இந்நூற்பா உரையில், "இலக்கியம் இக்காலத்து இறந்தன என உரையாசிரியர் நச்சினார்க்கினியர் குறிப்பர்."[96] கூத்தரின் செயல்களுக்கான பாடல்கள் திருமுறைகளிலும் காணக்கிடைக்கவில்லை.

"ஆற்றது பண்பும், கருமத்து வினையும்
ஏவன் முடிபும் வினாவுஞ் செப்பும்
ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்
தோற்றம் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவியென்ப"[97]

என இளையோர்க்குரிய கூற்று நிகழிடங்களைச் சுட்டுவர் தொல்காப்பியர். இந்நூற்பாவின் உரையில் இளம்பூரணர் இலக்கியம் வந்த வழிக்காண்க[98] என உரை எழுதிச் செல்கிறார். அவர் காலத்து இளையோர் கூற்றுக்கு இலக்கியம் இல்லாதது போன்று, திருமுறைகளிலும் இளையோர்தம் கூற்றுப்பாடல்களுக்கு இடம் இல்லாமல் போயின.

பார்ப்பார்க்குரிய கூற்றுக்களாகத் தொல்காப்பியர்,

"காமநிலை யுரைத்தலும் தேர்நிலை யுரைத்தலும்
கிழவோன் குறிப்பினை யெடுத்தனர் மொழிதலும்
ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்
செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க்குரிய"[99]

என்பனவற்றைக் குறிப்பர். இந்நூற்பாவின் உரையில் நச்சினார்க்கினியர் "இவை எல்லாம் தலைச்சங்கத்தாரும், இடைச்சங்கத்தாரும் செய்த பாடலுட் பயின்றன போலும். இக்காலத்தில் இலக்கியமன்று"[100] என உரைகூறுவர். கடைச்சங்க காலத்தே வழங்கொழிந்து போன இம்மரபு திருமுறைகளிலும் காணப்படவில்லை.

தொகுப்புரை

♦ தொல்காப்பியரால் சுட்டப்பெறும் தலைவன், செவிலி, நற்றாய், கண்டோர் ஆகிய பிற மாந்தர்களின் கூற்றுக்கள் திருமுறையில் காணப்படுகின்றன.

♦ திருமுறையில் காணப்படும் கைக்கிளைத் தலைவன் கூற்றுப்பாடல்கள், தொல்காப்பியர் உணர்த்தும் கைக்கிளை மரபிற்கு உரியதாகவே அமைகின்றன. இக்கைக்கிளைத் தலைவன், சொல்லெதிர்பெறாது சொல்லி இன்புறுபவனாகவே அமைகின்றான்.

♦ சிறப்புடைக் கைக்கிளைத் தலைவன் கூற்றுப்பாடல்களில், காட்சி, ஐயம், தெளிதல் ஆகிய அகப்பொருள் மரபுகள் காணப்படுகின்றன.

♦ திருமுறை ஐந்திணைத் தலைவன் கூற்றுப்பாடல்கள், மெய்தொட்டுப் பயிறல், பொய்பாராட்டடல், ஊர்அணித்து என்றல், ஆயத்துய்த்தல், உற்றது உரைத்தல், கழற்றெதிர் மறுத்தல், இயலிடம் கூறல் ஆகிய அகமரபுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

- பாங்கிமதியுடம்பாட்டின்கண் காணப்படும் தலைவன் கூற்றுப்பாடல்களில் கெடுதி வினவல், பிறவினாதல், மடன்மாக் கூறல், வரைவுடம்படாது மறுத்தல் ஆகிய அகமரபுகள் காணப்படுகின்றன. மேலும் பகற்குறிக்கண் வறுங்களம்கண்டு வருந்தல், உடன்போக்கின்கண் தலைவியின் தளர்வறிந்து இருத்தல் ஆகிய அகத்துறைகளும் காணப்படுகின்றன.
- கற்பின்கண் அமைந்த தலைவன் கூற்றுப்பாடல்கள் செலவழுங்கும் துறையினைச் சார்ந்ததாகவே அமைந்துள்ளன.
- திருமுறையின்கண் வரும் செவிலிகூற்றுப்பாடல்களில், தலைவி பிச்சியாகி நிலையினை உரைத்தல், இரங்கிக்கூறல், களவு அலராகின்றவழி வருந்திக்கூறல், மகட்போக்கிய செவிலி பிரிவுழிக்கலங்கல், உடன்போக்கில் தேடிச்செல்லல் ஆகிய அகமரபுகள் காணப்படுகின்றன.
- தலைவியின் களவொழுக்கத்தினை நற்றாயிடம் உரைத்து, களவு வாழ்வினைக் கற்பொழுக்கவாழ்வாய் மாற்றும் அறத்தொடு நிற்றல் செவிலியையும் திருமுறைகள் காட்டுகின்றன.
- தலைவி உடன்போகியவழித் தேடிச்செல்லும் செவிலி, சுரத்தின் வெம்மையையும், தலைவியின் மென்மையையும் நினைத்து வருந்துவதும், கண்டோரை வினவுதலுமாகிய கூற்று நிலைப்பாடல்கள் திருமுறைகளில் காணப்படுகின்றன.
- திருமுறைகளில் காணப்படும் நற்றாய் கூற்றுப்பாடல்கள், தலைவியின் சிறப்புடை மரபிற் களவினை மொழிவதாகவும், தலைவியின் நிலைகண்டு இரங்கிக் கூறுவதாகவும், மகட்போக்கிய வழி இல்லின் கண் இருந்து புலம்பிக்கூறுவதாயும் அமைந்துள்ளன.
- கண்டோர் கூற்றுப் பாடல்களில், இடைச்சுரத்தின்கண் தலைமக்களுக்கு வழியின் அருமைகூறல், தம்ஊரின் அணிமைகூறல், தாய்நிலை கண்டு தடுத்தல் ஆகிய அகத்துறைகள் காணப்படுகின்றன.

சான்றெண் விளக்கம்

1. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை, ப.57

2. தொல்.பொருள். நூ.98 (நச்சர்)

3. மேலது நச்சர் உரை.,ப.12

4. இறையனார் களவியல், நூ.எண்.2-ன் உரை., ப.33

5. தொல்.பொருள். நூ.53 (இளம்)

6. மு.அருணாச்சலம்பிள்ளை, அகத்திணையியல் உரைவளம், ப.547

7. தொல்.பொருள். நூ.1 நச்சர் உரை, ப.19

8. பரிபாடல், பா.11:135-136

9. வ.சுப.மாணிக்கனார், தமிழ்க்காதல், ப.48

10. தொல்.பொருள்.அகத்திணையியல், நூ.53 இளம்பூரணர் உரை, ப.64

11. மேலது, களவியல், நூ.92 இளம்பூரணர் உரை, ப.13

12. மேலது, அகத்திணையியல், நூ.18 இளம்பூரணர் உரை, ப.17

13. மேலது, நூ.52 நச்சர்உரை, ப.214

14. மாறன்அகப்பொருள், நூ.6

15. தொல்.பொருள். நூ.93 (நச்சர்)

16. மேலது, நச்சர் உரை, பக்.5-6

17. மேலது, நூ.273 (பேரா)

18. மேலது, நூ.91 (இளம்)

19. மேலது, இளம்பூரணர் உரை, ப.11

20. மேலது, நூ.234 (இளம்)

21. கு.சுந்தரமூர்த்தி (கு.ஆ.), திருத்தொண்டர்புராணம், ப.404

22. தொல்.சொல். நூ.24

23. தொல்.பொருள். நூ.92 (இளம்)

24. மேலது, நூ.431 (பேரா)

25. மேலது, பேராசிரியர் உரை, ப.298

26. மேலது, நூ.98 (இளம்)

27. மேலது, நூ.99 இளம்பூரணர் உரை, ப.23

28. மேலது, நூ.102 நச்சர் உரை, ப.20

29. திருக்கோவையார், பா.45

30. தொல்.பொருள். நூ.102:1-3 (நச்சர்)

31. மேலது, நூ.99, இளம்பூரணர் உரை, ப.24

32. திருக்கோவையார், பா.11

33. திருக்குறள், அதிகாரம்.112

34. அண்ணங்கராச்சாரியார், திருவிருத்தம் - திவ்யார்த்த தீபிகை, ப.33

35. தொல்.பொருள். நூ.101:4 (நச்சர்)

36. மேலது, நச்சர் உரை, ப.15

37. மேலது, நூ.99:10 (இளம்)

38. நம்பியகப்பொருள், நூ.135:3

39. இறையனார் களவியல், நூ.2ன் உரை, ப.31

40. வ.சுப.மாணிக்கனார், தமிழ்க்காதல், ப.47

41. தொல்.பொருள். நூ.102 (நச்சர்)

42. மேலது, நூ.102 (நச்சர்)

43. திருக்கோவையார், பா.23

44. தொல்.பொருள். நூ.102:9 (நச்சர்)

45. மேலது, நச்சர் உரை, ப.31

46. மேலது, நூ.99:18-20 (இளம்)

47. மேலது, நூ.102 நச்சர் உரை, பக்.38-39

48. இளவழகனார், பண்டைத்தமிழர் இன்பியல் வாழ்க்கை, ப.33

49. வ.சுப.மாணிக்கனார், தமிழ்க்காதல், ப.53

50. தொல்.பொருள். நூ.112:21-22 (இளம்)

51. நம்பியகப்பொருள், நூ.144:13

52. தொல்.பொருள். நூ.103 (நச்சர்)

53. மேலது நச்சர் உரை, ப.41

54. திருக்கோவையார், பா.146

55. தொல்.பொருள். நூ.21 (இளம்)

56. மேலது, நூ.221 (இளம்)

57. மேலது, நூ.44:1-2 (இளம்)

58. திருக்கோவையார், பா.199

59. தொல்.பொருள். நூ.183 (இளம்)

60. மேலது, நூ.185 நச்சர் உரை, பக்.268-269

61. வ.சுப.மாணிக்கனார், தமிழ்க்காதல், ப.82

62. தொல்.பொருள். நூ.122 (இளம்)

63. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணைமாந்தர் ஓர் ஆய்வு, ப.191

64. தொல்.பொருள். நூ.113:1-2 (இளம்)

65. மேலது, நூ.115 நச்சர் உரை, ப.137

66. மேலது, நூ.113:6 (இளம்)

67. மேலது, நூ.115 நச்சர்உரை, ப.141

68. க.வச்சிரவேலு முதலியார் (கு.ஆ.), திருநாவுக்கரசர் தேவாரம், ஐந்தாம்திருமுறை, ப.497

69. தொல்.பொருள்.நூ.115:3-5, 8-9 (நச்சர்)

70. மேலது, நூ.113 இளம்பூரணர் உரை, பக்.103-106

71. மேலது, நூ.205 (இளம்)

72. மேலது, நூ.115:10 (நச்சர்)

73. மேலது, நச்சர் உரை, ப.143

74. தொல்.பொருள். நூ.37 (நச்சர்)

75. மேலது, நச்சர் உரை, ப.138

76. மேலது, நூ.117 நச்சர் உரை, ப.145

77. ச.பாலசுந்தரம்பிள்ளை, தொல்.பொருள்.அகத்திணையியல் உரைவளம், ப.124

78. தொல்.பொருள். நூ.100 (நச்சர்)

79. மேலது, நூ.113:3-4 (நச்சர்)

80. மேலது, நூ.111:5-6 (இளம்)

81. மேலது, நூ.113:1-2 நச்சர்

82. திருநெடுந்தாண்டகம், பா.25:1-2

83. தொல்.பொருள். நூ.36 (நச்சர்)

84. மேலது, நச்சர் உரை, ப.128

85. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர்-ஓர் ஆய்வு, பக்.213-214

86. தொல்.பொருள். நூ.43:1-2 (இளம்)

87. மேலது, இளம்பூரணர் உரை, ப.46

88. மேலது, நூ.43:3-4 (இளம்)

89. திருக்கோவையார், பா.221

90. தொல்.பொருள். நூ.43:7-8 (இளம்)

91. மேலது, நச்சர் உரை, ப.193

92. மேலது, நூ.150 (இளம்)

93. மேலது, நூ.153 (இளம்)

94. மேலது, நூ.180 (இளம்)

95. மேலது, நூ.168 (நச்சர்)

96. மேலது, நச்சர் உரை, ப.256

97. மேலது, நூ.168 (இளம்)

98. மேலது, இளம்பூரணர் உரை, ப.195

99. மேலது, நூ.177 (நச்சர்)

100. மேலது, நச்சர் உரை, ப.264.

இயல் ஐந்து

திருமுறைகளில் அகப்பொருள் மரபு மாற்றங்கள்

திருமுறைகளில் அகப்பொருள் மரபு மாற்றங்கள்

இலக்கியம் மக்களின் வாழ்வினை அடித்தளமாகக் கொண்டது. மக்களின் வாழ்வியல் ஒழுகலாறுகள் கல்லில் செதுக்கப்பட்ட சிற்பம்போல் நிலையானவை அல்ல. அவை ஆற்றின் போக்கிற்கேற்ப மாறும் தெப்பம்போல் மாறுதலுக்குட்பட்டவை. அவ்வாழ்வியலின் அடிப்படையில் அமையும் இலக்கியத்தின் மரபுகளும் மாறத்தான்செய்யும். அந்நிலையில் தொல்காப்பியத்தில் குறிக்கப்பெற்ற அகத்திணை மரபுகள், பின்வந்த பக்தி இலக்கியமான திருமுறைகளில் போற்றப்பட்டும், மாற்றப்பட்டும் வந்துள்ளன. அவற்றை ஆய்ந்து வெளிப்படுத்துவது இவ்வியலின் நோக்கமாகும்.

இலக்கண - இலக்கியங்கள் காட்டும் 'மரபு' - சொல்லாய்வு

'மரபு' என்ற சொல்லிற்கான விளக்கத்தினை, தமிழ், இலக்கண, இலக்கியங்கள் விரித்துரைக்கின்றன. "தொன்றுதொட்டுவந்த ஒன்றினைக் குறிப்பதற்கு 'மரபு' என்ற சொல் பயன்படுகிறது. இலக்கண விதிமுறைகள் தொன்றுதொட்டு வருவன என்று நாம் அறிதற்காகத் தொல்காப்பியர் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றார். மேலும் சொற்களின் இயல்பினை உணர்த்துவதற்காகவும், மொழியின் இயற்கையைக் காட்டுவதற்காகவும் அவர் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றார். சில இடங்களில் இலக்கியக் கற்பனைப் போக்கினை உணர்த்தவும் நேரடியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது"[1] என்பர் தமிழண்ணல்.

தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்றோரும் மரபிற்கு விளக்கங்கள் தருவர்.

இளம்பூரணர் 'மயங்கா மரபின் எழுத்து முறையாப்பு' என்ற தொடருக்கு, மயங்காத முறையானே எழுத்திலக்கணத்தினை வேறு தெரிவித்து"[2] என உரைவகுப்பர். இதன்வழி, 'மரபு' என்பதனை, இவர் 'முறை' எனப் பொருள் கொண்டார் என்பதும் விளங்கும்.

நச்சினார்க்கினியரும் ‘மயங்காமரபு’ என்பதற்கு, “மயங்கா முறைமை”[3] என்றே பொருள் உரைப்பர்.

பேராசிரியர் செய்யுளியலின் முதல் நூற்பாவின் உரையில், “மரபென்பது காலமும் இடமும் பற்றி வழக்குத் திரிந்தக்காலும், திரிந்தவற்றுக்கேற்ப, வழுப்படாமைச் செய்வதொருமுறை”[4] என விளக்குவர். மரபியலின்கண் அமைந்த முதல் நூற்பாவின் உரையில் “மரபென்ற பொருண்மை என்னையெனின் கிளவியாக்கத்து, மரபென்று வரையறுத்து, ஓதப்பட்டனவுஞ், செய்யுளியலுள் மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுமின்றி, இருதிணைப் பொருட்குணனாகிய இளமையும், ஆண்மையும், பெண்மையும் பற்றிய வரலாற்று முறைமையும், உயர்திணை நான்கு சாதிபற்றிய மரபும், அஃறிணைப் புல்லும், மரனும் பற்றிய மரபும், அவைபற்றி வரும் உலகியன் மரபும், நூன் மரபுமென இவையெல்லாம் மரபெனப்படுமென்பது”[5] என விரித்துரைப்பர்.

நன்னூலார் மரபு என்பதற்கு,

“எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபு”[6]

என்பர்.

‘மரபு’ என்பதற்குத் தமிழகராதி, “முறைமை, சான்றோரின் சொல்வழக்குமுறை, பழமை, வமிசம், பாரம்பரியம், இயல்பு, இலக்கணம், நல்லொழுக்கம், பெருமை, மேம்பாடு, நியாயம், வழிபாடு, பருவம்”[7] எனப் பதின்மூன்று பொருள்களைத் தரும்.

“ஓர் இனத்தார் ஒருபொருள் பற்றி வழக்கமாய் அனுசரித்துவரும் நியதியே மரபு என்பது ஆகும்”[8] என்பர் வையாபுரிப்பிள்ளை. நாராயணசாமி ஐயர் ‘மரபு’ என்பதற்குத் ‘தகுதி’ எனப் பொருள்கொள்வர். ‘கைதொழுமரபின்’[9] என்பதனை ‘கையால் தொழப்படும் தகுதியுடைய’[10] என

விளக்குவர். உ.வே.சாமிநாதையர் 'மரபு' என்பதனை 'இயல்பு' என்பர். 'தெறித்து நடை மரபின்'[11] என்பதனைத் 'துள்ளி நடத்தலாகிய இயல்பு'[12] என மொழிவர். ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் இயல்பு என்றே உரைப்பர். இவர் 'ஒளித்தியங்குமரபின் வயப்புலி'[13] என்பதனை 'மறைந்து இயங்கும் இயல்பினை உடைய வலியபுலி'[14] என்பர்.

நாராயணசாமி ஐயர் 'உருகெழுமரபிற்'[15] என்பதனை 'அச்சம் பொருந்துதற்குரிய தன்மையுடன்'[16] என விளக்குவர். பொ.வே.சோமசுந்தரனார் மரபு என்பதற்குப் 'பண்பு' எனப் பொருள் கூறுவர். 'நயத்தகுமரபின்'[17] என்பதனை, 'நயத்தற்கேற்ற பண்பினையுடைய'[18] என விளக்குவர். நா.வேங்கடாசலம் பிள்ளை 'மரபு' என்பதற்குத் 'திறல்' எனப் பொருள்கூறுவர். 'அணங்குமரபிற்'[19] என்பதைக் 'கண்டாரை வருத்தும் அரிய திறலுடைய'[20] என விளக்குவர். ஔவை சு.துரைசாமிப்பிள்ளை மரபு என்பதனை 'சுவை' எனப் பொருள்கொள்வர். 'அமிழ்தன மரபினூன்றுவை'[21] என்பதற்கு 'அமிழ்து போற் சுவையுடைய ஊன் துவை'[22] என விளக்கம் தருவர்.

"பழமை பாராட்டுவது மரபின் அடிப்படை… இலக்கியம் மரபுகளை ஒட்டி நிலைத்திருக்கும் ஒரு கலையாகும்… மரபு என்றால் என்ன? கட்டுப்பாடே வேறொரு வகையில் குறிக்குமிடத்து, 'மரபு' என்று கூறப்பெறுகிறது"[23] என்பர் அ.ச.ஞானசம்பந்தன்.

தொல்காப்பியர் தொடங்கி, இன்றைய அறிஞர்கள் கருத்துக்கள் வரை 'மரபு' என்பது தொன்றுதொட்டு வருவது என்பதனைக் குறிப்பது தெளிவாகும். எனினும் மக்களின் வாழ்வியல் முறைகள் காலந்தோறும் மாற்றம் பெறுகின்றன. எனவே மக்களின் வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்தும் மரபுகளும் மாறத்தான் செய்யும். இவ்வாறு மாற்றம் ஏற்படுவதனை, "ஒரு காலத்தில் ஏதேனும் ஒரு காரணத்தால் உண்டாகிய மரபு, பின் எக்காலத்தும் மாறாமல் ஒருவழக்காய் இருக்குமென்று

கொள்ளுதல் சரியன்று. மாறிக்கொண்டே செல்வதுதான் உலக இயல்பு. இலக்கிய மரபும் மாறத்தான் செய்யும்”[24] எனக் குறிப்பர் வையாபுரிப்பிள்ளை.

பன்னிரு திருமுறைகளில் மரபு மாற்றங்கள்

தொல்காப்பியர் காலத்தில் குறிக்கப்பட்ட அகப்பொருள் மரபுகள் திருமுறைகளின் காலத்தில் மாற்றம் பெற்றிருக்கின்றன. சில புதிய மரபுகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. “மக்கள் கூடிப்பாடுவதற்கு ஏற்ற இசைப்பாடல்களாய் இவை திகழ்ந்தன. இவை நடை எளிமையும், இசை இனிமையும் கூடினமையால், தமிழ் இலக்கியத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அகத்துறைகளையும், புறத்துறைகளையும் சங்கிலித்தொடர் போல் புனைந்து, மரபும், மாற்றமும் பொருந்த வளர்ச்சி காட்டும் பாங்கினை சங்க காலத்திற்குப் பின்பு திருமுறைகளில் காண்கிறோம்”[25] என்பர் முத்து சண்முகம்.

சங்ககாலத்தில் தலைவியின் உள்ளத்தினை, தலைவன் ஆக்கிரமித்து இருந்தது போய், திருமுறை காலத்தில் இறைவன் ஆட்கொண்டான் என்பதே அடிப்படையான மரபு மாற்றம் ஆகும்.

எனவே, பக்தி இலக்கியப் பெரியோர்கள், தற்காலத் தேவைக்கும், தம் உணர்வு வெளிப்பாட்டிற்கும் ஏற்ற வகையில் பயன்படும்; பழைய அகமரபுகளைப் பின்பற்றியுள்ளனர். பழைய அகமரபுகளின்வழி தம் காதல் உணர்வுகளை வெளிப்படுத்த இயலாதவழி, புதிய அகமரபுகளைத் தோற்றுவித்திருக்கின்றனர். இவ்வாறு தோற்றுவிக்கப்பெற்ற, புதிய அகமரபுகள் தமிழ் அக இலக்கணத்திற்குப் பெரிதும் துணைசெய்தன எனக் கூறல் மிகையன்று.

அகப்பாடல் யாப்பு முறைமாற்றம்

அகப்பாடல்களைப் பாடுவதற்கான யாப்பு முறையினைத் தொல்காப்பியர் வகுப்பர். அவர்கூற்றின்படி, இசையின்பம் மிக்க கலியும், பரிபாடலுமே அகப்பாடல்களுக்கான யாப்பு முறையில் அமைந்தன என்பதனை,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்"[26]

என்ற நூற்பா வழி அறியமுடிகின்றது. தொல்காப்பியர் பரிபாடலின் உறுப்புக்களை,

"கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமம் கண்ணிய நிலைமைத் தாகும்"[27]

எனக் குறிப்பர். இவற்றுள் 'காமம் கண்ணிய நிலைமைத்தாகும்' எனக் குறிப்பதால், பரிபாடல் அகப்பொருள் பற்றியே பாடப்பட்டது என்பதனை உணர இயலும். இம்மரபு தொல்காப்பியருக்குப்பின் இல்லாமல் போனது என்பது, கடைச்சங்க நூல்களுள் கலிப்பாட்டு நீங்கலாக, ஏனைய நூல்கள், ஆசிரியம், வெண்பா, வஞ்சிப்பாக்களால் அமைக்கப்பட்டிருப்பதால் அறியமுடிகின்றது. இதனையொட்டியே நச்சினார்க்கினியரும், "ஆசிரியமும் வெண்பாவும் வஞ்சியும் அகம், புறமென்றும் இரண்டிற்கும் பொதுவாய் வருமாறு நெடுந்தொகையும், புறமும், கீழ்க்கணக்கும், மதுரைக்காஞ்சியும், பட்டினப்பாலையும் என்பனவற்றுள் காண்க"[28] என உரைவகுப்பர்.

சங்க காலத்தில் மாற்றம்பெற்ற இம்மரபு, பக்தி இலக்கியக் காலங்களிலும் மாற்றம்பெறுகிறது. திருமுறைகளில் காணப்படும் அகப்பாக்கள் வெண்பா, ஆசிரியம், கட்டளைக்கலித்துறை, தாண்டக விருத்தம், வஞ்சிவிருத்தம் ஆகிய யாப்புவகைகளால் அமைந்துள்ளன. திருமுறைப்பாடல்கள் மக்களின் வழிபாட்டிற்கும் உரியனவாய் அமைந்தமையால் பண் அமைத்துப் பாடப்பெற்ற இசைப்பாக்களின் வடிவங்களாகவும் அமைந்துள்ளன. இது தொல்காப்பியத்தினின்று திருமுறைகள் யாப்பு முறையில் வேறுபட்ட மரபுமாற்றம் ஆகும்.

அகத்திணையில் பெயர் சுட்டும் மரபு

அகப்பாடல்களில் தலைமக்களின் பெயர் சுட்டும் மரபு இல்லை என்பதனை,

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்

சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்"[29]

என்ற தொல்காப்பிய நூற்பா விளக்கும். இந்நூற்பாவில் 'அகன் ஐந்திணை' எனத் தொல்காப்பியர் குறித்தமையால், ஐந்திணை நீங்கலாக, கைக்கிளை, பெருந்திணைக்கண் பெயர்சுட்டப் படலாம் என்பது தெளிவாகும்.

ஐந்திணையில் தலைமக்கள் பெயர் சுட்டப்படாமைக்கு, "அகமாந்தர்களுக்குப் பெயர் கொடுப்போமாயின் கற்பவர்களுக்கு வரலாற்று உணர்ச்சியே தோன்றும். ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காணும் அறிவோட்டமே எழும். செழியன் காதலொடு செங்குட்டுவன் காதலையும், பேகன் பரத்தமையொடு கோவலன் பரத்தமையையும், பேகனது கண்ணகியின் அழுகையோடு கோவலனது கண்ணகியின் அடக்கத்தையும் இணைத்து ஆராயும் நூலுணர்வே பிறக்கும்"[30] என்பர் வ.சுப.மாணிக்கனார்.

பக்தி இலக்கியக் காலத்தில் இம்மரபு மாற்றம் பெறுகின்றது. ஐந்திணை ஒழுக்கத்தின்கண் தலைவியின் பெயர் சுட்டப்படாது இருப்பினும் தலைவனின் பெயர் சுட்டப்படுகிறது. நாயன்மார்கள் சிவபெருமானைத் தங்கள் காதல் தலைவன் என்கின்றனர். இவ்வாறு பெயர்சுட்டப்பட்டமைக்கு, "இறைவன் ஒருவனாகவும், நிரந்தரமாகவும் இருப்பதாலும் அவனுடைய காதலைப் பெறவிரும்பும் உயிர்கள் பலவாக இருப்பதாலும் பக்திக்காதல் பாடல்களில் இறைவனது பெயர் மட்டும் சுட்டப்படுகிறது"[31] என்பர் கு.தாமோதரன்.

தலைவன் கூற்றில் அகப்பொருள் மரபுமாற்றங்கள்

திருமுறைகளில் இருவகைத் தலைவர்கள் காணப்படுகின்றனர். ஒருவன் பாட்டுடைத் தலைவன். இது இறைவனே ஆவான். இறைவன் எனில்,

சிவபெருமானாகவோ, முருகனாகவோ, திருஞானசம்பந்தராகவோ அமைகின்றனர். இவர்களுக்கு அகப்பாடல்களில் கூற்றுக்கள் இல்லை. மற்றொரு தலைவனாய் அமையும் கிளவித் தலைவன் கூற்றுப்பாடல்களில் மரபு மாற்றங்கள் காணப்படுகின்றன.

தலைவன் அடலெடுத்துரைத்தல்

தலைவன், தலைவியை உடன்போக்கின்கண் அழைத்துச் செல்லும்போது, சேய்மையின்கண் சிலர் பின்வரல் கண்டு, தலைவி அஞ்சுவாள். அவ்விடத்துத் தலைவன், 'வருபவர் நின்னவர் ஆயின் போரிடாது சென்று மறைவேன். பிறர்ஆயின் எதிர்த்து நின்று வெல்வேன்' எனக் கூறுவான். தலைவன் இவ்வாறு உரைத்தல் "அடலெடுத்து உரைத்தல்"[32] எனத் திருக்கோவையாரில் குறிக்கப்பெறும். இதனை, 'உடன்போக்கு' என்பதினுள் வைத்து மாணிக்கவாசகர் குறிப்பர்.

உடன்போக்கு இடையீட்டு விரியின்கண் 'தலைவன் தலைவியை விடுத்து அகறல்'[33] என்னும் துறையாய் இலக்கண விளக்கம் காட்டும். இத்துறையினைச் சார்ந்ததாய், திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் ஒரு பாடல்மட்டுமே காணப்படுகின்றது. இவ்வந்தாதித் தலைவன், தலைவியிடத்து, 'அஞ்சற்க!' நம் பின்வருபவர் பிறர் ஆயின் அவரைக் கொன்று பருந்துக்கு இரையாக்குவேன். அன்றி நின்னவர் ஆயின், அவர்கள் அறியாது மறைகுவென் என்கிறான். தலைவனின் இத்தகைய கூற்றுக்கு,

"பரிப்பருந் திண்மைப் படையது கானர் எனிற் சிறகு
விரிப்பருந் துக்கிரை ஆக்கும்வெய் யேன்அஞ்சேல் செஞ்சடைமேல்
தரிப்பருந் திண்கங்கை யார்திரு வேகம்பர் அன்ன பொன்னே
வரிப்பருந் திண்சிலை யேயுமராயின் மறைகுவனே" (தி.ஏ.தி.பா.69)

என்ற பாடல் சான்றாகும்.

தலைவன் பதிபரிசு உரைத்தல்

தலைவியை உடன்போக்கின்கண் அழைத்துச் செல்லும் தலைவன், தன் நகரிடைப்புக்கு, அவ்விடத்துள்ள, குன்றுகள், பொழில்கள், கோயில்கள்

போன்றவற்றைத் தலைவியிடம் காட்டி, 'இது நம்பதி' என உரைப்பது 'பதிபரிசு உரைத்தல்' என்னும் புதிய அகத்துறையாகும். திருக்கோவையார் இதனை 'உடன்போக்கு' என்னும் தொகுதிக்கண் வைத்து உரைக்கும்.[34] நம்பியகப்பொருள் இத்துறையினை,

"தன்பதி அடைந்தமை தலைவிக்கு உரைத்தலும்"[35]

எனச் சுட்டும்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின் தலைவன் பதிபரிசு உரைக்கின்றான். அவன் தலைவியிடத்து, 'கார்மயில் போன்றவளே! இராவணன் வான்வழியில் பறந்து சென்றது புட்பக விமானத்தின் உதவியால்தான். அப்புட்பக விமானம் போன்று ஆயிரம் மடங்கு சுற்றளவினை உடையது எம் ஊரின்கண் அமைந்துள்ள ஏகம்பரனார் ஆலயத்தின் சிகரம். அவ்வாலயத்தின் மேல் சூலமானது பொறிக்கப்பட்ட கொடியானது விளங்கும்' என்று உரைக்கின்றான். கோயில் காட்டிக்கூறியதாக அமையும் அப்பாடல்,

"உவரச்சொல் வேடுடைக் காடுகந் தாடிய ஏகம்பனார்
அவரக்கன் போன விமானத்தை ஆயிரம் உண்மைசுற்றும்
துவரச் சிகரச் சிவாலயம் சூலம் துலங்கு விண்மேல்
கவரக் கொடிதிளைக் குங்கச்சி காண்கினுங் கார்மயிலே"

(தி.ஏ.தி.பா.75)

என்பதாம்.

இவ்வந்தாதியின் பிறிதோர் பாடலில் தலைவன் தன் பதியாம் கச்சியில், நாற்று நடுவோரின் குரலொலியும், களத்துமேட்டில் கதிர் அடிப்போரின் பேச்சொலியும், கரும்பாலைகளிலிருந்து எழும் ஒலியும், கடலின் ஒலியும் மிக்குக் காணப்படும் எனத் தன் பதியின் வளமை குறித்துக் கூறுகின்றான். இதனை,

"கார்மிக்க கண்டத் தெழில்திரு ஏகம்பர் கச்சியின்வாய்
ஏர்மிக்க சேற்றெழில் நெல்நடு வோரொலி பொன்மலைபோல்

போர்மிக்க செந்நெல் குவிப்போர் ஒலிகருப் பாலையொலி

நீர்மிக்க மாக்கட லின்னொலி யேயொக்கும் நேரிழையே"

(தி.ஏ.தி.பா.76)

என்பது உணர்த்தும். இப்பாடல் உடன்போக்கில் சுரத்தின்கண் வருத்தமுற்று நடந்துவந்த தன் தலைவிக்குத் தலைவன் தன் பதியின் வளமைகூறி ஆற்றுவித்ததாம்.

இவ்வந்தாதியின் பிறிதொருபாடலில், மகளிரின் கருங்கண்ணும், செவ்வாயும்கூட, ஒப்பாகாவண்ணம், குவளைமலர்களும், அல்லி மலர்களும் எம்பதியின்கண் அமைந்துள்ள பொய்கையில் மலர்ந்துள்ளன என்கிறான் தலைவன். இதனை,

"நன்னு தலார்கருங் கண்ணுஞ்செவ் வாயுமிவ் வாறெனப்போய்

மன்னி மூார்திரு நீலமும் ஆம்பலும் பூப்பவள்ளை

என்னவெ லாமொப்புக் காதென்று வீறிடும் ஏகம்பனார்

பொன்னுத லார்விழி யார்கச்சி நாட் டுள்இப் பொய்கையுளே"

(தி.ஏ.தி.பா.79)

என்பது விளக்கும். இப்பாடல் பொய்கை காட்டித் தலைவன் உரைத்ததாம்.

இவ்வந்தாதியின்கண் அமைந்துள்ள மற்றோர் பாடலில், தலைவன், தன் ஊரின்கண் உமாதேவி, முப்பத்திரண்டு அறங்களை வளர்ப்பதைக் கண்டு, ஏகம்பரனார் மகிழ்கின்றார். மனிதர்கள் கருணை கொண்டோராய், அறம் செய்கின்ற அறச்சாலைகள் மிக உண்டு எனப் பதிபரிசு உரைக்கின்றான். இதன்வழி, தன்னை நம்பிவந்த தலைவியிடத்தும் தன் பதியின்கண் இறையருள்மட்டுமன்று, மனிதர்களும் அறச்சிந்தனை உடையவர்களே எனக் கூறி அவளின் அச்சத்தினைத் தவிர்க்கின்றான். இத்தகைய அறஞ்செறிந்த பாடல்,

"கச்சார் முலைமலை மங்கைகண் ணாரஎண் ணான்கறமும்
வைச்சார் மகிழ்திரு ஏகம்பர் தேவி மகிழவிண்ணோர்
விச்சா தரர்தொழு கின்ற விமானமுந் தன்மமறா
அச்சா லையும்பரப் பாங்கணி மாடங்கள் ஓங்கினவே" (தி.ஏ.தி.பா.82)

என்பதாம்.

தலைவன் முகிலொடு உரைத்தல்

கற்பின்கண் பிரிந்த தலைமகன் வினைமுடித்து, வருமிடத்து, தான் குறித்த பருவம் வந்ததைக் காண்கிறான். உடன் தன் தலைவி வருந்துவள் எனக் கருதி, முகில்களிடத்து, 'என் தலைவி ஊருக்கு என்முன் செல்லாது இருப்பீர்களாக' என வேண்டுகின்றான். தலைவன் இவ்வாறு உரைத்தல் 'முகிலொடு உரைத்தல்' எனப்படும். இத்துறையினைத் திருக்கோவையார், வேந்தற்குற்றுழிப்பிரிவின் கண்ணும், பொருள்வயிற் பிரிவின் கண்ணும் வைத்துரைக்கும்.[36]

திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் இத்துறைசார்ந்து ஒரே ஒரு பாடல் காணப்படுகின்றது. இத்தலைவன் வேந்தற்கு உற்றுழிப் பிரிகின்றான். பிரியும் காலத்து, அவன் வருவதாய்க் கூறிய காரும் வந்தது. அதனைக் கண்ட தலைவன், முகில்களாகிய மதயானைகள், இடியாகிய பிளிறுதலைச் செய்து, வானமாகிய களத்தில் வருமாயின் தலைவி துன்புறுவாள் எனத் தோழி கூறியதனை எண்ணி வருந்துகின்றான். அதனால், ஏகம்பர் கோயிலின் கொடி காற்றுக்கு அலைவதுபோல், அலையும் நெஞ்சத்தினை உடையவனானேன் என்றும் முகில்களிடத்து உரைக்கின்றான். இதனை,

"உலவிய மின்வடம் வீசி உருமதிர் வுள்முழங்கி
வலவிய மாமதம் பாய்முகில் யானைகள் வானில் வந்தால்
கலவிய வார்குழல் பின்னரென் பாரீர் என நினைந்து
நிலவிய ஏகம்பர் கோயிற் கொடியன்ன நீர்மையனே" (தி.ஏ.தி.பா.86)

என்ற பாடலானது உணர்த்துகின்றது. இப்பாடலின் தலைவன்

போர்க்களத்தின்கண் இருப்பவன் ஆதலால், முகில்களைப் போர்க்கள யானைகள் என்றும், வானத்தினைப் போர்க்களம் என்றும் குறிக்கின்றான். மேலும் முகில்களைப் போர்க்கள யானைகள் என எண்ணித் தலைவி இறந்துவிடும் நிலையினை அடைவாள் என்பதனையும் குறிப்பால் உணர்த்துகின்றான்.

தலைவி கூற்றில் மரபுமாற்றங்கள்

இறையியல் அகத்திணைப் பாடல்களில் மிகவும் இன்றியமையாத இடத்தினைப் பெறுபவை தலைவி கூற்றுப் பாடல்கள் ஆகும். நாயன்மார், ஆழ்வார் போன்றோர் தன்னைப் பெண்ணாகப் பாவித்துக்கொண்டு, இறைவன்மாட்டு பக்தி செய்தல் என்பதில் ஆழங்கால்பட்டு நின்றமையால் பக்தி இலக்கியங்களில் நாயகன், நாயகி பாவத்தில் அமைந்த பாடல்களே எண்ணிக்கைகளில் மிக்கிருக்கின்றன. எனவே இவற்றில் அகப்பொருள் மரபு மாற்றங்களும் நிறைந்து காணப்படுகின்றன.

களவில் தலைவி ஐயுறுதல்

தொல்காப்பியர் அன்பின் ஐந்திணைக்கு முன், நடக்கும் நிகழ்வுகளாக, காட்சி, ஐயம், தெளிதல், துணிவு என்பனவற்றைக் குறிப்பர். இவற்றுள் ஒத்த தலைவியைப் பார்த்து, 'அணங்குகொல், ஆய்மயில்கொல்' என ஐயுறுதல் தலைமகன் மாட்டே உண்டு என்பதனை,

"உயர் மொழிக்கிளவி உறழுங்கிளவி
ஐயக்கிளவி ஆடூஉவிற்குரித்தே"[37]

என்ற நூற்பாவழி விளக்குவர். பெண்மகள் தலைவனைப் பார்த்து, இவன் தெய்வமோ! மகனோ! என ஐயுறுதல் அகமரபில் இல்லை. இவ்வாறு ஐயுறாமைக்கு "அவள் ஐயப்படுங்கால் தெய்வமோ வென்று ஐயுறுதல் வேண்டும். அவ்வாறு ஐயுற்றால் அச்சம்பிறக்கும். அஃது ஏதுவாக காம நிகழ்ச்சியுண்டாகாது"[38] என விளக்கிக் கூறுவர் இளம்பூரணர். நச்சினார்க்கினியரோ, "தலைவன் தனக்கு மானுட மகளோ, தேவமகளோ

என்று ஏற்படும் ஐயத்தை நூலறிவு முதலியவற்றான் நீக்கித் தெளிவு எய்துவான். தலைவிக்குத் தலைவன், மானுடனோ! தேவனோ! என ஐயம் நிகழின், அதனை நீக்கி, உணர்தற்குக் கருவியிலள். ஆதலின் தலைவிக்கு ஐயம் நிகழின், அச்சமேயன்றிக் காமக் குறிப்பு நிகழாமையின் தலைவன் ஐயுறலே சிறந்தது என்பார்."[39]

பிற்காலத்து வந்த இறையனார் களவியலுரையாசிரியர், தலைவிக்கு ஐயக்கிளவி உண்டெனக் குறிப்பர். "கடம்பமர் கடவுள் கொல்லோ, இயக்கன் கொல்லோ! அன்றி மக்களுள்ளான் கொல்லோ என்று ஐயப்படும்"[40] என மொழிவர். எனினும், தொல்காப்பியர் மற்றும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் இதனை ஏற்பாரில்லை.

தலைவி ஐயுறல் என்ற புதிய அகமரபு திருமுறையில் காணக்கிடைக்கின்றது.

பெரியபுராணத்தில் சுந்தரரை, திருவையாற்றில் காண்கிறார் பரவையார். பரவையாரின் சிந்தையைக் கவர்கிறார் சுந்தரர். இறைவனை அன்றிப் பிறிதொன்றினை அறியாத பரவையார் இறைவன் இருந்த தன்னுடைய, உள்ளத்தினுள் உட்புகுந்த இந்த மனிதன் யார்? என்று ஐயுறுகின்றாள். இவ்வாறு பரவையார் ஐயுறுவதாய் வரும் பாடல்,

"முன்னேவந் தெதிர்தோன்றும்
முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ
தார் மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல்
மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேயென் மனந்திரித்த
இவன்யாரோ வென நினைந்தார்"

(த.கொ.பு., பா.144)

என்பதாகும். இப்பாடலின்கண் தலைமகன் முருகனோ, மன்மதனோ,

விஞ்சையனோ என ஐயுறுவதும், என் மனம் திரித்தவன் என அதிசயித்தலும், அகஇலக்கியங்களில் இதுவரை காணப்பெறாத புதிய அகமரபு ஆகும். இம்மரபுமாற்றத்தினைச் சேக்கிழார் அமைத்தமைக்கு "ஐயுற்றுத் தெளிதற்குரிய அறிவுடைமை பரவையாரிடத்து இருந்தமையின் அவரும் ஐயுற்றதாகக் கூறினார்"[41] என விளக்கமளிப்பார் கு.சுந்தரமூர்த்தி.

இப்பாடலுக்கான உரையில் சுந்தரர் ஐயுற்றதையும், பரவையார் ஐயுற்றதையும் கருத்தில் கொண்டு, 'கற்பகத்தின் பூங்கொம்போ' என்று நம்பிகள் நினைத்தமைக்கேற்பவே, பூத்தல் ஒழிந்து பாழ்பட்டுக் கிடந்த அதனைப் பூக்கச் செய்தவன் விண்குடியேற்றிய முருகனேயாதலால் 'முருகனே' என்ற நினைவு பரவையார் மனத்து எதிர் உருவமாய்க் கிளம்பியது. 'காமன் பெருவாழ்வு' எனும் நம்பிகளின் நினைவு மாரனைப் பரவையார் மனத்தினுட் புகுத்தியது. நம்பிகள் 'பொற்பின் புண்ணியமோ' என்றமை சிற்றின்பத்தைப் பேரின்பமாக்கும் புண்ணிய முடையார் விஞ்சையராதலின் 'விஞ்சையனோ' என்ற கருத்தை விளைவித்தது. அவர் 'அறியேன்' என்றபடி இவர் 'யாரோ' என்றார்[42] எனப் பொருத்திக்காட்டுவார் சி.கே.சுப்பிரமணிய முதலியார்.

இத்தகைய ஒப்பிடுதல் மரபினை கு.சுந்தரமூர்த்தி தம்முடைய உரையில், "ஆண்டு அவர் கற்பகத்தின் பூங்கொம்போ? என்றார். இங்கு இவர் அக்கற்பகத்தின் பூங்கொம்பாம் தெய்வயானையை மணந்த முருகனோ என்றார். ஆண்டு அவர் காமன் தன் பெருவாழ்வோ என்றார். இங்கு இவர் அத்தேவியை மணந்த மாரனோ என்றார். ஆண்டு அவர் பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ என்றார். இங்கு இவர் அப்புண்ணியத்தின் பயனான மின்னேர் செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்று உடையவனோ? என்றார். இவ்வாறு ஐயுற்ற திறன்களாலும், இவ்விருவர் தம் உளம் ஒத்த பாங்கு தெரியவருகின்றது. இவ்வாறெல்லாம் ஐயுறுதற்குப் பெருமையுடையான், தோன்றிய அளவில் மறைந்தமைபற்றி இவன் யாரோ?

என்றார்"[43] என விளக்கியுரைப்பர். இவ்வாறு ஐயுறும் தலைவியை சீவகசிந்தாமணி,

"வணங்கு நோன்சிலை வார் கணைக் காமனோ
மணங்கொள் பூமிசை மைவரை மைந்தனோ
நிணந்தெ னெஞ்ச நிறைகொண்ட கள்வனை
யணங்கு காளறி யேனுரை யீர்களே"[44]

எனக் காட்டும்.

பவனி கண்டு அழுங்கல்

தலைவன் வீதியுலா வருகையில், அவனைக் கண்டு காமுற்ற தலைவி வருந்துவதாய்த் திருமுறைகளில் பாடல்கள் காணப்படுகின்றன. இது தொல்காப்பியர் குறிக்காத அகப்பொருள் மரபு ஆகும். பிற்கால இலக்கண நூலான மாறனலங்காரம் இதனை 'பவனிகண்டு அழுங்கல்'[45] என்று குறிக்கும்.

பொன்வண்ணத்தந்தாதியில் வரும் தலைவி, தலைவனின் பவனிகண்டு அழுங்குகின்றாள். அவள் தலைவனைப் பார்த்து, 'நீர் இனிய வார்த்தைகளையே எம்மைப் பார்த்துப் பேசுகின்றீர். இருப்பினும் உம்முடைய கோலமோ, திகம்பர வடிவாய் உள்ளது. அதனால் உம்மைக் காணுதற்கு நாங்கள் நாணம் கொள்கின்றோம். அதனால் வயிற்றுக்குப் பிச்சை வேண்டி வந்ததுபோல் நீர் வந்ததும், பிச்சையிடுங்கள்! பிச்சையிடுதல் உமக்குப் புண்ணியம் எனக் கூறும், உன்னுடைய வார்த்தைகளும் ஐயத்திற்குரியதாம். நீர் ஏறிவருகின்ற எருதும் எம்மைப் பாய வருகின்றது. எனவே உம் தோள்தோயும் மகளிரே புண்ணியம் உடையவர். பிச்சையிடுபவர் அல்லர். ஆகையால் நீர் இவ்விடத்தை விட்டுப் போய்விடுங்கள் எனப் பேசுகின்றாள். இப்பாடலில் தலைவனின் தோற்றம் பார்த்துத் தலைவி, நாணம் கொள்வது உண்மையெனின், இல்லத்தினுள் சென்றிருக்கலாம். அதனை விடுத்துத், தலைவனைப் போகச் சொல்பவள் போல் வாயாடி நிற்கின்றாள். தலைவனின் தோள் சேர்பவரே புண்ணியம் செய்தவர் என்பது போல் கூறித் தான் தலைவன் தோள் சேர விருப்பம்

கொண்டவள் என்பதனையும் குறிப்பால் வெளிப்படுத்தி நிற்கின்றாள். இத்தலைவி பவனி கண்டு அழுங்கியவள் என்பதற்கு, இவள்தம் கூற்றே அரணாகும். இத்தகைய தலைவியைக் காட்டும் பாடல்,

"அயமே பலியிங்கு : மாருள தாணுவோர் குக்கிக்கிடப்
பயமே மொழியும் : பசுபதி ஏறெம்மைப் பாய்ந்திடுமால்;
புயமேய் குழலியர் புண்ணியர்; போமின் இரத்தல் பொல்லா
நயமே மொழியினும் நக்காம மாவும்மை நாணுதுமே"

(பொ.வ.அ.பா.61)

என்பதாம்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் வரும் தலைவியும், தலைவனின் பவனிகண்டு அழுங்குகின்றாள். "பாய்ந்து செல்லும் புலியின் தோலினை ஆடையாகக் கொண்டீரே! பூதங்கள் குடைபிடிக்க பிச்சை ஏற்க வந்தீர்! நீர் பிச்சை ஏற்க மட்டும் வரவில்லை. மகளிரின் உளம் கவர்ந்து அவர்தம் ஆடை கவரவும் வந்தீர்" என்கிறாள். தலைவனின், கோலம்கண்டு, அவன்பால் கொண்ட காதலினால் தலைவி தன் ஆடை இழந்து நிற்பதைக் காட்டும் பாடல்,

"பாங்குடை கோள்புலி யின்னதன் கொண்டீர்நும் பாரிடங்கள்
தாங்குடை கொள்ளப் பலிகொள்ள வந்தீர் தடக்கமலம்
பூங்குடை கொள்ளப் புனற்கச்சி ஏகம்பம் கோயில்கொண்டீர்
ஈங்கிடை கொள்ளக் கலைகொள்ள வந்தீர் இடைகுமின்றே"

(தி.ஏ.தி.பா.52)

என்பதாகும்.

தலைவன் ஊர்தியை எதிர்ப்பெய்து கூறல்

கோயில் நான்மணிமாலை புதிய அகமரபினைக் காட்டுகின்றது. இதில் வரும் தலைவன்பால் காதல்கொண்ட தலைவி, அத்தலைவனை நாள்தோறும் காணவேண்டும் என ஏங்குகின்றாள். ஆனால் எருதோ

தலைவனுடன் ஊர்ந்து வரும்போது, அவள் இல்லத்தின்கண் விரைவாய்ச் சென்றுவிடுகிறது. அதனைக் கண்ட தலைவி, எருதினைப் பார்த்து, 'நாள்தோறும் எம் இல்லத்தின்கண் வரும் காலத்து மெதுவாய்ச் செல்லுவாய்' என்று வேண்டுகின்றாள். இஃது தொல்காப்பியர் சுட்டாத அகமரபாகும். இத்தகைய மரபினை,

> "ஆனேறே போந்தால் அழிவுண்டே அன்புடைய
> நானேதான் வாழ்ந்திடினும் நன்றன்றே - வானோங்கு
> வாமாண் பொழிற்றில்லை மன்றைப் பொலிவித்த
> கோமானை இத்தெருவே கொண்டு" (கோ.நா.மா.பா.37)

என்ற பாடல் உணர்த்தும்.

இவ்வாறு தலைவனின் ஊர்தியைப் 'பையநடக்க'[46] என்றும் 'நாண்காணுமாறு என் வீட்டுச் சாளரத்தின் வழியாக நடக்க'[47] எனவும் வேண்டும் தலைவியை முத்தொள்ளாயிரம் காட்டும்.

தாமம்பெறாது தளர்வுற்று உரைத்தல்

திருமுறைகளில் தலைவி, தலைவனின் மாலையிரத்தல் தொடர்பான அகப்பாடல்கள் காணப்படுகின்றன.

கபிலரின் சிவபெருமான் திருவந்தாதியில் காணப்படும் தலைவி, தலைவனிடம், கொன்றைமாலை வேண்டிநிற்கின்றாள். இத்தலைவி, தன் நெஞ்சினைப் பார்த்து, ஞாயிறு, திங்கள், தீ மூன்றினையும் தன் கண்களாகக் கொண்ட தலைவன், ஒளிபொருந்திய கொன்றை மாலையினை அணிந்துள்ளான். அத்தகைய கொன்றைமாலையினைக் கேட்பாயாக! எனத் தன் நெஞ்சிற்குக் கூறுகின்றாள். இதனை,

> "ஒளியார் சுடர்மூன்றும் கண்மூன்றாக் கோடற்(கு)
> ஒளியான் உலகெல்லாம் ஏத்த - ஒளியாய
> கள்ளேற்றான், கொன்றையான் காப்பிகந்தான் - நன்னெஞ்சே
> கள்ளேற்றான் கொன்றை கடிது" (சி.தி.பா.11)

என்பது சுட்டும்.

இவ்வந்தாதியின்கண் காணப்படும் பிறிதோர் பாடலும் தலைவி கொன்றைமாலை வேண்டி நிற்பதைக்கூறும். தலைவனின் கொன்றை மாலையினைச் சேராமல் தலைவியின் முலையானது கூடாது என்பதனை இப்பாடல் காட்டும்

"வடிவார் அறப்பொங்கி வண்ணக்கச் சுந்தி
வடிவார் வடம்புனைந்தும் பொல்லா - வடிவார்வேல்
முற்கூடல் அம்மான் முருகமருங் கொன்றையந்தார்
முற்கூட மாட்டா முலை" (சி.தி.பா.50)

இவ்வாறு தலைவியானவள் தலைவனிடம் மாலை வேண்டுதல் என்பது தூது இலக்கியத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்பெறும். இது தனித்துறையாக வளர்ந்து நிற்பதனை திருமுறைகளில் காணமுடிகின்றது. இத்தகைய வளர்நிலை கண்ட பிற்கால இலக்கண நூலான, மாறனலங்காரம் இத்துறையினை 'தாமம் பெறாது தளர்வுற்று உரைத்தல்' என்ற பெயரான் குறிக்கும்.

"நாகையில் உறையும் பெருமானே! திருமகள் நீங்காது, தோயும் உன் மார்பினை யான்அணைவதற்கு இயலவில்லை. ஆயினும் சூடிக்கழித்த துளப மாலையினையாவது எனக்குத் தருவாய்! அங்ஙனம் செய்தால் நின் தேவியும் நின்னை ஊடமாட்டாள். நீயும் எனக்கு ஆறுதல் செய்ததால் மனநிறைவு பெறலாம். உன் தோளினைத் தழுவாது துயருறும் எனக்கு, அத்துளபச் சருகானது ஆறுதலைத் தரும்"[48] என்ற பாடலினையும் எடுத்துக்காட்டும்.

தலைவனுடைய எருதின் மணி ஓசையும் நிலவொளியும் வருத்துவதாய்க் கூறல்

திருமுறையுள் வரும் தலைவி தலைவன் எருதின் மணி ஓசையும், நிலவொளியும் தன்னை வருத்துவதாய்க் கூறுகின்றாள். தொல்காப்பியர் குறிக்காத இம்மரபு, பிற்கால இலக்கியங்களில் காணப்படுகின்றது. இதற்கு,

"இருள் பரந்தாழியான் தன்னிறம்போல் தம்முன்
அருள் பரந்தன்ன ஆய்நிறம்போன்று - மருள்பரந்த
பால் போலும் வெண்ணிலவும் பையரவல்குலாய்
வேல் போலும் வீழ் துணையிலவர்க்கு"[49]

என்ற திணைமாலை நூற்றைம்பதின் பாடல் சான்றாகும்.

பகற்காலத்தில் வெளியே சென்று மேய்கின்ற ஆநிரைகள் மாலைக் காலத்தில் ஊரை அடையும் பொழுது அவற்றின் கழுத்தில் போடப்பட்டிருக்கும் மணிகள் ஒலிக்கும். அவ்வொலியானது, மாலைப் பொழுதினையும், அதனை அடுத்து வரும் இரவுப் பொழுதினையும் அறிவிக்கும். இவ்வறிவிப்பானது, தலைவனைப் பிரிந்து இருக்கும் தலைவியர்க்குத் துன்பத்தைத் தரும். ஆகவே தலைவியரால் வெறுக்கப்படும் பொருள்களில் ஒன்றாய் மணி ஒலி அமைகின்றது. அதே போன்று இரவின் குளிர்ச்சியை மிகுவிக்கும் தண் நிலவின் ஒளியும் தலைவியை வருத்தும். இதுவும் தலைவியர் வெறுக்கும் பொருளில் பிறிதொன்றாய் அமைகின்றது. இவ்விரண்டினையும் கொண்டு தலைவன் வருகின்றான். எனவே இவை தன்னை வருத்துவதாய்த் தலைவி குறிக்கின்றாள். இதனை,

"ஏற்றின் மணியே அமையாதே! ஈர்ஞ்சடைமேல்
வீற்றிருந்த வெண்மதியும் வேண்டுமோ! - ஆற்றருவி
கன்மேற்பட் டார்க்கும் கயிலாயத் தெம்பெருமான்
என்மேற்படை விடுப்பாற்(கு) ஈங்கு"

(கயிலை. பா.95)

என்ற பாடல் உணர்த்துகின்றது.

கபிலரின் சிவபெருமான் திருவந்தாதியில் வரும் தலைவி, தலைவனின் பிறைநிலவு தன்னை வருத்துவதாய்க் கூறுகின்றாள். தன்னை வருத்தும் நிலவினை வருத்தும் ஆற்றல் தமக்கு இல்லை என்பதனால், தலைவனின் கழுத்தில் இருக்கும் அரவினைப் பார்த்து, நிலவினைக் கடித்துத்

துன்புறுத்துமாறு வேண்டுகின்றாள். இதனை,

"கூராலம் மேயாக் குருகோடு நைவேற்குக்
கூரார்வேற் கையார்க்காய்க் கொல்லாமே - கூரார்
பனிச்சங்காட் டார்சடைமேற் பால்மதியைப் பாம்பே
பனிச்சங் காட்டாய் கடிக்கப் பாய்ந்து" (சி.தி.பா.30)

என்பதனால் அறியமுடிகின்றது.

இவ்வாறு சிவபெருமான் ஊர்ந்துவரும் எருதின் மணிஒலியும், நிலவொளியும் தன்னை வருத்துவதாய்த் தலைவி கூறும்முறை உண்டு என்பதனை,

"அந்தியும் ஆம்பலும் மாலையும் மணியும்
தென்றலும் திங்களும் யாவும் அன்னவை
பகன்றற் வாற்றாளை கவன்றவள் மொழிதல்"[50]

என வீரசோழியம் முல்லை நடையியல் குறிக்கின்றது.

தலைவி கனவுகண்டு இரங்கல்

தலைவன், தலைவியர் அகப்பொருளில் கனவுகாண்டல் உண்டு என்பதனைத் தொல்காப்பியர் "கனவும் உரித்தால் அவ்விடத்தான"[51] எனக் குறிப்பர். இம்மரபானது பக்தி இலக்கியக் காலத்தில் 'கனவுகண்டு இரங்கல்' என்னும் தனித்துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது.

கபிலரின் சிவபெருமான் திருவந்தாதித் தலைவி, தன் உள்ளம் கொண்ட தலைவனைப் பற்றித் தோழியிடம் உரைக்கின்றாள். 'திருமறைக்காடு' என்னும் ஊரின்கண் உள்ள கடலில் சங்குகள் மோதும். அதன்கண் அமைந்த இடுமணலில், தலைவன்வந்து என்நலம் உண்டான். கனவில்வந்த அத்தலைவன், விழித்திருக்கும்போது வாராது வருத்துகின்றான் என்கிறாள். அத்தலைவியின் கூற்றினை,

"வரிநீல வண்டலம்பு மாமறைக்காட் டாங்கேழ்
வரிநீர் வலம்புரிகள் உந்தி - வரிநீர்
இடுமணல் மேல் அந்நலங்கொண்டு இன்னாநோய் செய்தான்
இடுமணல் மேல் ஈசன் எமக்கு" (சி.தி.பா.58)

என்ற பாடலானது உணர்த்திடும். இப்பாடலில், தலைவன் 'நலம்கொண்டு நோய் செய்தான்' என்று குறிப்பதன் மூலம், தலைவி தன் ஆற்றாமையை உணர்த்தி நிற்கின்றாள். இதனை 'கனவின் அரற்றல்'[52] எனத் தனித்துறையாக வீரசோழியம் முல்லை நடையியல் குறிக்கின்றது.

தலைவன் பதிசொல்லித் தலைவி புலம்பல்

தமிழர் அகமரபில், தலைவியின் ஊர் சொல்லித் தலைவன் புலம்பல் காணப்படுகின்றது. இதற்கு மாற்றாய்த் தலைவனின் ஊர் சொல்லித் தலைவி புலம்பல் இல்லை. ஆனால் இத்தகைய கூற்றுமரபு திருமுறையில் காணப்படுகின்றது. திருநாவுக்கரசரின் ஐந்தாம் திருமுறை திருப்பாசூர்ப் பதிகத் தலைவி, தலைவனின் ஊர் அறியாது புலம்புவதாக மொழிகிறாள். அறிந்தவர்கள் யாரேனும் இருந்தால் கூறுங்கள் எனவும் வினவி நிற்கின்றாள். இதனை,

"பல்லில் ஓடு கையேந்திப் பகலெலாம்
எல்லி நின்றிடு பெய்பலி யேற்பவர்
சொல்லிப் போய்புகு மூரறியேன் சொலீர்
பல்கு நீற்றினர் பாசூ ரடிகளே" (5:25:6)

என்ற பாடலானது உணர்த்திடும். இதனால் தலைவி, தலைவனின் பதி அறியின் தேடிச் செல்வாள் என்பது பெறப்படுகின்றது. ஆனால்,

"உடம்பும் உயிரும் வாடிய கண்ணும்
என்னுற்றன கொல் இவையெனின் அல்லதைக்
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை"[53]

என்பது தொல்காப்பியர் அகமரபாகும். இப்பதிகத்தலைவி, தலைவன் இடம் தேடிப் புலம்புவது புதிய அகமரபு ஆகும்.

தலைவி கூடல் இழைத்தல்

தலைவன் பிரிவினை ஆற்றாத தலைவி, அவன் விரைவாகத் தன்பால் வந்தனைவானா? என்பதனை அறிதற்கு, கண்ணை மூடிக்கொண்டு மணலில் வட்டம் இழைப்பாள். அதன் இரு முனைகள் கூடும் எனில், தலைவன் தவறாது வருவான் என்ற நம்பிக்கையில் செயல்படுவாள். இழைக்கப்பட்ட வட்டத்தினுள் சிறுவட்டங்களைச் சுழித்துப் பின், அவற்றை எண்ணி, அவற்றின் எண்ணிக்கை இரட்டையாய் முடியின், எடுத்த செயல் நிறைவேறும் என்றும் நம்பிக்கை கொள்வாள். தலைவி இவ்வாறு இழைத்தல் 'கூடல் இழைத்தல்' என அழைக்கப்படுகிறது. தொல்காப்பியர் இம்மரபினைக் குறிக்கவில்லை. ஆயினும் கலித்தொகையில் இம்மரபு சுட்டப்படுகின்றது. கலித்தொகைத் தலைவி, முதலில் மணலில் வட்டமிடுகின்றாள். அது கூடவில்லை. எனவே பிறிதொரு முறையும் முயல்கிறாள்.

"கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே
ஆடையாள் மூஉய் அகப்படுப்பேன் சூடிய
காணான் திருத்தங் கொல்லோ மணிமிடற்று
மாண்பிலர்க் கொன்றையவன்"[54]

கூடல் இழைத்த கலித்தொகைத் தலைவி, அது கூடாது, இளம்பிறையாய் நிற்றல் கண்டு, அது விண்ணில் சென்று, நிறைமதியாய்த் தன்னை வருத்துமெனக்கருதி, துகிலால் மூடுகின்றாள். அவ்வாறுதான் பிறையை அகப்படுத்திக் கொண்டால் சிவன் தலையில் சூடிக் கொள்ளத் தேடுவானோ? என்று ஐயுறுகின்றாள்.

தலைவன், தன்னை வந்து சேருவானேயாகில் கூடலே கூடு என்று தலைவி கூடல் இழைத்தலை,

"பொரிப் புறப் பல்லிச்சினை ஈன்ற புன்னை
வரிப் புறவார் மணல்மேல் ஏறி
தெரிப்புறத் தாழ்கடல் தண்சேர்ப்பன்
தார் அகலம் நல்குமேல்
ஆழியால் காணாமோ யாம்"[55]

என்ற ஐந்திணை ஐம்பதின் பாடல் காட்டும்.

முத்தொள்ளாயிரத் தலைவி, தலைவன் வருவானோ? மாட்டானோ? என்ற எதிரிடை எண்ணத்தோடே கூடல் இழைக்கின்றாள். ஆழி சுழிக்காமல் வருவானோ? மாட்டானோ? என்ற ஐயப்பாடு இருப்பின் ஒருபக்கம் வருவார் எனத் தெளிவு பிறக்க வழியேற்படும். ஆழிசுழித்துக் கூடாதாயின் தலைவர் வரமாட்டார் என்ற எண்ணமே உறுதிப்படும். அதனை ஆற்றியிருத்தல் என்பது இயலாது. எனவே இப்பாடலில் கூடல் இழைக்கத் தொடங்கும் தலைவி இழைத்து இடையிலே நிறுத்திவிடுகின்றாள். இதனை,

"கூடற்பெருமானைக் கூடலர் கோமானைக்
கூடற்பெறுவேனேல் கூடென்று - கூடல்
இழைப்பாற் போற் காட்டிஇழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து"[56]

என்ற அடிகள் உணர்த்திடும். தலைவர் வருவாராயின் அவர் மார்பில் புல்லப்பொருந்தும் விருப்பினை உடைய தலைவி கூடல் இழைத்தலை,

"சென்றார் வரைய கருமஞ் செருவோன்
பொன்றாங் கணியகலம் புல்லப் பொருந்துமேற்
குன்றாது கூடுகெனக் கூறி முடித்த வார்மணன்மே
லன்றாங் கணியிழை யாளாழி இழைத்தாளே"[57]

எனச் சீவகசிந்தாமணி காட்டும். இப்பாடலில் கூடல் இழைத்தல் என்பது 'ஆழி இழைத்தல்' எனப்படுகிறது. ஆழி என்பது கடலினைக் குறிக்கும். கடற்கரை மணலின்கண் வட்டமிழைத்துப் பார்ப்பதால் இஃது ஆழி இழைத்தல் எனப்பட்டது.

நாலாயிரதிவ்விய பிரபந்த நூல்களுள் ஒன்றான நாச்சியார் திருமொழியும் கூடல் இழைத்தல் மரபினைச் சுட்டும். இதனை,

"ஆய்ச்சிமார்களும் ஆயரும் அஞ்சிடப்
பூத்த நீள்கடம் பேறிப் புகப்பாய்ந்து
வாய்த்த காளியின் மேல் நடமாடிய
கூத்தனார் வரிற் கூடிடு கூடலே"[58]

என்பதனால் அறியமுடிகின்றது.

தலைவி முதற்கண் கூடல் இழைக்கும்பொழுது கூடாது போகுமாகில், அதனை அழித்து மீண்டும் கூடல் இழைப்பாள் என்பதனை,

"முளைக்கும் பிறையு முனியுந் திருநுதல் முத்தரும்ப
விளைக்கும் பசலை விழியிணை காட்ட விடாதவண்டர்
கிளைக்குந் தெரிவருங் கேதகை நீழலின் கீழிலிருந்து
வளைக்குஞ் சுழிக்கு மழிக்குமொண் கூடல் வளைக்கைக் கொண்டே"[59]

என்ற அம்பிகாபதிக் கோவையின் பாடல் எடுத்துக்காட்டும்.

இவ்வாறு கூடலிழைக்கும் பொழுது, கூடல்தெய்வத்தினை வாழ்த்தி, தலைவி கூடல் இழைப்பாள் என்பதற்கு, "கூடற்றெய்வத்தை வாழ்த்திக் கூடலிழைத்தல்"[60] எனத் திருக்கோவையாருக்குப் பேராசிரியர் உரைவகுப்பதில் இருந்து அறியமுடிகின்றது.

தொல்காப்பியர் குறிப்பிடாத ஆழிசுழித்தல் என்னும் இம் மரபினை, 'ஆழி திருத்தி சுழிக்கணக்கு ஓதி'[61] எனத் திருக்கோவையார் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு குறிக்கப்பெறும் கூடல் இழைத்தல் தொடர்பான செய்திகள் திருமுறைகளில் காணக்கிடைக்கின்றன. திருநாவுக்கரசரின் மூன்று பாடல்கள் கூடல் இழைத்தல் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஐந்தாம் திருமுறையில் 64வது பதிகமாய் அமையும், திருக்கோழம்பப்பதிகத்தின் நான்காவது பாடல் தலைவிகூடல் இழைப்பதைக் காட்டுகின்றது.

“பாடலாக்கிடும் பண்ணொடு பெண்ணிவள்
கூடலாக்கிடுங் குன்றின் மணற்கொடு
கோடல் பூத்தலர் கோழம்பத்துள் மகிழ்ந்
தாடுங் கூத்தனுக் கன்பு பட்டாளன்றே” *(5:64:4)*

தலைவன் வருவானேல் கோடே நீ கூடுக எனக்கூறித் தலைவி, கூடல் இழைப்பதனை,

“நீடு நெஞ்சுள் நினைந்து கண்ணீர் மல்கும்
ஓடு மாலினோ டொண்கொடி மாதராள்
மாட நீள்மரு கற்பெரு மான்வரில்
கூடு நீயென்று கூட லிழைக்குமே” *(5:88:8)*

என்ற பாடலானது காட்டிநிற்கும். நாவுக்கரசரின் நான்காம் திருமுறைப் பாடலோ, தலைவன் இன்னும் வரவில்லை. தலைவன் வருவதற்காவது கோடே நீகூடுக எனக் கூறித் தலைவி கூடல் இழைப்பதைக் காட்டும். இதனை,

“வஞ்சித் தென் வளைகவர்ந்தான்
வாரானே யாயிடினும்
பஞ்சிற் காற் சிறகன்னம்
பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சி போய்க் கலிமெலிய
வழ லோம்பு மப்பூதி
குஞ்சிப் பூவாய் நின்ற
சேவடியாய் கோடியையே” *(4:12:10)*

என்பது சுட்டும்.

கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியில் காணப்படும் தலைவியும், தலைவன் தன்னுடன் கூடுவானேல் கூடுக எனக் கூடல் இழைக்கின்றாள். இதனை,

"இசையும் தன் கோலத்தை யான் காண வேண்டி
வசையில் சீர்க் காளத்தி மன்னன் - அசைவின்றிக்
காட்டுமேல், காட்டிக் கலந்தென்னைத் தன்னோடும்
கூட்டுமேல், கூடலே கூடு" (கயிலை.பா.90)

என்பது உணர்த்தும்.

தலைவி, தலைவனின் பத்து உறுப்புக்களைக் கூறுமாறு கிளியை வேண்டல்

தலைவன்பால் காதல் கொண்ட தலைவி அவனை அடைய இயலா நிலையில் வருத்தமுற்றாள். அந்நிலையில் தலைவனது பெயர் முதலியனவற்றைப் பிறர் சொல்லக்கேட்பினும், அவனைக் கூடி மகிழ்ந்ததுபோல் இன்பம் உண்டாகும் எனக் கருதுவாள். அவ்வின்பமும் அரிதாகிய நிலையில், கிள்ளையைப் பார்த்து, தலைவனின் பெயர் முதலிய பத்து உறுப்புக்களைக் கூறுமாறு வேண்டுகின்றாள். தலைவி இவ்வாறு வினவுதலால் இஃது 'தசாங்கம்' எனப்பட்டது. இத்தசாங்கம் அமையும் முறையினை,

"நாற்பொருள் அடைவே நுவலின் இதுவென
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் சென்றோன்
தான்பிரி பொழுதிடை மான்விழிக்கியைந்தது
கரந்துகாண் விருப்பொடு சிறைப்புறன் ஆதலைத்
தெரியாள் போலவும் வரைவு பொருட்டாகப்
பிரிபிரி விறுமாம் பெற்றித்த தனால்
பிரிதுதுயர் கொள்ளும் பரிவிலன் போலவும்
உரையாற் காட்ட மற்றவன் ஒருபெயர்
நாடு, பதி, நதி, கோடு, புரவி
படை, தார், கொடிபகரெனக் கிள்ளையை
வினவி அறிவினை மேற்கொள்ளும்
அனை மரபிற்றா அறையவும் படுமே"[62]

என இலக்கண விளக்கப்பாட்டியல் குறிப்பிடும்.

இவ்வாறு தலைவனின் பத்து உறுப்புகளைக் கூறுமாறு, கிளியினை வேண்டல் என்பது, தொல்காப்பியர் காலத்திலோ, சங்க காலத்திலோ இல்லாத புதிய அகமரபாகும்.

பக்தி இலக்கியத்தில், தலைவன் மனிதன் என்ற நிலையினை விடுத்து, இறைவனாய் அமைதலால், அவன் பெருமைகளை, அவன்பால் அன்பு கொண்ட அடியாரது உள்ளமானது போற்ற நினைக்கின்றது. அத்தகைய மீதூர்ந்த அன்பின் வெளிப்பாடே 'தசாங்கம்' என்ற நிலையில் அமைகின்றது.

திருத்தசாங்கம் என்பது மணிவாசகரின் திருவாசகத்தில் காணப்படுகின்றது. இதில் அமைந்துள்ள, கீர்த்தித்திருஅகவலில் 103வது அடியில் இருந்து, 124 வரை அடிவரை திருத்தசாங்கம் தொடர் நிலையில் அமைந்துள்ளது. தனிநிலையில் அமைந்த திருத்தசாங்கம் ஒன்றும் காணப்படுகின்றது. இது பத்துப் பாடல்களைக் கொண்டதாகும். இப்பகுதி முழுவதும், தலைவி கிளியிடம் வேண்டுவதாகவும், அதற்குக் கிளி விடை பகர்வதாகவும் அமைந்துள்ளது.

இப்பதிகத்தின் முதல் பாடலில், தலைவி கிளியினிடத்தில், தலைவனின் பெயர் யாது? என வினவுகின்றாள். அதற்குக் கிளியோ, தலைவனின் பெயர் 'தேவர் பிரான்' என்று மொழிகின்றது. இவ்வாறு பெயர் சுட்டப்பெறுவதனை,

"ஏரார் இளங்கிளியே! எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் - ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர் பிரான்என்று" (தி.த.பா.1)

என்பது சுட்டும்.

இப்பதிகத்தின் இரண்டாவது பாடலில், தலைவி, தலைவனின் நாடு யாது? என வினவுகின்றாள். அவ்வினாவிற்குக் கிளி, தென்பாண்டி நாடே

தலைவனின் நாடு என்று விடையிறுக்கின்றது. இதனை,

"ஏதம் இலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதன் நமை ஆளுடையான் நாடு உரையாய் - காதலவர்க்கு
அன்பு ஆண்டு மீளா அருள் புரிவான் என்றும்
தென்பாண்டி நாடே தெளி" (தி.த.பா.2)

என்பதனால் அறியலாம்.

இவ்வாறு இப்பதிகத்தினுள் தலைவனின் பெயர் தேவர்பிரான் - நாடு-தென்பாண்டி நாடு - ஊர் - உத்தரகோச மங்கை - ஆறு - ஆனந்தம், மலை - அருள் - ஊர்தி - புரவி - படை - சூலம் - பறை - நாதம் - மாலை - கழுநீர் மாலை - கொடி - ஏறு எனத் தலைவனின் பத்து உறுப்புகளும் கூறப்படுகின்றன.

இப்பதிகத்தின்கண் வரும் கிளியானது, தலைவன், தலைவி இருவரோடும் பயின்று, அவ்விருவர் அருளினையும் பெற்றது என்பதனை, 'நமையாளுடையான்' (பா.எண்.2) 'நமையாளும் மாதொருபாகத்தன்' (பா.எண்.3) 'நம்சிந்தைசேர் ஐயன்' (பா.எண்.4) எனவரும் தலைமகள் கூற்றாலும், 'எம் பெருமான்' (பா.எண்.1) தீவினை நாளும் அணுகாவண்ணம் நாயேனை ஆளுடையான்' (பா.எண்.9) எனவரும் கிளியின் கூற்றுக்களாலும் அறியமுடிகின்றது.

கிளியானது, தலைவியுடன் உரையாடும்பொழுது கூட்டிற்குள் செல்லவே விரும்புகின்றது என்பதும், தலைவி அதனை வெளியில் இழுத்துத் தலைவனின் பெயர்சொல்லவேண்டுகிறாள் என்பதும்,

'இப்பாலே வந்து இயம்புக கூடுபுகல்' (தி.த.பா:6-1)

என்ற அடியால் விளங்கிடும்.

கிளியானது காட்சிக்கினியதும், வேற்றுவழிப் பயிலப்பெறாத புலன்களை உடையதுமாம் என்பதாலே தலைவி, கிளியினை

'ஏரார்இளங்கிளி,' 'செய்யவாய்ப்பைங்கிளி,' 'கிஞ்சுவாய் அஞ்சுகம்' என்றெல்லாம் விளிக்கின்றாள்.

தலைவி திருத்தெள்ளேணம் கொட்டோமோ எனல்

தலைவி, தன்னை ஆட்கொண்ட தலைவனைப் புகழ்ந்து தெள்ளேணம் கொட்டுவோம் எனல் தமிழ் அகமரபில் புதியதாம். இப்பகுதி திருவாசகத்தில் காணப்படுகின்றது. இப்பதிகத்தலைவி, தலைவன் தன்னை ஆட்கொண்ட விதத்தினை,

'பவமாயம் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி'

(தி.தெ.பா : 4-2)

எனக் குறிப்பிடுகின்றாள்.

பிறிதோர் பாடலில் தலைவன், தன்னை ஆட்கொண்ட திறம்கண்டு உலகம் அலர் கூறிச் சிரிக்கும் என்பாள் தலைவி. இதனை,

"அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிக்கொள்ளும் என்பது கேட்டு உலகமெலாம்
சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" (தி.தெ.பா.2)

என்பது உணர்த்தும்.

மற்றோர் பாடலில், அலர்கூறிய உலகத்தார் அனைவரும் போற்றும் வண்ணம் தலைவன் தன்னை ஆட்கொண்டான் என்கிறாள் தலைவி. இதனை,

"அருவந்த தேவர் அயன் திருமாற்கு அரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்
கருகுவந்து வீழக் கடைக் கணித்தென் உளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ" (தி.தெ.பா.5)

என்ற பாடல் விளக்கி நிற்கும்.

தலைவனைக் காணக் கண்போதவில்லை எனத் தலைவி புலம்பல்

தலைவன்பால் காதல்கொண்ட தலைவி, தலைவனைக் காண இயலாத நிலையில், புலம்புதல் என்பது அகத்தில் பொதுமரபே ஆகும். எனினும் தலைவனைக் காணக் கண்போதவில்லை என்றும், தன் உடல் முழுவதும் கண்ணாக இருந்திருக்கலாம் என்றும் தலைவி புலம்புவது புதிய மரபாகும். இத்தகைய தலைவியை,

"தண்ணார் புனல் தில்லைச் சிற்றம் பலம் தன்னில் மன்னிநின்ற
விண்ணா ளனைக் கண்ட நாள்விருப் பாயென் உடல்முழுதும்
கண்ணாங்கிலோ!" (தி.தெ.பா.12)

என்ற அடிகள் காட்டி நிற்கும்.

புதல்வனை வாயிலாய்க் கொண்டுவந்த தலைமகனுக்கு வாயில் மறுத்தல்

தொல்காப்பியர் கற்பில் ஊடல் தீர்க்கும் வாயில்களை,

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"[63]

என்ற நூற்பாவான் குறிப்பர். தொல்காப்பியர் குறிக்கும் ஊடல் தீர்க்கும் வாயில்களுள் புதல்வன் குறிக்கப்பெறவில்லை. எனினும் சங்ககால நூல்களுள் புதல்வன் ஊடல் தீர்க்கும் வாயிலாகக் குறிக்கப்படுகிறான். இதற்கு,

"பூங்கட் புதல்வனைப் பொய்பாராட்டி
நீங்காய் இகுவாய் நெடுங்கடை நில்லாதி
ஆங்கே அவர்வயின் சென்றி அணி சிதைப்பான்
எங்கெம் புதல்வனைத் தந்து"[64]

என்ற கலித்தொகைப் பாடல் சான்றாகும்.

இத்துறையினை இளம்பூரணர் 'அவனறிவு ஆற்ற அறியுமாகலின்' என்ற தொல்காப்பிய நூற்பாவில் 'வாயிலின் வரூஉம்'[65] என்பதினுள் வைத்து விளக்குவர்.

நான் தவறிலன் எனக்கூறிப் புதல்வன் வழி வாயில் வேண்டி வந்த தலைவனிடத்தில், ஆளுடையபிள்ளையார் திருவந்தாதித் தலைவி, மைந்தன் வாயினின்றும் பெறப்படுகின்ற முத்தத்தில், ஊரனது வாய்நீரிலே சில மகளிரது பலவாகப் பொருந்திய பொதுத்தாம்பூலம் நாறுகின்றது. எனவே தலைவன் தவறிலன் என்பது உண்மையன்று எனக் கூறி வாயில் மறுக்கின்றாள். இத்தகைய தலைவியின் செயலை, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின்

"வளைபடு தண்கடற் கொச்சை வயவன் மலர்க்கழற்கே
வளைபடு நீண்முடி வார்புன லூரன்தன் நீரிலங்கு
வளைபடு கண்ணியர் தாம்பொதுத் தாம்பலம் நாறுமிந்த
வளைபடு கிங்கிணிக் கால்மைந்தன் வாயின் மணிமுத்தமே"

(ஆ.பி.தி.பா.89)

என்ற பாடலானது விளக்கிக் காட்டும்.

தோழி கூற்றில் மரபுமாற்றங்கள்

களவில் தலைமக்களின் காதல் நிலைபெறவும், கற்பில் அவர்தம் வாழ்வியல் நெறிப்படவும் ஊன்றுகோலாய் அமைபவள் தோழி. அகமரபில் சூழல் அறிந்து பணியாற்றும் அறிவுடையோளாய்ச் செயல்படும் தோழி கூற்றில் மரபுமாற்றங்கள் அமைந்துள்ளமையைத் திருமுறைகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஏறுதழுவுவோர்க்குத் தலைவி உரியள் எனல்

தலைவன் ஏறுதழுவுதல் மூலம் தலைவியை வரைந்துகொள்ளுதல் என்பதனைத் தொல்காப்பியர் குறிக்கவில்லை. சங்க இலக்கியமான முல்லைக்கலியில் இத்தகைய மரபு காணப்படுகின்றது. முல்லை நிலத்து ஆண்மகன் ஏறு தழுவிய காட்சியினை,

"தொழுவினுள் புரிவுபுரிவு புக்க பொதுவரைத்
தெரிவுதெரிவு குத்தின ஏறு
ஏற்றின் அரிபரிவு அறுப்பன சுற்றி
எரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்கண்
உருவ மாலை போலக்
குருதிக் கோட்டொடு சுற்றிக் குடர் வலந்த ஏற்றின்முன்
ஆடிநின்று, அக்குடர் வாங்குவான் பீடுகாண்
செந்நூற் கழி ஒருவன் கைப்பற்ற அந்நூலை
முந்நூலாக் கொள்வானும் போன்ம்"[66]

என விளக்கிக் காட்டும் முல்லைக்கலி. கொல்லேற்றினைக் கண்டு அஞ்சுபவனைத் தலைவி விரும்பாள் என்பதனை,

"கொல் லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆயமகள்"[67]

"மருப்பஞ்சும் நெஞ்சினார் தோய்தற்
கெளியவோ ஆயமகள் தோள்"[68]

என்ற பாடல் அடிகள் விளக்கிடும்.

ஏறுதழுவுதல் நடக்கின்றபோது, வெற்றிபெறும் காளையர்க்கு வெகுமதியாய் வழங்க முல்லை மகளிரைக் கொண்டுவந்து வரிசையில் நிறுத்தினர் என்பதை,

"நாண் மீன் வாய் சூழ்ந்த மதிபோல் மிடைமிசைப்
பேணி நிறுத்தார் அணி"[69]

என்ற கலித்தொகை அடியானது எடுத்துக்காட்டும். இவற்றால், முல்லை நிலமகளிரை ஆடவர் ஏறு தழுவிக்கொண்டனர் என்பது தெரியவருகின்றது. இம்மரபினை ஒட்டித் திருமுறையில் பாடல்ஒன்று காணப்படுகின்றது.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத் தோழி, தலைவியானவள் ஏறுதழுவுவோர்க்கே உரியவள் என்கிறாள். இதனை,

"கூற தாக மெய்யடிமை தானெனையுடைய கொச்சையார் அதிபதி
வீறது ஆர்தமிழ் விரகன் மேதகு புகழி னானிவன் மிகுவனம்
சேறதார் தரு திரள்களைக் கனசெழு முலைக் குரியவர் சினத்து
ஏறு தானிது தழுவி னாரென இடிகொள் மாமுர சதிருமே"

(ஆ.பி.தி.க.பா.27)

என்ற பாடலானது வெளிக்காட்டும். இதனை "ஏறுகோட் கூறி வரைவு கடாதல்"[70] எனத் திருக்கோவையார் குறிக்கும்.

தோழி கையுறை ஏற்கத் தலைவியை வற்புறுத்தல்

களவுக்காலத்தில் தலைவியைச் சந்திக்கவரும் தலைவன், கையில் தழையையோ, மலரையோ வேறு ஏதேனும் பொருளையோ கொண்டு வருவான். இஃது 'கையுறை' எனப்படும். தொல்காப்பியத்தில் கையுறை பற்றியோ, அதனை ஏற்பது, மறுப்பது பற்றியோ குறிப்பில்லை. ஆனால் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றது.

"சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
அலங்குலைக் காந்தள் தீண்டித் தாதுகக்
கன்று தாய் மருளுங் குன்ற நாடன்
உடுக்குந் தழை தந்தனனே யவையாம்
உடுப்பின் யாயஞ்சுதுமே கொடுப்பிற்
கேளிடைக் கேடஞ்சுதுமே யாயிடை
வாடல கொல்லோ தாமே யவன்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை யடுக்கத்த கொயற் கருந்தழையே"[71]

என்ற நற்றிணைப் பாடல் சான்றாகும். இச்சங்கப்பாடலில் தோழி, தலைவியை தழை ஏற்குமாறு வற்புறுத்துகின்றாள்.

இச்சங்க மரபினை ஒட்டியே, திருவாரூர் மும்மணிக்கோவையின் தோழியும், தலைவியைத் தழை ஏற்குமாறு வற்புறுத்துகின்றாள். இத்தோழி, தலைவியிடத்து, நமது தினைப்புனத்தின்கண் ஆடவர் ஒருவர் வந்து, மாலையும், தழையும் தந்தார். அவற்றை நான் ஏற்றுக்கொண்டேன். நீயும் அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகின்றாள். தோழியின் இத்தகு வற்புறுத்தலை,

"வந்தார்; எதிர்சென்று நின்றேற்கு ஒளிரும்வண் தார்தழைகள்
தந்தார்; அவையொன்றும் மாற்றகில்லேன்; தக்கன் வேள்விசெற்ற
செந்தா மரைவண்ணன் தீர்த்தச் சடையன் சிராமலைவாய்க்
கொந்தார் பொழிலணி நந்தா வனத்துக் குளிர்புனத்தே"

(தி.மு.கோ.பா.12)

என்ற பாடலானது விளக்கி நிற்கும். தொல்காப்பியத்துள் கையுறை, கையுறை ஏற்றல், மறுத்தல் பற்றிய குறிப்புகளே இல்லாத பொழுது இப்பாடல் புதிய மரபினைக் காட்டுகின்றது எனலாம்.

அவயவும்எழுதல் அரிதென மறுத்தல்

களவின்கண் தோழியின்மாட்டுத் தலைவன் குறைநயந்து நிற்பான். தோழி மறுத்தவழி, நின்னால் அது இயலாது எனின், மடலூர்ந்தாவது அவளை அடைவேன் என்பான். அப்போது, தோழியானவள், தலைவியின் உருவம் உன்னால் எழுத இயலாது எனக் கூறி மறுப்பாள். தொல்காப்பியத்துள் இத்துறை காணக்கிடைக்கவில்லை. திருக்கோவையார் இதனை, 'மடற்றிறம்' என்பதனுள் வைத்து "அவயவும் எழுதல் அரிதென விலக்கல்"[72] என்று குறிப்பிடும்.

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதியில் வரும் தோழி, மடற்றிறம் கூறும் தலைவனிடத்தில், தலைவியின் குழலினை எழுதிவிட்டால் ஒருவாறு எழுதியதுபோல் ஆகும். முழுமையாகாது. அவளின் இடையினை எழுதாவிட்டால் யாரும் குறைகூறார். ஏனெனில் அதனைக் காண்டல் அரிது.

ஆனால், அவளது நடையையும், நகைப்பையும், மொழியையும் எழுதிக்கொணர்ந்தால் அது மிகப்பெரிய அதிசயமாகும் எனக் கூறி மறுக்கின்றாள். இதனை,

"இடையு மெழுதா தொழியலும்ஆம்; இன வண்டுகளின்
புடையு மெழுதினும் பூங்குழ லொக்குமப் பொன்னனையாள்
நடையும் நகையுந் தமிழா கரன்தன் புகலிநற்றேன்
அடையும் மொழியு மெழுதிடின், சால அதிசயமே" (ஆ.பி.தி.பா.35)

என்பது உணர்த்தும். இத்திருமுறைப்பாடலை,

"சிந்தாமணியும் திருக்கோவையும் எழுதிக்கொளினும்
நந்தா உரையை எழுதுதல் எவ்வாறு நவின்றருளே"[73]

என்ற திருவெங்கைக்கோவைப் பாடலுடன் ஒப்பிட்டு அறியலாம்.

தோழி முலை விலை கூறல்

தோழியால் வரைவுமுடுக்கப் பெற்ற தலைவன், அவளிடம், தலைவியின் உறவினர் திருமணத்திற்கு வேண்டும் பரிசப்பொருள் வினவ, அவளுக்கு விலையாக ஏழுலகம் எனினும் போதாது எனத் தோழி உரைத்தல் 'முலைவிலை கூறல்' எனப்படும். தொல்காப்பியத்துள் இத்துறை பற்றிய குறிப்பு இல்லை. சங்க இலக்கியத்துள் இவை தொடர்பான குறிப்புகள் காணப்படுகின்றன. இதற்கு,

"இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கண் கோசர் நியமமாயினும்
உறுமெனக் கொள்குநர் அல்லர்
நறுநுதல் அரிவை பாசிலை விலையே"[74]

என்ற அகநானூற்றுப் பாடல் சான்றாகும்.

சங்க மரபினை ஒட்டி, திருஏகம்பமுடையார் திருவந்தாதித் தலைவன், தலைவிக்கு முலைவிலையாக முத்துக்களைத் தருவதாகக் கூறுகின்றான். அதற்குத் தோழி, முத்துக்களை எங்கள் நாட்டு மூங்கில்களே தருகின்றன எனக் கூறி மறுக்கின்றாள். இதனை,

“திரியப் புரமெய்த ஏகம்பனார் திகழுங் கயிலைக்
கிரியர் குறவர் பருவத் திடுதரளம் வினையோம்
விரியச் சுருள்முத லானும் அடைந்தோம் விரைவிரைந்து
பிரியக் கதிர்முத்தின் நீர்பெற்ற தென்னங்குப் பேசுமினே”

(தி.ஏ.தி.பா.22)

என்பது உணர்த்தும்.

இப்பாடலில், தோழி மறுத்துரைப்பதன் நோக்கம், தலைவியின் பெற்றோர், தலைவனது குணநலன் கருதித் தலைவியைக் கொடுப்பரேயன்றி, அவட்கு விலையாக ஏழ்பொழிலைக் கொடுப்பதாயினும் கொள்ளார் என்பதனைக் குறிப்பதற்காகவேயாகும்.

‘முலைவிலை கூறல்’ என்னும் இத்துறையினைத் திருக்கோவையார் வரைபொருட் பிரிதல் என்பதனுள் வைத்து விளக்கும்.[75]

கூடல் இழைத்தல்

தலைவி கூற்றில் கூடல் இழைத்தல் காணப்படுவது போன்று தோழி கூற்றிலும் கூடல் இழைத்தல் காணப்படுகிறது. இச்செயல் கூடல் இழைத்தல் எனப்பட்டதற்கு இருகோடுகள் கூடுதல் காரணமாய் அமைந்திருக்கலாம். அல்லது தலைவன், தலைவி கூடுமாற்றை அறியப் பயன்படுதலால் கூடல் இழைத்தல் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதியின் தோழி கூற்றுப்பாடல், தலைவி கூடல் இழைத்தமையைக் குறிக்கின்றது.

“குழைக்கின்ற கொன்றைபொன் போல மலர, நுங்கூட்டமெலாம்
அழைக்கின்ற கொண்ட லியம்புஒன் றிலையகன் றார்வரவு
பிழைக்கின்ற துகொலென் றஞ்சியொண் சண்பைப் பிரான்புறவத்து
இழைக்கின்ற கூடல்முடிய எண்ணாத இளங்கொடிக்கே”

(ஆ.பி.தி.பா.87)

இப்பாடலில் 'இழைக்கின்ற கூடல் முடிய எண்ணாத இளங்கொடிக்கே' எனக் குறிப்பதனால், தலைவி, தலைவன் வருவானோ என அறியப் பலமுறை கூடல் இழைத்தும் அது கூடாமையின் வருந்தினாள் என்பது பெறப்படுகின்றது.

தலைவியின் பசலை கண்டு தோழியர் எள்ளல்

தலைவி, தலைவனின் பிரிவின்கண் ஆற்றாமையினால் மேனியில் பசலைதோற்றப் பெறுவாள். தலைவியின் மேனிமாற்றமும், பசலையும் கண்டு தோழி வருந்துவதாய்ப் பாடல் புனைவது தமிழ் அகமரபு. தலைவிக்குத் தோழியர் பலர் இருப்பினும் 'ஒன்றித் தோன்றும் தோழி'[76] எனத் தொல்காப்பியர் குறிப்பதுபோல் தோழி ஒருத்தி பேசுவதுபோல் பாடல் புனைவதுதான் தமிழர்தம் பாடல் சான்ற புலனெறி வழக்கம். தோழியர் பலர் பேசுவதாய்ப் பாடல் அமைக்கும் மரபு தமிழில் இல்லை.

நாவுக்கரசர் தேவாரத்தில் தலைவியின் பசலை கண்டு, தோழியர் பலர் எள்ளுவதாய்ப் பாடல் ஒன்று காணப்படுகின்றது. இப்பாடலின்கண் வரும் தோழியர், தலைவியின் உடம்பில் காணப்படும் பசலையை, இறைவனின் கொன்றை மாலையாகப் பாவித்து, இறைவன் கங்கைக்கும், உமாதேவிக்கும் தெரியாமல் இம்மாலையினை எங்கு வாங்கித் தந்தார் என்று எள்ளி நகையாடுகின்றனர்.

"மங்கை காணக் கொடார்மண மாலையை
கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை
நங்கை மீரிடை மருதரிந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தா ரிதழியே" (பா.5:15:6)

என்ற பாடல் சான்றாகும்.

தோழி பிறையைப் பழித்தல்

இரவுக்குறிக்கண் தலைவனைக் காணாது வருந்தும் தலைவியை நிலவானது வெளிப்பட்டு மேலும் வருத்துகின்றது. அதனைக் கண்ட தோழி, பிறையைப் பழிக்கின்றாள்.

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதியில் வரும் தலைவியானவள், ஞானசம்பந்தரின் மொழியினைப் பெரிதும் விரும்பினள். அது கிடைக்காத வகையில் பெரிதும் வருந்தினள். அந்நிலையில், பிறைநிலவு வெளிப்பட்டு, தன்னுடைய குளிர்ந்த கதிர்களால் தலைவியை மேலும் வருத்துகின்றது. அதனைக் கண்ட தோழி, ஏற்கெனவே வருந்துபவரை, மேலும் வருத்தல் பெருங்கொடுமையாம். நிலவானது அதனைச் செய்கின்றது என அதனை பழித்துரைக்கின்றாள். இதனைத் திருக்கோவையார் 'இருளற நிலவு வெளிப்பட வருந்தல்' எனக் குறிக்கும்.[77] இத்தகைய புதிய அகமரபினை,

"பழிக்கே தருகின்றது இன்று இப்பிறைபல் கதிர்விழுந்த
வழிக்கே திகழ்தரு செக்கரைக் கொச்சை வயவரென்னும்
மொழிக்கே விரும்பி முளரிக் கலமரு மோவியர்தம்
கிழக்கே தருமுரு வத்திவள் வாடிக் கீள்கின்றறே" (ஆ.பி.தி.பா.53)

என்ற பாடலானது காட்டுகின்றது. இவ்வந்தாதியின் கண் காணப்படும் பிறிதோர் பாடலும் இவ்வகமரபினைச் சார்ந்ததாகும். இப்பாடலில் தோழி, பிறையினைப் பார்த்து, வான்மதியே! ஏசற்ற கொம்பினை நீயும் கொடும்பகையாய்க் கொண்டு ஆடுதலாகிய குற்றத்தைச் செய்வதால்தான், நின்னை அரவமும், மேகமும் மறைத்து வருத்துகின்றன. அப்படியிருக்கத் தலைவியை வருத்துதல் ஏன் செய்கின்றாய்? என வினவுகின்றாள். இதனை,

"சூடுநற் றார்த்தமி ழாகரன் தன்பொற் சுடர்வரைத்தோள்
கூடுதற்கு ஏசற்ற கொம்பினை நீயுங்கொடும்பகை நின்று
ஆடுதற் கேயத்த னைக்குனை யேநின்னை யாடரவம்
வாடிடக் காரும் மறுவும் படுகின்ற வான்மதியே" (ஆ.பி.தி.பா.45)

என்ற பாடலால் அறியமுடிகின்றது.

தோழி விருந்திறை விலக்கல்

களவொழுக்கத்தின்கண், தலைவி இற்செறிக்கப்படுவாள் என்பதனை அறியும் தலைவன், அந்நிகழ்வு கூடாது எனக் கருதியவனாய், ஒருநாள் இரவு உங்கள் இல்லத்திற்கு விருந்தினனாய் வருவேன் எனத் தோழியிடம் கூறுவான்.

தலைவன் இவ்வாறு உரைப்பது ‘விருந்திறை விரும்பல்’ எனப்படும். ஆனால், தோழியோ, அதனை விரும்பாதவளாய் மறுத்துரைப்பாள். இஃது ‘விருத்திறை விலக்கல்’ எனப்படும். இதனுள் ‘இறை’ என்பது தலைவன் தங்க விரும்பல் எனப் பொருள்படும். இம்மரபு தொல்காப்பியத்துள் சுட்டப்படவில்லை. பின்வந்த இலக்கண நூலான நம்பியகப்பொருள்,

“..................... உலகியல்மேம்பட

விருந்து விலக்கலும் தெரிந்த பதின்மூன்று”[78]

என இலக்கணம் வகுக்கும். இவ்வாறு நம்பியகப்பொருள் இலக்கணம் வகுத்தமைக்குத் திருமுறைப் பாடல்களே காரணம் ஆகும்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் வரும் தலைவன், தோழியிடம், இங்கு விருந்தினனாய்த் தங்கி இருப்பேன் என்கிறான். அதற்குத் தோழியோ, இங்குள்ள சிவபெருமான், கயிலையைப்பெயர்த்த இராவணனின் ஆணவத்தை, தன்காலின் ஒரே விரலால் அழித்தவன். அத்தகையோன் உறையும் எம் ஊரின் இல்லத்தின்கண் நீ தங்கியிருத்தல் இயலாது. நாங்கள் எம் தமையன்மார்க்கு அஞ்சினோம் எனக்கூறி விருந்திறை விலக்குகின்றாள். இதனை,

“அரிதன் திருக்கங் குலியால் அழிந்த கயிலை யல்லிங்கு

அரிதென் றிருப்பதெம் பால்வெற்ப எம்மையர்க் கஞ்சுதுமே”

(தி.ஏ.தி.பா.18:3-4)

என்ற அடிகளால் அறியமுடிகின்றது.

இறைவனாகிய நண்பனுக்கே தன்னைக் கொடுப்பேன் எனல்

நாவுக்கரசர் தேவாரத்தின் ஐந்தாம் திருமுறையில் அமைந்துள்ள திருவலஞ்சுழிப் பதிகத்தின் பாடல் ஒன்று புதிய அகமரபினைக் காட்டுகின்றது. இப்பாடலின்கண் வரும் தலைவி, இறைவனாகிய நண்பனுக்கே தன்னைக் கொடுப்பேன் என்று கூறுவதாய்த் தோழி குறிப்பிடுகின்றாள்.

"கண் பனிக்குங் கைகூப்புங் கண்மூன்றுடை
நண்பனுக்கே எனைநான் கொடுப்பே னென்னும்
வண் பொன்னித்தென் வலஞ்சுழி மேவிய
பண் பனிப்பொனைச் செய்த பரிசிதே" (5:66:9)

இப்பாடலில் பொன்னித் தென்கரையில் உள்ள திருவலஞ்சுழி இறைவனாகிய நண்பனுக்குத் தன்னைக் கொடுக்க விழையும் தலைவியின் அகக்காதல் வெளிப்போந்து நிற்கிறது. நாயக-நாயகி நிலையில் இறைவனைத் தலைவனாய்க் காணும் அதே தலைவி, அவனைத் தோழனாகவும் கருதும் மரபு இப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வடிப்படையானது, அவனுக்குத் தொண்டராய் விளங்கும் அடியார்க்கும் பெண்டிர்தம்மை ஆளாய் ஆக்கிக் கொள்ளும் ஆன்மிக நெறியாய் வளர்ச்சிபெற்றதை,

"உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணி வோம்! ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார்"[79]

என்ற திருவெம்பாவைப் பாடல் அடிகள் உணர்த்தி நிற்கின்றன.

செவிலி கூற்றில் மரபுமாற்றங்கள்

தலைவியின் களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளிலும் இடம்பெறும் அகத்திணை மாந்தர்களுள் குறிப்பிடத்தக்கவள் செவிலி ஆவாள். இவளுடைய கூற்றுக்களிலும் புதிய அகப்பொருள் மரபுகள் காணப்படுகின்றன.

பருவம் எய்தாதவரையும் தலைவன் ஈர்ப்பான் எனல்

தலைவியின் ஆற்றாமையைக் கண்டு துன்புறும் செவிலி, தலைவன் பருவம் எய்தாதவரையும் தன்பால் ஈர்க்கும் தன்மை கொண்டவன் என்கிறாள். இதுதொல்காப்பியத்திலோ, சங்க இலக்கியத்திலோ காணப்படாத புதியமரபு ஆகும். இத்தகைய செவிலி கூற்றுப்பாடல் நாவுக்கரசர் தேவாரத்தின் ஐந்தாம் திருமுறையில் காணப்படுகின்றது.

இப்பாடலில் வரும் செவிலி, தலைவியானவள், பிரம்மனாலும், திருமாலாலும் காணஇயலாத தலைவன், தன்பால் அருள்கொண்டு ஆட்கொள்ள வேண்டும் என ஏங்கி நிற்பாள் எனக் குறிப்பாள். இவ்வருத்தத்தினைத் தன் விளையாட்டிடத்தும் கூறிநிற்பாள் என்பாள் செவிலி. இதனை,

"மண்ணை யுண்டமால் காணான் மலரடி
விண்ணை விண்டயன் காணான் வியன்முடி
மொண்ணை மாமருதாவென்றென் மொய்குழல்
பண்ணை யாயமுந் தானும் பயிலுமே" (5:15:5)

என்ற பாடலானது காட்டும். இப்பாடலில் செவிலி, விளையாட்டிடத்தில், தன்தோழியருடன் சொல்லித் தலைவி வருந்தினள் எனக் குறிப்பதால், தலைவி இன்னும் விளையாட்டினை மறவாத சிறுமியாய் இருக்கின்றாள் என்பது பெறப்படுகின்றது.

செவிலி தலைவனை எதிர்பெய்து கூறல்

தலைவனை எதிர்பெய்து கூறுதல் என்பது தோழியிடம் காணப்படும் அகமரபாம். செவிலி, தோழியின் மூலம் தலைவனைப் பற்றி, அறிவாளேயன்றி, தலைவனை எதிர்ப்பெய்து கூறுதல் என்பது தொல்காப்பியத்திலோ, சங்க இலக்கியத்திலோ இல்லாத மரபு ஆகும். இம்மரபு திருமுறைகளில் காணப்படுகின்றது. இம்மரபு 'புதியன புகுதல்' என்பதனுள் அடங்கும். பரணரின் சிவபெருமான் திருவந்தாதியில் ஒரே ஒரு பாடல் மட்டும் எதிர்பெய்து கூறலாகக் காணப்படுகின்றது.

இவ்வந்தாதிச் செவிலி, தலைவனை எதிர்பெய்து, 'நின்பால் தலைவி கொண்ட பற்றுள்ளமானது மிகுகின்றது. அதனை அவள் நெஞ்சம் நினைக்க, நினைக்க மயக்கம் கொள்கிறது. அதனால் உன்பேர் சொல்லிப் புலம்பித் திரிகின்றாள் எனக் குறிப்பிடுகின்றாள். இதனை,

"நினைமால் கொண்டோடி, நெறியான தேடி
நினைமாலே, நெஞ்சம் நினைய - நினைமால் கொண்டு
ஊர்தேடி யும்பரால் அம்பரமா காளா என்று
ஊர்தேடி என்றுரைப்பான் ஊர்" (சி.தி.பா.55)

என்பது உணர்த்தும்.

தலைவன் மேகலை கவர்ந்தான் எனல்

தலைவன் பிரிவின்கண், தலைவி வாடுங்கால், வளை இழப்பாள் எனவும் மேனியெழில் சிதைவாள் எனவும் பாடுவது அகப்பொருள் மரபாகும். சேந்தனார் காட்டும் செவிலி, தலைவன் மேகலை கவர்ந்தான் என்கிறாள். இம்மரபு தொல்காப்பியர் குறிக்காத, சங்க இலக்கியங்களில் காணப்படாத புதிய அகமரபாகும்.

"கோழி வெல் கொடியோன்
காவல் நற்சேனை யென்னைக் காப்பவன் என்
பெண்ணை மேகலை கவர்வானே" (9:3:3)

என்கிறாள் செவிலி. இப்புதிய அகமரபினை, பெரிய திருமடலில், காணமுடிகின்றது. இதற்கு,

"என்னுடைய நெஞ்சுமறிவு மின வளையும்
பொன்னியலும் மேகலையும் மாங்கொழியத்"[80]

என்ற பாடல் அடிகள் சான்றாகும்.

தலைவி மடலேறுவதாய்ச் செவிலி கூறல்

பண்டைய அகப்பொருள் மரபுகளுள் மடலேற்றம் என்பதும் ஒன்றாகும். மடலேறுதலைச் சிறப்பாகப் பாடியமையால் 'மடல்பாடிய மாதங்கீரனார்' என்றொரு புலவர் சங்க இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றார். சங்க இலக்கியங்களில் காணப்படும் மடலேறல் தொடர்பான பாடல்கள் அனைத்தும் ஆண்மகன் மடலேறல் குறித்து எழுந்தவையாகும்.

பெண்மடலேறல் என்பது சங்க இலக்கியத்துள் கூற்று நிலையில் கூட இல்லை. தொல்காப்பியரும்,

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்

பொற்புடை நெறிமை இன்மையான"[81]

எனக் குறிப்பர்.

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்

பெண்ணின் பெருந்தக்க தில்"[82]

என்ற திருக்குறளும் ஈண்டு குறிக்கத்தக்கதாம்.

இலக்கண விளக்கம்,

"அறம் பொருள் வீடென்னும் அம்முக் கூற்றின்

திறம் கடிந்து அரிவை திறத்துறும் இன்பம்

பயன் எனக் கலிவெண் பாவால் தலைவனைப்

பெயர் எதுகையில் பேசுதல் வளமடல்"[83]

என இலக்கணம் வகுக்கும். உலாமடல் என்பதனை,

"................. கனவிலவளுக்கு

ஊர்வன் எனக் கலி வெண்பா உலாமடல்"[84]

என நவநீதப் பாட்டியலும்,

"பெண் மாதரைக் கனவில் கண்டு சேர்ந்தோன்

துணிவன் மடல் என்றது உலாமடல்"[85]

எனச் சிதம்பரப் பாட்டியலும் இலக்கணம்வகுக்கும். இவையும் ஆண் மடலேற்றத்தினையே குறித்தன.

ஆண் மடலேறல் என்னும் அகமரபு பக்தி இலக்கியக் காலத்தில் பெண்மடலேறல் என்பதாய் மாற்றம் பெறுகின்றது. இம்மாற்றத்திற்கு, "ஆண்கள் மடலேறலாமேயொழியப் பெண்கள் அது செய்யலாகாது' என்று தமிழில் வரம்பு கட்டியிருப்பதைச் செய்! செய்யாதே! என்று கூறும்

அரசகட்டளைபோல் கருதக்கூடாது. அவ்வாறாயின் அரசனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டே காமம் தொழிற்பட வேண்டும். அப்படி நாம் காணவில்லை. காமமென்பது அவரவர் விருப்பத்திற்குக் கட்டுப்படும். அதில் ஈடுபட்டவர்கள் ஆணாயினும், பெண்ணாயினும் மடலூர்வதில் தவறில்லை"[86] எனக் காரணம் காட்டுவர் பெரியவாச்சான்பிள்ளை.

பெண்மடலேறல் என்பது பக்தி இலக்கியத்தில் திருமங்கை ஆழ்வாரிடமும், சேந்தனாரிடமும் காணப்படுகின்றது. இவ்விருவருள் இம்மரபினை முதலில் தோற்றுவித்தவர் யார்? என அறிதற்குக் காலஆய்வு இன்றியமையாததாகிறது.

"திருமங்கையாழ்வார் பல்லவர்களுள் சிறந்து விளங்கிய மூன்றாம் நந்திவர்மனது திருப்பணியை 'நந்தி பணிசெய்த' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பணிசெய்த என்ற இறந்த காலக் குறிப்பால் மூன்றாவது நந்திவர்மன் காலத்திற்குப் பின் இவர் இருந்திருக்க வேண்டுமென்றும், 'நீள்முடி வணங்கும் வயிரமேகன்' என்று நிகழ்காலத்தில் கூறுவதால், இவர் அவன் காலத்தவர்' என்பர் கா.சுப்பிரமணியபிள்ளை. திருவொற்றியூர்க் கல்வெட்டால் வைரமேகன் காலம் கி.பி.830 என்பது பெறப்படுகிறது. ஆதலின் திருமங்கையாழ்வார் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டென்று துணியலாம்"[87] எனத் தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் குறிப்பிடுகிறது.

திருமங்கையாழ்வாரின் காலத்தினை "கி.பி.776-881 வரை என ஆராய்ச்சியாளரை மேற்கோள் காட்டி நிறுவுவர்"[88] ந.சுப்புரெட்டியர். சேந்தனாரின் காலத்தினை "நம்பியாண்டார் நம்பிகளுக்குக் காலத்தால் முற்பட்டவர் பட்டினத்தடிகள் என்பது பதினோராந் திருமுறையில் பட்டினத்தடிகள் நூல்களுக்குப் பின் நம்பியாண்டார் நம்பிகள் பாடிய நூல்கள் முறைப்படுத்தப்பட்டிருப்பதால் இனிது விளங்கும். பட்டினத்தடிகள் பால் சேந்தனார் பணிபுரிந்தாரென்று நெடுநாட்களாக வழங்கி வருதலின்

சேந்தனாரும் நம்பியாண்டார் நம்பிக்கு முன் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவரெனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்... கண்டராதித்தர் அல்லது சுந்தரசோழர் ஆட்சிக்காலத்ததெனக் கருதப்படும் கல்வெட்டொன்றில் 'கலி விசயன் தருணேந்து சேகரனேன்' என ஒருவன் தன்பெயரைக் குறிப்பிடுகின்றான். 'தருணேந்து சேகரன்' என்ற இப்பெயர் சேந்தனார் பாடிய திருவாவடுதுறைத் திருவிசைப்பாவில் காணப்படுகிறது. எனவே, திருவிசைப்பா ஆசிரியரான சேந்தனார் முதற்கண்டராதித்த சோழர் காலத்துக்கு முற்பட்டிருந்தமை நன்கு தெளியப்படும்"[89] என்பர் க.வெள்ளைவாரணர்.

திருமங்கை ஆழ்வார் கி.பி.776 - 881 என்றும் சேந்தனார் ஒன்பதாம் நூற்றாண்டு இறுதிப்பகுதி என்றும் குறிக்கப்பெறுவதால், இருவரும் சமகாலத்தவராகவோ அல்லது திருமங்கை ஆழ்வார் சற்று காலத்தால் முந்தியவராகவோ இருந்திருக்க வாய்ப்புண்டு.

பெண் மடலேறல் தோற்றம் பெற்றமைக்குத் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமடல், சிறிய திருமடலே காரணம் என்பதற்கு, "பக்தி இலக்கியம் பெருகத் தொடங்கிய இடைக்காலத்தில், ஆடவர் மடலேறுவதாக அமைத்துப் பாடப்பெற்ற மடல் துறையினை, மகளிர் மடலேறுவதாக மாற்றிப் பாடியதோடு நில்லாமல், அகப்பொருளில் அமைந்த மடல் துறையினைச் சிற்றிலக்கியமாகவும் உருவாக்கிவிட்டார் திருமங்கையாழ்வார்"[90] என்ற கடிகாசலத்தின் கூற்று அரணாகும்.

பன்னிருபாட்டியல் என்னும் பாட்டியல் நூல் பெண் மடலேற்றத்திற்கு இலக்கணம் வகுக்கும்.

"மடன்மாப் பெண்டிர் ஏறார், ஏறுவர்
கடவுள் தலைவராய் வருங்காலே"[91]

"எந்தை உடைப்பெயர்க் கெதுகை சாற்றி
அந்தமில் இன்பமும் பொருளும் ஏத்திப்

பொருளும் அறனும் வீடும் பழித்துப்
மடல்மா ஏறுதல் மாதர்க்குரித்தே"[92]

என்னும் பன்னிரு பாட்டியல் நூற்பாக்கள் இதனை வெளிப்படுத்தும். இவ்வாறு பாட்டியல் நூல்கள் நெகிழ்ந்து கொடுத்தமைக்கு, "தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் இவற்றில் வலியுறுத்தப்பட்ட பெண்மடலேறா விதி, பன்னிரு பாட்டியலில் சற்று நெகிழ்ந்து கொடுக்கின்றது. இவ்வாறு இவ்விதி நெகிழ்ந்தமைக்கு, ஆழ்வாரின் பெரிய, சிறிய திருமடல்களே காரணம்"[93] என்பர் மு.வரதராசனார்.

மெய்யடியார்கள் இறைவனின் பெயர் சொல்லி, அவனை அடைய மேற்கொள்ளும் முயற்சிகளை, "பக்தி பெருகப் பெருக ஆற்றாமை மீதூர்ந்து அவர்களுக்கும் பிராட்டி நிலைபிறக்கின்றது. அவ்வமயம் அவர்கள் தங்களை நாயகியாகவும், எம்பெருமானை நாயகனாகவும் பாவிக்கின்றனர். உடனே அவனைத் தன் புறஉறுப்புக்களால் தழுவிக்கொள்ள விழைகின்றனர். அதுகூடாமையின், அவனை அடைதற்பொருட்டு பல்வேறு செயல்களை மேற்கொள்கின்றனர்"[94] என்பர் கிருஷ்ணவேணி அம்மையார். அத்தகைய முயற்சிகளுள் ஒன்றே பெண்மடலேறல் என்பதாகும்.

திருமங்கை ஆழ்வாரின் மடல் தலைவி, மடலேறும்போது, மடலேறல் தமிழ்மரபு இன்மையின், பிறர் தன்னை இகழ்வர் என்றே எண்ணுகின்றாள். இருப்பினும் வேறு வழிஇல்லை என்பதனாலே மடல் ஏறுவதாய்க் கூறுகின்றாள். இதனை,

"காரார் கடல்வண்ணன் பின்போன நெஞ்சமும்
வாராதே என்னை மறந்தது தான் வல்வினையேன்
ஊரார் உகப்பதேயாயினேன் - மற்றெனக் கிங்கு
ஆராய்வார் இல்லை. அழல்வாய் மெழுகு போல்
நீராய் உருகுமென் ஆவி, நெடுங் கண்கள்
ஊரார் உறங்கினும் தாமுறங்கா, உத்தமன் றன்
பேராயினவே பிதற்றுவன் பின்னையும்

காரார் கடல் போலும் காமத்த ராயினார்
ஆரே பொல்லாமை அறிவார்
பேராயிரம் பிதற்றிப் பெருந்தெருவே
ஊரார் இகழிலும் ஊராதொழியேன் நான்
வாரார் பூம் பெண் மடல்"[95]

என்ற அடிகள் உணர்த்தி நிற்கும்.

பெரிய திருமடல் தலைவி, மடல் ஏறல் என்பதனைத் தமிழ்மரபு ஏற்காது எனத் தெரிந்து வடநெறியே வேண்டுகின்றாள் என்பதற்கு,

"........................ மானோக்கின்
மன்னும் வழிமுறையே நிற்றும் மானோக்கின்
அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவதுண்டு. அதனையாம் தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம் வேண்டாதார்
தென்னம் பொதியில் செழுஞ்சந்தனக் குழம்பின்
அன்னதோர் தன்மை அறியாதார்"[96]

என்ற அடிகள் சான்றாகும்.

பெரிய திருமடல், சிறிய திருமடல் தலைவியரைப் போன்றே திருமுறைத் தலைவியும் மடலேறத் துணிகின்றாள்.

ஒன்பதாம் திருமுறையில் சேந்தனாரின் திருஇடைக்கழிப்பதிகத்தில் வரும் செவிலித்தாய், ஆறுமுகனாகிய முருகனை எண்ணி அவன்பால் காமுற்ற தன்மகள், மடல்தொடங்கினாள் என்கிறாள்.

"வகைமிகு மசுரர் மாள வந்துழிஞை
வானமர் விளைத்தாளாளன்
புகைமிகு மனலிற் பிரம் பொடி படுத்த
பொன்மலை வில்லி தன் புதல்வன்

திசைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியிற்

றிருக்குரா நிழற் கீழ் நின்ற

தொகைமிகு நாமத்தவன் றிருவடிக்கென்

றுடியிடை மடற் றொடங்கினளே" *(9:3:8)*

தலைவி முருகன் மேல் கொண்ட காதலால் மடலேறத் தொடங்கியும், அவனின் அருள் அவளுக்குக் கிட்டவில்லை என்பதனை,

"தொடங்கினள் மடலென்றணி முடித் தொங்கற்

புறவித ழாகிலு மருளான்" *(9:3:9:1-2)*

என்ற அடுத்த பாடலின் அடியால் விளக்குவாள் செவிலி.

திருமங்கையாழ்வாரின் தலைவி, மடலேறப்போகிறேன் என்கிறாளே யொழிய மடல் ஏறியதாய்ச் செய்தி இல்லை. சேந்தனாரின் தலைவியோ, மடல் ஏறியும் தலைவனைப் பெறாது தவிக்கின்றாள். ஆழ்வார் பெண்மடலேறல் என்ற துறையினைத் தொடங்க, சேந்தனார் மடலேறினாள் என நிறைவுசெய்கிறார். இது சேந்தனார் கால அகப்பொருள் வளர்ச்சி ஆகும். பெண் மடலேற்றத்தினைத் தொடங்கிவைத்தவர் திருமங்கையாழ்வாரே என்பதற்கு இஃது அகச்சான்றாகும்.

இவ்வாறு மகளிர் மடலேறல் என்பதனைச் சான்றோர் ஏற்றுக்கொண்டனர் என்பதனை, "இவ்வாறு தலைவனைத் தேடியடையத் துணியும் பெண்ணினை எவரும் பழித்திலர் - பெரியவர்களும் அவர்களது காமத்தினைக் கொண்டாடி உள்ளனர்"[97] என விளக்குவர் அண்ணங்கராச் சாரியார்.

செவிலி சுடரோடு இரத்தல்

தலைவி உடன்போயவழி, அதனை அறியும் செவிலி, சுரத்தில் காணப்படும் கதிரவனை, வெப்பமான கதிர்களை வீசாது, குளிர்ந்த கதிர்களை வீசி, தலைவியின் முகமானது வாட்டமுறாமல் காத்தல் வேண்டும் என வேண்டுவது, 'சுடரோடு

இரத்தல்' என்னும் அகத்துறையாகும். திருக்கோவையார் இதனை, உடன்போக்கில் வைத்து விளக்கும்.[98]

இலக்கண விளக்கம் இத்துறையினை, 'சுரம் தணிவித்தல்'[99] என கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரியாய் உணர்த்தும்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் வரும் செவிலி, கதிரவனிடத்தில், என்மகள் உடன்போக்கினை மேற்கொண்டனள். ஞானசம்பந்தரின் திருவடியைப் போன்று, நின்னை வணங்குவேன். நீ உன் தழலினைத் தவிர்த்து குளிர்ச்சியை வழங்குவாய் என்று வேண்டுகின்றாள். இதனை,

"குழலியல் இன்கவி ஞானசம் பந்தன் குரைகழல்போல்
கழலியல் பாதம் பணிந்தே னுனையுங் கதிரவனே!
தழலியள் வெம்மை தணித்தருள்நீ; தணியாதவெம்மை
அழலியள் கான்நடந் தாள்வினை யேன்பெற்ற வாரணங்கே"

(ஆ.பி.தி.பா.38)

என்பது சுட்டும்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின் செவிலியும் சுரம் தணிவிக்கின்றாள். தலைவி உடன்போய சுரத்தின் பரலைக்கற்கள் தலைவியின் பாதத்தினைத் துன்புறுத்தும். அதனைப் போன்று, கதிரவனும் வெம்மை செய்யவேண்டாம் என்று வேண்டுகின்றாள். இதனை

"இலவவெங் கான்உனை யல்லால் தொழேஞ் சரண் ஏகம்பரனார்
நிலவுஞ் சுடரொளி வெய்யவ னேதன் மலர்மிதித்துச்
செலவும் பருக்கை குளிரத் தளிரடி செல்சுரத்துன்
உலவுங் கதிர்தணி வித்தருள் செய்யுன் உறுதுணைக்கே"

(தி.ஏ.தி.பா.72)

என்பது உணர்த்தும்.

செவிலி சுவடு கண்டு இரங்கல்

மகட்போக்கிய செவிலி அவளைத் தேடிச் செல்லும் சுரத்திடை, தலைவியின் கால் சுவடுகளைக் கண்டு, வருந்திக்கூறல் 'சுவடு கண்டு இரங்கல்' எனப்படும். திருக்கோவையார் இதனை 'உடன்போக்கு' என்னும் தொகுதிக்கண் வைத்து உரைக்கும்.[100]

திருஏகம்பமுடையார் திருவந்தாதியின்கண் வரும் செவிலி இத்துறையினைச் சேர்ந்தவள் ஆகின்றாள். இச்செவிலி, செம்பஞ்சுக்குழம்பினை உடைய தன்னுடைய மகள் உடன்போனாள் எனவருந்தி, அவளின் காலடித் தடத்தினைச் சுரத்தின்கண் தேடிக் கண்டறிந்தனள். தலைவியின் அக்காலடிச்சுவடுகளுக்கு முன்னே காணப்படுவது, தன்மகளை உடன் அழைத்துச் சென்ற காளையின் காலடிச் சுவடுகள் என்பதனையும் அறிந்தாள். எனவே வலிமையுடைய ஆண்மகனுடன் சென்றமையாலே, தன்மகளுக்கு இக்கொடிய வழி, துன்பமாய்த் தோன்றவில்லைபோலும் என எண்ணிப் புலம்புகின்றாள். இதனை,

"நெஞ்சார் தரவின்பம் செய்கழல் ஏகம்பர் கச்சியன்னாள்
பஞ்சார் அடிவைத்த பாங்கிவை ஆங்கவள் பெற்றெடுத்த
வெஞ்சார் வொழியத் தன்பின்வர முன்செல் வெடுவெடென்ற
அஞ்சா அடுதிற் காளைதன் போக்கிவை அந்தத்திலே"

(தி.ஏ.தி.பா.71)

என்பது விளக்கும்.

செவிலி குரவொடு வருந்தல்

மகட்போக்கிய செவிலி, இடைச்சுரத்தின்கண், குராமரத்தோடு பேசுவதுபோல், தலைவியை நினைத்துப் புலம்பல் 'குரவொடு வருந்தல்' எனப்படும். தொல்காப்பியர் இதனைச் சுட்டவில்லை. எனினும், சங்க இலக்கியங்களில் இத்துறை பற்றிய பாடல்கள் காணப்படுகின்றன. இதற்கு

"தானா றாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
வீன்றாய் நீ பாவையிருங் குரவே - யீன்றாண்
மொழி காட்டா யாயினும் முள்ளெயிற்றாள் சென்ற
வழி காட்ட யீதென்று வந்து"[101]

என்ற பாடல் சான்றாகும்.

பிற்கால இலக்கண நூலான நம்பியகப்பொருள் 'குரவொடு புலம்பல்' என்னும் அகத்துறையினை, கற்பொடு புணர்ந்த கவ்வையில் 'செவிலி பின்தேடிச் செல்லல்'[102] என்பதனுள் வைத்து விரித்துரைக்கும்.

திருவாரூர்மும்மணிக் கோவையில் வரும் செவிலி கூற்றுப்பாடல் இத்துறையினைச் சேர்ந்ததாகும். இப்பாடலில் செவிலி, நலத்தால் தகுதிப்பட்ட அலையும் நீரையுடைய, திருவாரூரில் விரும்பி உறைகின்ற அமுதமாகியவனும், மான்பொருந்திய கையைஉடையவனும், கண்பொருந்திய நெற்றியைஉடையவனுமாகிய, எம்தந்தை கொன்றைமாலையொடு ஒன்றாய் அணிதற்குரிய மலர்களையுடைய குராமரமே! போரில் இறந்த வீரர்களின் பெயர்களையும், அவர்கள் வீரச்செயல்களையும் எழுதி நடப்பட்ட கற்களும், பழையனவாகிய குடில்களும் உடைய சிற்றூர்களும், பரற்கற்கள் நிறைந்த கருவிகளுமல்லது, வானின்று பெய்கின்ற மழையினை ஒரு காலத்தும் கண்டிராத மிக்க வெயிலை உடையது சுரம். அச்சுரத்தின்வழியில், என்மகள் செல்லும்போது, மான்கூட்டம் அவளது பார்வைக்குத் தோற்றுப்போன பகைமையால் மனம் வெதும்பி, தடுக்காது போகட்டும். அவளது கொங்கைகளுக்குத் தோற்றுப்போன கோங்க மரங்கள் அவளை விலக்காது இருக்கட்டும். அவளது மெல்லிய தோள்களுக்குத்தோற்றுப்போன மூங்கில்கள் விலக்காது இருக்கட்டும். சுரத்தின்கண் ஆயிரம் பாவைகளைப் பெற்று வளர்க்கின்ற நீ ஏன் விலக்காத குற்றத்திற்கு ஆளானை! எனக் குராமரத்தினைப் பார்த்துக் கேட்கின்றாள்.

குராமலர் பாவையினைப் போன்று தோன்றுவதாலேயே, 'பாவையைப் பெற்று வளர்க்கின்ற நீ' என்று குறிக்கின்றாள் செவிலி. குராமலர் விரும்பி அணியும் தகுதியை உடையது என்பதனாலே 'எந்தை அணிந்த கண்ணிக்கொங்கலர் குரவே' எனக் குறிக்கின்றாள் செவிலி. இதனை,

"பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும் மூதூர் நத்தமும்
பரல்முரம் பதரும் அல்லது படுமழை
வரல்முறை அறியா வல்வெயிற் கானத்துத்
தேன்இவர் கோதை செல்ல மானினம்
அம்சில் ஓதி நோக்கிற்கு அழிந்து
நெஞ்செரி வுடைமையின் விலக்காது விடுக;
கொங்கைக்(கு) அழிந்து குன்றிடை அடைந்த
கொங்கிவர் கோங்கமுஞ் செலவுடன் படுக;
மென்றோட்(கு) உடைந்து வெயில் நிலை நின்ற
குன்ற வேய்களும் கூற்றடைந் தொழிக;
மாயிருங் கடற்றிடை வைகல் ஆயிரம்
பாவையை வளர்ப்போய் நீ நனி பாவையை
விலக்காது பிழைத்தனை மாதோ" (தி.மு.கோ.பா.16)

என்பது உணர்த்தும்.

இக்கோவையின்கண் அமைந்த பிறிதோர் பாடலில், குராமலர் மாலையினை அணிந்த தலைவி, தலைவனுடன் சென்ற சுரமானது, சிவபெருமான் மன்மதனை அழிக்க நெற்றிக்கண்ணைத் திறந்தபொழுது ஏற்பட்ட தீயினும் கொடிய வெம்மையினை உடையது. அவ்வழிக்கண் சென்றனளே தன்மகள் எனச் செவிலி குரவொடு வருந்துகின்றாள். இதனை,

"குரவுங் கமழ்கோதை கோதைவே லோன்பின்
விரவுங் கடுங்கானம் வெவ்வாய் - அரவம்
சடைக்கணிந்த சங்கரன் தார்மதனன் றன்னைக்
கடைக் கணித்த தீயிற் கடிது" (தி.மு.கோ.பா.17)

என்பதனால் அறியமுடிகின்றது.

செவிலி புணர்ந்துடன் வருவோரை வினவல்

மகட்போக்கிய தாய் இடைச்சுரத்தின்கண், ஒன்றிணைந்துவரும் தலைமக்கள் இருவரைக் கண்டு வினவல் 'புணர்ந்துடன் வருவோரை வினவல்' எனப்படும். இது தொல்காப்பியர் குறிக்கும் 'செவிலி கண்டோரை வினவல்' என்பதன் மரபு மாற்றமே ஆகும்.

திணைமாலை நூற்றைம்பதின் பாடல் ஒன்று இம்மரபினைச் சார்ந்ததாகும். இப்பாடலில் செவிலி புணர்ந்துடன் வருவோரைப் பார்த்து தலைவனையும் தலைவனுடன் உடன்சென்ற தன் மகளையும் கண்டீரோ? என வினவுகின்றாள். அதற்குத் தலைவன், வெஞ்சுடர்போன்ற காளையினை நான் கண்டேன். என் மனைவி நின்மகளைக் கண்டாளாம் என உரைக்கின்றான். தலைவனின் ஒழுக்கமேம்பாட்டினை விளக்கும் பாடல்,

"நண்ணிநீர் சென்மின் நமரவர் ஆய்வேல்
எண்ணிய எண்ணம் எளிதரோ - எண்ணிய
வெஞ்சுடரன்னா னையான் கண்டேன் கண்டாளம்
தன் சுடரன்னாளைத் தான்"[103]

என்பதாம். இத்தகைய மரபானது திருமுறைக் காலத்தில் தனித்துறையாக வளர்ச்சி பெறுகின்றது.

இத்துறையினைப் 'புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல்' எனத் திருக்கோவையார் குறிக்கும்.[104]

திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் இத்தகைய பாடல் ஒன்று காணப்படுகின்றது. செவிலி, புணர்ந்துடன் வருவோரைப் பார்த்து, 'உங்களைப் போன்று என்மகள் ஒருவளும் அவளுடைய காதலன் ஒருவனும் முன்னே சென்றனரோ? கண்டீரோ?' என வினவுகின்றாள். இதற்கு அந்த ஆடவனோ, 'அன்னையே! ஏகம்பரனார் ஏறிச் செல்லும் காளையைப் போன்ற ஆண்மகனை நான் பார்த்தேன். அவன் அருகில் சென்ற கன்னியை நான் கண்டேனில்லை. அவளைப் பற்றி அறியவேண்டுமாயின், என் காதலியைக் கேளுங்கள்' என்கிறான். எதிரில்வந்த இருவருள் ஆண்மகனை மட்டுமே தான் கண்டதாய்க் கூறும் திருமுறைத் தலைவனின் பேராண்மையை விளக்கும் பாடல்,

"துணையொத்த கோவையும் போலெழில் பேதையும் தோன்றலுமுன்
இணையொத்த கொங்கையொ டேயொத்த காதலொடேகினரே
அணையொத்த ஏறொத்த காளையைக் கண்டனம் மற்றவரேல்
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவள் தன்னொடும் பேசுமினே"

(தி.ஏ.தி.பா.73)

என்பதாம். இப்பாடலில் தன்மகள், அவளின் காதலன் இருவரும் இணையொத்தவர்களாய் இருந்ததைச் செவிலி, தன் பெண்ணின் இரு கொங்கைகளும் இணையொத்து இருப்பது போல் இருந்தது என உவமைகாட்டி விளக்குகின்றாள்.

செவிலி புறவொடு புலத்தல்

மகட்போக்கிய செவிலி, இடைச்சுரத்தில் புறாவிடம் 'நீ என்மகளின் செலவைத் தடுத்தாய் இல்லை' எனக் கூறி வருந்துதல் 'புறவொடு புலத்தல்' எனப்படும். இத்துறையினைத் திருக்கோவையார் உடன்போக்கின்கண் வைத்து விளக்கும்.[105]

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவையில் இத்துறையின்கண் அமைந்த பாடலொன்று காணப்படுகின்றது.

இப்பாடலில் வரும் செவிலி, மென்மைத் தன்மைகொண்ட தன்மகள், 'மான் குளம்பின் நாற்றம் வீசும் கொடிய பாலைவழிச் செல்வதைக் கண்டும் தடுக்காது இருந்தனை! எனவே நீ எனக்கு உறவில்லை' எனப் புறாவிடம் கூறி நிற்கின்றாள். இதனை,

"ஞானசம் பந்தனை நயவார் கிளைபோல்
வினையே னிருக்கும் மனை பிரியாத
வஞ்சி மருங்கு லஞ்சொற் கிள்ளை
ஏதிலன் பின்செல விலக்கா தொழிந்தனை
ஆதலின் புறவே யுறவலை நீயே!" (ஆ.பி.தி.மு.பா.22:12-15)

என்ற பாடல் விளக்கும். புறாவானது தன் மகளைத் தடுக்காமைக்குக் காரணமும் கூறுகின்றாள் செவிலி.

"ஆடு மரவி னகடு தீயப்
பாடு தகையின் பஞ்சுரங் கேட்டுக்
கள்ளியங் கவட்டிடைப் பள்ளி கொள்ளும்
பொறிவரிப் புறவே" (ஆ.பி.தி.பா.22:4-7)

என்கிறாள் செவிலி. இதன்வழி, புறாவானது, பஞ்சுரம் என்னும் பாலைப்பண்ணின் இசையைக் கேட்டுத் துயின்றமையாலே தலைவியின் செலவினைத் தடுக்கவில்லை என்பதனை உணரமுடிகின்றது.

கண்டார் கூற்றில் புதிய அகப்பொருள் மரபுகள்

தலைவன், தலைவி உடன்போக்குச் சென்றவழி, அவர்களை இடைச்சுரத்தில் கண்டு பேசுவோராகிய அகமாந்தரே கண்டோர் ஆவர். இச்சூழல் தவிர்த்த ஏனைய ஒழுகலாறுகளில் இடம்பெறுபவரைக் கண்டோர் எனல் பொருந்தாது. கண்டார் எனலே பொருத்தமுடையது [106] என ஆய்வுகளின் வழி நிறுவுவார் சு.இராசாராம். திருமுறைகளில் இத்தகைய கண்டார் கூற்றுகளில் புதிய அகப்பொருள் மரபுகள் காணப்படுகின்றன.

கண்டார் ஐயுற்றுக் கூறல்

பொன்வண்ணத்தந்தாதியில் வரும் கண்டார் தலைவன் உலாவின்போது அவனைக் காணும் தலைவியைக் காண்கின்றனர். அப்பொழுது தலைவியைக் குறித்து ஐயுறுகின்றனர். தலைவியின் முகமானது அழகியதாய் இருப்பதால், அது மன்மதன் உறையும் இல்லமாகிறது. அவளது தோள்கள் மன்மதன் இல்லத்தின்கண் தொங்கும் தோரணங்களாகின்றன. அவளது அகன்ற அல்குல் மன்மதன் ஊர்ந்துவரும் தேராகின்றது. தலைவியின் மார்புகளோ மன்மதனை வரவேற்கும் பூர்ண கும்பங்களாகின்றன. இத்தகைய சிறப்பினை உடைய தலைவி தலைவனை வணங்குகின்றாள். இவள் மன்மதனின் படையானபடியால், சிவனால் மன்மதன் எரிக்கப்பட்டதனை மறந்து வரவேற்கின்றாளா? அல்லது பகையின் காரணமாக வரவேற்பதுபோல் நடிக்கின்றாளா? என ஐயுறுகின்றனர். கண்டார் இவ்வாறு ஐயுறுதல் புதிய அக இலக்கிய மரபாகும். இதனை,

“ஆரணங் கின்முகம் ஐங்கணை யானகம்; அவ்வகத்தில்
தோரணந் தோள்அவன் தேரகல் அல்குல்; தொன்மைக் கண்வந்த
பூரண கும்பம் முலையிவை காணப் புரிசடையெம்
காரணன் தாள்தொழும்; அன்போ, பகையோ? கருதியதே”

(பொ.வ.அ.பா.55)

என்பது உணர்த்தும்.

பெற்றோரை விலக்கித் தலைவனைக் காணும் தலைவி

தலைவன் உலாவருகின்றான். அதனைக் கேள்வியுற்ற தலைவி, வேட்கை மீதூர்ந்தவளாய் அவனைக் காணவருகின்றாள். அச்செயலைக் கண்ட பெற்றோர் அவளைத் தடுக்கின்றனர். அவர்களிடம் இருந்து தப்பி, தலைவி தலைவனைக் கண்டாள் என்பதனைக் கண்ட, கண்டார் கூறியதாய்,

“பெற்றோர் பிடிக்கப் பிழைத்துச் செவிலியர்கள்
சுற்றோட ஓடித் தொழா நிற்கும்; - ஒற்றைக் கைம்

மாமறுகச் சீறியசிற் றம்பலத்தான் மான்தேர்போம்

கோமறுகில் பேதை குழாம்" (கோ.நா.மா.பா.21)

என்ற கோயில்நான்மணிப்பாடல் அமையும். இப்பாடலின்வழி காந்தத்தை நோக்கிச் செல்லும் இரும்புபோல், உயிர்கள் இறைவனை நோக்கிச் செல்வதே இயல்பு என்பதும், அதனை, செயற்கையான பாசத்தளைகள் தடுக்க முயல்கின்றன என்பதும் பெறப்படும்.

தலைவியின் வளையல்களைத் தேடும் செவிலி

தலைவன் பிரிவின்கண் ஏற்படும் துயரால் தலைவி வருந்துகின்றாள். ஆதலின், அவளது உடலானது மெலிந்து வளைகள் கழன்று தெருவில் வீழ்ந்துகிடக்கின்றன. அவற்றைப் பிறர் அறியின் அலராகும் எனக் கருதி, செவிலி வளையல்களைத் தேடிச் சேர்க்கின்றாள். இதனைக் கண்ட கண்டார்,

"நெறிபல வார்குழ லார்மெலி வுற்ற நெடுந்தெருவில்

செறி பல வெள்வளை போயின தாயர்கள் தேடுவரே"

(தி.ஏ.தி.பா.53:3-4)

எனக் குறிப்பர். தலைவி வளை இழந்தாள் என்பது அகமரபு. அவ்வளையல்களைச் செவிலி தேடிச் சேர்த்தாள் என்பது புதிய அகமரபாகும்.

ஏறுதழுவிக்கோடல் குறித்துக் கண்டார் கூறல்

முல்லை நிலத்துப் பெண்ணைப் பெறுதற்கு, ஏறுதழுவுதல் நடந்ததனை முல்லைக்கலி குறிக்கும். எனினும் இம்மரபினைத் தொல்காப்பியர் குறிக்கவில்லை. திருஏகம்பமுடையார் திருவந்தாதியின் கண்டார் கூற்றுப்பாடல் ஏறுதழுவலைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. முல்லை நிலத்து ஆடவர் ஏறுதழுவுதலால் ஏற்படும் கொடுமையிலும், மகளிர்மேல் கொண்ட காதலால் ஏறுதழுவுவர் என்பதனை,

"விடைபாய் கொடுமையென் ணாதுமே லாங்கன்னி வேல் கருங்கண்
கடைபாய் மனத்திளங் காளையர் புல்கொலி கம்பர்கச்சி
மடைபாய் வயலிள முல்லையின் மான்கன்றொ டான்கன்றினம்
கடைபாய் தொறும்பதி மன்றில் கடல்போற் கலந்தெழுமே"

(தி.ஏ.தி.பா.92)

என்ற பாடலானது விளக்கி நிற்கும்.

தலைவன் குறித்த பருவம் வந்ததுகண்டு கண்டார் கூறல்

திருமுறையில், கற்பில் பொருள் ஈட்டும் முயற்சிக்காய்ப் பிரிந்து சென்ற தலைவன், குறித்த பருவம் வந்தது கண்டு கண்டார் கூறுவதாய்ப் பாடல் ஒன்று அமைந்தள்ளது. இப்பாடல் திருவாரூர் மும்மணிக் கோவையில் காணப்படுகின்றது. இப்பாடலில் கண்டார், கார்காலமேகமானது மின்னலொடும் இடியோடும் வந்தது. தலைவன் கூறியபடியே அவன்தேர் வரும் ஆரவாரம் தெருவின்கண் எழுந்தது. இனி மெலிவால் கழல்வதாய் இருந்த தலைவியின் கைவளையல்கள் இனிப் பூரிப்பால் நெரிவனவாகும் என்று உரைக்கின்றனர். கண்டாரின் இக்கூற்றினை,

"காரும் முழக் கொடு மின்னொடு வந்தது; - காதலர்தம்
தேரும் தெருவுஞ் சிலம்பப் புகுந்தது; சில்வளைகள்
சோரும் சிலபல நெரித்தன; துன்னருநஞ்சு
ஆரும் மிடற்றண்ணல் ஆரூரன்ஐய அணங்கினுக்கே"

(தி.மு.கோ.பா.6)

என்ற பாடலானது புலப்படுத்தி நிற்கும்.

தொகுப்புரை

- தொல்காப்பியரும் உரையாசிரியர்களும் நன்னூலாரும் மரபு என்பது தொன்றுதொட்டுவருவது என வரையறுத்துள்ளனர்.
- தமிழில் ‘மரபு’ என்னும் சொல்லாட்சியானது முறைமை, நல்லொழுக்கம், பெருமை தகுதி, இயல்பு, பண்பு, திறல், சுவை போன்ற பல்வேறு பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளமை அறியமுடிகின்றது.
- தொல்காப்பியர் காலத்துக்குப் பின்தோன்றிய மரபு மாற்றங்களும், சங்க காலம் முதல் தோன்றிய மரபுமாற்றங்களும், சங்ககாலத்திற்குப் பின் தோன்றிய மரபுமாற்றங்களும் திருமுறைகளில் காணக் கிடைக்கின்றன.
- திருமுறைகள் மக்கள் கூடிப்பாடுவதற்கான இசைப்பாடல்களாகவும், அக உணர்வின்வழி, ஆன்மாஈடேற்றத்தினை வெளிப்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டு அமைந்தமையால் இவற்றுள் மரபு மாற்றம் என்பது தவிர்க்க இயலாததாய் அமைந்தது என்பது பெறப்படுகிறது.
- திருமுறைகள் தொல்காப்பியரால் அகப்பாடலுக்கு உரியதாய்ச் சுட்டப்பட்ட கலி, பரிபாடல் என்ற பாடல் வகையால் அமையாமல், வெண்பா, ஆசிரியம், கட்டளைக்கலித்துறை, தாண்டக விருத்தம், வஞ்சி விருத்தம் ஆகிய பாடல் வகைகளில் அமைந்துள்ளன. இவை யாப்புமுறையில் ஏற்பட்ட மாற்றம் ஆகும்.
- திருமுறை அகப்பாடல்களின் தலைவன் இறைவன் என்பதனாலும், அவன் நிரந்தரமானவன் என்றமையாலும், அகப்பாடல்களில் தலைமகன் பெயர்சுட்டுதல் கூடாது என்ற தொல்காப்பிய அகமரபு மாற்றம்பெற்று பெயர் சுட்டப்படுகிறது.
- தொல்காப்பியர் குறிக்கும் தலைமகன்மாட்டே ஐயம் தோன்றும் என்ற அகமரபு, திருமுறைகளில் மாற்றம்பெற்று, தலைவியும், தலைவனைக் கண்டு ஐயுறும் புதிய போக்காய் மலர்கிறது.

- தலைவி கூற்றின்கண் புதிய அகமரபுகளாக, பவனிகண்டு அழுங்கல், தாமம் பெறாது தளர்வுற்று உரைத்தல், கூடல் இழைத்தல், தசாங்கம், தெள்ளேணம் கொட்டல், தலைவன் ஊர்தியை எதிர்பெய்து கூறல், தலைவன் அணிந்துவரும் நிலவொளியும், மணிவொலியும் தன்னை வருத்துவதாய்க் கூறல் ஆகியவை அமைந்துள்ளன.
- தொல்காப்பியர் குறிக்காத, புதல்வனை வாயிலாகக் கொண்டுவந்த தலைவனுக்கு தலைவி வாயில் மறுத்தல் என்ற புதிய அகமரபு சங்க இலக்கியத்துள் காணப்படுகின்றது. இத்தகைய மரபினைத் திருமுறைகளும் அடையாளம் காட்டுகின்றன. இதன்வழி, இப்புதிய மரபு, தமிழ் இலக்கியப் பரப்பில் பெற்றிருந்த ஆளுமையை அறியமுடிகிறது.
- திருமுறைத் தோழி கூற்றுப் பாடல்களில் தலைவன் ஏறுதழுவித் தலைவியைப் பெறுதல், கையுறை ஏற்கத் தலைவியை வற்புறுத்தல், அவயம் எழுதல் அரிதென மறுத்தல், முலைவிலைகூறுதல், கூடல் இழைத்தல், விருந்திறை விலக்கல், தோழியர் எள்ளல் ஆகிய புதிய அகமரபுகள் காணப்படுகின்றன.
- திருமுறைத் தலைவன் கூற்றுப் பாடல்களில் அடலெடுத்து உரைத்தல், பதிபரிசு உரைத்தல், முகிலொடு உரைத்தல் ஆகிய புதிய அகமரபுகள் காணப்படுகின்றன.
- திருமுறையில் இடம்பெறும் செவிலி கூற்றுப் பாடல்கள், பருவம் எய்தாத வரையும் தலைவன் ஈர்ப்பான் எனல், செவிலி தலைவனை எதிர்பெய்து கூறல், தலைவன் மேகலை கவர்ந்தான் எனல், தலைவி மடலேறுவதாய்க் கூறல், செவிலி சுடரோடு இரத்தல், சுவடுகண்டு இரங்கல், புறவொடுபுலத்தல், குரவொடு வருந்தல், புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல் ஆகிய புதிய அக மரபுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

♦ தொல்காப்பியத்தில் காணப்பெறாத 'கண்டார்' என்ற புதிய அகமாந்தர் திருமுறைப் பாடல்களில் காணப்படுகின்றனர். இவர்கள் தம் கூற்றில், கண்டார் ஐயுற்றுக் கூறல், பெற்றோரை விலக்கித் தலைவனைக் காணும் தலைவியைக் கண்டு கண்டார் கூறல், தலைவியின் வளையல்களைத் தேடும் செவிலியைப் பார்த்துக் கண்டார் கூறல், தலைவியின் வளையல்களைத் தேடும் செவிலியைப் பார்த்துக் கண்டார் கூறல், தலைவன் குறித்த பருவம் வந்தது கண்டு கண்டார் கூறல் ஆகிய புதிய அகமரபுகள் காணப்படுகின்றன.

சான்றெண் விளக்கம்

1. RM.Periakaruppan, Tradition and Talent in Cankam Poetry, P.35
2. கு.சுந்தரமூர்த்தி, (ப.ஆ.), தொல்.எழுத்து. இளம்பூரணர் உரை., ப.7
3. இராம.கோவிந்தப்பிள்ளை, (ப.ஆ), மேலது, நச்சர் உரை, ப.9
4. தொல்.பொருள்.செய்யுளியல் பேராசிரியர் உரை., ப.114
5. மேலது, மரபியல் - பேராசிரியர் உரை., ப.433
6. நன்னூல், நூ.388
7. தமிழகராதி, தொகுதி 4, ப.3086
8. எஸ்.வையாபுரிப்பிள்ளை, தமிழர் பண்பாடு, ப.76
9. நற்றிணை, பா.231
10. அ.நாராயணசாமி ஐயர் (உ.ஆ.), நற்றிணைநானூறு, ப.264
11. குறுந்தொகை, பா.213
12. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ.), குறுந்தொகை, ப.452
13. அகநானூறு, பா.22
14. வெ.பெரி.பழ.மு.காசிவிசுவநாதன் செட்டியார் (வெ.ஆ.), அகநானூறு களிற்றியானை நிரை, ப.60
15. நற்றிணை, பா.255
16. அ.நாராயணசாமி ஐயர் (உ.ஆ.), நற்றிணைநானூறு, ப.288
17. பரிபாடல், பா.9
18. பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.), பரிபாடல், ப.151
19. அகநானூறு, பா.265
20. வெ.பெரி.பழ.மு.காசிவிசுவநாதன் செட்டியார் (வெ.ஆ.), அகநானூறு மணிமிடைபவளம், ப.302
21. புறநானூறு, பா.390
22. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), புறநானூறு இரண்டாம் பகுதி, ப.425

23. அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, ப.21

24. எஸ்.வையாபுரிப்பிள்ளை, இலக்கியச்சிந்தனைகள், ப.79

25. முத்துசண்முகம், வியாழவட்டக் கருத்தரங்க மலர்த் தொகுதி, ப.125

26. தொல்.பொருள். நூ.56 (இளம்)

27. மேலது, நூ.433 (பேரா)

28. மேலது, அகத்திணையியல், நூ.53 நச்சர் உரை, ப.217

29. மேலது, நூ.57, (இளம்)

30. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.254

31. Damodaran, The literary value of Tiruvaymozhi, P.56

32. திருக்கோவையார், பா.216

33. இலக்கண விளக்கம், நூ.547

34. திருக்கோவையார், பா.223

35. நம்பியகப்பொருள், நூ.182:14

36. திருக்கோவையார், பா.348

37. தொல்.பொருள். நூ.234, (இளம்)

38. மேலது, களவியல், நூ.91, இளம்பூரணர் உரை, ப.12

39. மேலது, களவியல், நூ.94 நச்சர் உரை, ப.8

40. இறையனார் களவியல், நூ.2-ன் உரை ப.36

41. கு.சுந்தரமூர்த்தி (உ.ஆ.), பெரியபுராணம், ஆராய்ச்சி முன்னுரை, ப.111

42. சி.கே.சுப்பிரமணிய முதலியார் (உ.ஆ.) மேலது, (முதல்பகுதி), ப.354

43. கு.சுந்தரமூர்த்தி (உ.ஆ.), மேலது, பா.290, ப.408

44. சீவகசிந்தாமணி, பதுமையார் இலம்பகம், பா.146

45. மாறன் அலங்காரம், பா.505

46. முத்தொள்ளாயிரம், பா.21:3

47. மேலது, பா.50:4

48. மாறன் அலங்காரம், பா.481

49. திணைமாலை நூற்றைம்பது, பா.96

50. வீரசோழியம், முல்லை - நடையியல், நூ.15-17

51. தொல்.பொருள். நூ.195, (இளம்)

52. வீரசோழியம், முல்லை நடையியல், நூ.18-20

53. தொல்.பொருள். நூ.200 (இளம்)

54. கலித்தொகை, பா.142 : 24-28

55. ஐந்திணை ஐம்பது, பா.43

56. முத்தொள்ளாயிரம், பா.31

57. சீவகசிந்தாமணி, பா.1037

58. நாச்சியார் திருமொழி 4:4

59. அம்பிகாபதிக்கோவை, பா.297

60. திருக்கோவையார், பேராசிரியர் உரை, ப.225

61. மேலது, பா.186

62. இலக்கண விளக்கப்பாட்டியல், நூ.22

63. தொல்.பொருள்.கற்பியல், நூ.191 (இளம்)

64. கலித்தொகை, பா.79

65. தொல்.பொருள்.கற்பியல், நூ.145 இளம்பூரணர் உரை, ப.160

66. கலித்தொகை, முல்லைக்கலி, பா.103:22-31

67. மேலது, 63-64

68. மேலது, 69-70

69. மேலது, பா.எண்.104:27-28

70. திருக்கோவையார், பா.136

71. நற்றிணை, பா.எண்.259

72. திருக்கோவையார், பா.10

73. திருவெங்கைக் கோவை, 48:3-4

74. அகநானூறு, பா.90

75. திருக்கோவையார், பா.266

76. தொல்.பொருள். நூ.39:10 (நச்சர்)

77. திருக்கோவையார், பா.171

78. நம்பியகப்பொருள், நூ.149:9-10

79. திருவெம்பாவை, பா.9

80. பெரியதிருமடல், 165-169

81. தொல்.பொருள். நூ.38 (இளம்)

82. திருக்குறள், கு.1137

83. இலக்கண விளக்கம், நூ.484

84. நவநீதப்பட்டியல், நூ.10

85. சிதம்பரப்பாட்டியல், நூ.38

86. பெரியவாச்சான்பிள்ளை (உ.ஆ.), பெரியதிருமடல் வியாக்யாணம், ப.15

87. வெ.பழநியப்பன், உ.பழநி (ப.ஆ.), தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம், தொகுதி 3, பக்.97-98

88. ந.சுப்புரெட்டியார், தெய்வத்தமிழ், ப.441

89. க.வெள்ளைவாரணர், பன்னிரு திருமுறை வரலாறு, தொகுதி II, ப.463

90. ந.கடிகாசலம், மடல், ப.184

91. பன்னிரு பாட்டியல், பா.147

92. மேலது, மேற்கோள், பா.103

93. மு.வரதராசனார், இலக்கியமரபு, ப.89

94. கிருஷ்ணவேணி அம்மையார், வில்லிபுத்தூர் விளக்கு, ப.212

95. சிறிய திருமடல், பா.61-80

96. பெரிய திருமடல், பா.35-41

97. அண்ணங்கராச்சாரியார் (உ.ஆ.), பெரியதிருமடல், திவ்யார்த்த தீபிகை, ப.54

98. திருக்கோவையார், பா.232

99. இலக்கண விளக்கம், நூ.538:9

100. திருக்கோவையார், பா.238

101. திணைமாலை நூற்றைம்பது, பா.65

102. நம்பியகப்பொருள், நூ.188:4

103. திணைமாலை நூற்றைம்பது, பா.89

104. திருக்கோவையார், பா.244

105. மேலது, பா.240

106. சு.இராசாராம், அகமாந்தர்களில் கண்டோர், ப.23.

முடிவுரை

முடிவுரை

- அகம் என்பதே தமிழ் எனப் போற்றப்பெற்றமையைத், தமிழ் இலக்கண, இலக்கியங்களும் அவற்றிற்கான உரையாசிரியர்களின் குறிப்புகளும் உணர்த்துகின்றன. இத்தகைய போக்கே தமிழ் இலக்கிய நெடும்பரப்பில் அகப்பொருள் மரபு செல்வாக்குப்பெற்றமைக்கு ஏதுவாய் அமைந்தது.

- தமிழ் அகப்பொருள் களவு, கற்பு என இருதிறப்படும். அவற்றுள் களவு ஒன்றே இயற்கைப்புணர்ச்சி முதலாகப் பொருள்வயிற் பிரிதல் ஈறாகப் பதினேழு வகையானும், இயற்கைப் புணர்ச்சி ஒன்றே இரந்து பின்னிற்றல் முதலாகப் புகழ்தல் ஈறாகப் பதினைந்து வகையானும் விரிதல் போன்றே, ஒவ்வொரு நெறியும், தொகையும், வகையுமாய் விரிந்தும், பிரிந்தும் செல்கிறது. இவ் அகஅமைப்புமுறையே, உலக மொழிகள் யாவற்றிலும், தமிழின் நீர்மையினைத் தனிச்சிறப்புடையதாய் விளக்கம்செய்கிறது.

- உலகம், உயிர், இறைவன் என்னும் முப்பொருளையும் முறையாகத் தருவன திருமுறைகள். இவற்றுள் 'திரு' என்ற சொல், செல்வம், இறை, அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை போன்றவற்றைக் குறிப்பதாயும், முறை என்ற சொல் ஒழுங்கு, ஒழுக்கம், உறவு, கூட்டு, நன்மை, நூல் என்பனவற்றைக் குறிப்பதாயும் அமைந்து, இவையனைத்தையும் ஒருங்கே குறிக்கும் சைவத்தின் தெய்வப்பனுவல்களுக்குத் 'திருமுறை' என்னும் பெயராயிற்று.

- 'தே' என்ற ஓரெழுத்து ஒருமொழி, தெய்வத்தையும், 'வாரம்' என்பது இசைக்கூற்றுக்களுள் ஒன்றாயும் அமைந்து, தெய்வத்தைப் பற்றிய இசைப்பாடல்களின் தொகுப்பு 'தேவாரம்' என அழைக்கப்பட்டது என்பது பெறப்படுகிறது. 'தேவாரம்' என்ற சொல் 'வழிபாடு' என்னும் பொருளிலும் பயன்படுத்தப்பட்டது.

- முதன்முதலில் 'தேவாரம்' என்ற சொல்லை இரட்டைப் புலவர்கள் ஏகம்பரநாதர் உலாவில் பயன்படுத்தினர். இவ்உலா இலக்கியத்தின் வழி தேவாரம் என்பது 'திருப்பாட்டு' என்றும் அழைக்கப்பட்டமையை அறியமுடிகின்றது.

- பண்டைத் தமிழ் இலக்கியங்களை எட்டு, பத்து எனத் தொகுத்த மரபு, பிற்காலத்து பன்னிரண்டாய் வளர்ச்சிபெற்றது. இம்மரபினை ஒட்டியே திருமுறைகள் பன்னிரண்டாய்த் தொகுக்கப்பெற்றன. இவற்றுள் முதல் ஏழு திருமுறைகள் நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு, ஆதித்தசோழன், அவன்மகன் முதல் பராந்தகச்சோழன் காலத்தில் தொகுக்கப்பெற்றன.

- எட்டு முதல் பதினொன்று வரையிலான திருமுறைகள் சேக்கிழாருக்கு முன் வாழ்ந்தவர்களால் தொகுக்கப்பெற்றன. பின் சேக்கிழார் பன்னிரண்டாம் திருமுறையாய்ப் பெரியபுராணத்தைப் பாடிச் சேர்த்தார் என்பது பெறப்படுகிறது.

- காதலையும், வீரத்தையும் உயிரெனப் போற்றிய காலத்தில் வீரயுகப் பாடல்கள் தோற்றம்பெற்றன. அவ்வீரயுகப்போக்கு வரம்பிகந்து சென்ற காலத்தில் அறநெறிக்கோட்பாடுகள் பெரிதும் வலியுறுத்தப்பட்டன. அக்காலத்தில் தெய்வநம்பிக்கையின்றி, அறிவொழுக்கத்தினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தோன்றிய, சமயங்களை வெல்ல அருளாளர்கள் அகப்பாடல் நெறியினைக் கருவியாகக் கொண்டனர். இம்மை வாழ்விற்கான காதலும், மறுமைவாழ்விற்கான மானுடக்காதல் அடிப்படையில் அமைந்த தெய்வீகக் காதலும் இயைந்த அகப்பாட்டு நெறி வெல்லும் கருவியாய் அமைந்தது என்பது பெறப்படுகிறது.

♦ பிரேமபக்தி என்றும், பக்திநெறிக் காதல் (Devotional love) என்றும், மெய்யுணர்வுக்காதல் (Erotic Mysticism) என்றும் பிற மொழியாளர்களால் அழைக்கப்பட்ட இவ் அகக் கற்பித நெறி, தமிழ்ச் சான்றோர்களால் நாயக-நாயகி பாவம், பேரின்பக்காதல் நெறி என்று போற்றப்பட்டது.

♦ அன்பினால் இறைவனை அடையத்துடிக்கும் மனித ஆன்மாவானது, தன்னைப் பெண்ணாகப் பாவித்துக் கொண்டு, இறைவனைத் தலைவனாய் ஏற்றிப் போற்றிய உயரிய நெறியே பக்திப்பனுவல்களில் அகக்கற்பிதம் தோன்றுவதற்கு ஏதுவாயிற்று.

♦ இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்தலும், சரணடைதலும் செய்துகொள்கிறபோது, ஒவ்வொரு ஆன்மாவும் தன் பெண்மையை உணர்கின்றது. இக்காலமே இறைநிலை இணைவுக்குரிய காலம் ஆகும். அவ்வாறு உணருங்கால், புறத்தோற்றத்தான் அமையும் ஆண்மை தலைகாட்டாது இயற்கையான பெண்மை வெளிப்பட்டு நிற்கும். எனவேதான் இறைநிலை இணைவாளர்களின் சிறப்பியல்பாக அவர்களின் அகக்கற்பித நிலை போற்றப்படுகின்றது.

♦ மனித ஆன்மாவானது இறையோடு கலக்கும் இறைநிலை இணைவு என்பது ஆன்மாவும், கடவுளும் இணையும் அணுக்கப்புணர்ச்சியாகும். இவ்அணுக்கப்புணர்ச்சியானது மெய்யுணர்வுக்காதல் (Erotic Mysticism) என்று அழைக்கப்படுகின்றது.

♦ தமிழ் அகமரபின் கூட்டமுறைமையான இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற்கூட்டம் போன்றவை தொடர்பானதாய்த் திருமுறை அகப்பாடல்கள் அமைந்துள்ளன.

♦ தொல்காப்பியர் அகப்பாடலுக்கு உரியதாய் வரையறுக்கும் முதல், கரு, உரிப்பொருள் அமைதி, திணைமயக்கம், மெய்ப்பாடுகள், உள்ளுறை போன்றவற்றைத் தன்னுள் கொண்டதாய்த் திருமுறை அகப் பாடல்கள் விளங்குகின்றன.

♦ திருமுறைகளில் காணப்படும் தலைவி கூற்றுக் கைக்கிளைப்பாடல்கள் தலைவன்பால் காதல்கொண்டு, ஏமம்சாலா இடும்பை எய்தி, அவனை அடையத் துடிக்கும் மனித ஆன்மாவின் ஏக்கத்தினை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளன. இக்கூற்றுநிலையே பெண்பாற் கைக்கிளை என்னும் அகப்பொருள் துறையினைப் பின்வந்த இலக்கண நூலார் குறிப்பதற்கு ஏதுவாயிற்று.

♦ தலைவன்பால் கொண்ட காதலால் பிரிவின் கொடுமை தாளாத தலைவி, 'கேட்காதவற்றைக் கேட்டு வா' எனவும், 'கிளக்காதவற்றைக் கிளந்துவா' எனவும் கூறித் தூதுவிடுக்கும் 'காமம்மிக்க கழிபடர்கிளவி' ஆகிய தொல்காப்பிய மரபு திருமுறையில் காணப்படுகின்றது. திருமுறைத் தலைவி வண்டு, குருகு, கோழி, நாரை, குயில், கிளி, அன்னம், பூவை, தென்றல், புறா, சக்கரவாளப்பறவை, மேகம், சேவல் போன்றவற்றைத் தூதாய் விடுக்கின்றாள்.

♦ திருமுறைத் தூதுப்பாடல்களில், தூது அனுப்பும் இடத்து, தூதுப்பொருளின் சிறப்பினைச் சுட்டுதல், தூது சொல்ல வேண்டியவரின் அடையாளங்களைச் செப்பல், தூதுவிடுப்பவர் தன்னைத் தாழ்த்தி, தலைவனை உயர்த்திப்பேசுதல் போன்ற பிற்காலத் தூது இலக்கியங்களில் இடம்பெறும் மரபுகள் காணப்படுகின்றன. தூதுப்பொருள்களிடத்து 'தூது சொல்லிவா' என உரைக்கும் பழைய மரபும், திருக்கோத்தும்பியிடம் 'சென்றூதாய்' என உரைக்கும் புதிய மரபும் காணப்படுகின்றன.

- திருமுறைத் தலைவி கூற்றுப் பாடல்களில் காணப்படும் ஐந்திணை ஒழுகலாறுகள், மெய்யுறுபுணர்ச்சி, மின்னிடைமெலிதல், இடந்தலைப்பாடு, தூது விடுத்தல், தலைவி நெஞ்சொடு கிளத்தல், பிரிவுழிக்கலங்கல், கடலிடை, புள்ளிடைவைத்து வருந்தல், அலர் அஞ்சல், இயற்படமொழிதல், அறத்தொடு நிற்றல், பரத்தமை கண்டு தலைவி ஊடல், பருவம்கண்டு புலம்பல், வாயில் மறுத்தல், எங்கையர்காணின் நன்றென மறுத்தல் போன்ற துறைகளைச் சார்ந்தவையாய் அமைந்துள்ளன. இந்நிலையில் கடவுட் காதலும், மனிதக் காதலும் ஒன்றுபடுகின்றன. எனவேதான், இம்மண்ணுலகில் காணப்படும் மனிதக் காதல் எல்லாம் இறைக்காதலின் நிழற்படிமங்களாகின்றன.

- ஆன்மாவானது ஆண்டவன்பால் கொண்டுள்ள அன்பினால் எழும் அகக் கற்பிதத்தால், இறைநிலை இலக்கியங்கள் இறைவன்பால் கொண்டுள்ள அணுக்கப்புணர்ச்சியையும், உள்ளத்தினை மேம்படுத்தும் உயர்காதலையும் தம்முட் கொண்டுள்ளன. உயரிய கடவுட் காதல் மனிதக்காதல் மொழியில் வெளிப்படுகிறது. எனவே இந்நிலை உலக இறைநிலை இணைவாளர்கள் அனைவர்க்கும் பொதுவாகிறது. இம் மையத்தின் அடிப்படையில் உலகமாந்தர்கள் பல மொழிகள் பேச, உலக இறைநிலை இணைவாளர்கள் ஒரே மொழியில் பேசுகின்றனர்.

- உலக இறைநிலை இணைவாளர்களால் ஏற்றிப் போற்றப்பெற்ற, இவ்வகக் கற்பித நெறியினை, தமிழ்ச்சான்றோர்கள் 'பகவத்காமம்,' 'விஷயகாமம்' எனவும் வேறுபடுத்தி, பகவத்காமமே தெய்வீக நிலையில் உள்ள காம உணர்வு என்றும் வேதவழிப்பட்ட பக்தியே இதனுள் பரிணமித்து நிற்கும் எனவும், இறைமைக்கும், ஆன்மாவுக்குமான உறவு நிலைகளில் இந்நாயக-நாயகி உறவுநிலையே உயர்வானது என்றும் போற்றுவர். இம்மரபினை அடியொற்றித் திருமுறைகளில் காணப்படும் அகக் கற்பிதப்பாடல்களை சிவன்பால்கொண்ட காமநுகர்வின் அடிப்படையில் சிந்தித்தல் சிறப்புடையதாகும்.

- அகக்கற்பித மரபினைச் சேர்ந்தவையாய்த் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் 14 பதிகங்களும் ஒரு தனிப்பாடலும், திருநாவுக்கரசர் தேவாரத்தில் 9 பதிகங்களும் 39 தனிப்பாடல்களும், சுந்தரர் தேவாரத்தில் 2 பதிகங்களும் ஒரு தனிப்பாடலும், மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் 6 பதிகங்களும் கீர்த்தித் திரு அகவலில் கூற்றுமுறை தசாங்கமும், ஒன்பதாம் திருமுறையில் பதினோரு பதிகங்களும், பதினொன்றாம் திருமுறையில் அமைந்த பதினாறு நூல்களில் 337 பாடல்களும், பன்னிரண்டாம் திருமுறையில் சுந்தரர், பரவையார், சங்கிலியார் காதல் வழிக்காட்சிகள், ஊடற்பொருண்மைகள், திருநீலகண்டர் வாழ்வில் கற்பில் பிரிவு, காரைக்கால் அம்மையார் வாழ்வில் கற்பில் பிரிவு தொடர்பானதாய் 25 பாடல்களும் திருமுறைகளில் காணப்படுகின்றன.

- திருமுறைப் பாடல்கள் களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோள் சார்பானதாயும், தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர், கண்டார் என்னும் மாந்தர்களது கூற்றுமுறை தொடர்பானதாயும் அமைகின்றன.

- தலைவி அறத்தொடு நிற்றல் தொடர்பான திருமுறைப் பாடல்களில் தலைவி, தலைவனுடன் தனக்குண்டான களவொழுக்கத்தினைத் தோழியிடம் கூறி நிற்கின்றாள். இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மாவானது, அதனை அடைவதற்கான வழியாக அறத்தொடு நிற்றல் என்னும் துறையினைத் தேர்ந்தெடுக்கின்றது.

- திருமுறைகளில் காணப்படும் பெருந்திணைத் தலைவி கூற்றுப் பாடல்கள், தன் உள்ளம்கொண்ட தலைவனை எண்ணிப் புலம்பும் தலைவியின் ஆற்ற இயலாத் துயரத்தினை வெளிப்படுத்தும் ‘தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்’ என்னும் துறையினைச் சேர்ந்தனவாய் அமைந்துள்ளன.

♦ தலைமக்களின் களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளிலும் இன்றியமையாத இடத்தினைப் பெறும் திருமுறைத்தோழி, களவில் காதல் வயப்பட்ட தலைமக்கள் உணர்வு மேலிட்டு நிற்கும் சூழல்களில் அவர்களை நெறிப்படுத்தி ஆற்றுப்படுத்தும் அருமை சான்றவளாயும், கற்புவாழ்வில் அச்சாணியாய் நின்று கற்பொழுக்க ஒழுகலாறுகளைச் சுழலச்செய்யும் சீர்மை சான்றவளாயும் காணப்படுகின்றாள்.

♦ திருமுறையில் பாங்கி மதியுடம்பாட்டின்கண் அமையும் பாடல்கள், குறையுற உணர்தலில் கெடுதிவினவல், முன்னுற உணர்தலில் தலைவியின் நாற்றமும், ஒழுக்கமும் கண்டு முன்னுற உணர்தல், நாண நாட்டத்தால் முன்னுற உணர்தல் போன்ற துறைகளைச் சார்ந்தவையாய் அமைந்துள்ளன. இப்பாடல்கள் தலைமகளின் களவொழுக்கத்தினைக் குறிப்பால் அறியும் தோழியின் மதிநுட்பத்தினையும், தோழி எள்ளலின்கண் அமைந்த நகையுணர்வையும், தலைவியின் களவு வாழ்வினை நெறிப்படுத்தும் செயல் செம்மையையும் விளக்கி நிற்கின்றன.

♦ திருமுறைத் தோழி, தலைவனைச் சேட்படுத்துவதாய் அமையும் பாடல்கள், தலைமகனுக்குத் தலைமகளின் அருமையை உணர்த்தும் தோழியின் நோக்கத்தினையும், தலைமகனை வரைவுமுடக்கம் கொள்ளச் செய்யும் முயற்சியினையும் வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளன.

♦ திருமுறைத்தோழி, தலைவனை வரைவுகடாவ, இற்செறிப்பு, வேங்கையொடு வெறுத்துக் கூறல், தினைப்புனம் கொய்தல், அலர் அஞ்சல், தலைவன் வரும் வழியின் ஏதம் கருதி அஞ்சும் தலைவியின் பிரிவாற்றாமை போன்றவற்றைக் காரணங்களாகக் கற்பிக்கின்றாள்.

♦ தோழி வரைவுகடாவுதல் என்ற அகமரபு திருமுறைகளில் மிகுந்து காணப்படுகின்றது. இறையுணர்வுக் காதல் நெறியில் ஈடுபட்ட மானிட

ஆன்மாவானது ஆண்டவனின் அருளிச்செயலைப் பெற விழைகின்றது. அருளிச்செயலைப் பெறக் காலஇடையீடு ஏற்படும் நிலையில், அதனை நீக்கி விரைந்து ஆட்கொள்ளவேண்டும் என்னும் வேட்கையின் காரணமாகவே இத்துறை சார்ந்த பாடல்கள் மிகுந்து காணப்படுகின்றன.

♦ அறத்தொடு நிற்கும் தோழி, வெறியாட்டு எடுத்தல், செவிலி ஐயுற்று வினவல் போன்றவற்றை அறத்தொடு நிற்றலுக்கான களன்களாகவும், நொதுமலர் வரைவு போன்றின்னவற்றை ஏதுக்களாகவும் கொண்டு செயல்படுகின்றாள். வெறியாட்டிடத்து குறிஞ்சிநிலப் பெண்டிரை முருகன் பற்றியதாய் நினைத்து வெறியாட்டெடுக்கும் மரபு முன்னைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றது. திருமுறைத் தோழி கூற்றுப் பாடல் ஒன்று, குறிஞ்சி நிலப் பெண்டிரை சாத்தனார் (ஐயனார்) பற்றியதாய்க் கருதி வெறியாட்டு எடுக்கும் மரபினை விளக்கி நிற்கின்றது.

♦ தோழியானவள் தலைவியால் ‘அன்னை’ என அழைக்கப்படுதலும் உண்டு என்னும் தொல்காப்பிய மரபின்படி, திருமுறைத் தோழி அழைக்கப்பட்டிருப்பதையும், தலைவி தோழியை முன்னிலைப்படுத்திக் கூறியவற்றைத் தோழி, செவிலியை முன்னிலைப்படுத்திக் கூறுவாள் என்பதனையும் திருவாசகத்தின் ‘அன்னைப் பத்து’ விளக்குகின்றது. இத்தகைய மரபுநிலையினைத் திருமுறைகளில் வேறெங்கும் காணமுடியவில்லை.

♦ இரவுக்குறிக்கண் தலைவனின் வரவுணர்ந்து உரைத்தல் என்னும் துறையின்கண் அமைந்த தோழி கூற்றுப் பாடல்கள், தலைவனின் வரவினைப் பிறர் அறியாவண்ணம் தலைவிக்கு மறைபொருளால் உரைக்கும் தோழியின் அறிவு நலத்தினை வெளிப்படுத்துகின்றன. ஒருவழித்தணத்தலில் தலைவனுக்கு வழியிடை ஏதம் விளைந்ததோ எனத் தலைவி அஞ்சியவழி, அவளை ஆற்றுவிக்கும் தோழியையும் திருமுறைகள் காட்டுகின்றன.

♦ திருமுறைத்தோழி, உடன்போக்கின்கண், தலைவன் தலைவியை உடன்கொண்டு செல்ல மறுத்தவழி, தலைவியின் பிரிவாற்றாமை கூறி உடன்கொண்டு செல்ல வற்புறுத்துவதனை அறியமுடிகின்றது. தலைவியின் களவு நெறியினைக் கற்பாய் மாற்றுவதில் முன்நிற்கும் திருமுறைத்தோழி, கற்பின்கண் தலைவியிடத்துத் தோன்றும் ஆற்ற இயலாத் தன்மைகளை ஆற்றுவித்து நெறிப்படுத்தும் செயலிலும் முன்நிற்கின்றாள். இக் கைகோளின்கண் அமையும் பாடல்கள், தலைவியைப் பருவங்காட்டி வற்புறுத்தல், முகில்களை முன்னிலையாகக் கொண்டு கூறல், தலைவனின் தேர்வரவு கூறி ஆற்றுவித்தல் போன்ற துறைகளைச் சார்ந்தவையாய் அமைந்துள்ளன.

♦ திருமுறைத்தோழி கூற்றுப் பாடல்கள், அகப்பொருள்மரபுகளைக் கொண்டு திகழும் அதேநிலையில், அவற்றுள் சைவ சமயத்தின் புறச்சின்னங்களாய் அமையும் திருநீறு அணிதல், குங்கிலியம் சார்த்தல் போன்ற சைவத்தின் புறச்சின்னங்களையும் சுட்டிநிற்கின்றன. இவ்வாறு பாடல் புனையும் நோக்கானது, அகப்பொருள் மரபு சிதையாவண்ணம், அவற்றுள் தமது இறைக்கோட்பாட்டினை ஏற்றிப்போற்றும் அருளாளர்களின் அறிவு நுட்பத்தினை வெளிப்படுத்தி நிற்கிறது.

♦ தொல்காப்பியரால் சுட்டப்பெறும் பிற மாந்தர்களுள் தலைவன், செவிலி, நற்றாய், கண்டோர் போன்றோரின் கூற்றுக்கள் திருமுறையில் காணப்படுகின்றன.

♦ திருமுறையில் காணப்படும் கைக்கிளைத் தலைவன் தொல்காப்பியர் உணர்த்தும் தலைவன்போன்று, சொல்லெதிர்பெறாது சொல்லி இன்புறுபவனாகவே காணப்படுகின்றான்.

♦ சிறப்புடைக் கைக்கிளைத் தலைவன் கூற்றுப்பாடல்களில் காட்சி, ஐயம், தெளிதல் ஆகிய அகப்பொருள் மரபுகள் காணப்படுகின்றன. ஐயத்தின்கண்வரும் ஆளுடைய பிள்ளையார் மும்மணிக்கோவையின் தலைவன், தலைவியை உயர்திணை, அஃறிணைப் பொருள்களோடு ஒப்ப வைத்து ஐயுற்றான் ஆதலின், பாடலின் இறுதியில் 'ஒருத்தி' என முடிக்காது, ஐயப்புலப்பாட்டுப் பொதுச்சொல்லாகிய 'வடிவு' (உருவு) என முடிக்கின்றான். பெரிய புராணப்பாடலுள் ஐயமுறும் தலைவன் சுந்தரர் ஆதலின், அவர் தலைவியுடன் ஒப்பிடும் பொருள்கள் இறைத்தன்மையுடன் தொடர்புடையனவாய் அமைகின்றன. தெளிதல் என்ற அகத் துறையின்கண் அமைந்த ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத் தலைவன், தலைவியை ஐயுற்றுப் பின் தெளிகின்றான், ஆதலின் இப்பாடலின் யாப்பும் வெண்பாவில் தொடங்கி ஆசிரியப்பாவால் முடியும் 'மருட்பா' வகையான் அமைகின்றது. இவ்வாறு அமையும் திருமுறைப் பாடல்கள் அருளாளர்களின் இறைக்கொள்கையையும், இலக்கண நுண்ணறிவினையும் விளக்கி நிற்கின்றன.

♦ திருமுறை ஐந்திணைத்தலைவன்கூற்றுப் பாடல்கள், மெய் தொட்டுப்பயிறல், பொய்பாராட்டல், ஊர் அணித்து எனத் தெளிவகப் படுத்தல், தலைவியை ஆயத்துய்த்தல், உற்றது உரைத்தல், கழற்றெதிர் மறுத்தல், இயலிடம் கூறல் போன்ற அகமரபுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

♦ பாங்கிமதியுடம்பாட்டின்கண் காணப்படும் தலைவன் கூற்றுப் பாடல்களில், கெடுதிவினவல், பிற வினாதல், மடன்மாக்கூறல், வரைவுடம்படாது மறுத்தல் போன்ற அகப்பொருள் மரபுகள் காணப்படுகின்றன.

♦ பகற்குறிக்கண் வறுங்களம் கண்டு வருந்தல், உடன்போக்கில் தலைவியின் தளர்வறிந்து இருத்தல் போன்ற அகத்துறைகளும் திருமுறைத்தலைவன் கூற்றுப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

♦ கற்பு என்னும் கைகோளில் அமைந்த தலைவன் கூற்றுப்பாடல்கள் செலவழுங்கும் துறையினைச் சார்ந்ததாகவே அமைந்துள்ளன.

♦ திருமுறையில் வரும் செவிலி கூற்றுப் பாடல்களில், தலைவி பிச்சியாகிய நிலையினை உரைத்தல், இரங்கிக்கூறல், களவு அலராகின்றவழி வருந்திக்கூறல், மகட்போக்கிய செவிலி கலங்கிக் கூறல், உடன்போக்கில் தேடிச்செல்லல் போன்ற அகமரபுகள் காணப்படுகின்றன. இவற்றுள் தலைவி பிச்சியானதை உரைக்கும் செவிலிகூற்றுப் பாடல் நாவுக்கரசரின் அகப்பாடலுள் மணிமகுடமாய்த் திகழும் பாடல் ஆகும். இப்பாடல் கைக்கிளைத் தலைவி, அன்பின் ஐந்திணைத் தலைவியாய் ஏற்றம்பெற்ற படிநிலையை உரைக்கின்றது.

♦ தலைவியின் களவொழுக்கத்தினை, நற்றாயிடம் உரைத்து, தலைவியின் களவு வாழ்வினைக் கற்புவாழ்வாய் மாற்றும் அறத்தொடு நிற்றல் செவிலியையும் திருமுறைகள் காட்டுகின்றன.

♦ தலைவி உடன்போகியவழித் தேடிச்செல்லும் செவிலி, சுரத்தின் வெம்மையையும், தலைவியின் மென்மையையும் நினைத்து வருந்துவதும், கண்டோரை வினவுதலுமாகிய கூற்றுநிலைப்பாடல்கள் திருமுறையில் காணப்படுகின்றன.

♦ திருமுறைகளில் காணப்படும் நற்றாய் கூற்றுப்பாடல்கள், தலைவியின் சிறப்புடை மரபின் களவினை மொழிவதாகவும், தலைவியின் நிலைகண்டு இரங்கிக் கூறுவதாகவும், மகட்போக்கிய வழி இல்லின்கண் இருந்து புலம்பிக் கூறுவதாகவும் அமைந்துள்ளன.

♦ கண்டோர் கூற்றுப் பாடல்களில், இடைச்சுரத்தின்கண் தலைமக்களுக்கு வழியின் அருமை கூறல், தம் ஊரின் அணிமை கூறல், தாய்நிலை கண்டு தடுத்தல் போன்ற அகமரபுகள் இடம்பெற்றுள்ளன.

♦ தொல்காப்பியர், நன்னூலார் மற்றும் இலக்கண, இலக்கிய உரையாசிரியர்களின் வழி 'மரபு' என்பது தொன்றுதொட்டுவருவது என வரையறுக்கப்பட்டது என்பது தெரியவருகிறது.

♦ தமிழில் 'மரபு' என்னும் சொல்லாட்சியானது, பெருமை, தகுதி, இயல்பு, பண்பு, திறல், சுவை, சான்றோரின் சொல் வழங்கும்முறை, பழைமை, இலக்கணம், மேம்பாடு, நல்லொழுக்கம் போன்ற பல்வேறு பொருள்களைக் குறிப்பதாய் அமைந்துள்ளது.

♦ தொல்காப்பியருக்குப்பின் சங்ககாலம் முதல் தோன்றிய மரபு மாற்றங்களும், சங்க காலத்திற்குப்பின் தோன்றிய மரபு மாற்றங்களும், திருமுறைக் காலத்துத் தோன்றிய புதிய அகப்பொருள் மரபுகளும் திருமுறைப் பாடல்களில் காணப்படுகின்றன.

♦ திருமுறைகள் மக்கள் கூடிப் பாடுவதற்கான இசைப்பாடல்களாகவும், அக உணர்வின்வழி, ஆன்ம ஈடேற்றத்தினை நிறைவேற்றுதலை நோக்கமாகவும் கொண்டு அமைந்தமையால், அவற்றுள் மரபுமாற்றம் என்பது தவிர்க்க இயலாததாய் அமைந்தது.

♦ திருமுறைகள், தொல்காப்பியரால் அகப்பாடலுக்கு உரியதாய்ச் சுட்டப்பட்ட கலிப்பா, பரிபாடல் போன்ற 'பா' வகையான் அமையாது, வெண்பா, ஆசிரியம், கட்டளைக் கலித்துறை, தாண்டக விருத்தம், வஞ்சி விருத்தம் ஆகிய பாவகையான் அமைந்துள்ளன. இது அகப்பாடல் யாப்பு முறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மரபு மாற்றம் ஆகும்.

♦ அகப்பாடல்களில் தலைமக்கள் பெயர்சுட்டல் கூடாது என்ற தொல்காப்பிய மரபு திருமுறைகளில் மாற்றம் பெறுகிறது. திருமுறை அகப்பாடல்களின் தலைவன் இறைவன் என்பதனாலும், அவன் நிலைத்த தன்மையுடையவன் என்பதனாலும், தலைமகன் பெயர் சுட்டப்படுகிறது.

♦ திருமுறைத் தலைவன்கூற்றுப் பாடல்களில், அடலெடுத்து உரைத்தல், பதிபரிசு உரைத்தல், முகிலொடு உரைத்தல் ஆகிய புதிய அகமரபுகள் காணப்படுகின்றன.

♦ தொல்காப்பியர் குறிக்கும் தலைமகன் மாட்டே ஐயக்கிளவி தோன்றும் என்ற அகமரபு திருமுறைகளில், மாற்றம் பெற்று, தலைவியும் தலைவனைக் கண்டு ஐயுறும் புதிய போக்காய் மலர்கிறது. இம்மரபு தோன்றியமைக்கு, ஐயுற்றுத் தெளிதற்கான அறிவு நலம் திருமுறைத் தலைவியிடம் அமைந்து இருந்ததே காரணம் ஆகும்.

♦ தலைவி கூற்றின் கண் புதிய அகமரபுகளாய்ப் பவனி கண்டு அழுங்கல், தாமம்பெறாது தளர்வுற்று உரைத்தல், தசாங்கம், தெள்ளேணம் கொட்டல், தலைவன் ஊர்தியை எதிர்ப்பெய்து கூறல், தலைவன் அணிந்துவரும் நிலவொளியும், மணி ஒலியும் தன்னை வருத்துவதாய்க் கூறல், கனவு கண்டு இரங்கல், தலைவன் பதிசொல்லித் தலைவி புலம்பல், தலைவனைக் காணக் கண்போதவில்லை எனப் புலம்பல் ஆகியவை அமைந்துள்ளன.

♦ திருமுறைத் தலைவிகூற்றின்கண் காணப்படும் அகத்துறைகளுள் குறிப்பிடத்தக்கதாகிய ‘கூடல் இழைத்தல்’ என்பது தொல்காப்பியர் சுட்டாத அகமரபு ஆகும். எனினும் இம்மரபு கலித்தொகை, முத்தொள்ளாயிரம், சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களில் கூற்றுநிலையில் காணப்படுகின்றது. திருமுறைக்காலத்தில் இம்மரபு

தனித்துறையாகவே வளர்ச்சிபெற்றுள்ளது. கூடல் இழைத்தல் தொடர்பான திருமுறைப்பாடல்கள் தலைவன் வருவானேல் கூடலே கூடுக எனக் கூடல் இழைப்பதனையும், தலைவன் வருவதற்காவது கூடலே கூடுக எனக் கூடல் இழைப்பதனையும் உணர்த்திநிற்கின்றன.

- தொல்காப்பியர் குறிக்காத 'தசாங்கம்' என்ற புதிய அகமரபு, தலைவனின் பத்து உறுப்புகளைக் கூறுமாறு கிள்ளையிடம் தலைவி வேண்டுவதாய் அமைந்தது ஆகும். பக்தி இலக்கியத்துள் தலைவன் மனிதன் என்பதனை விடுத்து, இறைவனாய் அமைதலின் அவனின் பெருமைகளை அவன்பால் அன்புகொண்ட அடியாரது உள்ளமானது போற்ற நினைக்கிறது. அத்தகைய மீதூர்ந்த அன்பின் வெளிப்பாடாய் இத்துறை அமைந்துள்ளது.

- தொல்காப்பியர் குறிக்காத புதல்வனை வாயிலாய்க் கொண்டுவந்த தலைவனுக்குத் தலைவி வாயில் மறுத்தல் என்ற அகமரபு சங்க இலக்கியத்துள் காணப்படுகின்றது. இத்தகைய மரபு திருமுறையிலும் இடம்பெற்றுள்ளது. இதன்வழி இப்புதிய மரபு தமிழ் இலக்கியப் பரப்பில் பெற்றிருந்த ஆளுமையை அறியமுடிகின்றது.

- திருமுறைத் தோழிகூற்றுப் பாடல்களில், தலைவன் ஏறுதழுவித் தலைவியைப் பெறுதல், கையுறை ஏற்க தலைவியை வற்புறுத்தல், அவயம் எழுதல் அரிதென மறுத்தல், முலைவிலைகூறல், கூடல் இழைத்தல், விருந்திறை விலக்கல், தோழியர் எள்ளல், தோழி பிறையைப் பழித்தல் போன்ற தொல்காப்பியர் சுட்டாத புதிய அகமரபுகள் காணப்படுகின்றன.

- திருமுறையில் இடம்பெறும் செவிலி கூற்றுப்பாடல்கள், பருவம் எய்தாதவரையும் தலைவன் ஈர்ப்பான் எனல், செவிலி தலைவனை எதிர்பெய்து கூறல், தலைவன் மேகலை கவர்ந்தான் எனல், தலைவி மடலேறுவதாய்க் கூறல், செவிலி சுடரோடு இரத்தல், சுவடு கண்டு

இரங்கல், புறவொடு புலத்தல், குரவொடு வருந்தல், புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல் ஆகிய புதிய அகமரபுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

- திருமுறைச் செவிலி கூற்றுப் பாடல்களில் காணப்படும் பெண்மடலேற்றம் குறிப்பிடத்தக்க புதிய மரபு ஆகும். தொல்காப்பியரும், திருவள்ளுவரும் பெண் மடலேறார் என்கின்றனர். சங்க இலக்கியத்தில் பெண் மடலேற்றம் கூற்று நிலையில்கூட இல்லை. தமிழ் அகமரபில் இல்லாத இப்புதிய மரபினைத் திருமங்கையாழ்வார் தோற்றுவிக்கின்றார். இவரின் சிறிய மடல், பெரிய மடல் தலைவியர் மடலேறுவதாய் உரைக்கின்றார். பெண்மடலேறல் என்பதனைத் தமிழ்மரபு ஏற்காது என்பதனால், வடநெறியே வேண்டினேன் என்கிறாள் பெரிய திருமடல் தலைவி. இவ் இருமடல் தலைவியரும் மடலேறுவேன் என்கின்றனரே ஒழிய மடலேறியதாய்ச் செய்தி இல்லை. திருமுறையில் காணப்படும் சேந்தனாரின் தலைவி மடலேறுவேன் எனக் கூறுவதுடன் மடலேறுகின்றாள். இத்தலைவி மடலேறியும் தலைவனைப் பெற்றாளில்லை எனச் செவிலி உரைக்கின்றாள். திருமங்கையாழ்வார் பெண்மடலேற்றம் என்ற துறையினைத் தொடங்க, சேந்தனார் மடலேறினாள் என நிறைவுசெய்கின்றார். இது சேந்தனார்கால அகத்துறை வளர்ச்சி ஆகும்.

- தொல்காப்பியத்தில் சுட்டப்பெறாத 'கண்டார்' என்ற புதிய அகமாந்தர் திருமுறைப்பாடல்களில் காணப்படுகின்றனர். இவர்கள் தம் கூற்றில், கண்டார் ஐயுற்றுக் கூறல், பெற்றோரை விலக்கித் தலைவனைக் காணும் தலைவியைக் கண்டு கண்டார்கூறல், தலைவியின் வளையல்களைத் தேடும் செவிலியைப் பார்த்துக் கண்டார்கூறல், தலைவன் குறித்த பருவம் வந்ததுகண்டு கண்டார் கூறல் ஆகிய புதிய அகமரபுகள் காணப்படுகின்றன.

இவ் ஆய்வினை மேற்கொள்ளும் காலத்து திருமுறை அகப்பாடல்கள் தொடர்பாக மேலும் ஆய்வு செய்வதற்கு இடமுண்டு. அந்நிலையில்,

- திருமுறை அகப்பாடல்கள் - உளவியல் நோக்கு
- திருமுறை அகப்பாடல்களில் சைவசித்தாந்தக் கோட்பாடுகள்
- திருமுறை அகப்பாடல்களின் கட்டமைப்பு

என்பவை தொடர்பாக மேலாய்வு செய்ய இயலும்.

துணைநூற்பட்டியல்

துணைநூற்பட்டியல்

<u>முதன்மைச் சான்றாதாரங்கள்:</u>

(திருமுறைகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது)

1. திருஞானசம்பந்தர் — *முதல்திருமுறை,*
ச.தண்டபாணிதேசிகர் (வி.கு.),
ஞானசம்பந்தர் பதிப்பகம்,
தருமை ஆதீனம்,
மயிலாடுதுறை,
இரண்டாம் பதிப்பு - 1997.

2.மேலது — *இரண்டாம் திருமுறை,*
சு.மாணிக்கவாசக முதலியார், (வி.கு.),
ஞானசம்பந்தர் பதிப்பகம்,
தருமை ஆதீனம்,
மயிலாடுதுறை,
இரண்டாம் பதிப்பு - 1997.

3. மேலது — *மூன்றாம் திருமுறை,*
அ.கந்தசாமிப்பிள்ளை (வி.கு.),
ஞானசம்பந்தர் பதிப்பகம்,
தருமை ஆதீனம்,
மயிலாடுதுறை,
இரண்டாம் பதிப்பு - 1997.

4. திருநாவுக்கரசர்,	நான்காம் திருமுறை, சு.மாணிக்கவாசக முதலியார், (வி.கு.), ஞானசம்பந்தர் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு - 1997.
5. மேலது	ஐந்தாம் திருமுறை, க.வச்சிரவேலுமுதலியார், சா.குருசாமிதேசிகர் (வி.கு.), ஞானசம்பந்தர் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு - 1997.
6. மேலது	ஆறாம் திருமுறை, சி.அருணைவடிவேலு முதலியார் (வி.கு.), ஞானசம்பந்தர் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு - 1997.
7. சுந்தரர்	ஏழாம் திருமுறை, சி.அருணைவடிவேலு முதலியார் (வி.கு.), ஞானசம்பந்தர் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு - 1997.

8. மாணிக்கவாசகர்	எட்டாம் திருமுறை - திருவாசகம், சி.அருணைவடிவேலு முதலியார் (வி.கு.), ஞானசம்பந்தர் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு - 1997.
9. திருமாளிகைத்தேவர் முதலாய் சேந்தனார் ஈறாய் ஒன்பதின்மர்	ஒன்பதாம் திருமுறை, சி.அருணைவடிவேலு முதலியார் (வி.கு.), ஞானசம்பந்தர் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு - 1997.
10. திருவாலவுடையார் முதலாய் நம்பியாண்டார் நம்பி ஈறாய் பன்னிருவர்	பதினோராந் திருமுறை, சி.அருணைவடிவேலு முதலியார் (வி.கு.), ஞானசம்பந்தர் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு - 1997.
11. சேக்கிழார்	பெரியபுராணம், கு.சுந்தரமூர்த்தி (வி.கு.), ஞானசம்பந்தர் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு - 1997.

துணைமைச் சான்றாதாரங்கள் :

இலக்கண நூல்கள்

12. அருணாசலம்பிள்ளை .மு (ஆ.உ.) — தொல்காப்பியம்- பொருளதிகாரம், (அகத்திணையியல் உரைவளம்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1975.

13. இராமாநுச ஐயங்கார் (உ.ஆ.) — மாறனகப்பொருளும் திருப்பதிக் கோவையும், செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை, 1932.

14. மேலது — சிதம்பரப் பாட்டியல், செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை, 1932.

15. இளம்பூரணர் (உ.ஆ.) — தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், கழகவெளியீடு, சென்னை, 1986.

16. மேலது — தொல்காப்பியம்-பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்), கழக வெளியீடு, சென்னை, 2004.

17. மேலது | தொல்காப்பியம் - பொருளதிகாரம்
(களவியல், கற்பியல், பொருளியல்),
கழக வெளியீடு,
சென்னை,
1986.

18. கோவிந்தராச முதலியார் (உ.ஆ.) | பன்னிருபாட்டியல்,
கழக வெளியீடு,
சென்னை,
1986.

19. கௌமாரீஸ்வரி .எஸ் (ப.ஆ.) | தொல்காப்பியம் - சொல்லதிகாரம்
(இளம்பூரணர் உரை),
சாந்தி அடுக்ககம்,
சென்னை,
ஐந்தாவது பதிப்பு, 2005.

20. சாமி கவிராயர் | சுவாமிநாதம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
1975.

21. சிவலிங்கனார் .ஆ (தொ.கு.) | தொல்காப்பியம்- பொருளதிகாரம்
(களவியல் உரைவளம்),
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
1994.

22. மேலது — தொல்காப்பியம்-பொருளதிகாரம்,
(பொருளியல் உரைவளம்),
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
1994.

23. சுப்பிரமணியன் ச.வே. (ப.ஆ.) — இலக்கணத்தொகை- யாப்பு, பாட்டியல்,
தமிழ்ப்பதிப்பகம்,
சென்னை,
1978.

24. சேனாவரையர் (உ.ஆ.) — தொல்காப்பியம்-சொல்லதிகாரம்,
கழக வெளியீடு,
சென்னை,
பதினாறாம் பதிப்பு - 2004.

25. திருக்குருகைப் பெருமாள் கவிராயர் — மாறனலங்காரம்,
செந்தமிழ்ப் பிரசுரம்,
மதுரை,
இரண்டாம் பதிப்பு - 1929.

26. நக்கீரர் (உ.ஆ.) — இறையனார் களவியல்,
கழக வெளியீடு,
சென்னை,
1969.

27. நச்சினார்க்கினியர் (உ.ஆ.) தொல்காப்பியம்-பொருளதிகாரம்
(அகத்திணையியல், புறத்திணையியல்),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
1986.

28. மேலது தொல்காப்பியம்-பொருளதிகாரம்
(களவியல், கற்பியல், பொருளியல்),
கழக வெளியீடு,
சென்னை,
மறுதிப்பு - 1958.

29. நவநீதநாடனார் நவநீதப்பாட்டியல்,
உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,
சென்னை,
1958.

30. நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கம்,
கழகவெளியீடு,
சென்னை,
1973.

31. பவணந்திமுனிவர் நன்னூல்,
கழகவெளியீடு,
சென்னை,
1985.

32. புத்தமித்திரர் — வீரசோழியம், கழகவெளியீடு, சென்னை, மறுதிப்பு - 1970.

33. பேராசிரியர் (உ.ஆ.) — தொல்காப்பியம்-பொருளதிகாரம், (மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல்), கழகவெளியீடு, சென்னை, 1959.

34. வெள்ளைவாரணர் .க (ஆ.உ.) — தொல்காப்பியம்-பொருளதிகாரம் (புறத்திணையியல் உரைவளம்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1983.

35. மேலது — தொல்காப்பியம்-பொருளதிகாரம் (களவியல் உரைவளம்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1983.

36. மேலது — தொல்காப்பியம்-பொருளதிகாரம் (கற்பியல் உரைவளம்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1983.

37. மேலது — தொல்காப்பியம்-பொருளதிகாரம்
(பொருளியல் உரைவளம்),
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
1983.

38. வைத்தியநாத தேசிகர் — இலக்கண விளக்கம்,
சரசுவதிமகால் நூல்நிலையம்,
தஞ்சை,
1974.

39. மேலது — இலக்கண விளக்கம் - பொருளதிகாரம்
(பாட்டியல்),
சரசுவதிமகால் நூல்நிலையம்,
தஞ்சை,
1974.

<u>**இலக்கிய நூல்கள் :**</u>

40. இரட்டைப்புலவர் — ஏகம்பரநாதர் உலா,
உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,
சென்னை,
1976.

41. இளங்கோவடிகள் — சிலப்பதிகாரம்,
அடியார்க்குநல்லார் (உ.ஆ.),
உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,
சென்னை,
ஒன்பதாம் பதிப்பு - 1978.

42. இராகவ ஐயங்கார் .ரா (ப.ஆ.)
முத்தொள்ளாயிரம்,
செந்தமிழ்ப்பிரசுரம்,
மதுரை,
1935.

43. இராமநாதன் செட்டியார் (உ.ஆ.)
அம்பிகாபதிக்கோவை,
கழகவெளியீடு,
சென்னை,
மறுபதிப்பு - 1968.

44. கம்பநாட்டாழ்வார்
கம்பராமாயணம்,
கம்பன் கழகம்,
சென்னை,
இரண்டாம் பதிப்பு - 1977.

45. கச்சியப்ப சிவாச்சாரியார்
கந்தபுராணம்,
இராமசாமிப்புலவர் (ப.ஆ.),
கழகவெளியீடு,
திருநெல்வேலி - 6,
1966.

46. கணிமேதாவியார்
திணைமாலை நூற்றைம்பது,
சாரதா பதிப்பகம்,
சென்னை - 14,
2006.

47. கல்யாணசுந்தரையர் (ப.ஆ.)
புறநானூறு,
ஜோதி அச்சுக்கூடம்,
நான்காம் பதிப்பு - 1950.

48. கொங்குவேளிர் — பெருங்கதை,
உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.),
உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,
சென்னை,
1968.

49. சாமிநாதையர் (உ.ஆ.) — குறுந்தொகை,
கபீர் அச்சுக்கூடம்,
சென்னை,
மூன்றாம் பதிப்பு - 1955.

50. சோமசுந்தரனார் (உ.ஆ.) — நற்றிணை,
கழகவெளியீடு,
சென்னை,
1962.

51. திருத்தக்கத்தேவர் — சீவகசிந்தாமணி,
உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.)
கழக வெளியீடு,
சென்னை,
ஐந்தாம் பதிப்பு - 1949.

52. திருமங்கை ஆழ்வார் — சிறிய திருமடல்,
பெரியவாச்சான்பிள்ளை (உ.ஆ.),
வியாக்யானம்,
சுதர்சனம் பதிப்பு,
திருச்சிராப்பள்ளி,
1975.

53. மேலது — பெரியதிருமடல்,
பெரியவாச்சான்பிள்ளை (உ.ஆ.),
வியாக்யானம்,
சுதர்சனம் பதிப்பு,
திருச்சிராப்பள்ளி,
1976.

54. திருவரங்கத்தமுதனார் — இராமாநுச நூற்றந்தாதி,
மாடல் அச்சுக்கூடம்,
சென்னை,
இரண்டாம் பதிப்பு - 1929.

55. திருவள்ளுவர் — திருக்குறள்-பரிமேழலகர் (உரை),
பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை,
1970.

56. நச்சினார்க்கினியர் (உ.ஆ.) — கலித்தொகை,
கழக வெளியீடு,
சென்னை,
1967.

57. நாராயணசாமி ஐயர் .அ (உ.ஆ.) — நற்றிணை நானூறு,
கழகவெளியீடு,
சென்னை,
1952.

58. பரிமேழலகர் (உ.ஆ.) பரிபாடல்,
உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,
சென்னை,
ஐந்தாம் பதிப்பு - 1980.

59. பாலசுந்தரம்பிள்ளை .தி.சு (ப.ஆ.) நாலடியார்,
கழக வெளியீடு,
சென்னை - 18,
எட்டாம் பதிப்பு - 1987.

60. மாணிக்கவாசகர் திருக்கோவையார்,
பேராசிரியர் (உ.ஆ.),
திருப்பனந்தாள் காசிமடம்,
1955.

61. மாறன் பொறையனார் ஐந்திணை ஐம்பது,
சாரதா பதிப்பகம்,
சென்னை - 14,
2006.

62. முன்றுறை அரையனார் பழமொழி நானூறு,
மல்லிகைப் பதிப்பகம்,
சென்னை,
1960.

63. வேங்கடசாமி நாட்டார் ந.மு.
வேங்கடாசலம்பிள்ளை .நா (உ.ஆ.) அகநானூறு,
பாகனேரி தனவைசிய இளைஞர்
சங்க வெளியீடு,
மறுபதிப்பு - 1957.

64. வேங்கடசாமி ரெட்டியார் .கி (ப.ஆ) — நாலாயிரம் திவ்யப்பிரபந்தம்,
திருவேங்கடத்தான் திருமன்றம்,
சென்னை,
1973.

<u>திறனாய்வு நூல்கள் :</u>

65. — அகநானூற்றுச் சொற்பொழிவுகள்,
கழக வெளியீடு,
சென்னை.
மறுபதிப்பு, மே 1969.

66. அண்ணங்கராச்சாரியார் — திவ்யார்த்த தீபிகை,
காஞ்சிபுரம்,
1953.

67. அருணாசலம் .ப — பக்தி இலக்கியம்,
தமிழ்ப்புத்தகாலயம்,
சென்னை,
1973.

68. அறிவுடைநம்பி .ம.சா — திருநாவுக்கரசர் தேவாரத்தில்
காணப்படும் இலக்கியக்கொள்கைகள்,
கருமணிப் பதிப்பகம்,
மதுரை,
1986.

69. இராகவஐயங்கார் .மு — தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி,
மு.நா.நாராயண ஐயங்கார் (ப.ஆ.),
மானாமதுரை,
மூன்றாம் பதிப்பு - 1960.

70. இராசாராம் .சு — அகமாந்தர்களில் கண்டோர்,
பாக்யா வெளியீடு,
கல்லல்,
1995.

71. இராமகிருட்டிணன் .ஆ — அகத்திணைமாந்தர் - ஓர் ஆய்வு,
சர்வோதயா இலக்கியப்பண்ணை,
மதுரை,
சனவரி - 1982.

72. இராமஸ்வாமிநாயுடு — அகப்பொருளும் அருளிச் செயலும்,
ஸ்ரீரங்கம்,
1938.

73. இளவழகனார் — பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை,
கழக வெளியீடு,
சென்னை,
ஏழாம் பதிப்பு - 1986.

74. கிருஷ்ணவேணி அம்மையார் .எஸ் — பெரியாழ்வார் பெண்கொடி,
ஸ்ரீ வைஷ்ணவ மஹாசங்க வெளியீடு,
சென்னை,
இரண்டாம் பதிப்பு - 1947.

75. மேலது — வில்லிபுத்தூர் விளக்கு,
ஸ்ரீவில்லிபுத்தூர் தேவஸ்தானம்,
முதற்பதிப்பு - 1959.

76. குருசாமி .ம.ரா.போ — சங்ககாலம்,
மெர்க்குரி புத்தகக் கம்பெனி,
கோவை,
1967.

77. குன்றக்குடி அடிகளார் — அடிகளார் நூல் வரிசை (தொகுதி-16),
மணிவாசகர் நூலகம்,
சென்னை,
2002.

78. சஞ்சீவி .ந (ப.ஆ.) — தெய்வத்தமிழ்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
ஜனவரி 1975.

79. சண்முகம்பிள்ளை .மு — அகப்பொருள் மரபும் திருக்குறளும்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
திருக்குறள் ஆராய்ச்சி,
1980.

80. மேலது — சிற்றிலக்கிய வகைகள்,
மணிவாசகர் நூல்நிலையம்,
சென்னை.
1982.

81. சதாசிவப் பண்டாரத்தார் .தி.வை — இலக்கிய ஆராய்ச்சியும்
கல்வெட்டுக்களும்,
தொல்காப்பியர் நூலகம்,
சென்னை - 14,
ப.ஆ.இ.

82. சரளா ராசகோபாலன் — சங்க இலக்கியத்தில் தோழி,
ஒளிப்பதிப்பகம்,
சென்னை,
1986.

83. மேலது — சங்க இலக்கியம் - அகம்,
ஒளிப்பதிப்பகம்,
சென்னை.
1994.

84. சிங்காரவேலன் .சொ — திருஞானசம்பந்தர் வரலாற்று
ஆராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும்,
கழக வெளியீடு,
சென்னை.
1969.

85. சுப்பிரமணிய அய்யர் .ஏ.வி — தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி,
பாரிநிலையம்,
சென்னை,
மூன்றாம் பதிப்பு - 1977.

86. சுப்புரெட்டியார் .ந — தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை,
பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை,
மறுபதிப்பு - 1974.

87. மேலது — சடகோபன் செந்தமிழ்,
பாரிநிலையம்,
சென்னை.
அக்டோபர் 1989.

88. சேதுப்பிள்ளை .ரா.பி. — திருவள்ளுவர் நூல்நயம்,
கழகவெளியீடு,
சென்னை,
1965.

89. சோமசுந்தரபாரதியார் — நற்றமிழ்,
மலர்நிலையம்,
சென்னை,
1957.

90. ஞானசம்பந்தன் .அ.ச — இலக்கியக்கலை,
கழக வெளியீடு,
சென்னை,
1953.

91. ஞானமூர்த்தி .தா.ஏ — பாவையின் உயிர்ப்பு,
பழனியப்பா பிரதர்ஸ்,
திருச்சி,
1967.

92. தமிழண்ணல் — குறிஞ்சிப்பாட்டு - இலக்கியத் திறனாய்வு - விளக்கம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, ப.ஆ.இ.

93. திருஞானசம்பந்தன் .பெ — இந்திய எழிற்கலை, சென்னைப் பல்கலைக்கழகம், 1977.

94. திருநாவுக்கரசு .க.த — தமிழ்நிலவு, சென்னை, 1981.

95. துரைஅரங்கசாமி (மொ.பெ.ஆ.) — தொல்காப்பியநெறி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1963.

96. பரமசிவானந்தம் .அ.மு. — இடைக்கால இலக்கிய வளர்ச்சி - வையைத் தமிழ், தமிழ் கலைப்பதிப்பகம், சென்னை, 1967.

97. பழநியப்பன் .வெ
பழநி .உ (ப.ஆ.)
தமிழ்ப் புலவர் வரலாற்றுக்
களஞ்சியம் - தொகுதி - III,
அண்ணாமலைப் பல்கலைக்கழக
வெளியீடு,
1989.

98. பாலசுப்பிரமணியன் .சி
ஆண்டாள்,
சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு,
ப.ஆ.இ.

99. பாஸ்கரதாஸ் .ஈ.கோ
அகப்பொருள் பாடல்களில் தோழி,
திருமனை வெளியீடு,
கோவை,
1979.

100. புலவர் குழந்தை
தொல்காப்பியர் காலத் தமிழர்,
பாரிநிலையம்,
சென்னை,
1959.

101. மணிவேல் .மு
தமிழ் இலக்கிய அகப்பொருள் மரபுகள்,
அன்னைப் பதிப்பகம்,
மதுரை,
2004.

102. மாணிக்கம் .வ.சுப
தமிழ்க்காதல்,
பாரிநிலையம்,
சென்னை,
1962.

103. மாணிக்கவாசகம் பிள்ளை .ம — சிற்றின்ப வெற்றி அல்லது கணவன்-மனைவியர் காதல் ஒழுக்கம், பாலசுப்பிரமணிய செட்டி அன் கம்பெனி, சென்னை, 1928.

104. முத்தப்பன் .பழ — திருமுறைகளில் அகக் கோட்பாடு, மீனாட்சி நூலகம், மயிலம், செப்டம்பர் 1986.

105. வசந்தாள் .த — தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் - ஒரு வரலாற்றுப் பார்வை, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1990.

106. வரதராசன் .மு — இலக்கியமரபு, பாரிநிலையம், சென்னை, 1960.

107. வெள்ளைவாரணர் .க — பன்னிரு திருமுறை வரலாறு - தொகுதி - II, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இரண்டாம் பதிப்பு - 1997.

107.அ. மேலது (ப.ஆ) — வேங்கடராம் செட்டியார் .செ. (உ.ஆ), கம்பராமாயணம் - யுத்த காண்டம், அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, 1970.

108. வேலுப்பிள்ளை .ஆ — தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, மூன்றாம் பதிப்பு - 1985.

109. வையாபுரிப்பிள்ளை .எஸ் — தமிழர் பண்பாடு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1974.

110. ஜகந்நாதன் .கி.வா — அன்பின் உருவம், அமுதம் நிலையம் லிமிடெட், சென்னை, 1955.

111. ஜான் சாமுவேல் .ஜி — இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள், சென்னை, 1978.

<u>மொழிபெயர்ப்பு நூல்கள்</u>

112. அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் (மொ.பெ.ஆ.) — ஆச்சார்ய ஹிருதயம், சென்னைப் பல்கலைக்கழகம், 1965.

113. மதிவாணன் .இரா (மொ.பெ.ஆ.) — ஆந்திர நாட்டு அகநானூறு, (கதாசப்த சதியின் மொழிபெயர்ப்பு), தமிழ்நாடு பதிப்பகம், சென்னை, 1978.

ஆய்வுக்கோவைகள்

114. பரிமணம் .அ.மா. (க.ஆ.) — இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, *1972.*

115. நலங்கிள்ளி ஆ. (க.ஆ.) — இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் பன்னிரண்டாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, *1980.*

கருத்தரங்க மலர்

116. முத்துசண்முகன் பெரியகருப்பன் .இராம (ப.ஆ.) — வையை - வியாழவட்டக் கருத்தரங்கு மலர், தொகுதி - *2* மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மார்ச் - *1975.*

இதழ்கள்

117. அமுதசுரபி - செப்டம்பர், *1975.*

118. ஆனந்தவிகடன் - தீபாவளிமலர் - *1965.*

119. செந்தமிழ்ச்செல்வி *3 :3* மார்ச்சு - *1967.*

120. திருக்கோயில் *1:7* ஏப்பிரல் *1959.*

121. மஞ்சரி - ஜுன் *1955.*

122. மேலது, ஆகஸ்ட் *1957.*

123. வேதாந்த தீபிகை *13:10* ஆடி ருதிரோத்காரி

124. ஸ்ரீராமாநுஜன் *21:8:9* ஆகஸ்ட், செப்டம்பர் - *1974*

<u>அகராதிகள்</u>

125. கதிரைவேற்பிள்ளை .நா — தமிழ்மொழியகராதி,
ஏசியன் எடுகேஷன்ஸ் சர்வீஸஸ்,
புதுதில்லி,
ஆறாம் பதிப்பு - 1984.

126. கந்தையா .ந.சி — செந்தமிழ் அகராதி,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.
மறுபதிப்பு - 1999.

127. __________________ — கலைக்களஞ்சியம், தொகுதி - V,
தமிழ்வளர்ச்சிக் கழகம்,
சென்னை.
1958.

128. __________________ — தமிழ் லெக்சிகன், தொகுதி - III,
சென்னைப் பல்கலைக்கழகம்,
1962.

<u>English Books</u>

129. Durai Rangaswami .M.A — The Religion and Philosophy of
Tevaram - 2 Vols.
University of Madras,
1959.

130. Mahadevan .TMP — The Philosophy of Beauty,
University of Madras,
1936.

131. Mahendranath Sircar — Hindu Mysticism - Part I,
Bharati maha vidyalaya,
Calcutta,
1943.

132. Patterson .WP — The Nature of Religion,
Hodder and Stoughton Limited,
London,
Second Edition, 1925.

133. Periakaruppan .RM — The Tradition and Talent in
Cankam poetry,
Madurai Publishing House,
Madurai,
1976.

134. Radha Kamal Mukarjee — Theory and art of mysticism,
Asia Publising house,
Madras,
1960.

135. Ramachandran .TP — The Indian Philosophy of Beauty,
Part I & II,
University of Madras,
1979/ 1980.

136. Ramachandra Dikshitar — Studies in Tamil Literature and History,
University of Madras.
Reprint - 1936.

137. Ramaswamy Iyengar — Tiruppavai - Anglo Tamil,
KR.Press,
Madras,
1899.

138. Sachithanandan .V — Essays on Bharathi - Vol.II,
Bharathi Prachar Alayam.
Madras,
1937.

139. Seshadri .K — Aspects of Religion - Vol. I,
P.Sundaram pillai Commoration,
Madras.

English Journals

140. The Aryan Path 21:8 August 1950.

141. Londan Tamil Sangam Souvenir - 1975.

142. Journal of the Department letters - Culcutta - 1934.

143. Tamil culture 5:3 July 1956.

Thesis (Ph.D)

144. Damodaran .G — The Literary Value of Tiruvaymozhi,
Ph.D. Thesis,
Annamalai University,
1972.

பின்னிணைப்புகள்

அட்டவணை - 1

முதல் மூன்று திருமுறைகள் - திருஞானசம்பந்தர்

வ. எண்.	திருமுறை எண்	பதிகப் பெயர்	பதிக எண்	கைகோள்	கூற்று	துறை
1.	முதல் திருமுறை	திருப்பிரம்மபுரம்	01	களவு	தலைவி	பெண்பாற் கைக்கிளை
2.		திருப்பாச்சிலாச்சிராமம்	44	களவு	செவிலி	பிரிவாற்றாத தலைவியின் துயர்கண்டு தலைவனை இயற்பழித்தல்.
3.		திருப்பாற்றுறை	56	களவு	தலைவி	பெண்பாற் கைக்கிளை
4.		திருத்தோணிபுரம்	60	களவு	தலைவி	ஐந்திணையில் தூதுவிடல் மரபு
5.		திருப்பிரம்மபுரம்	63	களவு	தலைவி	பிரிவுழிக் கலங்கி மொழிதல்
6.		திருக்கானூர்	73	களவு	தலைவி	அறத்தொடு நிற்றல்
7.		திருஇலம்பையங் கோட்டூர்	76	களவு	தலைவி	பிரிவுழிக் கலங்கி மொழிதல்
8.	இரண்டாம் திருமுறை	திருவானைக்கா	23	களவு	செவிலி	தலைவியின் காதல் துயர் கண்டு இரங்கிக்கூறல்
9.		திருமூக்கீச்சரம்	120	களவு	தலைவி	பிரிவுழிக் கலங்கி மொழிதல்
10.		திருவலஞ்சுழி (7வது பாடல்)	106	களவு	தலைவி	தலைவி இடந் தலைப்படுதல்
11.	மூன்றாம் திருமுறை	திருவாரூர்	45	களவு	தலைவி	பெண்பாற் கைக்கிளை
12.		திருச்செங் காட்டங்குடி	63	களவு	தலைவி	ஐந்திணையில் தூதுவிடல் மரபு
13.		திருத்தோணிபுரம்	100	களவு	தலைவி	பிரிவுழிக் கலங்கி மொழிதல்
14.		திருப்பரிதி நியமம்	104	களவு	தலைவி	பிரிவுழிக் கலங்கி மொழிதல்
15.		திருவீழி மிழலை	116	களவு	தலைவி	தலைவனின் அருள்வேண்டி அரற்றல்

அட்டவணை - 2

நான்கு முதல் ஆறு திருமுறைகள் - திருநாவுக்கரசர்

வ. எண்.	திருமுறை எண்	பதிகப் பெயர்	பதிக எண்	கை கோள்	கூற்று	துறை
1.	நான்காம் திருமுறை	திருக்கழிப் பாலை	06	களவு	செவிலி	தலைவியின் காதல் துயர் கண்டு செவிலி இரங்கிக் கூறல்.
2.		திருப்பழனம்	12			
		1 முதல் 9 பாடல்கள்		களவு	தலைவி	ஐந்திணையில் தூதுவிடல் மரபு
		10வது பாடல்		களவு	தலைவி	கூடல் இழைத்தல்
3.		திருநல்லூர்	97	களவு	தலைவி	தலைவி கனவிழந்துரைத்தல்
4.	ஐந்தாம் திருமுறை	திருவாவடுதுறை	29	களவு	நற்றாய்	நாணினை இழந்துநின்ற தலைவிகண்டு நற்றாய் இரங்கல்.
5.		திருக்கழிப்பாலை	40	களவு	செவிலி	காதல் கைமிக அரற்றும் தலைவி கண்டு செவிலி இரங்கல்
6.		திருத்தோணிபுரம்	45	களவு	செவிலி	செவிலி இரங்கல்
7.		திரு அதிகை வீரட்டானம்	53	களவு	தலைவி	கண்துயில் மறந்த தலைவி கூற்று (குறிப்பால் அகப்பொருள்)
8.		திருவாரூர் (7, 8வது பாடல்கள்)	07			
		7வது பாடல்		களவு	செவிலி	தலைவியின் நிலைகண்டு செவிலி இரங்கல்
		8வது பாடல்		களவு	செவிலி	நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்
9.		திருவிடைமருதூர் (5, 6 பாடல்கள்)	15	களவு	செவிலி	பருவம் எய்தாதவரையும் தலைவன் ஈர்ப்பான் எனல்
10.		திருக்கடம்பந்துறை (முதல்பாடல்)	18	களவு	செவிலி	தலைவனை எண்ணி வருந்தும் தலைவி குறித்த செவிலி கூற்று
11.		திருப்பாசூர் (5, 6, 7, 8 பாடல்கள்)	25			
		5, 7வது பாடல்கள்		களவு	செவிலி	தலைவன் தலைவியின் உள்ளம் கொண்டது கூறும் செவிலியின் இரங்கல் கூற்று.
		6, 7, 8வது பாடல்கள்		களவு	தலைவி	தலைவனின் பதி சொல்லித் தலைவி புலம்பல்

12.		திருவன்னியூர் முதல்பாடல்	26	களவு	செவிலி	தலைவியின் பசலைகண்டு இரங்கிக் கூறல்
13.		திருமயிலாடுதுறை (1, 2வது பாடல்கள்) முதல்பாடல் இரண்டாவது பாடல்	39	களவு களவு	செவிலி செவிலி	தலைவனின் நாமம் சொல்லி அரற்றும் தலைவி குறித்து செவிலி கூற்று. தாமம் பெறாது தளர்வுற்று வருந்தும் தலைவியைக் கண்டு இரங்கிக் கூறல்.
14.		திருப்புகலூர் (2, 3வது பாடல்கள்) 2வது பாடல் 3வது பாடல்	46	களவு களவு	தோழி செவிலி	பிரிவினால் வளைஇழந்த தலைவி குறித்துத் தோழி கூற்று. களவு அலராகின்ற வழிச் செவிலி கூற்று.
15.		திருக்கோழம்பம் 4வது பாடல்	64	களவு	தலைவி	கூடல் இழைத்தல்
16.		திருவலஞ்சுழி 9வது பாடல்	66	களவு	தோழி	இறைவனாகிய நண்பனுக்கே தன்னைக் கொடுப்பேன் எனும் தலைவி கண்டு கூறல்
17.		திருக்கோடிக்கா 4வது பாடல்	78	களவு	செவிலி	தலைவன்பால் கொண்ட காதலால் தன் சொற்பழித்த தலைவி குறித்து செவிலி கூறல்
18.		திருமருகல் 4வது பாடல் 5, 6, 7, 9வது பாடல்கள் 8வது பாடல்	88	களவு களவு களவு	தலைவி தலைவி தலைவி	தூதுவிடல் மரபு பிரிவுழிக் கலங்கி மொழிதல் கூடல் இழைத்தல்
19.	ஆறாம் திருமுறை	திருஆமாத்தூர்	9	களவு	தலைவி	தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருந்திணைப் பதிகம்.
20.		திருப்புறம்பயம்	13	களவு	தலைவி	தோழியைத் தூதுவிடக் கருதிய தலைவி கூற்று

21.		திருவெண்காடு (1, 3, 4, 5, 6, 7வது பாடல்கள்)	35	களவு	தலைவி	தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறப் பெருந்திணைப் பதிகம்.
22.		திருவொற்றியூர் (4, 5, 6, 7, 8வது பாடல்கள்)	45	களவு	தலைவி	பிரிவுழிக் கலங்கல்
23.		திருவலம்புரம் 3,4,5,6,7வது பாடல்கள்	58	களவு	தலைவி	பெண்பாற் கைக்கிளை

அட்டவணை - 3

ஏழாம் திருமுறை - சுந்தரர்

வ. எண்.	திருமுறை எண்	பதிகப் பெயர்	பதிக எண்	கை கோள்	கூற்று	துறை
1.	ஏழாம் திருமுறை	திருப்பைஞ்ஞீலி	36	களவு	தலைவி	தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறப் பெருந்திணைப் பதிகம்.
2.		திருவாரூர்	37	களவு	தலைவி	ஐந்திணையில் தூதுவிடல் மரபு
3.		திருவொற்றியூர் 4வது பாடல்	91	களவு	தலைவி	சிறப்புடைக் கைக்கிளையில் காட்சி

அட்டவணை - 4

எட்டாம் திருமுறை - திருவாசகம் - மாணிக்கவாசகர்

வ. எண்.	திருமுறை எண்	பதிகப் பெயர்	பதிக எண்	கை கோள்	கூற்று	துறை
1.	எட்டாம் திருமுறை	கீர்த்தித் திருஅகவல் (103 அடிமுதல் 124 அடிவரை)	02	களவு	தலைவி	தலைவனின் பத்து உறுப்புகளைப் புகழ்ந்து கூறல் - கூற்று நிலையில் தசாங்கம்.
2.		திருக்கோத்தும்பி	10	களவு	தலைவி	தும்பியைத் தூதுவிடல்
3.		திருத்தெள்ளேணம்	11	களவு	தலைவி	தலைவனின் குணம், புகழ் குறித்துத் தெள்ளேணம் கொட்டல் (குறிப்பால் அகப்பொருள்)
4.		திருச்சாழல்	12	களவு	தலைவி	தலைவி தலைவனை இயற்படமொழிதல்.
5.		அன்னைப் பத்து	17	களவு	தோழி	செவிலிக்கு அறத்தொடு நிற்றல்
6.		குயிற்பத்து	18	களவு	தலைவி	குயிலைத் தூதுவிடல்
7.		திருத்தசாங்கம்	19	களவு	தலைவி	தலைவி கிள்ளையைத் தலைவனின் பத்து உறுப்புநலன்களைக் கூறுமாறு வேண்டல்.

அட்டவணை - 5

ஒன்பதாம் திருமுறை

வ. எண்.	திருமுறை எண்	பதிகப் பெயர்	பதிக எண்	கை கோள்	கூற்று	துறை
1.	ஒன்பதாம் திருமுறை	திருமாளிகைத் தேவர் - உறவாகியயோகம்	3	களவு	நற்றாய்	பிரிவாற்றாத தலைவியின் செயலையும் நிலைமையும் கண்டு நற்றாய் கூறல்
2.		சேந்தனார் - திருவாவடுதுறை	6	களவு	நற்றாய்	பிரிவாற்றாத தலைவியின் துயர்கண்டு நற்றாய் கூறுதல்
3.		சேந்தனார்- திருஇடைக்கழி	7	களவு	செவிலி	பிரிவாற்றாத தலைவி, மடலேறியாவது பெறுவேன் என மடலேறியதைக் கூறல் (பெண்மடலேற்றம்)
4.		கருவூர்த்தேவர்- திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்	10			
		1, 2, 4, 5, 7, 8, 9, 10வது பாடல்		களவு	தலைவி	பெண்பாற் கைக்கிளை
		3வது பாடல்		களவு	தலைவி	வண்டு விடு தூது.
		6வது பாடல்		களவு	தலைவி	பொழுதுகண்டு இரங்கல்.
5.		கருவூர்த்தேவர் திரைலோக்கிய சுந்தரம்	12			
		1, 2 பாடல்கள்		களவு	தலைவி	தலைவியின் ஆற்றாமை உரைப்பன -
		3-10 பாடல்கள்		களவு	தோழி	தலைவியின் ஆற்றாமையைத் தோழி தலைவனை எதிர்பெய்து கூறல்
6.		கருவூர்த்தேவர்-தஞ்சை இராசராசேச்சுரம்	16	களவு	நற்றாய்	தலைவன் தன்மகளைக் கவர்ந்து நோய்செய்தல் முறையோ என நற்றாய் இரங்கல்.
7.		திருவாலியமுதனார் கோயில் - பவளமால் வரை	23	களவு	தலைவி	பெண்பாற் கைக்கிளை.

8.		திருவாலியமுதனார் கோயில் - கோலமலர்	25	களவு	தலைவி	தலைவி இரங்கல்
9.		புருடோத்தமநம்பி- கோயில்வாரணி	26	களவு	தலைவி	தலைவி இரங்கல்
10.		புருடோத்தமநம்பி- கோயில் வானவர்கள்	27	களவு	தலைவி	தலைவனின் இயலிடம் கூறல்
11.		சேதிராயர்-கோயில்- சேலுலாம்	28	களவு	நற்றாய்	தலைவியின் சிறப்புடைக் கைக்கிளையினை நற்றாய் மொழிதல்

அட்டவணை - 6

பதினொன்றாம் திருமுறை

பொன்வண்ணத்தந்தாதி - சேரமான் பெருமாள் நாயனார்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	1	169	தலைவி	களவு	தலைவி தன் மேனி பசலை உற்றது எனல்
2.	2	170	தலைவி	களவு	தலைவன் பிரிவு எண்ணித் தலைவி புலம்பல்
3.	3	171	செவிலி	களவு	தலைவனைக் காதலித்த தலைமகளின் நிலைகண்டு செவிலி கூற்று
4.	16	184	தோழி	களவு	தலைவியது ஆற்றாமை கருதித் தோழி நெஞ்சழிந்தது
5.	19	187	செவிலி	களவு	தலைவியின் நிலைகண்டு செவிலி இரங்கல் துறை
6.	27	195	செவிலி	களவு	தலைவனோடு களவிற்கலந்த பேதைப்பெண் நிலைகண்டு செவிலி இரங்கல்.
7.	31	199	தலைவி	களவு	தலைவன்பால் பாங்கியைத் தூதுவிடக் கருதிய தலைவி கூற்று (காமம் மிக்க கழிபடர் கிளவி)
8.	32	200	செவிலி	களவு	நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்
9.	34	202	செவிலி	களவு	தலைவியின் நிலைகண்டு தலைவனை செவிலி இயற்பழித்தல்
10.	37	205	செவிலி	களவு	தலைவியின் ஆற்றாமைகண்டு செவிலி கவன்றுரைத்தல்
11.	38	206	செவிலி	களவு	தலைவியின் பேதமை பற்றி செவிலி இரங்கிக் கூறுதல்
12.	49	217	தோழி	களவு	வெறியெடுத்த செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல்
13.	52	270	தலைவி	பெருந் திணை	தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
14.	54	222	தலைவி	களவு	தூதுவிடுதல் (காமம் மிக்க கழிபடர் கிளவி)
15.	55	223	கண்டார்	களவு	தலைவன் வீதியுலா வருங்கால் காதல் பொங்க வணங்கும் தலைவியைக் கண்டார் கூற்று (புதிய மரபு)
16.	56	224	தோழி	களவு	தலைவியின் ஆற்றாமை கண்டு தோழி அயலாரிடம் இரங்கல்
17.	58	226	செவிலி	களவு	தலைவியின் மெலிவுகண்டு செவிலி இரங்கல்
18.	59	227	செவிலி	களவு	தலைவியின் மெலிவுகண்டு செவிலி இரங்கல்
19.	61	229	தலைவி	களவு	பிச்சைக்கோலத்தில் சென்ற இறைவனைக் கண்டு காமுற்ற மகளிர் கூற்று (புதிய மரபு)

20.	62	230	தலைவி	களவு	தூதுவிடக் கருதிய தலைவி தோழியரோடு புலந்து கூறியது - காமம் மிக்க கழிபடர் கிளவி
21.	63	231	தலைவி	களவு	வரைவு கடாவ எண்ணித் தோழிக்குத் தலைவி உடன்பட்டுக் கூறல்
22.	69	237	செவிலி	களவு	தலைவியது வேறுபாடுகண்டு இரங்கி ஆயத்தாரிடம் கூறல்
23.	73	241	செவிலி	களவு	தலைவியது ஆற்றாமை கண்டு செவிலி இரங்கிக் கூறியது
24.	76	244	செவிலி	களவு	தலைவியது ஆற்றாமை கண்டு செவிலி இரங்கிக் கூறியது
25.	77	245	தலைவி	களவு	தலைவன் இயல்பு கூறல்
26.	79	247	தோழி	களவு	தலைவியின் அறியாமை கண்டு தோழி இரங்கல்
27.	81	249	தோழி	களவு	தோழி தலைவனை இரந்து பின் நிற்றல்
28.	82	250	தோழி	களவு	நாற்றம், தோற்றம் போன்றவற்றால் பாங்கி மதியுடம்படுத்தல்
29.	84	252	தலைவி	களவு	தலைவன் பால் மையல் கொண்டாள் அது நிறைவேறாதபொழுது இரங்கிக் கூறல்
30.	85	253	தலைவி	களவு	தலைவனை இயற்பழித்ததோழியிடத்து, தலைவனை இயற்பட மொழிதல்
31.	87	255	செவிலி	களவு	தலைவியின் ஆற்றாமை கண்டு தலைவனைச் செவிலி இயற்பழித்தது
32.	92	260	தலைவி	களவு	தலைவனை வணங்குதற்கே இவ் உடல் வைத்துள்ளேன் எனல்
33.	97	265	செவிலி	களவு	செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது

திருவாரூர் மும்மணிக்கோவை - சேரமான் பெருமாள் நாயனார்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	1.	269	தோழி	கற்பு	பொருள்வயிற் பிரிந்த தலைவன் வாராமையால் முன்னிலைப் புறமொழியாய்த் தலைவி தலைவன் இயல்புணர்ந்து ஆற்றுதல்
2.	2.	270	தோழி	கற்பு	பருவம்கண்டு ஆற்றாளாகிய தலைவியின் நிலைகண்டு தோழிவருந்தல்
3.	3.	271	தோழி	கற்பு	பருவம்கண்டு ஆற்றாளாகிய தலைவியின் நிலைகண்டு தோழிவருந்தல்
4.	4.	272	தலைவி	கற்பு	வினைவயிற் பிரிந்த தலைவன் பருவம் நீட்டிக்கத் தலைவி பருவம் கண்டு ஆற்றாது புலம்பல்

5.	5.	273	தலைவி	களவு	பருவம் கண்டு ஆற்றாள் எனத் தலைவனை இயற்பழித்த தோழிக்கு, தலைவி இயற்பட மொழிதல்
6.	6.	274	கண்டார்	கற்பு	தலைவன் குறித்த பருவம் வந்தது கண்டு கண்டார் கூற்று
7.	7.	275	தோழி	களவு	தோழி இரவுக்குறி விலக்கி வரைவு கடாவியது
8.	8.	276	தலைவன்	களவு	இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டத்தால் தலைவியுடன் கூடி இன்புற்ற தலைவன், பாங்கி மதியுடம் படுத்தல் பொருட்டு வேழம் வினவல் (இருவரும் உள்வழி அவன் வரவுணர்ந்து உரைத்தல்)
9.	9.	277	தோழி	களவு	இரவுக்குறி விலக்கி வரைவு கடாதல்
10.	10.	278	தோழி	களவு	தலைவியின் களவொழுக்கம் பற்றித் தலைவியின் தோற்றம் கண்டு தோழி குறிப்பால் உணர்ந்தது (மதியுடம்படுத்தல்)
11.	11.	279	தோழி	களவு	தலைவனின் மடல் விலக்கி குறைநேர்ந்த தோழி, தலைவியிடம் சென்று குறைநயப்பித்தல்
12.	12.	280	தோழி	களவு	தலைவனின் மடல் விலக்கி குறைநேர்ந்த தோழி தலைவியிடம் சென்று குறைநயப்பித்தல்
13.	13.	281	செவிலி	களவு	உடன்போன தலைவியைச் செவிலி தேடிச்செல்லல்
14.	14.	282	செவிலி	களவு	உடன்போன தலைவியைச் செவிலி தேடிச்செல்லல்
15.	15.	283	செவிலி	களவு	உடன்போன தலைவியைச் செவிலி தேடிச்செல்லல்
16.	16.	284	செவிலி	களவு	உடன்போன மகளை நினைந்து செவிலி குரவொடு புலம்பல்
17.	17.	285	செவிலி	களவு	உடன்போன மகளை நினைந்து செவிலி புலம்பல்
18.	18.	286	செவிலி	களவு	உடன்போன மகளை நினைந்து செவிலி புலம்பல்
19.	19.	287	தலைவி	கற்பு	வாயில் வேண்டிய பாணனுக்குத் தலைவி வாயில் மறுத்தல்
20.	20.	288	தலைவி	கற்பு	வாயில் வேண்டிய பாணனுக்குத் தலைவி வாயில் மறுத்தல்
21.	21.	289	தலைவி	கற்பு	புதல்வன் வழித் தலைவன் ஊடல் தணிக்க முயல, தலைவி ஊடல் தணியாளாய்க் கூறியது
22.	22.	290	தலைவி	கற்பு	தலைவனின் பரத்தையிற்பிரிவில் தலைவி நெஞ்சிற்குக் கூறியது.
23.	23.	291	தலைவி	கற்பு	காவற்பிரிவு மேற்கொண்ட தலைவன் உள்வழிச் செல்லத் தலைவி, இயலாதவளாய் நெஞ்சிற்குக் கூறியது.
24.	24.	292	தலைவி	கற்பு	பரத்தையர் பிரிவால் தலைவி ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைவி ஆற்றுவல் எனல்

25.	25.	293	தலைவி	களவு	ஆயத்தார் அலர் கூறத் தலைவி முன்னிலைப் புறமொழியாய்க் கூறியது
26.	26.	294	தோழி	களவு	இரவுக்குறிக்கண் தலைவன் வந்தமையைத் தோழி தலைவிக்கு அவள் அறியுமாறு உணர்த்தல்
27.	27.	295	தலைவி	களவு	இரவில் அல்ல குறிப்பட்டு தலைவனை எய்தாத தலைவி, பின் வந்தவன் சென்ற வறுங்களம் நோக்கிக் கூறல்
28.	28.	296	தலைவி	களவு	நொதுமலர் வரைவு கண்டு தோழிக்கு அறத்தொடு நின்றது
29.	29.	297	தலைவி	களவு	பொருள்வயிற் பிரிவாற்றாத தலைவி, தூது செல்லாப் பாங்கியைப் புலந்து, கடலொடு தன்னை முன்னிலைப்படுத்தி இரங்கியது. (காமம்மிக்க கழிபடர் கிளவி)
30.	30.	298	தலைவன்	களவு	கழற்றுரை கூறிய பாங்கன் விரும்பும்படி, தலைவன் தன் ஆற்றாமைகூறி கழற்றெதிர் மறுத்தது.

கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி - நக்கீரர்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	27	326	செவிலி	களவு	கயிலைப் பெருமான்மேல் காதல் கொண்டாள் ஒருத்திதன் செவிலித்தாய் கூற்று
2.	28	327	செவிலி	களவு	கயிலைப் பெருமான்மேல் காதல் கொண்டாள் ஒருத்திதன் செவிலித்தாய் கூற்று
3.	29	328	செவிலி	களவு	கயிலைப் பெருமான்மேல் காதல் கொண்டாள் ஒருத்திதன் செவிலித்தாய் கூற்று
4.	34	333	செவிலி	களவு	கயிலைப் பெருமான்மேல் காதல் கொண்டாள் ஒருத்திதன் செவிலித்தாய் கூற்று
5.	35	334	செவிலி	களவு	கயிலைப் பெருமான்மேல் காதல் கொண்டாள் ஒருத்திதன் செவிலித்தாய் கூற்று
6.	36	335	தோழி	களவு	தலைவிதன் வேற்றுமைக்குக் காரணம் அறியாது செவிலியும் நற்றாயும் அதனைப் பரிகரிக்க முயல்கையில் தோழி அறத்தொடு நின்றது.

7.	41	340	செவிலி	களவு	கயிலைப் பெருமான்மேல் காதல் கொண்டாள் ஒருத்திதன் செவிலித்தாய் கூற்று.
8.	42	341	செவிலி	களவு	கயிலைப் பெருமான்மேல் காதல் கொண்டாள் ஒருத்திதன் செவிலித்தாய் கூற்று.
9.	45	344	தலைவி	களவு	தலைவனின் தன்மை இனிமையுடைத்தோ எனத் தலைவி புலம்பல்.
10.	58	357	செவிலி	களவு	காப்பு மிகுதி காரணமாகத் தலைவி வேறுபட்டவழி இஃது எற்றினான் ஆயிற்று எனத் தாயர் ஆராய்வுழிச் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.
11.	63	362	தலைவி	களவு	காமம்மிக்க கழிபடர் கிளவி
12.	64	363	தலைவி	களவு	தலைவன் பெயர் கூறக் கிள்ளையை வேண்டல்
13.	65	364	தலைவி	களவு	புள்ளோடு கிளத்தல்
14.	66	365	தலைவி	களவு	தலைவி கடலோடு கிளத்தல்
15.	69	366	தலைவி	களவு	நெஞ்சொடு கிளத்தல்
16.	75	374	தலைவி	களவு	காமம்மிக்க கழிபடர் கிளவி
17.	76	375	தலைவி	பெருந்திணை	தலைவி தனது வேட்கையைத் தானே தலைவனிடம் கூறியது.
18.	77	376	தலைவி	களவு	காமம் மிக்க கழிபடர் கிளவி
19.	78	377	தலைவி	களவு	எருதினை மெதுவாகப் போகுமாறு வேண்டுதல்
20.	80	379	தலைவி	களவு	தலைவன் பெயர்கூறக் குயிலை வேண்டல்
21.	82	381	தலைவி	களவு	தலைவன் தன் வளை கவர்ந்தான் எனல்
22.	90	389	தலைவி	களவு	கூடல் இழைத்தல்
23.	95	394	தலைவி	களவு	தலைவனின் மணி ஓசையும், நிலவொளியும் துயர் தருவதாய்க் கூறல்.
24.	98	397	தலைவி	களவு	தலைவன் அருளல் வேண்டும் எனல்

திருவலஞ்சுழி மும்மணிக்கோவை - நக்கீரர்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	4	473	தோழி	களவு	இது தோழி வெறி விலக்கிக் கூறியது
2.	5	474	செவிலி	களவு	தலைவியது ஆற்றாமைக்குச் செவிலி நொந்து கூறியது.
3.	6	475	தோழி	கற்பு	தலைவன் நீடக் கார்பருவம் கண்டு தலைவி ஆற்றாள் எனத் தோழி நொந்து தன்னுள்ளே சொல்லியது.
4.	7	476	தோழி	களவு	இரவுக்குறி வரும் தலைவனை அது வேண்டா என விலக்கியது.
5.	8	477	தலைவி	களவு	நொதுமலர் வரைவு நோக்கித் தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றது.
6.	9	478	தலைவி	களவு	நொதுமலர் வரைவு நோக்கித் தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றது.
7.	10	479	தலைவன்	களவு	களவொழுக்கத்தில் தலைவன் வறுங்களம் நாடி மறுகியதாம்
8.	11	480	தலைவி	களவு	பெண்பாற் கைக்கிளை, காதல் மிக்கமையை வியந்து கூறியது.
9.	12	481	கண்டோர்	கைக் கிளை	புணர்ந்துடன் போய தலைமகளைப் பின்தேடிச் சென்ற செவிலி வழியிடைக் கண்டோரை வினவ, அவர் கூறியது.
10.	13	482	தலைவி	கற்பு	தலைவி பாணனுக்கு வாயில் மறுத்தல்
11.	14	483	தோழி	களவு	தலைவியது வேறுபாடு கண்டு வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

சிவபெருமான் திருஇரட்டை மணிமாலை - கபிலர்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	25	544	தலைவி	களவு	தலைவியது வேறுபாடு கண்டு கழறிய தோழிக்குத் தலைவி கழற்றெதிர் மறுத்தது.
2.	29	548	தலைவி	களவு	காமம்மிக்க கழிபடர் கிளவி.
3.	33	552	செவிலி	களவு	தலைவியது நிலைகண்டு தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்க, செவிலி தலைவனை எதிர்பெய்து கூறியது.

சிவபெருமான் திருவந்தாதி - கபிலர்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	5	561	தலைவி	களவு	அலர் அஞ்சித் தலைவி உரைத்தல்
2.	9	565	தலைவி	களவு	அலர் அஞ்சித் தலைவி உரைத்தல்
3.	10	566	தலைவி	கைக் கிளை	தலைவனால் நலன் இழந்த தலைவி கூற்று
4.	11	567	தலைவி	கைக் கிளை	கொன்றைமாலை வேண்டும் தலைவியின் நிலை
5.	13	569	தலைவி	களவு	அலர் அஞ்சும் தலைவி கூற்று
6.	14	570	தலைவி	களவு	அலர் அஞ்சும் தலைவி கூற்று
7.	19	575	தலைவி	கைக் கிளை	தலைவன்பால் காதல் கொண்ட கைக்கிளைத் தலைவி கூற்று
8.	22	578	தலைவி	களவு	தலைவனின் மாலை வேண்டல் (தாமம்பெறாது தளர்வுற்று உரைத்தல்)
9.	23	579	தலைவி	களவு	தலைவனின் மாலை வேண்டல் (தாமம்பெறாது தளர்வுற்று உரைத்தல்)
10.	25	581	செவிலி	களவு	தலைவியின் ஆற்றாமை கண்டு செவிலி இரங்கல்துறை
11.	26	582	தோழி	களவு	தலைவன் உலாப்புறப்பட்டான், மகளிர்தம் நிறைகாக்க எனல்
12.	27	583	தலைவி	களவு	வேறுபாடுகொண்டு வினாயதோழிக்கு அறத்தொடு நிற்றல்
13.	28	584	தலைவி	கற்பு	பருவம் கண்டு வருந்தும் தலைவி கூற்று
14.	30	586	தலைவி	களவு	தலைவனின் பாம்பும், மதியும் தன்னை வருத்துகிறது எனல்
15.	31	587	தலைவி	களவு	காமம்மிக்க கழிபடர் கிளவி - புணர்ந்து நீங்கிய தலைமகள் கொன்றை மாலையிடம் பேசல்
16.	32	588	தலைவி	களவு	பெண்பாற் கைக்கிளை
17.	33	589	செவிலி	களவு	கிள்ளையைக் கண்டு வருந்தும் தலைவியின் துயர்தீர்க்க விரும்பும் செவிலி கூற்று
18.	35	591	தலைவி	களவு	காமம் மிக்க கழிபடர் கிளவி
19.	40	596	தலைவி	களவு	காமம் மிக்க கழிபடர் கிளவி

20.	45	601	செவிலி	களவு	தலைவியின் வேறுபாடு கண்டு வினவிய நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல்.
21.	46	602	தோழி	களவு	தோழி வரைவு கடாதல்
22.	47	603	தலைவி	களவு	காமம்மிக்க கழிபடர்கிளவி
23.	50	606	தலைவி	களவு	காமம்மிக்க கழிபடர்கிளவி
24.	52	608	தோழி	களவு	தலைவியை ஆற்றுவித்தல்
25.	53	609	தலைவி	களவு	தலைவி தன் கனவுநிலை தோழிக்குரைத்தல்
26.	58	614	தலைவி	களவு	காமமிக்க கழிபடர் கிளவி
27.	59	615	தலைவி	களவு	தலைவி தன் நெஞ்சோடு கிளத்தல்
28.	60	616	தலைவி	களவு	தலைவி தோழியை மாலையிரக்க வேண்டல் துறை
29.	61	617	தலைவி	களவு	தலைவி தோழியை மாலையிரக்க வேண்டல் துறை
30.	63	619	தலைவி	களவு	காமம்மிக்க கழிபடர் கிளவி
31.	66	622	தலைவி	களவு	காமம்மிக்க கழிபடர் கிளவி
32.	67	623	தலைவி	களவு	தலைவனின் பதி சொல்லித் தலைவி புலம்பல்
33.	68	624	தலைவி	களவு	தோழியைத் தூதுபோகச் சொல்லும் காமம்மிக்க கழிபடர்கிளவி
34.	73	629	செவிலி	களவு	தலைவியின் ஆற்றாமைகண்டு செவிலி நொந்து கூறியது
35.	74	630	தலைவி	களவு	காமம் மிக்க கழிபடர் கிளவி
36.	75	631	தலைவி	களவு	காமம் மிக்க கழிபடர் கிளவி
37.	77	632	தலைவி	களவு	அருளாமை நோக்கி ஊடியுரைத்தல்
38.	79	635	தலைவி	களவு	காமம் மிக்க கழிபடர் கிளவி
39.	87	643	தலைவி	களவு	நெஞ்சினைத் தூதுவிடக் கருதித் தலைவி கூறல்
40.	88	644	தலைவி	களவு	தலைவனை மாலையிரத்தல்
41.	93	649	செவிலி	களவு	வீதியுலாவில் செவிலி தலைவனைக் குறையிரத்தல்
42.	94	650	செவிலி	களவு	தலைவியின் ஆற்றாமை கண்டு செவிலி கவன்றுரைத்தது
43.	95	651	செவிலி	களவு	தலைவியின் ஆற்றாமை கண்டு செவிலி கவன்றுரைத்தது
44.	96	652	தலைவி	பெருந் திணை	தலைவி தலைவனை எதிர்பெய்து கூறல்
45.	97	653	தலைவி	களவு	தலைவன் பலிகொள்ள வந்தவிதம் பற்றித் தலைவி தோழியிடம் கூறல்
46.	98	654	செவிலி	களவு	தலைவியின் கையற்ற நிலைகண்ட செவிலி கூற்று

சிவபெருமான் திருவந்தாதி - பரணர்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	6	662	செவிலி	களவு	தலைவியின் ஆற்றாமை கண்டு செவிலி இரங்கிக் கூறியது.
2.	16	672	தோழி	களவு	தலைவியின் வேறுபாடுகண்டு வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல்.
3.	19	675	தலைவி	கைக் கிளை	கைக்கிளைத் தலைவியின் ஆற்றாமை
4.	30	686	தோழி	களவு	தலைவியின் ஆற்றாமையைத் தலைவருக்குக் கூறி வரைவு கடாதல்.
5.	43	699	தோழி	களவு	தலைவியின் ஆற்றாமைகண்டு தோழி உரைத்தல்.
6.	55	711	செவிலி	களவு	தலைவியின் ஆற்றாமைகண்டு செவிலி எதிர்பெய்து கூறல்
7.	83	739	தோழி	கற்பு	வேந்தற்கு உற்றுழிப் பிரிவின்கண் தலைவியின் ஆற்றாமைகண்டு கூறல்
8.	84	740	தோழி	கற்பு	வேந்தற்கு உற்றுழிப் பிரிவின்கண் தலைவியின் ஆற்றாமைகண்டு கூறல்
9.	56	742	செவிலி	களவு	செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்
10.	95	751	தோழி	களவு	தலைவன்பால் காதல்கொண்ட தலைவியின் ஆற்றாமை கண்டு கூறியது

சிவபெருமான் திருமும்மணிக்கோவை - இளம்பெருமான் அடிகள்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	8	764	தோழி	பெருந்திணை	பெருந்திணைத் தலைவியின் ஆற்றாமை கூறியது.
2.	23	779	தோழி	களவு	தூது செல்லவேண்டிய தலைவிக்குத் தலைவனின் அன்பின்மைகூறி இயற்பழித்தல்
3.	27	783	தலைவி	கைக்கிளை	கைக்கிளைத் தலைவி தலைவனை நெருங்கிக் கூறியது.
4.	30	786	தலைவி	கைக்கிளை	கைக்கிளைத் தலைவி தலைவனை எதிர்பெய்து கூறியது.

கோயில் நான்மணிமாலை - பட்டினத்து அடிகள்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	11	820	தோழி	களவு	கைக்கிளைத் தலைவியது வேறுபாடுகண்டு வினவிய செவிலிக்குத் தோழி பட்டாங்கு சொல்லி அறத்தொடு நின்றது.
2.	17	826	தோழி	களவு	கைக்கிளைத் தலைவியது வேறுபாடுகண்டு ஐயுற்று வினவிய நற்றாய்க்குச் செவிலி அமைவு கூறும் முகத்தால் அறத்தொடு நின்றது.
3.	18	827	தோழி	களவு	தன்னைத் தூதுவிடக் கருதிக் குறிப்பாற்சில கூறிய கைக்கிளைத் தலைவியைத் தோழி, அருமைகூறி ஆற்றுவித்தது.
4.	19	828	தலைவன்	கைக் கிளை	சொல்லெதிர் பெறான் சொல்லி இன்புறல் என்னும் ஆண்பாற் கைக்கிளையாய அகப்பாட்டு.
5.	21	830	கண்டார்	களவு	பெற்றோரை விலக்கி மகளிர் தலைவனைக் காண்பதைக் காண்டல் கண்டார் கூற்று (புதியமரபு)
6.	22	831	தோழி	கற்பு	தலைவியரைப் பிரிந்துசென்ற தலைவர் கார் காலத்தில் வந்து கூடுவர், ஆகலின் அவ்வாற்றால் களிப்பு எய்துகின்ற மகளிரைக் காணுந்தோறும் இவள் ஆற்றாமை மிகுவாள் என்பது பற்றித் தோழியானவள் பருவ வரவு கண்டு கவன்றுரைத்தல்.
7.	23	832	தலைவன்	களவு	மடல்மா ஊரத் துணிந்த தலைவன் இஃது இயலுமோ என எண்ணிக் கவன்று கூறியது.
8.	27	873	தலைவி	களவு	தலைவி, தூதுவிடக் கருதித் தோழியை நோக்கிக் கூறியது.
9.	29	838	செவிலி	களவு	தலைவனின் கொன்றை மாலையினை விரும்புப் தலைவியின் மெலிவுகண்டு கூறல்.
10.	31	840	செவிலி	களவு	செவிலி தலைவனை மாலை இரத்தலாய் வந்தது.
11.	35	844	தோழி	களவு	தோழி ஆயத்தாரை முன்னிலைப்படுத்தி வெறி விலக்கியது.
12.	37	847	தலைவி	களவு	தலைவனின் ஆனேற்றைப் பார்த்துக் கூறல் (புதிய மரபு).

திருக்கழுமல மும்மணிக்கோவை - பட்டினத்து அடிகள்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	9	858	செவிலி	களவு	கைக்கிளைத் தலைவி தலைவன் உள்வழிச் சேறல், செவிலி இரங்கிக் கூறியது.
2.	11	860	தோழி	களவு	தலைவியது வேறுபாடு கண்டு வெறியாட்டு எடுத்த நற்றாய் செவிலித்தாயரை நோக்கித் தோழி அறத்தொடு நின்றது.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை - பட்டினத்து அடிகள்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	11	872	தலைவி	களவு	தலைவனைக் கண்ட உடன் மகளிர் நிறையழிவர் என உலாக்கண்ட ஒருத்தி கூறியது (புதியமரபு).
2.	15	876	தலைவன்	களவு	மெய்தொட்டுப் பயிறல்
3.	23	884	தோழி	களவு	தலைவியது முதுக்குறைவுடைமையைத் தோழி முன்னிலைப் புறமொழியால் அவளைப் பழிப்பாள் போன்று புகழ்ந்து கூறியது.

திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி - பட்டினத்து அடிகள்

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	10	901	தலைவன்	களவு	பாங்கற் கூட்டத்தில் தலைவன் பாங்கன் கழற்றெதிர் மறுத்தல்.
2.	11	902	தோழி	களவு	பாங்கியிற் கூட்டத்தில் தோழி தலைவியை மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல்.
3.	12	903	தோழி	களவு	களவொழுக்கத்தைத் தோழிக்கு மறைத்து ஒழுகிய தலைவி பின் மறையாது தோழிக்குக் கூற உடன்படுதல் (நாண நாட்டம் என்பதில் ‘வேறுபடுத்திக் கூறல்’ என்னும் துறை).

4.	13	904	தோழி	களவு	தலைவன் பாங்கியை மதியுடம்படுத்தலில் கெடுதி வினாதலுள் வேழம் வினாதல் (தோழி இப்பாட்டில் இகழ்ந்துரைத்தாளாயினும் தலைவியது நிலைமையைக் குறிப்பால் உணர்த்தியது).
5.	14	905	தலைவன்	களவு	பாங்கியைத் தலைவன் மதியுடம்படுத்தலில் பிற வினாவுதல்.
6.	15	906	தோழி	களவு	தலைவி தோழியுடன் இருக்கும் பொழுது தலைவன் சென்று 'கலைமான் ஒன்று கணை தைத்த உடலுடன் இவ்வழியாகச் சென்றதோ' என அது பற்றி அவரை நோக்கி வினாயதற்குத் தோழி தலைவியை நோக்கிக் கூறியது.
7.	16	907	தோழி	களவு	தலைவி தோழியுடன் இருக்கும் பொழுது தலைவன் சென்று 'கலைமான் ஒன்று கணை தைத்த உடலுடன் இவ்வழியாகச் சென்றதோ' என அது பற்றி அவரை நோக்கி, வினாயதற்குத் தோழி தலைவியை நோக்கிக் கூறியது.
8.	17	908	தோழி	களவு	வழியின் அருமைகூறி இரவுக்குறி மறுத்தல்.
9.	18	909	தோழி	களவு	களவொழுக்கத்தில் ஒழுகிய தலைவன், 'தலைவி இற்செறிக்கப்படும் காரணமாக அது கூடாது எனக் கருதி, ஒரு நாள் இரவு உங்கள் இல்லத்தில் விருந்தினனாக வருவேன்' என 'அதுவேண்டா' எனத் தோழி விலக்கியது. இது 'விருந்திறை விலக்கல்' எனப்படும்.
10.	19	910	தலைவி	களவு	களிறு தரு புணர்ச்சியால் ஒருவனுக்கு உரியளாகிவிட்ட தலைவி தன் இல்லத்தில் மணமுரசு இயங்குதலைக் கேட்டு இம் முரசொலி என் தலைவர் மணத்தனவோ? பிறர் மணத்தனவோ? என ஐயுற்றுக் கலங்கியது.
11.	20	911	தோழி	களவு	இரவுக்குறிக்கண் வந்தமையறிந்த தோழி அதனைத் தாய் அறியாவாறு தலைவிக்குக் கூறியது. இது வரவுணர்ந்துரைத்தல்.
12.	21	912	தலைவன்	களவு	தலைவன் பாங்கியை மதியுடம்படுத்தற்கண் குறையுற்று நின்றது.
13.	22	913	தோழி	களவு	தலைவன் வரைபொருட் பிரிதலில் தோழி தலைவனுக்குத் தலைவியது முலைவிலை பற்றிக் கூறியது.
14.	23	914	தோழி	களவு	தலைவனை வரைவுகடாவ எண்ணிய தோழி தலைவன் கேட்கும்படி வேங்கை மரங்களை நோக்கி ஏதோ கூறுபவள் போல நகையுண்டாகக் கூறி வரைவுகடாயது.

15.	24	915	தோழி	களவு	தலைவன் சிறைப்புறமாகத்தோழி பிரிவருமை கூறி வரைவுகடாயது.
16.	25	916	தலைவன்	களவு	தினை அறுக்கப்பட்டபின் அப்புனத்திற்குச் சென்ற தலைவன் அங்கு தலைவி முதலானோர் இல்லாமல் புனம் வெறிச்சோடிக் கிடத்தலைப் பார்த்து வருந்தியது "வறும்புனம் கண்டு வருந்துதல்."
17.	26	917	தலைவன்	களவு	வறும்புனம் கண்டு வருந்தும் தலைவன் கண்டவற்றொடு கவன்றுரைத்தது.
18.	27	918	தலைவன்	களவு	தோழி, 'இனிக் களவொழுக்கம் வெளிப்பட்டுத் தீமை பயக்கும்' எனக் கூறி வரைவுகடாவ, தலைவன் மேலும் களவை நீட்டிப்பான் வேண்டி வரைவு உடன்படாது மறுத்தது.
19.	28	919	தலைவன்	களவு	வறும்புனங்கண்டு வருந்தியது.
20.	49	940	தலைவி	பெருந் திணை	ஏகம்பர் அரவம் பூண்டதும் அவற்றை ஆட்டுவார் போல இசையால் மடவாரை மயக்குதற்கே என, அவர் பால் மையல் கொண்ட தலைவி மயங்கிக் கூறியது.
21.	51	942	தலைவி	களவு	ஏகம்பரது பலியேற்கும் கோலத்தைக் கண்டு மையல் உள்ள ஒருத்தியது கூற்று
22.	52	943	தோழி	கைகிளை	கைக்கிளைக்கண் தலைவி தலைவனை எய்தமாட்டாமையைத் தோழி கூறி அவளை விலக்கியது.
23.	53	944	கண்டார்	களவு	தம் மகளிர் முதலியோரது மானத்தைக் காத்தற்பொருட்டு செவிலித் தாயார் தெருவில் சிந்திப்போன வளையல்களைத் தேடுதல் கண்ட கண்டார் கூற்று.
24.	54	945	நற்றாய்	களவு	காமம் சாலாப் பெதும்பைப் பருவத்தாளாயினும் ஏகம்பர் பால் காதல் கொண்டாள் ஒருத்திதன் தாய், இவளது பருவம் இன்மை காரணமாக அப்பெருமான் இவளை நினையான் ஆகலின் இவள் ஆற்றுமாறு என்னை எனக் கவன்று கூறியது.
25.	66	957	செவிலி	களவு	உடன்போக்கில் செவிலி புலம்பியது
26.	67	958	தோழி	களவு	தோழி தலைவனைப் போக்கு உடன்படுவித்தது
27.	68	959	செவிலி	களவு	உடன்போக்கில் செவிலி புலம்பியது
28.	69	960	தலைவன்	களவு	உடன்போக்கில் இடைச்சுரமருங்கில் தலைவி தமர்க்கண்டு கலங்கத் தலைவன் தேற்றியது.
29.	70	961	செவிலி	களவு	உடன்போக்கில் செவிலி புலம்பியது.

30.	71	962	செவிலி	களவு	உடன்போக்கில், செவிலி பின் தேடிச்சேரலில் 'சுவடு கண்டிரங்கல்.'
31.	72	963	நற்றாய்	களவு	உடன்போக்கில் நற்றாய் சுடரோடு இரத்தல் (அ) சுரம் தணிவித்தல் (புதிய மரபு).
32.	73	964	செவிலி கண்டோர்	களவு	தலைவியின் காதலைச் செவிலி விளக்குதல் மற்றும் தலைவனின் பெருந்தன்மை விளக்கியது மற்றும் கண்டோர் மொழிதல்.
33.	74	965	செவிலி	களவு	புணர்ந்துடன் வந்தோரை வினவிய செவிலித்தாயை அவர்கள் மீள உரைத்தது.
34.	75	966	தலைவன்	களவு	தலைவியை உடன்கொண்டு சென்ற தலைவன் அவளுக்குத் தன் நகர் காட்டியது.
35.	76	967	தலைவன்	களவு	தலைவியை உடன்கொண்டு சென்ற தலைவன் அவளுக்குத் தன் நகரின் தன்மையைக் கூறியது. பதிபரிசு உரைத்தல்.
36.	77	968	தலைவன்	களவு	தலைவியை உடன்கொண்டு சென்ற தலைவன் தன் நகர் பொழில்கண்டு உவந்து கூறியது.
37.	78	969	தலைவன்	களவு	தலைவன் உடன்போக்கில் தலைவிக்குப் பதிபரிசு உரைத்தல்.
38.	79	970	தலைவன்	களவு	கச்சி மாநகரின் பொய்கைச் சிறப்பைப் புகழ்ந்தது (புதிய மரபு).
39.	80	971	தலைவன்	களவு	கச்சி மாநகரின் பொய்கைச் சிறப்பைப் புகழ்ந்தது (புதிய மரபு).
40.	81	972	தலைவன்	களவு	தலைவன் தலைவிக்குப் பதிபரிசு உரைத்தது (புதிய மரபு).
41.	82	973	தலைவன்	களவு	கச்சிக் காமக்கோட்டத்துச் சிறப்பு உரைத்தல்.
42.	83	974	தலைவன்	களவு	பதிபரிசு உரைத்தல்
43.	84	975	தலைவன்	களவு	தலைவன் பதிபரிசு உரைத்தது (நகரின் தன்மை உரைத்தல்)
44.	85	976	தலைவன்	களவு	தலைவன் பதிபரிசு உரைத்தது (நகரின் தன்மை உரைத்தல்)
45.	86	977	தலைவன்	கற்பு	வேந்தற்கு உற்றுழிப்பிரிந்த தலைவன் கார் கண்டு தன்னுட் கூறியது.
46.	87	978	தோழி	கற்பு	கார்ப்பருவம் கண்டு ஆற்றாளாய தலைமகளை, தலைவனது தேர் இனி வருதல் தப்பாது எனக் கூறி வற்புறுத்தும் தோழி அதனை முகில்கள் முன்னிலையாகக் கூறியது.
47.	88	979	தோழி	கற்பு	தோழி பருவங்காட்டித் தலைவியை வற்புறுத்தது.
48.	89	980	தலைவி	கற்பு	பகைவயிற் பிரிவின்கண் தலைமகள் பருவம் கண்டு புலம்பியது.
49.	90	981	தோழி	களவு	வரைவொடு வந்த தலைமகனது தேர்வரவு கேட்டுத் தலைவி மகிழ்ந்த மகிழ்ச்சியைத் தோழி செவிலிக்கு உணர்த்தியது.

50.	91	982	கண்டார்	களவு	முல்லை நிலத்துக் கைக்கிளையாகிய ஏறுதழுவிக் கோடல் என்னும் ஆசுர மணத்தில் தழுவவிடப்பட்ட ஏற்றினைக் கண்டார் கூறியது.
51.	92	983	கண்டார்	களவு	முல்லை நிலத்துக் கைக்கிளையாகிய ஏறுதழுவிக் கோடல் என்னும் ஆசுர மணத்தில் தழுவவிடப்பட்ட ஏற்றினைக் கண்டார் கூறியது.
52.	93	984	தலைவன்	களவு	தலைவன் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தலைவியைப் புகழ்ந்தது (நலம்புனைந்துரைத்தல்).
53.	94	985	தலைவன்	களவு	காட்சியின் பின் தலைவியை ஐயுற்று மானிடமகளே எனத் துணிந்த தலைவியது குறிப்பை உணர்கின்றுழிக் கூறியது.
54.	95	986	தோழி	களவு	தோழி இரவுக் குறி விலக்கியது.
55.	96	987	தலைவி	களவு	நொதுமலர் வரைவு கேட்டுக் கூறியது.
56.	97	988	தோழி	களவு	வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் நீட்டிப்புப் பற்றி வருந்திய தலைவிக்குத் தோழி தலைவனது தேர் வரவைக் கூறியது.

கோயில் திருப்பண்ணியர் விருத்தம் - நம்பியாண்டார் நம்பி

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	11	1032	தோழி	களவு	தலைவி ஒருத்தியது வேறுபாடு கண்டு 'இது தெய்வத்தான் ஆயது' எனக் கருதி எடுக்கப்பட்ட வெறியாட்டினைத் தோழி விலக்கி அறத்தொடு நின்றது.
2.	12	1033	தலைவி	களவு	தலைவனைக் காணக் கண்போதவில்லை எனல் (புதியமரபு).
3.	21	1042	செவிலி	களவு	தலைவியது வேறுபாடு கண்டு வினவிய நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நின்றது.
4.	43	1064	தலைவி	களவு	தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றது.
5.	46	1067	தலைவி	களவு	காமம் மிக்க கழிபடர்கிளவி
6.	51	1072	தோழி	களவு	தலைவியது காதல் ஆற்றாமை கண்டு தோழி மனமழிந்து கூறியது.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பி

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	3	1184	தலைவி	களவு	தலைவி ஆற்றாது புலம்பல்.
2.	6	1187	தலைவி	களவு	ஞானசம்பந்தர் வீதி உலா கண்டாள் கூறியது (புதியமரபு)
3.	7	1188	தலைவி	கற்பு	வாயில் வேண்டிய பாணனுக்கு வாயில் மறுத்தது.
4.	8	1189	தலைவி	களவு	காமம் மிக்க கழிபடர் கிளவி
5.	9	1190	தலைவி	களவு	தலைவனின் நலன் கூறுதல் (இயல்புணர்த்தல்)
6.	10	1191	தோழி	களவு	நொதுமலர் வரவுகண்டு தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.
7.	11	1192	தோழி	களவு	தன்னைத் தூதுவிடக் கருதிய தலைவிக்கு அம்பல், அலருக்கு ஏதுவாகும் என வன்புறை கூறியது.
8.	12	1193	தோழி	களவு	ஒருவழித்தணந்து வந்த தலைவனைக் குறியிடத்தில் நேர்ந்து வரைவு கடாவியது.
9.	14	1195	கண்டோர்	களவு	உடன்போன மகளைத் தேடிச் சென்ற செவிலிக்குக் கண்டோர் கூறியது.
10.	17	1198	தலைவன்	களவு	ஆண்பாற் கைக்கிளை.
11.	18	1200	தலைவன்	களவு	வறுங்களம் நாடி மறுகல்.
12.	20	1201	தலைவி	களவு	கடல் ஒலிக்கும் ஆற்றாது இரங்கல் (காமம் மிக்க கழிபடர்கிளவி).
13.	22	1204	தோழி	களவு	வேங்கை பூப்பின் தலைவி இற்செறிக்கப்படுவாள் என வரைவுகடாவிப் பகற்குறி விலக்கல்.
14.	25	1206	நற்றாய்	களவு	தலைவியின் உடன்போக்கு அறிந்து நற்றாய் வருந்தல்.
15.	27	1208	தலைவி	கற்பு	பொருள்மேற் சென்ற தலைவன் நீட்டிப்ப தலைவி கார்கண்டு வருந்தல்.
16.	28	1209	செவிலி	களவு	தலைவியின் ஆற்றாமை சொல்லிச் செவிலி இரங்கல்.
17.	29	1210	தோழி	களவு	தலைவி இற்செறிக்கப்படுவாள் என வரைவுகடாயது.
18.	30	1211	தலைமகன்	களவு	தலைவியின் குறிப்புணர்ந்த தலைமகன் பின்னும் வேட்கை மீதூர்தலை உணர்ந்த தலைமகளுக்குத் தன் நிலை உரைத்தது.

19.	33	1214	தலைவி	களவு	தலைவி அளிபெறாமையால் வருந்திக் கூறியது (காமம் மிக்க கழிபடர்கிளவி).
20.	34	1215	தலைவன்	களவு	'பெருந்தன்மையாகி நீ இன்னையாகுதல் தகாது' எனக் கழறிய பாங்கனுக்குத் தலைவன் தனது மெலிவைக் கூறியது (கழற்றெதிர் மறுத்தல்)
21.	35	1216	தோழி	களவு	மடன்மா கூறிய தலைவனுக்குத் தலைவியின் வடிவம் எழுதலரிது எனல்
22.	37	1218	செவிலி	களவு	தலைவி ஆற்றாமை கண்டு செவிலி இரங்கிக் கூறல்.
23.	38	1219	செவிலி	களவு	சுடரோடு இரத்தல்
24.	44	1225	தலைவி	களவு	தலைவி தோழியைத் தூது செல்லும்படிக் குறையிரந்து கூறுதல்.
25.	45	1226	தலைவி	களவு	தலைவி கங்குலில் வருந்தல் கண்டு தோழி நிலவைப் பழித்தது (புதிய மரபு).
26.	46	1227	தோழி	களவு	களவில் தோழி தலைவனை வேளாண்பெருநெறி வேண்டியது.
27.	47	1228	தலைவன்	களவு	தலைவன்தன் இட அணிமை கூறியது.
28.	48	1229	கண்டோர்	களவு	இடைச்சுரத்தின்கண் தலைமக்களைத் தன் இல்லின்கண் தங்கிச்செல்லக் கூறல்.
29.	51	1232	தலைவன்	களவு	உடன்போக்கில் தமர் வரைவைத் தலைவி கூறத் தலைவன் ஆற்றுவித்தல்.
30.	52	1233	தோழி	களவு	ஆற்றருமை கூறித் தோழி வரைவுகடாயது.
31.	53	1234	தோழி	களவு	கங்குலில் தலைவியின் துயர்கண்டு பிறையைப் பழித்தல்
32.	55	1236	தலைவன்	களவு	இருவரும் உள்வழித் தோழியின் குறிப்பறிதல் பொருட்டுக் கெடுதி வினாயது.
33.	56	1237	தோழி	களவு	கெடுதி வினவில் தோழி மதியுடம்பட்டது.
34.	57	1238	தோழி	களவு	செவிலிக்குத் தோழி வெறியாட்டிடத்து அறத்தொடு நிற்றல்.
35.	59	1240	தலைவி	களவு	தலைவன் வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிந்த காலத்துக் கார்கண்டு தலைவி வருந்தல்.
36.	62	1243	தலைவன்	களவு	பாங்கன் 'நீ' இன்னையாதற்குக் காரணம் யாது என வினவத் தலைவன் உற்றது உரைத்தல்.

37.	63	1244	தோழி	களவு	தோழி தலைவியைப் பருவம்காட்டி வற்புறுத்தியது.
38.	64	1245	தோழி	களவு	தலைவன் வரைவுநீட்டிப்ப, தலைவனுக்கு ஏதம் விளைந்ததோ எனத் தலைவி அஞ்சியவழித் தோழி ஆற்றுவித்தல்.
39.	65	1246	தலைவன்	களவு	தலைவன் நலம் புனைந்துரைத்தல்.
40.	67	1248	தோழி	கற்பு	பிரிவு உணர்த்திய தலைவனுக்குத் தலைவியின் ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்தல்.
41.	69	1250	தோழி	களவு	புனல் தருபுணர்ச்சி கூறி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்.
42.	70	1251	தோழி	களவு	களிறு தரு புணர்ச்சி கூறி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்.
43.	74	1255	தோழி	களவு	தூதாய் வந்தவிடத்துத் தலைவனின் கூற்றை மறுத்துத் தோழி மறுமொழி பகர்ந்தது.
44.	75	1256	தோழி	களவு	பருவம்கண்டு தலைவி வருந்தத் தலைவன் வருங்காலம் எனக் கூறி ஆற்றுவித்தது.
45.	78	1259	தலைவன்	களவு	இயற்கைப்புணர்ச்சிக்குப்பின் தலைவன் தலைவியை ஆயத்துய்த்தது.
46.	81	1262	தோழி	கற்பு	புதல்வனை வாயிலாய்க் கொண்டுவந்த தலைவனுக்குத் தலைவி வாயில் மறுக்க, தோழி வாயில் வேண்டியது.
47.	84	1265	தலைவன்	கற்பு	பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவன் செலவழுங்கியது.
48.	87	1268	தோழி	களவு	தலைவன் வரைவு நீட்டிக்கத் தோழி முன்னிலைப் புறமொழியாய்க் கூறியது
49.	88	1269	கண்டார்	களவு	ஞானசம்பந்தரின் உலாக் கண்டார் கூறியது.
50.	89	1270	தலைவி	கற்பு	புதல்வனை ஊடல் தீர்க்கும் வாயிலாகக் கொண்டு வந்த தலைவனுக்கு, வாயில் வேண்டிய தோழிக்கு வாயில் மறுத்தது.
51.	92	1273	தலைவன்	களவு	உடன்போக்கில் தலைவன் நெஞ்சொடு கிளத்தல்.
52.	93	1274	கண்டோர்	களவு	உடன்போக்கில் மகட்போக்கிய செவிலியிடம் கூறல்
53.	96	1277	தோழி	களவு	அலருக்கு அஞ்சிய தலைவியைத் தோழி தேற்றியது.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை - நம்பியாண்டார் நம்பி

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	7	1300	தோழி	களவு	நொதுமலர் வரைவில் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்.
2.	9	1302	தலைவி	கைகிளை	பெண்பாற் கைக்கிளை
3.	10	1303	தோழி	களவு	தலைவியின் பிரிவாற்றாமை கூறியது.
4.	13	1306	தோழி	களவு	இரவுக்குறி விலக்கி வரைவு கடாதல்
5.	15	1308	நற்றாய்	களவு	உடன்போன தலைவியின் மென்மைத்தன்மை நினைந்து நற்றாய் இரங்கல் (அனைமருட்சி).
6.	16	1309	தலைவன்	களவு	தலைவி இற்செறிக்கப்பட்டமையால் குறியிடத்துக் காணாது, 'வறுங்களம் நாடிமறுகல்' எனும் துறை.
7.	17	1310	தோழி	களவு	இருவரும் உள்வழி தலைவன் 'களிறு வினவ' தோழி 'தலைவனை நகுதல்' எனும் துறை.
8.	18	1311	தோழி	கற்பு	கார்வந்து தலைவன் வராமைகண்டு வருந்திய தலைவிக்குத் தோழி அவன் வரவுணர்த்தியது.
9.	19	1312	தோழி	களவு	தோழியிற் கூட்டத்தில் தோழியைக் குறையிரந்து நிற்க, தோழி அஞ்சி, தலைவனை அச்சுறுத்தும், அஞ்சி அச்சுறுத்தல் எனும் துறை
10.	20	1313	தலைவி	களவு	தினைப்புனம் நோக்கிக் கூறுதல் (புதிய மரபு)
11.	21	1314	தலைவி	களவு	தினைப்புனம் நோக்கிக் கூறுதல் (புதிய மரபு)
12.	22	1315	செவிலி	களவு	தலைவி உடன்போக்கின்கண் தேடிச்செல்லும் செவிலி 'குரவொடு புலம்பல்'
13.	25	1318	தலைவி	களவு	காமம் மிக்க கழிபடர் கிளவி
14.	27	1320	தலைவன்	களவு	தலைவியின் நலம் புனைந்துரைத்தல்
15.	28	1321	தலைவன்	சிறப்புடைக் கைகிளை	காட்சி - ஐயம்
16.	29	1322	கண்டோர்	களவு	உடன்போக்கில் தேடிச்செல்லும் செவிலி வினவக் கண்டோர் கூறியது
17.	30	1323	தலைவி	களவு	'நிலவு' தலைவியை வருந்தியதாய்க் கூறல் (புதிய மரபு)

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் - நம்பியாண்டார் நம்பி

வ. எண்.	பா. எண்.	பா. மொ. எண்.	கூற்று	கை கோள்	துறை
1.	4	1328	தலைவன்	களவு	தலைவன், தலைவி தோழி இருவரும் ஒருங்கு இருக்கும் இடம் நோக்கி, அவர்களின் ஊர், பேர் வினாதல் என்பது (இருவரும் உள்வழி அவன்வர உணர்தல்)
2.	6	1330	தோழி	களவு	வழியின் அருமை கூறி இரவுக்குறி விலக்கல்
3.	7	1331	செவிலி	களவு	உடன்போக்கில் செவிலி புலம்பல்
4.	8	1332	தோழி	களவு	தலைமகள் வேறுபாடு கண்டு வினாவிய செவிலிக்குத் தோழி களிறுதரு புணர்ச்சி கூறி அறத்தொடு நிற்றல்
5.	10	1334	தலைவி	களவு	கண்படை பெறாது கங்குலை நோதல்
6.	12	1336	தலைவி	களவு	தலைவன் வரைவு நீட்டிக்கத் தலைவி கடல் நோக்கிக் கூறும் காமம்மிக்க கழிபடர் கிளவி.
7.	13	1337	தலைவன்	களவு	களவில் தோழியை இரந்து, அவள் குறைநேராமையால் ‘மடல் ஏறுவேன்’ என்னும் 'மடன்மாக் கூறல்’ எனும் துறை.
8.	14	1338	தோழி	களவு	பருவம் கண்டு ஆற்றாளாகிய தலைமகட்கு, தலைவன் குறித்த பருவத்தில் வந்தமை உணர்த்தியது.
9.	15	1339	தலைவன்	களவு	பாங்கற் கூட்டத்தில் உள்ளது வினாவிய பாங்கனுக்குத் தலைவன் ‘உற்றது உரைத்தல்’ எனும் துறை.
10.	16	1340	தோழி	களவு	தலைவியை ஆற்றுவிக்கும் தோழி முன்னிலைப் புறமொழியாகக் கூறல்.
11.	19	1343	தலைவி	களவு	திங்கள் முதலிய இனியவற்றை இன்னாதவனாகக் கருதும் நோதல்துறை.
12.	22	1346	தோழி	களவு	வெறி விலக்கி அறத்தொடு நிற்றல்.
13.	23	1347	தோழி	களவு	நொதுமலர் வரவுணர்த்தல்.
14.	25	1349	கண்டோர்	களவு	இடைச்சுரத்தில் தலைமக்களைக் கண்டோர் வழியருமை கூறியது.
15.	26	1350	தலைவி	களவு	காமம் மிக்க கழிபடர் கிளவி.
16.	27	1351	தோழி	கைக்கிளை	ஏறு தழுவுவோர்க்கு இவர் உரியள் என முரசு முழங்கிற்று எனச் சேட்படுத்தல் (சிறப்பில்லாக் கைக்கிளை).

17.	29	1353	தலைவன்	கற்பு	செலவழுங்கல்.
18.	30	1354	தலைவன்	களவு	பாங்கற் கூட்டத்தில் தலைவன் தலைவியது இயலிடம் கூறல்.
19.	31	1355	தலைவி	கற்பு	பரத்தையிற் பிரிவில் மீண்ட தலைமகன் பாணனைத் தூது விடுக்கத் தலைவி வாயில் மறுத்தது.
20.	33	1357	தலைவன்	களவு	உடன்போக்கில் தலைவியின் தளர்ச்சி அறிந்து அயர்வு அகற்றல்.
21.	34	1358	தலைவன்	களவு	பாங்கியற் கூட்டத்தில் தலைவன் தோழியைக் குறையுறுதல்.
22.	39	1363	தலைவி	கற்பு	தலைவி எங்கையர் காணின் நன்று எனக் கூறித் தலைவனுக்கு வாயில் மறுத்தல்.
23.	42	1366	தலைவன்	கைக்கிளை	இயற்கைப் புணர்ச்சியில் காட்சி, துணிவு
24.	45	1369	தலைவி	களவு	காமம்மிக்க கழிபடர் கிளவி
25.	46	1370	கண்டோர்	களவு	உடன்போக்கில் மகட்போக்கிய செவிலியைக் கண்டு கூறல்.
26.	47	1371	தோழி	களவு	தலைவன் சிறைப்புறத்தானாய் இருக்க, தோழி முன்னிலைப்புற மொழியாய் வரைவுகடாயது.
27.	48	1372	தோழி	களவு	பாங்கியிற் கூட்டத்தில் தோழி தலைவனுக்குக் குறைநேர்ந்தது.

அட்டவணை - 7

பன்னிரண்டாம் திருமுறை - பெரியபுராணம் - சேக்கிழார்

வ. எண்.	பெரியபுராண உட்பிரிவு	பா. எண்.	கைக் கோள்	கூற்று	துறை
1.	தடுத்தாட்கொண்ட புராணம்	139	களவு	தலைவன்	சிறப்புடைக் கைக்கிளையில் காட்சி.
2.		140	களவு	தலைவன்	தலைவனின் ஐயமும் நயப்பும்.
3.		142	களவு	தலைவி	தலைவி தலைவனைக் காணல் (காட்சி).
4.		144	களவு	தலைவி	தலைவன் யாரோ? எனத் தலைவி ஐயுறல்.
5.		145	களவு	தலைவி	மதியுடம் படுத்தல்
6.		148	களவு	தலைவன்	தலைவன் தலைவியின் பெயர் நயப்புறல்.
7.		152	களவு	தலைவன்	தலைவன் பிரிவாற்றாமை.
8.		165	களவு	தலைவன்	பிரிவாற்றாமையால் தலைவன் நிலவொடு புலத்தல்.
9.		166	களவு	தலைவன்	பிரிவாற்றாமையால் தலைவன் கடலொடு புலத்தல்.
10.		167	களவு	தலைவன்	தலைவன் தென்றலொடு புலத்தல்.
11.		174	களவு	தலைவி	பிரிவாற்றாமையால் தலைவி, தென்றல், நிலவொடு புலத்தல்.
12.		175	களவு	தலைவி	தலைவி தோழியரோடு புலத்தல்.
13.	ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	225	களவு	தலைவன்	சிறப்புடைக் கைக்கிளையில் தலைவன் காணுதல்(காட்சி)

14.		227	களவு	தலைவன்	தலைவன் ஐயுறல்.
15.		233	களவு	தலைவன்	பிரிவாற்றாமையால் தலைவன் இரவிடை வருந்தல்.
16.		266	கற்பு	தலைவன்	கற்பில் தலைவன் புணர்ந்துடன் மகிழ்தல்.
17.		314	கற்பு	தலைவி	தலைவனின் பிரிவெண்ணித் தலைவி ஊடல்
18.		328	கற்பு	பாங்கன்	ஊடல் தீர்க்கப் பாங்கன் செல்லல்
19.		341	கற்பு	தலைவி	பாங்கனை ஊடல் தீர்க்கும் வாயிலாய்க் கொண்டு தலைவன் வர தலைவி வாயில் மறுத்தல்.
20.	காரைக்கால் அம்மையார் புராணம்	32	கற்பு	தலைவன்	கற்பில் தலைவன் பொருள்வயிற் பிரிவு.
21.		33	கற்பு	தலைவன்	கற்பில் பொருள்வயிற்பிரிவு.
22.	திருநீலகண்டர் புராணம்	3	கற்பு	தலைவன்	கற்பில் பரத்தையிற் பிரிவு.
23.		5	கற்பு	தலைவி	தலைவனின் பரத்தையிற் பிரிவுகண்டு தலைவி ஊடல்.
24.		6	கற்பு	தலைவி	தலைவி ஊடல் உணர்த்தவும் நீங்காமை
25.		8	கற்பு	தலைவி	கற்பில் பிரிவு.